வேத ஆராய்ச்சி: புத்தகம்-3

லேவியராகமம்

N.எமில் ஜெபசிங்

எக்காளம் ஊதும் பண்டிகை

கூடார பண்டிகை

முதல்பலன் படைக்கும் பண்டிகை

பாவ நிவிர்த்தி பண்டிகை

பஸ்கா பண்டிகை

நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர். லேவி. 20:8



கெய்ரோஸ் வெளியீடு, 2016

வேத ஆராய்ச்சி

லேவியராகமம்

N. எமில் ஜெபசிங்

தொகுத்தவர்

Dr. (Mrs.) ஆனந்தி ஜெபசிங்

கெய்ரோஸ் வெளியீடு

தூத்துக்குடி

2016

Veda Aaraychi - Leviticus

ISBN : 978-93-85813-04-7

©Kairos Multimedia Private Limited

First Published - 2016

Published by:

Kairos Multimedia Pvt. Ltd.,

49/C, Bryant Nagar,

Tuticorin,

Tamil Nadu - 628 008.

Price:350/-

Printed at:

VST Associated Graphics Private Limited,

No.7, Kamarajar Salai,

Thanthai Periyar Nagar (Alwarthirunagar),

Chennai - 600 087.

Phone: 044-23774230,

Mobile: 98400 37147,

E-mail: vst_smv@yahoo.com

உள்ளடக்கம்

தொகுதி 1

லேவியராகமம் என்றால் என்ன?

அத்தியாயம் 1 - பரிசுத்தமாக்கப்பட பலியும் பாவ மன்னிப்பும்

1.1 லேவியராகமம்-முன்னுரை - 1
1.2 லேவியராகமம் என்று பெயர் வந்த காரணம் - 5
1.3 லேவியராகமத்தின் அமைப்பு - 7
1.4 லேவியராகமம் எழுதப்பட்ட காலம் - 8
1.5 லேவியராகமத்தின் கருத்து - 9
1.6 பாவி பரிசுத்தவான் ஆகுதல் - 10

தொகுதி 2

தேவ ஊழியத்திற்கு ஆசாரியர் ஆயத்தமாக்கப்படல்

அத்தியாயம் 2 - கர்த்தரின் சந்நிதியில் அங்கீகரிக்கப்பட்ட பலிகள்

2.1 பலிமுறைக்கு முகவுரை - 11
2.2 சர்வாங்க தகனபலி - 13
2.3 போஜன பலி - 17
2.4 சமாதான பலி - 24

அத்தியாயம் 3 - விசேஷித்த பலிகள்

3.1 பாவ நிவாரண பலிகள் - 30
3.2 அபிஷேகம் பெற்ற ஆசாரியனின் தவறுக்காக பாவநிவாரண பலி - 31
3.3 சபையாரின் தவறுகளுக்காக செலுத்தப்படும் பாவ நிவாரண பலி - 34
3.4 கோத்திர தலைவனின் தவறுக்காக செலுத்தப்படும் பாவ நிவாரண பலி - 37
3.5 சாதாரண மனிதனின் மீறுதலுக்காக பாவ நிவாரண பலி - 41
3.6 குற்ற நிவாரண பலிகள் - 45
3.7 குற்ற நிவாரண பலி செலுத்தும் முறை - 56
3.8 அயலானுக்கு விரோதமாக செய்த குற்றங்களுக்காக நிவாரண பலி - 62

அத்தியாயம் 4 - ஆசாரியர்கள் பலி செலுத்த பிரமாணங்கள்

4.1 பலிகள் குறித்த முகவுரை - 68
4.2 சர்வாங்க தகனபலி செலுத்தப்பட வேண்டிய முறை - 70
4.3 போஜனபலி செலுத்தப்பட வேண்டிய முறை - 71
4.4 பாவநிவாரண பலி செலுத்தப்பட வேண்டிய முறை - 73
4.5 குற்ற நிவாரணபலி செலுத்தப்பட வேண்டிய முறை - 75
4.6 சமாதான பலிகள் செலுத்தப்பட வேண்டிய முறை - 76
4.7 சமாதான பலியின் மாமிசம் புசிக்கப்பட வேண்டிய முறை - 77
4.8 சமாதான பலியை ஒருவன் செலுத்த வேண்டிய முறை - 78

தொகுதி 3

தேவ ஊழியத்திற்கு ஆசாரியர் பிரதிஷ்டை செய்யப்படல்

அத்தியாயம் 5 - ஆசாரிய ஊழியத்தின் மகத்துவம்

5.1 அழைக்கப்பட்ட ஆசாரியர்கள் - 80
5.2 ஆசாரியர்களை பிரதிஷ்டைக்கு ஆயத்தப்படுத்துதல் - 83
5.3 ஆசாரியர்கள் அபிஷேகிக்கப்படல் - 85
5.4 ஆசாரியர்களுக்கு பாவ நிவிர்த்தி செய்யப்படல் - 87
5.5 பிரதிஷ்டை செய்து பரிசுத்தமாக்கப்படும் ஆசாரியர்கள் - 92
5.6 பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆசாரியர்கள் கர்த்தருக்கு பலி செலுத்த ஆரம்பிக்கின்றனர் - 95
5.7 ஆசாரியர்கள் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்கள் - 97
5.8 கட்டளையை மீறிய ஆசாரியர்கள் அக்கினியால் பட்சிக்கப்பட்டார்கள் - 101

தொகுதி 4

உணவிலும், உடம்பிலும், உள்ளத்திலும் பரிசுத்தம் காக்க கர்த்தரின் ஆலோசனைகள்

அத்தியாயம் 6 - உட்கொள்ளும் உணவு சம்பந்தமான விதிமுறைகள்

6.1 உட்கொள்ளும் உணவில் சுத்தம் தேவை - 113
6.2 நில வாழ் மிருகங்களில் சுத்தமானவையும், அசுத்தமானவையும் - 114
6.3 நீரில் வாழும் மிருகங்களில் சுத்தமானவையும் அசுத்தமானவையும் - 118
6.4 ஆகாயத்தில் பறக்கும் உயிர் இனங்களில் சுத்தமானவையும் அசுத்தமானவையும் - 121
6.5 பூச்சி இனங்களில் (Insects) சுத்தமானவையும் அசுத்தமானவையும் - 123
6.6 விலங்கினங்கள்: சாப்பிட தகாதவை - 126
6.7 அசுத்தமான ஊரும் பிராணிகள் - 128
6.8 பரிசுத்தமாக வேண்டிய ஜனங்கள் - 131

அத்தியாயம் 7 - மகப்பேறு சமயம் சுத்தம் காப்பது எப்படி

7.1 பலுகி பெருகுங்கள் என்ற ஆசீர்வாதமும் மனிதனுக்குள் நுழைந்த பாவமும் - 133
7.2 பிரசவ ஸ்திரீக்கும் பிறந்த ஆண் மகவுக்கும் சுத்திகரிப்பு - 134
7.3 பிரசவ ஸ்தீரிக்கும் பிறந்த பெண் மகவுக்கும் சுத்திகரிப்பு - 136
7.4 மகப்பேற்றிற்கு பின் செலுத்த வேண்டிய பலிகள் - 137

அத்தியாயம் 8 - தோலில் நோய்கள் வருமாயின் சுத்தம் காப்பது எப்படி?

8.1 சரும நோய்களின் தீட்டுகளில் இருந்து சுத்திகரிப்பு - 139
8.2 தவறான நடத்தையினால் வரும் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் - 140
8.3 சரீர புண்ணில் எழும்பும் குஷ்டம் - 148
8.4 தீ வேக்காட்டில் எழும்பும் குஷ்டம் - 148

8.5 சொறியினால் உண்டாகும் குஷ்டம் - 150
8.6 வஸ்திரங்களில் வரும் ரோகங்கள் - 155
8.7 சுகமடைந்த குஷ்டரோகிக்கு ஆசாரியன் செய்ய வேண்டிய சுத்திகரிப்பு - 158
8.8 சுத்தமானவன் செய்ய வேண்டிய நன்றி கடன் - 165
8.9 வீட்டில் வரும் குஷ்ட தோஷ சுத்திகரிப்பு - 170
8.10 ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரீர தீட்டுக்களில் இருந்து சுத்திகரிப்பு - 177

தொகுதி 5

பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்களுக்கு பாவநிவராண நாள்

அத்தியாயம் 9 - வருடாந்தர பாவ நிவிர்த்தியும் நித்திய இரட்சிப்பின் திட்டமும்

9.1 ஆசரிப்பு கூடாரத்தில் ஆசாரியர் - 184
9.2 பரிசுத்தம் காத்து கொள்ள ஆசாரியருக்கு கட்டளை - 185
9.3 ஆசாரியருக்கு முதலாவது பாவநிவிர்த்தி - 190
9.4 சபை மக்களுக்கான பாவநிவிர்த்தி - 198
9.5 ஆசரிப்பு கூடாரத்திற்காகவும், அதன் பொருட்களுக்காகவும் பாவ நிவிர்த்தி - 199
9.6 மக்களின் பாவங்களை சுமக்கும் போக்காடு - 200
9.7 பாவ நிவிர்த்தி ஆராதனையின் இரத்தம் - 206
9.8 பாவ நிவாரண நாள் - 215

தொகுதி 6

பரிசுத்தமான வாழ்வில் நிலைத்து நிற்பது எப்படி?

அத்தியாயம் 10 - உயிர், உடல், ஆவியில் பரிசுத்தம் காக்க பிரமாணங்கள்

10.1 முகவுரை - 220
10.2 இரத்தத்தில் பரிசுத்தம் - 223
10.3 உடலிலும், உறவுகளிலும் பரிசுத்தம் - 235
10.4 உன் சந்ததியை பரிசுத்தமாக காத்து கொள் - 245
10.5 கர்த்தரால் தடை செய்யப்பட்ட உடல் உறவுகள் - 248
10.6 தூய்மையான வாழ்விற்கு கற்பனைகள் முக்கியமானவைகள் - 257
10.7 அந்நிய தேவ வணக்கம் வேண்டாம் - 280
10.8 நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் - 281
10.9 குடும்ப உறவுகள் காக்கப்பட வேண்டும் - 282
10.10 தவறான உடல் உறவுகளில் ஈடுபடாதே - 282
10.11 தேசம் உங்களை கக்கி போடாதபடி காத்து கொள்ளுங்கள் - 284

அத்தியாயம் 11 - ஊழியம் செய்கிற ஆசாரியருக்கு பிரமாணங்கள்

11.1 ஆசாரியர் விசேஷித்தவர்கள் - 286
11.2 ஆசாரியர் தங்கள் பரிசுத்தம் காக்க பிரமாணங்கள் - 286

11.3 பிரதான ஆசாரியர்கள் பரிசுத்தம் காக்க பிரமாணங்கள் - 289
11.4 மக்கள் செலுத்தும் காணிக்கையை குறித்த பிரமாணங்கள் - 292
11.5 ஆசாரியர்கள் தீட்டுள்ளதை விட்டு விலகி இருக்க வேண்டும் - 293
11.6 பரிசுத்தமானவைகளில் புசிக்க தடை செய்ய பட்டவர்கள் - 294

அத்தியாயம் 12 - பிரித்து எடுக்கப்பட்ட மக்கள் ஆசரிக்க வேண்டிய பண்டிகைகளின் பிரமாணங்கள்

12.1 ஓய்வு நாள் - 299
12.2 பஸ்கா பண்டிகை - 303
12.3 பாவ நிவிர்த்தி பண்டிகை - 305
12.4 முதல் பலன் படைக்கும் பண்டிகை - 306
12.5 ஐம்பது நாள் பண்டிகை - 307
12.6 கூடார பண்டிகை - 311
12.7 புளிப்பு இல்லாத அப்ப பண்டிகை - 312
12.8 எக்காளம் ஊதும் பண்டிகை - 313
12.9 ஏழு பண்டிகைகள் காட்டும் வரும்கால நிகழ்வுகள் - 315

அத்தியாயம் 13 - கர்த்தராகிய தேவனை கனம் பண்ண பிரமாணங்கள்

13.1 எப்பொழுதும் குத்து விளக்கு எரிய வேண்டும் - 317
13.2 சமுகத்து அப்ப மேஜையில் நித்திய அப்பம் - 320
13.3 கர்த்தரின் நாமத்தை நிந்தித்தவன் கொலை செய்ய படுவான் - 323
13.4 மனிதருக்கு எதிரான குற்றங்கள்: கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் - 327

அத்தியாயம் 14 - கர்த்தர் கொடுக்கும் தேசத்தை கனம் பண்ண பிரமாணங்கள்

14.1 தேசத்திற்கு ஓய்வு வருடம் கொடு - 332
14.2 ஐம்பதாவது வருடம் யூபிலி வருடம் ஆகட்டும் - 340
14.3 தேசம் கர்த்தருடையது - 346
14.4 பட்டணத்திலும் கிராமத்திலும் உள்ள வீடுகளின் மீட்பு - 350
14.5 லேவியரின் வீடுகள், காணியாட்சிகளின் மீட்பு - 351
14.6 சகோதரனுக்கு மீட்பு - 352
14.7 உயிரற்ற பொருட்களை கர்த்தர் என்று நமஸ்கரியாதே - 355
14.8 கட்டளைகளை கை கொள்வதால் பெறும் ஆசீர்வாதங்கள் - 356
14.9 கட்டளைகளை மீறினால் வரும் விளைவுகள் - 360

அத்தியாயம் 15 - கர்த்தருக்கு செய்யும் பொருத்தனைகளை நிறைவேற்ற பிரமாணங்கள்

15.1 கர்த்தருக்கு செய்யும் பொருத்தனைகள் - 367
15.2 கர்த்தருக்கு தங்களையே பொருத்தனை செய்தல் - 371
15.3 மிருகங்கள் பொருத்தனை செய்யப்படல் - 372
15.4 வீடு பொருத்தனை செய்யப்படல் - 374
15.5 வயல்கள் பொருத்தனை செய்யப்படல் - 375
15.6 தலையீற்றானவைகள் கர்த்தருடையது - 376

படங்களும் வரை படங்களும்

1	லேவியின் வம்ச வரலாறு	6
2	தூபகலசம்	103
3	ஆரோனின் இரண்டு குமாரர் கர்த்தருடைய சந்நிதியில் மரித்து போகுதல்	103
4	சுத்தமானதும் புசிக்கத்தக்கதுமான நிலவாழ் மிருகங்கள்	115
5	ஆட்டின் விரிகுளம்பு	116
6	மாட்டின் இரைப்பை	116
7	அசுத்தமானதும் புசிக்கத்தகாததுமான நிலவாழ் மிருகங்கள்	117
8	சிறகும் செதில்களும் உள்ள நீர் பிராணிகள்: புசிக்க தக்கவை	119
9	சிறகும் செதில்களும் இல்லாத நீர் பிராணிகள்: புசிக்க தகாதவை	120
10	புசிக்காமல் அருவருக்க வேண்டிய பறவைகள்	121
11	புசிக்காமல் அருவருக்க வேண்டிய பறவைகள்	122
12	புசிக்கத்தக்க பறவைகள்	123
13	நாலுகாலால் நடமாடும் ஊரும் பிராணிகள்: புசிக்கத்தக்கவை	124
14	சாப்பிடத்தகாத பூச்சி இனங்கள்	125
15	சாப்பிட கூடாத விலங்கினங்கள்	126
16	மனிதனுக்கு வியாதி கொடுக்கும் புழுக்கள்	127
17	தரையில் ஊருகிற பிராணிகளில் அசுத்தமானவை	129
18	வயிற்றினால் நகரும், தரையில் ஊரும் பிராணிகள், அநேக கால்கள் உள்ளவைகள்: அருவருப்பானவைகள்	130
19	பிரசவித்த ஸ்திரீ தன் மகவை ஆசாரியனிடத்தில் கொண்டு வருகிறாள்	137
20	புறா குஞ்சுகள்	138
21	காட்டு புறாக்கள்	138
22	வெள்ளை படர்	140
23	அசறு	140
24	ஒரு தடிப்பு	140
25	தீட்டுள்ள குஷ்டம்	142
26	தீட்டுள்ள கிரந்தி என்ற வியாதி	142
27	தீட்டுள்ள மேகவெட்டை நோய்	142
28	அசறு	144
29	பாலின தோல் வியாதி: கிரந்தி	146
30	கிரந்தி வியாதி விளைவிக்கும் கிருமி டிரிபோனேமா பால்லிடம்	146
31	கைகளில் வெள்ளைபடர்	146
32	உடல் முழுவதும் வெள்ளைபடர்	146
33	காலில் குஷ்டம்	147
34	குஷ்ட நோய் கிருமிகள்	149

35	குஷ்டரோகியின் தோலிலிருந்து எடுக்கப்பட்ட கிருமிகள்	149
36	தலையில் சொறி	150
37	தாடியில் சொறி	150
38	மனித தோலை அசுத்தமாக்கும் கிருமிகள்	150
39	மனித சொறி கிருமி	150
40	சிரங்கு கிருமி	150
41	மனித தோலை துளைத்து முட்டை இடும் கிருமி	150
42	புழுதி கிருமி	150
43	முகத்தில் கிருமி	150
44	செத்த தோல் செல்களை சாப்பிடும் முக கிருமி	150
45	தோலினால் செய்யப்பட்ட வஸ்துவில் வரும் குஷ்டம்	156
46	பஞ்சு நூலினால் செய்யப்பட்ட உடைகளில் வரும் குஷ்டம்	156
47	பூஞ்சை	157
48	பூஞ்சையின் சிறுவிதைகள்	157
49	கேதுரு மரம்	162
50	கேதுரு கட்டை	162
51	கேதுரு மர இலைகளும் காயும்	162
52	ஈசோப்பு	163
53	ஈசோப்பு தோட்டம்	163
54	ஈசோப்பு பூவும் இலைகளும்	163
55	வீட்டில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஈசோப்பு	163
56	ஈசோப்போடு கேதுரு கட்டையில் சிவப்பு நூலால் கட்டப்பட்ட குருவி	163
57	சுவற்றில் பூஷணம்	171
58	வீட்டின் பல இடங்களில் பரவிவிட்ட பூஷணம்	171
59	பூஷணத்தின் சிறிய விதைகள்	171
60	ஆசரிப்புக் கூடாரம்	184
61	ஆரோன் காளையை கொண்டு வருகிறான்	193
62	ஆரோன் இரண்டு வெள்ளாட்டு கடாக்களை கொண்டு வருகிறான்	193
63	கால்பே என்ற பாத்திரமும் எழுதப்பட்ட மரத்துண்டுகளும்	194
64	மேற்கு புறமாக முகம் வைத்து நிறுத்தப்பட்டுள்ள ஆடுகள்	195
65	கருஞ்சிவப்பு நூல் கொம்பில் கட்டப்பட்ட போக்காடு	195
66	திரைக்கு உட்புறமாக தூபம் போட வரும் ஆரோன்	196
67	ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து தூபவர்க்கம் இடுகிறான்	196
68	ஆரோன் இரத்தத்தை தன் விரலினால் தெளிக்கிறான்	197
69	வெள்ளாட்டின் இரத்தம் பிடிக்கப்படுகிறது	198
70	மக்களுக்காக மன்றாடும் ஆரோன்	198
71	ஆரோன் தகனபலிபீட கொம்புகளில் இரத்தம் பூசுகிறான்	200

72 ஆரோன் போக்காட்டின் தலையில் தன் கைகளை வைத்து மக்களின் பாவங்களை கடத்தி விடுகிறான் 201
73 ஆள் வசமாய் அனுப்பி விடப்படும் போக்காடு 201
74 ஆரோன் போக்காட்டின் தலையில் தன் கைகளை வைக்கிறான் 201
75 இயேசுவின் இரத்தம் ஆரோனின் பலிகளின் இரத்தத்தை அவமாக்கிற்று 210
76 ஆட்டின் கொம்பு எக்காளம் 217
77 எக்காளம் ஊதப்படுகின்றது 217
78 யூதர்களின் பண்டிகை நாள்காட்டி 316

தொகுதி - 1
லேவியராகமம் என்றால் என்ன?

அத்தியாயம் - 1
பரிசுத்தமாக்கப்பட பலியும் பாவ மன்னிப்பும்

1.1 லேவியராகமம்-முன்னுரை

லேவியராகமம், பரிசுத்த வேதாகமத்திலே முதலாவது வரும் ஐந்து ஆகமங்களில் மூன்றாவதாக வரும் ஆகமம் ஆகும். யாத்திராகம புத்தகத்திற்கு பின்னாகவும், எண்ணாகம புத்தகத்திற்கு முன்னாகவும் லேவியராகமம் இடம் பெறுகின்றது. லேவியராகமம் தனித்து பார்க்கப்பட வேண்டிய ஓர் நூல் அல்ல, அதற்கு முன்னும் பின்னும் இடம் பெறும் இரண்டு நூல்களுடன் இணைத்து பார்க்க வேண்டிய நூல்.

யாத்திராகமத்தின் கடைசி அதிகாரங்களில் ஆசரிப்பு கூடாரம் என்ற ஆராதனை கூடம் ஸ்தாபிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டதை கண்டோம். முறைப்படி ஆராதிக்க இஸ்ரவேலர் ஓர் இடம் பெற்று விட்டார்கள். எப்படி முறைப்படி ஆராதிக்க வேண்டும் என்பதை லேவியராகமத்தில் நாம் பார்க்கிறோம். ஆராதனை என்பது ஆராதிக்க வருகிறவர்களையும், ஆராதனை நடத்துகிறவர்களையும், சார்ந்த ஒன்றாகும். ஆராதனை நடத்துகிறவர், ஆராதனையில் பங்கு பெறுகின்றவர்கள், ஆராதிக்க வேண்டிய சர்வ வல்லமை உள்ள தேவன் என்று மூன்று பிரிவாக லேவியராகம புத்தகத்திலே நாம் காண இருக்கின்றோம். ஆராதனை கூடம் அமைக்க பெற்ற பின்னர் அங்கு ஆராதனை எப்படி நடத்துவது என்பதை தேவன் கூற இருக்கின்றார். ஆராதனைக்கு வருகின்றவர் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட கூட்டத்தார்; ஆராதனையை நடத்துகின்றவர்கள் ஆரோன், அவனது நான்கு குமாரர்கள்; ஆராதிக்கப்பட வேண்டியவர் மீட்பரான கர்த்தாதி கர்த்தர். ஆராதனைக்கு அவசியமானது ஆராதனை முறைமை, ஆராதனை ஒழுங்கு ஆகும். ஆராதனையின் நோக்கத்திற்கு ஏற்ப ஆராதனை முறைமை இடம் பெற வேண்டும்.

மீட்பரான தேவன், மீட்கப்பட்டவர்களை தன்னுடைய ஜனமாக சேர்த்து கொண்டதை யாத்திராகமத்தில் நாம் கண்டோம். யாத்திராகமத்தின் கருப்பொருள் யாத்திராகம 6:7-ல் கூறப்பட்டு உள்ளது. ''உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு உங்களுக்கு தேவனாயிருப்பேன்...'' லேவியராகமத்தின் கருப்பொருள் லேவியராகமம் 19:2-ல் கூறப்பட்டு உள்ளது. ''...நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால் உங்கள் தேவனும், கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்''. ஆராதிக்கப்பட வேண்டியவர் பரிசுத்தராகிய தேவன். ஆராதிக்க வருகின்றவர்கள், ஆராதனை நடத்துகிறவர்கள் ஆகிய இருவரும் பரிசுத்தர்களாக இருக்க வேண்டும். ஆராதனை முறைமை, பரிசுத்தம் பெறுவதற்கும் பரிசுத்தத்தில் நிலைத்து நிற்பதற்கும் உதவி செய்வதாக அமைய வேண்டும்.

பரிசுத்தராகிய தேவனை, மீட்கப்பட்டவர்கள் ஆராதிக்க போகின்றார்கள். ஆராதிக்க வேண்டிய முறைகளை அவர்களுக்கு பரிசுத்தராகிய கர்த்தரே கூற வேண்டியதும் உள்ளது. எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதை எடுத்து கூறுகிறவர், நடத்துகிறவர்களும் அல்ல, ஆராதனையில் பங்கு பெறுகிறவர்களும் அல்ல. பரிசுத்தராகிய தேவனே எப்படி ஆராதனை நடத்த வேண்டும் என்று கூற இருக்கின்றார். இதனை லேவியராகமத்திலே பார்க்க இருக்கின்றோம். கர்த்தர் ஒருவரே பரிசுத்தர். பரிசுத்தரே பரிசுத்தத்திற்கு நேராக வழி நடத்தும் ஒழுங்கு முறைகளை எடுத்து கூற முடியும். எனவேதான் லேவியராகமம் முதலாம் அதிகாரம் முதலாம் வசனம் ''கர்த்தர் ..... மோசேயைக் கூப்பிட்டு, அவனை நோக்கி:'' என்று துவங்குகின்றது. கர்த்தர் மோசேயைக் கூப்பிட்டு, மோசேயை நோக்கி கூறிய வார்த்தை லேவியாரகமம் என்பது ஆகும். பரிசுத்தராகிய கர்த்தர், பரிசுத்தத்திற்கு நேராக வழி நடத்தும் ஆராதனை முறைகளையும் பிரித்து எடுக்கபட்ட ஜனம் பரிசுத்தமாக வாழ வேண்டிய முறைகளையும் விளக்கி கூறிய வார்த்தைகள் தான் லேவியராகமம்.

லேவியாரகம புத்தகத்தில் மொத்தம் 27 அதிகாரங்கள் உண்டு. அதில், நடைபெற்ற சம்பவங்களை விளக்கும் அதிகாரங்கள் 8,9,10 மற்றும் 24-ம் அதிகாரத்தில் 10 முதல் 23-ம் வசனங்கள் மட்டுமே! ஆனால் மற்ற அனைத்து அதிகாரங்களிலேயும் கர்த்தர் மோசேயை நோக்கி கூப்பிட்டுச் சொன்ன வார்த்தைகளே இடம் பெற்றுள்ளன. வார்த்தை, எழுத்து ஆகிய இந்த இரண்டின் அடிப்படையில்தான் பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்டவர்களை கர்த்தர் வழி நடத்தி வருகிறார் என்பதை உபாகமம் 4:12,13 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. ''நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' என்று 1 பேதுரு 1:16-ல் பேதுரு கூறுவது, லேவி. 11:44-ல் இருந்து எடுக்கப்பட்டதே ஆகும்.

கர்த்தர் பரிசுத்தர், அவரை ஆராதிக்கிறவர்களின் அலங்காரம் பரிசுத்த அலங்காரமாக இருக்க வேண்டும். (1நாளா.16:29) அந்த அலங்காரத்தை பெற்றவர், அன்பு தவிர வேறு எதுவும் அறிய மாட்டார்கள். பரிசுத்தமாக்கப்பட்ட மக்களின் பண்பு, அன்பு ஒன்றே என்பதை லேவியராகமத்தின் பிற்பகுதிகள் வலியுறுத்துகின்றன. இதனை லேவியராகமம் 19:18-ல் பார்க்கலாம்: ''பழிக்குப் பழி வாங்காமலும் உன் ஜனப் புத்திரரின்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர்.'' இந்த வசனம் பரிசுத்த வேதாகமத்தில் பல இடங்களில் வருகின்றது. லேவியராகமத்தில் அன்பை நடுவாக வைத்த இந்த வசனம், பரிசுத்த மத்தேயு 5:44, 19:19, 22:39; பரிசுத்த மாற்கு 12:31; பரிசுத்த லூக்கா 10:27; ரோமர் 13:9; கலாத்தியர் 5:14 ஆகிய வசனங்களில் திரும்ப திரும்ப வருவதை நாம் காணலாம். பழைய ஏற்பாட்டில் வரும் பத்து கற்பனைகளையும் புதிய ஏற்பாட்டில் ஒரே கற்பனையாக சேர்த்து இணைத்து, இயேசு 'அன்பு' என்பதில் அடக்கி வைத்தார். யாத்திராகமத்தில் பத்து கற்பனைகள் கொடுக்கப்பட்டன. லேவியராகமத்தில் பத்து கற்பனைகளும் அன்பு என்ற குடை ஒன்றின் அடியில் வந்து விட்டன. அதனைத்தான் இயேசு புதிய ஏற்பாட்டில் பிரகடனப்படுத்தினார்.

அன்பும் பரிசுத்தமும் கொண்ட கர்த்தர் வலிய வந்து மனிதர்களுடன் பேசி அவர்களை தமக்கென்று மீட்டுக் கொள்ளுவதை ஆதியாகமத்தில் இருந்து நாம் பார்க்கலாம். ஆதியாகம புத்தகத்தில் கர்த்தர் ஆபிரகாமை, அவன் வாழ்ந்த ஊரிலிருந்து வெளியே அழைத்துக் கொண்டு வந்தார். அடிமைத்தனத்தில் வாழ்ந்து கொண்டு இருந்த ஜனங்களை, யாத்திராகம புத்தகத்தில், கர்த்தர் வெளியே இழுத்துக் கொண்டு வந்தார். இந்த இரண்டு இடங்களிலும்

செயலாற்றுதலை துவங்கியவரும், முடித்தவரும் கர்த்தராகவே இருக்கின்றார். மனிதன் விரும்பியதாலும் அல்ல, மனிதன் முயற்சித்ததாலும் அல்ல. ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்.....'' என்றே ரோமர் 5:8 கூறுகிறது. ஆபிரகாம் சொன்னதால் கர்த்தர் அவனை அழைக்கவில்லை. மனிதன் கேட்டுக் கொண்டதால் கிறிஸ்து சிலுவையில் மரிக்கவும் இல்லை. அனைத்தும் ஆண்டவர் வலிய மனுக்குலத்திற்கு செய்யும் செயல்களாகவே இருக்கின்றன. கர்த்தர் யாரிடம் வலிய வந்து செயல்படுகின்றார்? தனது செயலாற்றுதலை ஏற்றுக்கொள்ள முன் வருகின்றவர்களுடன் வலிய வந்து கர்த்தர் செயல்படுகின்றார். உடன்படிக்கை என்ற ஒன்றினை உருவாக்கி, வாஞ்சை உள்ளவர்களின் வாழ்க்கையில் செயலாற்றுகின்றார்.

ஆபிரகாமுடன் அவர் செய்த கிரியை, விருத்தசேதன உடன்படிக்கை என்பதை சார்ந்ததாக இருந்தது. மீட்கப்பட்டவர்களுடன் அவர் செய்த கிரியை பத்து கட்டளைகளை நடுவாகக் கொண்டதாக இருந்தது. லேவியராகமம் 22:33-ல், நான் உங்களுக்குத் தேவனாயிருப்பதற்காக, உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினேன்; ...'' என்று கூறப்பட்டு உள்ளது. 2 சாமுவேல் 7:14-வது வசனத்தின்படி ''நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான்; அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரர்களுடைய அடிகளினாலும் தண்டிப்பேன்'' என்று கர்த்தர் கூறுகிறார். தேவாதி தேவனுக்கும் மீட்கப்பட்டவர்களுக்கும் நடுவில் இருந்த உறவு, சிருஷ்டி கர்த்தா-சிருஷ்டி என்ற உறவு அல்ல, தகப்பன் குமாரன் என்ற உறவு ஆகும். அந்த இணைப்பு அன்பின் இணைப்பாக நமக்கு தெரிகின்றது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவனின் உடன்படிக்கை, தகப்பன் மகன் என்ற உறவின் அடிப்படையில் இடம் பெறுவதை நாம் வேத புத்தகத்தில் பார்க்கலாம். தேவாதி தேவன் மனிதனின் தகப்பனாக மாறி விடுகின்றார். மனிதன் சர்வ வல்லவரின் குமாரனாக மாறி விடுகின்றான்.

மீட்கப்பட்ட மக்கள் தேவாதி தேவனுடன், தகப்பன் குமாரன் என்ற உறவினில் வந்த பின்னர் அவ்விதமான ஒரு உறவை முறித்து கொள்ள முடியாது என்றும் பார்க்கின்றோம். திருமண வாழ்க்கைக்கு உட்பட்ட பின்னர், கணவனும் மனைவியும் உறவை முறித்துக் கொள்ள முடியாது என்றும் பார்க்கிறோம். அது போலவே பரிசுத்தராகிய தேவனுக்கு உடன் பட்ட பின்னர் பரிசுத்த உறவை முறித்துக் கொள்ள முடியாது. அந்த உறவில் நீடித்து வாழ்ந்தால், வாழ்க்கை என்கிற பிரயாணம் வெற்றியாக அமையும்; கானான் சேரும் சிலாக்கியம் கிட்டும்; ஆசீர்வாதம் இடம் கொள்ளாமல் போகும் மட்டும் வலிய வந்து கொட்டும். உறவை முறித்துக் கொண்டு விட்டால், கொடுக்கப்பட்ட அனைத்து ஆசீர்வாதங்களும் திரும்பி பிடுங்கி எடுக்கப்படும். முன் நிலைமையை விட பின் நிலைமை சீர் கெட்டுப் போகும். லேவியராகமம் 26-ம் அதிகாரத்தை நாம் படிக்கும் பொழுது இதனை பார்க்கிறோம். இந்த தத்துவத்தை, புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்த பவுல் 1 கொரிந்தியர் 10,11 ஆகிய இரண்டு அதிகாரங்களிலும் கூறுகின்றார். எபிரேயர் நிருபமும் இவ்வாறே கூறுகின்றது. எபிரேயர் நிருபம் லேவியராகமத்தின் எதிரொலியே!

லேவியராகமத்தில் பாவம் போக்குவதற்காக பலி செலுத்தப்பட்ட ஆடுகளை மனதில் கொண்டு புதிய ஏற்பாட்டிலே, ''இதோ உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி'' என்று யோவான் ஸ்நானகன் இயேசுவை அறிமுகப்படுத்தினான். (யோவான்1:29) பரிசுத்த பவுல் கூறுவதை பாருங்கள்: ''..... நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்

படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது'' என்று கலாத்தியர் 3:24-ல் கூறுகின்றார். தொடர்ந்து கொலோசெயர் 2:17-ல் பவுல் எழுதுவதாவது: ''அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கின்றது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது.'' அன்று ஒரு நாள் மோரியா மலைமீது ஈசாக்கை பலியிடுவதற்காக ஆபிரகாம் எடுத்து சென்றது, பின் ஒரு நாள் கல்வாரி மலைமீது இயேசு தன்னைத் தானே பலியாக செலுத்துவதற்கு அடையாளம் ஆனது. லேவியராகமம் முழுவதும், பாவம் போக்க வெட்டப்பட்ட ஆடுகள், மாடுகள், பறவை இனங்கள் அனைத்தும் தேவ ஆட்டுக்குட்டியான இயேசுவை முன் உரைக்கின்றது. மறைவான கிறிஸ்துவை லேவியராகம புத்தகத்தின் 27 அதிகாரங்களிலும் பார்க்கலாம். முகம் பிரகாசமாக இருந்ததால் முகத்திலே ஒரு முக்காடு அணிந்திருந்த மோசேயைத்தான் அன்று மக்கள் கண்டார்கள். ஆனால் பழைய ஏற்பாடு முழுவதிலும், விசேஷமாக லேவியராகம புத்தகம் முழுவதிலும் மறைந்து நிற்கும் கிறிஸ்துவைத்தான் நாம் காண்கின்றோம்.

மனுமக்களுக்கு, வரப்போகும் கிருபை என்ற சுவிசேஷத்தை லேவியராகம புத்தகம் முன்னதாகவே காண்பிக்கின்றது. கிறிஸ்து தரப்போகும் ஆத்தும இரட்சிப்பை அது சுட்டிக் காட்டுகின்றது. எபிரேயர் 10-வது அதிகாரம் முதலாவது வசனம் கூறுவது போல நியாயப்பிரமாணம், வரப்போகும் நன்மைகளின் நிழலாக தெரிகின்றது. அந்த நிழலின் மகத்துவத்தை ஏசாயா 32:2-ல் தெளிவாக கூறுகின்றார். ''அவர் காற்றுக்கு ஒதுக்காகவும் பெரு வெள்ளத்திற்குப் புகலிடமாகவும் வறண்ட நிலத்திற்கு நீர்கால்களாகவும் விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்.'' ''நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்'' என்று லேவியராகமம் 26:12 கூறுவதை புதிய ஏற்பாட்டிலே இயேசு முழுவதுமாக நிறைவேற்றி விட்டார் என்பதை, யோவான் 1:14-ல் வாசிக்கிறோம். ''அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.'' பராக்கிரம தேவனின் பிரசன்னம், நம் மத்தியில் மட்டுமல்ல, நமக்குள்ளேயும் வந்து விட்டதாக பரிசுத்த பவுல் 2 கொரிந்தியர் 6:16-ல் கூறுகிறார். ''நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.''

தேவாதி தேவன் மீட்கப்பட்டவர்கள் நடுவில் உலாவப் போகின்றார். ஆகையால் அவர்கள் தங்கும் இடம் பரிசுத்த இடமாக இருக்க வேண்டும். அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கர்த்தர் அவர்களுடைய தகப்பனாக மாறுவார். தேவாதி தேவனை ''அப்பா'' என்று கூப்பிட அறியாதவர்கள் ஓர் அனாதை உணர்வுடன் வாழப்போகின்றார்கள். தங்களுக்கு ஆபத்து வரும்பொழுது கை கொடுப்பதற்கு யாரும் இல்லையே என்று தனித்து விடப்பட்ட உணர்வினால் அங்கலாய்க்கப் போகின்றார்கள். எனவேதான் சீனாய்மலையில் இருந்து மோசேயிடம் மாத்திரம் பேசிய தேவன், இப்பொழுது ஆசரிப்பு கூடாரம் ஒன்று அமைத்து மக்களின் நடுவிலேயே குடி கொண்டு விட்டார். அவர்கள் அனைவரின் தகப்பனாக திகழ்ந்து விட்டார். அவர்களுடைய எதிர்காலம் நிச்சயமாகி விட்டது. அவர்களுடைய வருங்காலம் உறுதியாகி விட்டது. குடும்பத்தை தகப்பன் பொறுப்போடு எடுத்து நடத்தும்பொழுது, மனைவி பிள்ளைகள் மகிழ்வது போல, கர்த்தாதி கர்த்தர் மீட்கப்பட்டவர்களின் முழு

பொறுப்பையும் எடுத்துக் கொண்டார். இனிமேல் அவர்களின் வாழ்க்கை பயணம் இனிதாக இருக்க போகின்றது. அதற்கு காரணம் இதுவரை தூரத்தில் இருந்த சர்வ வல்லமை உள்ள தேவன் அவர்களது அருகில் வந்து தன்னை அவர்களுக்கு தகப்பனாக காட்டிவிட்டார். தேவாதி தேவன் மீட்கப்பட்டவர்களின் பரிசுத்த தகப்பனாக மாறி விட்டார்.

யாத்திராகம புத்தகத்தில் மாறாத பிரமாணம், மனசாட்சி தழுவிய பிரமாணம் என்று இரண்டு வகையான பிரமாணங்களை காணலாம். மாறாத பிரமாணம் என்பது தனிப்பட்ட வாழ்வில் பரிசுத்தத்துடன் வாழ கொடுக்கப்பட்ட பத்து கட்டளைகள் ஆகும். அதனை தொடர்ந்து, சமூக வாழ்விலும் நலனோடு வாழ கொடுக்கப்பட்ட நெறிகள் மனசாட்சி தழுவிய பிரமாணங்கள் என்று கூறப்பட்டு உள்ளது. லேவியராக புத்தகத்திலே இன்னும் இரண்டு பிரமாணங்கள் கொடுக்கப்படுகின்றன. அவைகள் ஆராதனை முறை சம்பந்தப்பட்ட பிரமாணம் என்றும், பரிசுத்தம் சம்பந்தப்பட்ட பிரமாணம் என்றும் அமைகின்றன. இப்படியாக யாத்திராகம புத்தகத்தில் இரண்டு பிரமாணங்களும், லேவியராகம புத்தகத்தில் இரண்டு பிரமாணங்களும் ஆக மொத்தம் நான்கு பிரமாணங்களை மீட்கப்பட்ட ஜனங்கள் பெற்றுக் கொள்ளுகின்றார்கள். யாத்திராகமம் 20:1-17 வரை மாறாத பிரமாணம் என்ற பத்து கட்டளைகள் வருவதை பார்க்கலாம். யாத்திராகமம் 20:22-24:18 வரை மனசாட்சி தழுவிய பிரமாணம் இடம் பெறுவதை காணலாம். லேவியராகம புத்தகத்திலே 1 முதல் 16 அதிகாரங்களிலும் 27-ம் அதிகாரத்திலும் ஆராதனை முறை சம்பந்தப்பட்ட பிரமாணம் காணப்படுகின்றது. தொடர்ந்து லேவியராகமம் 17-ம் அதிகாரம் முதல் 26-ம் அதிகாரம் வரை பரிசுத்தம் சார்ந்த பிரமாணம் கொடுக்கப்பட்டு உள்ளது.

பிரமாணங்களை கடைபிடிக்க, ஆராதனை முறைமை ஏற்றதாக அமைய வேண்டும். மோசேயிடம் கர்த்தர் அவ்விதமான ஒரு ஆராதனை ஒழுங்கை கூற இருக்கின்றார். நான்கு பிரமாணங்களையும் யாத்திராகமத்திலும், லேவியராகமத்திலும் மீட்கப்பட்டவர்கள் அன்று பெற்றுவிட்டார்கள். இந்த நான்கு பிரமாணங்களையும் புதிய ஏற்பாட்டில், கர்த்தராகிய இயேசு, அன்பின் பிரமாணம் என்ற ஒரே பிரமாணமாக மாற்றி விட்டார். அந்த பிரமாணம் இயேசுவின் கல்வாரி அன்பின் பிரமாணம் ஆகும். இயேசு, எனது பதில் ஆடாக, பலி ஆடாக சிலுவையில் மாறினார் என்பதை மனித உள்ளம் உணரும் பொழுது, தேவ பிரமாணங்களுக்கு கீழ்படிவது கடினமாக தெரிவது இல்லை; கழிப்பாகவே தெரியும். சுமையாக தெரிவது இல்லை; சுவையாகவே தெரியும்.

பொதுவாக லேவியராகம புத்தகம் பழமை வாதம் கொண்டது என்றும், படிப்பதற்கு சிரமமானது என்றும் கண்டாலும், இப்புத்தகம் நிரந்தரத்துவம் உடையது என்பதையும் பரிசுத்தராகிய தேவனை பயத்துடனும், நடுக்கத்துடனும் சேவித்து, பரிசுத்தத்தில் வளருவதற்கு ஓர் ஒப்பற்ற நூல் என்பதையும் பரிசுத்த ஆவியானவர் நம் ஒவ்வொருவருக்கும் விளக்கிக் காட்டுவாராக!

1.2 லேவியராகமம் என்று பெயர் வந்த காரணம்

லேவியராகமம் என்ற பெயரில் இருந்து, இந்த நூல் லேவியர் என்று அழைக்கப்படும் ஒரு குறிப்பிட்ட சாராருக்கு கொடுக்கப்பட்ட நூல் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

இந்த லேவியர்கள் யார்? அவர்களின் சிறப்பு என்ன? கர்த்தர் ஏன் இந்த லேவியருக்கு மட்டும் பலியின் பிரமாணங்களைக் கொடுத்தார்? லேவியர் என்போர் யாக்கோபின் 12

கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தார். யாக்கோபிற்கு லேயாளினிடத்தில் பிறந்தவன்தான் லேவி என்பவன். லேவிக்கு மூன்று ஆண் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களது பெயர் கெர்சோன், கோகாத், மெராரி என்பதாம்.

கோகாத் என்பவருக்கு நான்கு ஆண் பிள்ளைகள் பிறந்தார்கள், கெர்சோன் என்பவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், மெராரி என்பாருக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் பிறந்தார்கள். கோகாத்திற்குப் பிறந்த நான்கு ஆண் பிள்ளைகளில் ஒருவர் அம்ராம் என்பவர் ஆகும். அம்ராம் என்ற இவருக்கு இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர். அவர்கள்தான் ஆரோன், மோசே என்பவர்கள், ஆரோனும் அவனுடைய நான்கு ஆண் பிள்ளைகள் மட்டுமே ஆசரிப்பு கூடாரத்தின் பணிகளைச் செய்ய, தேவனால் அழைக்கப்பட்டு இருந்தார்கள் என்பதை நாம் யாத்திராகம புத்தகத்தில் 28-ம் அதிகாரம் முதலாம் வசனத்தில் பார்த்தோம். ''உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரராகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துகொள்வாயாக.''



லேவியின் வம்ச வரலாறு

தேவனாகிய கர்த்தர், யாத்திராகம புத்தகத்தில் கொடுத்த மாறாத பிரமாணங்களையும் மனசாட்சி சார்ந்த பிரமாணங்களையும், லேவியராகமத்திலே கொடுத்த ஆராதனை முறைமை பற்றிய பிரமாணங்களையும், பரிசுத்தம் சார்ந்த பிரமாணங்களையும் மீட்கப்பட்டவர்களின் சமுதாயம் கைக்கொள்ளுகின்றதா, இல்லையா, என்பதை கவனிப்பதற்கும் ஆசரிப்பு கூடாரத்தையும் அதின் பிராகாரத்தையும் பத்திரமாக பாதுகாப்பதற்கும், ஆசாரியர்களான

ஆரோன், அவனுடைய நான்கு குமாரர்களுக்கு ஏதாவது உதவி தேவை என்றால் அவ்விதமாக உதவி செய்வதற்கும் லேவி கோத்திரத்தின் அனைத்து ஆண் மக்களும் முழு நேரப் பணியாளர்களாக மாறி விட்டார்கள்.

1.3 லேவியராகமத்தின் அமைப்பு

ஆரோனும், அவனுடைய நான்கு குமாரர்களும் தவிர, லேவி கோத்திரத்தில் வேறு எவரும் ஆசரிப்பு கூடாரத்தின் பணிகளில் ஈடுபட முடியாது. ஆரோனும் அவனுடைய நான்கு குமாரர்களும்கூட மிக மிக கவனத்துடன்தான் ஆராதனையின் முறைகளை கையாள வேண்டும். அவர்களுக்கு மட்டுமே ஆராதனை நடத்தும் உரிமை கொடுக்கப்பட்டு இருந்ததால், சற்றும் அவர்களின் கவனம் குறைந்துவிட கூடாது. கர்த்தர் கற்பித்தபடியே அவர்கள் அத்தனை முறைகளையும் கையாள வேண்டும்.

ஆரோன், அவனுடைய நான்கு குமாரர்களுடைய பிரதிஷ்டை, லேவியராகமம் 8,9 ஆகிய அதிகாரங்களில் இடம் பெறுவதை நாம் பார்க்க இருக்கின்றோம். இந்த அதிகாரங்கள் ஓர் விழாக் கோலம் எடுக்கின்றது. வெகு விமரிசையாக ஆரோனும், அவனுடைய நான்கு குமாரர்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். 8,9 அதிகாரங்கள் உயர்ந்த ஓர் மகிழ்ச்சியை நமக்கு கொடுத்தாலும், 10-வது அதிகாரத்தில் ஆரோனின் இரண்டு ஆண் மக்கள் ஏற்ற ஆயத்தம் இல்லாமல் பரிசுத்தராகிய தேவனின் ஆராதனையினை நடத்த முற்பட்ட பொழுது பலிபீடத்தின் முன்பாக செத்து விழுவதையும் நாம் பார்க்க இருக்கின்றோம். ஒரு மகா விசனமான சம்பவமாக நமக்கு தெரிய இருக்கின்றது. ஆசரிப்பு கூடாரம் ஆண்டவராகிய தேவன் தங்கும் ஸ்தலம். ஆண்டவராகிய தேவன் மகா பரிசுத்தர். எனவே அவரது ஆராதனையினை நடத்த அழைக்கப்பட்டவர்களும் மகா பரிசுத்தர்களாக இருக்க வேண்டும். இதுவே லேவியராகமத்தில் வலியுறுத்தபடுகின்றது.

ஆசரிப்பு கூடாரத்தில் வாசம் பண்ணுகிறவர் மகா இராஜா ஆகும். எனவேதான் அதனை பாதுகாக்க அழைக்கப்பட்ட லேவியர்களின் புத்திரர் சேனை வீரர்கள் போல் ஆசரிப்பு கூடாரத்தை சுற்றிலும் நிற்பதை பார்க்கலாம். சேனை வீரர்கள் போல நின்று ஆசரிப்பு கூடாரத்தையும், பாவம் பிரவேசித்து விடாதபடிக்கு மீட்கப்பட்டவர்கள் தங்கி இருந்த முகாமையும் அவர்கள் பாதுகாக்க வேண்டும். எண்ணாகமம் 4:3-ல் லேவியின் புத்திரர் சேனை என்று அழைக்கப்படுவதை நீங்கள் காணலாம். அவர்கள் யாரை சேவிக்கின்றார்களோ அவர் இராஜாதி இராஜாவாக இருப்பதினால், அவர்கள் ராஜாவின் சேனை வீரர்கள் போல நடந்து கொள்ள வேண்டும். ஓர் சிறு கவனக் குறைவும் அவர்களது வாழ்க்கையை பாதித்து விடும்.

யாத்திராகமம் 40-ம் அதிகாரத்தில், ஆசரிப்புக் கூடாரம் தேவ மகிமையினால் நிரம்பிற்று என்று பார்த்தோம். மோசேயினால் கூட அதின் உள்ளே பிரவேசிக்க முடியவில்லை என்றும் நாம் பார்த்தோம். அப்பொழுது தேவனுடைய மகிமை அவர்கள் நடுவில் தாங்க முடியாத அளவில் இறங்கி விட்டது. அந்த நேரம் முதல் அவர்கள் கானான் சேரும் வரைக்கும் அவர்களுடைய அன்றாட வாழ்க்கைப் பயணத்தை நடத்துகிறவர் சேனைகளின் கர்த்தர். யாத்திராகமம் 40:36,37 வசனங்களில், ''வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள். மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள்'' என்று நாம் பார்க்கிறோம்.

எகிப்திலிருந்து வெளியேறிய பின்னர் சீனாய் மலை அடிவாரம் வந்து சேரும் வரை மீட்கப்பட்டவர்களுக்கு மூன்று மாதங்கள் ஆயின. தொடர்ந்து மோசே இரண்டு முறை சீனாய் மலை ஏறி இறங்கி வந்து மக்களுடன் தொடர்ந்து பேசிக்கொள்ள மூன்று மாதங்கள் ஆயின. ஆசரிப்பு கூடாரத்தின் பொருட்களை தயார் செய்வதற்கு மீட்கப்பட்டவர்கள் ஆறு மாதங்கள் எடுத்தார்கள். மொத்தமாக ஒரு வருடம் இதிலே செலவாகி விட்டது. இரண்டாம் வருடம் முதல் மாதம் முதல் நாள் ஆசரிப்பு கூடாரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதனை யாத்திராகமம் 40:17-ல் பார்க்கலாம். ''இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம்பண்ணப்பட்டது.''

தேவனுடைய மகிமை ஆசரிப்பு கூடாரத்தை நிரப்பி விட்டது. மீட்கப்பட்டவர்கள் வெற்றியுள்ள ஜீவியத்தில் மிகவும் முன்னேறிவிட்டார்கள். ஆயினும் அத்துடன் அவர்களுடைய சரித்திரம் முடிந்து விடவில்லை. இன்னும் அவர்கள் எத்தனையோ அத்தியாயங்களை அவர்களுடைய வாழ்க்கையில் காண வேண்டியது உள்ளது. பள்ளங்களும், மேடுகளும் அவர்களுக்கு காத்துக் கொண்டு இருக்கின்றது. சந்தோஷமான நேரங்களையும் சங்கடமான நேரங்களையும் அவர்கள் சந்திக்க இருக்கின்றார்கள். இப்பொழுது மீட்கப்பட்டவர்களுடைய பிரயாணத்தை, மீட்பரே முன்னின்று நடத்தி விட்டால் சந்தோஷமும், சங்கடமும் அவர்களுக்கு சமமாகவே தெரியும்; பள்ளங்களும், மேடுகளும் அவர்களுக்கு பத்திரமானதாகவே தெரியும். எனவேதான் அவர்களுடைய வாழ்க்கை பிரயாணத்தை கானானுக்கு நேராக எடுத்துச் செல்ல மீட்பராகிய தேவன் முன் வந்து விட்டார். பரிசுத்தராகிய கர்த்தர் உத்தரவு கொடுக்காமல் பிரயாணம் மேற்கொள்ளப்பட போவது இல்லை.

வாசஸ்தலத்தில் இருந்து மேகம் மேலே எழும்பினால் பிரயாணத்தை துவங்குவார்கள். மேலே எழும்பின மேகம் கீழே இறங்கி விட்டால் பிரயாணத்தை நிறுத்தி விடுவார்கள். யாத்திராகமம் 40-வது அதிகாரத்திலே ஆசரிப்பு கூடாரத்தின் பிரதிஷ்டை முடிந்தது. மோசேயும் மீட்கப்பட்டவர்களும் பிரயாணப்பட, கர்த்தரின் உத்தரவிற்காக அங்கு காத்துக் கொண்டு இருக்கின்றார்கள். மேகம் எப்பொழுது மேலே எழும்பும் என்று பார்த்துக் கொண்டே இருக்கின்றார்கள். ஆசரிப்பு கூடாரத்தின் பிரதிஷ்டை, இரண்டாவது வருடம் முதல் மாதம் முதல் தேதியிலே முடிந்தது. தொடர்ந்து இரண்டாவது வருடம் இரண்டாவது மாதம் 20-ம் தேதியிலே மேகம் உயரமாக எழும்பி விட்டது. பிரயாணத்தை துவங்குங்கள் என்ற கட்டளை அதன் மூலம் பிறந்து விட்டது. அதாவது பிரதிஷ்டை நடந்த பின்னர் 50 வது நாள் மேகமானது உயரமாக எழும்ப மீட்கப்பட்டவர்கள் கண்டார்கள். 50 நாள் வனாந்தரத்தில் தங்கி இருந்திருக்கின்றார்கள் என்பதை நாம் எண்ணாகமம் 10:11,12-வது வசனங்கள் மூலம் அறிகின்றோம். ''இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய்ப் புறப்பட்டார்கள்; மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று.''

1.4 லேவியராகமம் எழுதப்பட்ட காலம்

ஆசரிப்பு கூடாரம் பிரதிஷ்டையான பின்னர், மேகம் மேலே ஏறும் வரைக்கும் மீட்கப்பட்டவர்கள் தங்கி இருந்த அந்த 50 நாட்களில், லேவியராகமத்தின் ஆராதனையை சார்ந்த பிரமாணங்களையும், பரிசுத்தத்தை சார்ந்த பிரமாணங்களையும், மோசே கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டார்.

கர்த்தர் மோசேயை கூடாரத்திலிருந்து கூப்பிட்டார் என்று லேவியராகமம் முதலாம் அதிகாரம் முதலாவது வசனத்தில் வாசிக்கின்றோம். லேவியராகமத்தை யூதர்கள் ''கர்த்தர் கூப்பிட்டார்'', அதாவது வையிக்ரா (Wayyikra) (And He called) என்ற தலைப்பில்தான் அழைப்பது உண்டு. 'கர்த்தர் மோசேயை நோக்கி' என்று லேவியராகம புத்தகத்தில் அடிக்கடி வருவதை நாம் பார்க்கலாம். லேவியராகம புத்தகத்தில் மொத்தம் 27 அதிகாரங்கள் உண்டு. இந்த 27 அதிகாரங்களில் 56 தடவை ''கர்த்தர் மோசேயை நோக்கி'' என்று திரும்ப திரும்ப வருகிறது. லேவியராகம புத்தகத்தை, எபிரேய மொழியில் இருந்து கிரேக்க மொழிக்கு மொழி பெயர்த்தவர்கள் இந்த புத்தகம் லேவியர்களை சார்ந்த புத்தகமாக இருப்பதினால் ''லேவியராகமம்'' (Leviticus) என்று பெயர் கொடுத்தார்கள்.

யாத்திராகமம் மீட்பை எடுத்து கூறுகின்றது. லேவியராகமம் பரிசுத்தத்தை எடுத்து கூறுகின்றது. யாத்திராகம புத்தகத்தில் நிகழ்ச்சிக்கு மேல் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. லேவியராகமத்தில் கர்த்தர் மோசேயிடம் பேச்சுக்கு மேல் பேசுவது இடம் பெறுகிறது. யாத்திராகம புத்தகத்தில் மீட்கப்பட்டவர், உணர்ச்சியின் உச்சத்தில் இருப்பதை நாம் பார்க்கின்றோம். லேவியராகம புத்தகத்தில் அவர்கள் வளர்ச்சியின் துவக்கத்தில் இருப்பதை காண்கின்றோம்.

லேவியராகம புத்தகத்தின் 27 அதிகாரங்களையும் 5 பிரிவாக நாம் பிரித்து படிக்க வேண்டும். லேவியராகமம் 1 முதல் 5 அதிகாரங்கள் முதல் பிரிவாக அமைகின்றது. ஆராதனையில் பங்கு எடுக்க வருகிறவர்கள் எவ்விதமான ஆயத்தத்துடன் வர வேண்டும் என்பதை முதல் பிரிவில் நாம் பார்க்க வேண்டும்.

இரண்டாவது பிரிவு, லேவியராகமம் 6,7 ஆகிய அதிகாரங்கள். ஆராதனை நடத்துகிற ஆசாரியன் எவ்விதமாக ஆராதனை நடத்த வேண்டும் என்பதை கூறுகின்றது. இந்த முதல் இரண்டு பிரிவுகளிலும் ஆராதனை முறைமை என்பது பலியினை நடுவாக வைத்து அமைகின்றது.

லேவியராகமத்தின் மூன்றாவது பிரிவு ஆராதனை நடத்தும் ஆசாரியர்களின் பிரதிஷ்டையினை பற்றி கூறுகின்றது. அதனை 8,9,10 அதிகாரங்களில் கண்டு கொள்ளலாம்.

லேவியராகமம் 11 முதல் 16 அதிகாரங்கள் நான்காவது பிரிவாக மாறுகின்றது. அதில் பரிசுத்தராகிய தேவன், தன்னை ஆராதிக்க வருகிறவர்கள் சுத்தம், சுகாதாரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

ஐந்தாவது பகுதி, லேவியராகமம் 17 முதல் 27 அதிகாரங்களில் இடம் பெறுகின்றது. பரிசுத்தத்தில் வளர விரும்புகின்றவர் கைக்கொள்ள வேண்டிய பல குறிப்புகள் அந்த ஐந்தாவது பகுதியில் இடம் பெருகின்றது.

1.5 லேவியராகமத்தின் கருத்து

லேவியராகம புத்தகம் பலிகளை நடுவாக கொண்ட புத்தகம். காண முடியாத தேவனுடன் மனிதன் தொடர்பு கொள்ளுவதற்கு கொடுக்கப்பட்ட ஒரு சலுகையே பலி ஆகும். பலி ஏற்கப்படலாம் அல்லது நிராகரிக்கப்படலாம். பலியானது மனம் உடைந்தும் மனம் உவந்தும் கொடுக்கப்படும் பொழுது அது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆதியாகம

புத்தகத்தில் காயீன் ஆபேல் என்ற இரு சகோதரர்கள் பலியிடச் சென்றார்கள். நோவாவும் வெள்ளப் பெருக்கு முடிந்த பின்னர் பலியிட்டார். ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு என்பவர்கள் கூட பலியிட்டனர்.

ஏன் அந்த நாட்களில் மனிதர்கள் பலி செலுத்தினார்கள்? முதலாவதாக, இழைத்த பிழைகளுக்கு இரக்கம் காண பலி செலுத்தினார்கள். இரண்டாவது, பெற்ற நன்மைகளுக்கு நன்றி நவில பலிசெலுத்தினார்கள். மூன்றாவது, காண முடியாத தேவனுடன் ஓர் புதிய உறவு கொள்ள மனிதர் பலி செலுத்தினார்கள். ஆனால் மனித உயிர்களை பலியாக செலுத்துவதற்கு வேத புத்தகம் அனுமதி கொடுக்கவில்லை. ஈசாக்கு என்ற தனது மகனை பலியாக செலுத்த ஆபிரகாம் முற்பட்ட பொழுது தேவன் அதனை தடுத்து நிறுத்தினார். நரபலி வேதபுத்தகத்தில் இடம் பெறவில்லை. செய்த பாவத்திற்கு ஓர் பரிகாரமாக பலி வெட்டப்பட்டது. இரத்தம் ஊற்றப் பட்டது. இரத்தத்தில் உயிர் இணைந்து இருக்கின்றது. எனவேதான் இரத்தத்துடன் எதுவும் புசிக்க வேண்டாம் என்று வேத புத்தகம் கூறுகின்றது. (லேவி. 17:11,12)

மொத்தம் 5 பிரதான பலிகள் லேவியராகம புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன. தகனபலி, போஜனபலி, சமாதானபலி ஆகிய மூன்று பலிகளும் சுகந்த வாசனையான பலி என்பதற்கு கீழாக வருகின்றன. அந்த சுகந்த வாசனையான பலி உலக இரட்சகரான இயேசு கிறிஸ்துவில் காணப்படுகின்றது. இயேசு எனக்காகத் தகனிக்கப்பட்டார். எனவே இயேசு என் தகனபலியாக மாறுகின்றார். இயேசு பதினாயிரம் பேரிலும் எனக்குச் சிறந்தவர். அவரை என் ஆத்துமா பருகும். எனவே இயேசு என்னுடைய போஜனபலியாக மாறுகின்றார். குற்ற உணர்வினால் குமுறிக் கொண்டு இருந்த என் உள்ளத்தை, சகல பாவங்களையும் கழுவும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சுத்தப்படுத்தி விட்டதால் என்னுடைய மனம் சமாதானம் கண்டது. எனவே இயேசுவே என்னுடைய சமாதானபலியாக மாறி விட்டார். இவ்விதமாக தகனபலி, போஜனபலி, சமாதானபலி ஆகிய மூன்று பலிகளும் இயேசுவையே எடுத்துரைக்கின்றன. மேலும், பாவ நிவாரண பலி, குற்ற நிவாரணபலி ஆகிய இரண்டும், லேவியராகமத்தில் கூறப்பட்டுள்ள மற்ற பலிகள் ஆகும். பாவ சுபாவத்துடன் மனிதன் வளர்ந்து விட்டதால் பாவ நிவாரண பலியும் திட்டமிட்டுக் குற்றம் செய்யும் கொடூரனாக மனிதன் மாறி விட்டதால் குற்ற நிவாரணபலியும் லேவியராகமத்தில் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. இந்த இரண்டு பலிகளும் சிலுவையை ஞாபகப்படுத்தும் பலிகளாக மாறி விட்டன.

1.6 பாவி பரிசுத்தவான் ஆகுதல்

லேவியராகமம், மனுக்குலத்திற்கு ஒரு பெரும் நன்மை தருகின்றது: பாவம் செய்த மனிதனை பலி என்ற பாலத்தில் ஏறிவரச் செய்து பரிசுத்தம் என்ற பசுந்தரைக்கு வழி நடத்துகின்றது. பாவியான ஓர் மனிதனுக்கு, பரிசுத்தராகிய தேவனுடன் ஒப்புரவாகி வாழும் ஒரு வாய்ப்பை லேவியராகம புத்தகம் சுட்டிக் காட்டுகின்றது. லேவியராகம புத்தகத்திலே 87 தடவை பரிசுத்தம் என்ற சொல் வருகின்றது.

தகனபலி, போஜனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி, குற்ற நிவாரணபலி என்று 5 பலிகளை அன்று லேவியராகமம் சுட்டிக் காட்டியது. ஆனால், இன்று அந்த அனைத்து பலியையும், இயேசு நமக்காக கிருபாதார பலியாக மாறி பூர்த்தி செய்து விட்டார் என்று நாம் புதிய ஏற்பாட்டிலே கண்டுவிட்டோம்.

தொகுதி - 2
தேவ ஊழியத்திற்கு ஆசாரியர் ஆயத்தமாக்கப்படல்

அத்தியாயம் - 2
கர்த்தரின் சந்நிதியில் அங்கீகரிக்கப்பட்ட பலிகள்

2.1 பலிமுறைக்கு முகவுரை

கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு, அவனை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்ல வேண்டியது என்னவென்றால், உங்களில் ஒருவன் கர்த்தருக்குப் பலி செலுத்த வந்தால், மாட்டு மந்தையிலாவது ஆட்டு மந்தையிலாவது ஒரு மிருகத்தைத் தெரிந்தெடுத்து, பலி செலுத்த வேண்டும். (லேவி. 1:1,2)

''கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு, அவனை நோக்கி'' என்று லேவியராகமம் முதல் அதிகாரம் முதல் வசனம் ஆரம்பிக்கின்றது. கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்திலிருந்து மோசேயை கூப்பிட்டார். கூப்பிட்டார் என்று இந்த இடத்தில் வரும் வார்த்தைக்கு சரியான பொருள், ''எவ்வித மறுப்பும் தெரிவிக்க முடியாது, செவி சாய்த்தே தீர வேண்டும்'' என்பதாகும். ஒரு நீதிபதி கூப்பிடுவது போன்ற கூப்பிடுதல் ஆகும். சத்தம் ஆசரிப்பு கூடாரத்திலிருந்து வந்தது. அன்று ஒரு நாள் ஆபிரகாமை கூப்பிட்ட சத்தம் வானத்தில் இருந்து வந்தது. பின்னர் ''மோசே, மோசே'' என்று முட்செடியிலிருந்து கர்த்தரின் சத்தம் கூப்பிட்டது. தொடர்ந்து சீனாய் மலையிலிருந்து கர்த்தர் கூப்பிட்டார்.

மண்ணில் பதிக்கப்பட்ட கூடாரத்திலிருந்து கூப்பிட்டார். பாவம் பிரவேசிப்பதற்கு முன்னர் ஏதேன் தோட்டத்து மண்ணில் நடந்து ஆதி தகப்பன் ஆதாமை கூப்பிட்டு பேசியது போல, பாவம் பிரவேசித்த பின்னரும் கூட மோசே என்பாரை பக்கத்தில் வருமாறு, மண்ணில் பதிக்கப்பட்ட கூடாரத்தில் இருந்து கூப்பிட்டார். கர்த்தாதி கர்த்தர் மனிதன் மீது வைத்திருக்கும் மாறாத அன்பிற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. அப்பா பிள்ளைகளுடன் பேசுவதற்கு விளைகின்றது போல, தகப்பன் உரிமையுடன் பிள்ளைகளின் பெயரை கூறி அழைப்பது போல, கர்த்தர் மோசேயை கூப்பிட்டார். மிக முக்கியமான ஒன்றை பற்றி பேச வாஞ்சித்தவர் போல கூப்பிட்டார். தேவன் பேச கேட்ட அத்தனை குறிப்புகளையும் கவனமாக கேட்ட மோசே 27 அதிகாரங்களாக அதனை லேவியராகம புத்தகத்தில் எழுதி வைத்தார். கிருபை நிறைந்த வார்த்தைகளை கிருபாசனத்திலிருந்து கூறுவதற்காக தேவன் மோசேயை கூப்பிட்டார்.

''நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்ல வேண்டியது என்னவென்றால்'' என்றே லேவியராகமம் முதல் அதிகாரம் இரண்டாவது வசனம் துவங்குகின்றது. கர்த்தாதி கர்த்தர் நேரடியாக இஸ்ரவேல் புத்திரரிடம் பேசாமல் மோசே என்ற மத்தியஸ்தன் மூலமாகவே ஜனங்களிடம் பேசினார்.'' ஒருவன் கர்த்தருக்கு பலி செலுத்த வந்தால்'' என்று தனது பேச்சை

தேவன் ஆரம்பித்தார். கர்த்தருக்கு பலி செலுத்துவது என்பதே அவர் மோசேயை கூப்பிட்டு பேச விரும்பிய தலைப்பு. அர்த்தம் இல்லாமல் மனிதனை ஆண்டவர் கூப்பிடுவது இல்லை. மனிதனுடன் ஒரு நோக்கத்திற்காக பேசவே கர்த்தாதி கர்த்தர் மனிதனை கூப்பிடுகின்றார்.

லேவியராகம புத்தகத்திலே முதலாம் அதிகாரம் 1,2 ஆகிய இரண்டு வசனங்களிலும் தேவன் முகவுரை ஒன்று கொடுக்கின்றார். அதனைத் தொடர்ந்து, ஒன்று முதல் மூன்று அதிகாரங்களில் தகனபலி, போஜனபலி, சமாதான பலி என்ற மூன்று பலிகளையும் எப்படி செலுத்த வேண்டும் என்பதை முறைப்படி கூறுகின்றார். ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு பலியினை பற்றி தெளிவுபடுத்துகின்றது. ஒவ்வொரு பலியும் அதின் விளக்கமும் மூன்று பத்திகளாக அல்லது மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றது.

லேவியராகமம் முதல் அதிகாரம், தகனபலியின் விபரத்தை தருகின்றது. அதில் மூன்று பத்திகள் அல்லது மூன்று பிரிவுகள் இருப்பதை பார்க்கலாம். லேவியராகமம் முதல் அதிகாரம் 3 முதல் 9 வசனங்களில், செலுத்தப்படும் பலி, மாட்டு மந்தையில் இருந்து எடுத்ததாக இருந்தால் அதனை எப்படி செலுத்த வேண்டும் என்றும், அதே அதிகாரம் 10 முதல் 13 வசனங்களில், செலுத்தப்படும் தகன பலி, ஆட்டு மந்தையில் இருந்து எடுக்கப்பட்டதாக இருந்தால் செலுத்தப்பட வேண்டிய முறை என்ன என்பதையும், 14 முதல் 17 வசனங்களில், செலுத்தப்படும் பலி, பறவை இனங்களில் இருந்து எடுக்கப்பட்ட பலியாக இருக்கும் என்றால் அதனை செலுத்த வேண்டிய முறை எப்படி என்றும், மூன்று பிரிவாக பிரித்து விளக்கம் கொடுக்கப்பட்டு உள்ளது. கர்த்தருக்கு பலி செலுத்துவது எப்படி என்று மோசேயிடம் துவங்கிய அந்த பேச்சு, பின் ஒரு நாள் மறுரூப மலையிலே அந்த பலி இயேசுவே என்ற அறிமுகத்தில் முடிந்தது (லூக். 9:29-31).

பலியானது தெரிந்தெடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை இரண்டாவது வசனம் காட்டுகின்றது. செய்த பாவத்திற்கு ஏற்ற ஈடு செய்யத்தக்கதாக, பலி தெரிந்து எடுக்கப்பட்ட பலியாக இருக்க வேண்டும். பெற்ற நன்மைக்கு ஏற்ற நன்றி நவிலத்தக்கதாக தெரிந்து எடுக்கப்பட்டு இருக்க வேண்டும். பலியினை யோசித்து, ஆராய்ந்து தெரிந்து எடுத்து கொள்ள வேண்டும். எந்த நோக்கத்திற்காக பலி செலுத்தப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற ஏற்றதான பலியாக இருக்க வேண்டும். லேவியராகமம் முதல் அதிகாரம் இரண்டாவது வசனத்தில் ''மாட்டு மந்தையிலாவது ஆட்டு மந்தையிலாவது ஒரு மிருகத்தை தெரிந்து எடுத்து பலி செலுத்த வேண்டும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது பலியிட தூரமாக அலைந்து ஒரு மிருகத்தை தேட வேண்டாம்; வேட்டையாடி கொண்டு வந்து பலி செலுத்த வேண்டாம்; அருகாமையில் இருக்கும் மந்தையில் இருந்தே பலியினை தெரிந்து கொள்ளலாம் என்று தேவன் கூறுகின்றார்.

இரட்சிப்பு சமீபமாகவே இருக்கின்றது. மகிழ்ச்சியாக சுதந்தரமாக, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையிலே மேய்ந்து கொண்டிருக்கும் குற்றமில்லாத ஒரு மிருகம், பிறிதொருவனின் பாவத்திற்காக தன்னை ஒப்புக் கொடுக்க தனது இடத்தை விட்டு வந்து கொண்டு இருக்கின்றது. ''இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைதாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்.'' (பிலி. 2:6,7) தனது எல்லா மகிமையையும் பரலோக மேன்மையையும் விட்டு கொடுத்தார். மனிதரின் பாவத்தை தன்மேல் ஏற்றுக் கொண்டார்.

2.2 சர்வாங்க தகனபலி

அவன் செலுத்துவது மாட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகன பலியானால், அவன் பழுதற்ற ஒரு காளையைச் செலுத்துவானாக; கர்த்தருடைய சந்நிதியில் தான் அங்கிகரிக்கப்படும்படி, அவன் அதை ஆசரிப்புக் கூடார வாசலில் கொண்டு வந்து, அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படும்படி தன் கையை அதின் தலையின்மேல் வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தை எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள். பின்பு அவன் அந்தச் சர்வாங்க தகனபலியைத் தோலுரித்து, அதைச் சந்துசந்தாகத் துண்டிக்கக்கடவன். அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலிபீடத்தின்மேல் அக்கினியைப் போட்டு, அக்கினியின்மேல் கட்டைகளை அடுக்கி, அவன் குமாரராகிய ஆசாரியர்கள், துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கி வைக்கக்கடவர்கள். அதின் குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவுவானாக. அவைகளையெல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியாக தகனிக்கக்கடவன்: இது கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலி. (லேவி. 1:3-9)

லேவியராகமம் 1:3-9 வசனங்கள் தகன பலியின் முதல் பிரிவைக் குறித்து கூறுகின்றது. தகன பலியாக காளை அடிக்கப்பட்டு பலியாகுகின்றது. எவ்வித பழுதும் இல்லாத காளையாக அது இருக்க வேண்டும். செலுத்தப்படும் பலி செலுத்துகிறவனின் சார்பாக செலுத்தப்படுகின்றது. கர்த்தருக்காக செலுத்தும்பலி அல்ல அது. மனிதன் தனக்காக கர்த்தரிடம் செலுத்தும் பலி. கர்த்தர் சொல்லி, கர்த்தர் வற்புறுத்தி செலுத்தும் பலி அல்ல. தானாக விரும்பி வலிய வந்து செலுத்தும் பலி. ''வருத்தப்பட்டு பாரம் சுமக்கின்றவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்'' (மத்.11:28) என்ற மொத்தமான அழைப்பினை உலக இரட்சகரான இயேசு மனுக்குலத்திற்கு நேராக கொடுத்தாலும், விரும்பி வருகின்றவர்கள் மட்டுமே தங்களுடைய வருத்தங்கள் நீங்க காண்கின்றார்கள்; தங்களுடைய வியாகுலங்கள் மறைய காண்கின்றார்கள்.

மனிதன் தனக்காக செலுத்தும்பலி, இந்த வசனங்களில் ஒரு சித்திரம் போன்று விவரிக்கப்பட்டுள்ளது. பலி செலுத்த வருகின்றவன் ஆசரிப்பு கூடார வாசலில் தனது பலியான காளையுடன் ஆராதிக்க வருகின்றான். அவனை ஆசாரியன் வாசலில்தானே சந்தித்து வரவேற்கின்றான். என்ன நோக்கத்திற்காக பலி செலுத்த வந்திருக்கின்றான் என்று கேட்டு தெரிந்து கொள்ளுகின்றான். அவன் செலுத்த கொண்டு வந்திருக்கும் பலி, அவன் செலுத்த வந்த நோக்கத்தை நிறைவேற்றும் பலியாக இருக்கின்றதா என்பதை ஆசாரியன் ஆரம்பத்திலேயே அறிந்து கொள்ளுவான். மேலும், கொண்டு வந்த பலி பழுது இல்லாத பலியா என்பதையும் அறிந்து கொள்ளுவான். கர்த்தர் அங்கீகரிக்கும் பலி என்றும், பலி செலுத்துபவன் கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டவன் என்பதையும் ஆசாரியன் ஊர்ஜிதம் செய்த பின்னரே பலி செலுத்துவதற்கு அனுமதி கொடுப்பான்.

ஆராதிக்க வந்தவன் தனது கைகளை பலியிடப்பட கொண்டு வந்த அந்த காளையின் தலையின் மீது வைக்க வேண்டும். இதனை லேவியராகமம் 1:4-வது வசனம் எதற்காக அப்படி கூறுகின்றது? ஏனென்றால் பலியாக அவன் செலுத்தப்பட கொண்டு வந்த அந்த காளை அவனது பாவ நிவிர்த்திக்கு என்று அங்கீகரிக்கப்படும்படி அவன் தன் கையை அதின்மீது வைத்து அந்த பலியினை இட வேண்டும்! நான் கொண்டு வந்த காளையாகிய இந்த பலியின் தலைமீது நான் என் கைகளை வைப்பதினால் குற்றமில்லாத இந்த காளைமீது என் குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. என் அனைத்துப் பாவங்களும் என்னிலிருந்து எடுக்கப்பட்டு, இந்த பலிமீது அமர்த்தப்படுகின்றன. நான் செய்த பாவத்திற்கு பரிகாரம், என்னையே வெட்டப்பட ஒப்புக்கொடுத்திருந்து இருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக என்னில் அன்புகூர்ந்த கர்த்தராகிய தேவன், என் கைகளை இந்த பலியின் மீது நான் வைப்பதால் என் பாவத்தை இந்த பலிக்கு கடத்திவிட சித்தங்கொண்டார். நான் உயிர் பிழைத்து வாழ வழி செய்து விட்டார். காளையாகிய இந்த பலி பாவியாகிய நான் சாகாதபடி என்னை தடுத்து விட்டது. நான் வாழ ஒரு வாய்ப்பை கிருபையாக தேவன் இதன் மூலமாக கொடுத்து விட்டார். என் இடத்தை இந்த பலி ஏற்றுக் கொண்டது. இதற்கு அடையாளமாக, இதோ நான் என் இரு கைகளையும் இந்த பலியின் தலைமீது வைக்கின்றேன் என்று பலியிட வந்தவன் பலியின்மீது தன் கைகளை வைக்கின்றான்.

பலி செலுத்த வந்தவன் பலியை கர்த்தருடைய சந்நிதியில் கொல்ல வேண்டும். பலியினை கொல்லும் நிகழ்ச்சி, பலிபீடத்திற்கு சற்று வடபுறமாக இடம் பெறுகின்றது. கொல்லப்படும் சமயம் அதன் இரத்தம் முழுவதும் ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களால் ஒரு பாத்திரத்தில் பிடிக்கப்பட்டு பரிசுத்தராகிய தேவனின் சமூகத்திற்கு நேராக உயர்த்தி ஏறெடுக்கப்பட வேண்டும். அதன் பின்னர் அந்த இரத்தத்தை பலிபீடத்தின் நான்கு சுற்று புறங்களிலும் தெளிக்க வேண்டும். பலிபீடத்தின் உள்ளே அல்ல சுற்றிலுமாக தெளிக்க வேண்டும்.

பலி செலுத்த வந்தவன் கொல்லப்பட்ட காளையின் தோலை உறித்து சந்து சந்தாக துண்டிக்க வேண்டும். அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலிபீடத்தின்மேல் அக்கினியை போட்டு அக்கினியின்மேல் கட்டைகளை அடுக்க வேண்டும். பலியாக வெட்டப்பட்ட காளையின் துண்டங்களையும், தலையையும் கொழுப்பையும், கழுவி சுத்தமாக்கப்பட்ட குடல்களையும், தொடைகளையும் வைத்து பலிபீடத்தின்மேல் அடுக்கப்பட்ட கட்டையின்மேல் ஆசாரியன் சர்வாங்க தகனபலியாக அதனை தகனிக்க வேண்டும். காளையை, தன் இடத்தில் பலியிட கொண்டு வந்து, தன் கையினால் அதனை கொன்றவன், இப்பொழுது அந்த பலி, தகனபலியாக பலிபீடத்தில் தகனிக்கப்படுவதை பார்த்துக்கொண்டே இருக்கின்றான். நெருப்பு மேலாக எழும்புவதை காண்கின்றான்.

தகனபலி என்பதை எபிரேய மொழியில் ''ஓலா'' (Olah) என்று அழைப்பார்கள். ''ஓலா'' என்பதற்கு ''மேலாக செல்லுவது'' என்று பொருள்படும். தான் செய்த பாவத்தினை போக்க இந்த தகனபலி வாயிலாக தான் ஏறெடுக்கும் மன்றாட்டு, மேலாக செல்லுகின்றது. தனது பாவ அறிக்கையாக பாவ நிவிர்த்தி கேட்டு தேவ சமூகத்தை எட்டுகின்றது. மேலாக சென்று விட்டது என்ற உணர்வு, பலி செலுத்தியவனுக்கு கிடைக்கின்றது. புகையாக மறைந்து விடும் பலியாக அல்ல, கறையான உள்ளத்தை கர்த்தர் மன்னிக்கும் பலியாக, 'ஓலா' வாக உயரமாக சென்று விட்டது. பலி செலுத்தி விட்டதால், கர்த்தருக்கு சத்துருவாக இருந்த நிலையில் இருந்து, கர்த்தருடன் ஒப்புரவாகும் நிலைக்குள் வந்த திருப்தி அவனுக்கு கிடைக்கின்றது.

தகன பலியின் மூன்று பிரிவுகளில் முதல் பிரிவாகிய, ஒரு காளை தகன பலியாக பலியிடப்படுவதை பார்த்தோம்.

அவன் செலுத்துவது செம்மறியாட்டு மந்தையிலுள்ள ஆடுகளிலாவது வெள்ளாட்டு மந்தையிலுள்ள ஆடுகளிலாவது எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், பழுதற்ற ஒரு கடாவைக் கொண்டு வந்து, கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடத்தின் வடபுறத்தில் அதைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள். பின்பு அவன் அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, அதின் தலையையும் கொழுப்பையும் கூட வைப்பானாக; அவைகளை ஆசாரியன் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கி வைக்கக்கடவன். குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவுவானாக: அவைகளையெல்லாம் ஆசாரியன் கொண்டு வந்து பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்; இது சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி. (லேவி. 1:10-13)

லேவியராகமம் 1:10-13 வசனங்களில் தகன பலியின் இரண்டாவது பிரிவு, அல்லது இரண்டாவது பத்தி கொடுக்கப்பட்டு உள்ளது. செம்மறி ஆடு, அல்லது வெள்ளாடு தகனபலியாக செலுத்தப்படும் பொழுது எப்படி செலுத்த வேண்டும் என்று அந்த வசனங்களில் கூறப்பட்டுள்ளது. இந்த சம்பவம், தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவை சுட்டி காட்டுகின்றது. சிலுவையில் மனிதவர்க்கத்தின் பாவங்களுக்காக இயேசு பலியாகும் பொழுது, ''அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்'' என்று ஏசாயா 53:7-ல் பார்க்கிறோம். தகன பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட காளையை போலவே, ஆடும் பலிபீடத்தின் வடபுறத்தில் கொல்லப்படுகின்றது என்பதை லேவியராகமம் 1:11-வது வசனம் கூறுகின்றது. முந்தின பலியினை போலவே இதற்கும் ஒழுங்குமுறைகள் அமைகின்றன.

அவன் கர்த்தருக்குச் செலுத்துவது பறவைகளிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், காட்டுப் புறாக்களிலாவது புறாக்குஞ்சுகளிலாவது எடுத்துச் செலுத்தக்கடவன். அதை ஆசாரியன் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அதின் தலையைக்கிள்ளி, பலிபீடத்தில் தகனித்து, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் பக்கத்தில் சிந்தவிட்டு, அதின் இரைப்பையை அதின் மலத்தோடுங்கூட எடுத்து, அதைப் பலிபீடத்தண்டையில் கீழ்புறமாகச் சாம்பல் இருக்கிற இடத்திலே எறிந்துவிட்டு, பின்பு அதின் செட்டைகளுடன் அதை இரண்டாக்காமல் பிளப்பானாக: பின்பு ஆசாரியன் அதைப் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் தகனிக்கக்கடவன்; இது சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி. (லேவி. 1:14-17)

தகன பலியின் மூன்றாவது பிரிவாகிய பறவை இனங்களிலிருந்து படைக்கப்படும் தகனபலியை இங்கு பார்க்கின்றோம். மிருகங்களிலிருந்து பலி செலுத்தப்படும்பொழுது,

அந்த மிருகங்களை கொன்றவனும் துண்டித்தவனும் அந்த பலியை கொண்டு வந்தவனே! ஆனால் பறவை இனங்களை பலியாக செலுத்த வரும்பொழுது, அதனை கொல்லுகின்றவன் புறாவை கொண்டு வந்தவன் அல்ல! ஆராதனையை நடத்துகின்ற ஆசாரியனே அதனை கொல்லுகின்றான். பறவையின் இரைப்பை, கழிவு உறுப்புகள் தவிர மற்ற அனைத்தும் தகன பலியாக நெருப்பில் இடப்படுகின்றன. காளை பலியாக தகனிக்கப்படும்பொழுது அதன் அக்கினி வெகு உயரமாக 'ஓலா' வாக எழும்பிற்று. ஆனால் புறாவாகிய பறவை படைக்கப்படும் பொழுது அக்கினி அத்தனை உயரம் எழும்பா விட்டாலும், ஆண்டவர் அதனையும் சுகந்த வாசனையாக ஏற்றுக் கொள்ளுகின்றார்.

பலி எத்தனை பெரியது, எவ்வளவு விலை மதிப்பு உடையது என்பது தேவனுக்கு முக்கியத்துவம் அல்ல! பலி செலுத்த வந்தவனின் மனம் எந்த நிலையில் இருக்கின்றது என்பதே முக்கியம். மனம் உடையாமல் கொடுக்கப்படும் பலிகள் கர்த்தருக்கு உகந்த பலிகளாக அமைவது இல்லை. வசதி உள்ளவர்கள் காளை, ஆடு என்ற பலிகளை செலுத்தினார்கள். வசதி அற்றவர்கள் புறாக்குஞ்சுகளுடன் ஆராதிக்க வந்தார்கள். புறாவை போல, கபடமற்ற மனதுடையவனாக பலிசெலுத்த வருகின்றவன் மாறும் பொழுது, அவன் செலுத்தும் பலி சுகந்த வாசனையான பலியாக மாறி விடுகின்றது!

தகன பலியின் நோக்கம் என்ன என்பதை அறிந்து கொள்ளும் பொழுது பலியின் உள்ளான, ஆழமான கருத்தையும் புரிந்து கொள்ளுவோம்; அதனை பாராட்டவும் செய்வோம்! தகன பலியின் நோக்கங்கள் ஐந்து ஆகும். முதலாவது, பட்சிக்கும் அக்கினியாகிய தேவனின் கோபம் தவறு செய்த மனிதனை பட்சித்து விடாமல் அவன் செலுத்திய பலியினை பட்சிக்கின்றது. தேவ கோபம் அமர்த்தப்படுகின்றது! இரண்டாவது, பலி செலுத்த வந்தவன், பரிசுத்தராகிய ஆண்டவருக்குமுன் தனது வெளியரங்க பாவங்களையும், மறைவான இரகசிய பாவங்களையும் மனதார ஒப்புக் கொள்ளுகின்றான். பலியின் துண்டங்களுடன் தலையும் கொழுப்பும் சேர்த்து தகனிக்கப்பட்டது. தலை பகிரங்கமாக செய்த பாவங்களை குறிக்கின்றது. கொழுப்பு அந்தரங்கமாக செய்த பாவங்களை குறிக்கின்றது. மூன்றாவதாக, தகன பலி கர்த்தருக்கு சுகந்த வாசனையான பலியாக மாறுகின்றது. இதனை லேவியராகமம் 1:10,13,17 ஆகிய வசனங்களில் பார்க்கின்றோம். தேவன் வானத்தையும் பூமியையும், ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்த பின்னர், ஏழாம் நாளிலே ஓய்ந்து இருந்தார் என்று ஆதியாகமம் 2:2 கூறுகின்றது. 'ஓய்ந்து இருந்தார்' என்ற எபிரேய சொல்லும், 'சுகந்த வாசனை' என்ற எபிரேய பதமும் ஒரே சொல் ஆகும். தீமையை பார்க்க மாட்டாத சுத்த கண்ணராகிய கர்த்தர், தீமை செய்த மனிதன்மீது அமைதி அற்றவராக மாறும்பொழுது, தகன பலி கர்த்தரை அமைதிப்படுத்துகின்றது; இளைப்பாற செய்கின்றது. பாவத்தில் விழுந்த மனுக்குலத்தின் மீது தேவாதி தேவன் அமைதி அற்றவராக மாறும் பொழுது, இயேசு கிறிஸ்துவாகிய பலி, சுகந்த வாசனையான பலியாக மாறி பரிசுத்தராகிய தேவனுக்கு முன் சென்றது; கர்த்தரை இளைப்பாறச் செய்தது. கோபம் கொண்டாலும் இரக்கத்தை சிநேகிக்கும் தேவனாக அவர் மாறிவிட்டார். ''கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்பு கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தார்.....'' என்று எபேசியர் 5:2-ல் பார்க்கிறோம்.

தகன பலி செலுத்துவதின் நான்காவது நோக்கம் தேவ சமாதானம்! கர்த்தரிடம் சமாதானம் பெற்றவனாக அதனை செலுத்தியவன் மாறுகின்றான். தேவன், அவன்

அக்கிரமத்தை மன்னித்தார்; அவன் பாவங்கள் மூடப்பட்டது. பலி சுகந்த வாசனையான பலியாக மாறிவிடும். பலி செலுத்துகிறவனுக்கு தேவ சமாதானம் கிடைக்கின்றது.

ஐந்தாவது, தகனபலி செலுத்தியவன், தான் இனி முற்றிலும் கர்த்தருக்கு சொந்தமானவன் என்று தன்னை பரிபூரணமாக பரிசுத்தராகிய தேவனிடம் பரிசுத்தமான ஒரு வாழ்விற்கு தன்னை ஒப்படைக்கும் நிகழ்ச்சியாகும்.

பழைய ஏற்பாட்டு நூலில் மிக மிக பழமையான பலி தகன பலி, என்பதாகும். பாவ நிவிர்த்தி செய்யப்பட பொதுவாக அவ்வித பலி செலுத்தப்பட்டது. பலி செலுத்தப்பட்ட மிருகம் அல்லது பறவை மனிதனின் இடத்தில் மடிந்தது. பலி செலுத்த கொண்டு வரப்பட்ட மிருகத்தின் தலைமீது கை வைப்பதின் மூலம் பாவியாகிய மனிதனின் குற்றங்களை, கொல்லப்பட இருக்கும் மிருகம் எடுத்துக் கொள்ளுகின்றது. பாவ மனிதனின் இடத்தை குற்றம் செய்யாத ஓர் மிருகம் ஏற்றுக்கொள்ளுகிறது! இவ்விதமாக பிரதி வாரமும் 77 ஆடு, மாடுகள் பலியாக வெட்டப்பட்டுக் கொண்டே இருந்தன.

ஆனால் நாள் ஒன்று வந்தது; நிறைவானது வரும் பொழுது குறைவானது ஒழிந்துபோம் என்பதற்கு ஏற்ப கிறிஸ்துவாகிய கிருபாதார பலி வந்தது. ஒவ்வொரு வாரமும் 77 ஆடு, மாடுகள் வெட்டப்படுவதற்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்க கிறிஸ்துவாகிய கிருபாதார பலி வந்தது; இவ்வையகம் தேடி வந்தது. புதிய ஏற்பாட்டின் புது உடன்படிக்கைக்கு காரணராகிய இயேசு, நமது ஒவ்வொருவரின் மாசற்ற பலியாக சிலுவையில் மாறி விட்டார். ''குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்த கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார். உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்''என்று 1 பேதுரு 1:19-21-ல் பார்க்கிறோம். இவ்விதமாக கிறிஸ்து நமது தகன பலியாக மாறிவிட்டார். அவரை கிட்டி சேருகிறவர்களுக்கு தங்களுடைய பாவங்கள் கிறிஸ்துவின்மேல் கடத்தப்பட்டதான அனுபவம் கிடைக்கிறது. பாவ மன்னிப்பின் சந்தோஷம் பெற்றுக் கொள்ளுகின்றார்கள்: இரட்சிப்பின் மகிழ்ச்சியை அடைந்து வாழ்கின்றார்கள்.

2.3 போஜன பலி

ஒருவன் போஜனபலியாகிய காணிக்கையைக் கர்த்தருக்கு செலுத்த வேண்டுமானால், அவன் காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக; அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மேல் தூபவர்க்கம் போட்டு, அதை ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களிடத்தில் கொண்டுவருவானாக; அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய தூபவர்க்கம் எல்லாவற்றோடும் எடுத்து, அதைப் பலிபீடத்தின் மேல் ஞாபக்குறியாகத் தகனிக்கடவன்; அது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி. (லேவி. 2:1,2)

தகனபலி செலுத்துவதின் மூலம் மனிதன் பாவ நிவிர்த்தி பெற்று தேவ கோபத்திற்குத் தப்பி வாழ்கிறான் என்று லேவியராகமம் முதல் அதிகாரத்தில் பார்த்தோம். தகனபலியினைத்

தொடர்ந்து லேவியராகமம் இரண்டாம் அதிகாரத்தில் போஜன பலி என்பது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்து மோசேயைக் கூப்பிட்டுச் சொன்ன பலிகளில் இரண்டாவது பலியாக போஜனபலி காணப்படுகின்றது.

லேவியராகமம் முதல் 5 அதிகாரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தகனபலி, போஜனபலி, சமாதான பலி, பாவ நிவாரணபலி, குற்ற நிவாரணபலி என்ற ஐந்து பலிகளில், போஜனபலி மட்டுமே இரத்தம் சிந்தப்படாத பலியாக காணப்படுகின்றது. போஜனபலி செலுத்த உயிரினம் எதுவும் வெட்டப்படவே இல்லை. பலி என்பது இரத்தம் சம்பந்தப்பட்டது என்பதை அறிந்திருக்கிறோம். இரத்தம் இல்லாமல் பலி முழுமை பெறுவதும் இல்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால் போஜனபலியில் இரத்தம் எதுவும் காணப்படவில்லை.

பொதுவாக போஜனபலியானது தனியாகச் செலுத்தப்படுவது இல்லை. மற்ற நான்கு பலிகளில் ஏதாவது ஒன்றுடன் இணைத்துத்தான் செலுத்தப்பட்டு வந்தது. எண். 6:14,15-ல் போஜனபலியானது குற்றநிவாரண பலியுடன் சேர்த்து படைக்கப்படுவதை நாம் பார்க்கலாம். எண்ணாகமம் 6:17; 9:4ல் போஜன பலியினை சமாதான பலியுடன் இணைத்துப் படைப்பதை காணலாம். மேலும் எண்ணாகமம் 28:3-6-ல் போஜனபலி தகனபலியுடன் சேர்த்து படைக்கப்படுவதையும் வாசிக்கலாம்.

தானியேலின் புத்தகம் 9:26-ம் வசனத்தில் ''62 வாரங்களுக்கு பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல'' என்றும் 27-ம் வசனத்தில் ''அவர் ஒரு வாரம் அளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிபடுத்தி அந்த வாரம் பாதி சென்ற போது பலியையும், காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்'' என்றும் கூறப்பட்டு உள்ளது. மேசியாவாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்திற்கு ஈடு கட்ட சிலுவையில் தம் சொந்த இரத்தம் சிந்துவார். அப்பொழுது பலியையும் காணிக்கையையும், ஒழியப்பண்ணுவார் என்று தானியேல் கிறிஸ்து பிறப்பதற்கு 530 வருடங்களுக்கு முன்னதாக முன் உரைத்தார். இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்ட பின்னர் பலியும் காணிக்கையும் ஒழியும். அதில் பலி என்பது லேவியராகமம் சம்பந்தப்பட்ட தகனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி, குற்றநிவாரணபலி ஆகியவற்றை குறிக்கும். காணிக்கை என்பது இரத்தம் சம்பந்தம் இல்லாத போஜன பலியை குறிக்கும். தன்னுடைய எல்லாவற்றையும் பரிசுத்தராகிய தகப்பனுக்கு தத்தம் செய்கிறவன் கொண்டுவரும் காணிக்கை, அவனது பசி தாகத்தை காட்டும் காணிக்கையாக அமைகின்றது. கொஞ்சம் ருசித்த என் உள்ளம் கெஞ்சுதே இன்னும் தேவை என்று வாஞ்சிக்கும் காணிக்கையாக அமைகின்றது.

லேவியராகமம் இரண்டாம் அதிகாரம் முதல் வசனத்தில், ''ஒருவன் போஜன பலியாகிய காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டுமானால், அவன் காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக; அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மேல் தூப வர்க்கம் போட்டு.....'' என்று எழுதப்பட்டு உள்ளது. மெல்லிய மாவு, எண்ணெய், தூப வர்க்கம் ஆகிய மூன்றும் அவன் கொண்டு வந்துள்ள காணிக்கைகள். அந்த மூன்று காணிக்கைகளும் பரிசுத்த ஸ்தலத்தின் உள்ளாக வைக்கப்பட்டிருக்கும் பரிசுத்த பிரசன்னம் நிறைந்த பொருட்களை குறிக்கும் காணிக்கைகள். பரிசுத்த ஸ்தலமாகிய ஆசரிப்பு கூடாரத்தின் உள்ளாக, சமூகத்து அப்ப மேஜை மீது 12 அப்பங்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள் மெல்லிய மாவினால் செய்யப்பட்டவைகள்; மிக பரிசுத்தமானவைகள்; பரிசுத்த தேவனால் அங்கீகரிக்கப்பட்டவைகள். அந்த 12 அப்பங்களும் 12 கோத்திரங்களை குறிக்கின்றன. மெல்லிய மாவு கொண்டு வந்து இருக்கின்றவன் அந்த 12 கோத்திரங்களில் ஒரு

கோத்திரத்தில் பிறந்தவன். அவன் தன்னை அர்ப்பணிப்பதின் மூலம் அவனும் அவன் குடும்பமும் அவன் கோத்திரமும் அர்ப்பணிக்கப்படுகின்றது. ஆசீர்வதிக்கப்படுகின்றது.

அவன் கொண்டு வந்த அடுத்த காணிக்கை, எண்ணெய் என்பதாகும். அது இடித்து, பிழிந்து எடுக்கப்பட்ட எண்ணெய். பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள குத்து விளக்கு எரிவதற்கு இடித்து பிழிந்த எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. இடித்து பிழிந்த எண்ணெயினாலே குத்துவிளக்கு எவ்வித புகையோ, எரியும் வாசமோ இல்லாமல் வெளிச்சம் மட்டும் கொடுப்பது போல, தன்னுடைய வாழ்வும் இனிமேல் எவ்வித பழுதும் பாவமும் இல்லாமல் மனுஷருக்கு முன்பாக பிரகாசிக்கும் வாழ்க்கையாக இருக்கட்டும் என்று அவன் உள்ளம் வாஞ்சிக்கின்றது.

அவன் கொண்டு வந்த அடுத்த காணிக்கை, தூபவர்க்கம் என்பது ஆகும். பரிசுத்த ஸ்தலத்தின் உள்ளே தூப பீடம் ஒன்று உண்டு. அதில் காலை மாலை இரு வேளையும் தூபம் இடப்படும். தூபம் என்பது விண்ணப்பத்தை குறிக்கும். தூபவர்க்கத்தை காணிக்கையாக கொண்டு வந்துள்ள அந்த மனிதன், பரிசுத்தராகிய தேவனிடம் தனது நெஞ்சம், ஜெபிக்கும் நெஞ்சமாக மாற வாஞ்சிக்கின்றான். தேவனிடம் விண்ணப்பிக்கும் உள்ளமாக தனது உள்ளம் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றான்.

தகன பலி என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேய சொல் ''ஓலா'' என்று நாம் பார்த்தோம். ஓலா என்றால் மேலாக செல்லுதல் என்று பொருள். பாவ மன்னிப்பு கேட்டு அவன் மன்றாடிய மன்றாட்டு மேலாக சென்று தேவ சமூகத்தை எட்டி விட்டது. போஜன பலி என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேய சொல் 'மின்கா' என்பதாகும். மின்கா என்றால் 'காணிக்கை' (offering), 'பரிதானம்' (tribute) என்று பொருள்படும். மின்கா என்ற பதத்திற்கு மூன்று அர்த்தங்கள் இங்கு உண்டு: 'பரிசுத்தராகிய தேவன் ஒருவருக்கே இனி நான் மதிப்பு கொடுத்து வாழுவேன்' என்பது அதன் முதல் பொருளாகும். பழைய ஏற்பாட்டில் இந்த அர்த்தத்துடன் மின்கா என்ற பதம் 34 தடவை பயன்படுத்தப்பட்டு உள்ளது. 'உமக்கு மட்டும் அடங்கி வாழும் வாழ்க்கைக்கு என்னை ஒப்புக் கொடுக்கின்றேன். மெல்லிய மாவு மூலம் உமது சமூகத்து அப்பமாகவும், எண்ணெய் மூலம் வாசஸ்தலத்தின் குத்து விளக்கு எரிவதற்கு எண்ணெயாகவும், தூபவர்க்கத்தின் மூலம் என் வாழ்வு ஓர் ஜெப வாழ்வாக மாறவும் என்னை உமக்கு தத்தம் செய்கின்றேன்,' என்பதாகும்.

போஜனபலிக்கு பயன்படுத்தப்பட்டுள்ள மின்கா என்ற வார்த்தையின் அடுத்த பொருள் 'அடிமைப்பட்டு வாழுவேன்,' என்பதாகும். பேரரசனுக்கு சிற்றரசர்கள் கப்பம் கட்டுவதை இது குறிக்கின்றது. 97 தடவை இந்த பொருளில் பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் மின்கா என்ற பதம் பயன்படுத்தப்பட்டு உள்ளது. 1 இராஜாக்கள் 4:21-ல் பல தேசத்து அரசர்கள் காணிக்கைகளை கொண்டு வந்து சாலோமோன் அரசனைச் சேவித்தார்கள் என்று கூறப்பட்டுள்ள வசனத்தில் காணிக்கை என்பதற்கு 'மின்கா' என்ற எபிரேய பதமே பயன்படுத்தப்பட்டு உள்ளது.

'மின்கா' என்ற பதத்தின் மூன்றாவது பொருள், 'உடைந்து போன உறவை இன்னும் ஒரு முறை புதுப்பிக்கக் கொடுக்கப்படும் வெகுமதிகள்,' என்பதாகும். பலமுறை இப்பொருளிலேயே இந்த பதம் பழைய ஏற்பாட்டு நூல்களில் பயன்படுத்தப்பட்டு உள்ளது. உதாரணமாக, அண்ணனின் கோபத்திற்கு தப்பி ஓடி, பின் வீடு திரும்பும் பொழுது யாக்கோபு ஏசாவுக்கு 'வெகுமதி' கொடுத்தான் என்பதற்கு மின்கா என்ற பதம் பயன்படுத்தப்பட்டு

உள்ளது. (ஆதியாகமம் 33:10-ல்) .....''அப்படி அல்ல, உம்முடைய கண்களில் எனக்கு தயவு கிடைத்ததேயானால் என் வெகுமதியை என் கையில் இருந்து ஏற்றுக் கொள்ளும்'' என்று ஏசாவிடம் யாக்கோபு கூறுவதை நாம் பார்க்கின்றோம். ஆண்டவரே, இனி பரிசுத்தராகிய உமக்கு அடங்கி வாழுவேன்; பரிசுத்தராகிய உமக்கு அடிமைப்பட்டு வாழுவேன்; பரிசுத்தராகிய உமக்கு என்னை அர்ப்பணித்து வாழுவேன் என்பதே 'மின்கா' என்ற எபிரேய பதத்தின் சரியான அர்த்தங்கள் ஆகும்.

லேவியராகமம் 22-ல் 'காணிக்கையை ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களிடத்தில் கொண்டு வருவானாக. அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கை பிடி நிறைய எடுத்து' என்று எழுதப்பட்டு உள்ளது. அதாவது அவன் கொண்டு வந்த காணிக்கையை சரியாக இரண்டு பாகமாகப் பிரிப்பானாக என்பதே 'ஒரு கைப்பிடி எடுத்து' என்று எழுதப்பட்டுள்ளது. இரண்டாக பிரித்ததில் ஒரு பகுதி போஜனபலியாக பலிபீடத்தில் தகனிக்கப்பட வேண்டும்.

போஜன பலி என்பது மிக முக்கியமான ஒரு பலியாகும். மனந்திருப்புதலினால் பெற்ற மகிழ்ச்சியை நினைத்து மகிழும் ஞாபக்குறியாக போஜனபலி காணப்படுகின்றது. பாவங்கள் செய்து வாழ்ந்த அமைதியற்ற நாட்கள் ஞாபகத்திற்கு கொண்டு வரப்படுகின்றது. பரிசுத்தராகிய தேவனிடம் மன்னிப்பு பெற்று மன நிம்மதி கொண்ட நாளை நினைவு படுத்தும் பலியாக போஜனபலி அமைகின்றது. லேவியராகமம் 2:2-ன் பின் பகுதியைப் பாருங்கள் 'அதை பலிபீடத்தின்மேல் ஞாபக்குறியாகத் தகனிக்கக்கடவன்' என்று எழுதப்பட்டு உள்ளது. 'ஞாபக்குறி' என்ற வார்த்தைக்கு ''கடந்த காலத்தை தோண்டி எடுத்தல் '' என்று பொருளாகும். தகனபலி செலுத்தி, கடந்த காலத்தை தோண்டி எடுத்து மன்னிப்பு பெற்ற பின்னர் போஜனபலி செலுத்தி, மனிதன் தன்னை முற்றிலுமாக பரிசுத்தருக்கு ஒப்புக் கொடுக்கின்றான். தான் எத்தனை பெரிய பாவம் செய்தவன் என்பதை ஞாபகத்தில் கொண்டு வருகின்றான். அதே சமயத்தில் அத்தனை பெரிய தனது அக்கிரமங்களையும் துரோகங்களையும் மன்னித்து சர்வ வல்லமையுள்ளவர் தன்னை ஏற்றுக் கொண்டார் என்ற ஞாபகத்தையும் அவன் தனக்குள் சிந்தித்து கொண்டு, தன்னையும் தனக்குள்ள அத்தனையும் அன்பு கொடையாக பரிசுத்த தேவனுக்கு போஜனபலி என்பதின் மூலம் செலுத்தி விடுகின்றான்.

லேவியராகமம் 2:2-ல் 'ஞாபகக்குறி' என்று பயன்படுத்தப்பட்டுள்ள அதே எபிரேய வார்த்தையினை சாரிபாத் என்ற ஊரில் வாழ்ந்த ஓர் விதவை எலியா என்ற தீர்க்கத்தரிசியிடம் கூறினாள். ''அப்பொழுது அவள் எலியாவை நோக்கி: தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப் பண்ணவும், என் குமாரனைச் சாகப்பண்ணவுமா என்னிடத்தில் வந்தீர்? என்றாள்.'' 1 இராஜாக்கள் 17:18-ல் பார்க்கிறோம். லேவியராகமம் முதல் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள தகனபலி செலுத்தியவன் பலியில் இரத்தம் சிந்தப்பட்டதால் தனது பாவம் தொலைந்து விட்டது என்ற ஞாபகத்துடன் போஜன பலி செலுத்த வருகின்றான். இன்றும் கூட இயேசுவாகிய தகனபலியை ஒவ்வொரு இராபோஜனபலி ஆராதனையிலும் நாம் நினைவு கூறுகின்றோம். நம் ஒவ்வொருவரின் கடந்தகால பாவங்களை இயேசுவின் இரத்தம் கழுவி சுத்திகரித்ததை ஞாபகக் குறியாக கொண்டு இராப் போஜன பந்தியில் கலந்து கொள்ளுகின்றோம்.

அந்தப் போஜன பலியில் மீதியாயிருப்பது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; கர்த்தருக்கு இடும் தகனபலிகளில் இது மகா பரிசுத்தமானது. (லேவி. 2:3)

கொண்டு வரப்பட்ட போஜனபலி சரியாக இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டதை இரண்டாவது வசனத்தில் நாம் பார்த்தோம். அதில் ஒரு பகுதி பலிபீடத்தில் தகனிக்கப்பட்டது. மூன்றாவது வசனத்தில், மீதி இருந்த அடுத்த பகுதியைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறப்பட்டு உள்ளது. அது மகா பரிசுத்தமானது என்றும் மீதியானதை ஆசாரியர் தவிர அவர்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள்கூட சாப்பிடக்கூடாது என்றும் வசனம் கூறுகின்றது. லேவியராகமம் 6:16-18-ம் வசனங்களில் இந்த விபரத்தை தெளிவாக நாம் பார்க்கலாம்.

நீ படைப்பது அடுப்பில் பாகம் பண்ணப்பட்ட போஜன பலியானால்: அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்த புளிப்பில்லா அதிரசங்களாயாவது, எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளாயாவது இருப்பதாக. நீ படைப்பது தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா மெல்லிய மாவினால் செய்யப்பட்டதாயிருப்பதாக. அதைத் துண்டு துண்டாகப் பிட்டு, அதின்மேல் எண்ணெய் வார்ப்பாயாக; இது ஒரு போஜனபலி. நீ படைப்பது பொரிக்குஞ் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்யப்படுவதாக. இப்படிச் செய்யப்பட்ட போஜனபலியைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக; அது ஆசாரியனிடத்தில் கொண்டு வரப்படும்போது, அவன் அதைப் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அந்தப் போஜனபலியிலிருந்து ஆசாரியன் ஞாபகக்குறியாக ஒரு பங்கை எடுத்துப் பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி. இந்த போஜனபலியின் மீதியானது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; கர்த்தருக்கு இடும் தகனங்களில் இது மகா பரிசுத்தமானது. (லேவி. 2:4-10)

லேவியராகமம் 2:1-3-ல் சமைக்காமல் அப்படியே கொடுக்கப்பட்டதான போஜன பலியினை பற்றி நாம் பார்த்தோம். லேவியராகமம் 2:4-10 வசனங்களில் சமைத்து கொடுக்கப்பட்ட காணிக்கையான போஜன பலியினை நாம் காண்கின்றோம். சமைக்காமல் கொடுக்கப்பட்டது குடும்பத் தலைவன் தன்னை பரிசுத்தமாக ஜீவியம் செய்வதற்கு அர்ப்பணித்ததை காட்டுகின்றது. சமைத்துக் கொடுக்கப்படும் காணிக்கையான போஜனபலி, கணவன், மனைவி, பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து முயற்சி எடுத்து சமைத்து குடும்பமாக தங்களை பரிசுத்தராகிய கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பதை காட்டுகின்றது. 'நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்' என்ற உன்னத நிலைக்கு அவனுடைய குடும்பம் வந்து விட்டதை அது சுட்டிக் காட்டுகின்றது.

மூன்று விதமான முறையில் போஜனபலி சமைக்கப்படுகின்றது. 'நீ படைப்பது' என்ற வார்த்தையுடன் 4,5 மற்றும் 7-வது வசனங்கள் துவங்குவதை கவனியுங்கள்.

4-வது வசனத்தில் 'நீ படைப்பது அடுப்பில் பாகம் பண்ணப்பட்டதானால்' என்று எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். அவ்விதமான அடுப்பும், அதில் பாகம் பண்ணும்

பாத்திரமும் பெரும் செல்வந்தர்கள் மட்டுமே அன்று வைத்து இருந்தார்கள். 5-வது வசனம் 'நீ படைப்பது தட்டையான சட்டியில் இருக்குமானால்' என்று தொடங்குவதை பார்க்கின்றோம். அவ்வித அடுப்பும் பாத்திரமும் நடுத்தர நிலை குடும்பங்கள் வைத்து இருந்தன. 7-வது வசனம், 'நீ படைப்பது பொரிக்குஞ்சட்டியில் பாகம் பண்ணப்பட்டதானால்,' என்று ஆரம்பிப்பதை பார்க்கிறோம். அது மண் அடுப்பையும், மண் சட்டியும் ஆகும். மிகச் சாதாரணமான, ஏழை நடுத்தரமான குடும்பம் அது என்று அறிந்து கொள்ளுகின்றோம். குடும்பம் செல்வமாகவோ ஏழ்மையாகவோ இருந்தாலும் செலுத்த வேண்டிய போஜனபலி ஒரே விதி கொண்டதாகவே இருக்கிறது என்பதை நாம் அறிகின்றோம். பரிசுத்தராகிய தேவனின் பார்வையில் பாரபட்சம் என்பது இல்லை. மனிதர்கள் அனைவரும் பாவம் செய்ததினால் ஒரே நிலையிலேயே தேவனுடைய பார்வையில் காணப்படுகின்றார்கள். பரிசுத்தத்தில் தகுதிகள் மாற்றப்படுவது இல்லை.

நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தும் எந்த போஜனபலியும் புளித்தமாவினால் செய்யப் படாதிருப்பதாக; புளித்தமாவுள்ளதொன்றையும் தேனுள்ளதொன்றையும் கர்த்தருக்குத் தகனபலியாகத் தகனிக்க வேண்டாம். முதற்கனிகளைக் காணிக்கையாக் கொண்டுவந்து, அவைகளைக் கர்த்தருக்குச் செலுத்தலாம்; ஆனாலும், பலிபீடத்தின்மேல் அவைகள் சுகந்த வாசனையாகத் தகனிக்கப்படலாகாது. நீ படைக்கிற எந்த போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக; உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜனபலியிலே குறையவிடாமல், நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக. முதற்பலன்களை போஜனபலியாக நீ கர்த்தருக்குச் செலுத்தவந்தால், நிறைந்த பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி உதிர்த்து, அதை உன் முதற்பலனின் போஜனபலியாகக் கொண்டுவரக்கடவாய். அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மேல் தூபவர்க்கத்தைப் போடுவாயாக; இது ஒரு போஜனபலி. பின்பு ஆசாரியன், உதிர்த்த தானியத்திலும் எண்ணெயிலும் எடுத்து, ஞாபகக்குறியான பங்கை அதின் தூபவர்க்கம் எல்லாவற்றோடுங்கூடத் தகனிக்கக்கடவன்: இது கர்த்தருக்கு இடும் தகனபலி. (லேவி. 2:11-16)

புளிப்பு என்பது பாவத்தைக் குறிக்கின்றது. புளிப்பு முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. 11-வது வசனத்தில் புளித்தமா மட்டுமல்லாமல், தேனும் அகற்றப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு வழி நடத்தி செல்லும் கர்த்தர், தனக்கு ஆராதனை செய்ய, பலி செலுத்த வரும் பொழுது தேன் தவிர்க்கப்பட வேண்டும் என்று கூறுகின்றார். வாழ்க்கையில் தேனை பயன்படுத்த அனுமதித்தவர் வழிபாட்டில் அதனை அனுமதிக்கவில்லை. வாய்க்கு ருசியாக இருப்பது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ருசியாக அமைவது இல்லை. தேன் தரும் சுவையை விட தேனிலும் மதுரமாக கர்த்தர் தரும் பரிசுத்தம் என்ற சுவை மேலானதாக கருதப்பட்டது. புளித்த மாவு பாவத்தை குறிப்பது போல, தேன் செயற்கையான பக்தியையும் மாயமாலமான வழிப்பாட்டையும் குறிக்கின்றது. பொல்லாங்காக தோன்றுகிற எதுவும் தேவ சமூகத்தில் அனுமதிக்கப்படவில்லை.

லேவியராகமம் 2:11-16 வசனங்களில், முதற்கனி உப்பு சம்பந்தப்பட்ட காணிக்கையான போஜன பலி கூறப்பட்டுள்ளது. முதற்கனி படைப்பது பற்றி யாத்திராகமம் 23:16,19 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கலாம். தகனபலியினால் பாவ மன்னிப்பு பெற்றவன், போஜன பலியினால் தன்னை முற்றிலுமாக ஒப்புக் கொடுக்கின்றான். முதற்கனி, முதற்பலன் ஆகியவை அவன் ஆவலுடன் எதிர்பார்த்த ஒன்றாகும். அவன் ஆவலுடன் விரும்பியதை ஆசையுடன் பரிசுத்தருக்கு அர்ப்பணிக்கும் பொழுது, அவன் எல்லாவற்றையும் விட மேலாக, தன்னை மீட்டவரை மதிக்கின்றான் என்பது தெரியவரும். 14-ம் வசனத்திலே முதற்பலனான கதிர்களை நெருப்பில் வாட்ட வேண்டும் என்றும், ஒன்று ஒன்றாக உதிர்க்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது மிகவும் முழு கவனத்துடன் முதற்கனிகளை படைக்க வேண்டும் என்று பார்க்கின்றோம்.

13-ம் வசனத்தில் உப்பு என்பது, செய்யும் ஒப்பந்தமாகக் காணப்படுகின்றது. உப்பு என்பதை பயன்படுத்திச் செய்யப்படும் ஒப்பந்தம் பழைய ஏற்பாட்டிலே நிரந்தரமான ஒப்பந்தம் என்பதை நாம் அறியலாம். எண்ணாகமம். 18:19 வசனத்தில் இதனை நாம் பார்க்கின்றோம். தேவ கோபம் நீங்கிற்று, சாவு தவிர்க்கப்பட்டது. உயிரும், உடமைகளும் ஆரோக்கியமாக வாழும் என்பதற்கு சான்றாக உப்பு உடன்படிக்கையில் அமைகின்றது. இதனை 2 இராஜாக்கள் 2:20,21 ஆகிய வசனங்களில் பார்க்கலாம். தகனபலி பாவம் போக்கியது; போஜனபலி பந்தம் உருவாக்கியது; உப்பு உடன்படிக்கையின் சாட்சியானது. இனி உடன்படிக்கை மீறப்பட முடியாது. ''பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்.'' என்று சங்கீதம் 50:5-ல் பார்க்கிறோம். உடன்படிக்கைக்கு உட்பட்ட தனிநபர்களும் அவர்களுடைய குடும்பங்களும் பெரிய ஆசீர்வாதத்தை பெற இருக்கின்றார்கள். யோபுவின் புத்தகம் 5:23-26 வசனங்களில் ''வெளியின் கல்லுகளோடும் உமக்கு உடன்படிக்கையிருக்கும்; வெளியின் மிருகங்களும் உம்மோடே சமாதானமாயிருக்கும். உம்முடைய கூடாரம் சமாதானத்தோடிருக்கக் காண்பீர்; உம்முடைய வாசஸ்தலத்தை விசாரிக்கும்போது குறைவைக் காணமாட்டீர். உம்முடைய சந்தானம் பெருகி, உம்முடைய சந்ததியார் பூமியின் பூண்டுகளைப்போல இருப்பார்கள் என்பதை அறிந்து கொள்வீர். தானியம் ஏற்றகாலத்திலே அம்பாரத்தில் சேருகிறதுபோல, முதிர் வயதிலே கல்லறையில் சேருவீர். இதோ, நாங்கள் ஆராய்ந்து அறிந்தது இதுதான்; காரியம் இப்படியிருக்கிறது; இதை நீர் கேட்டு உமக்கு நன்மையுண்டாக அறிந்து கொள்ளும்.'' என்று எலிப்பாஸ் உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை விவரிக்கிறான்.

பாவ மன்னிப்புக்கு நேராக தகனபலி வழி நடத்தியது. முற்றும் ஒப்புக் கொடுக்கும் உயர்ந்த நிலைக்கு நேராக போஜனபலி வழி நடத்தியது. அவ்வித அனுபவத்திற்குள் வந்தவர்கள் பூமிக்கு உப்பாகவே இருப்பார்கள்.

முதலாவது செலுத்தப்பட்ட பலி தகனபலி, பாவத்தைக் குறித்த துக்கத்துடன் தகன பலி செலுத்த வந்தான். கையில் ஓர் மிருகத்துடன் நடந்து வந்தான். அதின் தோல் உரிக்கப்பட்டதை கண்டான். அது பாவம் தரும் வேதனை என்பதனை அறிந்தான். அதன் மாம்சம் அனைத்தும், ஒன்று விடாமல், முழுவதுமாக எரிக்கப்பட்டது. பாவம் முற்றிலுமாக சுட்டு எரிக்கப்பட வேண்டும் என்பதை அது அவனுக்குச் சுட்டி காட்டியது. பாவ அறிக்கை அரை குறையாக அல்ல. முழுமையாக இருக்க வேண்டும் என்பதற்கு மாதிரியாக அவன்

கொண்டு வந்த பலி மிருகத்தின் மாம்சம் முழுவதுமாக தகனிக்கப்பட்டு விட்டது. அவன் பாவ நிவிர்த்தி பெற்றான்.

2.4 சமாதான பலி

வீடு திரும்பிய அவன், மறுபடியும் இன்னும் ஒரு பலி செலுத்த வந்தான். அதற்கு போஜனபலி என்று பெயர். அதன் பொருள், தன்னை காணிக்கையாக பரிசுத்தராகிய தேவனுக்கு முற்றிலும் ஒப்பு கொடுத்தல் என்று நாம் பார்த்தோம். பாவ நிவிர்த்தி பெற்றவன், தன்னை முற்றிலுமாக பரிசுத்த ஜீவியத்திற்கு அர்ப்பணம் செய்தவன், இப்பொழுது மூன்றாவது முறையாக இன்னும் ஒரு பலி செலுத்த ஆசரிப்பு கூடாரம் நோக்கி வருகிறான். அவன் செலுத்தும் அந்த பலியின் பெயர் சமாதானபலி என்பதாகும். அதனை பற்றிய விளக்கம் லேவியராகமம் 3-வது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

சமாதான பலி, எபிரேய மொழியில் 'ஸ்பா ஷலோம்' என்று அழைக்கப்படுகின்றது. அதன் பொருள் ''முழுமையாக்கும் பலி'' என்பதாகும். 'ஷலோம்' என்பது சமாதானத்தை குறிக்கும் ஓர் எபிரேயச் சொல் ஆகும். 'ஷலோம்' என்ற பதம் 'ஸ்தோத்திரம்' என்றும் பொருள் தருவதை ஆமோஸ் தீர்க்கதரிசியின் புத்தகத்தில் பார்க்கலாம். 5:22-ல் தகனபலி, ஸ்தோத்திர பலி என்று கூறும் ஆமோஸ் தீர்க்கர் சமாதான பலியை மட்டும் ஸ்தோத்திர பலி என்று குறிப்பிட்டுள்ளார்.

தகனபலி, போஜன பலி ஆகிய இரண்டு பலிகளும் வற்புறுத்தி செலுத்தப்பட்டவைகள் அல்ல. வலிய விரும்பி கொடுக்கப்பட்ட பலிகளாக இருந்தது போல சமாதான பலியும் உற்சாக உணர்வுடன் விரும்பி வந்து படைக்கும் பலியாகவே இருந்தது. தகனபலி மூலம் அவன் பாவ மன்னிப்பு பெற்றான். போஜன பலி மூலம் வரும் புதிய சோதனைகளுக்கு வெற்றி காணும் வழியைக் கண்டான். இரண்டும் பெற்றவன் பரிசுத்தருக்கு ஸ்தோத்திர பலி இடுவேன் என்று பொருத்தனை செய்து வருகின்றான். இதனை சங்கீதம் 56:12,13-வது வசனங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். தனது மனதில் சமாதானம். தனது குடும்பத்தில் சமாதானம். தான் ஆராதிக்க செல்லும் இடத்தில் சமாதானம். ஆண்டவராகிய கர்த்தருடன் சமாதானம் என்று சமாதானத்திற்குமேல் சமாதானம் பெற்றான். அதனுடைய விளைவு சந்தோஷத்திற்குமேல் சந்தோஷம் என்ற முறையில் அவனுடைய வாழ்க்கை துவங்கியது. ஸ்தோத்திரத்திற்கு மேல் ஸ்தோத்திரம் கூறி, இதோ சமாதானபலி செலுத்த வந்து விட்டான்.

> ***ஒருவன் சமாதான பலியைப் படைக்க வேண்டுமென்று, மாட்டு மந்தையில் எடுத்துச் செலுத்துவானாகில், அது காளையானாலும் சரி, பசுவானாலும் சரி, பழுதற்றிருப்பதை கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தக்கடவன். அவன் தன் பலியின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள். பின்பு சமாதான பலியிலே குடல்களை மூடிய கொழுப்பையும், குடல்களிலுள்ள கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்து, கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்துவானாக அதை ஆரோனின் குமாரர் பலிபீடத்து அக்கினியிலுள்ள***

கட்டைகளின்மேல் போட்டிருக்கும் சர்வாங்க தகன பலியின்மீதில் போட்டுத் தகனிக்கக்கடவர்கள்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி. (லேவி. 3:1-5)

முதல் பலியான தகனபலி எவ்வாறு செலுத்தப்பட வேண்டும் என்று லேவியராகமம் முதலாவது அதிகாரத்தில் கூறப்பட்ட அதே ஒழுங்கு முறைகள், சமாதான பலி எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று லேவியராகமம் 3-வது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

அவன் கர்த்தருக்குச் சமாதான பலியைப் படைக்கவேண்டுமென்று ஆட்டு மந்தையிலிருந்து எடுத்துச் செலுத்துவானாகில், அது ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி, பழுதற்றிருப்பதைச் செலுத்துவானாக. அவன் ஆட்டுக்குட்டியைப் பலியாகச் செலுத்தவேண்டுமானால், அதைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, தன் பலியின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக்கூடாரத்துக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள். பின்பு அவன் சமாதான பலியிலே அதின் கொழுப்பையும், நடுவெலும்பிலிருந்து எடுத்த முழு வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகளின் மேல் இருக்கிற கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேல் சிறுகுடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடுகூடக் கல்லீரலின் மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்து, கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தக்கடவன். அதை ஆசாரியன் பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்கு இடும் தகன ஆகாரம். (லேவி. 3:6-11)

தகனபலி, போஜனபலி ஆகிய இரண்டும், லேவியராகமம் 1,2 ஆகிய அதிகாரங்களில் மும்மூன்று பத்திகளாக பிரித்து விளக்கப்பட்டது போல, சமாதான பலியும் லேவியராகமம் 3-வது அதிகாரத்தில் மூன்று பத்திகளாக பிரிக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. லேவியராகமம் 3:1-5 வசனங்களில் சமாதான பலியாக கொண்டுவரப்பட்ட மிருகம், மாட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்டதானால் அதனை என்ன முறையில் பலி செலுத்த வேண்டும் என்றும், 3:6-11 வசனங்களில் சமாதான பலி, ஆட்டு மந்தையில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்டதேயானால் அதனை செலுத்தும் முறை எவ்வாறு என்றும் கூறப்பட்டுள்ளது.

அவன் செலுத்துவது வெள்ளாடாயிருக்குமானால், அவன் அதை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அதின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள். அவன் அதிலே குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள் மேலிருக்கிற கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூட கல்லீரலின் மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்து, கர்த்தருக்குத்

தகனபலியாகச் செலுத்தக்கடவன். ஆசாரியன் பலிபீடத்தின்மேல் அவைகளைத் தகனிக்கக்கடவன்; இது சுகந்த வாசனையான தகன ஆகாரம்; கொழுப்பு முழுவதும் கர்த்தருடையது. கொழுப்பையாவது இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்கள் எங்கும் உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்று சொல் என்றார். (லேவி. 3:12-17)

3:12-17 வசனங்களில் வெள்ளாடாக இருக்குமானால் செலுத்தும் முறை எப்படி என்றும் மூன்று பிரிவாக சமாதான பலி விளக்கப்பட்டுள்ளது. லேவியராகமம், 3-வது அதிகாரத்தில் காணப்படும் சமாதான பலியை பற்றிய குறிப்பு, லேவியராகமம் 7:11-21 வசனங்களிலும் தொடர்ந்து அதே அதிகாரத்தில் 28-34 வசனங்களிலும் விரிவாக கூறப்பட்டுள்ளது.

சமாதான பலி செலுத்துகின்றவன், பலியுடன் ஆசரிப்பு கூடார வாசலில் வரவேற்கப்படுகின்றான். ஆசாரியன் பலி செலுத்த வந்த மனிதனுடைய நோக்கத்தை அறிந்து கொள்ளுகின்றான். கொண்டு வந்த பலி, பழுதற்ற பலியாக இருக்கின்றதா என்பதையும், கர்த்தர் அங்கீகரிக்கும் பலியாக இருக்கின்றதா என்பதையும் ஆசாரியன் முன்னதாகவே தெரிந்து கொள்ளுகின்றான். தகனபலி செலுத்தும் பொழுது தனது கைகளை மிருகத்தின் தலைகளில் வைத்ததுபோல சமாதானபலி செலுத்தும் பொழுதுகூட செலுத்த வந்தவன் தன் கைகளை மிருகத்தின் தலை மீது வைக்க வேண்டும். தகனபலியிட்டபோது, கைகளை மிருகத்தின் தலை மீது வைத்து, அவன் தனது பாவத்தை மிருகத்திற்கு கடத்தி விட்டான் என்று நாம் பார்த்தோம். இப்பொழுது சமாதான பலியில் கைகளை மிருகத்தின் தலைமீது வைத்து தனது பாவத்தை அல்ல, பாவத்தை மன்னித்து விட்ட கர்த்தருக்கு துதி, ஸ்தோத்திரங்களை கடத்தி விடுகிறான். மேலும் இன்னும் வருங்காலங்களில் தான் எவ்வளவு நன்றி உள்ளவனாக கர்த்தாதி கர்த்தருக்காக வாழுவேன் என்று, தனது பொருத்தனைகளையும் கர்த்தரின் சமூகத்திற்கு கடத்தி விடுகின்றான். மூன்றாவதாக, தனது உற்சாகத்தினை கர்த்தருக்கு கடத்தி விடுகின்றான். இதன் விபரத்தை லேவியராகமம் 7:12 வசனத்திலிருந்து பார்க்கலாம்.

ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் முழு சபையின் சார்பில் பாவ நிவாரணம் செய்வதற்காக, தகன பலி ஆசாரியர்களால் பலிபீடத்தில் ஏறெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். அப்படி ஏறெடுக்கப்படும் தகன பலிமீது, சமாதான பலி வைக்கப்பட வேண்டும் என்று லேவியராகமம் 3: 5-வது வசனம் கூறுகின்றது. தகனபலியில் காண்பது போன்று பலியின் மிருகம் முழுவதும் தகனிக்கப்படவில்லை, சமாதான பலியில் மிகச் சிறிய அளவே தேவனுக்கு பலியாக பலிபீடத்தின் மேல் தகனிக்கப்பட்டது. மிக சிறிய ஆனால் அரிய பகுதிகளே பரிசுத்தராகிய தேவனுக்கு பலியாக கொடுக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நடுஎலும்பிலிருந்து எடுக்கப்பட்ட வால் பகுதியில் மற்றும் குடல், கல்லீரல் பகுதிகளிலும் உள்ள கொழுப்பு பொருட்கள் மட்டுமே கர்த்தருக்கு சமாதானபலியில் பலியாக தகனிக்கப்படுகின்றது. இதனை லேவியராகமம் 3:4,9,10,15,16 ஆகிய வசனங்களிலும் நாம் படிக்கலாம்.

கர்த்தாதி கர்த்தருக்கு சமாதான பலியாக செலுத்தப்பட்ட பாகங்களை, வேதபுத்தகம் 'உள்ளிந்திரியங்கள்' என்று கூறுகின்றது. நன்மை அல்லது தீமை செய்ய மனிதனை

தூண்டிவிடும் பகுதியாக உள்ளிந்திரியம் காணப்படுகின்றது. அப்பகுதி பரிசுத்த தேவனுக்கு பலியாக, சமாதான பலியில் அர்ப்பணிக்கப்படுகின்றது. தகனபலியில், உணர்ச்சியின் பிறப்பிடமான இருதயம் பாவ மன்னிப்பு தேடியதை பார்த்தோம். சமாதான பலியில், உணர்ச்சியின் இருப்பிடமான உள்ளிந்திரியங்கள் பரிசுத்தம் நாடுவதை பார்க்கின்றோம். சிந்திப்பது சுத்தமானதாக இருந்தால் செயல் பரிசுத்தமாக இருக்கும். சிந்தனை தவறானதாக அமைந்ததென்றால் செய்யப்போவதும் தவறாகவே இருக்கும். சிந்தனைகளை தூண்டிவிடும் உள்ளிந்திரியங்கள் நல்ல சிந்தனைகளை மட்டும் தூண்டும் வல்லமையை பெற்று விட்டால், செயல்கள் அனைத்தும் உண்மை, தூய்மை, நேர்மை கொண்டு சிறந்து விளங்கிவிடும். அப்பொழுது வாழ்க்கை ஜோதியாகும்; குடும்பம் மகிழ்ச்சியாகும். பொல்லாப்பு தங்கும் இதயமும், பொல்லாத எண்ணம் உதயமாகும் உள்ளிந்திரியங்களும் சுத்தமாக மாற்றப்படுவதினால் இரட்சிப்பு பூரணமாகுகின்றது. எனவேதான் எரேமியா தீர்க்கதரிசி 4:14-ல் ''எருசலேமே, நீ இரட்சிக்கப் படும்படிக்கு உன் இருதயத்தை பொல்லாப்பு அற கழுவு, எந்த மட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்தில் தங்கும்.?'' என்று கேட்கிறார். உள்ளம் என்று எரேமியா கூறுவது உள்ளிந்திரியங்களே ஆகும்.

தகனபலி,சமாதானபலி மூலம் இதயமும், உள்ளிந்திரியங்களும் சோதித்து அறியப்படுகின்றன. சங்கீத புஸ்தகத்தில் 7:9-வது வசனத்தில், ''நீதியுள்ளவராக இருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்து அறிகிறவர்'' என்று வாசிக்கிறோம். ''சேனைகளின் கர்த்தாவே, உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்து அறிகிற நீதியுள்ள நியாதிபதியே'' என எரேமியா தீர்க்கர் தனது ஜெபத்தில் கூறுவதை எரேமியா 11:20-ல் பார்க்கிறோம். உள்ளிந்திரியம் அவ்வளவு முக்கியத்துவம் உடையதாக இருப்பதினால் அதனையே சமாதான பலியில் தேவனுக்கு படைக்கும் படைப்பாக நாம் காண்கிறோம்.

தொடர்ந்து சமாதான பலியில் அடுத்த பங்கு ஆசாரியர்களுக்கு கொடுத்த பங்காகும். அவைகள் என்னவென்றால் நெஞ்சு எலும்பு பகுதிகளும் வலதுகால் தொடை பகுதிகளும் ஆகும். அதனை லேவியராகமம். 7:31-33 ஆகிய வசனங்களில் காணலாம். பலி செலுத்த வந்தவனின் நெஞ்சம், இனி ஆலயத்தையே வாஞ்சிக்கும் என்பதற்காக நெஞ்சு எலும்பு பகுதிகளும், அவனுடைய கால், ஆலய ஆராதனைக்குச் செல்லுவதற்கு தீவிரம் கொள்ளும் என்பதற்காக வலது கால் தொடை பகுதியும் ஆசாரியர்களுக்கு பங்காக கொடுக்கப்பட்டது.

தகனபலி, போஜனபலி கர்த்தருக்கு சுகந்த வாசனையான பலி என்று எழுதப்பட்டதை நாம் படித்தோம். ஆனால் சமாதானபலி, கர்த்தருக்கு இடும் தகன ஆகாரம் என்று லேவியராகமம். 3:11,16 வசனங்களில் அழைக்கப்பட்டு உள்ளது. மற்ற இரண்டு பலிகளைப் போல கர்த்தருக்கு சுகந்த வாசனையான பலி என்று கூறாமல், சமாதான பலி மட்டும் கர்த்தருக்கு இடும் தகன ஆகாரம் என்று எழுதப்பட்டு இருக்கின்றது. அதாவது சுகந்த வாசனையான பலி என்பது அங்கீகரிக்கப்பட்ட பலி என்பதாகும். தகன ஆகாரம் என்பது அங்கீகரிக்கப் பட்ட ஆகாரம் அல்லது பலி என்பதையே குறிக்கின்றது.

ஒரு பகுதி கர்த்தருக்கு பலியாக கொடுக்கப்பட்டது; மிருகத்தின் அடுத்த பகுதி ஆசாரியர்களுக்கு அன்பு ஈகையாக கொடுக்கப்பட்டது. மீதியான பகுதியை, படைக்க வந்தவனும், அவனுடைய குடும்பத்தாரும் புசிக்க வேண்டும். இவ்விதமாக சமாதானபலி ஓர் அன்பின் விருந்தாக மாறி விடுகின்றது. கர்த்தருக்கு தகன ஆகாரம் என்றும், ஆசாரியருக்கு

அன்பின் ஆகாரம் என்றும் செலுத்தியவனுக்கு சமாதான ஆகாரம் என்றும் அது அங்கீகரிக்கப்பட்ட தகன ஆகாரமாக மாறி விடுகின்றது. அவன் செலுத்திய சமாதான பலி அல்லது ஸ்தோத்திரபலி அல்லது பொருத்தனையின் பலி, கர்த்தர் அங்கீகரிக்கும் ஆகாரமாக மாறுவது மிக முக்கியமானது ஆகும். அவ்விதம் மாறும் பொழுது ஓர் பெரும் ஆசீர்வாதம் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. அதாவது அவனுக்கு வரும் எந்த ஆபத்துகளில் இருந்தும் இனிமேல் அவன் காக்கப்பட போகின்றான் என்பதே அந்த ஆசீர்வாதம் ஆகும். ''நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப் படுத்துவாய்,'' என்று சங்கீதம் 50:14,15-ல் பார்க்கிறோம். சமாதான பலியின் மூலம் பலியை செலுத்த வந்தவன் உன்னதமானவரின் மறைவில் சர்வ வல்லவரின் நிழலில் தங்கும் கிருபையை பெற்றுக் கொள்ளுகின்றான்.

லேவியராகமம் 3:17-வது வசனம் கொழுப்பையாவது, இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது என்று கூறுகின்றது. கொழுப்பு இரகசிய பாவங்களைக் குறிக்கின்றது. பாவங்கள் அனைத்தையும் சுத்தம் செய்வதாக பலியின் இரத்தம் அமைகின்றது. பலியில் பிரதானமானது இரத்தமே ஆகும். எனவே அவைகளை புசிக்க ஓர் தடை விதிக்கப்பட்டது. ''மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கின்றது: நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.'' என்று லேவியராகமம் 17:11-ல் பார்க்கிறோம்.

சமாதான பலி, இதய சமாதானத்தை முழுமையாக்குகின்றது. தேவனுடனும் மனிதனுடனும் சமாதானம் என்பதனை செலுத்த வந்தவனுக்கு சுட்டி காட்டி விட்டது. பஸ்கா பண்டிகை, அறுப்பின் பண்டிகை, கூடாரப் பண்டிகை என வருடத்தில் மூன்று முறை பெரும் பண்டிகைகளை அவர்கள் ஆசரிக்கும் பொழுது சமாதான பலியினை விமர்சையாக செலுத்தினார்கள். சாலொமோன் என்ற அரசன் சுமார் 20 வருடம் செலவு செய்து எருசலேம் தேவ ஆலயத்தை கட்டி, கிறிஸ்துவுக்கு முன் சுமார் 946-ம் ஆண்டு ஆலய பிரதிஷ்டை செய்தான். அப்பொழுது அவன் சமாதான பலியினை பெரும் அளவில் செலுத்தினான் என்பதை 1 இராஜாக்கள் 8: 63-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். ''சாலொமோன் கர்த்தருக்குச் சமாதான பலிகளாக, இருபத்தீராயிரம் மாடுகளையும், இலட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்: இவ்விதமாய் ராஜாவும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தை பிரதிஷ்டை பண்ணினார்கள்.''

தகனபலி என்பதின் மூலம் அவன் பாவம் நிவிர்த்தி செய்யப்பட்டது. போஜன பலி என்பதில் பரிசுத்த வாழ்விற்கு வழிவகுக்க கண்டது. சமாதான பலி என்பதில் ஸ்தோத்திர ஜீவியத்தில் பெருகவும் இரட்சிப்பை பரிபூரண படுத்தி கொள்ளவும் வாய்ப்பு பிறந்தது. அந்த மூன்று பலிகளும் ஒவ்வொரு அம்சத்திலும் கிறிஸ்துவாகிய கிருபாதார பலியை சுட்டிக்காட்டுகின்றது. 1தீமோத்தேயு 1:15-வது வசனம் கூறுவது போல ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்'' என்று உணர்ந்து, ''அவர்களில் பிரதான பாவி நான்'' என்று மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளுதலே கிறிஸ்துவாகிய தகன பலியினை அறிவதற்கு ஆதாரம் ஆகும். கலாத்தியர் 2:20-வது வசனம் கூறுவது போல ''இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னில் பிழைத்து இருக்கிறார்'' என்ற அடிப்படையில் அனுதின வாழ்வு வெற்றி வாழ்வாக நடத்தி காட்டுவதே கிறிஸ்துவாகிய போஜன பலியை கண்டு அறிந்த

அனுபவம் ஆகும். கொலோசேயர் 1:20-வது வசனம் கூறுவது போல, இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் சமாதானம் உண்டாக பெற்றேன் என்ற சாட்சியின் ஜீவியமே கிறிஸ்துவாகிய சமாதான பலியினை ருசிக்கும் அனுபவம் ஆகும்.

நமது சமாதான பலியாக கிறிஸ்து உலகத்தில் தோன்றுவார் என்று கிறிஸ்துவின் பிறப்பிற்கு சுமார் 750 வருடங்களுக்கு முன்னதாக ஏசாயா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் கூறினார். ''நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு'' என்று ஏசாயா 9:6வது வசனத்தில் நாம் படிக்கிறோம். அப்படியே ஏசாயா முன் உரைத்தபடி கிறிஸ்து பிறந்த ஒரு சில நிமிடங்களில், 'உன்னதத்தில் மகிமை, பூமியில் சமாதானம்,' என்று விண் தூதர்கள் முழங்கினார்கள். இயேசு நமது சமாதான பலியாக மாறினார். ஏசாயா 53-ம் அதிகாரம் கூறுவது போல 'நமக்கு சமாதானம் உண்டு பண்ணும் ஆக்கினை ' இயேசுவின் மேல் வந்தது. ரோமர் நிருபம் 5:1 கூறுவது போல 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் நாம் சமாதானம் பெற்றோம்.' எபேசியர் 2:14-16 வசனங்கள் கூறுவது போன்று 'இயேசு நமது சமாதான காரணராகி இருதிரத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரை தகர்த்தார். நியாயப்பிரமாணம் அறிமுகப்படுத்திய தகன பலி, போஜன பலி, சமாதான பலி மற்றும் அனைத்து பலிகளையும் தானியேல் முன் உரைத்தது போல இயேசு கிறிஸ்து மொழிந்தார். சமாதானத்தை சுவிசேஷமாக நமக்கு அறிவித்தார். அந்த தேவ சமாதானத்தை பெற்ற இருதயங்கள் பரிசுத்தமான வாழ்க்கையை நடத்தும் இருதயங்கள் ஆகும்.

அத்தியாயம் - 3
விசேஷித்த பலிகள்

3.1 பாவ நிவாரண பலிகள்

கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்து மோசேயுடன் பேசுவது தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றது என்பதை லேவியராகமம் 4:1கூறுகின்றது. லேவியராகமம் முதல் மூன்று அதிகாரங்களில் தகனபலி, போஜனபலி, சமாதானபலி ஆகிய பலிகள் செலுத்தப்பட வேண்டிய விளக்கம் தரப்பட்டுள்ளது. அவைகள் கிறிஸ்துவை நினைப்பூட்டும் பலிகள் ஆகும் என்று கவனித்தோம். லேவியராகமம் 4,5 ஆகிய அதிகாரங்களில் பாவ நிவாரணபலி, குற்ற நிவாரணபலி என்ற இரண்டு முக்கியமான பலிகள் அறிமுகப்படுத்தப்படுவதை பார்க்கிறோம். அவைகள் இரண்டும் சிலுவையை நினைவூட்டும் பலிகள் என்று பார்க்க இருக்கிறோம்.

பாவ நிவாரணங்களுக்கு பலியாக செலுத்தும்படி தேவன் கூறும் பொழுது நான்கு சூழ்நிலைகளில் பாவ நிவாரண பலி செலுத்தப்படும்படி கூறினார். இந்த நான்காம் அதிகாரம் முழுவதும் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, நான்கு விதமான பாவநிவாரணபலியின் விளக்கம் கொடுக்கப்பட்டு உள்ளது.

லேவியராகமம் 4:1-12 வசனங்களில், அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியன் தவறி விட்டால் பாவ நிவாரணபலி எப்படி செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. 13-21-ம் வசனம் வரை, சபையில் ஒருவர் தவறு செய்து விட்டால் அல்லது ஒரு சிலர் தவறி விட்டால் அல்லது சபை முழுவதுமே தவறு செய்து விட்டால் பாவ நிவாரண பலி எப்படி செலுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. லேவியராகமம் 4:22-26-ம் வசனம் வரை சபையின் மூப்பர்களில் ஒருவர் பாவம் செய்து விட்டால் செய்யப்பட வேண்டிய பரிகாரம் என்ன என்றும், 27-35 வசனங்களில் சபையின் ஓர் சாதாரண உறுப்பினர் தவறி விட்டால் செய்ய வேண்டிய பரிகாரம் என்ன என்றும் கூறப்பட்டு உள்ளது. இப்படியாக அடிமைத்தன வாழ்வில் இருந்து மீட்கப்பட்ட மக்கள் கானான் நோக்கிச் செல்லும் பாதையில் வழி பிசகி விட்டாலும், பலி செலுத்தி மீண்டும் ஜீவ பாதை வந்து விட, ஓர் மார்க்கத்தை தேவன் கிருபையாக கொடுக்கின்றார். இது தேவனின் ஒப்பற்ற இரக்கத்தை நமக்கு காட்டுகின்றது.

> ***பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்ல வேண்டியது என்னவென்றால், ஒருவன் கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை அறியாமையினால் மீறி, செய்ய தகாததை செய்து பாவத்துக்கு உட்பட்டால் அறிய வேண்டியதாவது; (லேவி. 4:1-2)***

லேவியராகமம் 4:2,13,22,27 ஆகிய வசனங்களில் ''ஒருவன் கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை அறியாமையினால் மீறி செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்கு உட்பட்டால்'' என்று வருவதை காணலாம். இந்த வசனங்களில் ''அறியாமை'' கூறப்பட்டுள்ளது. பாவத்தில் 'அறியாமை' என்பது மட்டும் அல்ல; பாவம் செய்வதால் வரும் விளைவுகளில் அறியாமை என்பதாகும். பாவம் தரும் விளைவுகள் வேதனை, வேர்வை, சாபம், மரணம் என்பதை ஆதியாகமம் 3:16-19 வசனங்களில் நாம் பார்த்தோம். வெட்கம், துக்கம், பயம் என்பதே பாவம் செய்த ஆதாம் ஏவாளின் முடிவும் ஆகிவிட்டது. அவ்வித அகோர

முடிவுகள் தரும் பாவங்களை மனிதன் நினைத்துப் பாராமல் செய்து விடுகின்றான். பின்னர் நினைத்து நினைத்து வருந்தி அழுகின்றான்.

பாவத்திற்கு உட்பட்டால் என்று 2-வது வசனத்தில் வருவதின் சரியான பொருள் 'குறி தவறினால்' என்பதாகும். அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து இஸ்ரவேலர் அனைவரும் கானான் சேரவே மீட்கப்பட்டனர். எனவே அவர்களுடைய பார்வை சேர வேண்டிய இடத்தின் மீதும், சேர வைக்கும் கர்த்தர் மீதும் மட்டுமே இருக்க வேண்டும். பரிசுத்த பாதையில் குறிப்பாக நடக்க வேண்டியவர்கள் பாவ பாதையில் பாதம் பதித்துவிடக் கூடாது; குறி தவறிவிட கூடாது. அது மீட்கப்பட்டவன் செய்யத்தக்க செயல் அல்ல! செய்ய தகாத செயல் ஆகும். லேவியராகமத்தின் கருப்பொருள் லேவியராகமம் 19:2-வது வசனம் ஆகும். ''உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்'' என்பதாகும். அது ஒன்றே அவர்கள் செய்யத்தக்க செயல் ஆகும்.

விருப்பம் உள்ளவன் பலி செலுத்த முன் வரலாம் என்று முதல் மூன்று பலிகளிலும் பார்த்தோம். ஆனால் இந்த பாவ நிவாரண பலியும் தொடர்ந்து இதற்கு அடுத்தாற்போல் வரும் குற்ற நிவாரண பலியும், பாவம் செய்தவன் கண்டிப்பாக செய்தே தீர வேண்டும் என்பதை நாம் பார்க்க இருக்கின்றோம். முந்தின பலிகளில் வசதி குறைவானவர்கள் புறாக்களை கூட பலியாக செலுத்தலாம் என்று பார்த்தோம். ஆனால் குறிப்பாக பாவ நிவாரண பலியில் பறவைகள் படைப்பு இடம் பெறவில்லை என்பதை பார்க்கின்றோம். ஓர் விலைக்கிரயம் செலுத்தாமல் பாவ நிவாரணம் இல்லை என்று அறிகின்றோம்.

3.2 அபிஷேகம் பெற்ற ஆசரியனின் தவறுக்காக பாவநிவாரண பலி:

அபிஷேகம் பெற்ற ஆசாரியன், ஜனங்கள் குற்றத்திற்கு உட்படத்தக்கதாக பாவம் செய்தால், தான் செய்த பாவத்தின் நிமித்தம் பழுதற்ற ஒரு இளங்காளையை பாவநிவாரண பலியாக கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரக்கடவன். அவன் அந்த காளையை ஆசரிப்பு கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்து, அதின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அதை கொல்ல கடவன். அப்பொழுது, அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அந்த காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதை ஆசரிப்பு கூடாரத்தில் கொண்டு வந்து, தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ஏழு தரம் தெளிக்கக்கடவன். பின்பு, ஆசாரியன் அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்பு கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் சுகந்த தூபபீடத்து கொம்புகளின் மேல் பூசி, காளையினுடைய மற்ற இரத்தம் முழுவதையும் ஆசரிப்பு கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகன பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு, பாவநிவாரண பலியான காளையின் எல்லா கொழுப்புமாகிய குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகளின் மேல் இருக்கிற கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டி காய்களையும், அவைகளின்மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டி காய்களோடேகூட கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும், சமாதான பலியின் காளையில் இருந்து எடுக்கிறதுபோல அதிலிருந்து எடுத்து, அவைகளை தகன

பலிபீடத்தின்மேல் தகனிக்க கடவன். காளையின் தோலையும், அதின் மாம்சம் முழுவதையும், அதின் தலையையும், தொடைகளையும், அதின் குடல்களையும், அதின் சாணியையும், காளை முழுவதையும் பாளயத்துக்கு புறம்பே சாம்பல் கொட்டுகிற சுத்தமான இடத்திலே கொண்டு போய், கட்டைகளின்மேல் போட்டு, அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவன்; சாம்பல் கொட்டியிருக்கிற இடத்திலே அதை சுட்டெரிக்கக்கடவன். (லேவி. 4:1-12)

பாவ நிவாரணபலி, 'அபிஷேகம் பெற்ற ஆசாரியன் குற்றம் செய்தால்' என்று ஆரம்பிக்கின்றது. 3-வது வசனத்திலே அபிஷேகம் பெற்ற ஆசாரியன் குற்றம் செய்வது சர்வ ஜனமும் குற்றம் செய்வதற்கு சமமாக இருக்கும் என்று எழுதப்பட்டு உள்ளது. தகனபலி, போஜனபலி, சமாதான பலிகளில் பலியிட அழைக்கப்பட்டவர்கள் வரிசையில் ஆசாரியன் காணப்படவே இல்லை. ஆனால் பாவ நிவாரண பலியாகிய இந்த பலியில் ஜனங்களுடன் ஆசாரியனும் சேர்த்து கொள்ளப்படுகின்றான். ஆசாரியனும் ஒரு மனிதனாகவே இருப்பதினால் மனித சுபாவத்தில் அறியாமல் தவறிவிடும் நிலையில்தான் அவன் காணப்படுகின்றான். 'அபிஷேகம் பெற்ற ஆசாரியன், ஜனங்கள் குற்றத்திற்கு உட்படத்தக்கதாக பாவம் செய்தால்,' என்று 4:4-வது வசனம் கூறுகின்றது. ஆசாரியன் அபிஷேகம் செய்யப்பட்டவன். அவன் ஒரு குற்றத்தில் விழுவதை சபையார் எதிர்பார்க்கவே மாட்டார்கள். ஜனங்களின் பரிசுத்தத்திற்கு, அவன் ஓர் முன்மாதிரி என்பதை காட்டவே ஒரு பரிசுத்த வஸ்திரம் அவனுக்கு கொடுக்கப்பட்டது. சங்கீதம் 132:9-ல் 'ஆசாரியர்கள் நீதியை தரித்தவராக இருப்பார்,' என்றும் அதே சங்கீதம் 16-வது வசனத்தில் அவர்களது உடையின் மறுபெயர் 'இரட்சிப்பு' என்றும் பார்க்கின்றோம். மேலும் சகரியா 14:20,21 ஆகிய வசனங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் இருக்கும் பாதைகள் கூட கர்த்தருக்கு பரிசுத்தமானது என்று போற்றப்பட்டது. பரிசுத்த வாசனை வீச வேண்டிய ஆசாரியன் பாவ துர்நாற்றத்தை ஜனங்கள் மேல் கொண்டு வந்து விட்டான். ஜனங்களை குற்றத்திற்கு உட்படுத்த தக்கதாக ஆசாரியனின் பாவம் மிஞ்சிவிட்டது. எபிரெயர் 5:3-ல் கூறுவது போல, 'அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காக பலியிட வேண்டியது போல தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாக இருந்தது.' காரணம் அவனும் ஓர் மனிதனே.

மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் நான்காம் வசனத்தில் இடம் பெறுகின்றன. முதலாவதாக, அறியாமையினாலே குற்றம் செய்தவன் சாவதற்கு பதிலாக ஒரு காளை சாக வந்துகொண்டு இருக்கின்றது. இரண்டாவதாக எதுவும் அறியாத அந்த காளையின் தலைமீது குற்றம் செய்தவன் தன் கைகளை வைப்பதின் மூலம் அவன் செய்த குற்றம், குற்றம் இல்லாத மிருகத்திற்கு கடத்தி விடப்படுகின்றது. மூன்றாவதாக, குற்றம் எதுவும் செய்யாத காளை கொல்லப்படுகின்றது. அனைத்தும் கர்த்தரின் சந்நிதியில் கர்த்தருக்கு முன்பாக செய்யப்படுகின்றது. காரணம், இறுதியாக பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் பெற்றவர் கர்த்தரே ஆவார்.

5,6-ம் வசனங்களில் அபிஷேகம் பெற்ற ஆசாரியன், காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுப்பதை பார்க்கின்றோம். இரத்தத்துடன் ஆசரிப்பு கூடாரத்தின் உள்ளே அவன் பிரவேசிக்கின்றான். மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும், பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவாக இருக்கும் திரைசீலையின் முன்னாக தரையில் அவன் நின்று கொண்டு இருக்கின்றான். சர்வ வல்லவர், எல்லாம் அறிந்தவர், என்னை அறிந்தவர் என தன்னை தாழ்த்தி கொண்டு நிற்கின்றான்.

பாத்திரத்தில் அவன் பிடித்த இரத்தத்தில் தன் விரலை தோய்த்து திரைக்கு முன் இருந்த தரையில் ஏழு முறை தெளிக்கின்றான். இவைகளை அவன் மகா கவனத்துடனும், மன உடைவுடனும் செய்ய வேண்டும். தான் செய்த குற்றத்திற்காக தன் இரத்தம் சிந்தப்படும் இடத்தில், ஒரு மிருகத்தின் இரத்தம் சிந்தப்பட்டு நான் பிழைத்துக் கொண்டேன் என்ற நன்றி உணர்வு மேலோங்க அவன் அங்கு நிற்கின்றான். அந்த பணியினை முடித்து ஆசரிப்பு கூடாரத்திற்கு உள்ளாக இருக்கும் சுகந்த தூப பீடம் அருகில் வருகின்றான். பலிபீடத்தின் நான்கு கொம்புகளையும் பார்க்கின்றான். சர்வ வல்லவர், எல்லாம் வல்லவர் என்று உணருகின்றான். பாத்திரத்தில் உள்ள இரத்தம் எடுத்து நான்கு கொம்புகளில் பூசுகின்றான். தன்னை தாழ்த்துகின்றான். பின் இரத்தம் இருக்கும் பாத்திரத்துடன் கூடாரத்திற்கு வெளியே வருகின்றான். வெளியே இருக்கும் தகனபீடம் அருகில் வந்து அதன் வெளிச்சுவர்களின் அடிபாகத்தில் மீதியாக பாத்திரத்தில் இருக்கும் இரத்தத்தை குனிந்து ஊற்றுகின்றான். இந்த நிகழ்ச்சியுடன் அவனுடைய பாவ நிவிர்த்திக்கு நியமிக்கப்பட்ட விதிமுறைகள் முடிந்து, பின்னர் உடனடியாக சமாதான பலியிடும் பொழுது பலியிடப்படும் முறைகள் கைப்பற்றப்படுகின்றன.

சமாதான பலியில், காளையின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட உறுப்புகளை 'உள்ளிந்திரியங்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதை பார்த்தோம். உள்ளந்திரியங்களே மனித இருதயத்தை நன்மை அல்லது தீமைக்கு நேராக தூண்டி விடுகின்றவை என்றும் நாம் ஆராய்ந்தோம். அந்த மிக முக்கிய உறுப்புகள் பாவ நிவாரண பலி முறையின்படி தகனபலிபீடத்தின்மேல் சுட்டு எரிக்கப்படுகின்றன. திரைச்சீலைக்கு முன்னாக உள்ள தரையில் ஏழுமுறை இரத்தம் தெளித்ததும், தூப பீடத்து நான்கு கொம்புகளில் அவனது விரலினால் இரத்தம் பூசியதும், உள்ளிந்திரியங்களை தகனபலிபீடத்தில் எரித்து விட்டதும், அவனது ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றும் ஆண்டவருக்கே இனி சொந்தம் என்பதை காட்டுவது போல, மீதியாக இருந்த இரத்தத்தை தகன பலிபீடத்தின் அடியிலே குனிந்து கொட்டியது, அறியாமல் இனி தவறு செய்யமாட்டேன் ஆண்டவரே! இதோ இனிமேல் நான் உமக்கே அடிமை, என்று கூறுவதை காட்டுகிறது.

11,12 ஆகிய வசனங்களில், உள்ளிந்திரிய உறுப்புகள் தவிர, காளையின்தோல், மாமிசம், தலை, காளையின் முழு பாகமும் பாளையத்திற்கு புறம்பே சாம்பல் கொட்டுகிற சுத்தமான இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது என்று வாசிக்கின்றோம். தற்காலிகமாக பலிபீடம் ஒன்று கட்டைகளால் அமைக்கப்படுகின்றது. அதின்மேல் காளையின் இதர உறுப்புகள் அடுக்கப்படுகின்றன. பின்னர் முழுவதுமாக சுட்டு எரிக்கப்படுகின்றன. தகனபலி, போஜனபலி, சமாதானபலி ஆகியவற்றில், செலுத்தும்படி கொண்டுவரப்பட்ட மிருகங்கள் அல்லது பறவைகள் அல்லது போஜனங்கள் ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரத்தில் இருந்த தகனபலிபீடத்தில் தகனிக்கப்பட்டன. பாவ நிவாரண பலி பாளையத்திற்கு வெளியே எடுத்து செல்லப்பட்டு சுட்டு எரிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சி சிலுவையை ஞாபகப்படுத்துகின்றது. சிலுவை மரணத்தினை இயேசு பாளயத்திற்கு புறம்பாகவே ஏற்றுக்கொண்டார். எருசலேமிற்கு புறம்பாகவே இயேசு எடுத்துச் செல்லப்பட்டார். காளை ஒரே ஒரு மனிதனின் பாவத்திற்காக பாளயத்திற்கு புறம்பே எடுத்துச் செல்லப்பட்டது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தை பரிசுத்தம் செய்யும்படியாக நகர வாசலுக்கு புறம்பே பாடுபட்டார் என்று எபிரெயர் 13:12-வது வசனம் கூறுகின்றது. அனைத்து பிரதான ஆசாரியர்களும் அல்லது அபிஷேகம் செய்யப்பட்ட ஆசாரியர்களும் வேத புத்தகத்திலே குற்றம் செய்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் இயேசுவாகிய பிரதான ஆசாரியரோ

எவ்வித குற்றமும் இல்லாதவர். இயேசு ''என்னில் குற்றம் உண்டு என்று உங்களில் யார் சொல்ல கூடும்?,'' என்று கேட்டவர், ''பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும் வானங்களிலும் உயர்ந்தவராயிருக்கிற இவ்விதமான ஆசாரியரே நமக்கு ஏற்றவராக இருக்கின்றார்'' (எபிரேயர். 7:26) இயேசுவே நமது பாவ நிவாரணபலி.

3.3 சபையாரின் தவறுகளுக்காக செலுத்தப்படும் பாவ நிவாரண பலி

இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அறியாமையினால் பாவஞ்செய்து, காரியம் தங்கள் கண்களுக்கு மறைவாயிருக்கிறதினால், கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளிகளானால், (லேவி. 4:13)

அபிஷேகம் செய்யப்பட்ட ஆசாரியன் தவறு செய்து விட்டால் தப்பிப் பிழைப்பது எப்படி என்று நாம் பார்த்தோம். இப்பொழுது 13-21 வசனங்களில் சர்வ சபையும் பாவம் செய்து விட்டால் நிவாரணம் என்ன? எங்கே? என்பதை காண இருக்கின்றோம். 13-ம் வசனத்தில் எட்டு குறிப்புகள் எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். அவர்கள் அறியாமல் செய்த பாவத்தை ஆண்டவர் அறியாமல் போகவில்லை. சபையார் எல்லாரும் பாவம் செய்தார்கள் என்று வசனம் கூறுகின்றது. மீட்கப்பட்டவர் நடுவில் வாழ்கின்ற ஒரே ஒருவன் பாவம் செய்து விட்டாலோ அந்த பாவம் முழுச் சபையாரையும் பாதிக்கின்றது என்பதை நாம் பார்க்கின்றோம். ஆகான் என்ற ஒரே மனிதன் தேவனுடைய விதிகளை மீறிவிட்டதினால் அனைத்து இஸ்ரவேல் சமூகமும் தோல்வி கண்டதை யோசுவாவின் புத்தகத்தில் நாம் பார்க்க இருக்கிறோம்.

லேவியராகமம் 3:17-ல் கொடுக்கப்பட்ட 'கொழுப்பையாவது இரத்தத்தையாவது நீங்கள் புசிக்க வேண்டாம்' என்ற தேவ நியமனத்தை 1சாமுவேல் 14:32-ல் மீட்கப்பட்டவர்கள் மீறினார்கள் என்பதை அறியலாம். ''அப்பொழுது ஜனங்கள் கொள்ளையின்மேல் பாய்ந்து, ஆடுகளையும், மாடுகளையும், கன்று குட்டிகளையும் பிடித்து தரையிலே போட்டு அடித்து, இரத்தத்துடன் புசித்தார்கள்''. மீட்கப்பட்டவர்கள் என்ற நிலையிலிருந்து வெகுசீக்கிரமாக அங்கு விழுந்து போவதை நாம் காண்கின்றோம். மீட்கப்பட்டவர்கள், மனித குணம் இழந்து மீறுதல் செய்தார்கள். ஒருவரோ அல்லது ஒரு சிலரோ செய்யும் தவறுகள் அனைவரையும் பாதிக்கின்றது என்பதை அறிகின்றோம். குடும்பத்தலைவன் செய்யும் தவறுகள், அவனது தீய பழக்கங்கள் அவனையும் அவனுடைய சரீரத்தையும் மட்டுமல்லாமல், அவனது அன்பிற்கு உரிய மனைவி, பிள்ளைகள், பிள்ளைகளின் வருங்காலம் அனைத்தையுமே பாதிக்கின்றது. ஆயினும் தவறிய அனைவருக்கும் கிருபை கொடுக்க தேவன் வாஞ்சிக்கின்றார்; இரக்கம் வழங்க விரும்புகின்றார். ஓர் புதிய அத்தியாயம் அவர்களுடைய வாழ்க்கையில் துவங்கட்டும் என்று ஓர் சந்தர்ப்பத்தை கொடுக்க முன் வருகின்றார். அதனைத்தான் 4:13-21-வது வசனம் வரை நாம் வாசிக்கிறோம்.

லேவியராகமம் 4:13-ல் அப்படி சபையார் அனைவரும் செய்த பாவம் அறியாமையினால் செய்த பாவம் என்று எழுதப்பட்டு உள்ளது. இது பாவம் செய்வதினால் ஏற்படக்கூடிய விளைவுகளின் அறியாமை என்று பார்த்தோம். ஏதேன் தோட்டத்தில் புசிக்க கூடாது என்ற கனியினை புசித்து தவறு செய்த விளைவினால் ஆதாமும் ஏவாளும் வெட்கம், பயம், துக்கம் என்பதினால் ஓட ஓட துரத்தப்பட்டார்கள். தேவன் அவர்களை ஏதேன்

தோட்டத்தில் இருந்து துரத்தினார் என்பதை விட, அவர்களது குற்றமுள்ள மனசாட்சி பரிசுத்தமுள்ள ஆண்டவரின் பக்கத்தில் நெருங்க முடியாதபடி அவர்களை துரத்தி விட்டது என்று கூறுவது சரியான கருத்து. தவறு செய்யும் பொழுது ஒளிந்து ஒளிந்து வாழ்வதே மனித வாழ்வாக மாறுகின்றது.

பாவம் அறியாமையினால் செய்யப்பட்டது. அதாவது பாவம் செய்த பின்னர் ஏற்படும் விளைவுகளை உணராமல் பாவம் செய்யப்பட்டது. பாவம் செய்த பின்னர் விளைவுகள் தெரிய ஆரம்பித்தன. எனவே, செய்த பாவத்தை மறைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதைத்தான் லேவியராகமம் 4:13-ல் ''காரியம் தங்கள் கண்களுக்கு மறைவாயிருக்கிறதினால்'' என்று கூறப்பட்டுள்ளது. ஆதாமும், ஏவாளும் பாவம் செய்ததின் விளைவை அறிந்தவுடனே செய்த பாவத்தை மறைக்கத்தான் முற்பட்டனர். பதுங்கியும், பிறர் மீது குற்றத்தைச் சுமத்தியும் மறைத்துவிடவே முயற்சி செய்தனர். பாவத்தை செய்து முடிக்கும் வரை விரும்பி விரும்பி அதன் பின்னால் மனிதன் ஓடுகின்றான். செய்து முடித்த பின்னர் விரும்பி ஓடிய பாவத்தில் இருந்து தப்பி ஓட முயற்சி செய்கின்றான். ஆயினும் பாவம் மடியில் இருந்து அத்தனை எளிதாக உதறிக் கொட்டப்படக்கூடிய ஒன்று அல்ல. தேளின் விஷத்தைவிட வீரியம் கொண்டு செய்தவனை துரத்தி துரத்தி கொட்டக்கூடியதாகவே பாவம் இருக்கின்றது. 'உன் பாவம் உன்னை தொடர்ந்துபிடிக்கும்' என்றே பரிசுத்த வேதம் கூறுகின்றது. (ஆதி. 4:7)

கர்த்தருடைய கட்டளை மீறப்பட்டது; செய்யத்தகாதது செய்யப்பட்டது. செய்தவன் பாவத்திற்கு உட்பட்டான். குற்றவாளி கூண்டில் நிற்கும் நிலை பெற்றான். ஆயினும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மறைத்து வைக்க அவன் முயற்சி செய்கின்றான். உண்மை உறங்குவது இல்லை.

> ***அவர்கள் செய்த பாவம் தெரிய வரும்போது, சபையார் அந்த பாவத்தின் நிமித்தம் ஒரு இளங்காளையை ஆசரிப்பு கூடாரத்துக்கு முன்பாக பலியிட கொண்டு வர வேண்டும். சபையின் மூப்பர் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் கைகளை அதின் தலைமேல் வைக்க கடவர்கள்; பின்பு கர்த்தருடைய சந்நிதியில் அந்த காளையை கொல்ல வேண்டும். அப்பொழுது, அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்பு கூடாரத்தில் கொண்டு வந்து, தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் பலிபீடத்தின் கொம்புகளின் மேல் அந்த இரத்தத்தில் கொஞ்சம் பூசி, மற்ற இரத்தமெல்லாம் ஆசரிப்பு கூடார வாசலில் இருக்கிற தகன பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு, அதின் கொழுப்பு முழுவதையும் அதிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேல் தகனித்து, பாவநிவாரண பலியின் காளையை செய்த பிரகாரம் இந்த காளையையும் செய்து, இவ்வண்ணமாய் ஆசாரியன் அவர்களுக்கு பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவர்களுக்கு மன்னிக்கப்படும். பின்பு காளையை பாளயத்துக்கு புறம்பே கொண்டு போய், முந்தின காளையை சுட்டெரித்தது போல சுட்டெரிக்க கடவன்; இது சபைக்காக செய்யப்படும் பாவநிவாரணபலி. (லேவி. 4:14-21)***

''செய்த பாவம் தெரிய வரும் போது'' என்று இந்த வசனம் துவங்குகின்றது. செய்த பாவம் தெரிய வருகின்றது. மனுஷரின் கண்களுக்கு அல்ல, ''நீர் என்னைக் காண்கிற

தேவன்'' என்று அழைக்கப்பட்ட தேவனுடைய கண்களுக்கு பாவம் தெரியவரும் பொழுது, பாவம் செய்த மனிதன் செய்த பாவத்தை ஒப்பு கொள்ளும் பொழுது, சபையார் யாவரும் தவறு செய்தவர்களை இனி தவறு செய்யாமல் வாழ வைக்க உதவி கரம் கொடுக்க முன் வருகின்றார்கள். பாவம் செய்தோர் இனிமேல் பரிசுத்தமாக வாழ சபை மக்கள் ஒன்றாக சேர்ந்து வந்து உதவி செய்கின்றார்கள். செயல் ஆற்றுகின்றார்கள்.

அறியாமல் தவறி நடந்தாலும், சபையாருக்குத் தெரியாமல் யாதொரு தப்பிதம் செய்தாலும், சபையார் எல்லாரும் கர்த்தரின் சமூகத்தில் வர வேண்டும் என்று எண்ணாகமம் 15:24 கூறுகின்றது. சபையாரின் செயலாற்றுதல்கள் என்ன? செய்த பாவம் தேவனிடத்தில் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. பாவ நிவிர்த்திக்கென்று ஒரு இளங்காளை தெரிந்து எடுக்கப்படுகின்றது. தேவன் வாசம் பண்ணும் இடமான ஆசரிப்பு கூடாரம் நோக்கி அனைவரும் அமைதியுடன் புறப்பட்டு வருகின்றனர். ஆசரிப்பு கூடார வாசலில் அபிஷேகம் செய்யப்பட்ட ஆசாரியன் அவர்களை சந்திக்கின்றான். அவர்கள் வந்த நோக்கம், செலுத்த கொண்டு வந்த பலி அனைத்தையும் அறிந்து கொள்ளுகின்றான். பின்னதாக சபையின் மூப்பர்களை மட்டும் பிரித்து எடுக்கின்றான். முழுச் சபையின் சார்பாக, இளங்காளையுடன் சபையின் பெரியவர்களை தகன பலிபீடத்தின் அருகில் வரும்படி அழைக்கின்றான். அவர்கள் அனைவரையும் தங்கள் கைகளை சபை செய்த பாவத்தின் சார்பாக பலியாகப் போகும் மிருகத்தின் தலைமீது வைக்கக் கேட்கின்றான். பின்னர் கர்த்தருடைய சந்நிதியில், அதாவது கர்த்தரின் பார்வையில், கர்த்தரின் பிரசன்னத்தில் பலி வெட்டப்படுகின்றது.

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் ஒரு பாத்திரத்தில் பலியின் இரத்தத்தை பிடித்துக் கொள்ளுகின்றான். பின்னர் அந்த பாத்திரத்தை கையில் எடுத்து ஆசரிப்பு கூடாரத்திற்கு உள்ளாக மிக அடக்கத்துடன் பிரவேசிக்கிறான். முன்பு செய்தது போன்று இரத்தத்தில் விரலைத் தோய்த்து திரைச்சீலைக்கு முன்பாக உள்ள தரையில் ஏழு முறை தெளிக்கின்றான். திரைக்கு இந்த பக்கத்தில் இருந்து, திரைக்கு உள் பக்கத்தில் இருக்கும் கிருபாசனத்தை நோக்கி கிருபைக்காக இவ்விதம் வேண்டுகின்றான். சபையாருக்கு இதுவரை மறைவாக இருந்த பாவம் மன்னிக்கப்பட அவன் செய்வது ஒவ்வொன்றும் பரிசுத்தராகிய தேவனை ஏவி எழுப்புகின்றது. வருந்தி கேட்கின்றது. பின்னர் ஆசரிப்பு கூடாரத்தின் உள்ளே இருக்கும் தூப பலிபீடத்தின் கொம்புகள் அருகில், இரத்தம் உள்ள பாத்திரத்துடன் சென்று, நான்கு கொம்புகளிலும் இரத்தத்தை பூசுகின்றான்.

அதன் பின்னதாக மீதியாக இருக்கும் இரத்தத்தினை அத்தியந்த பணிவுடன் ஆசரிப்பு கூடாரத்தின் வெளியே இருக்கும் தகனபலிபீடத்தின் அடியில் சுற்றிலுமாக சென்று குனிந்து கொட்டுகிறான். பாவத்தை குறித்த கவலையுடனும், பரிசுத்தம் குறித்த வாஞ்சையுடனும் நின்று கொண்டிருக்கும் சபையின் பெரியவர்கள் மகா அமைதியுடன் அதில் பங்கு எடுக்கின்றார்கள். முழுச் சபையின் நல் வாழ்விற்காக தகன பலிபீடத்தின் முன் நின்று கொண்டு இருக்கின்றார்கள்.

அதன் பின்னர், பலியான மிருகத்தின் கொழுப்பு முழுவதும் எடுக்கப்படுகின்றது. கொழுப்பு இரகசியமாக செய்யப்படும் பாவங்களை குறிக்கும். பாவம் இரகசியமாக செய்யப்பட்டாலும் பாவத்தின் விளைவு பகிரங்கமாகவே தெரிய வருகின்றது. எனவே பகிரங்கமாக கொழுப்பு தகன பலிபீடத்தின்மேல் வைக்கப்படுகின்றது. பகிரங்கமாகவே தகனிக்கவும் படுகின்றது. மறைவான பாவங்களே மிகத் துணிகரமான பாவங்களாகும்.

மேலும் மறைவான பாவங்களே மிக மிக துயரங்களைத் தரும் பாவங்களும் ஆகும். ஆகவே, துயரங்கள் நீங்கி புதிய உயரங்கள் காண, சபையார் சார்பில், சபை மூப்பர் செலுத்திய பாவ நிவாரண பலி உதவி செய்து விட்டது. ஆசாரியன் பாவ நிவிர்த்தி செய்து விட்டான். 20-வது வசனத்தில் ''அப்பொழுது அது அவர்களுக்கு மன்னிக்கப்படும்'' என்று எழுதப்பட்டு உள்ளது. பாவம் மன்னிக்கப்பட்டது என்ற நிச்சம் பெற்ற பின்னர் பலியின் எஞ்சிய பாகங்களை பாளயத்திற்கு புறம்பாக எடுத்து சென்று சுட்டு எரிக்கின்றார்கள். பாவம் முற்றிலுமாக பரிசுத்தரின் சமூகத்தில் இருந்தும், மீட்கப்பட்டவர் தங்கும் நடுவில் இருந்தும் துப்புரவாக அப்புறப்படுத்தப்பட்டது. உண்மை, தூய்மை, நேர்மை என்ற சமூகமாக சபையார் இன்னும் ஒரு முறை மாறி விட்டார்கள்.

பழைய ஏற்பாட்டு சரித்திரத்தில் இஸ்ரவேல் சபையார் எல்லாரும் பாவம் செய்தது போல புதிய ஏற்பாட்டு காலத்தில் சபையார் மட்டுமல்லாமல், ''எல்லாரும் வழி தப்பி ஏகமாய் கெட்டு போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை'' என்று பரிசுத்த பவுல் கூறுவதை ரோமர். 3:12-ல் வாசிக்கின்றோம். அறியாமல் அப்படி செய்து விடுவதால் இரக்கம் அனைவருக்கும் புதிய ஏற்பாட்டு காலத்திலும் உண்டு என்றும் அறிகின்றோம். ''முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகின்றவனும் கொடுமை செய்கிறவனுமாக இருந்தேன். அப்படி இருந்தும் நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தேன் என்பதினால் இரக்கம் பெற்றேன்'' என்று பரிசுத்த பவுல் சாட்சி கூறுவதை 1 தீமோத்தேயு 1:13-ல் வாசிக்கலாம்.

அறியாமையுள்ள காலங்களில் காணாதவர் போல் இருந்த ஆண்டவர் இப்பொழுது எங்கும் உள்ள மனுஷர் யாவரும் மனம் திரும்ப வேண்டும் என்று கட்டளையிடுகிறார் (ரோமர் 3:25). ''தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாக இரும்'' என்று இயேசுவை நோக்கி தங்களைத் தாழ்த்தி ஜெபிக்கும் அனைவருக்கும் இரக்கம் கொடுக்கப்படுகின்றது. நன்மைசெய்ய வாஞ்சிக்கிறவர்களுக்கு இன்றும் நல்ல காலம் காத்திருக்கிறது. தவறான பழக்க வழக்கங்களில் தவறி விழுந்தவர்களுக்கு இன்றும்கூட ஓர் உயர்வான எதிர்காலம் கண்டு மகிழ இயேசுவின் கிருபை அழைக்கின்றது. மனம் திரும்பி செவி கொடுக்கின்றவர்கள் மகிழ்ந்து வாழ்வார்கள். பாவ மன்னிப்பு பெற்று பரிசுத்த பாதையில் நடக்க காலம் பிந்திப் போகவில்லை. வருந்தும் குடும்பங்கள் வளம் பெற்று ஓங்க வாசல் மூடப்படவில்லை. அழைப்பு அனைத்து உள்ளங்களையும் தட்டுகிறது. அதனை ஏற்பதோ, ஏற்க மறுப்பதோ அவரவர் தீர்மானம். இயேசு மன்னிக்கின்றார். இயேசு இரட்சிக்கின்றார். எந்த பாவியானாலும் தள்ள மாட்டேன் என்று கூறுகின்றார். துரோகம் செய்த போதிலும் நோக்கிப்பார். இரட்சிப்பார்!

3.4 கோத்திர தலைவனின் தவறுக்காக செலுத்தப்படும் பாவ நிவாரண பலி

ஒரு பிரபு தன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை மீறி, அறியாமையினால் செய்ய தகாததை செய்து, பாவத்துக்கு உட்பட்டு குற்றவாளியானால், (லேவி. 4:22)

லேவியராகமம் 4:22-35 வசனம் வரை சபையின் பிரதானிகளில் ஒருவன் தப்பிதம் செய்து விட்டால் செய்ய வேண்டிய பாவ நிவாரணத்தை நாம் பார்க்க போகின்றோம். 22-வது வசனத்திலே 'ஒரு பிரபு' என்று துவங்குவதை நாம் பார்க்கலாம். ஒரு பிரபு என்று வரும் அந்த வார்த்தை சீமானாக இருப்பதினால் பிரபு என்று மாறிய ஒரு மனிதனைக் குறிக்கும் வார்த்தை அல்ல. 12 கோத்திரத்தின் தலைவர்களை 'பிரபு' என்று அந்த நாட்களிலே அவர்கள்

அழைத்தார்கள். 12 கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தின் தலைவன் என்பவன் பிரபு என்று அழைக்கப்படுகின்றான். ''ஒவ்வொரு கோத்திரத்துக்கு ஒவ்வொரு மனிதன் உங்களோடே இருப்பானாக. அவன் தன் பிதாக்களின் வம்சத்துக்கு தலைவனாய் இருக்கக்கடவன்,'' என்று எண்ணாகமம் 1:4-ல் பார்க்கிறோம். ''இவர்களே சபையில் ஏற்படுத்தப்பட்டவர்களும், தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களில் பிரபுக்களும், இஸ்ரவேலில் ஆயிரமானவர்களுக்குத் தலைவருமாயிருப்பார்கள்.'' என்று எண்ணாகமம் 1:16-ல் பார்க்கிறோம். எண்ணாகமம் 7:2-ல் ''இவர்களை கோத்திர பிரபுக்கள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 12 கோத்திரத்திற்கும் 12 பிரபுக்கள் அல்லது தலைவர்கள் தெரிந்து எடுக்கப்பட்டனர். அவர்கள் யார் யார்? அவர்களுடைய பெயர் என்ன? இதனை எண்ணாகம் 1:8-15-ல் நீங்கள் படிக்கலாம்.

லேவி. 4:22-வது வசனத்தில் ''ஒரு பிரபு தவறினால்'' என்று எழுதப்பட்டுள்ளதின் பொருள் 12 கோத்திரங்களின் தலைவர்களில் ஒரு தலைவன் தவறி விட்டால் என்பதாகும். மேலும் எண்ணாகமம் 16:2-ல் ''இஸ்ரவேல் புத்தரரில் சபைக்குத் தலைவர்களும், சங்கத்திற்கு அழைக்கப்பட்டவர்களும், பிரபலமானவர்களுமாகிய 250 பேர்'' என்ற ஓர் குறிப்பு வருகின்றது. பொறுப்பில் இருப்பவர் தவறி விட்டால் செய்ய வேண்டியது இங்கு கூறப்படுகிறது. அவர்கள் பிரபுவாக இருக்கலாம். தலைவர்களாக இருக்கலாம், சங்கத்தின் பொறுப்பாளர்களாக இருக்கலாம். பரிசுத்தராகிய தேவனின் நீதியானது எவ்வித பட்சபாதமும் இல்லாத நீதி ஆகும். தலைவன், சாதாரண மனிதன் என்ற வித்தியாசத்தை தேவன் பாவத்தை பொருத்த மட்டில் பார்ப்பது இல்லை. பாவம் செய்யும் பொழுது, அபிஷேகம் செய்யப்பட்டவன், பிரபு, சபையார், கோத்திரத்தின் சாதாரண மனிதன் அனைவருமே தங்கள் மேன்மையை இழந்து, பாவி என்ற பெயரை ஏகமாகப் பெற்றுக்கொள்ளுகின்றார்கள் (ரோமர் 3:26).

பாவத்தில் விழுந்து விட்ட பின்னர் நேற்று வரை இருந்த பரிசுத்தம், இன்று கைகொடுக்க முன்வருவதும் இல்லை. கடந்த கால நல் மதிப்புகள் கைலாகு தருவதும் இல்லை. காரணம் பாவம் அத்தனை கொடூரமானது. ''பிரபுவாகிய ஒருவன் தன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை மீறினால்'' என்று லேவியராகமம் 4:22-ம் வசனம் துவங்குகின்றது. தேவ கட்டளைகளை மக்கள் கைக்கொள்ளுவதற்கு காவலாளியாகவும், ஆலோசகனாகவும், உதவியாளனாகவும் இருக்க வேண்டியவன், கட்டளைகளை மீறுகின்றான். அவன் மீறும் பொழுது, அவனது மீறுதல் அவனுக்கு அடியில் இருக்கின்றவர்களை கட்டளைகளை மீறும்படி தூண்டி எழுப்புகின்றது. சகலமும் ஒழுங்கும் கிரமமுமாக செய்யப்பட வேண்டிய தேவ நிர்வாகம், சகலத்திலும் ஒழுங்கீனமாக மாறி விடுகின்றது. பிரபு அறியாமல் செய்தான்; செய்யத் தகாததை செய்தான்; பாவத்திற்கு உட்பட்டான்; குற்றவாளி ஆனான் என்ற 4 குறிப்புகளை 22-வது வசனம் தெரிவிக்கின்றது. அறியாமல் செய்தான்; பாவத்தின் விளைவுகளைச் சற்றும் சிந்திக்காமல் பாவத்தில் சிக்கிக் கொண்டான். கட்டளைகளை அறியாமல் மீறுதல், கட்டளைகளைப் பற்றிய எவ்வித அக்கறையும் இல்லாத நிலையை குறித்து காட்டுகின்றது. பரிசுத்தரின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பரிசுத்தமான வாழ்வை தலைவனால் நடத்த முடியாது. கட்டளைகளை மீறுவதால் பரிசுத்தமே மீறப்படுகின்றது. எதை செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டதோ, அந்த செயல்கள் செய்யப்படுகின்றன. தடைகளை விதித்தவனே தடையை மீறுகிறவனாக மாறி விட்டான்; செய்யத்தகாததை செய்து விட்டான். எனவே பாவத்திற்கு உட்பட்டான். அதாவது தலைவன் பாவி என்ற பெயரை பெற்று, தலைவன் என்ற

பெயரை இழந்தான்; குற்றவாளி என்ற பெயரை கொண்டான். தேவ கட்டளைகளை மீறினதினால் தேவனுக்கு முன்பாகவும், மக்கள் இடறிப்போக தக்கதாக தவறு செய்து விட்டதால், மனிதருக்கு முன்பாகவும் குற்றவாளி என்ற நிலைக்குள் அவன் வந்தான்.

தான் செய்தது பாவம் என்று தனக்கு தெரிய வரும்போது, அவன் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு இளங்கடாவை பலியாக கொண்டு வந்து, அந்த கடாவின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதை கொல்லக்கடவன்; இது பாவநிவாரணபலி. அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகன பலிபீடத்து கொம்புகளின் மேல் பூசி, மற்ற இரத்தத்தை தகன பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு, அதின் கொழுப்பு முழுவதையும், சமாதானபலியின் கொழுப்பபைப்போல, பலிபீடத்தின்மேல் தகனித்து, இவ்வண்ணமாய் ஆசாரியன் அவன் செய்த பாவத்தை குறித்து அவனுக்காக பாவ நிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். (லேவி. 4:23-26)

''தான் செய்தது பாவம் என்று தனக்கு தெரியவரும் பொழுது'' என்று 23-ம் வசனம் கூறுகின்றது. வேறு எவரும் அவனது குற்றத்தை சுட்டிக் காட்டவே இல்லை. காரணம் தலைவனாகிய அவனை சாதாரண மக்கள் நெருங்கி சேர முடியாத அளவிற்கு, அவனுடைய அந்தஸ்து, அவனுடைய அதிகாரம் இரண்டும் பெரிதாக தெரிகின்றது. எனவே பிரபு தவறினால் அவனது மனசாட்சி தவிர அவனை உணர்த்துவதற்கு, அவனை சுட்டி காட்டுவதற்கு, தட்டி எழுப்புவதற்கு எவரும் இல்லை. சாலொமோன் என்ற அரசன் தவறான பாதையில் சென்றான். ஞானத்தின் இருப்பிடமாக இருந்த அரசன் தூய்மையின் இருப்பிடமாக இருக்கவில்லை. தேவாலயம் கட்டியவன் தனது இதயத்தை தேவனின் ஆலயமாக கொடுக்கவில்லை. அவன் அருகில் சென்று அவனை தட்டி கேட்க எவரும் இல்லை. எனவே கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி அவனது பாவநிலையினை இரண்டு முறை உணர்த்தினார் என்று 1 இராஜாக்கள் 1:9-ல் பார்க்கிறோம்.

லேவியராகமம் 4:23-ல் பிரபுவாகிய அவன் குற்றவாளியாக மாறும் பொழுது, தனது குற்றத்தை உணர்வதையும், ஒப்பு கொள்ளுவதையும், அதற்காக மனஸ்தாபப்படுவதையும் நாம் பார்க்கின்றோம். அவை அத்தனையும் இடம் பெறாமல், அவன் பலி செலுத்த வந்து விட்டால், அது மாய்மாலமான பலியாக இருக்குமே தவிர, பாவம் மன்னிக்கப்படும் பலியாக இருக்க முடியாது. பாவம் செய்தவன் அபிஷேகம் செய்யப்பட்ட ஆசாரியனாகவோ, கோத்திரத்தின் பிரபுவாகவோ, சாதாரண மனிதனாகவோ இருந்தாலும், அவன் தன் பாவத்தை உணர்ந்து வருந்தி, திருந்த விரும்பும் முயற்சியை கர்த்தர் பெரிதும் பாராட்டுகின்றார். சற்றும் தயங்காமல் மன்னிக்கிறார். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். ஆனால் அவைகளை ஒப்பு கொண்டு, அறிக்கையிட்டு, புதிய தீர்மானம் செய்கிறவன் மீது தேவ இரக்கம் அருவி போன்று கொட்டப்படுகின்றது. கர்த்தர் மன்னிக்க தயை பெருத்தவராய் இருக்கின்றார்.

தான் செய்தது தவறு என்று உணர்ந்த பிரபு செலுத்த வேண்டிய பாவ நிவாரண பலியின் விளக்கம் இந்த வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. வெள்ளாடுகளில் பழுதற்ற ஓர் இளங்கடாவை அவன் தெரிந்தெடுக்க வேண்டும். வயதில் முதிர்ந்த அவன் வயதில் குறைந்த

ஆட்டைத் தெரிந்து எடுக்க வேண்டும். காரணம், அவன் வயதில் பெரியவனாக இருந்தும், தூய்மையில் மிகச் சிறியவனாகவே மாறி விட்டான். ஆரம்பக் கோட்டிற்கு சென்று அவன் பரிசுத்த வாழ்வைத் திரும்பவும் ஓர் முறை துவங்க வேண்டும். தவறியவன் என்ற பெயர் அவனுக்கு ஒரு நொடிப் பொழுதில் கிடைத்தது. தூயவன் என்ற பெயர் எடுக்க இனி நாட்கள் அதிகம் ஆகும். உயரத்தில் இருந்து கீழே வழுக்கி விழுவது, துரிதமாக இடம் பெற்றது. ஆனால் முன் இருந்த உயரம் செல்லவும், புதிய சிகரங்களைத் தொடவும் எத்தனையோ காலம் எடுக்கும்.

அவன் தெரிந்தெடுத்தது ஓர் இளமையான கடா ஆகும். அதனுடன் அவன் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசல் வருகிறான். அங்கு ஆசாரியன் அவனை வரவேற்று, அவன் பலி செலுத்த வந்த நோக்கத்தையும், செலுத்த வந்துள்ள பலி அதற்கு ஏற்றதாக இருக்கின்றதா என்பதையும் அறிந்து கொள்ளுகின்றான். பின்னர், பிரபுவின் கைகள் பலியாக கொண்டு வந்த இளம் கடாவின் தலை மீது வைக்கப்படுகிறது. கர்த்தருடைய கட்டளைகளை மீறி, செய்யத் தகாததை செய்த அவனது பாவம் அனைத்தும் எதுவும் அறியாத இளம் கடாவிற்கு கடத்தப்பட்டது. தொடர்ந்து கர்த்தருடையச் சந்நிதியில் பலி கொல்லப்பட்டது; அதன் இரத்தம் ஆசாரியனால் ஒரு பாத்திரத்தில் பிடிக்கப்பட்டது.

முன்பு செய்தது போன்று பலியின் இரத்தம் ஆசரிப்பு கூடாரத்திற்கு உள்ளாக எடுத்து செல்லப்படவே இல்லை. காரணம் அவன் பிரபுவாக, தலைவனாக இருப்பது, பாளயத்தில் இருக்கும் மக்களுக்காகவே! அவர்களது கண் பார்வையில் பகிரங்கமாக அவனது பாவ நிவாரண முறைகளும் இடம்பெற்று தீர வேண்டும். தலைவன் என்பதால் அவன் செய்த குற்றத்தை மூடி மறைத்து சரி செய்துவிட முடியாது. மனிதர்களிடமும் தேவனிடமும் ஒளிவு மறைவின்றி ஒப்புரவாகுதல் அவனுக்கு தேவை. ஆசாரியன் பலியின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலில் எடுத்து தகன பலிபீடத்தின் கொம்புகளில் பூசுகின்றான். கொம்பு என்பது அதிகாரம், வல்லமை, ராஜரீகம் என்பவைகளை சுட்டி காட்டுகின்றது. தலைவன் என்று பிறர் அவனை அழைத்தாலும், அவன் கர்த்தாதி கர்த்தருக்கு முன் ஓர் பாவி, நீசன், ஒன்றும் இல்லாதவன் என்பதை அது சுட்டி காட்டுகின்றது. தகனபலிபீடத்தின் வெளி பாகத்தின் அடியில் குனிந்தவாறு சுற்றி வந்து, மீதியாக இருக்கும் இரத்தம் கொட்டப்படுகின்றது. அது இனிமேல் முற்றிலும் பரிசுத்தராகிய தேவனுக்கு மட்டுமே தான் அடிமை என்பதை காட்டுகின்றது.

அதன்பின் சமாதான பலியில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள் துவங்குகின்றன. சமாதானபலியில், தகனபலியாக எரிக்கப்பட்ட உறுப்புகள், இளம் ஆட்டுக்கடாவில் இருந்து எடுக்கப்படுகின்றது. பின்னர் எரிக்கப்படுகின்றது. எரிக்கப்பட்ட அந்த உறுப்புகள் உள்ளிந்திரியங்கள் என்று பரிசுத்த வேதம் கூறுவதை முன்பு நாம் பார்த்தோம். நல்ல உணர்ச்சிகள் அல்லது தீய உணர்ச்சிகள் ஆகியவற்றை தூண்டிவிடும் இடம் உள்ளிந்திரியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவைகள் எரிக்கப்படுவதின் மூலம் இனிமேல் பிரபுவின் உணர்ச்சிகள், பரிசுத்தத்திற்குமேல் பரிசுத்தம் பெரும் விருப்பங்களாகவே அமைய இருக்கின்றன என்பதை தெளிவு படுத்துகின்றது. பலியின் மீதியான பகுதிகள், பாளயத்திற்கு புறம்பே எரிக்கப்படுகின்றன. அப்பொழுது அவன் செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும் என்று 26-ம் வசனம் கூறுகின்றது.

அதிபதியானவன் பொய்களுக்கு செவி கொடுத்தால் அவன் ஊழியக்காரர் எல்லாரும் துன்மார்க்கர் ஆவார்கள் என்று நீதிமொழிகள் 29:12-வது வசனம் கூறுகின்றது. எனவே அதிபதியாகிய பிரபு இனிமேல் உண்மை, தூய்மை, நேர்மை கொண்டு வாழ பாவ நிவாரண பலி உதவி செய்தது. மூப்பர் அல்லது தலைவன் என்பவன் குற்றம் சாட்டப்படாதவனாக இருக்க வேண்டும் என்று பரிசுத்த பவுல், தீத்துவுக்கு எழுதிய நிரூபம் 1:6-வது வசனத்தில் கூறுகின்றார்.

தேவனின் பார்வையில் உலகில் மனிதர் எத்தனை பெரியவர்கள் என்பது முக்கியம் அல்ல; உள்ளத்தில் அவர்கள் எவ்வளவு தூயவர்கள் என்பதே முக்கியம்! அந்த ஒப்பற்ற வாழ்விற்கு ஒவ்வொரு நாளும் குறிதவறாமல் வாழ்வதற்கு இயேசு நமது இறுதி பலியாக மாறி விட்டார். குற்றம் இல்லாத மாசற்ற ஆட்டு குட்டியாகிய கிறிஸ்துவின் இரத்தம், கோணலும் மாறுபாடும் உள்ள சந்ததியில் உண்மை, தூய்மை, நேர்மை கொண்டு வாழ அனைவருக்கும் உதவி செய்யும். ஆவல் உள்ளவர்கள் இயேசுவிடம் வந்து, அந்த வல்லமையை பெற்று இந்தப் பூமியில் வாழும் வாழ்நாள் முழுவதும், தூய்மை, உண்மை, நேர்மை கொண்டு வாழ தங்களை அர்பணிக்கலாம்.

3.5 சாதாரண மனிதனின் மீறுதலுக்காக பாவ நிவாரண பலி:

சாதாரண ஜனங்களில் ஒருவன் அறியாமையினால் கர்த்தரின் கட்டளைகளில் யாதொன்றை மீறி, செய்ய தகாததை செய்து, பாவத்துக்கு உட்பட்டு குற்றவாளியானால், (லேவி. 4:27)

சாதாரண மனிதன் ஒருவன் தவறு செய்யும் பொழுது அவன் செலுத்த வேண்டிய பலி விபரத்தை பற்றி இந்த வசனங்களின் மூலம் அறிந்து கொள்ளுகின்றோம். சாதாரண மனிதன் என்பதால் பாவம் அலட்சியம் செய்யப்பட முடியாது என்பதை நாம் இங்கு பார்க்கின்றோம். மிக சாதாரண மனிதனின் தவறான செயலும் அவனையும் அவனது குடும்ப நலன்களையும் அவன் வாழும் சமூகத்தின் நலனையும் பாதிக்கின்றது என்று வேத புத்தகம் கூறுகின்றது. பரலோகத்தின் தேவன், ஜனங்களின் நடுவில் நிறுத்தப்பட்ட ஆசரிப்பு கூடாரத்தில் வாசம் செய்ய வந்து விட்டார். அவர் மகா பரிசுத்தர்; தீமையை பார்க்க மாட்டாத சுத்த கண்ணன். எனவே அவர், பாவம் செய்தவன் செல்வந்தரா அல்லது ஏழையா என்று பார்ப்பது இல்லை; தவறு செய்தவர் சிறிய மனிதரா அல்லது பெரிய மனிதரா என்றும் பார்ப்பது இல்லை. பாவத்தை யார் செய்தாலும், செய்தவனை பாவியாகவே பரிசுத்தர் பார்க்கிறார்.

பாவத்தில், சிறிய பாவம், பெரிய பாவம் என்று எதுவும் இல்லை. பாவிகளில், செல்வந்தமான பாவி ஏழையான பாவி என்று வேத புத்தகம் பிரிப்பதும் இல்லை. பாளயத்தில் தங்கி இருக்கும் மக்கள் அடிமைத்தன வாழ்விலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட மக்கள் ஆவார்கள். உடன்படிக்கை என்ற ஒன்றினால் பரிசுத்தராகிய தேவனை அவர்கள் ஆராதிக்கவும் அவரை பின்பற்றவும் தங்களை ஒப்புக்கொடுத்து விட்டார்கள். அவர்கள் மொத்தத்தில் மிக சாதாரணமான மனிதர்களே! கொத்தடிமைகளாக இருந்தவர்கள்தான் அவர்கள். ஞானிகளை வெட்கப்படுத்தும்படிக்கு தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளையே தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தில் இழிவானவைகளையும் அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார். (கொரிந்தியர் 1:27,28) தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குள் பெரியவர்கள் சிறியவர்கள் என்ற வித்தியாசமே இல்லை.

பரிசுத்தம் என்பது, ஒவ்வொரு தனி நபரின் அலங்காரமாக இருக்க வேண்டும் என்ற ஒன்றே எதிர்பார்க்கபட்டது. அவர்கள் தங்கி இருக்கும் பாளயத்தை, பரிசுத்தர் கவனித்துக் கொண்டே இருக்கின்றார். ''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும். உன் பாளயத்திற்கு உள்ளே உலாவி கொண்டு இருக்கின்றார். ஆகையால் அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தை கண்டு உன்னை விட்டுப் போகாதபடிக்கு, உன் பாளையம் சுத்தமாக இருக்க கடவது'' என்று உபாகமம் 23:14-ல் பார்க்கிறோம். ஜீவனுள்ள தேவன், பட்சிக்கிற அக்கினியாக இருக்கின்றார். அவர் எதிர்பார்க்கும் பரிசுத்தம், பாளயத்தில் வாழும் அனைத்து மனிதரின் உள்ளத்திலும் இல்லத்திலும் தேவைப்படுகின்றது. உள்ளம், உடல், உறைவிடம், பாளயம் அனைத்தும் பரிசுத்தமாகவும் பரிபூரண சுத்தமாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார். இந்த எதிர்பார்ப்பில் சாதாரண மனிதன் என்றோ, அசாதாரணமான மனிதன் என்றோ எந்த வித்தியாசத்தையும் பரிசுத்தர் பார்ப்பது இல்லை.

> ***தான் செய்தது பாவம் என்று தனக்கு தெரிய வரும்போது, அவன் தான் செய்த பாவத்தின் நிமித்தம் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு பெண் குட்டியை பலியாக கொண்டு வந்து, பாவநிவாரண பலியின் தலைமேல் தன் கையை வைத்து, சர்வாங்க தகனபலியிடும் இடத்தில் அந்த பாவநிவாரண பலியை கொல்ல கடவன். அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகன பலிபீடத்துக் கொம்புகளின் மேல் பூசி, மற்ற இரத்தமெல்லாம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு, சமாதான பலியிலிருந்து கொழுப்பை எடுப்பதுபோல, அதின் கொழுப்பு முழுவதையும் எடுத்து, ஆசாரியன் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்கு சுகந்த வாசனையாக தகனித்து, இவ்வண்ணமாய் அவனுக்கு பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். அவன் பாவநிவாரண பலியாக ஒரு ஆட்டுக்குட்டியை கொண்டு வருவானாகில், பழுதற்ற பெண்குட்டியை கொண்டுவந்து, அந்தப் பாவநிவாரண பலியின் தலைமேல் தன் கையை வைத்து, சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதை பாவநிவாரண பலியாக கொல்லக்கடவன். அப்பொழுது ஆசாரியன் அந்தப் பாவநிவாரண பலியின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகன பலிபீடத்து கொம்புகளின் மேல் பூசி மற்ற இரத்தமெல்லாம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றி விட்டு, சமாதான பலியான ஆட்டு குட்டியின் கொழுப்பை எடுக்கிறது போல, அதின் கொழுப்பு முழுவதையும் எடுத்து, கர்த்தருக்கு இடப்படும் தகன பலிகளை போல, பலிபீடத்தின் மேல் ஆசாரியன் தகனிக்க வேண்டும்; இவ்வண்ணமாய் அவன் செய்த பாவத்துக்கு ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்ய கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். (லேவி. 4:28-35)***

வசனம் 28-ல் ''தான் செய்தது பாவம் என்று தனக்கு தெரிய வரும்போது'' என்று எழுதப்பட்டு உள்ளது. பிரபு என்பவன் பாவம் செய்யும் பொழுது யாரும் அவனிடம் நெருங்கி சென்று அவன் பாவத்தை கூறியதாக கூறப்படவில்லை. லேவியராகமம் 4:23-ல் தான் செய்தது பாவம் என்று தனக்கு தெரிய வரும் பொழுது என்று பிரபு என்பவரை பற்றி கூறப்பட்டது போல, சாதாரண மனிதனுக்கும் கூறப்பட்டு உள்ளது. பாவம் என்பதை பிறர் சொல்லி அறிய வேண்டியது இல்லை. அவரவர் மனசாட்சி சொல்லி அறிய வேண்டியது

ஆகும். மனசாட்சி சொல்லியும், அதை மழுக்கி, தேவ விதிகளை மீட்கப்பட்டவர் மீறும் பொழுது, தண்டனை தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக மாறி விடுகின்றது. உதாரணமாக, ஓய்வு நாளில் எவ்வித வேலையும் செய்ய வேண்டாம்; மீட்கப்பட்டவர் அனைவரும், கர்த்தராகிய தேவன் அவர்களுக்கு செய்த நன்மைகளை நினைத்து போற்றும் நாளாக, குடும்பமாக, பரிசுத்தரை தொழுது ஸ்தோத்தரிக்கும் நாளாக, ஓய்வு எடுக்கும் நாளாக இருக்க வேண்டும் என்று தேவன் கூறியிருந்தார். அடுப்பு கூட எரிக்க மாட்டோம். நெருப்பு கூட மூட்ட மாட்டோம் என்று யாத்திராகமம் 35-ம் அதிகாரத்தில் அவர்கள் தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால் ஒரு சாதாரண மனிதனின் மனம், ஓய்வு நாளை குறித்த கட்டளைகளை மீறும் அளவுக்கு ஒரு நாள் கடினப்பட்டு விட்டது. அவன் கல் எரிந்து கொல்லப்பட்டான் என்பதை எண்ணாகமம் 15-ம் அதிகாரத்தை படிக்கும் பொழுது நாம் அறிந்து கொள்ளலாம்.

அறிவு, அந்தஸ்து, அதிகாரம் ஆகிய அனைத்திலும் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டு இருந்தாலும், மனித மனப்பான்மைகள், இச்சை, பாவம் என்பவைகளில் வேறுபட்டவைகள் அல்ல. சமமானவர்களாகவே காணப்படுகின்றனர். இராஜாவின் பாவ மனப்பான்மையே சாதாரண மனிதனின் மனப்பான்மையாகவும் இருக்கின்றது. தலைவனின் பாவ விருப்பங்களே அவனுக்கு அடியில் இருக்கும் சாதாரண மனிதனின் பாவ மனப்பான்மையாகவும் இருக்கின்றது. யோபு. 34:19-ம் வசனத்தில் ''பிரபுக்களின் முகத்தைப் பாராமலும் ஏழையை பார்க்கிலும் ஐசுவரியவானை அதிகமாய் எண்ணாமலும் இருக்கிறவர்,'' என்று கர்த்தரைப் பற்றி கூறப்பட்டுள்ளது. பட்சபாதம் பாராதவரின் சமூகத்தில் எல்லாரும் பாவிகளே! எனவேதான் பாவ அறிக்கை என்பதற்கு மாற்று வார்த்தைகள் இல்லை. இரட்சிக்கப்படுதல் என்பதற்கு வேறு வார்த்தைகள் இல்லை. பரிசுத்தம் என்பதற்கும் இணையான வார்த்தைகள் இல்லை.

லேவியராகமம் 4:27,28 வசனங்களில், சாதாரண மனிதன் அறியாமையினால் பாவம் செய்தான்; அதாவது தவறு செய்தால், சாவை சந்திக்க வேண்டியது இருக்கும் என்ற விளைவை சற்றும் சிந்தியாமல் செயலாற்றி விட்டான். பிறர் அதனை அறிந்து கொள்வதற்கு முன்னர், தானாகவே அதனை அறிந்து விட்டான். தான் இழைத்த பிழையை அவன் உணர்ந்து விட்டான். உடனடியாக அவன் ஆசாரியர்களுடனும் ஆண்டவராகிய கர்த்தருடனும் ஒப்புரவாகி விட தீர்மானம் செய்கின்றான். அது ஓர் சிறந்த முடிவாகும். அந்த ஓர் சிறந்த முடிவை எடுக்காவிட்டால், அது அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியனாக இருந்தாலும் பிரபுவாக இருந்தாலும், சாதாரண மனிதனாக இருந்தாலும் தேவ கோபத்திற்கு தப்பவே முடியாது. ''இப்படிப் பட்டவர்கள் சடுதியில் சாவார்கள். ஜனங்கள் பாதி ஜாமத்தில் கலங்கி ஒழிந்து போவார்கள். காணாத கையினால் பலவந்தர் அழிந்து போவார்கள். அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கின்றது; அவர்களுடைய நடைகளையெல்லாம் அவர் பார்க்கிறார். அக்கிரமக்காரர் ஒளித்துக் கொள்ளத்தக்க அந்தகாரமும் இல்லை. மரண இருளும் இல்லை. மனுஷன் தேவனோடு வழக்காடும்படி அவர் அவன்மேல் மிஞ்சினதொன்றையும் சுமத்தமாட்டார். ஆராய்ந்து முடியாத நியாயமாய் அவர் வல்லமையுள்ளவர்களை நொறுக்கி, வேறே மனுஷரை அவர்கள் ஸ்தானத்திலே நிறுத்துகிறார். அவர்கள் கிரியைகளை அவர் அறிந்தவரானபடியால், அவர்கள் நசுங்கிப் போகத் தக்கதாய் இராக்காலத்தில் அவர்களைக் கவிழ்த்து போடுகிறார். அவர்கள் அவரை விட்டு பின் வாங்கி, அவருடைய எல்லா வழிகளையும் உணர்ந்து கொள்ளாமல் போனபடியினாலும், எளியவர்களின் கூக்குரல் அவரிடத்தில் சேரும்படி செய்ததினாலும்,

சிறுமையானவனுடைய கூக்குரலைக் கேட்கிற அவர் எல்லாரும் பார்க்கும்படி அவர்களைத் துன்மார்க்கர் என்று அடிக்கிறார்.'' என்று யோபு. 34:20-28-ல் பார்க்கிறோம்.

பாவம் செய்யும் மனிதர் யார் என்று, தேவன் வித்தியாசம் பாராட்டுவது இல்லை. அதே சமயத்தில், செய்த பாவத்தை உணர்ந்து, ஒப்புக்கொண்டு, அதற்கு நிவாரணம் தேட மனிதன் முயற்சிக்கும் பொழுது, தேவன் உதவி செய்வதற்கு முன் வருகிறார் என்பதையும், இந்த பலி முறைகளில் நாம் படிக்கின்றோம். பாவத்தை செய்தவர்க்கு தண்டனை கொடுக்க மனித மனசுகள் இலகுவில் முடிவு செய்து விடுவதால், அதற்கு பலி என்ற ஒரு பரிகாரத்தை ஏற்படுத்தி, உடனடியாக அதனை சரி செய்து விட பரிசுத்தராகிய தேவன் மீட்கப்பட்ட அந்த ஜனங்களுக்கு கிருபையாக ஓர் வழி வகுத்து கொடுத்தார்.

பிரபு தன் குற்றத்தை உணரும் பொழுது ஒரு இளமையான கடாவை பாவ நிவாரண பலியாக செலுத்தக் கேட்கப்பட்டது. சாதாரண மனிதன் தவறு இழைக்கும் பொழுது செலுத்தப்படும் பலி, வெள்ளாடுகளில் இருந்து எடுக்கப்பட்ட பெண் ஆட்டுக்குட்டியாக இருக்க வேண்டும் என்று லேவியராகமம் 4:28-ல் பார்க்கின்றோம். பணிவு, தாழ்மை, தூய்மை ஆகிய அனைத்தும் கொண்ட பரிசுத்தமான வாழ்க்கைக்கு தன்னை சாதாரண மனிதன் தத்தம் செய்து விடுவதை அது காட்டுகின்றது. அதின் தலைமீது தன் கைகளை வைப்பதின் மூலம் அவனது பாவம் அந்த கபடற்ற ஆட்டுக்குட்டிக்கு கடத்திவிடப்படுகின்றது. அதன் இரத்தம் பலிபீடத்தின் கொம்புகளில் பூசப்படுவதன் மூலம், கர்த்தாதி கர்த்தாவின் கட்டளைகளுக்கு இனி அவன் அடங்கியவன் என்பதை அது காட்டுகின்றது. பலியின் இரத்தம் தகன பலிபீடத்தை சுற்றி குனிந்து ஊற்றப்படுதல் பலி செலுத்த வந்தவன் பணிந்து தன்னை பரிசுத்தருக்கு முற்றிலுமாக அர்ப்பணிப்பதை காட்டுகின்றது. அனைத்தும் ஓர் படம் போல் சித்தரிக்கப்பட்டு உள்ளது. பிசகு இல்லாமல் பலி முறைகளை நிறைவேற்ற, ஆராதனை முறை சிரமம் இல்லாத முறையில் அமைந்துள்ளது என்பதை நாம் அறிகின்றோம்.

லேவியராகமம் 4:35-வது வசனத்தில், பாவ நிவாரண பலியின் முடிவு, சமாதான பலியின் முறைமையாக இருக்கின்றது. பாவ நிவாரண பலி பாவ மன்னிப்பிற்கு ஓர் அடையாளமாக தெரிகின்றது. சமாதானபலி, பாவ மன்னிப்பு பெற்ற பின்னர் கிடைக்கும் பாவ மன்னிப்பின் சந்தோஷத்திற்கு ஓர் அடையாளமாக தெரிகின்றது. அந்த சந்தோஷத்திற்கு காரணம், பாவம் மன்னிக்கப்பட்டது என்பது மட்டும் அல்ல, மறுபடியும் அதே பாவம் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும் பாவத்தை செய்ய பற்றுவரவில்லை என்பதினால் ஆகும். பாவத்திற்கு முதுகும், பரிசுத்தத்திற்கு முகமும் திருப்பியதின் விளைவாக அந்த சந்தோஷம் ஏற்பட்டது. அதற்கு அடையாளமாக, பலியின் ஆட்டுக்குட்டியின் கொழுப்பு எடுக்கப்பட்டு, பலிபீடத்தில் சுட்டு எரிக்கப்படுகின்றது. கொழுப்பு என்பது இரகசிய பாவங்களை குறிக்கும் என்பதையும் பாவ உணர்வுகளை தூண்டி எழுப்பும் உள்ளிந்திரியங்களை குறிக்கும் என்பதையும் நாம் பார்த்தோம். மறைவான பாவங்கள் சுட்டு எரிக்கப்படுகின்றது. உள்ளத்தில் உண்மை உற்பத்தி ஆகுகின்றது; செயலில் பரிசுத்தம் தெரிய வருகின்றது. அதன் விளைவாக முகத்தில் ஓர் புதிய பிரகாசம் தோன்ற ஆரம்பித்து விட்டது. இதனையே சமாதான பலியின் முறைமை காட்டுகின்றது.

லேவியராகமம் முதலாம் அதிகாரத்தில் தகனபலி, இரண்டாம் அதிகாரத்தில் போஜனபலி, மூன்றாம் அதிகாரத்தில் சமாதான பலி என்று கிறிஸ்துவை நினைவு ஊட்டும் மூன்று பலிகளைப் பார்த்த நாம், லேவியராகமம் நான்காம் அதிகாரத்தில் பாவ நிவாரண

பலியினைப் பற்றி பார்த்தோம். மனிதர்களுடைய பாவங்கள் அனைத்தும் நிவாரணம் செய்யப்பட்ட இறுதியான இடம் கிறிஸ்து மரித்த சிலுவையாக மாறி விட்டது என்பதை நாம் அறிவோம். லேவியராகமம் நான்காம் அதிகாரத்தில் ஊழியம் செய்தவன் தவறு செய்ததையும், ஆராதிக்க வந்த சபையார் தவறு செய்ததையும் அதிகாரம் அந்தஸ்து பெற்ற பிரபுவும், தலைவன் என்ற இடத்தில் இருந்த பெரியவனும் தவறு செய்ததையும், மிக சாதாரண மனிதன் தவறு செய்ததையும் நாம் பார்த்தோம். சுருங்கக் கூறின் தவறு செய்யாதவர்கள் உலகில் இல்லை என்று நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

பாவம் செய்யாத மனிதன் இல்லை என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. எல்லாரும் வழி தப்பி ஏகமாய்க் கெட்டு போனார்கள் என்றே ரோமர் நிருபம் 3:22 கூறுகின்றது. அத்தனை பேரும் செய்யும் தவறுக்கு, ஆயிரமாயிரம் ஆடுகள் அனுதினமும் வெட்டப்பட்டாலும் போதுமானதாக இருக்குமோ என்று ஒரு தீர்க்கதரிசி ஏங்குவதை மீகா தீர்க்கதரிசியின் புஸ்தகம் 6:67-வது வசனங்களில் நாம் பார்க்கின்றோம். ''என்னத்தைக் கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாக பணிந்து கொள்ளுவேன்? தகன பலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக் கொண்டும் அவர் சந்நிதியில் வர வேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின் பேரிலும், கர்த்தர் பிரியமாய் இருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும் என் ஆத்துமாவின் பாவத்தை போக்க என் கர்ப்ப கனியையும் கொடுக்க வேண்டுமோ?'' அந்த ஏக்கமே பாவம் செய்யும் எந்த மனிதனின் இதய ஏக்கமாக முடியும். அதற்கு ஒரே பதிலாக, அதற்கு ஒரே பலியாக தேவன் தமது ஒரே பேறான குமாரனை நமக்கு தந்தருளினார்.

கிறிஸ்துவே நமது தகன பலி, நமது போஜன பலி; கிறிஸ்துவே நமது சமாதான பலி; அவருடைய சிலுவையே நமது பாவங்களை நிவாரணம் செய்து விடும் இறுதியான இடம். ''வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்.'' (எபிரெயர் 9:12)

3.6 குற்ற நிவாரண பலிகள்

லேவியராகமம் 5-ம் அதிகாரம் மிக முக்கியமான ஓர் அதிகாரமாகும். சர்ப்பத்தை போன்று வினா உள்ளவர்களாகவும், புறாவைப் போன்று கபடம் இல்லாதவர்களாகவும் வாழ்ந்து மகிழ ஜனங்களை உணர்த்தும் ஓர் அதிகாரம் ஆகும்.

லேவியராகமம் 5:1-13 வசனங்களில் வருகின்ற நான்கு முக்கிய குறிப்புகளை பற்றி நாம் பார்க்க போகின்றோம். மீட்கப்பட்ட அந்த ஜனங்கள் ஒரு சமுதாயமாக வாழும் பொழுது எவ்வளவு கவனத்துடனும், களங்கமற்ற மனதுடனும் வாழ வேண்டும் என்பதை இந்த அதிகாரத்தில் வரும் பல குறிப்புகள் நமக்கு புகட்டுகின்றன. களங்கம் இல்லாத மனம் கொண்டவர்கள் நடுவில் ஒருமனம், ஒருமனப்பாடு என்பது தானாக உருவாகி விடும். ஆண்கள் மட்டும் சுமார் ஆறுலட்சத்திற்கு அதிகமாக இருக்கும் அந்த மீட்கப்பட்டவர்கள் சமுதாயத்தில் களங்கம் கொண்ட மனம் படைத்தவர்கள் தோன்றி விட்டால் சமுதாயமே கலங்கி விடும். எனவே இந்த அதிகாரத்தில் வருகின்ற நான்கு குறிப்புகளை ஒன்று ஒன்றாக நாம் பார்ப்பது நல்லது.

சாட்சிக்காரன் செய்யும் குற்றம்:

சாட்சியாக ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டிருந்தும், தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்து பாவஞ்செய்தால், அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான். (லேவி. 5:1)

லேவியராகம புத்தகத்தில், பரிசுத்தம், அன்பு, உண்மை என்பதைப் பாதிப்பது பாவங்களும் அசுத்தங்களும் என்று ஒன்று ஒன்றாக கூறப்பட்டு உள்ளது. லேவியராகமம் 5:1-4 வசனங்களில் கூறப்பட்டுள்ள நான்கு பாவச் செயல்களும் ''பொய்'' என்ற ஒரே வார்த்தையில் அடக்கம் பெறுகின்றன. பரிசுத்தம் என்பது மெய் சார்ந்தது. அசுத்தம் என்பது பொய் சார்ந்தது. மீட்கப்பட்ட மக்களான அவர்கள், ஓர் சமூகமாக வாழ அழைக்கப்பட்டு உள்ளனர். மனதார ஒருவரை ஒருவர் நம்பி வாழ்வதற்கு மனதார ஒருவருடன் ஒருவர் உண்மை பேசி தீர வேண்டும். கணவன் மனைவி பிள்ளைகள் ஒருவருக்கு ஒருவர் உண்மை மட்டும் பேசி விட்டால் கருத்து வேறுபாடு வருவது இல்லை. அவர்கள் வாழும் சமுதாயம் பரிசுத்த சமுதாயம். பரிசுத்த சபை என்ற பெயரை அவர்கள் பெற்று விட்டார்கள். அவர்கள் அருகில் வசிக்கும் மற்றவர்களுடன் உண்மை மட்டும் அவர்கள் பேச வேண்டும். சமுகமாக அவர்கள் வாழ சுமுகமான ஓர் உறவு தேவை. அதற்கு உண்மை என்பது அஸ்திபாரமாக அமைவது அவசியம் தேவை.

மீட்கப்பட்டவர்கள் வாழும் அந்த பாளையத்தின் நடுவில் ஓர் குற்றம் ஒன்று இடம் பெற்று விட்டது. அதனை நிரூபித்து காட்ட அதனை நேராக கண்ட ஒரே ஒருவனை தவிர வேறு யாருமே இல்லை. அந்த ஒரே ஒருவன் மட்டும் அதனை கண்ணால் கண்டவன் ஆவான். மனதார அறிந்தவனும் ஆவான்.

குற்றம் விசாரணைக்கு வருகின்றது. ஆனால் நிரூபிக்க யாருமே இல்லை. அதனை நேரில் கண்ட சாட்சியாகிய ஒரே ஒரு மனிதன் உண்டு. அவனை நீதிபதிக்கு முன்னாக கொண்டு நிறுத்துகின்றார்கள். அப்பொழுது அவனை பேசும்படி நீதிபதி ஆணையிடுகின்றார். அதுதான் லேவியராகமம் 5:1-ல் வரும் 'இடப்பட்ட ஆணை' என்பது ஆகும். அது சாதாரணமான ஒரு மனிதனின் வார்த்தை அல்ல, நீதிபதியின் வார்த்தை என்பது ஆகும். அந்த வார்த்தையினை கேட்டவன் மவுனம் சாதிக்கவே முடியாது. வாய் திறந்து பேசியே தீர வேண்டும். உண்மையை உரைத்தே ஆக வேண்டும்.

யோசுவா, மோசேயின் காலத்திற்கு பின் இஸ்ரவேலின் தலைவனாக மாறினான். அப்பொழுது அவனுடைய வீரர்களில் ஒருவன் களவு செய்தான். யுத்தம் செய்ய சென்ற இடத்தில் தடையை மீறி சில பொருட்களை திருட்டு அளவாக எடுத்து மறைத்து வைத்து கொண்டான். தான் செய்த குற்றத்தை யாருமே அறியவில்லை என்று அவன் அமைதலாகவே இருந்து விட்டான். ஆனால் யோசுவா அதனை அறிந்து விட்டான். யோசுவா அவனிடம் சென்று, 'நீ செய்ததை எனக்கு சொல்லு அதை எனக்கு ஒளிக்காதே,' என்று கூறினான். அது ஓர் நீதிபதி கூறுவதுபோல இடப்பட்ட ஓர் ஆணையாகும். தீமை அகற்றப்பட, தேவனாகிய கர்த்தர் மகிமைப்பட கூறப்பட்ட ஆணையாகும். ஆகான் என்ற அந்த மனிதன் அந்த ஆணைக்கு முன் அமைதியாக இருக்க முடியவில்லை. தான் செய்த தவறை யோசுவாவிடம் கூறினான். லேவியராகமம் 5:1-ல் 'இடப்பட்ட ஆணை' என்பதே யோசுவா 7:19-லும் இடப்பட்ட ஆணையாகும்.

நீதிபதி மட்டுமே இடக்கூடிய இந்த ஆணையினை சாதாரண மக்களும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தியதை நியாயாதிபதிகள் புத்தகத்தில் நாம் பார்க்கலாம். எப்பிராயீம் கோத்திரத்தை சேர்ந்த ஒரு பெண்ணிடம் இருந்த ஆயிரத்து நூறு வெள்ளிகாசு ஒரு முறை களவாடப்பட்டது. அவள் அதை கண்டு பிடிக்க முடியாமல் ஆணையிட்டாள். அந்த ஆணையில் தனது காசுகளை களவாக எடுத்தவனை சபித்து ஆணையிட்டாள். அவள் காசுகளை களவாக எடுத்தவன் அவளது சொந்த மகன்தான். அவன் அந்த ஆணையை கேட்ட உடனே அதுவரை மவுனமாக இருந்தவன் வாய் திறந்து பேசி விட்டான். உண்மையை கூறி விட்டான். நியாயாதிபதிகள் 17:2-ல் ''அவன் தன் தாயை நோக்கி: உன்னிடத்திலிருந்து ஆயிரத்து நூறு வெள்ளி காசு களவு போயிற்றே, அதைக் குறித்து என் காதுகள் கேட்க நீ சாபம் இட்டாயே. அந்த பணம் இதோ, என்னிடத்தில் இருக்கிறது; அதை எடுத்தவன் நான்தான் என்றான்'' என்று அவன் கூறுவதை பார்க்கிறோம்.

பரிசுத்த மத்தேயு எழுதிய சுவிசேஷம் 26:62-ல் ஓர் உரையாடல், பிரதான ஆசாரியனுக்கும் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் நடுவில் இடம் பெற்றது. பிரதான ஆசாரியன் கேட்ட எந்த கேள்விக்கும் எவ்விதமான பதிலும் கூறாமல் அதுவரை இயேசு அமைதலாகவே இருந்தார். நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா? என்று ஆசாரியன் கேட்டான். இயேசுவோ பேசாமலிருந்தார். பரிசுத்த மத்தேயு 26:63-ல் ''அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்கு சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டு கேட்கிறேன் என்றான்.'' அந்த ஆணை நீதிபதியின் ஆணை போன்றது. இயேசு மவுனமாக இருக்கவில்லை. உடனே பதில் கூறினார். மத்தேயு 26:64-ல் ''அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான் என்றார்,'' என்று பார்க்கிறோம்.

லேவியராகமம் 5:1-ல் கண்கண்ட சாட்சியான மனிதன் இடப்பட்ட ஆணையைக் கேட்டும் தான் கண்டதை கூறவில்லை. மவுனமாகவே இருந்து விட்டான்; அறிந்ததை சொல்லவில்லை; அமைதலாகவே இருந்து விட்டான். அச்சத்தினாலோ அல்லது அது அவனுக்கு அவசியமில்லாத ஒரு வேலை என்பதினாலோ அவன் அமைதியாகி விட்டான். பயமோ அல்லது சுய நலமோ, சாட்சியாகிய அவனை மவுனம் ஆக்கிற்று. அவனது செயற்கையான அமைதி அவன் ஓர் அப்பாவியாக இருக்க கூடுமோ என்ற வீண் சந்தேகத்தை உருவாக்கிற்று. அல்லது நடந்த தவறான செயலுக்கு அவனும் ஓர் உடந்தையாளனாக இருந்தானோ என்று சந்தேகிக்கும் நிலைக்கு அவனை கொண்டு வந்து விட்டது. ''திருடனோடே பங்கிட்டு கொள்ளுகிறவன் தன் ஆத்துமாவை பகைக்கின்றான். சாபத்தை அவன் கேட்டாலும் காரியத்தை வெளிப்படுத்த மாட்டான்'' என்று நீதி மொழிகள் 29:24-வது வசனம் கூறுவது போல, அவன் சாபத்தை கேட்டான்; சாட்சியாக இடப்பட்ட ஒரு ஆணையைக் கேட்டான். ஆயினும் ஊமையாகவே இருந்து விட்டான். உண்மையை உரைக்கவில்லை. யாத்திராகமம் 20:16-ல் 'பிறனுக்கு விரோதமாக பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக' என்று வரும் 9-வது கற்பனையில், பொய் என்ற வார்த்தை வருகின்றது. உண்மையை உரைக்க வேண்டிய நேரத்தில், உரைக்க வேண்டிய இடத்தில், உரைக்க வேண்டிய நபரிடம் உரைக்காமல் இருப்பது பொய்க்கு சமமானது என்பதே அந்த கற்பனையில் வரும் ஒரு பொருளாகும். லேவியராகமம் 5:1-ல் நாம் பார்க்கும் மனிதன் உண்மையை உரைக்க வேண்டியவரிடம் கூறவேண்டிய நேரத்தில் கூறவில்லை. இடப்பட்ட ஆணையைக் கேட்டும் பேசவில்லை. கர்த்தர், அவனை பொய்யன் என்று அறிகின்றார்.

தேவனுக்கும் ஜனங்களுக்கும் உள்ள உறவு, கற்பனைகளையும் பிரமாணங்களையும் நடுவாக கொண்ட உடன்படிக்கையின் உறவு ஆகும். உறவு உண்மையாக இருக்க, உண்மை தவிர பிற எதுவும் அறியாதவர்களாக அவர்களது அன்றாட வாழ்க்கை இடம்பெற வேண்டும். மெய் வழியில் நடக்கின்றவர் பொய் பேச முடியாது. மெய் சாட்சி சொல்லுகிறவன் உயிர்களை இரட்சிக்கின்றான். வஞ்சனைகாரனோ பொய்களை ஊதுகிறான் என்று நீதி மொழிகள் 14:25-வது வசனம் கூறுகின்றது. பரிசுத்த சபையார் ஓர் குடும்பமாக வாழ எதிர்பார்க்கப்படுகிறார்கள். பொய்களை ஊதுகிறவர்கள் அவர்கள் நடுவில் இடம் பெற்று விட்டால் குடும்ப ஒருமனப்பாடு குலைக்கப்படும். கர்த்தர் அதனை விரும்பவில்லை. எனவே தெளிவாக லேவியராகமம் 5:1-ல் தேவன் கூறி விட்டார். அவர் கூறியது என்ன? கண்டதையும் அறிந்ததையும் தெரிவிக்காமல் இருந்தால் அது பாவம் என்று கூறி விட்டார். அந்த பாவம் செய்தவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான் என்றும் கூறி விட்டார். தீர்ப்பு அளிக்கும் நீதிபதிக்கு முன் திருப்திகரமான பதிலை கூறாதவனுக்கு எல்லாம் அறிந்தவர் ஓர் தீர்ப்பு கூறிவிட்டார். அவன் தன் அக்கிரமத்தை சுமப்பான் என்பதே தேவ நியாயதீர்ப்பு. அதன் பொருள், தேவ கோபம் அவனை விட்டு விலகுவது இல்லை, அவன் குடும்பத்தை விட்டு நீங்குவதும் இல்லை என்பதாகும். பொய்யை மெய்யாக்குகின்றவர்கள் உலகில் வாழ்ந்தது இல்லை என்றே வேத புத்தகம் கூறுகின்றது. உண்மையை மறைத்த ஆகான், தேவ கோபத்திற்கு ஆளானான். அவனை கல் எரிந்து கொன்றார்கள். ஒரு பெரிய கல் குவியல் அவன் சடலத்தின்மீது குவித்தார்கள். இப்படியே கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டு மாறினார் என்று யோசுவா 7:26-வது வசனம் கூறுகின்றது.

உண்மை பேசாதவன் பரிசுத்தன் அல்ல என்றும், பரிசுத்தராகிய தேவனின் சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டியவன் என்றும் நாம் பார்க்கின்றோம். நீதிபதி இட்ட ஆணையினை அபத்தம் செய்த அவன், உண்மையை சொல்ல மறுத்த அவன், தன் வீட்டிற்கு திரும்பி சென்றான். அவன் மனசாட்சி அவனை குத்த ஆரம்பித்தது. அவன் மனம் சமாதானம் இழந்தது. அவன் குடும்பத்தில் சந்தோஷம் நீங்கியது. தேவ கோபம் அவனையும், அவன் குடும்பத்தையும் பாதிக்கவும் வாதிக்கவும் தொடங்கியது. உண்மையை அவன் எவ்வளவு அடக்கி, அடக்கி வாழ்ந்தானோ அவ்வளவு கலங்கி கலங்கி வாழ்ந்தான். 'நான் அடக்கி வைத்த மட்டும் நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சி போல வறண்டு போயிற்று' என்ற சங்கீதக்காரனின் நிலையே அவனுடைய நிலையாக மாறியது. (சங்கீதம் 32:2,3) எனவே அவன் தன் பாவத்தை உணர ஆரம்பித்தான். தான் செய்தது ஓர் தவறு என்று உணர்ந்து கொண்டான். உணர்ந்ததை ஒப்புக்கொள்ள விரும்பினான். எனவே செய்த பாவத்தை அறிக்கையிட்டான். மற்றவர் அவன் பொய்யன் என்று கண்டு பிடிக்கும் முன்னர் அவன் தன்னைத்தானே தான் ஒரு பொய்யன் என்று கண்டு விட்டான்.

லேவியராகமம் 5:5-ல் ''இப்படிப் பட்டவைகள் ஒன்றில், ஒருவன் குற்றமுள்ளவனாகும் போது அவன் தான் செய்தது பாவம் என்று அறிக்கையிட்டு'' என்று எழுதப்பட்டுள்ளது. அவன் செய்த குற்றத்திற்கு அவன் குற்றநிவாரணபலி என்ற ஒன்றை செலுத்தி தீர வேண்டும். ஆனால் குற்ற நிவாரண பலி செலுத்துவதற்கு முன்னர் அவன் தனது தவறை ஒப்புக்கொள்ள வேண்டும். அறிக்கை செய்ய வேண்டும். அறிக்கை செய்த பின்னர், செலுத்தும் பலியை நோக்க வேண்டும். பலியாக அவன் செலுத்த வேண்டியது, ஒரு பெண் ஆட்டுக்குட்டியாக இருக்க வேண்டும் என்று லேவியராகமம் 5:6-ல் பார்க்கிறோம். ஆட்டுக்குட்டியினை

பலியாக செலுத்தும் பொருளாதார வசதி இல்லை என்றால் இரண்டு காட்டு புறாக்களையாவது புறாக் குஞ்சுகளையாவது பலியாக செலுத்தலாம் என்று ஏழாவது வசனம் கூறுகின்றது.

வஞ்சகமான அவன் உள்ளம், களங்கம் இல்லாத ஓர் உள்ளமாக மாறுகின்றது என்பதை காட்ட ஆட்டுக்குட்டியும், கபடான அவன் உள்ளம் கபடமில்லாத ஒரு உள்ளமாக மாறுகின்றது என்பதற்கு புறா குஞ்சுகளும் அடையாளமாக அமைகின்றன. அவன் செய்த பாவத்தை ஆசாரியன் நிவிர்த்தி செய்யக்கடவன் என்றும், அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும் என்றும் 10-வது வசனம் கூறுகின்றது. அவனுக்கு ஆட்டுக்குட்டியோ புறாக் குஞ்சுகளோ கொடுக்க முடியவில்லை என்றால், எப்தா என்ற மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை தன் காணிக்கையாக கொடுக்கலாம் என்று 11-வது வசனம் கூறுகின்றது. அவன் படைக்கும் மாவு, ஒரு நாள் உணவு தயாரிக்க வீட்டில் பயன்படுத்தும் மாவின் அளவை குறிக்கின்றது. குடும்பமாக ஒரு முழு நாளும் உணவு எதுவும் அருந்தாமல் அவர்கள் அந்த நாளுக்குரிய அந்த மாவினை ஆண்டவருடைய சமூகத்தில் கொண்டு வந்து படைக்க எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அவனது உடைந்த உள்ளமும் உயர்ந்த வாஞ்சைகளும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுகின்றது. அதனை மனதில் கொண்டு அவன் எடுத்த நல் முயற்சிகள் அனைத்தும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது.

அதன் விளைவு, அவனது வாழ்வு தூய்மையானது, அவனது உள்ளம் மகிழ்ச்சியானது. ''நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன், என் மீறுதல்களை கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்'' (சங். 32:5) என்ற நிலை அவனுடைய நிலையாக மாறியது. ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வு அடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகின்றவனோ இரக்கம் பெறுவான்.''

ஐந்து பிரதான பலிகளைப் பற்றி லேவியராகமப் புத்தகத்தில் நாம் படித்து வருகிறோம். அந்த 5 பலிகளில் தகனபலி, போஜனபலி, சமாதானபலி ஆகிய முதல் மூன்று பலிகளும் பாவிகளை இரட்சிக்க இந்த உலகத்திற்கு வந்த கிருபாதாரபலியாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சுட்டிக்காட்டுகின்றன. பாவ நிவாரணபலி, குற்ற நிவாரணபலி என்ற கடைசி இரண்டு பலிகளும், கிருபை என்ற சலுகையின் சின்னமாக சிலுவையை சிறப்பித்துக் காட்டுகின்றன.

பாவம் என்ற ஒன்றை செய்து விட்டால் சாவை சந்திக்க வேண்டிய மனிதனின் உயிரை காப்பற்றிக் கொடுப்பதே பாவ நிவாரண பலி என்பதாகும். இந்த பலியில், பலியாக வேண்டிய மிருகம் ஓர் ஆட்டுக்குட்டியாக இருக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. அந்த எதிர்ப்பார்ப்பு இயேசு கிறிஸ்துவே ஆகும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக இயேசு இருக்கிறார் என்பதை கல்வாரி காட்டி விட்டது.

குறிப்பிட்ட பாவங்களில், மன்னிப்பும், வெற்றியும் பெற்று வாழ குற்ற நிவாரணபலி குறிக்கப்பட்டது. சிலுவை, என்பது கிருபை மட்டும் தருவது அல்ல, பரிபூரண பரிசுத்தம் பெற பரிசுத்த ஆவியானவரின் நிறைவையும், வல்லமையையும் தரக்கூடியது என்பதை குற்றநிவாரணபலி காட்டி விட்டது. மீட்கப்பட்ட நிலைக்குள் வந்த பின்பும் பரிசுத்த சபை, மக்களின் உள்ளம், உடல், உறைவிடம், கறைப்பட்டுவிட வாய்ப்பு இருக்கின்றது.

யாத்திராகமம் 32-ம் அதிகாரத்தில் இடம் பெற்ற சம்பவம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். இனியும் இவ்விதமான அகத்தோல்விகள் இடம் பெறும் பொழுது, அதனை அவர்கள் உளமாற உணர்ந்து மனமாற ஒப்புக் கொண்டு, பலி ஒன்று செலுத்தி, பரிசுத்த வாழ்வை புதுபித்து கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. பரிசுத்தம் என்பது நிரந்தரம் காண வழி செய்கின்றது. பாவ வாழ்க்கையில் இருந்து வெளிவரும் நிலையை யாத்திராகம புத்தகம் காட்டியது. லேவியராகமம் பரிசுத்தத்தில் நிலைவரப்படும் அனுபவத்திற்கு அவர்களை அழைக்கின்றது. ''உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர்; ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' என்று லேவியராகமம் 19:2-ல் பார்க்கிறோம். இதுவே லேவியராகம புத்தகத்தின் நடுவான வசனமாகும். அதனைத் தொடர்ந்து வரும், அடுத்த முக்கியமான வசனம் ''உன்னில் நீ அன்பு கூறுவது போல் பிறனிலும் அன்பு கூறுவாயாக'' என்பதாகும். அதனை லேவியராகமம் 19:18-ம் வசனத்தில் நாம் பார்க்கிறோம்.

தீட்டுப்பட்டவனின் குற்றம்:

> ***அசுத்தமான காட்டு மிருகத்தின் உடலையாவது, அசுத்தமான நாட்டு மிருகத்தின் உடலையாவது, அசுத்தமான ஊரும் பிராணிகளின் உடலையாவது, இவ்வித அசுத்தமான யாதொரு வஸ்துவையாவது, ஒருவன் அறியாமல் தொட்டால், அவன் தீட்டும் குற்றமும் உள்ளவனாவான். அல்லது, எந்த அசுத்தத்தினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை ஒருவன் அறியாமல் தொட்டு, பின்பு அதை அறிந்து கொண்டால், அவன் குற்றமுள்ளவனாவான். (லேவி. 5:2,3)***

அசுத்தமான ஒன்றை தெரியாமல், அறியாமல் ஒரு மனிதன் தொட்டு விட்டான். சிறிது நேரத்திற்கு பின்னர் அதனை அவன் அறிந்து கொள்ளுகின்றான். தான் தீட்டுப்பட்டவன் என்று உணர்ந்து விட்டான். அப்படியானால் உடனே அவன் ஒன்று செய்ய வேண்டும். அவனது உடல், உடை அனைத்தும் சுத்திகரிக்கப்பட வேண்டும். அதனை அவன் வலிய செய்ய வேண்டும். ஆனால் அவன் அசுத்தமானவன் என்று அவனைத் தவிர அவன் குடும்பத்திலோ அவனுடைய சமூகத்திலோ எவரும் அறியவில்லை.

எனவே அமைதலாக இருந்துவிட முடிவு செய்தான். அவன் ஓர் பொய்யனானான். ஆனால் அவனைப் பார்த்துக் கொண்டு இருக்கும் கர்த்தரின் கண்களை மூடி விடுவதற்கு அவனால் முடியவில்லை. வார்த்தை, எழுத்து என்ற அவரது கற்பனைகளும் விதி முறைகளும் அவனை குத்துகின்றன. அவன் செய்த பாவம் அவனை துரத்துகின்றது. அவன் தன்னை வஞ்சிக்கிறவனாகவும், தனது குடும்பம், தனது சமுதாயம் இரண்டிற்கும் துரோகம் செய்கிறவனாகவும், தன்னை சிருஷ்டித்து பராமரித்து வரும் பரிசுத்தமுள்ள தேவனை உதாசீனம் செய்கிறவனாகவும் காணப்படுகின்றான். அவனது மனசாட்சி, கூர்மை இழந்த மனச்சாட்சி என்பதை நிரூபித்து விட்டான்.

பரிசுத்த சபையாரில் ஆண்கள் மட்டும் சுமார் 6 இலட்சம் பேர் உண்டு. கூடாரங்கள் அடித்து ஓர் சமூகமாக வாழ்கிறார்கள். தேவன் தங்கும் வாசஸ்தலத்தை நடுவாகப் பெற்று தங்கியிருக்கின்றார்கள். ஓர் பெரிய ஜனத்தொகையில் தவறாக இடம் பெறும் சிறிய செயல்களும் பெரிய சேதம் விளைவிக்க கூடியதாக இருக்கும் என்பதை லேவியராகமம் 5:2,3 ஆகிய வசனங்கள் எடுத்து உரைக்கின்றன. மிருகங்களில் வீட்டு மிருகம், காட்டு மிருகம் என பிரித்துக் கூறப்படுவது போன்று, லேவியராகம புத்தகத்தில் அசுத்தமான மிருகம்,

சுத்தமான மிருகம் என்று இரண்டு முறையில் பிரித்து கூறப்பட்டு உள்ளன. ''மனுஷனுடைய தீட்டையாவது, தீட்டான மிருகத்தையாவது, அருவருக்கப்படத்தக்க தீட்டான மற்ற எந்த வஸ்துவையாவது ஒருவன் தொட்டிருந்து, கர்த்தருடைய சமாதான பலியின் மாம்சத்திலே புசித்தால், அவன் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்.'' என்று லேவியராகமம் 7:21-ல் பார்க்கிறோம்.

பரிசுத்தராகிய தேவன் ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்திலும் மகா பரிசுத்தமும், மகா சுத்தமும் எதிர்பார்க்கின்றார். உள்ளம் சுத்தமாக இருப்பின் உடலும் உடையும் உறைவிடமும் சுத்தமாகவே இருக்கும். ஆண்டவர் ஆசரிப்பு கூடாரத்தை மட்டும் ஆளுகின்றவர் அல்ல, அவர்கள் அனைவரின் கூடாரங்களையும் ஆளுகின்றவர். அவர்கள் பாளயத்தில் உலாவுகின்றவர். எந்த அசுத்தமும், பரிசுத்தரின் ஆளுகைக்குள் இடம் பெற முடியாது.

லேவியராகமம் 5:2,3 ஆகிய வசனங்களில் ஒருவன் அசுத்தமான பிராணி ஒன்றின் உடலை அறியாமல் தொட்டான். அறிந்த பின்னர் அமைதியாக இருந்து விட்டான். குற்றவாளியானான். அடுத்தவன் அசுத்தமான ஒரு மனிதனை அறியாமல் தொட்டான். பின்னர் அதை அறிந்து விட்டான். செய்தது ஒன்றும் இல்லை. அவனும் குற்றவாளியாக மாறி விட்டான். அறிந்து உணர்ந்தபின் வருந்தியிருப்பானேயாகில் உடனடியாக தனது வஸ்திரங்களை தோய்ந்து இருந்திருப்பான்; உடலை சுத்தம் செய்திருந்திருப்பான். பின்னர் லேவியராகமம் 5:5-13-ல் விவரிக்கப்பட்ட பலியினை செலுத்தி முடித்திருந்திருப்பான்.

அசுத்தமான அந்த இரண்டு பேரும், சுத்தமானவர்களை அசுத்தப்படுத்தி விட்டார்கள். இதனை அவர்கள் உணர்வது மட்டும் அல்ல, தாங்கள் செய்தது பாவம் என்று அறிக்கை செய்யவும் வேண்டும் என்று லேவியராகமம் 5:5-வது வசனம் கூறுகின்றது. ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வு அடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்'' என்று நீதிமொழிகள் 28:13-வது வசனம் கூறுகின்றது.

தீட்டுப்பட்டவன் தூயரின் சமூகத்தில் சேர முடியாது. பரிசுத்தரின் சிநேகத்தை பெற முடியாது. எண்ணாகமம் 5:5-வது வசனம் கூறுவதை வாசியுங்கள். ''ஆண் பிள்ளையானாலும் பெண் பிள்ளையானாலும், அப்படிப்பட்டவர்களை நீங்கள் விலக்கி, நான் வாசம் பண்ணுகிற தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டுபடுத்தாதபடிக்கு நீங்கள் அவர்களைப் பாளயத்திற்கு புறம்பாக்கி விடக்கடவீர்கள்'' என்று கூறுகின்றது. மோசேயின் சொந்த சகோதரியான மீரியாம் கூட தீட்டுப்பட்ட பொழுது பாளயத்தில் இருந்து வெளியேற்றப்பட்டாள் என்று எண்ணாகமம் 12:15-ல் நாம் பார்க்கிறோம். இருதயமே தீட்டு படியும் இடமாக தெரிகின்றது. ''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது'' (எரே.17:9). இருதயத்தில் பதுக்கி வைக்கும் அசுத்தங்கள், வீட்டாரும் சமுகமும் அறிய முடியாததாக இருக்கின்றது. ''கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதை கொடுக்கும்படிக்கு இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களை சோதித்தறிகிறவருமாய் இருக்கிறேன்'' என்று எரேமியா 17:10-வது வசனம் கூறுகின்றது.

அடிமைத்தனத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள், பரிசுத்தம், அன்பு, உண்மை ஆகியவை காத்து வாழ அழைக்கப்பட்டார்கள். அவைகளை மீறும் பொழுது அசுத்தரானார்கள். அசுத்தமானதை அடக்கி வாழ முற்படும் பொழுது தீட்டுப்பட்டவர்களாக மாறிவிட்டார்கள்.

எனவே குற்றவாளிகள் என்று அவர்கள் கருதப்படுகின்றார்கள். பரிசுத்தராகிய தேவன் சங்கீதம் 101:6,7,8 ஆகிய வசனங்களில் கூறுவதை பாருங்கள். ''தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான். கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை. அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராதபடி வேர் அறுப்புண்டு போக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன்.'' இதில் 'அதிகாலமே' என்று வரும் வார்த்தை இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையை குறிக்கும் வார்த்தையாகும். கிருபாதார பலியான இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு தீட்டு இல்லாத இதயம் பெற்றவர்கள் மட்டுமே பரம கானானில் பிரவேசிப்பார்கள். ''தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை'' என்று வெளிப்படுத்தின விசேஷம் 21:27-ல் பார்க்கிறோம். பரிசுத்தராகிய தேவன் மனிதர்களை அசுத்தத்திற்கு அல்ல. பரிசுத்தத்திற்கே அழைக்கின்றார். அந்த அழைப்பை ஏற்றவர் இதயத்தில் தூய்மையானவர்கள். தேவாதி தேவனை தரிசித்து மகிழப்போகிறவர்கள்!

பதறி ஆணை இடும் குற்றம்

மனிதர் பதறி ஆணையிடும் எந்த காரியத்திலானாலும் ஒருவன் தீமை செய்கிறதற்காவது, நன்மை செய்கிறதற்காவது, தன் மனம் அறியாமல், தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டு, பின்பு, அவன் அதை அறிந்து கொண்டால் அதை குறித்து குற்றமுள்ளவனாவான். (லேவி.5:4)

லேவியராகமம் 5:1-4 வசனங்களில் 4 விதமான மனிதர்களைப் பார்க்கிறோம். முதல் மூன்று வசனங்களில் பேசும்படி எதிர்பார்க்கப்பட்டவர்கள் பேச முன்வரவில்லை என்று பார்த்தோம். 4-வது வசனத்தில் பேச வேண்டாதவன் மீறி பேசுகின்றதைப் பார்க்கின்றோம். சாட்சியாகிய ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டும், காது கேட்காதவன் போல் இருந்து விட்டதை முதல் வசனத்தில் நாம் பார்த்தோம். அசுத்தமான பிராணியைத் தொட்டவன் அறிக்கை செய்வதற்குப்பதில் அதனை அகத்தில் அடக்கி வைத்ததை 2-வது வசனத்தில் கண்டோம். அசுத்தமான ஓர் மனிதனை தொட்டவன் தொட்டதை அறிந்தும் சொல்வதை நிறுத்தி விட்டதை மூன்றாம் வசனத்தில் அறிந்தோம்.

நான்காவது வசனத்திலோ அமைதி காக்க வேண்டியவன் அறியாமல் பேசுகின்றான். அவசரத்தில் பேசுகிறான்; ஆத்திரத்தில் பேசுகின்றான். பேச வேண்டியவர் பேசவில்லை; பேச்சை கட்டுப்படுத்த வேண்டியவர் செய்யவில்லை. இருசாராரும் குற்றவாளிகள் என்று வேத புத்தகம் கூறுகிறது. முதல் மூன்று வசனங்களில் உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்ல வேண்டியவர் அப்படிச் சொல்லவில்லை. 4-வது வசனத்தில் அஞ்சி பேச வேண்டியவர் மிஞ்சி பேசுகின்றார். தீமையை கூட்டுகின்றார். நெருப்பை மூட்டுகின்றார். சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டை கொளுத்தி விடுகின்றது. மனிதரின் நாவும் ஓர் நெருப்புதான். (யாக். 3:5)

லேவியராகமம் 5:4-வது வசனத்தில் பார்க்கும் மனிதன் பதறும் ஓர் மனிதனாகக் காணப்படுகின்றான். பதறுவதற்கு காரணம் அவிசுவாசமே ஆகும். ஏசாயா. 28:16-ம் வசனம் கூறுவது போன்று விசுவாசிக்கிறவன் பதறான். நாம் பார்க்கும் இந்த மனிதனோ சிந்தித்துப் பேசுகிறவனாக இல்லாமல் பேசி விட்டு அதன் பின் சிந்திக்கிறவனாக மாறி விட்டான்.

பேசுவதற்கு முன் சிந்திப்பதில் அர்த்தம் இருக்கிறது. பேசி விட்டு சிந்திப்பதில் வருத்தமே இருக்கிறது. பதறியும் அலறியும் ஆணையிடும் மனிதனைத்தான் 4-வது வசனத்தில் நாம் பார்க்கிறோம். மனம் அறியாமல் ஆணையிட்டான் என்று அந்த வசனம் கூறுகின்றது. ஆணை என்பது இரண்டு வகைப்படும். தேவனுக்கு நேராக சொல்லும் ஆணை, மனிதனுக்கு நேராகச் சொல்லும் ஆணை. இரண்டு ஆணையிலும் இறுதியாகப் பெற்றது இதய வேதனைகளே ஆகும்.

நியாயாதிபதிகள் புத்தகத்தில் யெப்தா என்ற ஓர் தளபதி இருந்தான். அவர் ஓர் யுத்தம் செய்யச் சென்றான். யுத்தம் தொடுக்க சென்ற வேளையில் உணர்ச்சி வசப்பட்டான். பதறி ஓர் ஆணையிட்டான். நடக்க இருக்கும் யுத்தத்தில் தனக்கு வெற்றி கிடைக்கும் என்றால் தான் வீடு திரும்பும் பொழுது தன் கண்களில் முதல் முதல் படுகிறது எதுவோ அதை கடவுளுக்கு பலியாக செலுத்துவேன் என்பதே அந்த ஆணையாகும். யுத்தம் வெற்றி கண்டது. அவனும் வீடு நோக்கினான். அவன் நலமுடன் திரும்ப எதிர் நோக்கியிருந்த அவனது அன்பு மகள் முந்தி ஓடி வந்தாள். பதறி ஆணையிட்டவன் இப்பொழுது பதறினான்.

யெப்தா யுத்தத்தில் பதறவே இல்லை. சிறந்து போரிட்டான். இப்பொழுதோ பதறினான்; பெற்ற வெற்றி கசந்து விட்டது. இன்பம் துன்பமானது. அலறினான்! அங்கலாய்த்தான்! ''யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது, இதோ, அவன் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ்செய்து, அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள்; அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள்; அவளையல்லாமல் அவனுக்கு குமாரனும் இல்லை குமாரத்தியும் இல்லை. அவன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு; ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லி விட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது என்றான்'' என்று நியாயாதிபதிகள் 11:34,35-ல் பார்க்கிறோம் யெப்தா பதறி ஆணையிட்டான். பெற்ற மகளை தகனபலியிட்டான். அவன் இட்ட ஆணை கர்த்தர் விரும்பிய ஆணை அல்ல. அவன் செலுத்திய நரபலி பரிசுத்தர் ஏற்ற பலியும் அல்ல! சிந்தியாமல் பேசி விட்டான். பின்னர் மகளை சிந்தித்து சிந்தித்து வருந்தி விட்டான்.

பரிசுத்த மாற்கு என்பவர் எழுதிய சுவிசேஷத்திலும் நாம் ஓர் அரசனைக் காண்கின்றோம். ஏரோது என்ற அவன் தனது பிறந்த நாளில் ஓர் விழா கொண்டாடினான். அவனையும் அழைக்கப்பட்ட விருந்தினரையும் பிரியப்படுத்த அவனது சகோதரனின் மனைவியான ஏரோதியாளின் மகள் நடனம் ஆடினாள். நாட்டை ஆண்டவன் ஓர் நடனத்தால் ஆளப்பட்டான். உணர்ச்சி வசப்பட்டான். பதறி உளறினான். ''ஏரோதியாளின் குமாரத்தி சபை நடுவே வந்து நடனம் பண்ணி, ஏரோதுவையும் அவனேடேகூடப் பந்தியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தினாள். அப்பொழுது, ராஜா சிறுபெண்ணை நோக்கி: உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள். அதை உனக்குத் தருவேன் என்று சொன்னதுமல்லாமல் நீ என்னிடத்தில் எதைக் கேட்டாலும், அது என் ராஜ்யத்தில் பாதியானாலும், அதை உனக்குத் தருவேன் என்று அவளுக்கு ஆணையும் இட்டான்.'' அப்பொழுது அவள் வெளியே போய் நான் என்ன கேட்க வேண்டும் என்று தன் தாயினிடத்தில் கேட்டாள். அதற்கு அவள் யோவான் ஸ்நாகனுடைய தலையைக் கேள் என்றாள். உடனே அவள் இராஜாவினிடத்தில் சீக்கிரமாய் வந்து நீர் இப்பொழுதே ஒரு தாலந்தில் யோவான் ஸ்நாகனுடைய தலையை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள். அப்பொழுது இராஜா மிகுந்த துக்கம் அடைந்தான், ஆகிலும் ஆணையினிமித்தமும் கூட பந்தியிருந்தவர்களினிமித்தமும் அவளுக்கு அதை

மறுக்க மனதில்லாமல்; உடனே அவனுடைய தலையைக் கொண்டு வரும்படி சேவகனுக்கு கட்டளையிட்டு அனுப்பினான் என்று பரி. மாற்கு 6:22-25-ல் பார்க்கிறோம். பதறி விடுக்கும் ஆணைகளால் பாவங்களே பெருகுகின்றன. மனம் அறியாமல் இடும் ஆணைகள் சோகத்தில் முடிகின்றன. பரிசுத்த தேவனை நடுவாக வைத்து வாழும் ஜனங்களின் உதடுகள் பதறி ஆணையிடுவதற்கு அல்ல. அவரை புகழ்ந்து போற்ற உரித்தானவைகள் ஆகும். ஆனால் சொற்களின் மிகுதியினால் பாவங்கள் இல்லாமல் போகாது.

லேவியராகமம் 5:1-4 வசனங்களில் மீட்கப்பட்டவரின் பேச்சில் உண்மை இருக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு ஆகும். பரிசுத்தம், அன்பு, உண்மை ஆகிய மூன்றும் காக்கப்படும் பொழுது ஆண்டவரால் அவர்கள் காக்கப்பட இருக்கின்றார்கள். உண்மை பேச வேண்டும். உணர்ந்து பேச வேண்டும். உத்திரவாதத்துடன் பேச வேண்டும் என்ற மூன்றும், இந்த வசனங்களில், பரிசுத்தமாக்கப்படும் மக்களுக்கு பரிசுத்த தேவனால் தெளிவுப்படுத்தப் படுகின்றது. வாழ்க்கைப் பிரயாணம் வெற்றி காண, கானான் கண்டு களிகூர்ந்து மகிழ, உண்மை என்பது ஓர் ஊன்று கோலாக அவர்களுக்கு அமைய வேண்டும். செய்ய முடியாத ஆணைகளைச் சொல்ல வேண்டாம். முடிக்க முடியாத பொருத்தனைகளை ஏற்க வேண்டாம். நேர்ச்சை அல்ல, மன தூய்மை என்பது முக்கியம் என்றே பரிசுத்தர் கூறுகின்றார். கடவுளுக்கு பொருத்தனைகள் செய்தல் கடவுள் கூறியவைகள் அல்ல. மனிதன் உருவாக்கியதே ஆகும். தேவன் எதிப்பார்ப்பது பரிசுத்தமான ஓர் வாழ்வு மட்டுமே ஆகும். உணர்ச்சி வசப்பட்ட பொருத்தனைகள் அல்ல; உள்ளம் காணும் தூய்மையே கடவுளுக்கு ஏற்ற பொருத்தனைகள் ஆகும். பொருத்தனையை செய்து விட்டால் அதில் இருந்து பின் வாங்க முடியாது என்பதை வேத புத்தகத்தில் நாம் பார்க்கின்றோம். ''ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தை செய்யும்படி ஆணையிட்டு தன் ஆத்துமாவை நிபந்தனைகுட்படுத்திக் கொண்டாலும், அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்,'' என்று எண்ணாகமம் 30:2-ல் பார்க்கிறோம். பொருத்தனையை எதிர் பார்க்கிறவர் கடவுள் அல்ல. கர்த்தர் பொருத்தனை செய்யும்படி கூறவும் இல்லை. மனிதன் வலிய கர்த்தருக்கு ஓர் பொருத்தனை செய்து கொள்ளுகின்றான். பொருத்தனையை செய்து விட்டால் அதிலிருந்து மனிதன் பின் வாங்க முடியாது என்பதை இந்த வசனம் சுட்டி காட்டுகின்றது.

லேவியராகமம் 27-ம் அதிகாரத்தினை நாம் படிக்கும் பொழுது பொருத்தனைகள் செய்யும் மனிதர்களைப் பற்றி விவரமாக படிக்க இருக்கிறோம். உயர்ந்த தீர்மானங்கள் வேறு, பதறி வரும் பொருத்தனைகள் வேறு! மனம் அறியாமல் வரும் ஆணைகள் வேறே, மனம் உடைந்து வரும் பாவ அறிக்கைகள் வேறே! மனிதர்களை லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்குவது போன்று பரிசுத்தராகிய தேவனை மனிதன் பொருத்தனைகள் செய்து விலைக்கு வாங்க முடியாது. மனிதன் கடவுளை ஏய்த்து வாழவும் முடியாது. பரிசுத்தராகிய தேவன் அவரது சமூக பிரசன்னத்தில் வாழும் மீட்கப்பட்ட மக்களை மனம் பதறி பேச அனுமதிக்கவே இல்லை. வீண் பொருத்தனைகளை செய்ய விரும்பவே இல்லை. ''தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக. தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறது போல, வார்த்தைகளின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும். நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணி கொண்டால், அதை செலுத்த தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்து கொண்டதைச் செய். நீ நேர்ந்து கொண்டதை செய்யாமல்

போவதைப் பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம். உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடம் கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்கு முன் சொல்லாதே; தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்? அநேக சொப்பனங்கள் மாயையாய் இருப்பது போல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும்; ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு.'' என்று பிரசங்கி 5:2-7 வசனங்களில் கூறுகிறார்.

லேவியராகமம் 5:4-ல் உதடுகளினால் பதறி ஆணையிட்டான் என்று பார்க்கிறோம். உள்ளம் கலந்து கொள்ளாமல் உதட்டு அளவில் வரும் ஆணைகள் விருத்தசேதனம் இல்லாத உதடுகள் கூறும் ஆணைகள் என்றும் அறிகின்றோம். ஆபிரகாமின் உடன்படிக்கை விருத்த சேதனம் நடுவாக கொண்டது என்பதை நாம் அறிவோம். ஆதியாகம புத்தகத்தில் 17-ம் அதிகாரத்தில் அந்த உடன்படிக்கை அனுபவத்திற்குள் ஆபிரகாம் வந்தான். அதற்கு முன் அவன் உதடுகள் பொய் பேசின. ஆனால் விருத்தசேதன உடன்படிக்கை பெற்றபின் ஆபிரகாம் உணர்ந்து பேசினான், உள்ளதை பேசினான். மோசே ஆரம்பத்தில் உணர்ச்சிவசப்பட்ட ஓர் மனிதராகவே இருந்தார். அவசரப்பட்டு பேசினார். ஆத்திரப்பட்டு செயலாற்றினார். அழைப்பு பெற்ற பொழுது ஆண்டவரிடம் அவர் கூறியதை யாத்திராகமம் 6:12-ல் பார்க்கிறோம். ''நான் விருத்த சேதனம் இல்லாத உதடுகள் உள்ளவன்'' என்றார். கீழ்படியும் வாழ்க்கைக்குள் வந்தபின்னர் மோசே என்ற அந்த தேவனுடைய மனிதன் தேவனுடைய வீடு எங்கும் உண்மையுள்ளவராகவே இருந்தார். சீனாய் உடன்படிக்கைக்குள் வந்த மீட்கப்பட்ட மக்கள் உண்மை பேசினால் போதும் என்பதே கர்த்தரின் விருப்பமாகும். பதறி ஆணையிட வேண்டாம் என்று பழைய ஏற்பாட்டில் கர்த்தர் கூறினார். 'பொய் ஆணை' இட வேண்டாம் என்று புதிய ஏற்பாட்டில் இயேசு கூறினார்.

'மோசம் போகாதிருங்கள். ஆகாத சம்பாஷனைகள் நல் ஒழுக்கங்களைக் கெடுக்கும்' என்று பரி. பவுல் 1 கொரிந்தியர் 15:33-ம் வசனத்தில் கூறுகின்றார். அதன் சரியான பொருள், ஆகாத சம்பாஷனையில் நேரத்தை வீணாக்கும் எவருடனும் சேர்ந்து விடாதேயுங்கள். உங்கள் ஒழுக்கம் கெட்டுப்போகும் என்பதே ஆகும். லேவியராகம புத்தகம் பரிசுத்தமான வாழ்விற்கு பிரித்து எடுக்கப்பட்ட மக்களை அழைக்கின்றது. அவர்கள் காலத்தில் வாழ்ந்த கானானியர், மற்றும் அநேகர் பதறி ஆணையிட்டு, பெரும் பழிக்குள் விழுந்து கிடக்கின்றார்கள். அதனை எல்லாம் அறிந்த ஆண்டவர் அவரைப் பின்பற்றும் ஜனங்கள் அவரில் நிலைத்து நிற்க, வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானங்களும், பரிசுத்தருக்கு பிரியமானதாக இருக்க வேண்டும் என்று வாஞ்சிக்கின்றார்.

கேட்பதற்கு தீவிரமும், பேசுகிறதற்கு பொறுமையும் இல்லாத போது, வார்த்தையில் பெருக்கமும், பதட்டமும் தெரிகிறது. பின்னர் தெரியாமல் பேசி விட்டேனே என்ற துக்கம் வருகின்றது. பதறி ஆணையிட்டவன் பறி கொடுத்தான். யெப்தா தன் மகளை பறி கொடுத்தான். அவனுக்கும் அவள் கிட்டவில்லை. ஆண்டவரும் அதனை அங்கீகரிக்கவில்லை. அதுமட்டுமல்ல பதறி ஆணையிட்ட ஏரோது பெரும் பழிக்கு ஆளாக மாறி விட்டான். தூய்மையான யோவான் ஸ்நானகன் தலையை ஒரு தாம்பாளத்தில் வைத்து ஏரோது பரிசாகக் கொடுக்கும் அளவிற்கு தாயும் மகளும் சேர்ந்து கொண்டு அரசன் பதறி விட்ட ஆணையை துர்பிரயோகம் செய்து விட்டார்கள். ஏரோதின் பதறிய வார்த்தை ஓர் தூயவனை பறி கொடுக்க செய்தது. அந்த பழி ஏரோதின் குடும்பத்தை விட்டு நீங்கியதே இல்லை. அவனுடைய பிள்ளைகள் வாழ்ந்ததே இல்லை. அவசரத்திலும் ஆத்திரத்திலும்

பேசியவன், அன்பிற்கு உரியவர்களுடைய மனதை புண்படுத்தி விட்டவன், கொடுத்த வாக்குறுதிகளைக் காத்துக் கொள்ள வகை இல்லாமல் சிந்தித்து கொண்டு இருக்கின்றவன் பின்னர் வருந்தி விட்டால் வாழ்வதற்கு சிறந்த வாய்ப்புகள் உண்டு என்பதை வேத புத்தகம் கூறுகின்றது. அதனை லேவியராகமம் 5:5-13-வது வசனம் வரை அன்றுள்ள மக்களுக்கு ஆண்டவர் எடுத்து கூறினார்.

3.7 குற்ற நிவாரண பலி செலுத்தும் முறை

இப்படிப்பட்டவைகள் ஒன்றில், ஒருவன் குற்றமுள்ளவனாகும் போது, அவன் தான் செய்தது பாவம் என்று அறிக்கை இட்டு, தான் செய்த பாவத்துக்கு பாவநிவாரண பலியாக, ஆடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது, ஒரு பெண் குட்டியைக் குற்றநிவாரண பலியாக கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவர வேண்டும்; அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தை குறித்து அவனுக்காக பாவநிவிர்த்தி செய்யக்கடவன். ஆட்டு குட்டியை கொண்டுவர அவனுக்கு சக்தி இல்லாதிருந்தால், அவன் செய்த குற்றத்தின் நிமித்தம் இரண்டு காட்டு புறாக்களையாவது, இரண்டு புறா குஞ்சுகளையாவது, ஒன்றை பாவநிவாரண பலியாகவும் மற்றொன்றை சர்வாங்க தகனபலியாகவும், கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவர கடவன். அவைகளை ஆசாரியனிடத்தில் கொண்டு வருவானாக, அவன் பாவநிவாரண பலிக்கானதை முன்னே செலுத்தி, அதின் தலையை அதின் கழுத்தினிடத்தில் கிள்ளி, அதை இரண்டாக்காமல் வைத்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின் பக்கத்தில் தெளித்து, மீதியான இரத்தத்தை பலிபீடத்தின் அடியிலே வடியவிடுவானாக; இது பாவநிவாரண பலி. மற்றதை நியமத்தின்படியே அவன் தகனபலியாய் செலுத்த கடவன்; இவ்விதமாக அவன் செய்த பாவத்தை ஆசாரியன் நிவிர்த்தி செய்ய கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். இரண்டு காட்டு புறாக்களையாவது இரண்டு புறா குஞ்சுகளையாவது கொண்டு வர அவனுக்கு சக்தி இல்லாதிருறந்தால், பாவம் செய்தவன் பாவநிவாரணத்துக்காக ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை தன் காணிக்கையாக கொண்டுவருவானாக; அது பாவநிவாரண பலியாயிருப்பதினால் அதின்மேல் எண்ணெய் வார்க்காமலும் தூபவர்க்கம் போடாமலும் இருந்து, அதை ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும்; அதிலே ஆசாரியன் ஞாபகக்குறியான பங்காகத் தன் கைப்பிடி நிறைய எடுத்து, கர்த்தருக்கு இடும் தகனபலிகளைப்போல, பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்; இது பாவநிவாரணபலி. இவ்விதமாய் மேற்சொல்லிய காரியங்கள் ஒன்றில் அவன் செய்த பாவத்துக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும், மீதியானது போஜன பலியைப்போல ஆசாரியனைச் சேரும் என்றார். (லேவி. 5:5-13)

தவறு நடக்கையில் அதை பார்த்தும் நான் கூறாமல் இருந்து விட்டேனே என மனம் வருந்துகிறான். தீட்டானவைகளை தொட்டு தீட்டுள்ளவனானேன் என்பதை மறைத்து

விட்டேன் என உணருகிறான். பதறி ஆணையிட்டு விட்டேனே என மனம் மடிகிறான். யோசியாமல் பேசி விட்டேனே என்று யோசிக்கின்றான். சிந்தியாமல் ஆணையிட்டேனே என பின்னர் சிந்திக்கின்றான், வருந்துகின்றான், திருந்தி வாழ விரும்புகின்றான். வருந்தும் அவன் குற்றத்தை அவன் அறிக்கை செய்ய வேண்டும். குற்றம் உள்ளவன் என்பதை அவன் ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த இரண்டும் செய்ய அவன் தன்னைத் தாழ்த்த வேண்டும். அர்த்தம் இல்லாத வார்த்தைகளுக்கு காரணம் மனித கர்வங்களே ஆகும். ஆத்திரமான வார்த்தைகளுக்கு காரணம் மனித கோபங்களே ஆகும். எனவே தற்பெருமை, முற்கோபம் ஆகிய இரண்டும் அவனை விட்டு அகல வேண்டும். அவன் அவைகளை அறிக்கை செய்ய வேண்டும். பின்னர் முறைப்படி பலி செலுத்த வேண்டும். லேவி. 5:12-வது வசனம் கூறுவது போன்று அதனை ஓர் ஞாபகக்குறியாக அவன் வைத்து கொள்ள வேண்டும். இதுவரை அவன் வார்த்தையில் பிசகிய நாட்களை அவன் மறந்து விடாதபடிக்கு அவன் மனதில் அவைகள் பதிந்து இருக்க வேண்டும். அப்படி அவன் செய்து விட்டால் அவன் அறிவினால் பேசுகிறவனாக இல்லாமல் ஞானமாய் பேசுகிறவனாக மாறிவிடுவான். அவசரத்தில் பேசுகிறவனாக இல்லாமல் அமர்ந்திருந்து பேசுகிறவனாக மாறிவிடுவான். உணர்ச்சி வசப்பட்டு பேசுகிறவனாக இல்லாமல் உணர்ந்து பேசுகிறவனாக மாறிவிடுவான். பாவத்தை ஒப்புக் கொண்டான். பாவத்தை அறிக்கை செய்தான். கர்த்தருக்கு ஏற்ற பலி செலுத்தி விட்டான். அவன் ஞானத்துடன் வாழ்ந்து நிதானத்துடன் பேச, வாழ தீர்மானித்து விட்டான். அது அவனையும் அவன் குடும்பத்தையும் மகிழச் செய்யும் ஓர் சிறந்த தீர்மானம் ஆகும். புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டும் என்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறியதாயும் இருப்பதாக என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார். (கொலோ.4:5 ,6) கிருபை என்பது எப்படி பேசுகிறோம் என்பதைக் குறிக்கின்றது. உப்பு என்பது என்ன பேசுகிறோம் என்பதைக் குறிக்கின்றது.

தேவனுக்கு விரோதமான குற்றங்களுக்காக குற்ற நிவாரண பலி

தகனபலி, போஜனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி என்ற 4 பலிகளையும் பற்றி நாம் பார்த்தோம். அடுத்தபடியாக 5-வது பலியான குற்றநிவாரண பலிக்கும் பாவநிவாரண பலிக்கும் பிரமாணம் ஒரே பிரமாணம். ''பாவ நிவாரணபலி எப்படியோ குற்ற நிவாரண பலியும் அப்படியே. அவ்விரண்டிற்கும் பிரமாணம் ஒன்றே'' என்று லேவியராகமம் 7:7-ல் பார்க்கிறோம். பிரமாணம் ஒன்றாக இருந்தாலும் சில விதிமுறைகள் வித்தியாசமானதாகவும் இருக்கின்றது. பாவ நிவாரணபலி, குற்ற நிவாரணபலி ஆகிய இரண்டிலும் பலி செலுத்தும் முறைகள் வித்தியாசமாக இருக்கின்றன. பலி செலுத்தப்படும் உயிரினங்கள் வித்தியாசமாக இருக்கின்றன. பலி செலுத்தும் சூழ்நிலை வித்தியாசமாக தெரிகின்றது. குற்ற நிவாரணபலியில் பலியாகும் மிருகம் ஒரு ஆட்டுக் கடாவாக இருக்க வேண்டும் என்று லேவியராகமம் 5:14-ம் வசனத்திலும் 19:21,22-வது வசனத்திலும் கூறப்பட்டு உள்ளது. அல்லது ஒரு ஆட்டுக் குட்டியாக இருக்க வேண்டும் என்று லேவியராகமம் 14:12 வசனத்திலும் எண்ணாகம் 6:12-லும் பார்க்கிறோம்.

பாவம் செய்த பின்பு ஏற்படும் குற்ற உணர்வு மனிதனை அமைதி அற்றவனாக மாற்றி விடுகிறது. செய்த பாவத்தை ஒருவேளை அவன் மறந்து போகலாம். ஆனால் பாவத்தின் சாபமாகிய குற்றம் அவனை தொடர்ந்து கொண்டே இருக்கும். பாவத்தின் குற்றம் என்பது இதயத்தில் ஏற்பட்டுள்ள ஆறாத புண். இதுதான் பாவம் தந்த வெகுமதி. இந்த குற்ற

உணர்விற்கு நிவாரணம் தேடும் ஜனங்களுக்கு கர்த்தர் தந்த குற்ற நிவாரண பலி, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் முன் அடையாளமாக இருக்கிறது.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: (லேவி. 5:14)

லேவியராகமம் 1:1-ல் பரிசுத்தராகிய தேவன் மோசேயிடம் பேச துவங்கியதை நாம் பார்த்தோம். அந்த பேச்சு இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

ஒருவன் கர்த்தருக் உரிய பரிசுத்தமானவைகளில் குற்றம் செய்து, அறியாமையினால் பாவத்துக்கு உட்பட்டால், அவன் தன் குற்றத்தின் நிமித்தம் பரிசுத்த ஸ்தலத்து சேக்கல் கணக்கின்படியே, நீ அவன்மேல் சுமத்தும் அபராதம் எவ்வளவோ, அவ்வளவு வெள்ளி சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டு கடாவை குற்ற நிவாரண பலியாக கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, பரிசுத்தமானதை குறித்து தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தை செலுத்தி, அதினோடு ஐந்தில் ஒரு பங்கை அதிகமாக கூட்டி, ஆசாரியனுக்கு கொடுப்பானாக; குற்றநிவாரண பலியாகிய ஆட்டு கடாவினாலே அவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். (லேவி. 5:15-16)

15-ம் வசனம் ''ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றம் செய்து'' என்று துவங்குவதை நாம் பார்க்கின்றோம். அந்த குற்றம் இரண்டு விதமான பாவங்களை குறிக்கும் குற்றமாகும். ஒன்று, செய்யத்தக்கதை செய்யாமல் இருப்பது ஆகும். செய்யத்தக்கதை செய்யாமல் இருப்பது பகிரங்கமாக, வெளி உலகத்திற்கு தெரிந்த பாவம் ஆகும். அடுத்தது, செய்யத்தகாததை செய்வது ஆகும். செய்யத்தகாததை செய்வது இரகசிய பாவங்கள் ஆகும். செய்யத்தக்கதை செய்யாமல் போவது பற்றி லேவியராகமம் 5:15,16-ம் வசனங்களும், செய்ய தகாததை செய்வதை குறித்து லேவியராகமம் 5:17,18-ம் வசனங்களும் கூறுகின்றன.

செய்யத்தகாததை செய்ததற்காக குற்ற நிவாரணபலி

கர்த்தருக்கு உரிய பரிசுத்தமானவை என்று 15-வது வசனத்தில் நாம் பார்ப்பது தேவன் தங்கும் வாசஸ்தலத்தையும், தேவ வாசஸ்தலத்தில் பணி புரிய பரிசுத்தமாக்கப்பட்ட ஆசாரியர்களையும் குறிக்கும். தேவ வாசஸ்தலத்திற்கு எதிராகவும், ஆசாரியர்களுக்கு எதிராகவும் சபை மக்கள் செய்யத்தக்கதைச் செய்யாமலும், செய்யத்தகாததை செய்வதுமான பாவங்களை குற்றம் என்பதின் கீழாக வேத புத்தகம் நமக்கு படைக்கின்றது.

செய்யத்தக்கதைச் செய்யாமல் இருப்பது வெளி உலகத்திற்கு தெரிந்த பாவங்களாகும் என்று பார்த்தோம். தேவனுடையதை தேவனுக்கும் இராயனுடையதை இராயனுக்கும் செலுத்த வேண்டும். கர்த்தரின் பணிக்கும், ஆலயத்திற்கும் செய்ய வேண்டியதில் பின் தங்குகிறவனை 'சபிக்கப்பட்டவன்' என்று மல்கியா அழைக்கிறார். (மல்.3:8)

ஒருவன் செய்ய தகாது என்று கர்த்தருடைய கட்டளைகளினால் விலக்கப்பட்ட யாதொன்றை செய்து பாவத்துக்கு உட்பட்டால், அதை அவன் அறியாமையினால் செய்தாலும், அவன் குற்றமுள்ளவனாய் இருந்து,

தன் அக்கிரமத்தை சுமப்பான். அதினிமித்தம் அவன் குற்றநிவாரண பலியாக, உன் மதிப்புக்கு சரியான பழுதற்ற ஒரு ஆட்டு கடாவை ஆசாரியனிடத்தில் கொண்டு வருவானாக; அவன் அறியாமல் செய்த தப்பிதத்தை ஆசாரியன் அவனுக்காக நிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். (லேவி. 5:17-18)

செய்ய வேண்டியவைகளை செய்யாமல் போவதால் ஏற்படும் குற்றத்தில் முதலாவது இடம் பெறுவது தேவாலயத்திற்கு செலுத்த வேண்டிய தசமபாகத்தை செலுத்தாமல் நிறுத்தி விடுவது ஆகும். தசம பாகம் என்ற வார்த்தை முதன் முதலாக வேத புத்தகத்தில் ஆதியாகமம். 14:20-ல் விசுவாசிகளின் தகப்பனான ஆபிரகாம், அரசனும் ஆசாரியனுமான மெல்கிசேதேக் என்பவருக்கு கொடுத்த காணிக்கையைக் குறித்து வந்தது. ''இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்'' என்று பார்க்கிறோம். ''தேவரீர் எனக்கு தரும் எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்துவேன்'' என்று யாக்கோபு ஜெபிப்பதை ஆதியாகமம். 28:22-ல் பார்க்கின்றோம். அதுவரை தனிநபர் விரும்பி செய்து வந்ததை பரிசுத்த சபையாரின் பிரமாணங்களில் ஒன்றாக மோசேயின் காலத்தில் மாற்ற பட்டு விட்டதை நாம் லேவியராகமத்தில் பார்க்கின்றோம். சபை மக்கள் ஆராதிக்க செல்லுகையில் ஆராதனை நடத்தும் ஆசாரியர்கள் கையில் தசமபாகம் கொடுப்பது, கிறிஸ்துவுக்கு முன் சுமார் 2000 வருட காலத்தை ஒட்டி வாழ்ந்த ஆபிரகாமின் காலம் முதல் அறிமுகமாக்கப்பட்டது. தசமபாகம் என்பது வருமானத்தில் பத்தில் ஒன்று என்பது ஆகும். அது ஓர் பழமையான காணிக்கையாகும். மேலும் மிக பரிசுத்தமான காணிக்கையும் ஆகும். ஆபிரகாமை போல இடம் கொள்ளாமல் போகும் அளவு ஆசீர்வாதம் பெற்று கொள்ளவும் யாக்கோபை போன்று குடும்ப செல்வங்கள் பெற்று வாழவும் மீட்கப்பட்டவர்களை போன்று அனைத்தும் கொடுத்தவருக்கு நன்றி நவிலவும், ஆராதனை செய்யும் இடத்தையும், ஆராதனை நடத்தும் ஆசாரியரையும் மதிக்கின்றேன், மரியாதை செய்கின்றேன் என்பதை தெரியப்படுத்தும் காணிக்கையாகவும் எடுத்து கொடுப்பது அமைந்து இருக்கின்றது.

செய்ய வேண்டியவைகளை செய்யாததற்கு குற்ற நிவாரண பலி

மூன்று விதமான காணிக்கைகளை இரட்சிக்கப்பட்டவர்கள், மோசேயின் பிரமாணத்தின்படி கொடுத்து வந்தார்கள். முதலாவது பூமியின் விளைச்சல் அனைத்திலும் முறைப்படி தசம பாகம் செலுத்தினார்கள். இதனை லேவியராகமம். 27:30,31-வது வசனங்களிலும், எண்ணாகமம். 18:21-29 வசனங்களிலும் நாம் பார்க்கின்றோம். லேவியர்கள் பெற்ற தசம பாகத்தின் மொத்த தொகையில் பத்தில் ஒன்று எடுத்து, அதனை ஆசாரியர்களுக்கு கொடுத்தார்கள். ''இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்பு கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்.'' என்று எண்ணாகமம் 18:21-ல் பார்க்கிறோம். மீட்கப்பட்டவர்கள் செலுத்திய இரண்டாவது காணிக்கை உற்சவகால காணிக்கையாகும். அது உபாகமம் 14:22-27 வசனங்களில் கூறப்பட்டு உள்ளது.

மூன்றாவது அவர்கள் செலுத்திய காணிக்கை சமூக நலன் பற்றிய காணிக்கை ஆகும். ஏற்ற பொருளாதார வசதி இல்லாதவர்களை ஆதரிக்க தக்கதாக கொடுக்கப்பட்ட காணிக்கை இதுவாகும். இதனை பற்றி உபாகமம் 14:28,29 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கலாம்.

தசம பாகம் கொடுப்பதின் மூலம் அதனைப் படைக்கின்றவன் தான் எப்பொழுதும் கர்த்தருக்குப் பயந்து இருக்கும் பழக்கம் உடையவன் என்பதை காட்டுகிறான் என்று உபாகமம் 14:22-ம் வசனம் கூறுகின்றது. அப்படி அவன் செய்யும் பொழுது உன் கை செய்யும் வேலைகளில் எல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார் என்ற வாக்கு தத்தம் அவனுக்கு கிடைக்கின்றது. அந்த வாக்குத்தத்தம் உபாகமம் 14:29-ல் கூறப்பட்டு உள்ளது. எனவே லேவியராகமம் 5:15-வது வசனத்தில் கர்த்தருக்கு உரிய பரிசுத்தமானவைகளில் தசம பாகம் இணைக்கப்பட்டு உள்ளது. ஆராதனைக்கு சென்று மீட்கப்பட்ட சபையார் அதனை ஆசாரியர்களிடம் செலுத்த வேண்டும் என்றும் அப்படி செய்யத் தவறி விட்டால் அது செய்யத்தக்கவைகளை செய்யாமல் இருந்து விட்ட பாவங்களில் ஒன்றாக மாறி விடுகின்றது.

இரண்டாவது வரும் பாவம் முதற்பலன்களை வெள்ளாட்டு பாலில் சமைப்பது ஆகும். அது கானானியரின் வழி பாட்டு முறை ஆகும். பரிசுத்தரை ஆராதிக்கும் முறை அவருடைய வாயின் வார்த்தை கூறியதாக மட்டுமே இருக்க முடியும் என்றும் பிற முறைகளை ஆராதனை முறைகளில் புகுத்த முடியாது என்றும், யாத்திராகமம் 34:26-வது வசனத்தை படிக்கும் பொழுது நாம் பார்த்தோம்.

மூன்றாவது இடம் பெறும் பாவம் தலையீற்றுகளை கர்த்தருக்கு என்று பிரதிஷ்டை செய்யாமல் தங்களுடைய வேலைகளில் அவைகளை பயன்படுத்துவதும், அதன் மயிர்களை கத்தரிப்பதும் ஆகும். இது உபாகமம் 15:19-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. எகிப்தின் முதற்பேறனைத்தையும் சங்காரம் செய்து இஸ்ரவேலரை மீட்டுக் கொண்ட ''கர்த்தர் மோசேயை நோக்கி இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருக ஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது என்றார்'' (யாத். 13:1,2).

செய்ய தகாததை செய்யும் பாவங்கள் உலகத்திற்கு தெரியாத பாவங்கள் ஆகும். 2 நாளாகமம் 26:16-ம் வசனத்தில், உசியா என்ற அரசனுக்கு இதயத்தில் வந்த மன மேட்டிமை குறிப்பிடப்பட்டுள்ளது. மிக மிக பணிவுடன் பட்டத்து அரசனாக மாறிய அவன் பலப்பட்டபோது மனம் மேட்டிமை ஆனான் என்று தேவ வசனம் கூறுகின்றது. ஆசாரியரையும் மீறி ஆராதனை நடத்த ஆலயத்திற்குள் துணிகரமாக நுழைந்தான். தேவனுடைய பிரதிநிதிகளான ஆசாரியர்களை அவதூறாக பேசினான். அதன் விளைவாக அவனுடைய நெற்றியில் குஷ்டம் கண்டான். தலைவன் செய்யும் தவறை அது சுட்டி காட்டுகின்றது. தேவ ஆலோசனையை விட்டு, பிலேயாம் போன்றவரின் ஆலோசனைக்கு மீட்கப்பட்டவர் செவி சாய்த்து, கர்த்தருக்கு துரோகம் செய்வது செய்ய தகாதவைகளை செய்யும் பாவங்களில் ஒன்று என்று எண்ணாகமம் 31:16-வது வசனத்திலே நாம் பார்க்கின்றோம். பிரித்து எடுக்கப்பட்டவர்கள், மற்றவர்கள் கூறும் ஆலோசனைகளின்படி நடக்க அழைக்கப்பட்டவர்கள் அல்ல. எண்ணாகமம் 5:12,27 ஆகிய வசனங்களில், பிறர் முகம் பார்த்து கணவனுக்கு துரோகம் செய்யும் ஸ்திரீயின் வீழ்ச்சியைப் பற்றி கூறப்பட்டு உள்ளது. அது மீட்கப்பட்டவர் குடும்ப வாழ்வில் இடம் பெறும் தவறு ஆகும். திருமணமான ஸ்திரீ செய்ய தகாததை செய்த பாவம் ஆகும். ஓர் சமூகமாக வாழ அழைக்கப்பட்ட அவர்கள் நடுவில் ஏதாவது பொருட்களை ஒருவர் திருடி விட்டால் அவரும் செய்யத் தகாததைச் செய்து விடுகின்றார் என்று யோசுவா 7:1-ல் பார்க்கின்றோம்.

இது குற்றநிவாரண பலி; அவன் கர்த்தருக்கு விரோதமாய் குற்றம் செய்தான் என்பது நிச்சயம் என்றார். (லேவி. 5:19)

குற்றநிவாரணபலி ஆராதனை முறைமை, மற்ற பலிகளின் முறைமையைவிட மிகச் சுருக்கமாகவே லேவியராகமம் 5:1-19 வசனங்களிலும் 7:1-7 வசனங்களிலும் கூறப்பட்டு உள்ளது. பலி செலுத்த வருகிறவர் பலியுடன் வருகின்றார். பலிமுறை துவங்குவதற்கு முன்னர் குற்றத்தினை அவர் ஒப்புக்கொண்டு அறிக்கை செய்து விடுவது அவசியம் ஆகும். ''அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை அறிக்கையிடக் கடவர்கள்'' என்று எண்ணாகமம் 5:7-வது வசனம் கூறுகின்றது. மற்ற பலிகளில் செய்யப்படுவது போன்று, பலியின் இரத்தம் பலிபீடத்தின் கொம்புகளில் பூசப்படவில்லை. அதன் சுற்று சுவர்களில் தெளிக்கப்பட்டது என்று லேவியராகமம் 7:2-வது வசனம் கூறுகின்றது. தொடர்ந்து குற்றம் செய்ய தூண்டும் உள்ளிந்திரியங்களை சுட்டு எரிக்கின்றார்கள். இதனை லேவியராகமம் 7:3-5 வசனங்களில் நாம் பார்க்கின்றோம். பலியின் மீதி பாகங்கள் ஆசாரியருக்கு உணவாக கொடுக்கப்படுகின்றது. இந்த இரு பாவங்களிலும் நஷ்ட ஈடு செலுத்தும் முறையும் அமுல் படுத்தப்படுகின்றது. யாத்திராகமம் 22:1-ம் வசனத்தில் நஷ்ட ஈடு கொடுப்பது அறிமுகம் செய்யப்பட்டது. ''திருடன் கண்டுபிடிக்கப்பட்டால் ஏழு மடங்கு கொடுத்துத் தீர வேண்டும். தன் வீட்டில் உள்ள பொருள்களையெல்லாம் கொடுக்க வேண்டியதாகும்.'' என்று நீதிமொழிகள் 6:31-ல் பார்க்கிறோம். பரி. லூக்கா 19:8-ல் நாலத்தனையாக செலுத்த சகேயு ஒப்புக் கொள்ளுகிறான். பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கு என்று லேவியராகமம் 5:15-வது வசனத்தில் ஓர் சொல் வருகின்றது. யாத்திராகமம் 30:13-ல் பரிசுத்த ஸ்தலத்து சேக்கல் கணக்கின்படி என்று அறிமுகப்படுத்தப்பட்டதை நாம் பார்த்தோம். ஆலயத்தின் வரவு செலவுகள் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கு முறையில் மட்டுமே எழுதப்பட்டது. வர்த்தகத்தில் பணத்தின் மதிப்பு கூடவும் குறையவும் செய்யும். ஆகையால் ஆலயத்தின் வரவு செலவுகளை அது பாதிக்காமல் இருக்க தக்கதாக பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கிட்டபடியே ஆலயத்தின் வரவு செலவுகள் இடம் பெற்றன. இதனை யாத்திராகமம் 38:24; லேவியராகமம் 5:15; 27:25 எண்ணாகமம் 3:47; 7:13 ஆகிய வசனங்களிலும் நாம் பார்க்கலாம்.

குற்றநிவாரணபலி மனசாட்சியை சார்ந்த பலியாகும். செய்யத்தக்கதை செய்யவில்லை செய்யத்தகாததை செய்து விட்டான். உயர்ந்த விருப்பங்கள், ஆனால் தாழ்ந்த செய்கைகள். தரம் நிறைந்த தீர்மானங்கள், ஆனால் தரம் கெட்ட செயலாற்றல்கள். இவ்வித சூழ்நிலையில் மனிதனுக்கும் மனசாட்சிக்கும் இடைவிடாத யுத்தம் இடம் பெறுகிறது. செய்ய விரும்புகின்றவைகளை செய்ய முடியவில்லை. செய்ய விரும்பாதவைகள் செய்யப்படுகின்றன என்று பரிசுத்த பவுல் கூறுவதை ரோமர் நிரூபம் 7-வது அதிகாரத்தில் பார்க்கிறோம். அந்த அகப்போராட்டம் பவுல் என்ற ஒரே ஒரு தனி மனிதனின் அகப்போராட்டம் மட்டும் அல்ல; உலகத்தில் அனைத்து மனிதரின் மனக்கலக்கமும் அதுவே ஆகும். அன்றைய தினத்திலே அதற்கு பரிகாரமாக ஆட்டுக்குட்டி ஒன்று குற்ற நிவாரண பலியாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

செய்யத்தக்கதை செய்யாமல், செய்யத்தகாததை செய்யும் எவருக்கும் இன்று இயேசு கிறிஸ்து, குற்றநிவாரண பலியாக தன்னைத் தத்தம் செய்து விட்டார். ''கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும் போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.'' என்று ஏசாயா 53:10-ல் பார்க்கிறோம். அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும் போது அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாக இருப்பார் என்று

எழுதப்பட்டு உள்ளது. இயேசுவை தங்கள் குற்ற நிவாரண பலியாகக் கண்டவர்கள் செய்யத்தக்கவைகளை மட்டுமே செய்வார்கள். செய்யத் தகாதவைகளை செய்யவே மாட்டார்கள்.

லேவியராகம புத்தகம் பரிசுத்தம், உண்மை, அன்பு ஆகிய மூன்றையும் அஸ்திபாரமாக பெற்று, பரிசுத்த சபையாராகிய ஜனங்கள் வாழ வேண்டும், வளர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. ''உன்னில் நீ அன்பு கூறுவது போல், பிறனிலும் அன்பு கூறுவாயாக'' என்று யாத்திராகமம் 19:18-ல் கூறப்பட்டுள்ளதை மீட்கப்பட்டவர் கடைப்பிடிக்க வேண்டும் என்று லேவியராகமம் புத்தகம் ஏவி எழுப்புகின்றது. பொய் பேசுவதும், வஞ்சிப்பதும், திருடுவதுமான சமூக சந்தோஷத்தை பாதிக்கும் எதையும் அவர் தவிர்த்து வாழ வேண்டும் என்று லேவியராகம புத்தகம் எதிர்பார்க்கின்றது. உண்மை உள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கம் உள்ளவைகள் எவைகளோ, நீதி உள்ளவைகள் எவைகளோ, கற்பு உள்ளவைகள் எவைகளோ, அன்பு உள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தி உள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டு இருக்கின்றவர்களாக மீட்கப்பட்டவர்கள் மாற வேண்டும் என்பதே வேத புத்தகத்தின் எதிர்பார்ப்பு (பிலிப்பியர். 4:8)

3.8 அயலானுக்கு விரோதமாக செய்த குற்றங்களுக்காக நிவாரண பலி

லேவியராகமம் 5:14-19 வரை உள்ள வசனங்களில் பரிசுத்த ஸ்தலத்திற்கு எதிராக மனிதன் செய்யும் தவறுகளை நாம் பார்த்தோம். லேவியராகமம் 6:1-7 வசனங்களில் மனிதன் அடுத்த மனிதனுக்கு எதிராகச் செய்யும் குற்றங்களைக் காண்கின்றோம். பத்து கற்பனைகளில் முதல் ஐந்து கற்பனைகள் தேவனுக்கு எதிராக மனிதன் செய்யும் குற்றங்கள் ஆகும். அடுத்த ஐந்து கற்பனைகள் மனிதன் மனிதனுக்கு எதிராக செய்யும் குற்றங்கள் ஆகும். குற்ற நிவாரணபலி என்பது பத்து கற்பனைகளுக்கும் ஓர் காவலாளி போன்று நிற்கின்றது. தேவ வாசஸ்தலத்தை மனதார நேசிக்காத மனிதனை 5:14-19 வசனங்களில் நாம் பார்த்தது போல தன்னை போல் பிறனை நேசியாத ஒரு மனிதனை 6:1-7 வசனங்களில் நாம் பார்க்கின்றோம். அவன் பிறனுக்கு எதிராக செய்த ஐந்து குற்றங்களை 6:2,3 ஆகிய வசனங்கள் ஒன்று ஒன்றாக எடுத்து கூறுகின்றன.

நம்பிக்கை துரோகம்:

> ***பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்து, தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலாவது, கொடுக்கல் வாங்கலிலாவது, தன் அயலானுக்கு மாறாட்டம் பண்ணி, அல்லது ஒரு வஸ்துவை பலாத்காரமாய் பறித்து கொண்டு, அல்லது தன் அயலானுக்கு இடுக்கண் செய்து, அல்லது காணாமல் போனதை கண்டடைந்தும் அதை மறுதலித்து, அதை குறித்து பொய்யாணை இட்டு, மனிதர் செய்யும் இவை முதலான யாதொரு காரியத்தில் பாவம் செய்தானேயாகில், (லேவி. 6:1-3)***

அவன் செய்த முதலாவது குற்றம், தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளை அநியாயம் செய்து அபகரித்து கொண்டது ஆகும். வெளியூர் சென்ற ஒருவன் தனது நம்பிக்கைக்கு உரிய நண்பன் ஒருவனிடம் தனது பொருட்களை ஒப்புவித்து சென்றான்.

'ஒப்புவித்தல்' என்ற வார்த்தைக்கு எபிரேய மொழியில் இரண்டு பொருள் உண்டு. ஒன்று நிர்வாகத்தை ஒப்புவித்தல்; அடுத்தது உடமைகளை ஒப்புவித்தல் என்பதாகும்.

ஆதியாகம புத்தகத்தில், போத்திபார் என்ற ஒரு பெரிய மனிதன் தன் வீட்டு நிர்வாகத்தை யோசேப்பினிடம் நம்பி ஒப்புவித்தான். தொடர்ந்து எகிப்து தேசத்து அரசன் நாட்டு நிர்வாகத்தை நம்பி யோசேப்பினிடம் ஒப்புவித்தான். புதிய ஏற்பாட்டில் பரி. பவுல் தனது உடன் ஊழியன் தீமோத்தேயு என்பவரிடம் ''உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நற்பொருளை காத்து கொள்'' என்று கூறுவதை 2 தீமோ. 1:14-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். ''உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்து கொள்'' என்று பார்க்கிறோம். லேவியராகமம் 6:2-வது வசனத்தில் 'ஒப்புவிக்கப்பட்ட நற்பொருள்' என்று வரும் எபிரேய வார்த்தையும் 2 தீமோத்தேயு 1:14-ம் வசனத்தில் ''ஒப்புவிக்கப்பட்ட'' என்று பவுல் எழுதும் கிரேக்க வார்த்தையும் ஒரே பொருள் உடையதாகவே இருக்கின்றது.

நிர்வாக பொறுப்புகளை ஒப்புவித்தல் அல்லது சொந்த உடைமைகளை ஒப்புவித்தல் என்பது லேவியராகமம் 6:2-ல் 'ஒப்புவித்தான்' என்ற வார்த்தையின் பொருள்கள் ஆகும். அவ்விதமான ஒப்புவிப்புகள் அவசரத்தில் இடம் பெறும் ஒப்புவிப்புகள் அல்ல. அநேக நாட்கள் யோசித்து, வீட்டில் அனைவருடனும் கலந்து நம்ப தகுந்தவன் என அறிந்து ஒப்புவித்து செல்லுதல் ஆகும். லேவியராகமம் 6:2-ல் நம்பிக்கைக்கு உரியவனிடம் உடமைகள் ஒப்புவிக்கப்பட்டன. ஒப்புவித்ததற்கு எவ்வித சான்றும் பெற்று கொள்ளவில்லை. நம்பிக்கை ஒன்றே சான்றாக அமைந்தது. நம்பி கொடுத்தவன், வெளியூர் சென்று திரும்பி வரும் பொழுது, நம்பியவன் துரோகம் செய்தான். ''அநியாயம் செய்து தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளை அபகரித்தான்.''

கொடுக்கல் வாங்கலில் மாறாட்டம்:

நம்பிக்கைத் துரோகம் செய்த அந்த மனிதன் செய்த இரண்டாவது குற்றம் என்னவென்றால் கொடுக்கல் வாங்கலில் அயலானுக்கு மாறாட்டம் பண்ணினான் என்று கூறப்பட்டு உள்ளது. கொடுக்கல் வாங்கல் என்பது ஓர் வர்த்தக சொல் ஆகும். கொடுப்பதை குறைத்து கொடுக்கின்றவனாகவும், வாங்குவதை கூட்டி வாங்குகின்றவனாகவும் அவன் காணப்படுகின்றான். அயலானுக்கு மாறாட்டம் பண்ணினான் என்று எழுதப்பட்டு இருக்கின்றது. அயலான் என்பது இனம் தெரியாதவன் அல்ல, வழக்கமாக அவனிடம் வாங்க வருகின்றவன். மாறாட்டம் என்பதின் சரியான மொழி பெயர்ப்பு வஞ்சித்தல், 'வாயினால் வஞ்சகமாக பேசுதல்' என்பதாகும். ''உன் உதடுகளினால் வஞ்சகம் பேசாதே'' என்று நீதிமொழிகள் 24:28-ம் வசனம் கூறுகின்றது. ''நீங்கள் களவு செய்யாமலும், வஞ்சனை பண்ணாமலும் ஒருவருக்கு ஒருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்'' என்று லேவியராகமம் 19:11-ம் வசனத்தில் நாம் பார்க்கலாம். நீதிமொழிகள் 13:11-ல் ''வஞ்சனையால் தேடின பொருள் குறைந்து போகும். கைப்பாடாய் சேர்க்கிறவனோ விருத்தி அடைவான்.'' என்று கூறுகின்றது.

பலவந்தமான அபகரிப்பு:

முதலாவது நம்பிக்கைக்கு துரோகம் செய்தான். இரண்டாவது அயலானுக்கு கொடுக்கல் வாங்கலில் மாறாட்டம் செய்தான். அவன் செய்த மூன்றாவது குற்றம்

பலாத்காரமாக பிறனின் பொருட்களை பறித்து கொண்டான். அதாவது பணம், பதவி என்ற ஆயுதங்களை பயன்படுத்தி, பிறரின் உடமைகளை தனதாக்கி கொண்டான். 1 இராஜாக்களின் புத்தகத்தில் ஒரு அரசன், நாபோத் என்ற தனது பிரஜையின் நிலத்தை தனதாக்கி கொள்ள விரும்பினான். அரசனும் அரசியும் பலாத்காரமாக அந்த நிலத்தை எடுத்து கொண்ட விபரத்தை 1 இராஜாக்கள் 21:7-10 வசனங்களில் நாம் பார்க்கலாம். ''அப்பொழுது அவன் மனைவியாகிய யேசபேல் அவனை நோக்கி: நீர் இப்பொழுது இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிறவர் அல்லவா? நீர் எழுந்து போஜனம் பண்ணி, மனமகிழ்ச்சியாயிரும்; யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை நான் உமக்குக் கொடுப்பேன் என்று சொன்னாள். அவள் ஆகாபின் பெயரால் நிரூபங்களை எழுதி, அவன் முத்திரையை அவைகளுக்கு போட்டு, அந்த நிரூபங்களை நாபோத் இருக்கும் பட்டணத்தில் அவனோடே குடியிருக்கிற மூப்பரிடத்துக்கும் பெரியோரிடத்துக்கும் அனுப்பினாள். அந்த நிரூபங்களில் அவள் எழுதினது என்னவென்றால்: நீங்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி, நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்தி, தேவனையும் ராஜாவையும் தூஷித்தாய் என்று அவன்மேல் சாட்சி சொல்லுகிற பேலியாளின் மக்களாகிய இரண்டு பேரை அவனுக்கு எதிராக நிறுத்தி, அவனை வெளியே கொண்டு போய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்கள் என்று எழுதினாள்.'' என்று பார்க்கிறோம்.

பிறருடைய பதவிகள், உத்தியோகங்கள், உயர்வுகள், சொத்துக்கள், சம்பாத்தியங்கள், பொருட்கள் எதையும் பலாத்காரமாக பறித்து கொள்ளுகிறதை பரிசுத்தராகிய தேவன் அனுமதிப்பதே இல்லை. ''சிலர் எல்லைக்கல்லை மாற்றி, மந்தைகளை பலாத்காரமாக பட்சிக்கிறார்கள்'' என்று யோபு 24:2-ம் வசனம் கூறுகின்றது. அவ்விதம் அபகரித்தவைகள் லாபமாக மாறுவதே இல்லை. சாபமாகவே மாறுகின்றது. இன்பம் தருவதும் இல்லை. துன்பமே தருகின்றது.

அயலானுக்கு இடுக்கண்:

அந்த மனிதன் செய்த நான்காவது குற்றம், மற்றவர்களுக்கு இடுக்கண் செய்தான் என்று லேவியராகமம் 6:2-ல் எழுதப்பட்டு உள்ளது. அதாவது, தந்திரம் செய்து அபகரித்து கொண்டான். சிலரிடம் பலாத்காரமாக அபகரிக்க அவனுக்கு முடிகின்றது. அவ்விதம் முடியாத இடங்களில் அவன் சூழ்ச்சி செய்து பறித்து கொண்டான். பிறரின் வேலிகளை தந்திரமாக தாண்டி விழுந்து, பிறரின் உடமைகளை பறித்து கொள்ளுதல் இதற்கு அடியில் அடங்குகின்றது. பிறரின் வயல்களில் தந்திரமாக தனது மந்தையை மேய விடுதலும், சூழ்ச்சி செய்து இடுக்கண் கொடுப்பதே ஆகும். மற்றவர்களின் அறுவடைகளை தந்திரமாக அறுத்து கொள்வதும் இடுக்கண் செய்வதே ஆகும். அடுத்தவரின் உடமைகளுக்கு ஒளிந்து வந்து தீ வைத்து விடுதலும் இடுக்கண் செய்வதே ஆகும் என்று பற்பல குற்றங்கள் இடுக்கண் செய்தான் என்ற பட்டியலின் கீழே வருகின்றது. ''நீ பிறனுடைய திராட்சத்தோட்டத்தில் பிரவேசித்தால், உன் ஆசை தீர திராட்சை பழங்களைத் திருப்தியாக புசிக்கலாம்; உன் கூடையிலே ஒன்றும் எடுத்து கொண்டு போகக்கூடாது. பிறனுடைய விளைச்சலில் பிரவேசித்தால், உன் கையினால் கதிர்களை கொய்யலாம்; நீ அந்த விளைச்சலில் அரிவாளை இடலாகாது.'' என்று உபாகமம் 23:24,25-ல் பார்க்கிறோம்.

கண்டெடுத்த பொருளை கொடாமை:

சூழ்ச்சி செய்து மற்றவர்களுக்கு இடுக்கண் செய்வது மட்டுமல்ல, அவன் செய்த ஐந்தாவது குற்றம் லேவியராகமம் 6:3-ல் வருகின்றது. காணாமற்போன ஒரு பொருளை அவன் கண்டு எடுத்து கொண்டான். அதன் சொந்தக்காரன் தேடுகிறான் என்பதை அறிந்தும் அறியாதவன் போல் இருந்து கொண்டான். அவனிடம் கேட்ட பொழுது தனக்கு எதுவும் தெரியாது என்று பொய் கூறி விட்டான். ஆணையும் இட்டான். ''கர்த்தருடைய ஜீவனை கொண்டு சொல்லுகிறோம் என்றாலும் பொய்யாணை இடுகிறார்களே.'' என்று எரேமியா 5:2-ம் வசனத்தில் கூறுவதுபோல பொய் கூறி திருடினான். பொய்க்கு துணை செய்ய கடவுளின் துணை தேடி ஆணையும் இட்டான். பரிசுத்தராகிய தேவன் பொய் கூறுவதும் இல்லை; பொய்யர்களை தமது சமூகத்தில் ஏற்பதும் இல்லை. அதற்கு மாறாக அவரது பட்டயத்தை பறக்க விட்டு பொய்யர்களையும், திருடர்களையும் நிர்மூலமாக்கினார். அது அவரது வார்த்தை என்ற பட்டயம் ஆகும். இருபது முழ நீளமும் பத்து முழ அகலமுமான அந்த பட்டயம் ஓர் பறக்கும் பட்டயம் என்று சகரியா என்ற தீர்க்கதரிசி கூறுகின்றார்: ''நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்து பார்க்கையில், இதோ, பறக்கிற ஒரு புஸ்தக சுருளை கண்டேன். தூதன்: நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; பறக்கிற ஒரு புஸ்தக சுருளை காண்கிறேன், அதின் நீளம் இருபது முழமும் அதின் அகலம் பத்து முழமுமாயிருக்கிறது என்றேன். அப்பொழுது அவர்: இது பூமியின் மீதெங்கும் புறப்பட்டு போகிற சாபம்; எந்த திருடனும் அதின் ஒரு புறத்திலிருக்கிறதின்படியே அழிக்கப்பட்டு போவான்; ஆணையிடுகிற எவனும், அதின் மறுபுறத்தில் இருக்கிறதின்படியே அழிக்கப்பட்டு போவான். அது திருடன் வீட்டிலும், என் நாமத்தை கொண்டு பொய்யாணை இடுகிறவன் வீட்டிலும் வந்து, அவனவன் வீட்டின் நடுவிலே தங்கி, அதை அதின் மரங்களோடும் அதின் கல்லுகளோடும் கூட நிர்மூலமாக்கும்படி அதை புறப்பட்டு போக பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.'' (சக. 5:1-4)

காணாமற் போன பொருட்களை எடுத்து, தனதாக்கி கொள்ளுவது திருடுவதற்கு சமம் என்றே பரிசுத்த வேதம் கூறுகின்றது. அதன் சொந்தக்காரரை தேடி கண்டு பிடித்து கொடுத்து விட வேண்டும் என்றும் வேதம் கூறுகின்றது. ''உன் சகோதரனுடைய மாடாவது ஆடாவது வழி தப்பி போகிறதை கண்டாயானால், அதை காணாதவன்போல் இராமல், அதை உன் சகோதரனிடத்துக்கு திருப்பி கொண்டு போகக்கடவாய். உன் சகோதரன் உனக்கு சமீபமாயிராமலும் உனக்கு அறிமுகமாயிராமலும் இருந்தால், நீ அதை உன் வீட்டிற்கு கொண்டு போய், அதை உன் சகோதரன் தேடிவருமட்டும் உன்னிடத்திலே வைத்து, அவனுக்கு திரும்ப கொடுக்கக்கடவாய். அப்படியே அவன் கழுதையை குறித்தும் செய்யக்கடவாய்; அவன் வஸ்திரத்தை குறித்தும் அப்படியே செய்யக்கடவாய்; உன் சகோதரனிடத்தில் இருந்து காணாமல் போனவைகளில் எதையாகிலும், கண்டுபிடித்தாயானால் அப்படியே செய்யக்கடவாய்; அவைகளை நீ காணாதவன் போல் விட்டு போகலாகாது.'' என்று உபா. 22:1-3-ல் பார்க்கிறோம்.

அவன் செய்த பாவத்தினாலே குற்றவாளியானபடியால், தான் பலாத்காரமாய் பறித்து கொண்டதையும், இடுக்கண் செய்து பெற்று கொண்டதையும், தன் வசத்திலே ஒப்புவிக்க பட்டதையும், காணாமல் போயிருந்து தான் கண்டெடுத்ததையும், பொய்யாணையிட்டு சம்பாதித்த பொருளையும் திரும்ப கொடுக்கக்கடவன்; அந்த முதலை கொடுக்கிறதும்

அல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவும் கூட்டி, அதை தான் குற்றநிவாரண பலியை இடும் நாளில், அதற்கு உரியவனுக்கு கொடுத்துவிட்டு, தன் குற்றநிவாரண பலியாக, உன் மதிப்புக்கு சரியான பழுதற்ற ஆட்டுக்கடாவை கர்த்தருக்கு செலுத்தும்படி, அதை ஆசாரியனிடத்தில் குற்றநிவாரண பலியாக கொண்டு வருவானாக. கர்த்தருடைய சந்நிதியில் அவன் பாவத்தை ஆசாரியன் நிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவன் குற்றவாளியாக செய்த அப்படிப்பட்ட எந்த காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்றார். (லேவி. 6:4-7)

அடுத்த நபருக்கு விரோதமாக ஐந்து குற்றங்களை செய்தவர்களை லேவியராகமம் 6-வது அதிகாரம் தண்டனைக்கு உட்படுத்துகின்றது. லேவியராகமம் 6:4-வது வசனத்தில் அந்த ஐந்து குற்றங்களையும் செய்தவர் மீது குற்றப்பத்திரிகை ஒன்று வாசிக்கப்படுகின்றது. முதலாவது குற்றம் பிறரின் உரிமைகளை, உடமைகளை பலாத்காரமாக பறித்தான். இரண்டாவது குற்றம் இடுக்கண் செய்து பொருள் சேர்த்து கொண்டான். மூன்றாவது குற்றம் தன் வசத்தில் நம்பி ஒப்புவிக்கப்பட்டதை மறுத்து விட்டான். நான்காவது பிறர் தொலைத்து விட்ட பொருட்களை எடுத்து, பதுக்கிவைத்து கொண்டான். ஐந்தாவது பொய்யாக ஆணையிட்டான் வாசிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையினை தொடர்ந்து தீர்ப்பும் வழங்கப்படுகின்றது.

நம்பிக்கை மோசடி செய்து, அவன் மொத்தம் எவ்வளவு கைப்பற்றினான் என்று பார்க்க வேண்டும். அடுத்தாற்போல் அந்த மொத்த தொகையில் ஐந்தில் ஒரு பாகம் எவ்வளவு என்று கணக்கிட வேண்டும். அந்த ஐந்தில் ஒரு பாகத்தை மொத்த தொகையுடன் சேர்த்து கூட்ட வேண்டும். அதாவது பத்தில் ஒன்று ஆலயத்தின் பொக்கிஷத்திற்கு தவறாமல் கொடுக்கப்படுவது போல, ஐந்தில் ஒன்று தவறு செய்யும் பொழுதெல்லாம் தண்டணையாக கொடுக்கப்பட வேண்டும். அதனை தொடர்ந்து குற்றநிவாரணபலி செலுத்த ஆசாரியன் அவனுக்கு ஓர் நாளை குறிப்பிட வேண்டும். அபகரித்தவனும், அபகரிக்கப்பட்டவனும் இருவரும் சேர்ந்து ஆசரிப்பு கூடாரத்திற்கு வர வேண்டும். அப்பொழுது ஆசாரியன் களவு செய்ததின் மொத்த மதிப்புக்கு ஏற்ற பழுதற்ற ஒரு ஆட்டு கடாவை குற்றம் செய்தவன் விலைக்கு வாங்கிவரும்படி கூற வேண்டும். குற்றம் செய்தவன் அதனை விலைக்கு வாங்கி வந்து தனது குற்றத்தை மனதார ஒப்பு கொண்டு அறிக்கை செய்ய வேண்டும். இறுதியாக அந்த பழுதற்ற ஆட்டுக்கடாவை ஏற்று கொண்டு கர்த்தரின் சந்நிதியில் குற்றம் செய்தவனை ஆசாரியன் நிறுத்த வேண்டும். பாவ நிவிர்த்தி அவனுக்கு செய்ய வேண்டும். அப்பொழுது அவனது குற்றம் அவனுக்கு மன்னிக்கப்படும். தன் பாவங்களை மறைக்காமல் அறிக்கை இட்டவனை, தேவன் மறுக்காமல் மன்னித்ததாக அறிக்கை இடுவார். அவன் செய்த அனைத்து பாவங்களும் அவனுக்கு மன்னிக்கப்படுகின்றன. அவன் ஓர் புதியவனாக மாறி விடுகின்றான்.

லேவியராகமம் 19:18-ம் வசனம் கூறுவது போல, 'உன்னில் அன்பு கூறுவது போல, பிறனிலும் அன்பு கூறுவாயாக,' என்ற கோட்டிற்கு அவன் வந்து விட்டான். ஒளிவு மறைவு இல்லாத ஒரு சமூகமாக அவர்கள் வாழ்வதற்கு அவர்கள் அனைவருமே ஒளியில் நடக்க வேண்டும். ''ஒருவனையும் ஒடுக்காமலிருந்து, கடன் வாங்கினவனுக்கு அடைமானத்தை திரும்ப கொடுத்து, தன் அப்பத்தை பசித்தவனுக்கு பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு

வஸ்திரம் தரிப்பித்து, வட்டிக்கு கொடாமலும், பொலிசை வாங்காமலும், அநியாயத்துக்கு தன் கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து, என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களை கைக்கொண்டு, உண்மையாய் இருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.'' என்று எசேக்கியல் 18:7-9-ல் பார்க்கிறோம்.

தகனபலி, போஜனபலி, சமாதானபலி தொடர்ந்து பாவநிவாரணபலி, குற்றநிவாரணபலி என்று லேவியராகமம் முதல் அதிகாரம் துவங்கி 6-ம் அதிகாரம் 7-வது வசனம் முடிய நாம் இதுவரை பார்த்தோம். இப்பொழுது லேவியராகமம் 6:8-7:38 வரை அனைத்து பலிகளும் இன்னும் ஒருமுறை இந்த வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. ஏற்கெனவே ஒரு முறை கூறப்பட்ட பலிகளும் ஏன் திரும்பவும் இன்னும் ஒரு முறை கூறப்படுகின்றது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பலிகளை பற்றி முதலாவது நமக்கு கிடைத்த விபரம் இயேசுவையும் சிலுவையையும் நமக்கு அறிமுகப்படுத்தும் விபரம் ஆகும்.

அத்தியாயம் - 4

ஆசாரியர்கள் பலி செலுத்த பிரமாணங்கள்

4.1 பலிகள் குறித்த முகவுரை

லேவியராகமம் 6:8-7:38 வரை இன்னும் ஒரு முறை பலிகள் கூறப்பட காரணம் ஆராதனை முறையில் பலிகள் செலுத்தப்படும் வரிசை என்ன என்பதை தெரிவிப்பதற்கே ஆகும். முதலாவது பலிகள் கூறப்பட்ட பொழுது, பலிகளை செலுத்த வருகிறவன் எந்த முறையில் பலிகளை செலுத்த வேண்டும் என்ற குறிப்புகள் கூறப்பட்டது. இரண்டாவது பலிகளை பற்றி கூறும் பொழுது, ஆசாரியர்கள் பலி செலுத்தும் ஆராதனைகளை எந்த வரிசையில் நடத்த வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. அந்த முறைகளின் குறிப்பு ஆசாரியர்களுக்கு ஓர் வழிக்காட்டி போன்று அமைந்துள்ளது. ஆசாரியர்கள் ஆராதனையை நடத்த வேண்டியவர்கள். அவர்கள் அத்தனை பலிகளையும் அர்த்தத்துடனும், அமைதியுடனும் நிறைவேற்ற அவர்களுக்கு ஏற்ற குறிப்பு இந்த பகுதிகளில் கொடுக்கப்பட்டு உள்ளது. முதலாவது செலுத்தும் பலி இரண்டாவது செலுத்தும் பலி என்று வரிசை வரிசையாக அவர்களுக்கு கொடுக்கப்பட்டு உள்ளது.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கற்பிக்க வேண்டிய (லேவி. 6:8-9a)

'நீ இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால்' என்று லேவியராகமம் 1:1 முதல் 6:7 வரை அடிக்கடி வருகின்றது. அதில் இருந்து அந்த அதிகாரங்கள் வழிபாட்டில் பங்கு எடுக்க வருகிறவருக்கு அவசியப்பட்ட குறிப்புகளை கூறும் அதிகாரங்கள் என்று அறிந்து கொண்டோம். ஆனால் அடுத்த பகுதியான லேவியராகமம் 6:8 முதல் 7:38-வது வசனம் வரை ''நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கற்பிக்க வேண்டியதாவது'' என்று அடிக்கடி வருகின்றது. அதில் இருந்து அந்த அதிகாரங்களில் வரும் குறிப்புகள் வழிபாட்டினை எடுத்து நடத்தும் ஆசாரியர்களுக்கு கொடுக்கப்பட்ட குறிப்புகள் என்பது நிச்சயப்படுத்த படுகின்றது.

லேவியராகமம் 6:8 முதல் 7:38-ம் வசனம் வரை தகனபலி, போஜனபலி, பாவநிவாரணபலி, குற்றநிவாரணபலி, சமாதானபலி என்ற வரிசையில் பலிகள் செலுத்த வேண்டிய முறைகள் இடம் பெறுகின்றன.

முதலாவது செலுத்தப்படும் பலி தகன பலி என்பதை நாம் அறிகின்றோம். அதனை பற்றி லேவி.6:8-13 வசனங்களில் நாம் பார்க்கலாம். ஏன் என்றால் தகனபலிதான் அடிக்கடி செலுத்தப்பட்ட பலியாக அமைந்து இருக்கின்றது. சர்வாங்க தகனபலியானது எப்பொழுதும் எரிந்து கொண்டே இருக்கும் பலி என்றும், ஜோதியாக பிரகாசிக்கும் வெளிச்சம் என்றும் பின்வரும் பகுதியில் பார்ப்போம்.

இரண்டாவது போஜன பலி அறிமுகப்படுத்த படுகின்றது. அதனை பற்றி லேவி. 6:14-23 வசனங்களில் பார்க்கலாம். தகனபலியை தொடர்ந்து, போஜன பலி, லேவியராகமம் முதல் இரண்டு அதிகாரங்களில் கூறப்பட்டது போல ஆராதனை வரிசையிலும் தகனபலியை தொடர்ந்தே போஜன பலியும் இடம் பெறுகின்றது. லேவியராகமம் 6:19-23

வசனங்களில் போஜன பலி சபையார் மட்டும் அல்லாமல் ஆரோனும் அவனது குமாரரும் கூட செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது.

அந்த வரிசையில் மூன்றாவது இடம் பெறுவது பாவநிவாரணபலி. இந்த பலி அடிக்கடி செலுத்தப்பட்ட பலி அல்ல; ஆனால் அனைத்து பண்டிகை ஆராதனைகளிலும், இடம் பெற்ற பலியாகும். அதுமட்டும் அல்லாமல், சில குறிப்பிட்ட பாவங்களுக்கு பரிகாரம் தேட கண்டிப்பாக செலுத்தப்பட வேண்டிய ஓர் பலியும் ஆகும். பாவ நிவாரண பலியின் குறிப்பு லேவியராகமம். 6:24-30 வசனங்களில் அடங்கியுள்ளது. இந்த பலி நிறைவேற்றப்படும் பொழுது ஆசாரியன் செய்ய வேண்டியது என்ன, செய்யக்கூடாதது என்ன என்பது மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டு உள்ளது.

ஆசாரியர்களின் ஆராதனை முறையில் இடம்பெறும் நான்காவது பலி குற்ற நிவாரண பலி. அது வழக்கம்போல் தினமும் செலுத்தப்பட்ட பலி அல்ல. குற்றம் செய்தவன் கட்டாயமாக செலுத்த வேண்டிய ஓர் பலியாகும். அதன் குறிப்பு லேவியராகமம் 7:1-10 வசனங்களில் இடம் பெற்று உள்ளது.

இறுதியாக எடுத்து கூறப்படுவது சமாதானபலி என்பது ஆகும். லேவி. 7:11-38-வது வசனம் வரைக்கும் இந்த பலி விபரம் கூறப்பட்டு உள்ளது. அது அன்றாடம் செலுத்தும் பலியும் அல்ல, கட்டாயமான பலியும் அல்ல. விரும்பினால் செலுத்தலாம். ஸ்தோத்திரபலி என்றும் இது அழைக்கப்பட்டது. நன்றி நவிலும் பலி என்றும் அழைக்கப்பட்டது. நன்றி என்பது வலிய விரும்பி சொல்ல வேண்டிய, செய்ய வேண்டிய ஒன்று. ஏற்கெனவே நாம் அதனை லேவியராகமம் மூன்றாம் அதிகாரத்தில் பார்த்தோம். தேவனிடத்தில் பெற்ற மன்னிப்பு, நன்மை முதலியவற்றிற்கு ஸ்தோத்திரம் செய்ய இன்னும் கர்த்தருடன் நெருங்கி வாழ, பொருத்தனை செய்ய, மன ஊற்சாகத்தை காட்ட இந்த பலி செலுத்த படுகின்றது. இவ்விதமாக ஆலய ஆராதனையில் அடிக்கடி இடம் பெற்ற பலிகள் எப்படி செலுத்தப்பட வேண்டும் என்ற குறிப்புகள் வரிசை படுத்தப்பட்டு 6,7-ம் அதிகாரங்களில் கூறப்பட்டு உள்ளது.

ஆராதனையில் பங்கு பெறுகின்றவர் எப்படிப்பட்டவர், எப்படிப்பட்ட ஆயத்தத்துடன் வரவேண்டும் என்பதை வாசித்தோம். தொடர்ந்து ஆராதனையினை நடத்தும் லேவியர் பலியையும் காணிக்கையையும் கையாளும் பொழுது சுத்திகரிக்கப்பட்ட கைகளோடும் நீதியோடும் அதனை கையாள வேண்டும் என்றும் நாம் பார்த்தோம். மல்கியா 3:3-வது வசனத்தில் ''அவர் உட்கார்ந்து வெள்ளியை புடமிட்டு சுத்திகரித்து கொண்டு இருப்பார். அவர் லேவியின் புத்திரரை சுத்திகரித்து அவர்கள் கர்த்தருடையவர்களாக இருக்கும்படிக்கும் நீதியாய் காணிக்கைகளை செலுத்தும்படிக்கும் அவர்களை பொன்னை போலவும் வெள்ளியை போலவும் புடமிடுவார்,'' என்று பார்க்கிறோம். ஆராதனையை அசதியாக நடத்துகிறவனும் ஆராதிக்க ஆயத்தம் இல்லாமல் வருபவர்களும் கர்த்தரை கனவீனம் செய்கிறவர்கள்.

பூலோகத்து மக்கள் பரலோக தகப்பனை கனம் பண்ணவும், ஆராதிக்கவும், துதிக்கவும், ஸ்தோத்தரிக்கவும் அவரை நோக்கி ஜெபிக்கவும் அவரிடம் இருந்தே பெற்று கொள்ளவும் சர்வ வல்லமை உள்ள தேவன் எதிர்பார்க்கின்றார். அவ்விதம் செய்கின்றவர்களை ஏற்று கொள்கின்றார். தொடர்ந்து இடம் கொள்ளாமல் போகும் மட்டும் அவர்களை ஆசீர்வதித்து கொண்டே இருக்கின்றார்.

லேவியராகமம் 6:7 முதல் 7:10-வது வசனம் வரை மகா பரிசுத்தமான பலிகள் என்று அழைக்கப்படும் போஜனபலி, பாவநிவாரணபலி, குற்றநிவாரணபலி ஆகிய மூன்று பலிகளும் கூறப்படுகின்றன. லேவியராகமம் 6:17,25; 7:6-வது வசனங்களில் இருந்து மகா பரிசுத்தமான பலிகள் என்று பார்க்கலாம். அந்த பலியின் மீதியானவைகளை ஆசாரியர் தவிர பிறர் சாப்பிட முடியாது.

4.2 சர்வாங்க தகனபலி செலுத்தப்பட வேண்டிய முறை

சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணம் என்னவென்றால், சர்வாங்க தகனபலியானது இராமுழுவதும் விடியற்காலம் மட்டும் பலிபீடத்தின்மேல் எரிய வேண்டும்; பலிபீடத்தின் மேலுள்ள அக்கினி எரிந்து கொண்டே இருக்க வேண்டும். ஆசாரியன் தன் சணல் நூல் அங்கியை தரித்து, தன் சணல் நூல் ஜல்லடத்தை அரையில் போட்டு கொண்டு, பலிபீடத்தின்மேல் அக்கினியில் எரிந்த சர்வாங்க தகனபலியின் சாம்பலை எடுத்து, பலிபீடத்து பக்கத்தில் கொட்டி, பின்பு தன் வஸ்திரங்களை உடுத்தி கொண்டு, அந்த சாம்பலை பாளயத்துக்கு புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டு போய் கொட்ட கடவன். பலிபீடத்தின் மேலிருக்கிற அக்கினி அவியாமல் எரிந்து கொண்டிருக்க வேண்டும்; ஆசாரியன் காலைதோறும் அதின்மேல் எரியும்படி கட்டைகளை போட்டு, அதின்மேல் சர்வாங்க தனபலியை வரிசையாக வைத்து, அதின்மேல் சமாதான பலிகளின் கொழுப்பை போட்டு தகனிக்க கடவன். பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும்; அது ஒருபொழுதும் அவிந்து போகலாகது. (லேவி. 6:9b-13)

எப்பொழுதும் செலுத்தப்பட வேண்டிய பலி தகனபலி. தகனபலியில் பங்கு எடுக்க வருகின்றவனை பற்றிய விபரங்களை முதல் அதிகாரத்தில் பார்த்தோம். அதனை பொறுப்பு எடுத்து எப்படி நடத்த வேண்டும் என்பதின் விபரங்கள் இந்த பகுதியில் வருகின்றன. பலிபீடத்தின் அக்கினி அணையவே கூடாது என்பது அதில் வரும் மிக முக்கியமான ஓர் குறிப்பு. 9,12,13 ஆகிய வசனங்களில் இந்த குறிப்பு திரும்ப திரும்ப குறிக்கப்பட்டு உள்ளது. தகன பலி என்பது காலையும், மாலையும் தவறாமல் செலுத்தப்படும் பலியாகும். ''மேலும் நீ அவர்களை நோக்கி: நீங்கள் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய தகனபலி என்னவென்றால்; நித்திய சர்வாங்க தகனபலியாக நாடோறும் ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளை பலியிட வேண்டும். காலையில் ஒரு ஆட்டு குட்டியையும், மாலையில் ஒரு ஆட்டு குட்டியையும் பலியிட்டு,'' என்று எண்ணாகமம் 28:3,4-ல் பார்க்கிறோம்.

காலையில் தகன பலி செலுத்தப்பட்ட பின்னர், சபையார் தகன பலி செலுத்த பகல் வேளைகளில் வருவது உண்டு. இறுதியாக மாலையில் தகன பலி செலுத்தப்பட்ட பின்னர் வேறு எந்த பலிகளும் பலிபீடத்தில் இடம் பெறுவது இல்லை. எனவே மாலை பலி செலுத்தப்பட்ட பின்னர், காலை பலி தொடங்கும் வரை பலிபீடத்தின் நெருப்புகள் கிண்டி விடப்பட்டு கொண்டே இருக்க வேண்டும். பலிபீடத்தின் அக்கினி அணைந்து விடவே கூடாது. அது ஆசாரியர்களின் பொறுப்பு. ஒவ்வொரு நாளும் காலையில் ஆசாரியர் பலிபீடத்தின் சாம்பலை எடுத்து, பாளையத்திற்கு வெளியே சுத்தமான ஓர் இடத்தில் எடுத்து

கொண்டு போய் கொட்ட வேண்டும் என்று லேவியராகமம் 6:10,11-வது வசனங்கள் கூறுகின்றன. சாம்பலை எடுக்கும் பொழுது அவர்கள் அணியும் உடை எப்படிப்பட்ட உடையாக இருக்க வேண்டும் என்பதை பற்றி 10-வது வசனம் கூறுகின்றது. ஏற்கெனவே இதை பற்றி யாத்திராகமம் 20:26-வது வசனத்திலும், 28:42,43-வது வசனங்களிலும் கூறப்பட்டு உள்ளது. மேலும் சாம்பலை பாளயத்திற்கு வெளியே எடுத்து செல்லும் பொழுது அதற்கு ஏற்ற உடை உடுத்த வேண்டும். ஆராதனை நடத்தும் பொழுது அணியும் பரிசுத்த வஸ்திரம் மற்ற வேலைகள் செய்யும் பொழுது அணிய கூடாது என்பதே இதன் கருத்து ஆகும்.

பலிபீடத்தின் அக்கினி இரவிலும் பகலிலும் எரிய வேண்டும் என்பது பரிசுத்தரை பின்பற்றும் மக்களின் பரிசுத்தம் இரவிலும் காக்கப்பட வேண்டும், பகலிலும் காக்கப்பட வேண்டும் என்பதை சுட்டி காட்டுகின்றது. தம்மை நம்புகிறவர்களை காக்க கர்த்தர் பகலில் தூங்குவதும் இல்லை, இரவில் உறங்குவதும் இல்லை. தம்முடைய பிள்ளைகளை காப்பாற்றுவதும் வழிநடத்துவதும், இரவிலும் பகலிலும் கர்த்தருடைய வாஞ்சை என்பதையும் அது காட்டுகின்றது. அந்த அக்கினி, கட்டைகள் எரிவதால் வந்த அக்கினி அல்ல, பரலோக அக்கினியே அது. பரிசுத்தரை வெளிப்படுத்தும் அக்கினி. பாவியை பட்சிக்கும் அக்கினி. தமக்கு பயந்து நடக்கின்றவர்களை பராமரிக்கும் அக்கினி. எனவே அந்த பரம அக்கினி எரிந்து கொண்டே இருக்க வேண்டும் என்று வசனம் கூறுகின்றது. இரவு என்றும் அந்த அக்கினிக்கு இல்லை, பகல் என்றும் அந்த அக்கினிக்கு இல்லை. பரிசுத்தம், உண்மை, அன்பு என்பவைகளுக்கு பகல் என்றும் இல்லை இரவு என்றும் இல்லை. எப்பொழுதுமே அவர்கள் மீட்கப்பட்ட வாழ்க்கையில் காக்கப்பட வேண்டும். பலியாக வந்த மிருகம் பலியாக தகன பலியில் முழுவதுமாக எரிக்கப்பட்டது. அதன் விளைவாக அக்கினி இரவும், பகலும் விடாமல் எரிந்து கொண்டே இருக்கின்றது. அதுபோல தங்களது ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்தையும் ஒருங்கே இயேசு கிறிஸ்துவிற்கு பலியாக ஒப்புக்கொடுக்கும் பொழுது அப்படிப்பட்ட வாழ்க்கைகள் பரிசுத்த ஆவியானவராகிய அக்கினியினால் நிரப்பப்பட்டு ஓர் தீபமாக எரிந்து பிரகாசிக்கும் என்பதை அந்த ஜோதி வெளிப்படுத்துகின்றது. அந்த பிரகாசத்தை அணைத்து விட எந்த சக்தியும் இல்லை என்பதையும் அது தெளிவு படுத்துகின்றது.

4.3 போஜனபலி செலுத்தப்பட வேண்டிய முறை

போஜனபலியின் பிரமாணம் என்னவென்றால், ஆரோனின் குமாரர் அதை கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடத்துக்கு முன்னே படைக்க வேண்டும். அவன் போஜனபலியின் மெல்லிய மாவிலும் அதின் எண்ணெயிலும் தன் கைப்பிடி நிறைய எடுத்து, போஜனபலியின் மேலுள்ள தூபவர்க்கம் யாவற்றோடும் கூட அதை ஞாபகக்குறியாக பலிபீடத்தின்மேல் கர்த்தருக்கு சுகந்த வாசனையாக தகனிக்க கடவன். அதில் மீதியானதை ஆரோனும் அவன் குமாரரும் புசிப்பார்களாக; அது புளிப்பில்லா அப்பத்துடன் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கப்பட கடவது; ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரத்தில் அதை புசிக்க வேண்டும். அதை புளித்த மாவுள்ளதாக பாகம்பண்ண வேண்டாம்; அது எனக்கு இடப்படும் தகனங்களில் நான் அவர்களுக்கு கொடுத்த அவர்களுடைய பங்கு; அது பாவநிவாரண பலியைப்போலும் குற்றநிவாரண பலியைப்போலும் மகா பரிசுத்தமானது. ஆரோனின்

பிள்ளைகளில் ஆண் மக்கள் யாவரும் அதை புசிப்பார்களாக; கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளில் அது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாய் இருக்க கடவது; அவைகளை தொடுகிறவனெவனும் பரிசுத்தமாய் இருப்பான் என்று சொல் என்றார். (லேவி. 6:14-18)

போஜன பலியின் (Grain Offering) முக்கியத்துவம் என்ன? அது தகனபலியில் இருந்து எப்படி வித்தியாசப்படுகிறது என்று பார்ப்போம். இரத்தம் இல்லாத ஒரு பலி என்றால் அது போஜன பலியே ஆகும். அது செலுத்தப்பட வேண்டிய முறைமை ஏன் முக்கியமானது? அதன் உள்ளான பொருள் என்ன? ஏன் அது முழுவதுமாக தகனிக்கப்பட வேண்டும். ஏன் புளிப்பும் தேனும் அதில் சேரக் கூடாது? ஏன் குறிப்பிட்ட அளவுதான் எடுக்க வேண்டும். ஏன் மெல்லிய மாவாக இருக்க வேண்டும்? ஏன் உப்பிடப்பட வேண்டும்? ஏன் இவை யாவும் தேவனுக்கும் அவரது மக்களுக்கும் நடுவில் ஒப்புரவாக்குவதாக உள்ளது?

தகன பலியோடு சேர்த்து கொடுக்கப்பட்ட பலி போஜன பலியாகும். (எண். 28: 7-15; யோ. 22:23,24; நியா. 13:19,23; 1 இரா. 8:64; 2 இரா. 16:13). போஜனபலி, மக்கள் தாங்களே மனமுவந்து கர்த்தரை ஆராதிக்கவும் அவர் அவர்களுக்கு பாராட்டிய நன்மைகளையும், போஷனையையும் உணர்ந்து நன்றி உணர்வை தெரிவிக்கவும் செலுத்தும் பலி ஆகும்.

தேவனுக்கு திருப்தி அளிக்கும் உணவை ஆசாரியர்களும் பகிர்ந்து கொள்ளுகிறார்கள். அதுபோலவேதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போதகர் ஜீவ அப்பமாகிய இயேசு கிறிஸ்துவில் பங்கு கொள்ளுகிறார்கள். அவரே நமது ஆத்தும மன்னாவாகவும் பிதாவின் இதயத்தை திருப்தி செய்பவருமானவர். ஆகவே தேவாதி தேவனோடு, அவரது குமாரனாகிய இரட்சகர் இயேசுவின் மூலம் ஐக்கியம் பெறுகிறோம். அவரே நம்மிடம் கூறுகிறார்: ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். (யோ. 6:35a).

மீதியாயிருக்கும் போஜனபலி ஆரோனையும் அவனுடைய குமாரரையும் சேரும். புளிப்பில்லாததாக, பரிசுத்தமான இடத்தில் அதனை ஆரோனின் ஆண்வாரிசு மட்டும் புசிக்கலாம். சாதாரண மக்கள் அதனை தொடலாகாது. தொடுகிறவன் பரிசுத்தம் அடைவான். தகனிக்கப்படும் பலிகள் யாவற்றிலும் மகா பரிசுத்தமானது இதுவே.

ஆசாரியன் செலுத்தும் போஜன பலி:

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: ஆரோன் அபிஷேகம் பண்ணப்படும் நாளில், அவனும் அவன் குமாரரும் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய படைப்பு என்னவென்றால், ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை, காலையில் பாதியும் மாலையில் பாதியும், நித்திய போஜன பலியாக செலுத்தக் கடவர்கள். அது சட்டியிலே எண்ணெய் விட்டுப் பாகம் பண்ணப்படக்கடவது; பாகம் பண்ணப்பட்டபின்பு அதை கொண்டு வந்து, போஜனபலியாக பாகம்பண்ணப்பட்ட துண்டுகளைக் கர்த்தருக்கு சுகந்த வாசனையாகப் படைக்கக்கடவாய். அவன் குமாரரில் அவனுடைய ஸ்தலத்திலே அபிஷேகம் பண்ணப்படுகிற ஆசாரியனும் அப்படியே செய்யக்கடவன்; அது முழுவதும் தகனிக்கப்பட வேண்டும்; அது கர்த்தர்

நியமித்த நித்திய கட்டளை, ஆசாரியனுக்காக இடப்படும் எந்த போஜனபலியும் புசிக்கப்படாமல், முழுவதும் தகனிக்கப்பட வேண்டும் என்றார். (லேவி. 6:19-23)

போஜனபலியில் இதுவரை அறிமுகப்படுத்தப்படாத ஒன்று அறிமுகப்படுத்தப்படுகின்றது. போஜனபலி சபையார் மட்டும் அல்ல, ஆரோனும் அவன் குமாரரும்கூட செலுத்த வேண்டும் என்பதாகும். போஜனபலி என்பது மதிப்பும், மரியாதையும் தெரிவிக்கும் பலி. சபையார் இந்த பலி செலுத்தி கர்த்தாதி கர்த்தருக்கு மதிப்பும் மரியாதையும் தெரிவிப்பது போன்று ஆசாரியரும் தெரிவிக்க வேண்டும். தேவனுக்குரிய மகிமை, மதிப்பு, மரியாதைகளை எந்த ஊழியனும் அபகரிக்க முடியாது என்பதை இது காட்டுகின்றது. ஆசாரியர்கள் செலுத்தும் போஜனபலியில் மீதியானதை ஆசாரியர் உட்பட எவரும் சாப்பிடக்கூடாது. அவை அனைத்தும் தகனிக்கப்பட வேண்டும். தேவனுக்கு கனம் கொடுப்பதில், மரியாதை செலுத்துவதில் ஆசாரியர் முந்திக் கொள்ள வேண்டும், முதலில் நிற்க வேண்டும் என்பதை போஜனபலி குறிக்கின்றது.

ஆசாரியரின் பிரதிஷ்டைக்காகவும் போஜனபலி விசேஷித்த பலியாக கொடுக்கப்படுகிறது. இதனை ஆரோனும் அவன் குமாரரும் கர்த்தருடைய சந்நிதானத்தில் கொண்டு வர வேண்டும். எண்ணெய் இடப்பட்டு அது சட்டியில் பாகம் பண்ணப்பட வேண்டும். துண்டுகளாக்கப்பட்டு அவை தகனிக்கப்பட வேண்டும். அது சுகந்த வாசனையான பலி ஆகும்.

புளிப்பு பாவத்தை குறிக்கும் என்று நாம் பார்த்தோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என் சகல பாவங்களையும் நீக்கி என்னை கழுவுகிறது என்னும் அனுபவம் பெற்றவர்கள் மட்டுமே அவருடைய சரீரமாகிய அப்பத்தில் பங்கு கொள்ள முடியும். அவர்கள் உப்பை விட்டுவிடக் கூடாது. தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே உள்ள உடன்படிக்கை ஒப்பந்த உறவை உப்பு குறிக்கின்றது.

4.4 பாவநிவாரண பலி செலுத்தப்பட வேண்டிய முறை

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்ல வேண்டியதாவது, பாவநிவாரண பலியின் பிரமாணம் என்னவென்றால், சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் பாவநிவாரணபலியும் கர்த்தருடைய சந்நிதியில் கொல்லப்படக்கடவது; அது மகா பரிசுத்தமானது. பாவநிவிர்த்தி செய்ய அதை பலியிடுகிற ஆசாரியன் அதை புசிக்கக்கடவன்; ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திலே அது புசிக்கப்பட வேண்டும். அதின் மாம்சத்தில் படுகிற எதுவும் பரிசுத்தமாயிருக்கும்; அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்தில் தெறித்ததானால், இரத்தம் தெறித்த வஸ்திரத்தை பரிசுத்த ஸ்தலத்தில் கழுவ வேண்டும். அது சமைக்கப்பட்ட மண்பாண்டம் உடைக்கப்பட வேண்டும்; செப்புப்பானையில் சமைக்கப்பட்டதானால், அது விளக்கப்பட்டு தண்ணீரில் கழுவப்பட வேண்டும். ஆசாரியரில் ஆண்மக்கள் யாவரும் அதை புசிப்பார்களாக; அது மகா பரிசுத்தமானது. எந்த பாவநிவாரண பலியின் இரத்தத்தில் கொஞ்சம் பரிசுத்த ஸ்தலத்தில் பாவ நிவிர்த்தியின் பொருட்டு ஆசரிப்பு கூடாரத்திற்குள்ளே கொண்டு

வரப்பட்டதோ, அந்தப்பலி புசிக்கப் படலாகாது, அது அக்கினியிலே தகனிக்கப்பட வேண்டும். (லேவி. 6:24-30)

பாவநிவாரணபலி நிறைவேற்றப்படும் பொழுது ஆசாரியன் செய்ய வேண்டியது என்ன செய்ய கூடாதது என்ன என்பது இங்கு தெரிவிக்கப்படுகின்றது.

நாம் இதுவரை பார்த்த சர்வாங்க தகனபலி, போஜனபலி, சமாதான பலி என்ற பலிகளுக்கும் மற்ற பலிகளுக்கும் மிக முக்கியமான வித்தியாசங்கள் உண்டு. இவற்றில் பிரதானமானது சுகந்த வாசனையான பலிகளில் பாவத்திற்கு இடமே கிடையாது என்பதாகும். கர்த்தரை மனமார நேசிப்பதால், அவரை தொழுது கொள்ள விரும்புவதால் ஒருவன் கொண்டு வரும் பலிகள் இந்த மூன்று விதமான பலிகளாகும்.

ஆனால் பாவ நிவாரண பலியும் குற்ற நிவாரண பலியும் அப்படிப்பட்டவை அல்ல. பாவம் என்பது இவற்றில் பெரும் பங்கு வகிக்கிறது. அவை கர்த்தருக்கு சுகந்த வாசனையான பலிகள் அல்ல. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மை தாமே மனிதரின் பாவ நிவாரண பலியாக கொடுத்ததால் இந்த பலிகளை தேவன் ஏற்று கொள்ளுகிறார். ஆனால் பாவத்தையோ வெறுக்கிறார்.

சில கட்டளைகள் தெளிவாக கொடுக்கப்படுவதை நாம் இங்கு காணலாம். முதலாவது கொடுக்கப்படுவது, பாவ நிவாரண பலியின் காளை சர்வாங்க தகனபலி செலுத்தும் இடத்தில்தான் கொல்லப்பட வேண்டும் என்பது. அதாவது அந்த இடம் வெண்கல பலிபீடத்திற்கு வடபுறம் ஆகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடமும் எருசலேமிற்கு வடக்கே ஆகும்.

இரண்டாவதாக அது மகா பரிசுத்தமுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. மனிதனின் பாவத்தை தன் மீது சுமக்கும் பழுதற்ற இளங்கடா மகா பரிசுத்தமுள்ளது என்று பார்க்கிறோம். (லேவி. 4:23). சிந்தப்படும் இரத்தம் பாத்திரங்களில் பிடிக்கப்பட்டு, பலிபீடத்தின் நான்கு கொம்புகளிலும் பூசப்படுகிறது. மீதி இரத்தம் பலிபீடத்தின் அடியில் ஊற்றப்படுகிறது. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவமறியாதவராக 33½ வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்தார். ஆட்டுக்கடாவின் இரத்தமே பாவத்திற்கு நிவாரணமாக ஊற்றப்பட்டது. அவர் ஆசாரியர்களால் பிடிக்கப்படும் முன் தமது சீஷர்களுடன் பஸ்கா அருந்துகையில் பாத்திரத்தை கொடுத்து: இந்த பாத்திரம் உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாய் இருக்கிறது என்றார். (லூக். 22:20). அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இந்த புதிய உடன்படிக்கையின் இரத்தம் மகா பரிசுத்தமானது. இந்த சிந்தப்பட்ட இரத்தத்தினாலே அன்றி நமக்கு பாவமன்னிப்பு இல்லை.

மூன்றாவதாக 'பாவநிவிர்த்தி' செய்ய அதை பலியிடுகிற ஆசாரியன் அதை புசிக்கக்கடவன் என்று பார்க்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதை பிட்டு, சீஷர்களுக்கு கொடுத்து: உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாய் இருக்கிறது. என்னை நினைவு கூறும்படி இதை செய்யுங்கள் என்றார் என்று லூக்கா 22:19-ம் வசனத்தில் பார்க்கிறோம். அவரது பரிசுத்த சரீரத்தில் பங்கு கொள்ள கூடியவர்கள் அவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று கொண்ட விசுவாசிகள் மட்டுமே.

நான்காவதாக ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திலே அது புசிக்கப்பட வேண்டும். அதின் மாமிசத்தில் படுகிற எதுவும் பரிசுத்தமாய் இருக்கும் என்பதாகும். பரிசுத்தராகிய தேவன் பாவநிவாரண பலியை ஏற்று கொண்டு எல்லாவற்றையும் பரிசுத்தப்படுத்துகிறார். பாவ நிவாரண பலியின் முக்கிய அம்சம் பரிசுத்தப்படுத்துவதே. பாவமற்ற இரத்தத்தை சிந்தும்போதுதான் பாவத்திற்கு பரிகாரம் கிட்டுகிறது. கர்த்தராகிய தேவன் அதற்காக கொடுக்கும் திட்டத்தின்படி நடைபெறுகையில் பாவநிவிர்த்தி நடக்கிறது.

ஐந்தாவதாக அதின் இரத்தம் எதிலும் தெறித்தால், பரிசுத்த ஸ்தலத்திலேயே கழுப்படவேண்டும் என்று பார்க்கிறோம். அது சமைக்கப்பட்ட பாண்டமும் உடைக்கப்பட வேண்டும் அல்லது கழுவப்பட வேண்டும். ஏனெனில் பாவம் முழுவதுமாக எடுக்கப்படவில்லை. ஆகவே மேலும் சுத்திகரிப்பு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். (1 யோ. 1:7). பிரியமானவர்களே, பாவம் எவ்வளவாய் நம்மை அசுத்தப்படுத்துகிறது, தீட்டுள்ளவர்களாக்குகிறது பாருங்கள். அதை நீக்குவதற்கு பரிசுத்த இரத்தம் இல்லாமல் வேறே வழி இல்லை. (2 கொரி. 5:21; ரோ. 8:3).

ஆறாவதாக ஆசாரியரில் ஆண்மக்கள் யாவரும் அதை புசிப்பார்களாக; அது மகா பரிசுத்தமானது என்று பார்க்கிறோம். ஆசாரியரும், ஆசாரிய குடும்பத்து ஆண்மக்கள் மட்டுமே இதனை புசிக்கலாம் என்பது கர்த்தரின் கட்டளை. இதனையே எபிரெயர் 13:10-ம் வசனத்தில் கூறப்பட்டிருப்பதை பார்க்கிறோம். ''நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளை புசிக்கிறதர்க்கு கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை.''

ஏழாவதாக நம் பார்ப்பது எந்த பாவநிவாரண பலியின் இரத்தத்தில் கொஞ்சம் பரிசுத்த ஸ்தலத்தில் பாவநிவிர்த்தியின் பொருட்டு ஆசரிப்பு கூடாரத்திற்குள்ளே கொண்டு வரப்பட்டதோ, அந்தப்பலி புசிக்கப்படலாகாது. அது அக்கினியிலே தகனிக்கப்பட வேண்டும் என்று பார்க்கிறோம். 29-ம் வசனத்தில் ஆசாரியர்கள் மட்டும் புசிக்கலாம் என்று கூறப்பட்ட பலி சாதாரண மனிதர்களின் பாவநிவாரண பலியாகும் (லேவி. 4:22,27). 30-ம் வசனத்தில் கூறப்படுவது பரிசுத்த ஸ்தலத்தில் இரத்தம் கொண்டுவரப்பட்ட பலி ஆகும். இது ஆசாரியர்களின் பாவ நிவிர்த்திக்காகவும் (லேவி. 4:3,7,12), இஸ்ரவேல் சயைார் எல்லோரின் பாவநிவிர்த்திக்காகவும் (லேவி. 4:13-21) செலுத்தப்படும் பலிகள் ஆகும். பாவநிவிர்த்தியின் நாளன்று செலுத்தப்படும் பலியையும் அவ்வாறே செய்ய வேண்டும் (லேவி. 16:27).

4.5 குற்ற நிவாரணபலி செலுத்தப்பட வேண்டிய முறை

குற்றநிவாரண பலியின் பிரமாணம் என்னவென்றால், அது மகா பரிசுத்தமானது. சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில், குற்றநிவாரண பலியும் கொல்லப்படவேண்டும்; அதின் இரத்தத்தை பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து, அதினுடைய கொழுப்பு முழுவதையும், அதின் வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், இரண்டு குண்டி காய்களையும், அவைகளின் மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், இவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்கு தகனபலியாகத் தகனிக்கக்கடவன்; அது

குற்றநிவாரணபலி. ஆசாரியரில் ஆண்மக்கள் யாவரும் அதை புசிப்பார்களாக; அது பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கப்பட வேண்டும்; அது மகா பரிசுத்தமானது. பாவநிவாரணபலி எப்படியோ குற்றநிவாரணபலியும் அப்படியே; அவ்விரண்டிற்கும் பிரமாணம் ஒன்றே; அதினாலே பாவநிவிர்த்தி செய்த ஆசாரியனை அது சேரும். ஒருவனுடைய சர்வாங்க தகனபலியை செலுத்தின ஆசாரியன் தான் செலுத்தின தகனபலியின் தோலை தனக்காக வைத்து கொள்ள வேண்டும். அடுப்பிலே பாகம் பண்ணப்பட்டதும், சட்டியிலும் தட்டின்மேலும் சமைக்க பட்டதுமான போஜனபலி யாவும் அதை செலுத்துகிற ஆசாரியனுடையவைகளாய் இருக்கும். எண்ணெயிலே பிசைந்ததும் எண்ணெயிலே பிசையாததுமான சகல போஜன பலியும் ஆரோனுடைய குமாரர் யாவருக்கும் சரிபங்காக சேர வேண்டும். (லேவி. 7:1-10)

இங்கு குற்ற நிவாரணபலி பற்றிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளன. குற்ற நிவாரண பலியும் (Guilt offering) பாவ நிவாரண பலியை போல மகா பரிசுத்தமானது. ஆனால் பாவ நிவாரண பலியில் பலியாட்டின் இரத்தம் பலிபீடத்தின் கொம்புகளில் பூசப்பட கட்டளை இடப்பட்டது போல இங்கு கட்டளை இடப்படவில்லை. பலிபீடத்தில் சுற்றிலும் தெளிக்குமாறே கட்டளை இடப்பட்டது. அது தகனபலி, சமாதான பலி முதலியவற்றை போன்றதாகும். ஆசாரியன் தான் செலுத்தினபலியின் தோலை தனக்காக எடுத்து கொள்ள வேண்டும். பலி செலுத்தவரும் மனிதனின் பரிசுத்த வாழ்வை பற்றிய விபரங்கள், வளர்ச்சிகள் தொடர்ந்து ஆசாரியனுக்கு தெரிந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதும், ஆராதனைக்கு வந்ததுடன் ஆசாரியர் சபையார் உறவு நின்றுவிடக்கூடாது என்பதையும் அது காட்டுகின்றது.

4.6 சமாதான பலிகள் செலுத்தப்பட வேண்டிய முறை

கர்த்தருக்கு செலுத்துகிற சமாதானபலிகளின் பிரமாணம் என்னவென்றால் அதை ஸ்தோத்திரத்துக்காக செலுத்துவானானால், அவன் ஸ்தோத்திரபலியோடுங்கூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும், எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும் படைக்கக்கடவன். அவைகளை படைக்கிறதும் அல்லாமல், புளித்த மாவினால் செய்த அப்பத்தையும், தன்னுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியோடுகூட படைக்க வேண்டும். அந்த படைப்பு முழுவதிலும் வகைக்கு ஒவ்வொன்றை எடுத்து கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் பலியாக செலுத்துவானாக; அது சமாதான பலியின் இரத்தத்தை தெளித்த ஆசாரியனுடையதாகும். சமாதானபலியாகிய ஸ்தோத்திர பலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றை தினமே புசிக்கப்பட வேண்டும், அதில் ஒன்றும் விடியற்காலம் மட்டும் வைக்கப்படலாகது. அவன் செலுத்தும் பலி பொருத்தனையாயாவது உற்சாகபலியாயாவது இருக்குமானால், அது செலுத்தப்படும் நாளிலும், அதில் மீதியானது மறுநாளிலும் புசிக்கப்படலாம். பலியின் மாம்சத்தில் மீதியானது மூன்றாம் நாளில் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது. சமாதானபலியின் மாம்சத்தில் மீதியானது மூன்றாம் நாளில்

புசிக்கப்படுமானால், அது அங்கிகரிக்கப்படாது; அதை செலுத்தினவனுக்கு அது பலிக்காது; அது அருவருப்பாயிருக்கும்; அதை புசிக்கிறவன் தன் அக்கிரமத்தை சுமப்பான். தீட்டான எந்த வஸ்துவிலாவது அந்த மாம்சம் பட்டதானால் அது புசிக்கப்படாமல் அக்கினியிலே சுட்டெரிக்கப்பட கடவது; மற்ற மாம்சத்தையோ சுத்தமாயிருக்கிறவன் எவனும் புசிக்கலாம். ஒருவன் தீட்டுள்ளவனாய் இருக்கையில் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தை புசித்தால், அவன் தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். மனுஷனுடைய தீட்டையாவது, தீட்டான மிருகத்தையாவது, அருவருக்கப்படத்தக்க தீட்டான மற்ற எந்த வஸ்துவையாவது ஒருவன் தொட்டிருந்து, கர்த்தருடைய சமாதான பலியின் மாம்சத்திலே புசித்தால், அவன் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்றார். (லேவி. 7:11-21)

லேவியராகமம் 7:11-21 வரை உள்ள வசனங்களில் மூன்று விதமான சமாதான பலி பற்றிய விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. தேவனிடத்தில் பெற்ற மன்னிப்பு, நன்மை முதலியவற்றிற்கு ஸ்தோத்திரம் செய்ய, இன்னும் கர்த்தருடன் நெருங்கி வாழ, பொருத்தனை செய்து தம் மன உற்சாகத்தை காட்ட செய்யப்படும் இந்தபலி விரும்பினால் மட்டும் செலுத்தப்படும் பலி ஆகும். ஸ்தோத்திர பலியை செலுத்தியவனும் அவனது நண்பர்களும் புசிக்கலாம். ஆனால் அது அதே நாளில் புசிக்கப்பட வேண்டும். புளிப்பில்லா அப்பங்களோடு புளித்தமாவினால் செய்த அப்பத்தையும் ஏறெடுத்து படைக்கும் பலியாக செலுத்த வேண்டும். மற்ற இரு வகை சமாதான பலிகளாகிய பொருத்தனை பலியும் உற்சாக பலியும் அடுத்த நாளிலும் அருந்தப்படலாம். இந்த பலியில் நெஞ்சுப்பகுதியும், காலும் ஆசாரியரிடம் கொடுக்கப்படுகின்றது. தேவ ஊழியரின் இருதயம் பரிசுத்தருக்கு உரியது என்றும், எப்பொழுதும் பரிசுத்தமானது என்றும், தேவ ஊழியரின் கால் ஊழியம் செய்வதற்கு மட்டுமே என்பதற்கும் அவை சான்றாக அமைகின்றன. கொழுப்பும் இரத்தமும் சாப்பிடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பது திரும்ப கூறப்பட்டு உள்ளது.

4.7 சமாதான பலியின் மாமிசம் புசிக்கப்பட வேண்டிய முறை

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், மாடு ஆடு வெள்ளாடு என்பவைகளின் கொழுப்பை நீங்கள் புசிக்கலாகாது. தானாய் செத்த மிருகத்தின் கொழுப்பையும், பீறுண்ட மிருகத்தின் கொழுப்பையும் பலவித வேலைகளுக்கு வழங்கலாம்; ஆனாலும் நீங்கள் அதை ஒரு போதும் புசிக்கலாகாது. கர்த்தருக்கு தகனபலியாக செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பை புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். உங்கள வாசஸ்தலங்களில் எங்கும் யாதொரு பறவையின் இரத்தத்தையாவது, யாதொரு மிருகத்தின் இரத்தத்தையாவது புசிக்கலாகாது. எவ்வித இரத்தத்தையாகிலும் புசிக்கிற எவனும் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டு போவன் என்று சொல் என்றார். (லேவி. 7:22-27)

லேவியராகமம் 7:22-38 வசனங்களை இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம்: அதாவது, பலியிட்ட மிருகத்தின் இரத்தம், கொழுப்பு முதலானவைகளை புசிக்கலாகாது என்று வசனங்கள் 22-27 வரை எழுதப்பட்டுள்ளது. இரண்டாவதாக, வசனங்கள் 28-38 வரை ஆசாரியர்களைச் சேரும் பங்கு என்ன என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது.

கொழுப்பும் உள்ளிந்திரியங்களும் பூரணமாக தகனிக்கப்பட வேண்டியவைகள் என்று முன்பு பார்த்தோம். பலியின் உள்ளான பாகங்களை முழுவதுமாக சுட்டெரிக்கப்படுவது உள்ளான பாவங்களை கர்த்தரின் பலி பீடத்தின்மேல் தீக்கிறையாக்குவதற்கு சமம் என்றும் பார்த்தோம். ஒரு முறை வெறுத்து தள்ளிய இரகசிய பாவங்களை மறுபடியும் ஏற்கக்கூடாது என்பதற்கு அடையாளமாக மாடு, ஆடு, வெள்ளாடு இவைகளின் கொழுப்பை இஸ்ரவேலர் புசிக்கக்கூடாது என்று கர்த்தர் கூறினார். தகனபலியாக செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பை அத்துமீறி தின்பவனின் வம்சம் முழுவதும் அழிக்கப்பட்டு போகும். அதே போல் இரத்தம் இவனின் உயிர் என்பதால், பறவைகள் மிருகங்களின் இரத்தத்தையும் புசிக்கலாகாது என்றும் மீறுகிறவன் அறுப்புண்டு போவான் என்றும் கர்த்தர் கூறுகிறார்.

4.8 சமாதான பலியை ஒருவன் செலுத்த வேண்டிய முறை

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், கர்த்தருக்கு சமாதானபலி செலுத்துகிறவன் தான் செலுத்தும் சமாதானபலியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வருவானாக. கர்த்தருக்கு தகனபலியாக படைப்பவைகளை அவன் கைகளே கொண்டு வரவேண்டும்; மார்க்கண்டத்தையும் அதனோடுகூட அதின் மேல் வைத்த கொழுப்பையும் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டும் படிக்கு கொண்டு வரக்கடவன். அப்பொழுது ஆசாரியன் அந்த கொழுப்பை பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும்; மார்க்கண்டமோ ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும். உங்கள் சமாதானபலிகளில் வலது முன்னந்தொடையை ஏறெடுத்து படைக்கும் பலியாக படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொடுப்பீர்களாக. ஆரோனுடைய குமாரரில், சமாதானபலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு, வலது முன்னந்தொடை பங்காக சேரும். இஸ்ரவேல் புத்திரரின் சமாதானபலிகளில் அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் ஏறெடுத்து படைக்கும் முன்னந்தொடையையும் நான் அவர்கள் கையில் வாங்கி, அவைகளை ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்குள் நடக்கும் நித்திய கட்டளையாக கொடுத்தேன் என்று சொல் என்றார். கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி ஆரோனும் அவன் குமாரரும் நியமிக்கப்பட்ட நாளிலே, இது அபிஷேகம் பண்ணப்பட்ட அவர்களுக்கு கர்த்தருடைய தகனபலிகளில் கிடைக்கும்படி உண்டான கட்டளை. இப்படி அவர்களுக்கு நித்திய நியமமாக கொடுக்கும்படி கர்த்தர் அவர்களை அபிஷேகம் பண்ணின நாளிலே கட்டளை இட்டார். சர்வாங்க தகனபலிக்கும் போஜனபலிக்கும் பாவநிவாரண பலிக்கும் குற்ற நிவாரண பலிக்கும் பிரதிஷ்டை பலிகளுக்கும் சமாதான பலிகளுக்கும் அடுத்த பிரமாணம் இதுவே.

கர்த்தருக்கு தங்கள் பலிகளை செலுத்த வேண்டும் என்று அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு சீனாய் வனாந்தரத்திலே கற்பிக்கும்போது இவைகளை மோசேக்கு சீனாய் மலையில் கட்டளையிட்டார். (லேவி. 7:28-38)

சமாதான பலியை செலுத்துபவன் அதனை தன் சொந்த கரங்களில் எடுத்து வர வேண்டும் என்று கர்த்தர் கூறுகிறார். பண்டிகை நாளில் செலுத்தப்படும் பலியென்றால் வேலைக்காரனின் கையில் கொடுத்துவிடலாம். அவன் மார்க்கண்டத்தையும் கொழுப்பையும் தன் கையில் வைத்து ஏறெடுத்து தேவ சந்நிதியில் அசைவாட்ட வேண்டும். அப்பொழுது ஆசாரியன் தன்னுடைய கைகளை அவன் கைகளின் கீழ் வைத்து ஏறெடுத்து படைக்க வேண்டும். தன் கையை மெதுவாக மேலும் கீழும், முன் பக்கமும் பின்னுமாக அசைவாட்ட வேண்டும். வலது முன் தொடையை ஆசாரியனிடம் கொடுத்து அவன் அதை ஏறெடுத்து படைக்கும் பலியாக படைக்க வேண்டும். அது ஆசாரியனையும் அவன் குமாரர்களையும் சேரும்.

ஆசாரியர்களுக்கு செலுத்த வேண்டிய பங்கும் பாகமும் பற்றி கூறும் பொழுது மார்கண்டமும், முன் தொடையும் ஆசாரியரின் பங்கு; இது நித்திய கட்டளை என்று எழுதப்பட்டுள்ளது. கானான் தேசம் பங்கிடப்படும் போது லேவியருக்கு தேசத்தின் நிலத்தில் பங்கு தரப்படவில்லை. கர்த்தரே அவர்களின் பங்காக கொடுக்கப்பட்டார். முழு நேர ஊழியர்கள் கர்த்தராலே போஷிக்கப்படுபவர்கள்; அவர்கள் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ள கூடாதவர்கள். (2 தீமோ. 2:4)

லேவியராகமம் 1 முதல் 7 அதிகாரங்களில் பலிகளைப் பற்றி பார்த்தோம். அந்த பலிகள் அனைத்தும் கிறிஸ்துவாகிய கிருபாதாரபலியை பிரதிபலிக்கின்றன. லேவியராகமம் 8,9-ம் அதிகாரத்தில் ஆரோன், அவன் குமாரர் பிரதிஷ்டை செய்யப்படுவதைப் பார்க்கிறோம். ஆசாரியனாகிய ஆரோன் உத்தம பிரதான ஆசாரியராகிய இயேசுவிற்கு அடையாளமாக இருக்கிறான். அவனது குமாரரான ஆசாரியர்கள் பரி. பேதுரு கூறுவது போன்று ஆவிக்கு ஏற்ற பலிகளை செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரிய கூட்டமாக கூட்டப்பட்டு வரும் விசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறார்கள்.

தொகுதி - 3
தேவ ஊழியத்திற்கு ஆசாரியர் பிரதிஷ்டை செய்யப்படல்

அத்தியாயம் - 5
ஆசாரிய ஊழியத்தின் மகத்துவம்

5.1 அழைக்கப்பட்ட ஆசாரியர்கள்

கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, வஸ்திரங்களையும், அபிஷேக தைலத்தையும், பாவநிவாரண பலிக்கு ஒரு காளையையும், இரண்டு ஆட்டு கடாக்களையும், ஒரு கூடையில் புளிப்பில்லா அப்பங்களையும் கொண்டு வந்து, சபையையெல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக கூடி வரச்செய் என்றார். (லேவி. 8:1-3)

ஆரோனும் அவனுடைய குமாரர்களும் பிரதிஷ்டை செய்யப்படுகிறார்கள். ஆரோன் என்ற ஆசாரியன் உத்தம பிரதான ஆசாரியராகிய இயேசுவிற்கு அடையாளமாக இருக்கிறான். அவனது குமாரரான ஆசாரியர்கள் பரிசுத்த பேதுரு கூறுவது போல, ஆவிக்கு ஏற்ற பலிகளை செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரிய கூட்டமாக கூட்டப்படும் விசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கின்றார்கள். இதனை நாம் மனதில் கொண்டு 8,9-வது அதிகாரத்தின் வசனங்களை பார்க்கும் பொழுது, புதிய ஏற்பாட்டில் வரும் பெரிய ஆசீர்வாதங்களுக்கும் இந்த இரண்டு அதிகாரங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கும் ஆழமான சம்பந்தங்கள் உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம்.

லேவியராகமம் 8-வது அதிகாரம் முதல் வசனத்தில் 'கர்த்தர் மோசேயை நோக்கி' என்றும் இரண்டாவது வசனத்தில் 'நீ', என்றும் துவங்குவது தேவனுக்கும் மோசேக்கும் இருந்த மிக நெருங்கிய தொடர்பை காட்டுகின்றது. 'நீ' என்பது மோசே; அவனை தவிர வேறு எவரிடமும் தேவன் எதுவும் பேசவில்லை. காரணம், அவனை போல் உத்தமமாக தன்னை பின்பற்றிய எவரையும் இதுவரை தேவனுடைய கண் காணவில்லை.

மோசேயின் பொறுப்புகள் பகிர்ந்து கொடுக்கப்படாத பொறுப்புகள். அவனது மாமன் எத்திரோ அவரது பொறுப்புகளை நல்மனம், நல்மனசாட்சி, நல்அறிவு படைத்தவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்படி கூறினார். இதனை யாத்திராகமம் 18-ம் அதிகாரத்தில் வாசிக்கலாம். எத்திரோ கூறியபடி நல்மனம், நல்மனசாட்சி, நல்அறிவு பெற்றவர்கள் எவரும் இல்லை என்பதை யாத்திராகமம் 32-ம் அதிகாரம் காட்டி விட்டது.

பரிசுத்தராகிய தேவனின் பொறுப்புகளை பகிர்ந்து கொடுக்க கர்த்தாதி கர்த்தரே கட்டளையிட வேண்டும். மனிதன் அல்ல; எத்திரோவும் அல்ல. நீ என்று ஆண்டவர்

மோசேக்கு கட்டளை கொடுத்தார். முட்செடியில் கூப்பிட்ட ஆண்டவர் திரும்ப திரும்ப மோசேயை கூப்பிட்டு கொண்டே இருக்கின்றார். ஆரோனை கூப்பிடு, என்கிறார். அவனது குமாரரை கூப்பிடு என்கிறார். சபையாரை கூப்பிடு என்கின்றார். இதுவரை மோசேயிடம் மட்டும் கூப்பிட்டு பேசியவர் அனைவரையும் கூப்பிடும்படி கூறுகின்றார். அது மட்டும் அல்ல, வெறும் கையாக எவரும் வரவேண்டாம் என்றும் கூறுகின்றார். வஸ்திரங்களையும் அபிஷேக தைலத்தையும் பாவ நிவாரண பலி செலுத்த ஒரு காளையையும் ஒரு கூடையில் புளிப்பு இல்லாத அப்பங்களையும் எடுத்து கொண்டு வாருங்கள் என்று கூறுகிறார்.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே மோசே செய்தான்; சபை ஆசரிப்பு கூடார வாசலுக்கு முன்பாக கூடினபோது, மோசே சபையை நோக்கி: செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்ட காரியம் இதுவே என்று சொல்லி (லேவி.8:4,5)

தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே செய்தான். இந்த ஒரே அதிகாரத்தில் மட்டும் ஒன்பது முறை இந்த வாக்கியம் வருகின்றது. கர்த்தர், தான் சொல்லுகிறபடி செய்கிறவர்களிடம் தொடர்ந்து அதிகமாக செய்வதற்கு சொல்லி கொண்டே இருப்பார். தம்மை நம்பி, கீழ்படிகிறவர்களிடம் அதிகமாக பொறுப்புகளை தருவார். அப்படி செய்வதற்கு தவறுகிறவர்களிடம் பேசுவதையே நிறுத்தி விடுவார். ஆரோன், அவன் குமாரர், சபையார் அனைவரும் ஒன்று திரண்டு விட்டனர். லேவியராகமம் 1:1-ம் வசனம் முதல் கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்து மோசேயை கூப்பிட்டு அவனிடம் மாத்திரம் பேசிக்கொண்டு இருந்தது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. சட்டப் புத்தகம் என அழைக்கப்படும் லேவியராகம புத்தகம் இந்த அதிகாரங்களில் ஓர் சரித்திர புத்தகமாக மாறி விட்டது. மக்கள் கூடி விட்டனர்; விழா துவங்க இருக்கிறது.

யாத்திராகமம் 40-ம் அதிகாரத்தில் ஆசரிப்பு கூடார பிரதிஷ்டையினை முடித்து விட்டு பிரயாணப்பட காத்திருக்கும் சபையார், 'ஆசாரியரின் பிரதிஷ்டைக்கு வாருங்கள்' என்ற வரவேற்பை ஏற்று கொண்டார்கள். பிரதிஷ்டைக்கு ஆரோன் உடுக்க வேண்டிய பரிசுத்த வஸ்திரம் எப்படி செய்யப்பட வேண்டும் என்று யாத்திராகமம் 39-ம் அதிகாரத்தில் கூறப்பட்டது. பிரதிஷ்டை வைபவத்தில் இடம் பெறும் பலிகள் எப்படி இருக்க வேண்டும் என்பது லேவியராகமம் 1-ம் அதிகாரம் முதல் 7-வது அதிகாரம் வரை தெளிவாக கூறப்பட்டது. மோசேயிடம் சீனாய் மலையில் பேசிய வேளையில் லேவியராகமம் 8-வது அதிகாரத்தில் இடம் பெறும் அனைத்தையும் முன்னதாகவே தேவன் கூறி இருந்தார். மிகவும் மகிழ்ச்சியுடன் கர்த்தர் அதனை மோசேயிடம் கூறினார். ''அங்கே இஸ்ரவேல் புத்திரரை சந்திப்பேன்; அந்த ஸ்தலம் என்னுடைய மகிமையினால் பரிசுத்தமாக்கப்படும். ஆசரிப்பு கூடாரத்தையும் பலிபீடத்தையும் நான் பரிசுத்தமாக்குவேன்; எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, ஆரோனையும் அவன் குமாரரையும் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரின் நடுவே நான் வாசம்பண்ணி, அவர்களுக்கு தேவனாயிருப்பேன். தங்கள் நடுவே நான் வாசம் பண்ணும்படி, தங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணின நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அவர்கள் அறிவார்கள். நானே அவர்கள் தேவனாகிய கர்த்தர்'' என்று யாத்திராகமம் 29:43-46-ல் பார்க்கிறோம். இந்த வசனங்களே யாத்திராகமம் புத்தகத்தின் கருப்பொருள்; அந்த புத்தகத்தின் மையமான வசனங்கள் ஆகும். அந்த வசனங்கள் லேவியராகம புத்தகத்திலே நிறைவேறப் போகின்றன.

லேவியராகமம் 8-வது அதிகாரத்தில் இடம் பெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் ஆரம்பம் முதல் அதிக தெளிவாக கர்த்தர் மோசேயிடம் கூறியவைகள் என்பதை யாத்திராகமம் 29-ம் அதிகாரத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ஆரோன் எவ்வளவு பெரிய தவறு செய்து இருந்தாலும் தொடர்ந்து அவனையே ஆசாரியனாக வைக்க தேவன் சித்தம் கொண்டார். தேவ இரக்கம், தேவ கிருபை அளவற்றது, ஆழமறியாதது என்பதை ஆரோன் போன்ற ஒரு பாவி ஆசாரிய பட்டம் பெற அழைக்கப்பட்டதில் இருந்து அறிந்து கொள்ளலாம். யாத்திராகமம் 32-ம் அதிகாரத்தில் கன்றுக்குட்டி வணக்கத்திற்கு கட்டளை கொடுத்தவன், ஆவியோடும் உண்மையோடும் மட்டுமே ஆராதிக்கக்கூடிய ஜீவனுள்ள தேவனுக்கு ஆராதனை நடத்த கட்டளை பெற்றான். அது கிருபையிலும் கிருபை; இரக்கத்திலும் இரக்கம்; தயவிலும் மகா தயவு. பரிசுத்தராகிய கர்த்தர் பாவிகளை நேசிக்கிறார்; ஏற்று கொள்ளுகிறார்; தமது ஊழியத்தில் அவர்களை பெரும் அளவில் பயன்படுத்த விரும்புகிறார் என்பதை இதில் இருந்து அறியும் பொழுது, நமது உள்ளம் நடுங்குகின்றது; கண்கள் கசிகின்றன. ''பரிசுத்த தகப்பனே, நாங்கள் நல்லவர்கள் இல்லாவிட்டாலும் எங்கள் ஒவ்வொருவர் மேலும் நீர் காட்டும் அன்பிற்கு எப்படி பதில் கொடுப்போம்?'' என மனம் விக்குகின்றது.

ஆரோன், அவனது குமாரர், சபையார் அனைவரும் மோசேயின் அடுத்த அறிவிப்பிற்கு காத்து கொண்டு இருக்கிறார்கள். யாத்திராகமம் 32-ம் அதிகாரத்தில் மோசே ஆரோன் இருவருக்கும் நடுவில் ஓர் இடைவெளி ஏற்பட்டாலும் லேவியராகமம் 8-ம் அதிகாரத்தில் இருந்து மோசே ஆரோன் என்ற இரு சகோதரர்கள் மிக முக்கிய பாத்திரங்களாக மாறி விட்டார்கள். ஆரோனின் வாழ்வில் லேவியராகமம் 10-வது அதிகாரத்தில் ஒரு சோக சம்பவம் இடம் பெறுவதையும், எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் ஆரோனின் வாழ்வில் ஓர் பாவ சம்பவம் இடம் பெறுவதையும் நாம் பார்க்க இருக்கின்றோம். ஆயினும் ஆரோனின் வாழ்வில் யாத்திராகமம் 32-ம் அதிகாரத்தில் தவறியது போல பின் வாங்கிய வாழ்வு அதற்கு பின்னர் வரவே இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மோசேயுடன் இணைந்து செயலாற்றும் ஒருவனாக ஆரோன் மாறிவிட்டான். எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரம் வரை மோசேயுடன் பணியில் தொடர்ந்து நடந்து சென்றான். தனது 123-வது வயதில் மரித்தான். அவன் மரித்து அடக்கம் பண்ணப்பட்ட மலை இன்னும்கூட ஆரோனின் மலை என்றே அழைக்கப் படுகின்றது.

கர்த்தர் கட்டளையிடாத எதையும் சபை மக்களுக்கு மோசே கூறியதே இல்லை. சபை மக்களுக்கு ஒளித்து மோசே எதுவும் செய்ததும் இல்லை. கர்த்தர் கட்டளையிட்டதை மட்டுமே மோசே கூறினான். மக்களிடம் பேசுவதற்கு எதுவும் இல்லையென்றால் கர்த்தரிடம் பேசுவதற்கு மோசே சென்று விடுவான். இதற்கு முன்பும் ஒரு முறை சபை மக்களை வந்து கூடும்படி மோசே கூறியதை யாத்திராகமம் 35-ம் அதிகாரம் முதல் வசனத்தில் வாசிக்கலாம். அப்பொழுது செயலாற்றலுக்கு சபை மக்களை மோசே அழைத்தான். இப்பொழுது ஆராதிப்பதற்கு அழைக்கின்றான். ஜனங்களின் பிரதிநிதிகளாக கர்த்தர் முன் நிற்க ஆசாரியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட போகிறார்கள். சபையாரின் கூடுகைக்கு முன்பாக ஆராதனை முறைமைகளை செவ்வையாய் செய்ய வேண்டிய ஆசாரியர்கள் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும். சபையே சாட்சியாக இக்காட்சியை காண வேண்டும். லேவியராகமம் 8:6-9 வசனங்களில் ஆரோனும் அவன் குமாரரும் ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள்.

5.2 ஆசாரியர்களை பிரதிஷ்டைக்கு ஆயத்தப்படுத்துதல்

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே, மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து, (லேவி.8:6)

அவர்கள் கழுவப்பட வேண்டும் என்று யாத்திராகமம் 29:4-வது வசனத்திலும் மோசேயிடம் ஆண்டவர் கூறியிருந்தார். யாத்திராகமம் 30:17-ன் படி ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு ஆசாரியர்கள் தங்களை கண்டிப்பாக கழுவிக்கொள்ள வேண்டும் என்று அறிகின்றோம். பரிசுத்தராகிய தேவனை அணுக போகின்றவர்கள் ஆயத்தமின்றி அவசரப்பட்டு சென்றால் சாவையே அணுகுவார்கள் என்பதை வேத புத்தகம் கூறுகின்றது. வெண்கல தொட்டியில் உள்ள தண்ணீர் அவர்கள் தங்களை கழுவி கொள்ள உதவி செய்யும் என்பதை நாம் அறிவோம். அவர்களின் புற சுத்தம் மட்டும் அல்ல, அக சுத்தமும் மிக மிக அவசியம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். லேவியராகமம் 8,9-ம் அதிகாரங்களில் ஆரோனும் அவனது நான்கு புத்திரர்களும் ஆசாரியர்களாக விமரிசையாக பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். ஆனால் 10-வது அதிகாரத்தில் நான்கு புத்திரர்களில் இரண்டுபேர் இறந்து போனார்கள். அதற்கு காரணம் அவர்கள் ஆராதனை முறைமைக்கு அலட்சியமாக சென்றதே. மகா பரிசுத்தமான தேவனை பின்பற்றுவதும் ஆராதிப்பதும் பெரும் சிலாக்கியமாக இருந்தாலும், அது ஓர் பெரும் பொறுப்பாகவும் இருக்கின்றது என்பதை நாம் அறிகின்றோம்.

மனுஷன் முகத்தை பார்க்கின்றான். கர்த்தரோ இருதயத்தை பார்க்கின்றார். இதயத்தை கழுவ வெண்கல தொட்டி உதவப்போவது இல்லை. ஆண்டவர் கழுவாமல் இதயங்கள் வெண்மையாக போவதும் இல்லை. ''என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவியருளும்'' என்று தாவீது அரசன் சங்கீதம் 51:4-ல் கதறுகின்றார். காரணம், இதயம் என்ற இருட்டு அறையில் அடைந்து கிடக்கும் அசுத்தங்களை, புதைந்து கிடக்கும் பாவங்களை அறிந்தவர் ஆண்டவர் ஒருவரே! ''நான் உன்னை கழுவா விட்டால் என்னிடத்தில் உனக்கு பங்கு இல்லை.'' என்று இயேசு பேதுருவினிடம் கூறினார் (பரி.யோ.13:8). துர்மனசாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரம் உள்ளவர்களாயும் இருக்க எபிரெயர் 10:22-வது வசனம் நம்மை ஞாபகப்படுத்துகின்றது. தண்ணீர் உடலை கழுவும். இயேசுவின் இரத்தம் உள்ளத்தை கழுவும்.

ஆரோனுக்கு உள்ளங்கியை போட்டு, இடைக்கச்சையை கட்டி, மேலங்கியை உடுத்தி, ஏபோத்தை தரித்து, அதின்மேல் ஏபோத்தின் விசித்திரமான கச்சையை கட்டி, அவனுக்கு மார்ப்பதக்கத்தை அணிந்து, மார்ப்பதக்கத்திலே ஊரீம், தும்மீம் என்பவைகளையும் வைத்து, அவன் தலையிலே பாகையை தரித்து பாகையின்மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொன் பட்டத்தை கட்டினான். (லேவி. 8:7-9)

ஆசாரியரின் பிரதிஷ்டையின் முதல் நிலை, அவர்கள் கழுவப்பட வேண்டும். உடல் மட்டும் அல்ல. உள்ளமும் சுத்தமாக இருக்கவேண்டும். அதனை தொடர்ந்து உடுத்தும் உடை பற்றிய விபரம் இடம் பெறுகின்றது. ஆரோன் என்ற ஆசாரியனின் உடை தேவன் அங்கீகரிக்கும் உடையாகவும், ஜனங்களின் நல்ல மதிப்பை பெறும் உடையாகவும் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. இரட்சிப்பு, நீதி என்ற இரண்டு பெயர்கள் அவனது

உடைக்கு கொடுக்கப்பட்டு உள்ளதை 132-வது சங்கீதத்தில் நாம் பார்க்கலாம். இந்த உடையினை எப்படி தயார் செய்ய வேண்டும் என்ற முழு விபரமும் ஏற்கெனவே யாத்திராகமம் 28-வது அதிகாரத்தில் கூறப்பட்டு உள்ளது. அதன்படியே யாத்திராகமம் 39-வது அதிகாரத்தில் தயாரிக்கவும்பட்டது. ஏசாயா 61:3 வசனம் கூறுவது போன்று, சீயோனிலே துயரப்பட்டவர்களை சீர்படுத்தவும், அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்திற்கு பதிலாக ஆனந்த தைலத்தையும், ஓடுங்கின ஆவிக்கு பதிலாக துதியின் உடையையும் கொடுக்கும் தேவனின் வல்லமையை ஆரோனின் உடை வெளிப்படுத்தி கொண்டே இருக்கின்றது. மேலும் ஏசாயா தீர்க்கதரிசி என்பவர் 61:10-ல் கூறுவது போன்று, 'இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்கு தந்தீர், என்று பின் ஒரு நாள் விசுவாசிகள் இயேசுவை போற்றும் அடையாளமாகவும், ஆரோனின் வஸ்திரம் அமைந்து விட்டது. ஆரோனின் வஸ்திரம் இரட்சிப்பு, நீதி என்பதை சுட்டி காட்டியது. விசுவாசிகளுக்கு இயேசுவே அந்த இரட்சிப்பாகவும், இயேசுவே அவர்களின் நீதியாகவும் மாறி விட்டார். ஆரோனின் பரிசுத்த வஸ்திரம் கொண்டு வரப்பட்டது. மோசேயின் கையில் கொடுக்கப்பட்டது. பிரதிஷ்டை என்பது முதலாவது ஆசரிப்பு கூடாரத்தில் துவங்கியது. இப்பொழுது அது ஆசரிப்பு கூடாரத்தில் ஆராதனைகளை நடத்த இருக்கும் ஆரோனில், அவனை தொடர்ந்து அவனுடைய நான்கு குமாரர்களில் முற்று பெற இருக்கின்றது.

மோசே, ஆரோனை உடுத்துவிப்பதை நாம் வாசிக்கிறோம். அவனது வஸ்திரத்தின் பெரும்பான்மையானவைகள் ஜனங்களையும், பன்னீரண்டு கோத்திரங்களையும் ஞாபகப்படுத்துகின்றவைகளாக அமைந்து இருந்தாலும் அவனது பாகையில் வைக்கப்பட்ட பரிசுத்த கிரீடம் என்ற பட்டம், அவனது அங்கியின் ஓரங்களில் கட்டப்பட்ட பொன் மணிகள் ஆகிய இரண்டும் அவனுக்கு அவனையே ஞாபகப்படுத்தும் சின்னங்களாக அமைந்து உள்ளன. அவனுடைய தலையில் காணப்படும் பரிசுத்த கிரீடம் பரிசுத்தத்தை தவிர வேறு எதையும் அவன் தலையில் அவன் சிந்திக்க முடியாது என்பதை தெரியப்படுத்துகின்றன. எதை குறித்தும் அல்லது யாரை குறித்தும் ஒரு கெட்ட எண்ணம் அவன் மனதில் வருமானால், அவன் பத்து கற்பனைகளில் இறுதி கற்பனையை மீறுகின்றவனாக கருதப்படுவான். மற்றவரின் உடமைகளை விரும்புகின்றவனாக மாறி விடுவான். இச்சை என்பது ஓர் இரகசிய பாவம். அந்த பாவத்தில் வாழ்கின்றவர்களுக்கு, வாழ்க்கை மலருவதே இல்லை. ஆரோனுக்கு தேவனால் மகா பரிசுத்த ஸ்தலம் வரைக்கும் பிரவேசிக்கும் சிலாக்கியம் கிடைத்தது. அதுமட்டுமல்ல அவன் பெற்ற பதவியினால் மக்கள் நடுவில் அவனுக்கு பெரும் செல்வாக்கும் கிடைக்க போகின்றது. பெற்ற இந்த இரண்டு பெரிய சிலாக்கியங்களையும் அவன் தன்னுடைய மனதிலே பேணி, பெருமையான சிந்தை தலையில் வந்து விடக்கூடாது என்று பாகையில் உள்ள பரிசுத்த கிரீடம் அவனை உணர்த்திக் கொண்டே இருக்கும். பெருமை, இச்சை ஆகிய இரண்டு கொடூர செயல்களுக்கு ஆரோன் விலகி நிற்க வேண்டும் என்பதை அவனுக்கு ஒரு பாடமாக அவனுடைய நெற்றியில் பதிக்கப்பட்ட பரிசுத்த கிரீடம் ஞாபகப்படுத்தி கொண்டே இருக்கும்.

பெருமை என்ற பாவத்தினால் பிரதான தூதன் பிசாசாக மாறி விட்டான். இச்சை என்ற பாவத்தினால் ஆதி பெற்றோர்கள் ஏதேனையே இழந்து விட்டார்கள். ஆவியின் கனியோ மிக சிறந்த கிரீடமாக மனிதனுக்கு மாறி விட்டது. மோசே அல்ல, பரிசுத்த ஆவியானவரே அதனை எவருக்கும் அருளி செய்கின்றார். நெற்றியில் அல்ல, வாஞ்சிக்கும் எவருடைய இதயங்களிலும் அந்த ஆவியின் கனி அருளப்படுகின்றது. அன்பு, சந்தோஷம், சமாதானம்,

நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்ற அனைத்து உயர்ந்த குணாதிசயங்களும் பரிசுத்த இதயங்களில் கர்த்தரால் பதிக்கப்பட்ட முத்துக்கள் ஆகும்.

5.3 ஆசாரியர்கள் அபிஷேகிக்கப்படல்

பின்பு மோசே அபிஷேக தைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம் பண்ணி, பரிசுத்தப்படுத்தி, அதில் கொஞ்சம் எடுத்து பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலி பீடத்தையும், அதின் சகல பணி முட்டுகளையும் தொட்டியையும், அதின் பாதத்தையும் பரிசுத்தம் படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணி அபிஷேக தைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து அவனை பரிசுத்த படுத்தும்படி அபிஷேகம் பண்ணினான். (லேவி.8:10-12)

மோசே அபிஷேக தைலம் எடுத்து வாசஸ்தலத்தையும், அதில் உள்ள அனைத்தையும் அபிஷேகம் செய்தான். அனைத்து பொருள்களையும் பரிசுத்த தேவனுக்காக பரிசுத்த படுத்தி விட்டான். மகா பரிசுத்தமுள்ள தேவன் அவர்கள் நடுவில் குடி கொள்ள வந்து விட்டார். அவருக்கு என்று ஓர் ஆசரிப்பு கூடாரம் அவர்கள் அமைத்து விட்டார்கள். தேவனுடைய மகிமை இந்த கூடாரத்தை நிறைத்து நிற்கின்றது. அந்த பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருக்கும் அத்தனையும் அவருக்கே சொந்தமானவைகள். எனவே கர்த்தருடைய ஆராதனையின் முறைகளுக்காக ஏற்கெனவே அவர் கூறியபடி செய்யப்பட்ட அத்தனை பாத்திரங்களும், பதார்த்தங்களும் அங்கு அமைந்துள்ள அத்தனை கருவிகளும் இனிமேல் வேறு எதற்கும் பயன்படுத்தப்படமுடியாது. அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்த கருவிகளை தவிர வேறு கருவிகளை ஆசாரியர்கள் பயன்படுத்தவும் கூடாது.

பரிசுத்தம் என்றால் பிரித்து எடுக்கப்படுதல் என்பது ஆகும். ஆசரிப்பு கூடாரத்தின் சுற்றுப் புறங்களிலும் ஆசாரிப்பு கூடாரத்தின் உட்புறங்களிலும் இருக்கும் அத்தனையும் இனி பரிசுத்தருக்கே என்று பிரித்து எடுத்து விட்டார்கள். பரிசுத்தரின் பணி செய்வதற்கு மாத்திரமே அவைகள் பயன்படுத்தப்படும். சகரியா 14:20,21 ஆகிய வசனங்களில் குதிரைகளின் மணியும், சாதாரண பானையும், பரிசுத்தமாக்கப்படும் நாள் வரும் என்று நாம் பார்க்கலாம். இந்த முன்னுரைத்தல் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மர நிழலில் நிறைவேறியது. இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது. (1யோ.1:7)

அவர்கள் கழுவப் பட்டார்கள். உடுத்துவிக்கப் பட்டார்கள். தொடர்ந்து ஆரோன் அபிஷேகம் செய்யப்பட்டான். ஆசாரியனாகிய ஆரோன் உத்தம பிரதான ஆசாரியராகிய கர்த்தராகிய இயேசுவை சுட்டி காட்டுகின்றவனாக இருக்கின்றான். எந்த பலியும் இடம் பெறுவதற்கு முன்னதாகவே ஆரோனுடைய அபிஷேகம் இடம் பெற்றது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் அவனுடைய நான்கு குமாரரின் அபிஷேகம் அனைத்து பலிகளும் செலுத்தி முடிந்த பின்னரே இடம் பெற்றது என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆரோனின் அபிஷேகம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. அவனுடைய பிள்ளைகள் அபிஷேகம் செய்யப்பட்டதை பின்னதாக எண்ணாகமம் 3:3-ல் நாம் பார்க்கலாம். ஆரோன் இயேசுவுக்கு ஒரு மாதிரியாக இருக்கின்றான். அவனுடைய நான்கு குமாரர்கள் இயேசுவின் மீது விசுவாசம் வைக்கும் தேவ பிள்ளைகளுக்கு மாதிரிகளாக இருக்கின்றார்கள். இயேசு, பிதாவினால் அபிஷேகம் செய்யப்பட்டார். இயேசுவை

விசுவாசிக்கின்றவர்கள் பிதாவிலும், குமாரனிலும் நின்று புறப்படுகின்ற பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் செய்யப்படுகின்றார்கள். பிதாவினால் அபிஷேகம் செய்யப்பட்ட இயேசு எவ்வித பாவ அறிக்கையும் செய்யவே இல்லை. எனவேதான் கிருபாதார பலிகள் செலுத்தப்படுவதற்கு முன்னதாக இயேசு அபிஷேகம் செய்யப்பட்டார். பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் செய்யப்படும் மனிதர் பாவங்களை அறிக்கை செய்தே தீர வேண்டும். காரணம் எந்த மனிதனும் பாவியே. ஆனால் இயேசு பிறப்பினால் தேவ குமாரன் என்று பரிசுத்த மத்தேயு 1:21-வது வசனம் கூறுகின்றது. விசுவாசிகள் மறுபிறப்பினால் தேவனுடைய பிள்ளைகளென்று பரிசுத்த யோவான் 1:12 கூறுகின்றது.

அபிஷேக தைலம் என்பது அபிஷேகம் செய்ய உபயோகிக்கப் பட்டது. அபிஷேக தைலத்தை எப்படி தயாரிக்க வேண்டும் என்பது ஏற்கெனவே யாத். 30:23-29 வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. லேவி.8:12-ல் ஆரோனாகிய ஆசாரியனை அபிஷேகம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட அதே அபிஷேக தைலம், 1சாமு. 16:13-வது வசனத்தில் ஒரு அரசனை அபிஷேகம் செய்யவும், 1இரா. 19:16-ம் வசனத்தில் ஒரு தீர்க்கதரிசியை அபிஷேகம் செய்யவும் பயன்படுத்தப்பட்டது. மேசியாவாகிய கிறிஸ்துவே பின்னர் ஆசாரியராகவும், தீர்க்கதரிசியாகவும் மகிமையின் அரசனாகவும் மாறி விட்டார்; அபிஷேகிக்கப்பட்டார். கிறிஸ்துவை அபிஷேகம் செய்தவர் பிதாவாகிய கர்த்தரே. ''கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்.'' என்று ஏசாயா 61:1-ல் பார்க்கிறோம்.

கிறிஸ்து என்பதின் சரியான பொருள் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதே. அபிஷேகம் என்பது பரிசுத்தத்தை காட்டுகின்றது. அபிஷேகம் என்பது பரிபூரணத்தை காட்டுகின்றது. அபிஷேகம் என்பது அதிகாரத்தை காட்டுகின்றது. அபிஷேகம் என்பது அந்தஸ்தை காட்டுகின்றது. உத்தம பிரதான ஆசாரியராகிய இயேசுவே பரிசுத்தர், சகல பரிபூரணமும் அவரில்தான் உண்டு. வானத்திலும், பூமியிலும் உள்ள சகல அதிகாரங்களும் அவர் கையிலே உண்டு (மத். 28:18). அந்தஸ்து, துரைத்தனங்கள், அதிகாரங்கள், வல்லமைகள், கர்த்தத்துவங்கள், இம்மையிலும் மறுமையிலும் காணும் எல்லா நாமங்கள், அனைத்திலும் இயேசு மேலானவராக நிற்கின்றார். விசுவாசிகளுக்கு பரலோகத்தில் இயேசுவை தவிர வேறு விருப்பம் வர போவதே இல்லை. பூலோகத்தில் விசுவாசிகளுக்கு இயேசுவை தவிர வேறு பிரியமும் வருவதே இல்லை.

பின்பு மோசே, கர்த்தர் தனக்கு கட்டளை இட்டபடியே, ஆரோனின் குமாரரை வரவழைத்து; அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி; இடைக்கச்சைகளை கட்டி, குல்லாக்களை தரித்து, (லேவி. 8:13)

லேவியராகமம் 8-வது அதிகாரம் ஓர் மகத்துவமான அதிகாரமாக தேவன் நமக்கு காண்பித்து கொண்டு இருக்கின்றார். கர்த்தருடைய வசனங்கள் நம்முடைய இதயங்களை உற்சாகப்படுத்துகின்றன. நாம் பிரதிஷ்டை வைபவத்தை பார்த்து கொண்டே இருக்கின்றோம். ஆரோன் ஆசாரியனாக பிரதிஷ்டை செய்யப்படுகின்றான். அது ஓர் மகத்துவமான நிகழ்ச்சியாக நம்முடைய கண்களுக்கு தெரிகின்றது.

ஆரோனின் குமாரர்கள் மோசேயினால் வரவழைக்க படுவதை நாம் பார்க்கின்றோம். கர்த்தர் கட்டளை இட்டபடியே மோசே அவர்களுக்கு அங்கிகளை உடுத்துவிக்கிறான்.

இடைக்கச்சைகளை கட்டி குல்லாக்களை தரிக்கின்றான். ஆரோனுக்கு மட்டுமே பரிசுத்த கிரீடம் என்பது நெற்றியிலே அமர்த்தப்பட்டது. ஆரோன் ஒருவனே அன்று ஆசாரியனாக பிரதிஷ்டை செய்யப்பட்டான். ஆனால் அவனுக்கு உதவியாளர்களாக இருக்க அழைக்கப்பட்ட அவனுடைய நான்கு குமாரர்களுக்கும் குல்லாக்கள் கொடுக்கப்பட்டன. அவர்கள் இனிமேல் ஆரோனின் குமாரர்கள் என்று அறியப்படுவதைவிட ஆரோனுக்கு உதவியாளர்கள் என்று அமைந்து விட்டார்கள். லேவியராகமம் 8:14-17-வது வசனம் வரை, தொடர்ந்து செலுத்தப்பட வேண்டிய பலிகள் முறைப்படி இடம் பெற்று வருவதை காணலாம். யாத்திராகமம் 29-ம் அதிகாரத்தில் ஏற்கெனவே கூறப்பட்டது போல, அத்தனை பலிகளும் இடம் பெற்று வருகின்றது. முதலாவது செலுத்தப்பட வேண்டிய பலி பாவ நிவாரண பலி ஆகும்.

5.4 ஆசாரியர்களுக்கு பாவ நிவிர்த்தி செய்யப்படல்

பாவ நிவாரண பலிக்கான காளையை கொண்டு வந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்; அப்பொழுது அது கொல்லப்பட்டது, மோசே அதின் இரத்தத்தை எடுத்து, தன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசி, பலிபீடத்திற்காக பிராயச்சித்தம் செய்து, மற்ற இரத்தத்தை பலிபீடத்தின் அடியில் ஊற்றி விட்டு, அதின்மேல் பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு அதை பரிசுத்தப்படுத்தினான். பின்பு மோசே, கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே, குடல்கள்மேல் இருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேல் தகனித்து, காளையையும் அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்துக்கு புறம்பே அக்கினியிலே சுட்டெரிந்தான். (லேவி. 8:14-17)

ஆசாரியர்களுக்காக கொடுக்கப்படும் பாவ நிவாரண பலியைப் பற்றி பார்க்கின்றோம். அந்தப் பலியின் தலையில் கை வைக்கத்தக்கதாக ஆசாரியனான ஆரோனும், அவனுடைய நான்கு குமாரர்களும் அழைக்கப்படுகின்றனார்கள். அப்பாவும் நான்கு ஆண்பிள்ளைகளும் தேவனுடைய ஊழியம் செய்யத்தக்கதாக பலி செலுத்தப்படும் மிருகத்தின் தலை மீது தங்கள் கைகளை வைத்து நின்ற காட்சி ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட காட்சியாக அன்று இருந்திருந்திருக்கும். அவர்கள் தங்களது சொந்த பாவங்களுக்காக மன்னிப்பு தேட வேண்டும். அதற்கு குறிக்கப்பட்ட பாவ நிவாரண பலியை செலுத்தியாக வேண்டும். அவர்கள் குணப்பட்ட பின்பு அவர்களுடைய சகோதரர்களை ஸ்திரப்படுத்த வேண்டும். கர்த்தாதி கர்த்தரிடம் பாவங்களை அறிக்கையிட மனிதர்கள் யோசிப்பதும், தாமதிப்பதும், அவர்களுடைய சொந்த வாழ்க்கைக்கு வரப்போகும் நன்மைகளை தடை செய்து விடும்; ஆசீர்வாதங்களை இழக்க செய்து விடும். தங்கள் பாவங்களை மறைக்கிறவர்கள் வாழ்வு அடைந்தது இல்லை. ஆனால் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகின்றவர்களோ இரக்கம் பெறுகின்றார்கள். எனவே பாவநிவாரண பலியே முதலாவது இடம் பெறுகின்றது. எந்த நன்மைகளையும், எந்த ஆசீர்வாதங்களையும் பெற்று கொள்ளுவதற்கு முதலாவது இடம் பெற வேண்டிது பாவ அறிக்கையே.

பாவநிவாரண பலியினை தொடர்ந்து தகனபலி இடம் பெறுகின்றது.

பின்பு அவன் சர்வாங்க தகனபலிக்கு ஆட்டுக்கடாவை கொண்டு வந்தான்; அதின் தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தை பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தான். ஆட்டுக்கடா சந்து சந்தாக துண்டிக்கப்பட்டது; கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே, மோசே அதின் தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் தகனித்தான். குடல்களையும் தொடைகளையும் தண்ணீரால் கழுவினபின், மோசே ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்கு சுகந்த வாசனைக்கான சர்வாங்க தகனபலியாகத் தகனித்தான். (லேவி.8:18-21)

பாவ மன்னிப்பிற்கு அடையாளமாக, பாவ நிவாரண பலி முதலாவது கொடுக்கப்பட்டது. தொடர்ந்து முற்றும் ஒப்பு கொடுக்கும் அனுபவத்திற்கு அடையாளமாக தகனபலி இடம் பெறுகின்றது. பாவ அறிக்கை செய்து, பாவ மன்னிப்பை பெற்ற பின்னர் முற்றும் ஒப்பு கொடுத்தல் இடம் பெறாவிட்டால் பெற்ற பாவமன்னிப்பு நிலைத்து நிற்பது இல்லை.

பின்பு பிரதிஷ்டை படுத்துவதற்குரிய மற்ற ஆட்டுக்கடாவை கொண்டு வந்தான்; அதின் தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள். பின்பு அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலது காதின் மடலிலும் வலது கையின் பெரு விரலிலும் வலது காலின் பெரு விரலிலும் பூசினான். பின்பு ஆரோனுடைய குமாரரையும் அழைத்தான்; மோசே அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலது காதின் மடலிலும் வலது கையின் பெரு விரலிலும் வலது காலின் பெரு விரலிலும் பூசி, இரத்தத்தை பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து, கொழுப்பையும், வாலையும், குடல்கள் மேலிருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேலிருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னம் தொடையையும் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் வைத்திருந்த புளிப்பில்லா அப்பங்களின் கூடையிலுள்ள புளிப்பில்லா அதிரசத்தில் ஒன்றையும், எண்ணெயிட்ட அப்பமாகிய அதிரசத்தில் ஒன்றையும், ஒரு அடையையும் எடுத்து, அந்த கொழுப்பின்மேலும் முன்னம் தொடையின்மேலும் வைத்து, அவைகளையெல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவன் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும் பலியாக கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி, பின்பு மோசே அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின் மேலிருக்கிற தகனபலியின்மேல் தகனித்தான்; அவைகள் சுகந்த வாசனையான பிரதிஷ்டைப் பலிகள்; இது கர்த்தருக்கு தகனபலியானது. பின்பு மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டினான். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே அது மோசேயின் பங்காயிற்று. (லேவி.8:22-29)

ஓர் மிக சிறப்பு நிறைந்த பலி செலுத்தப்படுவதை பார்க்கிறோம். இந்த பலி இதற்கு முன்னர் கூறப்படவே இல்லை. இந்த பலியின் பெயர் சுகந்த வாசனையான பிரதிஷ்டைப் பலி என்று 22,29 ஆகிய வசனங்களில் வருகிறது. ஆசாரிய ஊழியத்திற்கு என்று பிரதிஷ்டை செய்யப்படும் ஆசாரியன் பிரதிஷ்டை செய்யப்படும் நேரத்தில் மட்டுமே இந்த பலியை செலுத்தியாக வேண்டும். ஆசாரியன் ஆண்டவருக்கும், அடியவர்களுக்கும் இடையிலே நிற்கும் மகத்துவமான ஓர் தேவ ஊழியன் ஆவான். தேவ சித்தம் ஒன்றை தவிர வேறு எதுவும் அவன் சிந்திக்கவோ செய்யவோ முடியாது. தேவ சித்தத்திற்கு தன்னை பரிபூரணமாக ஒப்பு கொடுக்கிறேன் என்று உலகத்திற்கு காட்ட, பிரதிஷ்டை பலி என்ற ஓர் விசேஷமான பலி பிரதிஷ்டை நேரத்திலே இடம் பெறுகின்றது. தேவ சித்தம் ஒன்றே ஆசாரியனாகிய அவனுடைய முழு விருப்பம் என்பதை அந்த பலியின் மூலம் அவன் எடுத்து கூறுகின்றான். இனிமேல் நான் அல்ல. பரிசுத்தராகிய தேவனே என்னில் ஜீவிக்கட்டும் என்று கூறுகின்றான். இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்று இந்த பலியின் வாயிலாக அவன் கூறுகின்றான். அவனுடைய முழு சரீரத்தையும் தேவனுடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கின்றான்.

பிரதிஷ்டை பலி என்று கொடுக்கப்பட்ட அந்த பலியின் இரத்தம் எடுக்கப்பட்டு ஆரோனின் வலது காதிலும், ஆரோனின் வலது கை பெரு விரலிலும் வலது கால் பெரு விரலிலும் பூசப்பட்டது என்பதை 23-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் அவயவங்களாக பாவத்திற்கு ஒப்புக்கொடாமல் உங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்பு கொடுங்கள் என்று ரோமர் 6:13-வது வசனம் கூறுவது போல பிரதிஷ்டை பலி இடம் பெறுவதை நாம் பார்க்கலாம். காதில் பூசப்பட்ட இரத்தம் இனி அவர்களுடைய காது கர்த்தராகிய தேவனின் சத்தத்தை மட்டுமே கேட்கும் என்பதற்கு ஒரு அடையாளமாக மாறி விட்டது. கையில் பூசப்பட்ட இரத்தம், தாங்கள் கேட்ட சத்தத்திற்கு உடனுக்கு உடன் முழுவதுமாக இணங்கி நடப்போம் என்பதற்கு ஓர் அடையாளம் ஆகி விட்டது. காலில் பூசப்பட்ட இரத்தம், நாங்கள் எதற்கு இணங்குவோம் என்று கூறினோமோ அதை இனிமேல் தவறால் இயக்குவோம் என்பதற்கு ஓர் அடையாளமாக மாறி விட்டது. இன்னும் ஒரு விதத்தில் கூற வேண்டும் என்றால் இனிமேல் என்னுடைய முழு சரீர உறுப்புக்களும் என்னுடைய ஆண்டவரின் சித்தத்தை நிறைவேற்ற மட்டுமே இயங்கும் என்ற ஓர் தீர்மானமே அந்தப் பிரதிஷ்டையின் பலியாக பிரதிபலித்து கொண்டு இருக்கின்றது.

தகனபலி, போஜனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி, குற்ற நிவாரணபலி என்ற அத்தனை பலிகளையும் செலுத்தி விட்டு பிரதிஷ்டை என்ற ஒன்று வாழ்க்கையில் இல்லை என்றால் அத்தனை பலிகளும் செலுத்தி பிரயோஜனந்தான் என்ன? ஆசாரங்கள் இருந்தும் அர்ப்பணம் என்ற ஒன்று அன்றாட வாழ்க்கையில் இல்லை என்றால் அழகுதான் என்ன? அகச் சுத்தம் இல்லாம் புறச்சுத்தம் இருந்து பிரயோஜனந்தான் என்ன? உடலின் இச்சைகளுக்கு சாகாமல் எந்த மனிதனும் அகச்சுத்தம் காண்பதும் இல்லை. கர்த்தரின் சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்காமல் எந்த ஒரு மனிதனும் உடல் இச்சைகளில் வெற்றி பெறுவதும் இல்லை. எனவே பிரதிஷ்டை பலி மற்ற பலிகளை போல ஒரு மிருகத்தை செலுத்தி விட்டு புறப்பட்டு சென்று விடும் ஓர் பலியாக இல்லாமல் என்னையே ஜீவபலியாக ஒப்பு கொடுக்கிறேன் என்று வலிய விரும்பி மனிதன் தன்னை அர்ப்பணிக்கும் பலியாக அங்கு தெரிகின்றது. என் சரீரம் தேவனுக்கு பிரியமும் பரிசுத்தமுமான பலியாக மாறி விட்டது என்பதை பிரதிஷ்டை பலி சுட்டி காட்டுகின்றது. பலியும் காணிக்கையும் அல்ல. என்னுடைய சரீரமே தூய்மையின்

இருப்பிடமாக ஆகட்டும் என்று 40-வது சங்கீதம் அறிவிக்கின்றது. எபிரெயர் 10:5-வது வசனமும் அதே கருத்தை பறைசாற்றுகின்றது.

ஆரோனுக்கு பூசப்பட்டதை தொடர்ந்து ஆரோனின் நான்கு குமாரர்களுக்கும் கூட வலது காதிலும், வலது கை பெருவிரலிலும், வலது கால் பெருவிரலிலும் பிரதிஷ்டையின் இரத்தம் பூசப்பட்டது. ஆயினும் அந்த நான்கு குமாரரில் இரண்டு பேர் பிரதிஷ்டை பலியின் இரத்தம் பூசப்பட்டிருந்தும், இதயத்தை திறக்கவில்லை என்பதை 10-வது அதிகாரத்தில் பார்க்கலாம். மனுஷன் முகத்தை பார்க்கின்றான். கர்த்தரோ இருதயத்தை பார்க்கின்றார். புற அலங்காரங்கள் மனிதனின் கண்களுக்கு வசீகரமாக தெரிகின்றது. ஆனால் தேவாதி தேவனுடைய கண்களுக்கோ மனிதனின் உள் அலங்காரமே மிக பிரியமானது.

லேவியராகமம் 8:25,26 ஆகிய வசனங்களில் பிரதிஷ்டையில் பலியின் கொழுப்பு பகுதிகளும் முன் தொடை பகுதிகளும் எடுக்க படுவதையும் அத்துடன் புளிப்பு இல்லாத அப்பங்களின் கூடையிலிருந்து ஒரு அதிரசமும், ஒரு அடையும் எடுக்கப்படுவதையும் நாம் பார்க்கலாம். 27-வது வசனத்தில் அவைகள் அனைத்தும் ஆரோனின் உள்ளங்கைகளில் வைக்கப்படுகின்றது என்பதை நாம் பார்க்கலாம். ஆரோனின் உள்ளங்கை நிரப்பப்படுகின்றது. பிரதிஷ்டை என்று யாத்திராகமம் 29:9-ல் ஒரு வார்த்தை வருகின்றது. இந்த அதிகாரத்திலும் பிரதிஷ்டை என்ற அந்த வார்த்தை வருகின்றது. இரண்டு இடத்திலும் பிரதிஷ்டை என்பதை சுட்டி காட்ட பயன்படுத்தப்பட்ட எபிரேயச் சொல் டெருஃபா (terufah) என்ற ஒரே சொல் ஆகும். அந்த எபிரெய சொல்லிற்கு சரியான பொருள் என்ன என்றால் ''உள்ளங்கை நிரப்பப்படுதல்'' என்பது ஆகும். அதே நிரப்பப்படுதலை இங்கு ஆரோனுடைய உள்ளங்கைகளில் அனைத்தையும் வைப்பதிலிருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

அந்த நாட்களிலே அரசர்கள் எல்லாரும் ஒன்றாக சேர்ந்து கொண்டு அவர்களை எதிர்க்கும் அரசர்களிடம் சண்டையிட செல்லுவார்கள். யுத்தத்தில் வெற்றி பெற்று திரும்பி வரும் பொழுது எதிரிகளின் விலை உயர்ந்த பொருட்களை எடுத்து கொள்ளுவார்கள். யுத்தத்தை முன்னாக நின்று நடத்திய அரசர்களை வரிசையாக நிறுத்தி, அவர்கள் உள்ளங்கைகளை திறந்து வைக்கும்படி கூறி, கொள்ளையாடின பொருட்களிலே விசேஷமான பொருட்களை அந்த அரசர்களின் உள்ளங்கைகளில் வைத்து அவர்களுடைய உள்ளங்கைகளை நிரப்புவார்கள்.

ராஜாதி ராஜனுக்கு ஆசாரிய ஊழியம் செய்யும் ஆரோனின் உள்ளங்கைகள் நிரப்ப படுகின்றது. ஆசரிப்பு கூடாரத்திற்கு ஆசாரியனாக ஆரோன் பிரதிஷ்டை செய்யப்படுகின்றான். அவனுடைய உள்ளங்கைகள் எவற்றால் நிரப்பப்படுகின்றன? அந்த ஆசரிப்பு கூடாரத்தினை திறந்து ஆராதனையை நீ நடத்து என்று ஆசரிப்பு கூடாரத்தின் சாவி ஆரோனின் உள்ளங்கைகளில் கொடுக்கப்படுகின்றது. ஆசரிப்பு கூடாரத்தின் சட்டங்கள் அவன் உள்ளங்கைகளில் வைக்கப்படுகின்றது. ஆசரிப்பு கூடாரத்தினை பரிசுத்தத்தோடு காத்து கொள்ள வேண்டும் என்கிற அதிகாரம் அவனுடைய உள்ளங்கைகளில் வைக்கப்படுகின்றது. பின் ஒரு நாள், ஒரு அரசனே பரிசுத்தரின் சட்டத்தை மீறி தேவ ஆலயத்திற்குள் நுழையும் பொழுது ஆசாரியர்கள் தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தினார்கள் என்பதை நாம் நாளாகம புத்தகத்தில் பார்க்கலாம்.

பரிசுத்தரின் சட்ட பாதுகாப்பாளர்களாக ஆசரிப்பு கூடாரத்தின் ஆசாரியர்களும், பின்னதாக தேவ ஆலயத்தின் ஆசாரியர்களும் மாறினார்கள். ஆலயத்தின் சட்டத்தை மீறிய

அரசனிடம் ஆசாரியர்கள் சீறி எழும்பினார்கள். தேவன் அவர்களுக்கு கொடுத்த அதிகாரத்தை பயன்படுத்தினார்கள். 'உசியா ராஜாவே' என்று மதிப்பு கொடுத்து அவனை அழைக்கவில்லை. உசியாவே என்று கூறினார்கள். ''உசியாவே, கர்த்தருக்கு தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்தது அல்ல, தூபம் காட்டுகிறது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே உரியதாகும். பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே போம், மீறுதல் செய்தீர்'' என்று கூறினார்கள் என்று 2நாளா. 26:18-ல் பார்க்கிறோம்.

அவன் அரசனாக இருந்தாலும் ஆசாரியர் அவனுடைய பிரஜைபோல் அவனிடம் பேசவில்லை. அரசர்களுக்கு எல்லாம் அரசரான கர்த்தாதி கர்த்தரின் அதிகாரத்தை தங்கள் உள்ளங்கைகளில் பெற்றவர்களாக பேசினார்கள். அத்து மீறிய அரசனை ஆலயத்தை விட்டு வெளியே போ என்று கூறினார்கள். அரசன் மறுத்த பொழுது அவனுடைய நெற்றியில் குஷ்டரோகமே பிடித்து விட்டது. அன்று ஆரோனுக்கும் இன்று ஆரோனை போல அழைக்கப்பட்ட அனைத்து முழு நேர ஊழியர்களுக்கும் உள்ளங்கைகள் நிரப்பப்பட்டு கொண்டே இருக்கின்றன. அவர்களை எதிர்க்கின்றவர்களை ஆண்டவரே எதிர்த்து விடுவார். அவர்களை தூஷிக்கின்றவர்களை ஆண்டவர் பழித்து விடுவார். அத்தனை பெரிய அதிகாரம் அன்று ஆரோனின் உள்ளங்கையில் கொடுக்கப்பட்டது.

உண்மையாக ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட எந்த முழு நேர ஊழியரின் கைகளிலும் அந்த அதிகாரங்கள் இன்றும் கொடுக்கப்பட்டு கொண்டே இருக்கின்றது என்பதற்கு முழுநேர பணியாளர்கள் பிரதிஷ்டை செய்யப்படும் பொழுது வேத புத்தகம் அவர்களுடைய உள்ளங்கைகளில் வைக்கப்படுவதில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ஆரோனின் உள்ளங்கை நிரப்பப்படுதல், அதிகாரத்தை மட்டுமல்ல ஆரோனுக்கு கொடுக்கப்படும் ஆசீர்வாதத்தையும் காட்டுகின்றது. ஆண்டவராகிய கர்த்தரால் உண்மையாக அழைக்கப்பட்டு ஊழியத்திற்கு வந்த ஊழியக்காரர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்பதை ஆரோனின் உள்ளங்கை நிரப்பப்பட்டதில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் வெறுங்கையாக அல்ல, நிரப்பப்பட்ட கைகளோடு இந்த உலகத்தில் வாழுவார்கள் என்பதை அது சுட்டி காட்டுகின்றது. நீதிமான் கைவிடப்பட்டதையும், அவனுடைய சந்ததி அப்பத்திற்காக இரந்து திரிந்ததையும் நான் காணவில்லை என்று தாவீது அரசன் சாட்சி கூறுகின்றார். எல்லாம் எனக்கு கிடைத்தது, பரிபூரணமும் அடைந்தேன் என்று பரிசுத்த பவுல் சாட்சி கூறுகின்றார். (பிலி. 4:18).

உள்ளங்கை நிரப்பப்படுதல் தேவ அதிகாரம் கொடுக்கப்படுவதையும், தேவ ஆசீர்வாதம் ஊற்ற படுவதையும் மட்டும் அல்ல, இறுதியாக இன்னும் ஒன்றையும் அது குறிக்கின்றது. தேவ ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட தேவ ஊழியக்காரனுக்கு அது ஒரு எச்சரிப்பாகவும் அமைகின்றது; தேவ எச்சரிப்பு வழங்கப்படுவதை அறிவிக்கின்றது. ஆசாரியரிடம் வேதம் இல்லாமல் போகும் என்றால் ஆசாரியர்களின் உதடுகள் அறிவை காக்காமல் போகும் என்றால், கர்த்தர் கட்டளை இடாதவைகளை கட்டளை இட்டார் என்று ஆசாரியர் கூறுவார் என்றால் சாபமும் சாவுமே அவர்களுடைய முடிவாக மாறும் என்பதை அந்த உள்ளங்கை நிரப்பப்படுதல் எடுத்து கூறுகின்றது. கர்த்தருடைய வேலையை அசதியாக செய்கின்றவன் சபிக்கப்பட்டவன் என்றே எரே. 48:10-வது வசனம் கூறுகின்றது. கர்த்தருடைய ஊழியத்தை கருத்தாக செய்யும் அனைத்து ஊழியர்களுக்கும் பரிசுத்த பவுல் கொடுக்கும் ஓர் நல்ல வசனம், 1கொரி.15:58-வது வசனம் ''ஆகையால் எனக்கு பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராது என்று அறிந்து நீங்கள் உறுதி

பட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.''

5.5 பிரதிஷ்டை செய்து பரிசுத்தமாக்கப்படும் ஆசாரியர்கள்

ஆசரிப்பு கூடாரத்தின் ஆசாரியனாக ஆரோன் பிரதிஷ்டை செய்யப்பட்டு பரிசுத்தப்படுத்தப்படுவதை நாம் லேவியராகமம் 8:28-36 பார்க்கிறோம். ஆரோனின் உள்ளங்கைகளில் வைக்கப்பட்ட பிரதிஷ்டை பலியின் பகுதிகள், அசைவாட்டும் பலியாக இந்த இடங்களிலே ஏறெடுக்கப்படுவதை லேவியராகமம் 8:28,29 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கலாம். அசைவாட்டும் பலி, அல்லது அசைவாட்டும் காணிக்கை என்பதை பற்றி யாத். 29:26-வது வசனத்தை படிக்கும் பொழுது அறியலாம். தனது கையில் வைத்திருக்கும் பலியை ஆசாரியன், தேவ சமூகத்திற்கு நேராக நீட்டி, 'கர்த்தாவே, உமக்கு இவை அனைத்தையும் ஒப்பு கொடுக்கிறேன்; என்றும், பின்னர் தனது கையை பின்னாக மடக்கி,' கர்த்தாவே, உமக்கு நீட்டி கொடுத்ததை, தேவரீர் திரும்ப எனக்கு கொடுத்து விட்டீர்; நன்றியுடன் ஏற்று கொள்ளுகிறேன் என்று அசைவாட்டும் பலி அல்லது அசைவாட்டும் காணிக்கை நமக்கு எடுத்து கூறுகின்றது. கர்த்தருக்கு நேராக அன்பு பெருக்கிலும் நன்றி உணர்விலும் செய்யப்படும் பலி அசைவாட்டும் பலி, அசைவாட்டும் காணிக்கை ஆகும்.

> ***மோசே அபிஷேக தைலத்தையும் பலிபீடத்தின் மேல் இருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து ஆரோன் மேலும் அவன் வஸ்திரங்கள் மேலும், அவன் குமாரர் மேலும் அவர்கள் வஸ்திரங்கள் மேலும் தெளித்து ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும் அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்தினான். (லேவி.8:30)***

இந்த வசனத்தில் மற்றும் ஒரு நிகரற்ற நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. அது ஆரோன் முற்றும் பரிசுத்தமாக்கப்பட்டான் என்பதற்கு முடிவான ஓர் அடையாளமாக மாறி விட்டது. மோசே முட்செடியில் பெற்ற ஒரு தரிசனத்தில், ஆவிக்குரிய வாழ்வின் உச்சக்கட்டத்தை கண்டான். ஆரோன் ஒரே நாளில் அந்த உச்சத்தை காணாமல் படிப்படியாக மெல்ல மெல்ல அதை பெற்று கொள்ளுகின்றான். லேவியராகமம் 8-வது அதிகாரத்தில் ஆரோன் இறுதி அங்கீகாரம் பெற்று கொள்ளுவதை நாம் பார்க்கின்றோம். அங்கியில் பரிசுத்தம் செய்யும் இரத்தம் தெளிக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

> ***பின்பு மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் அந்த மாம்சத்தை ஆசரிப்பு கூடாரவாசலிலே வேவித்து, ஆரோனும் அவன் குமாரரும் அதை புசிப்பார்களாக என்று கட்டளை இட்டிருக்கிறபடியே, அங்கே அதையும் உங்கள் பிரதிஷ்டை பலிகளுள்ள கூடையில் இருக்கிற அப்பத்தையும் புசித்து, மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியிலே சுட்டெரித்து, பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும் வரைக்கும். ஏழு நாள் ஆசரிப்பு கூடார வாசலை விட்டு புறப்படாதிருங்கள்; ஏழு நாளளவும் நீங்கள் பிரதிஷ்டை படுத்தப்படுவீர்கள். (லேவி.8:31-33).***

பிரதிஷ்டை என்பது அவசர அவசரமாக துவக்கி முடித்து விடுவது அல்ல. ஆற அமர இடம் பெறுவது என்பதை இந்த அதிகாரம் நமக்கு காட்டுகின்றது. பரிசுத்தராகிய தேவன்

பதறி பணி செய்கின்றவர் அல்ல, பார்த்து செய்கின்றவர் என்பதை அறிகின்றோம். 33-வது வசனத்தில், ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவன், அதோ ஆசரிப்பு கூடாரத்தில் அமர்ந்து இருக்கின்றார். அவருக்கு ஆராதனை செய்ய ஆசாரியன் பிரதிஷ்டை செய்யப்பட்டு விட்டான். உதவியாளர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு விட்டார்கள். அந்த பிரதிஷ்டை ஒரு நாள் அல்லது இரண்டு நாள் அல்ல ஏழு நாட்கள் இடம் பெற்றன. அந்த ஏழு நாட்களின் நிகழ்ச்சிகளும் ஓர் ஊழியப் பயிற்சி போல அமைந்தன. ஆராதனை ஒழுங்குகளும் பலி முறைகளும் மிக மிக நுட்பமானவைகள். அதனை கவனித்து கொண்டு இருக்கிறவர், சகலமும் ஒழுங்கும் கிரமமுமாக இடம் பெற எதிர்பார்க்கின்றவர். ஒரு சிறு கவன குறைவு அனைவரையும் பாதிக்கும், அனைத்தையும் பாதிக்கும்.

ஆரோனும் அவனுடைய குமாரரும் உண்மையிலே அழைக்கப்பட்டு வந்தவர்கள்தானா என்பதை அந்த ஏழு நாள் பயிற்சி காட்டி கொடுக்க ஓர் பரீட்சை போல் காத்து கொண்டு இருக்கின்றது. கர்த்தர் கட்டளையிட்டபடி அவர்கள் அனைத்தையும் செய்கின்றார்களா அல்லது தாங்கள் நினைத்தபடி அனைத்தையும் செய்கின்றார்களா என்பதை அந்த ஏழு நாட்கள் காட்டி கொடுத்து விடும். குறிக்கப்பட்ட வேலைகளை முறைப்படி முடிக்கின்றார்களா அல்லது வேலைகளிலே குழப்படி செய்கின்றார்களா என்பதை அந்த ஏழு நாட்களும் தெரிய வைத்துவிடும். மிக கடினமான பணிகளை களைப்பு இல்லாமல் செய்து விடுகின்றார்களா அல்லது இளைத்து போய் இடையில் நின்று விடுகின்றார்களா? என்பதை அறிய செய்யும். அது மனித ஆயத்தங்கள் அல்ல; தேவ ஆயத்தம். ஒரு நாள் அல்ல, ஏழு நாட்கள் செய்யும் ஆயத்தம்!

இன்று செய்தது போல், உங்கள் பாவநிவிர்த்திக்காக இனிமேலும் செய்ய வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார். (லேவி.8.34)

இன்று செய்தது போல இனிமேலும் செய்ய வேண்டும் என்று மோசே அவர்களை பார்த்து வாழ்த்துகின்றார். ஆதி அன்பு, அந்தம் வரை செல்லட்டும் என்று வாழ்த்துகின்றார். ஆரம்பத்தில் இருந்த ஆர்வங்கள் அதிகரித்து கொண்டே போகட்டும் என்று அவர்களை பார்த்து மோசே வாழ்த்துகின்றார். அன்று பெற்ற அபிஷேகம் அற்றம்வரை ஜொலிக்கட்டும் என்று வாழ்த்துகின்றார். மனிதனோ, மனித சட்டங்களோ குறுக்கிட்டு, கூனி குறுகி போகாதபடிக்கு வாழ்த்துகின்றார். மனுஷருக்கு கீழ்படிவதை பார்க்கிலும் தேவனுக்கு கீழ்படிவதே சிறந்தது என்று சொல்லி விடுங்கள் ஆசாரியர்களே! என்று சொல்லி வாழ்த்துகின்றார். கருத்துடன் கர்த்தருக்கு ஊழியம் செய்ய துவங்கிய நீங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள் என்று வாழ்த்துகின்றார். பரிசுத்த ஜீவியத்தில் நிலைபெற்று நிற்க பரிசுத்தராகிய தேவனில் நிலைத்து கொண்டே நில்லுங்கள் என்று வாழ்த்துகின்றார். பலிசெலுத்தி பெற்ற பாவ மன்னிப்பை, துதி செலுத்தி காத்து கொள்ளுங்கள் என்று வாழ்த்துகின்றார். ஆரோன், ஜனங்களை இனிமேல் வாழ்த்துவதற்கு, மோசே, ஆரோனை வாழ்த்துகின்றான். ஆரோன், மக்களை இனி ஆசீர்வதிக்க மோசே ஆரோனை ஆசீர்வதித்தான்.

நீங்கள் சாகாதபடிக்கு ஏழு நாள் இரவும் பகலும் ஆசரிப்பு கூடாரவாசலில் இருந்து கர்த்தருடைய காவலை காக்க கடவீர்கள்; இப்படி நான் கற்பிக்கப்பட்டேன் என்றான். கர்த்தர் மோசேயை கொண்டு கட்டளையிட்ட எல்லா காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள். (லேவி.8:35,36)

அவர்கள் தேவாதி தேவனுக்கு ஏற்ற மதிப்பு கொடுத்தால், தேவாதி தேவன் அவர்களுக்கு அளவற்ற மதிப்பு கொடுப்பார். அவர்கள் கர்த்தரை கனம் பண்ணினால் கர்த்தர் அவர்களை கனம் பண்ணுவார். அவர்கள் கர்த்தரை கனவீனம் செய்தால் அவர்கள் கண் கலங்குவார்கள். ஆரோனின் தலையில் இருந்த பரிசுத்த கிரீடம் ஓர் மகிமையாக தெரிந்தது. ஆனால் அதே சமயத்தில் அவனது அங்கியில் தொங்கிய பொன் மணிகள் ஓர் எச்சரிப்பாகவும் தெரிந்தது. பொன் மணிகளின் சத்தம் காதில் விழுந்தால் கண்மணிபோல கர்த்தரால் அவர் காக்கப்பட்டு கொண்டு இருக்கிறார் என்பது பொருள். சத்தம் அமர்ந்து விட்டால் சாவை சந்தித்து விட்டார் என்று பொருள்.

'நீங்கள் சாகாதபடிக்கு', என்று மோசே இரண்டு மிக முக்கிய குறிப்புகளை அவர்களுக்கு இந்த வசனத்தில் கூறுகின்றார். முதலாவது குறிப்பு ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட நீங்கள் ஆசரிப்பு கூடாரமாகிய ஆலய வாசலை விட்டு நீங்கவே நீங்க வேண்டாம் என்று கூறுகின்றார். ''என் வாசற் படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து எனக்கு செவி கொடுக்கிற மனுஷன் பாக்கியவான்'' என்று நீதி மொழிகள் 8:34-வது வசனம் கூறுகின்றது. இரண்டாவது மோசே கூறும் குறிப்பு: 'கர்த்தரின் காவலை காக்க கடவீர்கள்' என்பதாகும். அதாவது தேவ பணிக்கு அழைக்கப்பட்ட நீங்கள் சொந்த பணிகள் எதையும் துவங்கி விடாதேயுங்கள், பிழைப்புக்கு அடுத்த அலுவல்களில் சிக்கி மடியாதேயுங்கள் என்று கூறுகின்றார். எகிப்து தேசத்திலே, சுமார் 430 வருடம் அடிமைத்தனத்தில் வாழ்ந்த பொழுது வழிபடுவதற்கு ஓர் இடம் இன்றி அவர்கள் தவித்தார்கள். இப்பொழுதோ ஆசரிப்பு கூடாரம் கண்டு, ஆராதிப்பதற்கு ஓர் இடம் பெற்று விட்டார்கள். இனிமேல் அந்த வழிபாட்டு ஸ்தலத்திற்கு பொறுப்பாளன் ஒருவன் தேவை என்று அறிந்த ஆண்டவர், பொறுப்பாளன் ஒருவனை அவர்களுக்கு அமர்த்தவும் செய்து விட்டார்.

முந்திய காலங்களிலே ஆராதனைகளை நடத்த ஓர் குறிப்பிட்ட நபர் இருந்தது இல்லை. ஆகையினால் அவர்கள் செய்தது என்னவென்றால், குடும்ப தலைவர்களே குடும்ப ஆசாரியர்களாக மாறி இயங்கி வந்தார்கள். மோசேயின் மாமனான எத்திரோ என்பவர் ஒரு குடும்பத்தின் தலைவராக மாத்திரம் அல்ல, ஆசாரியராகவும் இருந்தார் என்பதை யாத்திராகமம் 3:1-ல் நாம் பார்க்கலாம். மேலும், பலியிட்டு தொழுது கொள்ள ஓர் குறிப்பிட்ட இடமும் இல்லாமல் இருந்த நாட்கள் அந்த நாட்களாக இருந்தது. ஆகையினாலேதான் காயீன், ஆபேல் என்ற இருவரும் விரும்பிய இடத்தில் அவர்களாகவே பலிகளை செலுத்தி கொண்டார்கள். யாத்திராகம புத்தகத்தில் ஜனங்கள் எதிப்திலிருந்து வெளியேறிய பின்பு மோசே மக்களுக்காக பலிகளை செலுத்துகிறவராக மாறி இருந்தார். ஆனால் லேவியராகம புத்தகம் 8-வது அதிகாரம் முதல், அனைத்தும் முறைப்படி இயங்க ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டவராகிய கர்த்தரை மகிமையின் இராஜாவாக ஏற்றி போற்ற, வாழ்த்தி மகிழ, தூய்மையில் மேலோங்க மக்களுக்கு உதவும் ஒரு ஆவிக்குரிய தலைவனாக, ஆசாரியனாக ஆரோன் பொறுப்பு எடுக்கின்றான். ஜனங்களின் மற்ற நலன்களையும் கானான் செல்லும் பிரயாணத்தையும் நிர்வாகித்து நடத்த ஓர் பொறுப்பாளனாக மோசே செயல்பட இருக்கின்றார். கர்த்தர் இதுவரை 'மோசே மோசே', என்று கூப்பிட்டார். இனிமேல் 'ஆரோன்', என்றும் கூப்பிட போகின்றார். சில சமயங்களிலே 'ஆரோன், மோசே' என்று இருவரையும் சேர்த்து கூப்பிட்டு பேசவும் இருக்கின்றார்.

கர்த்தரின் ஊழியம் மகத்துவமானது. அது ஒருவர் தானாக தன்னை உட்படுத்தி கொள்ளுவது அல்ல. ஆரோனைப்போல அழைக்கப்பட்டு கீழ்படிவது ஆகும். கமாலியேலின் பாதங்கள் அல்ல, கர்த்தரின் பாதங்களே புதிய ஏற்பாட்டில் சவுலை பவுலாக்கி விட்டது.

பரிசுத்தரின் சேவைக்கு இதயங்கள் பக்குவப்பட பள்ளிக்கூடங்கள் உலகத்தில் இல்லை; பரிசுத்தரின் காலடிகளே அதற்கு துணையாக நிற்கின்றது. கலைக்கூடங்கள் அல்ல, கல்வாரி கூடமே இணையாக நிற்கின்றது. மனிதரின் விரிவுரைகள் அல்ல. தேவனின் அறிவுரைகளே ஊழியக்காரர்களை ஆயத்தப் படுத்துகின்றது. கர்த்தர் மோசேயை கொண்டு கட்டளையிட்ட எல்லா காரியங்களையும் ஆரோனும் அவன் குடும்பத்தாரும் செய்தார்கள் என்று 8:36-வது வசனம் நிறைவு பெருகின்றது.

5.6 பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆசாரியர்கள் கர்த்தருக்கு பலி செலுத்த ஆரம்பிக்கின்றனர்

அவர்களது ஆவி உற்சாகமான ஆவிதானா என்பதும் அவர்களது ஆத்துமா கர்த்தரை எப்பொழுதும் துதித்து கொண்டிருக்கும் ஆத்துமாவா என்பதும் அவர்களது சரீரம் பரிசுத்தரின் உறைவிடமா என்பதும் ஏழே நாளில் தெரிய வந்து விடும். எட்டாவது நாளில் ஆரோன் நிச்சயப்படுத்தபட இருக்கிறான். அவனது வேலை நிரந்தரம் காண இருக்கின்றது.

எட்டாம் நாளிலே மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து, ஆரோனை நோக்கி: நீ பாவநிவாரண பலியாக பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், சர்வாங்க தகனபலியாக பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் தெரிந்து கொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் பலி இடக்கடவாய். மேலும் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: கர்த்தருடைய சந்நிதியில் பலி இடும்படிக்கு, நீங்கள் பாவநிவாரணபலியாக பழுதற்ற ஒரு வெள்ளாட்டு கடாவையும், சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், ஒரு ஆட்டுக்குட்டியையும், சமாதானபலிகளாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், எண்ணெயிலே பிசைந்த போஜனபலியையும் கொண்டு வாருங்கள்; இன்று கர்த்தர் உங்களுக்கு தரிசனமாவார் என்று சொல் என்றான். மோசே கட்டளை இட்டவைகளை அவர்கள் ஆசரிப்பு கூடாரத்துக்கு முன்பாக கொண்டுவந்தார்கள்; சபையார் எல்லோரும் சேர்ந்து, கர்த்தருடைய சந்நிதியில் நின்றார்கள். அப்பொழுது மோசே: கர்த்தர் கட்டளையிட்ட இந்த காரியத்தை செய்யுங்கள்; கர்த்தருடைய மகிமை உங்களுக்கு காணப்படும் என்றான். மோசே ஆரோனை நோக்கி: நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து. கர்த்தர் கட்டளை இட்டபடியே, உன் பாவநிவாரண பலியையும் உன் சர்வாங்க தகனபலியையும் செலுத்தி, உனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவ நிவிர்த்தி செய்து. ஜனங்களுடைய பலியையும் செலுத்தி, அவர்களுக்காகவும் பாவ நிவிர்த்தி செய் என்றான். (லேவி.9:1-7).

லேவியராகமம் 9-ம் அதிகாரம், 'எட்டாம் நாளிலே', என்று ஆரம்பமாகுகின்றது. கடந்த அதிகாரத்திலே மோசே ஆரோனையும், அவன் குமாரரையும், சபையாரையும் தன் பக்கமாக வரும்படி அழைப்பதை நாம் பார்த்தோம். இந்த அதிகாரத்திலே சபையார் அழைக்கப்படவில்லை. ஆனால் ஆரோன், அவனுடைய குமாரர்கள், சபையாரின் பிரதிநிதிகளான இஸ்ரவேலின் மூப்பர்கள் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் அனைவரின் முன்நிலையில் மோசே ஆரோனுக்கு ஒரு கட்டளை கொடுக்கிறார். 'நீ உனக்காக பாவ

நிவாரணபலி, தகனபலி என்ற இரண்டு பலிகளை செலுத்து', என்று கூறுகின்றார். ஆரோன் பாவநிவாரணபலி, தகனபலி என்ற இரண்டு பலிகளையும் செலுத்தி, முதலாவது தன்னை முற்றிலுமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டிய அவசியம் இருந்தது. தனக்காக பலி செலுத்துவது மட்டுமல்லாமல் ஆரோன் பிறருக்காகவும் பலி செலுத்த வேண்டியதும் இருந்தது. எனவே மோசே ஆரோனிடம், 'உனக்காக இரண்டு பலி செலுத்துகின்றாய் மற்றவர்களுக்காக நான்கு பலிகள் செலுத்த வேண்டும்', என்று இந்த அதிகாரத்தின் ஆரம்பத்திலே கூறுகின்றார்.

அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, தன் பாவ நிவாரண பலியாகிய கன்று குட்டியை கொன்றான். ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவன் தன் விரலை அந்த இரத்தத்தில் தோய்த்து, பலிபீடத்தின் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தத்தை பலிபீடத்தின் அடியிலே ஊற்றி, பாவநிவாரணபலியின் கொழுப்பையும், குண்டிக்காய்களையும், கல்லீரலில் எடுத்த ஜவ்வையும், கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்டபடியே, பலிபீடத்தின் மேல் தகனித்து, மாம்சத்தையும் தோலையும் பாளத்துக்கு புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தான். பின்பு சர்வாங்க தகனபலியையும் கொன்றான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்; அதை அவன் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தான். சர்வாங்க தகனபலியின் துண்டங்களையும் தலையையும் அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவன் அவைகளை பலிபீடத்தின்மேல் தகனித்து, குடல்களையும் தொடைகளையும் கழுவி, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியின்மேல் தகனித்தான். (லேவி. 9:8-14)

8:1-21வரை உள்ள வசனங்களில் இந்த 4 பலிகளும் சபையாரின் பலியாக முறைப்படி இடம் பெற்று நிறைவு பெறுகின்றது. அதனை மோசே அவர்களுக்கு கற்பித்தான்.

அதன் பிறகு ஆரோன் தனக்காக பாவ நிவாரணபலி, தகனபலி ஆகிய பலிகளை செலுத்தினான் என்று லேவியராகமம் 9:8-14 வசனங்களில் வாசிக்கிறோம். ஒவ்வொரு சிறு குறிப்பையும் மனதில் கொண்டு, வெகு கவனமாக தனக்காகவும் தன் நான்கு குமாரருக்காகவும் ஆரோன் பாவ நிவிர்த்தி செய்கிறான்.

பின்பு அவன் ஜனங்களின் பலியை கொண்டு வந்து, ஜனங்களின் பாவநிவிர்த்திக்குரிய வெள்ளாட்டு கடாவை கொன்று, முந்தினதை பலியிட்டதுபோல, அதை பாவநிவாரண பலியாக்கி, சர்வாங்க தகனபலியையும் கொண்டு வந்து, நியமனத்தின்படி அதை பலியிட்டு, போஜனபலியையும் கொண்டு வந்து, அதில் கை நிறைய எடுத்து, அதை காலையில் செலுத்தும் சர்வாங்க தகனபலியுடனே பலிபீடத்தின் மேல் தகனித்தான். பின்பு ஜனங்களின் சமாதான பலிகளாகிய காளையையும் ஆட்டுக்கடாவையும் கொன்றான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவன் அதை பலிபீடத்தின் மேல் சுற்றிலும் தெளித்து, காளையிலும் ஆட்டுக்கடாவிலும் எடுத்த கொழுப்பையும், வாலையும், குடல்களை மூடிய ஜவ்வையும், குண்டிக்காய்களையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும் கொண்டு

வந்து, கொழுப்பை மார்க்கண்டங்களின் மேல் வைத்தார்கள்; அந்த கொழுப்பை பலிபீடத்தின் மேல் தகனித்தான். மார்க்கண்டங்களையும் வலது முன்னம் தொடையையும், மோசே கட்டளையிட்டபடியே, ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டினான். (லேவி. 9:15-21)

மோசே கொடுத்த பயிற்சியின் பிரகாரம் ஆரோன் ஜனங்களுக்காக பாவ நிவாரண பலியையும், சர்வாங்க தகன பலியையும், போஜன பலியையும் அதின் வரிசை பிரகாரமாக ஜனங்களுக்காக செலுத்தினான்.

அதின் பின்பு சபை மக்களுக்காக பாவ நிவாரண பலி, தகனபலி, சமாதானபலி, போஜன பலி என்ற பலிகளையும் ஆரோன் செலுத்துகிறான் என்பதை 15முதல் 21வரையுள்ள வசனங்களில் பார்க்கலாம். அனைத்து பலிகளுக்கும் உரிய அனைத்து ஆயத்தங்களுடன் அனைவரும் ஆண்டவரின் சந்நிதியில் கூடி நின்றனர் என்று லேவி.9:5-வது வசனம் கூறுகின்றது. அத்தனை பலிகளும் செலுத்தி ஆகவேண்டும். பாவ நிவிர்த்தி அதன் மூலம் செய்யப்பட்டு அவர்கள் தேவனோடு கூட ஒப்புரவாகும் அனுபவத்தை பெற இருக்கின்றனர். மேலும் அதனை தொடர்ந்து ஓர் புதிய கிருபை அவர்களுக்கு காத்து கொண்டு இருக்கின்றது. அதாவது கர்த்தருடைய மகிமை இன்னும் ஓர் முறை அவர்களுக்கு தெரியப்பட இருக்கின்றது. அதனை மோசே லேவி.9:6-வது வசனத்தில் அவர்கள் அனைவருக்கும் தெரிவிக்கின்றார்.

பாவ நிவாரணபலி, பாவ மன்னிப்பை காட்டுகின்றது. தகனபலி, முற்றும் ஒப்புக்கொடுப்பதை காட்டுகின்றது. போஜனபலி, கர்த்தரின் சேவைக்கு ஆயத்தம் என்பதை காட்டுகின்றது. சமாதானபலி, கர்த்தருடன் ஐக்கியம், மற்றவருடனும் ஐக்கியம் என்பதை காட்டுகின்றது.

சகல காரியங்களையும் செவ்வையாயும் கிரமமாயும் செய்யும்படி தாம் இட்ட கட்டளைகளை நிறைவேற்றும் போது, அப்பிரயோஜனமான ஒரு ஊழியனையும் தேவன் ஆசீர்வாதத்தின் வடிகாலாக மாற்றுவார்! இது நாம் ஆபிரகாமின் வாழ்க்கையில் கண்ட உண்மை; இது நாம் ஆரோனின் ஊழியத்தில் காணப்போகும் உண்மை.

5.7 ஆசாரியர்கள் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்கள்

பின்பு ஆரோன் ஜனங்களுக்கு நேராக தன் கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்து, தான் பாவ நிவாரணபலியையும் சர்வாங்க தகனபலியையும், சமாதான பலிகளையும் செலுத்தின இடத்திலிருந்து இறங்கினான். (லேவி. 9:22)

லேவியராகமம் 9:22-24 வசனங்களில் ஆரோன், மோசே ஆசீர்வதிப்பதையும் ஆண்டவர் இதனை அக்கினியின் மூலம் ஆமோதிப்பதையும் காணலாம்.

மீட்கப்பட்ட மக்களின் சுதந்திர வரலாறு யாத்திராகமம் 12-வது அதிகாரத்தில் துவங்கியது. அந்த அதிகாரம் தொடங்கி, லேவியராகமம் 8-வது அதிகாரம் வரை மோசே ஒருவரே அவர்களது தலைவனாகவும், ஆசாரியனாகவும் இருந்து வந்தான் என்று நாம் பார்த்தோம். ஆனால் லேவியராகமம் 9-வது அதிகாரம் முதல் மோசேயின் பொறுப்புகள் ஆரோனோடு பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மோசே நிர்வாக பொறுப்புகளையும், ஆரோன்

ஆவிக்குரிய பொறுப்புகளையும் எடுத்து நடத்த துவங்குகின்றார்கள். நிர்வாக பொறுப்புகளையும் ஆவிக்குரிய பொறுப்புகளையும் ஒரே ஒரு தனி மனிதன் எடுத்து நடத்துவது அழகு அல்ல. அவை இரண்டும் பெரும் வித்தியாசமான பொறுப்புகள் ஆகும். புதிய ஏற்பாட்டு காலம் பிறந்த பொழுது ஆவிக்குரிய ஊழியம் தனித்தே நின்றது. ''சகோதரரே, பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்; நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தை போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்'' என்று அப்போஸ்தலர் ஓர் தீர்மானம் எடுத்தனர். (அப்.6:3,4)

இடைவிடாமல் ஜெபம் பண்ணவும், இடைவிடாமல் ஊழியம் செய்யவும் மட்டுமே ஆரோன் பிரதிஷ்டை செய்யப்பட்டான். பிற நிர்வாக பொறுப்புகளில் தலையிடுவதற்கு ஆரோன் என்ற ஆசாரியருக்கு உரிமையே இல்லை. ஓர் ஆசாரியன் என்ற முறையில் ஆரோன் ஆசீர்வதிக்கின்றான். ஓர் நிர்வாக தலைவன் என்ற முறையில் அல்ல. ஆண்டவருடைய பிரதிநிதி என்ற முறையில் ஆரோன் மக்களை ஆசீர்வதிக்கின்றான். மனித வார்த்தையாக அல்ல, வழக்கம்போல் கூறும் வார்த்தையாக அல்ல, கடமைக்காக, மொழிந்த ஆசீர்வாதமும் அல்ல. அவன் அருளும் ஆசீர்வாதம் அசைவாட்டும் காணிக்கையை தொடர்ந்து வருவதை நாம் பார்க்கலாம். அசைவாட்டும் காணிக்கையில் ஆசாரியனின் கை முதலாவது தேவனுக்கு நேராக நீட்டப்படும். தேவனுக்கு நேராக நீட்டப்பட்ட ஆரோனின் கைகள் இப்பொழுது சபையாருக்கு நேராக நீட்டப்படுகின்றது.

மூன்று ஆசீர்வாதங்கள் பெற சபையார் ஆராதனைக்கு புறப்பட்டு வந்தனர். அவை அனைத்தும் பெற்று கொண்டுதான் அவர்கள் திரும்ப வேண்டும் என்று கர்த்தர் திட்டவட்டமாக கட்டளை இட்டிருக்கின்றார். எண்ணாகமம் 6:22-27 வசனங்களில் அந்த மூன்று ஆசீர்வாதங்களும் எழுதப்பட்டு இருக்கின்றன. ''பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால் நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும் போது, அவர்களை பார்த்து சொல்ல வேண்டியதாவது: கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னை காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்கு சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே. இவ்விதமாய் அவர்கள் என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறக்கடவர்கள்; அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல் என்றார்.'' ஆரோன் கொடுக்கும் ஆசீர்வாதம் ஆண்டவரே நேராக கொடுக்கும் ஆசீர்வாதமாக இடம் பெறுகின்றது. ஆசரிப்பு கூடாரம் அத்தனை விலை உயர்ந்த பொருட்களில் அமைக்கவும், பலிகள் அத்தனை நுட்பமாக செலுத்தப்படவும், ஆசாரியனின் உடை அத்தனை பகட்டாக அமையவும் அனைத்திற்கும் ஒரே ஒரு காரணம் என்னவென்றால் ஆராதனைக்கு வரும் மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டு திரும்பி செல்ல வேண்டும் என்பதே.

ஆசரிப்பு கூடாரத்தினை நோக்கி மக்கள் வருகின்றார்கள் என்றால் அவ்வாறு வருவதற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது, எங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். இரண்டாவது, தேவனுடைய ஆசீர்வாதம் எங்கள் குடும்பங்களில் தங்க வேண்டும். மூன்றாவது, எங்களுடைய வருங்காலம் இனிதாக இருக்க வேண்டும். மக்களின் இந்த மூன்று வாஞ்சைகளும் நிறைவேறும்படியாக ஆரோனின் ஆசீர்வாதம் அமைந்து இருக்கின்றது. இந்த மூன்றையும் பெற்று செல்லுங்கள் என்பதே ஆரோன் அருளும் ஆசீர்வாதங்கள் ஆகும். பாவ மன்னிப்பாகிய ஆசீர்வாதம், அனைத்திலும் பிரகாசம் என்ற கிருபை, சமாதானமான

எதிர்காலம் என்ற நிச்சயம்: இந்த மூன்று ஆசீர்வாதங்களும் ஓர் அர்த்தம் மிக்க ஆசீர்வாதமாக ஆரோனால் கொடுக்கப்பட்டது. கைகளை உயர்த்தி அந்த ஆசீர்வாதங்களை ஆரோன் கூறினான். மனிதன் கொடுக்கும் ஆசீர்வாதமாக அல்ல; சர்வ வல்லவர் கொடுக்கும் ஆசீர்வாதமாக இருக்கின்றது என்பதை ஆரோனின் உயர்த்தப்பட்ட கரங்கள் அனைவருக்கும் தெரிவித்தது. மனிதனால் வாழ்த்த மட்டுமே முடியும்; கர்த்தர் ஒருவரே ஆசீர்வதிக்க முடியும். 'நீடூழி வாழுங்கள்', என்று சொல்லத்தான் மனிதனுக்கு தெரியும். நீடூழி வாழ செய்ய கர்த்தரால் மட்டுமே முடியும். விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனால் மட்டுமே எதுவும் நடக்கும்.

பின்பு மோசேயும் ஆரோனும் ஆசரிப்பு கூடாரத்துக்குள் பிரவேசித்து, வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதித்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்பட்டது. (லேவி. 9:23)

முதலாவதாக ஆரோன் ஆசீர்வதித்தான். இரண்டாவதாக ஆரோனும் மோசேயும் சேர்ந்து ஆசீர்வதிக்கின்றார்கள். அந்த ஒருமித்த ஆசீர்வாதத்தில் அற்புதம் இடம் பெறுகின்றது. லேவி. 9:23-ல் ''கர்த்தருடைய மகிமை'' என்று வருவதை கூர்ந்து கவனிக்க வேண்டும். யாத். 33:18-ல் ''உம்முடைய மகிமையை எனக்கு காண்பித்தருளும்'' என்று மோசே கேட்ட பொழுது ''ஒரு மனுஷனும் என்னை கண்டு உயிரோடு இருக்க முடியாது'', என்று கர்த்தர் பதில் அளித்தார். அந்த மகிமை, பட்சிக்கும் மகிமையாகும். அதே சமயம் உபா. 5:24-ல் மோசே ஒரு சாட்சி கூறுகின்றான்: ''இதோ நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு தம்முடைய மகிமையையும் தம்முடைய மகத்துவத்தையும் காண்பித்தார்; அக்கினியின் நடுவிலிருந்து உண்டான அவருடைய சத்தத்தையும் கேட்டோம்; தேவன் மனுஷனோடே பேசியும், அவன் உயிரோடிருக்கிறதை இந்நாளிலே கண்டோம்.''

அவர்கள் கண்ட மகிமை பராமரிக்கும் மகிமையே. தேவ மகிமையை கண்டார்கள்; செழித்து வளர்ந்தார்கள். இரட்சிக்கப்பட்ட ஜனங்களுக்கு கர்த்தர் சகாயர் என்பதே அந்த மகிமையாகும். உபா.33:26-29. ''யெஷூரனுடைய தேவனை போல் ஒருவரும் இல்லை; அவர் உனக்கு சகாயமாய் வானங்களின்மேலும் தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறி வருகிறார். அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களை துரத்தி, அவர்களை அழித்து போடு என்று கட்டளையிடுவார். இஸ்ரவேல் சுகமாய் தனித்து வாசம் பண்ணுவான்; யாக்கோபின் ஊற்றானது தானியமும் திராட்சரசமும் உள்ள தேசத்திலே இருக்கும்; அவருடைய வானமும் பனியை பெய்யும். இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்கு சகாயம் செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய, பட்டயமும் அவரே; உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்; அவர்கள் மேடுகளை மிதிப்பாய் என்று சொன்னான்,'' என்று வாசிக்கிறோம். அர்த்தமுள்ள அநேக உயிரூட்டும் ஆசீர்வாதங்கள் மக்களுக்கு காத்து கொண்டு இருக்கின்றன. ஆவலுடன் ஆண்டவரை தொழுது கொள்ள அவர்கள் ஆராதனைக்கு வரும் பொழுது அத்தனையும் அவர்கள் சொந்தமாக மாறுகின்றன.

அன்றியும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரித்து விட்டது; ஜனங்களெல்லாரும் அதை கண்ட போது ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள். (லேவி.9:24)

கர்த்தருடைய சந்நிதியில் இருந்து புறப்பட்ட அக்கினி செலுத்தப்பட்ட பலியை எரித்து விட்டது என்று பார்க்கின்றோம். அந்த அக்கினி, பலி பீடத்தின் கட்டைகளில் இருந்து வந்த அக்கினி அல்ல; பரிசுத்தரின் சமூகத்தில் இருந்து புறப்பட்டு வந்த அக்கினி ஆகும். அற்புதமும் அதிசயமும் நிறைந்த ஆச்சரியமான அக்கினி, அவரை உத்தமமாக நம்புகிறவர்களை ஆதரிக்கும் அக்கினி என்று 9-ம் அதிகாரத்தில் பார்க்கின்றோம். உத்தமம் இல்லாதவர்களை சாகடிக்கும் அக்கினி என்று 10-ம் அதிகாரத்தில் பார்க்க இருக்கின்றோம்.

பலி செலுத்தும் நேரங்களில் இவ்விதமான அற்புத அக்கினி இறங்கியுள்ளதை 1 நாளாகமம் 21:26-வது வசனத்திலும், 2நாளாகமம் 7:1-லும் நாம் காணலாம். பலி செலுத்துதல் என்பது விண்ணப்பம் செய்தல், கர்த்தரை நோக்கி மன்றாடுதல் என்பதை குறிக்கும். கர்த்தரை நோக்கி மனம் உடைந்து மன்றாடிய 120 விசுவாசிகள் நடுவில் அதே அக்கினி அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திலும் இறங்கியது. இன்றும் அதனை வாஞ்சிக்கும் எந்த இதயத்திலும் அதே அக்கினி இறங்க நிச்சயமாக காத்து கொண்டு இருக்கின்றது. இஸ்ரவேலின் ஒளியானவர் அக்கினியும், அதின் பரிசுத்தர் அக்கினி ஜுவாலையுமானவர் என்று ஏசாயா 10:6-வது வசனம் கூறுகின்றது. கர்த்தருடைய வார்த்தைகள் அக்கினியாக மனித இதயங்களில் இருக்கும் கறை திரைகளை சுட்டு எரிக்கும் சக்தி பெற்றது என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. அந்த பரிசுத்தரின் அக்கினி, பரம இராஜாவின் அக்கினி என்று லேவியராகமம் 9:24-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

புதிய ஏற்பாட்டு நாட்களில் அர்ப்பணத்தோடு அவர்கள் ஆராதனைகளுக்கு வந்து ஆராதனையை விட்டு செல்லும் பொழுது சபையாருக்கு இயேசுவின் நாமத்தில் ஆசீர்வாதம் கூறப்பட்டதை 2 கொரிந்தியர் 13:14-ல் நாம் பார்க்கின்றோம். ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.'' என்று அந்த வசனத்தில் பார்க்கிறோம். கிருபை, பாவ மன்னிப்பை காட்டுகின்றது. தேவ அன்பு, தேவன் அள்ளி கொடுத்து உங்கள் குறையை நிறைவாக்குவார் என்று கூறுகின்றது. பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தில் இருக்கின்ற நீங்கள், நாளைய தினத்திற்காக கவலை படாதேயுங்கள் என்று மூன்றாவது வரி விளக்குகின்றது.

'ஆசாரியனாகிய ஆரோனே, நீ என் மக்களுக்காக கூறிய ஆசீர்வாதத்தை நான் கேட்டு கொண்டேன்; அதன்படி செய்வேன்', என்று தெளிவுபடுத்தி கூற தேவ மகிமை, ஆசீர்வாத ஜெபம் முடிந்தவுடன் லேவி.9:24-ல் காணப்பட்டது. அந்த நாட்களில் மீட்கப்பட்ட மக்கள் ஆசரிப்பு கூடார ஆராதனைக்கும், பண்டிகைளுக்கும் வரும் பொழுது மிகவும் கவனத்துடனும், கருத்துடனும், கண் விழிப்புடனும் கலந்து கொள்ளுவார்கள். இறுதியான ஆசீர்வாதம் பெறும் வரைக்கும் ஒருவரும் கலைந்து செல்வது இல்லை. ஏனென்றால் ஆசாரியர் கடைசியாக கரம் உயர்த்தி கூறும் ஆசீர்வாதம் தேவ ஆசீர்வாதமாகும். ஜனங்களின் அனைத்து தேவைகளையும் சந்திக்கும் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்று கொள்ளாமல் ஆராதனை முறைகளை விட்டு அவர்கள் கடந்து செல்வதே இல்லை.

24-வது வசனத்தில் 'ஆரவாரித்தார்கள்' என்ற வார்த்தை வருகின்றது. அந்த வார்த்தையின் சரியான பொருள், 'ஆர்ப்பரித்து ஸ்தோத்தரித்தார்கள்', என்பது ஆகும். நிறுத்த முடியாத அளவிற்கு 'ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்' என்று கூறிக்கொண்டே இருந்தார்கள். அது மகிழ்ச்சியின் ஆரவாரமாகும்! அதனை தொடர்ந்து முகம் குப்புற ஜனங்கள் விழுந்தார்கள்.

ஆனந்த கடலில் மூழ்கினார்கள். ''இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவரே அதிசயங்களை செய்கிறவர். அவருடைய மகிமை பொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரம் உண்டாவதாக; பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென்'' என்று சங்கீதம் 72:18,19-ல் பார்க்கிறோம்.

மனித அறிவினால் கிரகிக்க முடியாத அதிசயமானவரை எப்படி நாம் அறிந்து கொள்ள முடியும்? காலங்களுக்கு உட்பட்ட நாம், எக்காலத்திற்கும் உரியவரை அறிவது எப்படி? ''பர்வதங்கள் தோன்றும் முன்னும் நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கும் முன்னும் நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாக இருக்கிறீர்,'' என்று சங்கீதம் 90:2-ல் மோசே என்ற பரிசுத்தவான் ஜெபிக்கிறார். என்றென்றைக்கும் தேவனாக இருக்கும் ஏலோகீம் என்ற தேவாதி தேவன் அவர்! நாட்காட்டிகள் நம்மை நடத்துகின்றன. கைக்கடிகாரங்கள் நம்மை துரத்துகின்றன. ஆபிரகாம் சதாகாலமும் உள்ள தேவனாகிய கர்த்தரை தொழுது கொண்டான் என்று ஆதியாகமம் 21:33-ல் பார்க்கின்றோம். சதாகாலம் உள்ள கர்த்தரை ஒரு தற்காலிக வாழ்க்கை பெற்ற மனிதன் நேசிப்பதும் சேவிப்பதும் பாக்கியமானது. ஆனால் அதே சமயத்தில் அது பயமும் நடுக்கமும் தரும் ஒன்றாகும்.

பரிசுத்தராகிய தேவனுடைய காட்சியை கண்ட பொழுது ஏசாயா என்ற தீர்க்கதரிசி 'நான் அதமானேன்' என்றே கூறினார். இரண்டு பெரிய குணாதிசயங்கள் கர்த்தரின் தனித் தன்மையாக காணப்படுகின்றன. முதலாவது, தேவனாகிய கர்த்தர் எல்லாம் அறிந்தவர். இரண்டாவது, எல்லாம் வல்லவர். அவரை நேசிக்கிறேன் என்று கூறுகின்றவர்களையும், அவரை சேவிக்கிறேன் என்று கூறுகின்றவர்களையும் அவர் அறிந்து இருக்கின்றார். அவரது கண்களுக்கு மறைவானது ஒன்றுமே இல்லை. மனுஷருக்குள் இருப்பதை அவர் அறிந்திருக்கிறபடியினால், மனுஷரை குறித்து எவரிடமும் அவர் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டியதும் இல்லை. ஆரோனை அவர் அறிவார். அவனுடைய 4 பிள்ளைகளையும் நன்கு அறிவார். ஆசரிப்பு கூடாரத்தின் ஆராதனை முறைகளை நம்பி கொடுப்பதற்கு முன்னர், சொல்ல வேண்டிய அனைத்தையும் சொல்லியே கொடுத்தார். யாத்.20:1-ம் வசனம் முதல் லேவி.9:24-வது வசனம் வரை திரும்ப திரும்ப மாறி மாறி, மிக நுட்பமாக அனைத்தையும் எடுத்து கூறி கொண்டே இருந்தார். 'கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்' என்று அவர் கூறவே இல்லை. 'நான் சொன்னபடி செய்யாதவன் சாகக்கடவன்', என்றே கூறினார். அதுதான் 10-வது அதிகாரத்தில் இடம் பெற்ற நிகழ்ச்சியாகும்.

5.8 கட்டளையை மீறிய ஆசாரியர்கள் அக்கினியால் பட்சிக்கப்பட்டார்கள்

பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூப கலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்கு கட்டளை இடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியில் இருந்து புறப்பட்டு, அவர்களை பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள். (லேவி.10:1,2)

10-வது அதிகாரம் முதலாவது வசனத்தில் 'பின்பு' என்று துவங்குவதை நாம் காணலாம். லேவியராகமம் 9-வது அதிகாரத்தில் கர்த்தருடைய சந்நிதியில் இருந்து அக்கினி புறப்பட்டு வந்ததை கண்ட பின்பு, கண்டு களிகூர்ந்த பின்பு, முகம் குப்புற விழுந்து கும்பிட்டு நமஸ்கரித்த பின்பு, இடம் பெற்ற நிகழ்ச்சி 10-வது அதிகாரத்தின் நிகழ்ச்சி ஆகும்! மகிழ்ச்சியான ஓர் சம்பவத்திற்கு பின்னர் ஓர் சோகம் நிறைந்த சம்பவம் இடம் பெற்றது. மக்கள் ஆனந்த கடலில் மூழ்கிய பின்னர் கண்ணீர் கடலில் மூழ்க வேண்டிய ஓர் சூழ்நிலை உருவாகி விட்டது. ஆரோனின் முதல் இரண்டு குமாரர்கள் அதனை உருவாக்கினார்கள். அவர்கள் மறைந்து போனார்கள்.

லேவியராகமம் 10:1,2-வது வசனங்கள் நமக்கு மிகுந்த துக்கத்தை கொடுக்கும் வசனங்களாக இடம் பெற்று உள்ளன. ஆரோனின் குடும்பம் யாத்திராகமம் 6:23-வது வசனத்தில் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ''ஆரோன் அம்மினதாபின் குமாரத்தியும் நகசோனின் சகோதரியுமாகிய எலிசபாளை விவாகம் பண்ணினான்; இவள் அவனுக்கு நாதாபையும், அபியூவையும், எலெயாசாரையும், இத்தாமாரையும் பெற்றாள்'' (யாத். 6:23) என்று பார்க்கிறோம். முதலில் கர்த்தரின் காட்சி காணும் சிலாக்கியத்தை பெற்றார்கள் என்பதை யாத்திரகமம் 24:1-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். முழு குடும்பமும் தேவ அழைப்பு பெற்றதை யாத்திராகமம் 28:1-வது வசனத்தில் நாம் பார்க்கலாம்.

எபிரெயர் 10:31-வது வசனம் கூறுவது போல ஜீவனுடைய தேவனின் கைகளில் விழுவது பயங்கரமாக இருக்கும். தொடர்ந்து எபிரெயர் 12:21-ல் நான் மிகவும் பயந்து நடுங்குகின்றேன் என்று சொல்ல தக்கதாக பரிசுத்தரின் காட்சியும், பணியும் பயங்கரமானது என்று மோசே கூறினதாக காண்கிறோம். கர்த்தருடைய பணியில் ஒரு சிறு கவன குறைவும் உயிரையே பறித்துவிடும் என்பதை நாம் இந்த வசனங்களில் பார்க்கின்றோம். பரிசுத்தமான இடத்தில், பரிசுத்தமான சேவையில், பரிசுத்தவான்கள் நடுவில் இருந்த இரண்டு இளம் பணிவிடையாளர்களின் அகத்தில் எப்படி இந்த சோக சம்பவம் நடக்கும் அளவிற்கு ஓர் பாவம் நுழைந்து விட்டது என்பதை நம்மால் கிரகிக்கவே முடியவில்லை. அன்று அழகான ஏதேன் தோட்டத்தில் எப்படி அந்த சர்ப்பம் நுழைந்து விட்டது என்பதை நம்முடைய கண்கள் காணும் பொழுது, மனித உள்ளங்களை கொள்ளையாடிவிட பிசாசானவன் கெர்சிக்கும் சிங்கம் போல் எவரையும் சுற்றி கொண்டே இருக்கின்றான் என்பதை 1பேதுரு 5:8-ல் நாம் காண்கிறோம். தீமையை பார்க்க மாட்டாத சுத்தக் கண்ணன் முன்பாக இரண்டு இளைஞர்கள் தீமை செய்வதற்கு துணிகரம் கொண்டனர். லேவியராகமத்தின் நடுவான வசனம் ''நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்''என்பதே. அதனை இரண்டு லேவியர்களே மீறி விட்டார்கள். அவர் பரிசுத்தம் உள்ள தேவன்; எரிச்சல் உள்ள தேவன். உங்கள் மீறுதலையும் உங்கள் பாவங்களையும் மன்னிக்க மாட்டார் என்று யோசுவா 24:19-வது வசனம் கூறுகின்றது. அதுபோன்று அந்த இரண்டு இளைஞர்களின் பாவங்களும் மன்னிக்கப்படவில்லை; தண்டிக்கப்பட்டது.

அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியர்களை தேவன் அழித்து போடும் அளவிற்கு அவர்கள் இருவரும் செய்த பாவம்தான் என்ன? அவர்கள் ஒன்று இரண்டு அல்ல; ஏழு தப்பிதங்கள் செய்தார்கள். முதலாவது, தன் தன் தூபகலசத்தை நாதாபும், அபியூவும் கையிலே எடுத்து கொண்டார்கள். அவர்கள் தங்களது சொந்த தூப கலசங்களை எடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது. ஆசரிப்பு கூடாரத்தின் ஆராதனைக்கு என்று செய்யப்பட்டு, பின்னர் பரிசுத்தம் ஆக்கப்பட்ட தூப கலசத்தை மட்டுமே அவர்கள் கையில்



தூபகலசம்

எடுக்க வேண்டும். இரண்டாவது, இரண்டு பேர் சேர்ந்து தூப கலசம் எடுத்தனர் என்று பார்க்கின்றோம். அது தவறானது. ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே கையில் தூப கலசத்தை எடுக்கலாம். மூன்றாவது, தூபம் யாத்திராகமம் 30:34-38-வது வசனங்களில் கூறப்பட்ட முறைப்படி செய்யப்பட்டிருந்திருக்க வேண்டும். அவ்விதம் அவர்கள் செய்யவில்லை; அது இடம் பெறவில்லை. காரணம் அவர்கள் கையில் வைத்து இருந்தது தன் தன் தூப கலசம் ஆகும். மனிதரின் சொந்த அறிவுகளும் மனிதனின் சொந்த திட்டங்களும் பரிசுத்தரின் சமூகத்தின் முன் நிற்க முடியாது என்பதை அது சுட்டி காட்டி விட்டது. நான்காவது, கர்த்தர் கட்டளை இடாத அந்நிய அக்கினியை பயன்படுத்தி விட்டார்கள். அதாவது தூபகலசத்தின் அக்கினி, தகனபலிபீடத்தில் இருந்து எடுக்கப்பட வேண்டும். கட்டளையிட படாதவைகளை அவர்கள் செய்து விட்டார்கள். யாத்திராகமம் 30:9-வது வசனத்தில் கொடுக்கப்பட்ட எச்சரிப்பை மீறி விட்டார்கள். ஐந்தாவது அவர்கள் செய்த குற்றம், தூப கலசம் கையில் எடுத்து அக்கினியை ஆண்டவர் சந்நிதிக்கு கொண்டு செல்ல மோசேயிடம் கேட்கவில்லை; ஆரோனிடமும் அவர்கள் அனுமதிபெறவில்லை. ஆரோனும் கட்டளை கொடுக்கவில்லை. மோசேயும் கட்டளை கொடுக்கவில்லை. சொல்லாத ஒன்றை செய்ய முயற்சி செய்து விட்டார்கள். ஆறாவதாக அவர்கள் செய்த தப்பிதம், தூப கலசத்துடன் கர்த்தருடைய சந்நிதியை சேர, குறிப்பிட்ட ஒரு நேரத்தில் சேராமல் அவர்கள் சொந்த இஷ்டமான ஒரு நேரத்தில் தூப கலசத்தை துணிந்து எடுத்தார்கள்.

அந்த ஆறு காரணங்களுக்கும் அடிப்படை காரணம் ஏழாவது காரணமாக காணப்படுகின்றது. அது லேவியராகமம் 2:8,9 வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. ''கர்த்தர் ஆரோனை நோக்கி: நீயும் உன்னோடே கூட உன் குமாரரும் சாகாதிருக்க வேண்டுமானால், ஆசரிப்பு கூடாரத்துக்குள்ளே பிரவேசிக்கிற போது திராட்ச ரசத்தையும் மதுவையும் குடிக்க வேண்டாம்'' என்றார். கண்காணிப்பை விருப்புகின்றவன் மதுபான பிரியனாக இருக்க கூடாது என்று வேதம் கூறுகின்றது. ''ஆசாரியர்களில் ஒருவனும், உட்பிரகாரத்துக்குள் பிரவேசிக்கும் போது, திராட்சரசம் குடிக்கலாகாது.'' என்று எசேக்கியேல் 44:21-ல் பார்க்கிறோம். ஆரோனின் முதல் இரண்டு புத்திரர்கள் மது அருந்தினார்கள், குடித்து இருந்தார்கள், சுய



ஆரோனின் இரண்டு குமாரர் கர்த்தருடைய சந்நிதியில் மரித்து போகுதல்

அறிவை இழந்து விட்டார்கள். எனவே இஷ்டமான ஆராதனையை துவங்கி விட்டார்கள். மாயமான ஒரு தாழ்மையை உலகத்திற்கு அவர்கள் காட்டினார்கள். மாம்சத்தை பேணி கொண்டார்கள். பரிசுத்தத்தை துச்சமாக மாற்றி விட்டார்கள். எண்ணாகமம் 15:30-வது வசனம் கூறுகின்றபடி ''எவனாவது துணிகரமாக யாதொன்றை செய்தால் அவன் கர்த்தரை நிந்திக்கிறான். அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போக வேண்டும்.'' என்று எழுதப்பட்டு உள்ளது.

இதுவரை திரும்ப திரும்ப கூறப்பட்ட விதிமுறைகளை அந்த இரண்டு இளைஞர்களும் மறந்து போனார்கள். இனி திரும்பி வர முடியாத ஓர் இடம் வந்து அடைந்தார்கள். ''நீங்கள் சாகாதபடிக்கு'' என்று மோசே மறுபடியும் மறுபடியும் கூறி இருந்தார். அந்த எச்சரிப்புகள் அவர்கள் மனதிலே தங்கவே இல்லை. ஆதி.2:17-ல் நீங்கள் சாதாதபடிக்கு நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்றார். அவர்கள் புசித்தார்கள். சாவு உள்ளே வந்தது. லேவியராகமம் 9-ம் அதிகாரத்தில் அக்கினி ஆச்சரியம் தந்தது. இந்த அதிகாரத்தில் அக்கினி அழிவு தந்தது. மிகச் சீக்கிரமாக இரண்டும் இடம் பெற்றது.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் அக்கினியாக அப்போஸ்தலர் 2-வது அதிகாரத்தில் இறங்கினார். ஆனால் ஐந்தாவது அதிகாரத்தில்தானே தவறிய அனனியா, சப்பீராள் என்ற தம்பதிகளை அதே அக்கினி அழித்தும் விட்டது. மிக சீக்கிரத்தில்தான் இந்த இரண்டும் இடம் பெற்றன. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று பரிசுத்தராகிய தேவனுக்கு எதுவுமே இல்லை. தேவன், பழைய ஏற்பாட்டில் எவ்வளவு பரிசுத்தரோ அதே போன்று புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்தராகவே இருக்கின்றார். பழைய ஏற்பாட்டின் காலத்திலும் புதிய ஏற்பாட்டின் காலத்திலும் மனிதர் தன்னை பரியாசம் பண்ண தேவன் இடம் கொடுத்ததே இல்லை. மனிதன் எதை விதைக்கின்றானோ அதையே அறுப்பான்.

லேவியராகமம் 10:1,2 வசனங்களில் ஓர் சோக சம்பவம் இடம் பெற்றது. மிகுந்த உற்சாகத்துடனும் சந்தோஷத்துடனும் ஆசாரியனாக பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆரோன் அடுத்த நாளிலே நடுக்கம் கண்டான். அவனுடைய அன்பிற்கு உரிய இரண்டு ஆண் மக்கள் இமை பொழுதில் இல்லாமல் போனார்கள். உற்சவ மகிழ்ச்சி மறைந்து போனது. ஆரோனின் மனம் கரைந்து போனது. அவனுடைய இரண்டு குமாரர்களின் கண்களும் சிவந்து போனது. மோசேயின் மனம் கனத்தது, செய்தி எங்கும் பறந்தது. சபை அனைத்தும் ஒன்றாக திரண்டது. முந்தின தினம் ஓர் விழாக்கோலம் எடுத்த ஆசரிப்பு கூடாரம் இன்று நிசப்தமானது.

ஆரோன், மற்றும் அவனுடைய எஞ்சிய இரண்டு குமாரர்களுக்கு முன்பாகவும், கூடி நின்று கொண்டு இருக்கும் சபை மக்களுக்கு முன்பாகவும், தேவ கோபத்திற்கு ஆளாகி தரையிலே விழுந்து கிடக்கும் இரண்டு சடலங்களுக்கு முன்பாகவும் மோசே பேச ஆரம்பித்தான். மரித்தவர்களை பற்றி ஒரு பேச்சும் அவன் பேசவில்லை. மரித்தது ஏன் என்ற விளக்கமும் கொடுக்கவில்லை. மனித அபிமானங்கள் எதுவும் அவன் காட்டவில்லை. மோசே உணர்ச்சி வசப்படவில்லை. ஆனால் அவன் எப்பொழுதும் பேசும் அந்த உன்னத தேவனை பற்றியே இப்பொழுதும் பேச ஆரம்பித்தான். அவனுடைய பேச்சு தேவனை பற்றிய பேச்சாக இடம் பெற்றது.

அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி; என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு; சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான். (லேவி.10:3)

யாத்திராகம புத்தகத்திலும், லேவியராகம புத்தகத்திலும், இதன் பின்னர் தொடர்ந்து வரும் எந்த புத்தகத்திலும் மோசே இங்கு கூறும் இந்த மேற்கோள் காணப்படவே இல்லை. ஆனால் மோசே கூறும் மேற்கோள் பார்வோன் என்ற அரசனில் துவங்கிய ஓர் மேற்கோள் ஆகும். அத்தனை அழகுடனும், ஆரவாரிப்புடனும் துவங்கப்பட்ட ஆசரிப்பு கூடார ஆராதனை இன்னும் ஒரு நாள் கூட செல்லவில்லை. அதற்குள் இத்தனை அவமரியாதைக்கு இடமாகி விட்டதே! இது என்ன என்று சபை மக்களில் எவரும் கூறிவிடுவதற்கு அவசியமே இல்லை, என்பதே மோசேயின் பேச்சு ஆகும்.

ஆண்டவருடைய மகிமையை கண்டு ஆர்ப்பரித்த மக்களுக்கு இவ்விதமாக ஓர் துயர நிகழ்ச்சி இடம் பெறுவதற்கு காரணம் என்ன என்று பரிசுத்த சபையார்கள் நடுவில் எவ்வித பேச்சும் வரவேண்டிய அவசியம் இல்லை என்பதே மோசேயின் பேச்சு ஆகும். பரிசுத்தராகிய தேவனுக்கு அவகீர்த்தி, அவமரியாதை தரும் எதுவும் உலகில் இடம் பெறவே முடியாது என்று மோசே கூறுகின்றார். அவமரியாதை, அவகீர்த்தி என்பது ஆண்டவரை பாதிக்கும் என்றால் ஆண்டவர் ஆண்டவராக இருக்க முடியாது. மனிதன் தன்னிலும், தன் குடும்பத்திலும், தன் சூழ்நிலைகளிலும், உலகத்திலும் இடம் பெறும் அனைத்தினாலும் பாதிக்கப்பட்டு கொண்டே இருக்கின்றான். ஆனால் தேவாதி தேவனோ அவைகள் எதினாலும் பாதிக்கப்படுகிறவர் அல்ல. மாறாக மகிமைப்படுகிறவர், இன்னமும் மகிமைப்பட போகின்றவர் என்பதே பரிசுத்தரின் ஈடு இணையற்ற மகிமை என்பதை மோசேயினுடைய பேச்சு நமக்கு எடுத்து கூறுகின்றது. இடம் பெறுவது அனைத்தும் தேவ மகிமைக்காக மட்டுமே இடம் பெறுகின்றன என்று மோசே கூறுகின்றான்.

யாத்திராகமம் 12-வது அதிகாரத்தில் கானான் நோக்கி துவங்கிய அவர்கள் பிரயாணம் முன் நோக்கி சென்றபோது, 'கன்றுக்குட்டி வணக்கம்' யாத்திராகமம் 32-ம் அதிகாரத்தில் இடம் பெற்றது, செய்த பிரயாணத்திற்கு ஓர் வேகத்தடையாக மாறியது. பிரயாண வேகம் பாதிக்கப்பட்டது. ஆனால் தேவனுடைய மகிமையோ பாதிக்கப்படவில்லை. அதன் பின்னர் எழுச்சி மிக்க நாட்களை இன்னும் ஓர் முறை யாத்திராகமம் 34-வது அதிகாரம் முதல், லேவியராகமம் 9-வது அதிகாரம் வரை மக்கள் பெற்று மகிழ்ந்தார்கள். ஆனால் லேவியராகமம் 10-வது அதிகாரத்தில் பிறிதொரு வேகத்தடை, சீராக முன் செல்வதை தடுக்க வந்தது. அதினால் ஆரோன், அவனுடைய குடும்பம், முழு சபையார் அனைவரும் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் தேவனுடைய மகிமையோ பாதிக்கப்படவில்லை. யாத்திராகமம் 19:22-வது வசனம் ''கர்த்தரின் சமூகத்தில் வருகிற ஆசாரியர்களும் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடிக்கு தங்களை பரிசுத்த படுத்தி கொள்ள வேண்டும்.'' என்று கூறுகின்றது. அவ்விதம் பரிசுத்தம் இல்லாமல் கர்த்தரை தரிசிக்க முன் வருகிறவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகின்றதே தவிர, தேவ மகிமையோ தொடர்ந்து நீடித்து கொண்டே இருக்கின்றது. தேவனை கனம் பண்ண அவரை நெருங்கி சேர்ந்த சாமுவேல் என்ற ஓர் சிறு பையனின் மூலம் தேவனுடைய மகிமை எவ்வாறு விளங்கிற்றோ அதே போன்று தேவனை கனவீனம் செய்ய பலிகளை நெருங்கி சேர்ந்த ஏலி என்பாரின் மக்களின் ஈன முடிவு மூலமாகவும் தேவனுடைய மகிமை மனுபுத்திரர்கள் நடுவில் விளங்கியது.

பரிசுத்தராகிய தேவனை பரிசுத்தம் என்பதின் மூலமாக மனிதன் நெருங்கும் பொழுது தேவன் மகிமை அடைகின்றார். அதுபோல பரிசுத்தம் தவிர்த்து அவரை நெருங்கும் பொழுது, அவரை நெருங்குகின்றவர்கள் பரிசுத்தராகிய தேவனின் அக்கினியினால் பட்சிக்கப்படுவதின்

மூலமும் தேவனுடைய நாமம் மகிமை அடைவதாக நாம் இந்த இடத்தில் பார்க்கின்றோம். அதுவே மோசே கூறும் பேச்சு ஆகும். தேவனுடைய மகிமை மனிதர்களின் எந்த செய்கைகளினாலும் பாதிக்கப்பட போவது இல்லை. தேவ மகிமை என்றென்றும் காக்கப்படுகிறது. துன்மார்க்கருடன் நீதிமான்கள் சங்கரிக்கப்படுவது இல்லை. நீதிமானையும் துன்மார்கனையும் தேவ நீதி சமமாக நடத்துவதும் இல்லை. துன்மார்க்கனை சங்கரிப்பதினால் தேவ நாம மகிமை எவ்வித குறைவும் காண்பதும் இல்லை. பார்வோனிடம் கர்த்தர் மகிமை அடைவதற்காகவே திரும்ப திரும்ப அவனிடம் கிரியை செய்தார். ''நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறியும்படி பார்வோனாலும், அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப் படுவேன்'' என்று யாத்திராகமம் 14:4-வது வசனத்தில் கர்த்தர் கூறுகிறார். அவரிடம் சேருகிறவர்களால் அவர் பரிசுத்தம் பண்ணப்படுவார். அசுத்தமானதும், தீட்டு உள்ளதும் அவரை சேரவே முடியாது என்பதே மோசே கூறியது ஆகும். பரிசுத்தமாக்கப்படுவது மட்டுமல்ல, அவரைக் கிட்டி சேருகிறவர்களாலே மகிமையும் அடைகின்றார் என்று மோசே கூறுகின்றார்.

''அந்த ஸ்தலம் என்னுடைய மகிமையினால் பரிசுத்தமாக்கப்படும்'' என்று யாத். 29:43-வது வசனத்தில் பார்க்கலாம். அந்த தேவ மகிமை, தேவ அக்கினி, பரிசுத்தம் இல்லாத நாதாபும், அபியூவும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முயற்சி செய்த பொழுது அவர்களுக்கு அனுமதி சீட்டு வழங்கவில்லை; மாறாக பட்சித்து விட்டது. ஆரோன் பேசாது இருந்தான் என்று 3-வது வசனம் முடிகின்றது. நீங்கள் சாகாதபடிக்கு கர்த்தர் கற்பித்தபடி செய்யுங்கள் என்று திரும்ப திரும்ப கூறப்பட்டதை ஆரோன் நன்கு அறிவான். அவனுடைய நான்கு பிள்ளைகளும் அதை கேட்டு கொண்டே இருந்தார்கள் என்பதையும் அவன் நன்கு அறிவான். ஒரு தகப்பன் என்ற முறையில் அவனுடைய இருதயம் பொங்குகின்றது. ஆனால் கர்த்தருடைய ஆசாரியனாக பிரதிஷ்டை செய்யப்பட்டு விட்டேன் என்ற முறையில் அவனுடைய இருதயம் நீதிக்கு நிமிர்ந்து நிற்கின்றது. 'நீங்கள் சாகாதபடிக்கு' என்று மிக மிக சமீபத்தில் லேவியராகமம் 8:35-லும்கூட கூறப்பட்டதை ஆரோன் நன்கு அறிவான். ஆரோனின் இரண்டு குமாரரும் சாவுக்கு ஏதுவான செயல் செய்து விட்டார்கள் என்பதை ஆரோன் தெளிவாக உணர்ந்து விட்டான்; எனவே மௌனம் ஆகி விட்டான்.

உபாகமம் 26:14-வது வசனம் ''நான் துக்கம் கொண்டாடும் போது அதில் புசிக்கவும் இல்லை; தீட்டான காரியத்துக்கு அதில் ஒன்றும் எடுக்கவும் இல்லை; இழவு காரியத்துக்காக அதில் ஒன்றும் படைக்கவும் இல்லை; நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, தேவரீர் எனக்கு கட்டளையிட்டபடி சகலமும் செய்தேன்'' என்று எழுதப்பட்டுள்ளபடி ஆரோன் அமைதியாகி விட்டான். என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில் உம்முடைய ஆறுதல்கள் என்னை தாங்குகிறது என்று சங்கீதம் 94:19 கூறுவது அன்று ஆரோனின் அனுபமாக மாறிவிட்டது. ''இவைகள் எல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவில்லை; தேவனை பற்றி குறை சொல்லவும் இல்லை'' என்று யோபு 1:22-வது வசனமும், 2:10-வது வசனமும் கூறுவது போல, ஆரோன் எந்த குறையும் சொல்ல வில்லை; தனக்காக வாதாடவும் இல்லை. தனது உதடுகளை திறக்கவும் இல்லை. அமைதியாக நின்று விட்டான். ஆரோன் தன் வாழ்க்கையில் காணாத ஒன்றை கண்டு விட்டான். தேவனுடைய பணிக்கு என்று அவனும் அவனுடைய வீட்டாரும் அழைக்கப்பட்டார்கள். ஆனால் அந்த அழைப்பு அவனுடைய இரண்டு பிள்ளைகளுக்கு நீடிக்கவில்லை என்பதை அவன் அறிந்து மவுனம் ஆகிவிட்டான். அந்த வசனங்கள் கூறுவது போல, ஆரோன் தன் உதடுகளைத் திறக்கவே இல்லை.

யாத்திராகமம் 33-வது அதிகாரத்தில் நாம் ஓர் ஆரோனை பார்த்தோம். கன்றுக்குட்டி ஒன்று செய்து மக்களை பாவத்திற்கு நேராக நடத்தி விட்ட ஆரோன் ஓர் பெரும் தவறு செய்தான். அதை மோசே கேள்வி கேட்ட பொழுது தன்னை நல்லவன் என்று காட்ட ஆரோன் அடுக்கு அடுக்காக பேசினான். இங்கு ஆரோன் மிக மிக அமைதியாக மாறி விட்டான். ஆரோனின் வாழ்க்கை எவ்வளவோ உயரத்தை இப்பொழுது கண்டு கொண்டு இருக்கின்றது. கவலைகள், கண்ணீர்கள், பெருமூச்சுகள் மனித வாழ்க்கைகளை மேலும் மேலும் பொன்னான வாழ்க்கையாக மாற்றுகின்றன. சங்கீதம் 39:9-வது வசனம் கூறுவது போல ''நீரே இதை செய்தீர் என்று நான் என் வாயை திறவாமல் மவுனமாக இருந்தேன்'' என்று ஆரோன் நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தான். அவன் துக்கம் இதயத்தை துளைத்தது! ஆனால் அந்த துக்கம் அவன் இதயத்தை உடைத்து விடாமல் கர்த்தர் காத்தார். அவனது நெஞ்சு முட்டியது! ஆனால் வெடித்து விடாதபடி கர்த்தர் காத்தார். கண்ணீர் குவிந்தது! ஆனால் ஓர் அருவியாக புறப்பட்டு வந்து கொட்டி விடாமல் கர்த்தர் காத்தார். ''உமக்கு பயப்படும் பயத்தால் என் உடம்பு சிலிர்த்தது. உமது நியாத்தீர்ப்புகளுக்கு பயப்படுகிறேன்'' என்று சங்கீதம் 119:120-வது வசனம் கூறுவது ஆரோனுக்கு அன்று மிக உண்மையாயிற்று.

அவனது இரண்டு பிள்ளைகள் இறந்து கிடக்கிறார்கள். ஆரோன் வருந்தி நிற்கிறான். ஆனால் வாய் திறக்கவில்லை. ''தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும் மனம் பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு'' என்று பிரசங்கி 5:2 கூறுகின்றது. நாதாப், அபியூ ஆகிய இருவரும் செய்யத்தக்கவைகளை செய்யவில்லை; செய்ய தகாதவைகளை செய்து விட்டார்கள். அறியாமல் அவர்கள் பாவம் செய்யவில்லை, அறிந்து துணிந்து தவறு செய்து விட்டார்கள். பரிசுத்தருக்கு பயனுள்ள சேவகர்களாக அவர்கள் இருக்கவில்லை. எஜமானுக்கு ஏற்ற ஊழியக்காரர்களாக அவர்கள் திகழவில்லை. அறிந்து செய்தார்கள், அடிவாங்கினார்கள்.

தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாக இராமலும் அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் என்று புதிய ஏற்பாட்டின் புத்தகத்தில் பரிசுத்த லூக்கா என்பவர் எழுதின சுவிசேஷம் 12:47 கூறுகின்றது. சங்கீதம் 97:3,6,10 ஆகிய வசனங்கள் இக்காட்சியை நினைவூட்டுகின்றன. ''அக்கினி அவருக்கு முன் சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய சத்துருக்களை சுட்டு எரிக்கிறது. வானங்கள் அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது. சகல ஜனங்களும் அவருடைய மகிமையை காண்கிறார்கள். கர்த்தரில் அன்பு கூறுகிறவர்களே, தீமையை வெறுத்து விடுங்கள்.''

பின்பு மோசே ஆரோனின் சிறிய தகப்பனான ஊசியேலின் குமாரராகிய மீசவேலையும் எல்சாபானையும் அழைத்து நீங்கள் கிட்ட வந்து உங்கள் சகோதரரை பரிசுத்த ஸ்தலத்துக்கு முன்னின்று எடுத்து, பாளையத்துக்கு புறம்பே கொண்டு போங்கள் என்றான். (யாத்.10:4)

இக்கட்டான ஒரு நேரத்தை மோசே கடந்து வருகின்றார். கவனமாக சிந்தித்து செயல்பட வேண்டிய ஒரு நேரம் இந்த நேரமாகும். ஒரு கனத்த சூழ்நிலையின் நடுவில் பரிசுத்தரின் பிரதிநிதியாகவும், துயரத்துக்குள்ளான ஜனத்திற்கு ஒரு ஆலோசகராகவும் மோசே செயலாற்றுகின்றார். கர்த்தரின் சந்நிதியில் இருக்கும் அக்கினி அனைத்தையும் கவனித்து கொண்டே இருக்கின்றது. பரிசுத்தம் தொடர்ந்து காக்கப்பட வேண்டும். அதே சமயத்தில்

ஒரு குடும்பத்தில் இடம் பெற்ற மிக துயரமான ஒரு சம்பவம் ஆறுதல் படுத்தப்படவும் வேண்டும். பெரும் கூட்டம் கூடி விட்டது. அந்த திரள் கூட்டத்தில் அவர் தேடியவர்கள் அவரது கண்ணிற்கு தெரிந்து விட்டார்கள். அவர்கள் ஆரோனின் சிறிய தகப்பனான ஊசியேலுக்கு பிறந்த குமாரராகிய மீசவேல், எல்சாபான் என்ற இரண்டு நபர்கள் ஆகும். அவர்களை பற்றிய குறிப்பு யாத்திராகம புத்தகத்தில் 6:18-ல் வருகின்றது, ''கோகாத்தின் குமாரர் அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள்.'' ''ஊசியேலின் குமாரர் மீசவேல் எல்சாபான், சித்ரி என்பவர்கள்'' என்று யாத்திராகமம் 6:22-லும் பார்க்கிறோம்.

அவர்கள் ஆரோனின் குடும்பத்தை சேர்ந்தவர்கள், பொறுப்பு உள்ளவர்கள். அவர்கள் இருவரையும் மோசே கண்டு கொண்டார். நடந்த சம்பவத்தினால் அதிக துக்கத்தோடு அந்த இரண்டு பேரும் தூரமாக நின்று கொண்டு இருக்கின்றார்கள். அச்சத்தின் மிகுதியினால் அருகில் வருவதற்கே பயந்து நிற்கின்றார்கள். அவர்களை மோசே கிட்டே வாருங்கள் என்று கூப்பிட்டான். பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக தரையில் விழுந்து கிடக்கும் சகோதரரை எடுத்து பாளயத்திற்கு புறம்பே கொண்டு செல்லுங்கள் என்றான். ஆறாவது வசனத்தின் இறுதியில் நாம் பார்த்தால் அது கர்த்தர் கொழுத்தின அக்கினி என்று அறிந்து கொள்ளுகின்றோம். அந்நிய அக்கினியை நாதாப் அபியூ என்ற இருவரும் கொழுத்திய உடனே பரிசுத்த அக்கினி கொழுத்தப்பட்டது. அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக தரையில் கிடந்தார்கள் என்பதில் இருந்து நாதாப், அபியூ ஆகிய இரண்டு பேரும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவே இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அந்நிய அக்கினியை கையில் எடுத்து கர்த்தருடைய மகா பரிசுத்தமான சந்நிதியில் அவர்கள் நுழையும் பொழுதே கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி தீவிரித்து புறப்பட்டு வந்து அவர்களை பட்சித்து போட்டது. நாதாப், அபியூ ஆகிய இருவரையும் எடுத்து அடக்கம் செய்ய ஆரோன் உரிமை பெறவே இல்லை. அவனுடைய அடுத்த இரண்டு குமாரர்களுக்கும் கூட அந்த சலுகை கொடுக்கப்படவே இல்லை.

மோசே சொன்னபடி அவர்கள் கிட்ட வந்து அவர்களை அவர்கள் உடுத்தி இருந்த சட்டைகளோடு எடுத்து பாளயத்திற்கு புறம்பே கொண்டு போனார்கள். (லேவி.10:5)

மோசே சொன்னபடியே அவர்கள் செய்தார்கள். கிட்ட வந்தார்கள். நாதாப் அபியூ என்ற இருவரையும் பிரதிஷ்டை ஆராதனையில் அவர்கள் உடுத்தி இருந்த அதே சட்டைகளுடன் பாளயத்துக்கு புறம்பே எடுத்து சென்றார்கள். நாதாப், அபியூ என்ற அவர்களுடைய உயிரை மட்டுமே கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினி பட்சித்தது. ஆனால் அவர்கள் உடல் கருகவே இல்லை. உடை எரியவே இல்லை. தேவனை கனவீனம் செய்த அந்த இருவரின் உயிரை மட்டுமே அக்கினி பட்சித்தது.

சுமார் 800 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது சுமார் கி.மு. 600-வது ஆண்டில் நேபுகாத் நேச்சார் என்ற ஒரு அரசன் தன்னை வணங்க மறுத்த மூன்று விசுவாசிகளை மிக கடுமையான ஒரு நெருப்பு சூளையில் வீசி எறிந்தான். அவர்களை வீசியவர்கள் கருகி செத்தார்கள். சாத்ராக், மேசாக் ஆபேத்நேகோ என்ற அந்த மூன்று விசுவாச வீரர்களின் உடலோ, உடையோ, தலை முடியோ அரசன் கொழுத்திய நெருப்பினால் சற்றும் பாதிக்கப்படவில்லை. கர்த்தரின் பரிசுத்த அக்கினி அரசனின் அக்கினியை பட்சித்தது. அவரை நம்பியவரை பராமரித்தது. பரிசுத்தவான்கள் அக்கினியின் நடுவிலே நடந்தாலும்

பராமரிக்கப்படுகின்றார்கள். பரிசுத்தம் தவறுகிறவர்கள் தரையிலே நடந்தாலும் பட்சிக்கப்படுகின்றார்கள்.

மோசே ஆரோனையும், எலியாசார், இத்தாமார் என்னும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் சாகாதபடிக்கும், சபை அனைத்தின் மேலும் கடும் கோபம் வராதபடிக்கும் நீங்கள் உங்கள் தலைப்பாகையை எடுத்து போடாமலும் உங்கள் வஸ்திரங்களை கிழிக்காமலும் இருப்பீர்களாக. உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொழுத்தின இந்த அக்கினிக்காக புலம்புவார்களாக; (லேவி.10:6)

அனைவரையும் பார்த்து, மூன்றாவது வசனத்தில் மோசே பேசினார். 4-வது வசனத்தில் குடும்பத்தின் இரண்டு உறுப்பினர்களை மட்டும் பார்த்து பேசினார். ஆனால் 6-வது வசனத்தில் ஆரோனையும், அவனுடைய இரண்டு குமாரர்களையும் பார்த்து, திட்டவட்டமாக பேசுகின்றார்: 'நீங்கள் சாகாதபடிக்கு' என்று ஆரம்பித்தார். இந்த அதிகாரத்தில் 6,7,9-வது வசனம் ஆகிய மூன்று வசனங்களிலும் மூன்று முறை ''சாகாதபடிக்கு'' என்ற வார்த்தை வருகின்றது. இரண்டு முறை மோசே அதனை கூறுகின்றார். மூன்றாவது முறையாக தேவனே நேரடியாக வந்து அவ்விதம் கூறி எச்சரிக்கின்றார். முதலாவது காரியம் நீங்கள் சாகாதபடிக்கு உங்களை காத்து கொள்ளுங்கள் என்பது. இரண்டாவதாக சபை அனைத்தின் மேலும் தேவ கோபம் வந்து விடாதபடிக்கு எந்த செயலையும் உணர்ச்சி வசப்பட்டு செய்து விடாதேயுங்கள் என்பது. மோசே அறிவித்த மூன்றாவது தடை ஏழாம் வசனத்தில் வருகின்றது; ஆசாரியர்கள் சபையை விட்டு போகக்கூடாது என்பதே அது.

முதல் தடை தலைப்பாகையை எடுத்துப்போட வேண்டாம் என்றார். உங்கள் அன்பிற்கு உரிய நாதாப், அபியூ என்பவர்கள் திடீரென்று மறைந்து விட்டார்கள். தாங்க முடியாத துக்கமாக அது இருக்கின்றது. ஆனாலும் உங்கள் தலைப்பாகையை எடுத்து போட வேண்டாம் என்று கூறுகின்றார். தலை பாகையை எடுத்து போட வேண்டாம் என்பதின் சரியான பொருள் தலை முடியை விரித்து போட்டு அழ வேண்டாம் என்பது ஆகும். ஆசாரிய பிரதிஷ்டையின் சின்னமாக தலைப்பாகை விளங்குகின்றது. அதை எடுத்து விடுதல், பெற்ற ஊழியத்தையே எடுத்து எறிந்து விடுவதற்கு சமமாக மாறிவிடும். இரண்டாவதாக விதிக்கப்பட்ட தடை, வஸ்திரங்களை கிழிக்க வேண்டாம் என்பது ஆகும். வாழவே பிரியம் இல்லை என்பதை வஸ்திரங்களை கிழித்து அழுவது காட்டுகின்றது. என்னுடைய பிள்ளைகள் இறந்து விட்டனர். இனி நான் உயிரோடு இருந்து பயன் என்ன என்பது ஆகும்.

நீங்கள் சாகாதபடிக்கு ஆசரிப்புக் கூடார வாசலிலிருந்து புறப்படாதிருங்கள்; கர்த்தருடைய அபிஷேக தைலம் உங்கள் மேல் இருக்கிறதே என்றான்; அவர்கள் மோசேயினுடைய வார்தையின்படியே செய்தார்கள். (லேவி.10:7)

மூன்றாவதாக அவர்கள் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்து புறப்படக்கூடாது. ''தன் சகோதரருக்குள்ளே பிரதான ஆசாரியனாக தன் சிரசில் அபிஷேகத்தைலம் வார்க்கப் பட்டவனும், அவனுக்குரிய வஸ்திரங்களை தரிக்கும்படி பிரதிஷ்டை பண்ணப்பட்டவனுமாய் இருக்கிறவன் எவனோ, அவன் தன் பாகையை எடுக்காமலும் தன் வஸ்திரங்களை கிழித்து கொள்ளாமலும், பிரேதம் கிடக்கும் இடத்தில் போகாமலும் தன் தகப்பனுக்காகவும், தன் தாய்க்காகவும் தன்னை தீட்டு படுத்தி கொள்ளாமலும், பரிசுத்த

ஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்த குலைச்சலாக்காமலும் இருப்பானாக; அவனுடைய தேவனின் அபிஷேக தைலம் என்னும் கிரீடம் அவன் மேல் இருக்கிறதே நான் கர்த்தர்.'' என்று லேவி. 21:10-12-ல் நாம் பார்க்கிறோம். ''அவர்கள் மோசேயினுடைய வார்த்தையின் படியே செய்தார்கள்'' என்று ஏழாவது வசனம் கூறுகின்றது. அந்த துக்கமான சூழ்நிலையிலும் தங்கள் விசுவாசத்தை காத்து கொண்டார்கள். தாங்க முடியாததை தாங்கி கொண்டார்கள். பொறுக்க முடியாததை பொறுத்து கொண்டார்கள். மனம் ஏற்க முடியாததை ஒப்பு கொண்டார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்ய தங்களை தத்தம் செய்தார்கள். ஒரு குடும்பத்தின் இரண்டு பிள்ளைகள் செய்த தவறான செயல் குடும்பத்தையே குலுக்குகின்றது; முழு சமுதாயத்தையும் பாதிக்கின்றது.

கர்த்தர் ஆரோனை நோக்கி: நீயும் உன்னோடே கூட உன் குமாரரும் சாகாதிருக்க வேண்டுமானால் ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசிக்கிற போது திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்க வேண்டாம். பரிசுத்தம் உள்ளதற்கும் பரிசுத்தம் இல்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசம் பண்ணும்படிக்கும், கர்த்தர் மோசேயை கொண்டு இஸ்ரவேல் புத்தரருக்கு சொன்ன சகல பிரமாணங்களையும் அவர்களுக்கு போதிக்கும்படிக்கும், இது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார். (லேவி.10:8-11)

ஆரோனும், இத்தாமாரும், எலியாசாரும் தொடர்ந்து நாங்கள் ஊழியத்தில் உறுதியாக இருப்போம் என்று தீர்மானித்து விட்டது கர்த்தருக்கே கனம் கொடுப்பதற்கு சமமாக மாறியது. கர்த்தர் அவர்களுடன் பேசுகிறார். 8-வது வசனம் 'கர்த்தர் ஆரோனை நோக்கி:' என்று துவங்குகின்றது. யாத்திராகமம் 4:27-வது வசனத்தில் கர்த்தர் ஆரோனை நோக்கி என்று பார்த்தோம். கர்த்தர் ஆரோனிடம் நேரடியாக பொதுவாக பேசுவது இல்லை. ஆனால் லேவியராகமம் 10:8-வது வசனம் முதல் ஆரோனிடமும் நேரடியாக பேச ஆரம்பிக்கிறார். அவனது இரண்டு குமாரர்கள் இறந்த துயரத்தின் நடுவிலும் ஆரோன் தொடர்ந்து ஊழியம் செய்வதை தெரிந்து கொண்டான். அது கர்த்தருக்கு பிரியமானதாக இருந்தது.

குடும்பத்தில் தொடர்ந்து சாவு வராமல் இருக்க மது அருந்த வேண்டாம் என்று கர்த்தர் கூறுகின்றார். மது அருந்திய இரண்டு பிள்ளைகள் மதி இழந்து போனார்கள். நுட்பமான ஆராதனை முறைகளையும், பலி முறைகளையும் மறந்து விட்டார்கள். செய்ய வேண்டியதை செய்யாமல் செய்யக் கூடாததை செய்து விட்டார்கள். கர்த்தர் கூறியதை ஆரோன் ஒப்பு கொள்ளுகின்றான்.

தொடர்ந்து கர்த்தர் பேசுகின்றார். 10,11-வது வசனங்களில் கர்த்தர் ஆரோனிடம் அவனது மூன்று முக்கிய பொறுப்புகளை ஞாபகப்படுத்துகின்றார். முதலாவது, பரிசுத்தம் உள்ளவை, பரிசுத்தம் இல்லாதவை எவை என்று ஆரோன் பகுத்து அறிந்து கொள்ள வேண்டும். இரண்டாவது, தீட்டு உள்ளவை தீட்டு இல்லாதவை எவை என்றும் தீர்ப்பிட்டு பார்க்க வேண்டும். மூன்றாவது, மோசேயை கொண்டு கூறிய சகல பிரமாணங்களையும் சபை கூடி வரும் பொழுது போதிக்க வேண்டும். இந்த மூன்று முக்கிய குறிப்புகளே ஆரோனிடம் கர்த்தரால் கூறப்பட்டவைகள். கர்த்தாதி கர்த்தர் ஆரோனிடம் நேரடியாக பேசியது ஆரோனையும் அவனுடைய இரண்டு குமாரர்களையும் தேற்றியது. தொடர்ந்து அவர்கள் ஊழியம் செய்யலாம் என்பதை அது நிச்சயப்படுத்தியது.

மோசே ஆரோனையும் மீதியாயிருந்த அவன் குமாரராகிய எலெயாசாரையும் இத்தாமாரையும் நோக்கி: நீங்கள் கர்த்தருடைய தகனபலிகளில் மீதியான போஜனபலியை எடுத்து, பலிபீடத்தண்டையிலே புளிப்பில்லாததாக புசியுங்கள்; அது மகா பரிசுத்தமானது. அதை பரிசுத்த ஸ்தலத்திலே புசியுங்கள், அது கர்த்தருடைய தகனபலிகளில் உனக்கும் உன் குமாரருக்கும் ஏற்படுத்தப்பட்டதாய் இருக்கிறது, இப்படி கட்டளை பெற்றிருக்கிறேன். அசைவாட்டும் மார்க்கண்டத்தையும், ஏறெடுத்து படைக்கும் முன்னம் தொடையையும், நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் குமாரத்திகளும் சுத்தமான ஸ்தலத்திலே புசிப்பீர்களாக; இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளில் அவைகள் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் கிடைக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கொழுப்பாகிய தகனபலிகளோடே அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டும்படி ஏறெடுத்து படைக்கும் முன்னம் தொடையும், அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் கொண்டு வருவார்கள்; அது கர்த்தர் கட்டளையிட்டபடியே உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் நித்திய கட்டளையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றான். (லேவி.10:10-15)

12 முதல் 18 வசனங்கள் வரை மறு ஒழுங்குகள் ஆசரிப்பு கூடாரத்திலே செய்யப்படுகின்றன. எதிர்பாராத ஒரு சம்பவம் இடம் பெற்று விட்டதால் ஆராதனை முறைகள் நடுவில் நிறுத்தப்பட்டன. பலிகள் பாதியில் பாதிக்கப்பட்டது. அதனை நிறுத்தாமல் தொடர மோசே கட்டளை இடுகிறான். தகனபலியில் அவர்களது பங்கையும், போஜன பலியில் அவர்களது பங்கையும் புசிக்க கட்டளை இடுகிறான். தனிப்பட்ட வாழ்வின் துக்கம் ஆசாரிய ஊழியத்திற்கு தடை ஏற்படுத்தலாகாது என்று கூறுகிறான்.

பாவநிவாரண பலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டு கடாவை மோசே தேடி பார்த்தான்; அது தகனிக்கப்பட்டிருந்தது; ஆகையால், மீதியாயிருந்த எலெயாசார், இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரர் மேல் அவன் கோபங் கொண்டு: பாவநிவாரண பலியை நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் புசியாமல் போனதென்ன? அது மகா பரிசுத்தமாயிருக்கிறதே; சபையின் அக்கிரமத்தை சுமந்து தீர்ப்பதற்கு கர்த்தருடைய சந்நிதியில் அவர்களுக்காக பாவ நிவிர்த்தி செய்யும் பொருட்டு, அதை உங்களுக்கு கொடுத்தாரே. அதின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே கொண்டு வரப்படவில்லையே; நான் கட்டளையிட்டபடி நீங்கள் அதை பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்க வேண்டியாதாயிருந்ததே என்றான். (லேவி 10:16-18)

மீதியாக இருக்கும் இரண்டு பிள்ளைகளும் தவறி போய் விடக்கூடாது என்று மோசே அனைத்தையும் வேகமாக பரிசீலனை செய்கிறான். அடுத்த இரண்டு பிள்ளைகளும் பலி முறைகளில் தவறி இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளுகின்றான். அண்ணன்மார் இருவரும் இறந்தவுடன் அனைத்தையும் அப்படியே நிறுத்தி விட்டனர். மோசே மீதியான போஜன பலியை ஏன் அப்படியே விட்டு வந்தீர்கள்? என்று கேட்கின்றான். ஆரோனின் குமாரர் பதில் பேசவே இல்லை. பிள்ளைகளுக்கு பதிலாக ஆரோன் பதில் கூறுகின்றார்.

அப்பொழுது ஆரோன் மோசேயை நோக்கி: அவர்கள் தங்கள் பாவ நிவாரண பலியையும், தங்கள் சர்வாங்க தகன பலியையும் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தின இன்று தானே எனக்கு இப்படி நேரிட்டதே. பாவ நிவாரண பலியை இன்று நான் புசித்தேனானால் அது கர்த்தரின் பார்வைக்கு நன்றாய் இருக்குமோ என்றான். (லேவி.10:19)

பிள்ளைகள் முறைப்படி செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் இன்று இடம் பெற்ற சம்பவத்தினால், முறைப்படி எதையும் செய்யவே எங்களால் இயலாமல் போயிற்று, மன்னித்து கொள்ளுங்கள், என்பதே ஆரோனின் பதில் ஆகும். உடைந்த இதயங்களை போன்று சிறந்த பலிகள் உலகில் எங்கு உண்டு? எழுத்துக்கள் கொல்லுகின்றன. ஆவியோ உயிர்ப்பிக்கின்றது. ஆரோனின் ஆவி உண்மையான ஆவி என்று மோசே அறிந்து கொண்டான்.

மோசே அதை கேட்டபோது அமைதலாயிருந்தான். (லேவி.10:20)

இந்த அதிகாரத்தில் முன்றாவது வசனத்தில் ஆரோன் பேசாமல் இருந்தான் என்று கூறப்பட்டு உள்ளது. அதே அதிகாரத்தில் 20-வது வசனத்தில் மோசே அமைதலாக இருந்தான் என்று வருகின்றது. மிக கடுமையான ஒரு சூழ்நிலையில் அமைதி மறையவில்லை. 'என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், கர்த்தாவே, உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவை தேற்றுகின்றது' என்பது ஆரோனுக்கும், மோசேக்கும் உண்மையாயிற்று. ஆரோன் தன் சொந்த அமைதியை காத்து கொண்டான்; மோசே தன் சொந்த அமைதியை காத்து கொண்டான். 'உம்மை உறுதியாய் பற்றி கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.'

தொகுதி - 4
உணவிலும், உடம்பிலும், உள்ளத்திலும் பரிசுத்தம் காக்க கர்த்தரின் ஆலோசனைகள்

அத்தியாயம் - 6
உட்கொள்ளும் உணவு சம்பந்தமான விதிமுறைகள்

''நான் உங்கள் தேவனாய் இருக்கும்படி உங்களை எகிப்து தேசத்தில் இருந்து வரப்பண்ணின கர்த்தர். நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராய் இருப்பீர்களாக'' (லேவி. 11:45). பரிசுத்தம், பரிசுத்தம், பரிசுத்தம் என்பதே கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் இருந்து கர்த்தர் எதிர்பார்ப்பது என்பதே லேவியராகமம் முழுவதும் எதிரொலிக்கும் கருத்தாகும்.

லேவியராகமம் 11 முதல் 15-ம் அதிகாரம் வரை லேவியராகமத்தின் 3-வது பிரிவு இடம் பெறுகின்றது. சுத்தமானவை அசுத்தமானவை என்ற விபரங்கள் இந்த அதிகாரங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன. 11-வது அதிகாரத்தில், உட்கொள்ளும் உணவு எப்படி பட்டதாக இருக்க வேண்டும் என்பதை பற்றிய குறிப்பு மீட்கப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டது. 12-வது அதிகாரத்தில், மகப்பேறு சம்பந்தப்பட்ட காலங்களில் எப்படி சுத்தம் காக்கப்பட வேண்டும் என்பது கொடுக்கப்பட்டது. 13,14-வது அதிகாரங்களில், தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளை பற்றிய விபரங்கள் தரப்பட்டன. 15-வது அதிகாரத்தில், சரீர சம்பந்தப்பட்ட பாடுகளை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இப்படியாக லேவியராகமம் 11 முதல் 15 அதிகாரங்கள் ஒரு வரிசையான அதிகாரங்களாக காணப்படுகின்றன.

6.1 உட்கொள்ளும் உணவில் சுத்தம் தேவை

சுத்தமானவைகள், அசுத்தமானவைகள் என்ற கோடு, மனிதனால் அல்ல, கர்த்தரால் மட்டுமே வரையறுக்கப்பட்டது. காரணம், கர்த்தர் ஒருவரே பரிசுத்தர், சுத்தமான உயிரினங்கள் இரண்டு விதத்தில் பயனுள்ளவை. ஒன்று கர்த்தருக்கு பலியாக படைக்கப்படுவதற்கு, இரண்டாவதாக ஜனங்களுக்கு உணவாக பயன்படுவதற்கு. சுத்தமான உயிரினங்கள் தங்களுக்காக மட்டுமே வாழ்வதில்லை! ஆனால் அசுத்தமான உயிரினங்களான மிருகங்களிலும் நீரினங்களிலும் பறவைகளிலும் சில சுற்று சூழலை சுத்தப்படுத்த பயன்பட்டாலும் மற்றவை யாவும் மற்ற உயிரினங்களுக்கு ஆபத்து விளைவிக்கின்றன.

லேவியராகமம் 11-வது அதிகாரம் சுத்தமான உயிரினங்களையும், அசுத்தமான உயிரினங்களையும் திட்டவட்டமாக பிரித்து காட்டுகின்றது. பரிசுத்தம் என்ற பதத்திற்கு பிரித்து எடுக்கப்படல் என்று பொருள் ஆகும். பரிசுத்தரை சேவிக்கும் மக்கள் சுத்தமானவைகளை சுதந்தரிக்க வேண்டும். அசுத்தமானவைகளை அரோசிக்க வேண்டும். சுத்தமானவைகள் ஆசீர்வதிக்கப்பட்டு விருத்தி அடைகின்றன. அசுத்தமானவைகளோ குறைவு பட்டு இல்லாமல் போகின்றன. தனக்காக வாழ்பவர் முன்னேற்றம் காண்பது இல்லை. பிறருக்காக வாழ்பவர் பின்னேற்றம் அடைவதும் இல்லை.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க ஜீவ ஜந்துக்கள் யாதெனில்: (லேவி.11:1,2)

11-வது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சத்தியங்கள் அனைத்தும் உபாகமம் 14:3-21-வது வசனம் வரை திரும்பவும் ஒரு முறை கூறப்பட்டு உள்ளது. சுத்தமான ஜந்துக்கள் அசுத்தமான ஜந்துக்கள் என்பவைகள் பட்டியலாக லேவியராகமம் 11-வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த விபரத்தை முதல் முதலாக பெற்றவர் நோவா என்பவர் ஆவார். வெள்ளப்பெருக்கு வருவதற்கு முன்னர் உயிரினங்கள் பேழையில் ஏற்றப்பட்டன. அப்பொழுது கர்த்தர் நோவாவிடம் சுத்தமான மிருகங்கள், அசுத்தமான மிருகங்கள் என்பதை தெளிவு படுத்தினார். ''நீ சுத்தமான சகல மிருகங்களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், சுத்தமல்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும் பேழையில் சேர்த்துக் கொள்'' என்று கர்த்தர் நோவாவிடம் கூறினார் (ஆதி. 7:2)

வெள்ளப்பெருக்கு முடிந்த உடன் நோவா பலியிட்டார். சுத்தமானவைகளில் தெரிந்து எடுத்து பலியிட்டார். ''அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றை தெரிந்து கொண்டு, தகன பலியாக பலியிட்டான்'' (ஆதி. 8:20). மிருகங்கள், நீரினங்கள், பறவைகள் ஆகிய மூன்றிலும் சுத்தமானவை எவை? அசுத்தமானவை எவை? என்று பகுதி பகுதியாக பிரித்து கர்த்தர் நமக்கு காட்டுகிறார்.

6.2 நில வாழ் மிருகங்களில் சுத்தமானவையும், அசுத்தமானவையும்

மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாக பிரிந்திருக்கிறதும் அசை போடுகிறதுமானவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். (லேவி. 11:3)

உணவாக தேவன் தந்த நிலம் சம்பந்தப்பட்ட பிராணிகள் சுருக்கமாக இங்கு வரையறுத்து கூறப்பட்டுள்ளது: விரி குளம்பும் அசைபோடுகிறதுமான மிருகங்கள். இவ்விரண்டில் ஏதாவது ஒன்று இல்லாமல் போனால் அந்த பிராணி அசுத்தமாயிருக்கும்.

மோசேயின் நியாயப்பிரமாணம் மாமிசத்திற்கும் பானங்களுக்கும் மிக முக்கியத்துவம் கொடுத்ததால் இந்த விதிகள் இஸ்ரவேல் மக்கள் சுகாதாரமுறையில் வாழ்ந்து அநேக வியாதிகளுக்கு தப்பித்து கொள்ளவும், அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களாக தங்களை காத்து கொள்ளவும் வழி வகுத்தது. கிறிஸ்துவுக்கு முன்னால் உள்ள காலங்களில் சுத்தமானவை, அசுத்தமானவை என்று மிருகங்கள் கூறுபடுத்தப்பட்டன. ஆனால் கிறிஸ்துவிற்கு பின் உள்ள காலங்களில் நாம் பார்ப்போமென்றால் ''தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே'' என தேவ தூதன் பேதுருவிடம் கூறுவதை காணலாம் (அப். 10:15). இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் யாவரையும் சுத்திகரிக்கும் என்பதை தெளிவுபடுத்தி காட்டுகிறதே தவிர அசுத்தமான மிருகங்களை உணவாக கொள்ள நம்மை ஏவவில்லை. லேவியராகமம் 11:3-18-ல் சில மிருகங்களின் பெயர்களே கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் உபாகமம் 14:4-8-ல் பத்து மிருகங்கள் பெயர்

சொல்லி சாப்பிடத்தகுந்தவை என்று கூறப்பட்டுள்ளது. ''நீங்கள் புசிக்கத்தகும் மிருகங்களாவன: மாடும், செம்மறியாடும், வெள்ளாடும், மானும், வெளிமானும், கலைமானும், வரையாடும், புள்ளிமானும், சருகுமானும் புல்வாயுமே. அசைபோடுவதும் விரிகுளம்புள்ளதுமான மிருகங்கள் சாப்பிடத் தகுந்தவை,

அசட்டையாக கர்த்தர் இவ்வாறு மிருகங்களை பிரிக்கவில்லை. உணவு சங்கிலியை நாம் பார்ப்போமென்றால், கர்த்தர் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் படைப்பில் உணவாக கொடுத்தது தாவர இனங்களையே. உட்கொள்ள சுத்தமானவை என்று பிரித்து கூறப்பட்டு இருக்கும் இந்த மிருகங்களை பார்ப்போம் என்றால் அவற்றின் உணவு இந்த தாவர இனங்களே என்று கூறமுடியும். புற்களும் செடிகளும் செரிப்பதற்கு நேரம் எடுக்குமாதலாலும், அவற்றின்

சுத்தமானதும் புசிக்கத்தக்கதுமான நிலவாழ் மிருகங்கள்



மாடு
(Ox)



செம்மறியாடு
(sheep)

வெள்ளாடு
(goat)



வரையாடு
(wild goat)



மலையாடு
(ibex)

புல்வாயு
(mountain sheep)



மான்
(deer)

வெளிமான்
(gazelle)

கலைமான்
(roe deer)

சருகுமான்
(antelope)

நீலமான்
(blackbuck)

புள்ளிமான்
(spotted deer)

சத்துக்களை உடல் எடுத்து கொள்ள அவை நன்றாக அரைக்கப்பட வேண்டியவையாக இருப்பதாலுமே அவற்றிற்கு அசைபோட வேண்டிய பக்குவத்தை கர்த்தர் கொடுத்திருக்கிறார்.

சுத்தமான இந்த மிருகங்களின் உயிருக்கு ஆபத்து மிக உண்டு. ஆகவே இவை வேகமாக இரையை சாப்பிடுகின்றன. ஆபத்து வந்தால் தப்பித்துக் கொள்ள ஓடிவிடுகின்றன. இவை ஒரு இரைப்பையில் சேர்க்கப்பட்டு திரும்ப நன்றாக சுவைத்து உண்ண வாய்க்கு கொண்டு வரப்படுகின்றது.



ஆட்டின் விரிகுளம்பு

குளம்புகள் பிரிந்து இருப்பவை சுத்தமானதாக கூறப்படுவதற்கு காரணம் என்ன? அவை தரையில் நடக்கும்பொழுது அவற்றின் கடினமான குளம்புகள்தான் தரையில் படுமே தவிர மாமிசம் படாது. ஆகவே தரையின் அசுத்த கிருமிகளின் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்ளும். விரிகுளம்புள்ளதாக, குளம்புகள் இரண்டாக பிரிந்திருக்கும் விலங்குகளை கவனிப்பீர்கள் என்றால் அவற்றின் கால்கள் அழுத்தமாக தரையில் பதியும் தன்மை உள்ளவையாக இருக்கின்றன. ஆகவே அவை உயரமான மலைகளிலும் ஏற வல்லமை கொண்டவை. வேகமாக ஓடும் திறமை கொண்டவை.



மாட்டின் இரைப்பை

ஆவிக்குரிய மனிதன் எவனும் ஆவிக்குரிய ஆகாரமாகிய வேத வசனத்தை திரும்ப திரும்ப படித்து, அசை போட்டு, அவற்றின் ஆழமான கருத்துக்களை எடுத்து கொண்டு ஆவிக்குள் பலப்படுகிறவனாக இருக்க வேண்டும். அசை போடுகிற மாட்டினை எடுத்துக் கொள்வோமாகில், அதின் இரைப்பை நான்கு பகுதிகளை கொண்டதாக உள்ளது. நான்கு முறை அசைபோட்டு உமிழ் நீரில் கலக்கப்பட்ட பின்னரே அதின் சத்துக்கள் அனைத்தும் உடம்புக்கு கிடைக்கும் வகையில் உணவு குடலுக்குள் அனுப்பப்படுகிறது.

ஆவிக்குரிய மனிதன் கர்த்தரின் எதிர்பார்ப்புகளில் திட்டவட்டமாக கால் பதித்தவனாக, ஆவிக்குரிய வாழ்வின் உச்ச கட்டங்களை எட்ட வேண்டும். இது ஒரு தேவ மனிதனுக்கு மிக அவசியமானது.

''ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதை செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்'' (1 கொரிந்தியர் 10:13) என்பது நமது ஆகாரம் நமது ஆவிக்குரிய வாழ்வை பாதிக்கும் என்பதை காட்டுகிறது. மேலும் நமது சரீரம் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் பரிசுத்த ஆலயமாக இருக்க வேண்டும் என்பதை 1 கொரிந்தியர் 6:19-20-ல் காண்கிறோம்.

யூத முறைப்படி சாப்பிடலாம் என்று கூறப்பட்ட மிருகங்கள் கோஷே (kosher animals) மிருகங்கள் என்று கூறப்படுகின்றன. அதன் பொருள் 'சுத்தமானது, சாப்பிட தகுந்தது' என்பதாகும். இந்த பிரமாணங்களுக்கு உட்பட்டதாக ஆகாரம் (kosher Meals) தயார் செய்யப்பட்டு கோஷே ஆகாரம் என்று உலகின் பல இடங்களில் கொடுக்க படுகிறது.

ஆனாலும், அசை போடுகிறதும் விரிகுளம்புள்ளதும் ஆனவைகளில் ஒட்டகமானது அசை போடுகிறதாயிருந்தாலும், அதற்கு விரிகுளம்பு இல்லாதபடியால், அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். குழிமுசலானது அசைபோடுகிறதாயிருந்தாலும், அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். முயலானது அசை போடுகிறதாயிருந்தும், அதற்கு விரிகுளம்பு இல்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். பன்றியின் குளம்பு விரிகுளம்பும் இரண்டாக பிரிந்ததுமாயிருந்தும், அது அசை போடாது; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். இவைகளின் மாம்சத்தை புசிக்கவும், இவைகளின் உடல்களைத் தொடவும் வேண்டாம்; இவைகள் உங்களுக்கு தீட்டாயிருக்கக்கடவது. (லேவி. 11:4-8)

அசுத்தமானதும் புசிக்கத்தகாததுமான நிலவாழ் மிருகங்கள்



ஒட்டகம்
(camel)



பாக்டிரியன் ஒட்டகம்
(Bacterian Camel)



குழிமுசல்
(coney)

முயல்
(rabbit)

காட்டு பன்றி
(hog)



பன்றி
(pig)

அசைபோட்டாலும் விரிகுளம்பில்லாத மிருகங்கள் சாப்பிடத்தகாதவை, விரிகுளம்பிருந்தும் அசைபோடாத மிருகங்கள் சாப்பிட தகாதவை. ஒட்டகம், குழிமுசல், முயல், பன்றி ஆகியவைகள் விலக்கப்பட்டவைகள்.

ஒட்டக பாலும் ஒட்டக மாமிசமும் சில நாடுகளில் அதிகமாக சாப்பிடப்படுகிறது. ஒட்டகத்தின் மூலமாக மனிதருக்கு தீய நுண் கிருமிகளினாலும், புழுக்களினாலும் வர கூடிய வியாதிகள் பரவுகின்றன. விசேஷமாக மத்திப கிழக்கு சுவாச நோய் (MERS-CoV-Middle East Respiratory Syndrome Corona Virus) என்பது வேகமாக மனிதரை கொல்லக் கூடியது. ஹாண்டா கிருமி சுவாச நோய் (Hanta virus pulmonary syndrome HPS) என்ற கொடிய வியாதி, துலரேமியா (Tularemia) என்ற கிருமி வியாதி, மாற்று காசநோய் (Pseudo tuberculosis) முதலிய வியாதிகள் முயல், எலி, நாய் ஆகிய மிருகங்களின் மூலம் பரவுகின்றன. பன்றியின் மாமிசம் வேக வைக்காமலோ அல்லது சரியாக வேகாமலோ இருந்தால் வட்ட புழு (Round Worm), நாடா புழு (Tape Worm), ட்ரைகினோஸிஸ் (Trichinella Spiralis) என்ற புழுக்கள் மனித உடம்பை தாக்க வாய்ப்பாகிறது. இந்த தாக்கம் மனிதனின் உயிரையே கொல்ல கூடியது.

6.3 நீரில் வாழும் மிருகங்களில் சுத்தமானவையும் அசுத்தமானவையும்

ஜலத்திலிருக்கிறவைகளில் நீங்கள் புசிக்கத்தக்கது யாதெனில்: கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகும் செதிளும் உள்ளவைகளை எல்லாம் நீங்கள் புசிக்கலாம். (லேவியராகமம் 11:9)

சிறகும் செதில்களும் என்று கூறப்பட்டிருக்கிறது. அவை சுத்தமானவை. தங்கள் சரீரம் மூடப்பட்டிருப்பவை. மேலும் அவை கழிவுப் பொருட்களையோ, செத்து போன மீன்களையோ சாப்பிடுவதில்லை. அவற்றின் செவுள்களும் மூடப்பட்டவையாக இருப்பதால் புழுக்களோ கிருமிகளோ அவற்றை எளிதில் தாக்க முடிவதில்லை. மேலும் இவற்றால் மனித உடலின் நல்வாழ்விற்கு தேவையான புரதச்சத்துக்கள், வைட்டமின்கள், முக்கியமாக நமது நரம்புகளின் பாதுகாப்பிற்கு தேவையான வைட்டமின்கள், பொட்டாஷியம், மக்னீஷியம், செலினியம் முதலிய தாதுப்பொருட்கள், ஒமேகா 3 என்ற அவசியமான கொழுப்பு சத்துக்கள் முதலியவை நிறைந்து இருப்பதால் இவை ஆரோக்கியமாக வாழ அவசியமானவை. ஆனாலும் வஞ்சிரம் போன்றவற்றின் பெரிய மீன்களில் மெர்குரி என்னும் உடலுக்கு கெடுதியான தாதுப்பொருள் அதிகம் சேர்ந்து விடுவதால் சில சமயங்களில் அவை கஷ்டத்தை தர கூடியதாக இக்காலங்களில் உள்ளது.

மற்றவை பல கிருமிகளின் தாக்குதலுக்கு சீக்கிரமாகவே இரையாக கூடியவை. ஆதலால் அவற்றை புசிக்கலாகாது என்று கூறுகிறார். அவற்றின் மாமிசமும் மனித உடலுக்கு நன்மை தருவதில்லை. நாமும் பரிசுத்த ஆவியானவரால் பொதிந்து கொள்ளப்பட்டவர்களாக வாழுகையில் பரிசுத்தமானவர்களாக காணப்படுவோம். கழுகுகளைப் போல் செட்டைகளை அடித்து பறப்போம்.

ஆனாலும், கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களில் நீந்துகிறதும் வாழ்கிறதுமான பிராணிகளில் சிறகும் செதிளும் இல்லாதவைகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக. அவைகள் உங்களுக்கு அருவருப்பாயிருக்ககடவது; அவைகளின் மாம்சத்தை புசியாதிருந்து, அவைகளின் உடல்களை அருவருப்பீர்களாக. தண்ணீர்களிலே சிறகும்

செதிகளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருக்கடவது. (லேவி. 11:10-12)

சிறகும் செதில்களும் உள்ள நீர் பிராணிகள்: புசிக்க தக்கவை



வெள்ளை வாவல்
(White Pomfret)



திருக்கை
(Turbot)



வாவல்
(Black Pomfret)



கெண்டை
(Carp)



பன்னா
(Cod)



பொத்தல்
(Halibut)



சாளை மீன்
(Sardines)



கானாங்கெளுத்தி
(Mackerel)



வஞ்சிரம்
(Tuna)

சிறகும் செதிளும் இல்லாத நீர் பிராணிகளை நாம் பார்ப்போமானால் அவை நீரின் அடிமட்டத்தில் வாழுபவை என்று தெரியவரும். இவை கீழே அழுகி கிடக்கும் பொருள்களையும், அசுத்தங்களையும் சாப்பிடுபவை. ஆகவே இவற்றை சாப்பிட வேண்டாம் என்று கர்த்தர் கூறுகின்றார். இவற்றை சாப்பிடுபவர், குடல் எடுக்க படாமல் சாப்பிட்டால், அவற்றின் கழிவுகளையும் சேர்த்து சாப்பிடுவதால் கிருமிகள், புழுக்களின், தீநுண்மங்களின் தாக்குதல்களுக்கு ஆளாகி விடுகின்றனர். இவற்றால் ஈரலளர்ச்சி ஏற்படுவதோடு ஈரலிலும், கல்லீரலிலும் இழைநார் வளர்ச்சி (Cirrhosis) மற்றும் ஈரல் புற்று நோய் வர காரணமாகலாம்.

கடல் வெள்ளரிக்காய் என்பது சுமார் ஒரு மீட்டர் நீளம் வரை வளரக்கூடிய ஒரு நீர்வாழ் மிருகமாகும். பல நாடுகளில் இது விரும்பத்தக்க ஆகாரமாக கருதப்படுகிறது. இவைகளின் உணவு செத்த மிருகங்கள் ஆகும். ஒரு வருடத்தில் இது 136 கிலோ கிராம் சடலங்களை

சாப்பிட கூடிய கிழவிமீன் என்பது பார்க்க விரும்பத்தகாத உருவம் கொண்டது. இவை கடலில் வாழும் பல் இல்லாத குருட்டு மிருகங்கள். இவை பிரியமாக உண்பவை செத்த மிருகங்களே. செத்த மிருகங்களின் உடலுக்குள் புகுந்து உள்ளே இருந்து அவற்றை சாப்பிடுபவை.

சிப்பியில் வாழும் பிராணிகள் சில நன்மைகள் பெற்றிருந்தாலும் அவை உடலுக்கு பல கெடுதிகளைத் தர வல்லவை. அவைகளில் ஒமேகா 3 என்ற அத்தியாவசிய கொழுப்பு சத்து இல்லாதிருப்பதால் மனித மூளை மூட்டுகள், தசைகள் முதலியவை நன்றாக செயல்பட அது ஒவ்வாதது. மேலும் இவை வயிற்றிற்கு மிக சங்கடம் கொடுப்பவையாகவும் இருக்கலாம். இறால், நண்டு, சிங்க இறால் முதலிய பிராணிகளில் நன்மைக்கு ஏதுவான சத்துக்கள் காணப்பட்டாலும் அவை அசுத்தத்தை சாப்பிட்டு வாழ்வதால் அவை ஆபத்து விளைவிக்கலாம்.

சிறகும் செதில்களும் இல்லாத நீர் பிராணிகள்: புசிக்க தகாதவை



சாக்கு கணவாய்
(Octobus)



இறால்
(Prawn)



சிப்பிகள்
(Oysters)



நண்டு
(Carb)

கடல் வெள்ளரிக்காய்
(Sea Cucumber)



கடல் ஆகை
(Turtle)



கிழவி மீன்
(Hag Fish)



இறால்
(Squid)



கடல் பாம்பு
(Sea Snake)

6.4 ஆகாயத்தில் பறக்கும் உயிர் இனங்களில் சுத்தமானவையும் அசுத்தமானவையும்

பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்க வேண்டியவைகள் யாதெனில்: கழுகும், கருடனும், கடலுராஞ்சியும், பருந்தும், சகலவித வல்லூறும், தீக்குருவியும், கூகையும், செம்புகமும், சகலவித டேகையும், ஆந்தையும், நீர்காகமும், கோட்டானும், நாரையும், கூழக்கடாவும், குருகும், கொக்கும், சகலவித ராஜாளியும், புழுக்கொத்தியும், வெளவாலும் ஆகிய இவைகளே. (லேவி. 11:13-19)

புசிக்காமல் அருவருக்க வேண்டிய பறவைகள்



மானை தூக்கி செல்லும் பெரும் கழுகு (eagle)

பஞ்சத்தில் வாடும் எத்தியோப்பிய குழந்தை மரிக்கும் தருணத்திற்கு காத்திருக்கும் கருடன் (vulture)

கடலூராஞ்சி (black vulture)

பருந்து (red kite)

வல்லூறு (black kite)



அண்டங் காக்கை (raven)



தீக்குருவி (Horned Owl)

கூகை (Screech Owl)



எலியை சாப்பிடும் செம்புகம் (Sea gull)

புசிக்காமல் அருவருக்க வேண்டிய பறவைகள்

கோட்டான்
(Great Owl)

செத்த குட்டி முயலை
கொத்தும் நாரை
(Stork)

ஆந்தை
(Owl)

டேகை
(Hawk)



கூழக்கடா
(Heron)



புழுக்கொத்தி
(Hoopoe)

ராஜாளி
(Desert Owl)



குறுகு
(Osprey)

நீர்க்காகம்
(Cormorant)



பழ வெளவால்
(Fruit Bat)

குறுகு
(Vampire Bat)



வெளவால்
(Bat)

இங்கு கர்த்தர் கொடுக்கும் பறவைகள் யாவும் செத்ததையும் தீட்டுபட்டதையும் அழுகி கிடக்கும் மாமிசத்தையும் உணவாக உண்பவை. அல்லது மிருகங்களையோ பறவைகளையோ கொன்று உண்பவை. சுற்றுப்புறத்தை சுகாதாரமாக வைத்துக் கொள்ள சுத்தம் செய்வதற்கென்றே கர்த்தர் உண்டாக்கிய பறவைகள் இவை. இவற்றின் மாமிசத்தில் புழுக்களும் கிருமிகளும் இருக்கும். அவற்றை சாப்பிட்டால் வியாதிகள் வரும். ஆகவே இவற்றை கர்த்தருடைய பிள்ளைகள் ஆகாரமாக உண்ணலாகாது என்கிறார்.

புசிக்கத்தக்க பறவைகள்



கோழி
(Hen)

வான்கோழி
(Turkey)



கின்னிகோழி
(Quinie Fowl)

கௌதாரி
(Pheasant bird)



புறா
(Pigeon)



மயில்
Peacock



வாத்து
(Duck)



பெரும் வாத்து
(Goose)

அன்ன பறவை
(Swan)

6.5 பூச்சி இனங்களில் (Insects) சுத்தமானவையும் அசுத்தமானவையும்

பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற ஊரும் பிராணிகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக. (லேவி. 11:20)

பூச்சி இனங்களில் பல நமக்கு பல வியாதிகளை கொண்டு வருபவை. அவற்றை விலக்கி வைக்குமாறு கர்த்தர் கூறுகின்றார்.

பறக்கிறவைகளில் பறவைகள் இரண்டு கால்கள் கொண்டவையே. நாலுகால் கொண்டிருந்தால் அவைகள் பறவை இனங்கள் (Birds) அல்ல. அவைகள் பூச்சி (Insects) இனங்கள் ஆகும். ஆனால் பூச்சி இனங்கள் ஆறு கால்கள் கொண்டவை என்று விஞ்ஞானம் கூறுகிறது. நாலுகால் கொண்ட பூச்சி இனங்கள் கிடையாது. பின் கர்த்தர் ஏன் இப்படி கூறுகிறார்? நவீன கால விஞ்ஞானம், மோசேக்கு தெரிந்திருக்க நியாயமில்லை என்று கருதுகிறார்கள். ஆனால் லட்சக்கணக்கில் வெட்டுக்கிளிகளை பார்த்த மோசேக்கு அது தெரியாததல்ல. இங்கு கூறப்படுவது ''நாலு காலால் நடமாடும்'' என்பதே ஆகும். இந்த இனங்கள் முன் நான்கு கால்களால் நடமாடி, பின் இரண்டு கால்களை உந்தி தள்ள உபயோகிக்கின்றன. இந்த கால்களிலேதான் அவைகளுக்கு தத்துகிறதற்கு கால்கள் மேல் தொடைகள் உண்டாயிருக்கிறது அல்லது முன்கால்களை கைகள் போல் உபயோகிக்கிறது.

நாலுகாலால் நடமாடும் ஊரும் பிராணிகள்: புசிக்கத்தக்கவை



அகாபு
(Grasshopper)



சோலையாம்
(Katydid)



அர்கொல்
(Mole cricket)



பொரித்த வெட்டுக்கிளி
(Fried Locust)



வெட்டுக்கிளி
(Locust)

பொரித்த அர்கொல்
Fried Mole Cricket

ஆகிலும், பறக்கிறவைகளில் நாலு காலால் நடமாடுகிற யாவிலும், நீங்கள் புசிக்கத்தக்கது யாதெனில்: தரையிலே தத்துகிறதற்கு கால்களுக்கு மேல் தொடைகள் உண்டாயிருக்கிறவைகளிலே, வெட்டுக்கிளி ஜாதியாய் இருக்கிறதையும், சோலையாம் என்னும் கிளி ஜாதியாய் இருக்கிறதையும், அர்கொல் என்னும் கிளி ஜாதியாய் இருக்கிறதையும், ஆகாபு என்னும் கிளி ஜாதியாயிருக்கிறதையும் நீங்கள் புசிக்கலாம். (லேவி. 11:21-24)

நாலுகாலால் நடமாடுகிறதும் மற்றும் பறக்கிறதுமான உயிரினங்களில் வெட்டுக்கிளியின் சில ஜாதிகள் புசிக்கத் தக்கவை என்று லேவியராகமம் கூறுகின்றது. யோவான் ஸ்நானகன் தன் உணவாக வெட்டுக்கிளியை புசித்தார் என்று மத்தேயு 3:4-ல் வாசிக்கலாம்.

சாப்பிடத்தகாத பூச்சி இனங்கள்



கரப்பான் பூச்சி
(Cockroach)



எறும்பு
(Ant)



பழ ஈ
(Fruit Fly)



ஈக்கள்
(House Fly)



கொசு
(Mosquito)



குளவி
(Wasp)



பக்கி
(Moth)



குதிரையில் உள்ள ஈ
(Horse Fly)



சாணி உருட்டும் வண்டு
(Dung Beetle)

பறக்கிறவைகளில் நாலு காலால் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக. அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்; அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அவைகளின் உடலைச் சுமந்தவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். (லேவி. 11:23-25)

அசுத்த பிராணிகள் உணவாக புசிக்கத்தக்கவை அல்ல என்பது மட்டுமல்ல, அவைகள் மனிதனையும் மற்ற பொருட்களையும் தீட்டுப்படுத்தி அசுத்தப்படுத்தும் பிராணிகளாகும் என்பதையும் இங்கே காண்கிறோம். அவை மனிதன் உயிரை வியாதிகள் மூலம் வாங்குபவைகளும் ஆகும். பரிசுத்தம் என்பது கர்த்தர் மனிதனிடமிருந்து எதிர்பார்க்கும் ஒன்றாகும். ஆனால் அசுத்த பிராணிகள் இதனையும் கெடுத்து விடுகிறது என்று லேவியராகமம் 11:23-47 வரையுள்ள வசனங்கள் கூறுகின்றன.

6.6 விலங்கினங்கள்: சாப்பிட தகாதவை

சாப்பிட கூடாத விலங்கினங்கள்



கரடி
(Bears)



பன்றி
(Pig)



பூனை
(Cat)

நாய்
(Dog)



ஓநாய்
(Wolf)



கீரி
(Weasel)



சிங்கம்
(Lion)



புலி
(Tiger)



நரி
(Jackal)



காண்டாமிருகம்
(Rhinoceros)



கழுதை
(Donkey)



குரங்கு
(Monkey)

மனிதனுக்கு வியாதி கொடுக்கும் புழுக்கள்



நாடா புழு
(Tape Worm)



இரண்டு வரிசை கொக்கிகளும் நான்கு உறிஞ்சிகளும் கொண்ட நாடா புழுவின் தலை



குடலை அடைத்துவிட்ட நாடாபுழு
(Tape Worm)



வட்ட புழு
(Round Worm-Ascarius)

மனித குடலில் இருந்து எடுக்கப்பட்ட வட்ட புழுக்கள்



சிறு பையனின் உடலில் இருந்து வரும் நூற்புழு
(Nematodes)



கண்ணிற்குள் வளரும் நாடா புழு



காலில் இருந்து வரும் நாடா புழு

தோலுக்கு அடியில் செல்லும் வட்ட புழு

விரிநகங்களுள்ளவைகளாய் இருந்தும், இருபிளவான குளம்பில்லாமலும் அசை போடாமலும் இருக்கிற மிருகங்கள் யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகளைத் தொடுகிறவன் எவனும் தீட்டுப்படுவான். நாலுகாலால் நடக்கிற சகல ஜீவன்களிலும் தங்கள் உள்ளங்கால்களை ஊன்றி நடக்கிற யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அவைகளின் உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; இவைகள் உங்களுக்கு தீட்டாயிருக்கடவது. (லேவி. 11:26-28)

இந்த மிருகங்கள் யாவற்றிலும் தீங்குவிளைவிக்கும் புழுக்கள், கிருமிகள், தீநுண்மங்கள் முதலியவை ஏராளம். இவை மனிதனுக்கு வியாதியை கடத்தி விடுபவை. கர்த்தர் மனிதனுக்கு இவ்வாறு எச்சரிக்கை கொடுக்கிறார்.

6.7 அசுத்தமான ஊரும் பிராணிகள்

தரையில் ஊருகிற பிராணிகளில் உங்களுக்கு அசுத்தமானவைகள் எவையெனில்; பெருச்சாளியும், எலியும், சகல விதமான ஆமையும், உடும்பும், அழுங்கும், ஓணானும், பல்லியும், பச்சோந்தியும் ஆகிய இவைகளே. சகல ஊரும் பிராணிகளிலும் இவைகள் உங்களுக்கு தீட்டாயிருக்கக்கடவது; அவைகளில் செத்ததை தொடுகிறவன் எவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அவைகளில் செத்தது ஒன்று யாதொன்றின்மேல் விழுந்தால் அது தீட்டுப்பட்டிருக்கும்; அது மரப்பாத்திரமானாலும், வஸ்திரமானாலும், தோலானாலும், பையானாலும், வேலை செய்கிறதற்கேற்ற ஆயுதமானாலும், சாயங்காலம்மட்டும் தீட்டாயிருக்கும்; அது தண்ணீரில் போடப்பட வேண்டும். அப்பொழுது சுத்தமாகும். அவைகளில் ஒன்று மண்பாண்டத்திற்குள் விழுந்தால், அதற்குள் இருக்கிறவை யாவும் தீட்டுப்பட்டிருக்கும்; அதை உடைத்து போட வேண்டும். புசிக்கத்தக்க போஜன பதார்த்தத்தின்மேல் அந்த தண்ணீர் பட்டால், அது தீட்டாகும்; குடிக்கத்தக்க எந்த பானமும் அப்படிப்பட்ட பாத்திரத்தினால் தீட்டுப்படும். அவைகளின் உடலில் யாதொன்று எதின்மேல் விழுதோ, அதுவும் தீட்டுப்படும்; அடுப்பானாலும் மண்தொட்டியானாலும் தகர்க்கப்படுவதாக; அவைகள் தீட்டுப்பட்டிருக்கும்; ஆகையால், அவைகள் உங்களுக்கு தீட்டாயிருக்கக்கடவது. ஆனாலும், நீருற்றும் மிகுந்த ஜலம் உண்டாகிய கிணறும் சுத்தமாயிருக்கும்; அவைகளிலுள்ள உடலைத் தொடுகிறவனோ தீட்டுப்படுவான். மேற்சொல்லியவைகளின் உடலில் யாதொன்று விதை தானியத்தின்மேல் விழுந்தால், அது தீட்டுப்படாது. அந்த உடலில் யாதொன்று தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின் மேல் விழுந்ததானால், அது உங்களுக்கு தீட்டாயிருக்கக்கடவது. (லேவி. 11:29-38)

உங்களுக்கு ஆகாரத்துக்கான ஒரு மிருகம் செத்தால், அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் மாம்சத்தைப் புசித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாய்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் உடலை எடுத்துப் போனவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். (லேவி. 11:39-40)

தீட்டுப்படுத்தும் பிராணிகள் உயிருடன் இருந்தாலும் செத்துப் போனாலும் அது மற்றவர்களுக்கு தரக்கூடிய ஒரே ஒரு காரியம் அசுத்தம். அசுத்தம் அசுத்தத்துடன் சேரும். அசுத்தத்தோடு சேரும் எதுவும் அசுத்தமாகவே மாறும். ஆகாரத்துக்கான மிருகம் செத்தாலும், அதுவும் தீட்டுள்ளதே. தானாக செத்த எதையும் தொடவோ சாப்பிடவோ கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தரையில் ஊருகிற பிராணிகளில் அசுத்தமானவை

பெருச்சாளி
(Bandicoot)

உடும்பு
(Gecko)

பெரும்பல்லி
(Monitor Lizard)



எலி
(Rat)



பல்லி
(Wall Lizards)



சகலவித ஆமை
(Tortoise)

பச்சோந்தி
(Chameleon)

அழுங்கு
(Skink)



ஓணான்
(Great Lizard)

தரையில் ஊருகிற பிராணிகளெல்லாம் உங்களுக்கு அருவருப்பாயிருக்க கடவது; அவை புசிக்கபடலாகாது. தரையில் ஊருகிற சகல பிராணிகளிலும், வயிற்றினால் நகருகிறவைகளையும், அநேகங் கால்கள் உள்ளவைகளையும் புசியாதிருப்பீர்களாக; அவைகள் அருவருப்பானவைகள். ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களை அருவருப்பாக்கிக் கொள்ளாமலும், அவைகளால் தீட்டுப்படாமலும் இருப்பீர்களாக; அவைகளாலே நீங்கள் தீட்டுப்படுவீர்கள். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களை தீட்டுப்படுத்தாமல், உங்களைப் பரிசுத்தமாக்கி கொண்டு, பரிசுத்தராயிப்பீர்களாக. (லேவி. 11:41-44)

வயிற்றினால் நகரும், தரையில் ஊரும் பிராணிகள், அநேக கால்கள் உள்ளவைகள்: அருவருப்பானவைகள்



பூரான்
(Centipede)



வீட்டு பூரான்
(House Centipede)



ஆயிரங்கால் பூச்சி
(Millipede)



நத்தை
(Snail)



அட்டை
(Leech)



மண்புழு
(Earthworm)



நல்ல பாம்பு
(Cobra)



போவா-இறுக்கும் பாம்பு
(Boa Constrictor)



ராட்சச அனகோண்டா
(Giant Anaconda)

இந்தப் பிராணிகள் அநேகமாக விஷம் உள்ளவை, இரத்தம் உறிஞ்சுபவை அல்லது மனிதனைக் கொல்லுபவை. இவற்றின் அருகிலேயே செல்ல வேண்டாம் என்று கர்த்தர் கூறுகிறார்.

லேவியராகமம் 11:3-8 வசனங்களில் மிருக இனங்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது. 9-12 வசனங்களில் நீர் வாழ் இனங்களின் வரிசை தரப்பட்டுள்ளது. 13-24 வசனங்களில் பறவை இனங்களில் சுத்தமானவைகள், அசுத்தமானவை என்று பெயர் பெயராக ஓர் பட்டியல் தயார் செய்து கொடுக்கப்பட்டது. மீட்கப்பட்டவர்களாகிய அவர்கள், அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரவான்களாக நடந்து கொள்ள வேண்டும். அசுத்தத்திற்கு அல்ல, பரிசுத்தத்திற்கு அவர்கள் அழைக்கப்பட்டார்கள். 'அசுத்தமானதை தொடாதேயுங்கள்,' என்பதே லேவியராகமம் 11-வது அதிகாரம் அவர்களுக்கு கொடுக்கும் அழைப்பு!

44-வது வசனத்தில், 'நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். நான் பரிசுத்தர்,' என்ற ஒரு பரலோக அறிவிப்பு வருகின்றது. கடவுள் எப்படி இருப்பார் என்பதற்கு ஒரு விளக்கமாக 44-வது வசனம் அமைகின்றது. நான் பரிசுத்தர் என கர்த்தர் தன்னை அறிமுகம் செய்கின்றார்.

6.8 பரிசுத்தமாக வேண்டிய ஜனங்கள்

நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப் பண்ணிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக. (லேவி. 11:45)

''நான் உங்கள் தேவனாக இருக்கும்படி உங்களை எகிப்து தேசத்தில் இருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தர்களாக இருப்பீர்களாக'' (11:45) என்ற இந்த வசனம் லேவியராகம புத்தகத்தில், 8 இடங்களில் மாறி மாறி வந்து கொண்டே இருக்கின்றது. நான் பரிசுத்தர் என்ற அந்த புனித அறிவிப்பு இந்த வசனமுதல் ஒரு சங்கிலி போன்று தொடர்ந்து வந்து கொண்டே இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். லேவியராகமம் 11:44,45; 19:2; 20:7,26; 21:8,15; 22:9,16,32 ஆகிய அனைத்து வசனங்களிலும் பரிசுத்தர் என்ற ஓர் புனிதமான வார்த்தை வந்து கொண்டே இருக்கின்றது. பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்ற காட்சியே தூதரின் துதியாக ஏசாயா எழுதிய நூலில் தெரிகின்றது. அசுத்தமாக இருக்கிறவன், அசுத்தமாக இருக்கட்டும், பரிசுத்தமாக இருக்கின்றவன் பரிசுத்தமாக இருக்கட்டும் என்பதே வேத புத்தகத்தின் இறுதி அதிகாரம் ஊதும் எக்காளமாக இருக்கின்றது.

சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும், புசிக்கத்தக்க ஜந்துக்களுக்கும் புசிக்கத்தகாத ஜந்துக்களுக்கும் வித்தியாசம் பண்ணும் பொருட்டு, மிருகத்துக்கும் பறவைகளுக்கும், தண்ணீரில் நீந்துகிற சகல ஜீவ ஜந்துக்களுக்கும், பூமியின்மேல் ஊருகிற சகல பிராணிகளுக்கும் அடுத்த பிரமாணம் இதுவே என்று சொல்லுங்கள் என்றார். (லேவி. 11:46-47)

லேவியராகமம் எழுதப்பட்டதன் முக்கிய நோக்கமே, பரிசுத்தராகிய தேவன் தான் தெரிந்து கொண்ட, பிரித்து எடுத்த ஜனமும் தன்னைப் போல் பரிசுத்தராக இருக்க வேண்டும் என்னும் அவரது இதய வாஞ்சையை எடுத்து இயம்புவதற்கே ஆகும் என்பதை நாம் நமது இதயத்தில் ஆழமாக பதித்து கொள்ள வேண்டும்.

மிருகங்கள் பூமி அல்லது நில சம்பந்தப்பட்டவை. மீன் இனங்கள் நீர் அல்லது ஜலம் சம்பந்தப்பட்டவை. பறவைகள் காற்று மண்டலம் அல்லது ஆகாயம் சம்பந்தப்பட்டவை. இந்த மூன்றிலும் அவர்களது அன்றாட வாழ்வில் அவர்கள் சம்பந்தப்பட வேண்டியது இருக்கின்றது. எனவே இந்த மூன்றிலும் சுத்தமானவைகளுடன் மட்டுமே மீட்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட முடியும். பூமி ஜலம் ஆகாயம் என்ற மூன்றிலும் அசுத்தமானவைகளும் இருக்கின்றன, சுத்தமானவைகளும் இருக்கின்றன. சுத்தமானவைகளை மட்டுமே ஏற்று கொள்ள வேண்டும். பாவங்கள் வெறுக்கப்பட வேண்டும். பரிசுத்தம் காக்கப்பட வேண்டும்.

ஒரு திரள் கூட்டமான மக்கள் கூடாரம் அடித்து அடித்து கானான் என்ற தேசம் நோக்கி பிரயாணம் செய்கின்றார்கள். அவர்கள் எகிப்தில் இருந்த பொழுது கிடைத்த சாப்பாடு இப்பொழுது இல்லையே என்று இதற்கு முன்னர் கோபித்துக் கொண்டது உண்டு. இப்பொழுது

அவர்களுக்கு முன்பாக ஒரு புதிய கட்டளை பிறக்கின்றது. அசுத்தமானதை தொடாதேயுங்கள் என்பதே அந்த கட்டளை. செங்கடல் தாண்டி பெற்ற புதிய அனுபவம் யோர்தான் தாண்டும் வரை காக்கப்பட வேண்டும். தீர்மானம் நிலைத்து நிற்க வேண்டும்.

லேவியராகமம் 11-வது அதிகாரம் கூறுகிறபடி, இனிமேல் மீட்கப்பட்ட மக்கள் ருசிக்காக அல்ல, பசிக்காக மட்டுமே புசிக்க இருக்கின்றார்கள். விரும்பியதை அல்ல, ஆரோக்கியமானதை மட்டுமே ஆகாரமாக அருந்த இருக்கின்றார்கள். ஒரு சமூகமாக வாழும் அந்த ஜனங்களில் ஒரு சிலரின் ஆரோக்கிய குறைவு அனைவருடைய ஆரோக்கியத்தையும் பாதித்து விடும். சுகாதாரமாக அவர்கள் வாழ சுகாதாரமான உணவு தேவை. பரிசுத்தமாக வாழ, பகுத்து அறியும் அறிவு தேவை. எல்லாவற்றையும் சோதித்து பார்த்து நலமானதை மட்டும் தெரிந்து எடுக்கும் கிருபை, உணவில் இருந்து அனைத்திலும் தேவை. ஆசைப்பட்டது அல்ல, அவசியப்பட்டது மட்டுமே தேவனால் அங்கீகரிக்கப்பட்டது.

அத்தியாயம் - 7

மகப்பேறு சமயம் சுத்தம் காப்பது எப்படி

7.1 பலுகி பெருகுங்கள் என்ற ஆசீர்வாதமும் மனிதனுக்குள் நுழைந்த பாவமும்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: (லேவி. 12:1)

இதற்கு முன் 11-ம் அதிகாரத்தில் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி பேசினார் என்று பார்த்தோம். ஆனால் 12-வது அதிகாரத்தில் கர்த்தர் மோசேயை மட்டுமே நோக்கி பேசுகின்றார் என்பதை முதல் வசனத்திலேயே பார்க்கலாம். லேவியராகமம் 12-ம் அதிகாரம், 8 வசனங்கள் கொண்ட ஒரு அதிகாரமாகும். குழந்தையை பெற்று எடுத்த தாய்க்கு கொடுக்கப்பட்ட ஒரு அதிகாரம் ஆகும். தாயும் சேயும் சுத்தமாக்கப்பட கொடுக்கப்பட்ட தேவ பிரமாணம் இந்த அதிகாரத்தில் அடங்கி உள்ளது.

குடும்ப பாக்கியத்தை பற்றி தேவன் இங்கு பேசுகிறார். திருமணத்தின் சிறப்பு, புதிய பிறப்புகளில் இடம் பெறுகின்றது. அது மனிதருக்கு கிடைத்த தேவ கிருபை ஆகும். ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் இடம் பெற்ற முதல் திருமணத்தில் ஒரு திருமண வாழ்த்து பத்திரம் வாசிக்கப்பட்டது. வாசிக்கப்பட்ட வாழ்த்து பத்திரம், இரண்டு ஆசீர்வாதங்கள் கொண்ட ஒரு பத்திரமாக அமைந்தது. 'பலுகி பெருகுங்கள்' என்பது முதலாவது வாழ்த்து 'அனைத்தையும் ஆண்டு கொள்ளுங்கள்' என்பது இரண்டாவது வாழ்த்து. அந்த முதல் குடும்பம் பெற்ற ஆசீர்வாதம் மிக அற்புதமானது. ஜீவன் ஜீவனை பிறப்பிக்கட்டும் என்ற ஆசீர்வாதமாகும். அந்த முதல் குடும்பம் பெற்ற அந்தஸ்து அளவிற்கரியது. அது அனைத்தின் மேலும் இனிமேல் நீங்களே அதிகாரிகள் என்பது ஆகும். சங்கீதம் 8:5-8 வசனங்கள் ஆதி தம்பதிகள் அன்று பெற்ற சிறப்புகளை ஓரளவு விவரிக்கின்றன: 'நீர் அவனை தேவ தூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும், ஆகாயத்து பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்படுத்தினீர்.' எபிரேயர் 2:7,8 ஆகிய வசனங்களில் 8-ம் சங்கீதம் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஆனால் ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் அவர்கள் பெற்ற அனைத்து ஏற்றங்களும் மூன்றாம் அதிகாரத்தில் அற்றம் கண்டது. மேன்மை ஓடிப்போனது. பரிசுத்தம் வாடி போனது. சர்ப்பம் அவர்களை சதி செய்தது. எனவே அவர்கள் மதி கெட்டு போனார்கள்; வழி தப்பி போனார்கள்.

சகலத்தையும் அவனுக்கு கீழ்படுத்தினார் என்ற விஷயத்தில் அவர் அவனுக்கு கீழ்படுத்தாத பொருள் ஒன்றும் இல்லை. அப்படி இருந்தும் இன்னும் அவனுக்கு சகலமும் கீழ்பட்டு இருக்க காணோம். செய்யாதே என்றதை அவர்கள் செய்தார்கள். காதில் விழுந்த எச்சரிப்பு, கருத்தில் பதியவில்லை. பிசாசு தேன் மழை பொழிந்தான். ஆனால் ஒரு தேள் கொட்டுவது போன்று அவர்களை கொட்டினான். அவர்கள் ஏதேனின் சிறப்பு இழந்தார்கள், பாவம் செய்தார்கள். பதறிய அவர்கள் ஒளிந்துகொள்ளுவதற்கு செடிகளைத் தேடினார்கள்.

அவர்கள் ஆண்டவருக்கு துரோகம் செய்தாலும், தேவன் அவர்களுக்கு துரோகம் செய்யவில்லை. ஏதேனின் செடிகளை தேடி அல்ல, அவர்களையே நாடி தேவன் வந்தார். அன்பின் குரல் கொடுத்தார், அனைத்தையும் அறிந்து கொண்டார். பின்னர், நீ கர்ப்பவதியாய் இருக்கும் பொழுது உன் வேதனையை மிகவும் பெருக பண்ணுவேன் என்று ஒரு தீர்ப்பும் கூறினார். அன்று முதல் சுத்தமான தம்பதிகள் அசுத்தமாக மாறினார்கள். பாவமே செய்யாத ஆதி பெற்றோர் பாவமானார்கள். அன்று துவக்கம் மனிதனின் பிறப்பில் இருந்து பாவமும் பிறக்க ஆரம்பித்தது. 'என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்', என்று சங்கீதம் 51:5-வது வசனம் கூறும் நிலை மனித நிலையாக மாறியது.

அசுத்தமானதில் இருந்து சுத்தமானதை பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனும் இல்லை, என்று யோபு 14:4-வது வசனம் கூறுகின்றது. ''எல்லாரும் வழி தப்பி ஏகமாய் கெட்டு போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை. ஒருவனாகிலும் இல்லை'', என்று ரோமர் 3:12-வது வசனம் கூறுகின்றது. ''மனுஷனானவன் பரிசுத்தமாய் இருக்கிறதற்கும் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் நீதிமானாக இருக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?'' என்று யோபு 15:14-வது வசனம் கூறுகின்றது. ''இப்படி இருக்க, மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக இருப்பது எப்படி? ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சுத்தமாக இருப்பது எப்படி?'' என்று திரும்பவும் யோபு 25:4-வது வசனம் ஓர் கேள்வி எழுப்புகின்றது. அத்தனை அகோரமாக பாவம் மனிதனை தாக்கினாலும் தேவ அன்பு மனித வர்க்கத்தை கைவிடவே இல்லை என்பதை லேவியராகமம் 12-வது அதிகாரம் நமக்கு காட்டுகின்றது.

தன்னை விட்டு தவறி தூரமாக மனிதன் சென்று போனாலும் தான் வாசித்த வாழ்த்து பத்திரத்தை தேவன் திரும்ப பெற்று கொள்ளவே இல்லை. மறுமுறையும் அதனை ஆதியாகமம் 8:21,22-வது வசனங்களில் ஞாபகப்படுத்தினார். ''சுகந்த வாசனையை கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாய் இருக்கின்றது; நான் இப்பொழுது செய்தது போல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை. பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடை காலமும் மாரி காலமும், பகலும் இரவும் ஒழிவது இல்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.'' மேலும் ஆதியாகமம் 9:7-வது வசனத்தில், ''நீங்கள் பலுகிப் பெருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்கள்'' என்று கூறினார். திருமண வாழ்விற்கு உட்படும் அனைத்து விசுவாச குடும்பங்களுக்கும் கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதம், கலியாணச் சங்கீதம் என்று அழைக்கப்படும் சங்கீதம் 128:3-6 வசனங்களில் இடம் பெறுகின்றது. ''உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்ச செடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.''

7.2 பிரசவ ஸ்திரீக்கும் பிறந்த ஆண் மகவுக்கும் சுத்திகரிப்பு:

கர்த்தராகிய தேவன், ஏசாயா 66:9-வது வசனத்தில், ஒவ்வொரு குடும்ப ஸ்திரீக்கும் ஓர் சிறந்த வாக்குத்தத்தம் கூறினார். ''பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல்

இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார். பிரசவிக்க பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தை தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார்.'' மீட்பரை நடுவாக வைத்து வாழும் மீட்கப்பட்ட மக்களுக்கு, ஆசீர்வதிக்கப்பட்ட குடும்ப வாழ்வும் அர்த்தம் நிறைந்த ஆராதனை கூடமும் மிக முக்கியமானவைகள். குடும்பத்திற்கு அவசியமானவை எவை என்பது லேவியராகமம் 12-வது அதிகாரத்தில் கூறப்பட்டு உள்ளது. பிரசவ ஸ்திரீயும், பிறந்த மகவும் சுத்திகரிப்பட வேண்டும் என்பதை லேவியராகமம் 12-வது அதிகாரம் வலியுறுத்துகின்றது. கர்த்தாதி கர்த்தரிடம் சிறு பிள்ளைகள் வருவதற்கு ஏற்படும் அனைத்து தடைகளையும் முறைப்படி அகற்ற வேண்டும். எனவே தேவ அழைப்பு பிரசவித்த ஸ்திரீக்கு நேராக வருகின்றது.

நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: (லேவி. 12:1)

இம்முறை கர்த்தர் மோசேயை மட்டுமே அழைத்து கூறுகிறார்.

ஒரு ஸ்திரீ கர்ப்பவதியாகி ஆண் பிள்ளையைப் பெற்றால், அவள் சூதகஸ்திரீ விலக்கமாயிருக்கும் நாட்களுக்கு சரியாக ஏழு நாள் தீட்டாயிருப்பாள். எட்டாம் நாளிலே அந்த பிள்ளையினுடைய நுனித் தோலின் மாமிசம் விருத்தசேதனம் பண்ணப்படக்கடவது. பின்பு அவள் முப்பத்து மூன்று நாள் தன் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருந்து, சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமளவும் பரிசுத்தமான யாதொரு வஸ்துவைத் தொடவும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் வரவும் கூடாது. (லேவி. 12:2-4)

ஆண் குழந்தை பெற்று இருந்தால், ஆபிரகாம் பெற்ற ஆசீர்வாதத்தை அந்த குழந்தையும் பெற்று கொள்ள வேண்டும் என்று கட்டளையிடப்படுகின்றது. என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள் என்ற நிலையில் இருந்து, 'விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்' என்ற பிரித்தெடுக்கப்பட்ட நிலைக்குள் வர வேண்டும். அதற்கு தேவன் கட்டளையிட்ட விருத்த சேதனத்தை குழந்தைக்கு செய்துவிட வேண்டும் என்று கூறப்பட்டு இருக்கின்றது. அப்படி செய்யாவிட்டால் விசுவாச குடும்பத்தில் பிறந்த பிள்ளையாக இருந்தாலும், உடன்படிக்கைக்கு உட்படாத பிள்ளையாகவே பெற்று எடுத்த பிள்ளை இருக்க போகின்றது. உடன்படிக்கைக்கு உட்படாத பிள்ளைக்கு உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களின் பங்கு கிடைக்க போவது இல்லை. ஜன்ம பாவத்தில் இருந்து நிவிர்த்தியும் கிடைக்க போவது இல்லை. எனவே தனக்கு உரிய தேவ ஆசீர்வாதத்தின் பங்கை பெற்று கொள்ளுவதற்கு உடனடியாக எந்த விதமான கால தாமதமும் செய்யாமல் எட்டாவது நாளில் பிள்ளை விருத்த சேதனம் பண்ணப்பட வேண்டும் என்று லேவியராகமம் 12-வது அதிகாரம் கூறுகின்றது. கூறுவதற்கு கீழ்படிந்து முறைப்படி அப்படி செய்து விட்டால் அந்த ஆண் மகவு, ஆதியாகமம் 17-ம் அதிகாரத்தில் ஆபிரகாமிற்கு கொடுப்பப்பட்ட அனைத்து ஆசீர்வாதங்களையும் தனக்கு சொந்தமாக்கி கொள்ளும். பிள்ளையின் தகப்பன் நீண்ட ஆயுசு பெற்று வாழ்வதற்கு, பிள்ளையின் விருத்த சேதனம் உதவியாக இருக்கும்.

லேவியராகமம் 12:2-4-வது வசனங்களின்படி எட்டாவது நாளில் ஆண் பிள்ளை விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்பது ஒரு பிரமாணமாக மாறி விட்டது. அது

பிள்ளைக்கும் ஆசீர்வாதம், பெற்ற தகப்பனுக்கும் ஆசீர்வாதம் என்பதை மோசே தனது சொந்த அனுபவத்தில் ஏற்கெனவே அறிந்து இருக்கின்றார். மோசேயின் இரண்டாவது குமாரனுக்கு விருத்தசேதனம் செய்ய காலதாமதம் ஆன போது மோசேயின் உயிரே பாதிக்கப்பட இருந்தது. இதனை அறிந்து அவன் மனைவி சிப்போராள் உடனே செயல்பட்டாள், விருத்தசேதனத்தை நிறைவேற்றினாள், மோசேயின் உயிரை காப்பாற்றினாள் என்பதை யாத்திராகமம் 4:24,25,26 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கலாம்.

7.3 பிரசவ ஸ்தீரிக்கும் பிறந்த பெண் மகவுக்கும் சுத்திகரிப்பு

பெண் பிள்ளையைப் பெற்றாளாகில், அவள் இரண்டு வாரம் சூதகஸ்திரியைப் போல தீட்டாயிருந்து. பின்பு அறுபத்தாறு நாள் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருக்கக்கடவள். (லேவி. 12:5)

ஆண் மகவு விருத்தசேதனத்தினால் பாவநிவிர்த்தி அல்லது சுத்திகரிப்பு பெற்று விட்டது. பெண் மகவின் விருத்த சேதனம் என்பதை தேவன் ஒரு நாளும் கொடுக்கவில்லை. ஆனால் அந்த கொடூரம் சில ஆப்பிரிக்க நாடுகளில் இன்னும் நடைபெறுகிறது. அதற்கு பதிலாக சுத்திகரிப்பின் நாட்களை நீட்டிக்கிறார். பெண் குழந்தை பரிசுத்தமாக்கபடுவதின் பொறுப்பும் தாயிடமே கொடுக்கப்படுகின்றது. ஆண் பிள்ளை சுத்திகரிப்பதற்கு 40 நாட்கள் தாய் எடுக்க வேண்டும். ஆனால் பெண் பிள்ளை சுத்திகரிப்பதற்கு 80 நாட்கள் தாய் எடுக்க வேண்டும். 'உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டு இருப்பார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி (ஏசா.54:13) கூறி இருப்பதை நிறைவேற்றும் ஒரு பொறுப்பு தாய் வசத்தில் ஒப்புவிக்கப்படுகின்றது. தாயின் விசுவாசம் பிள்ளைகளுக்கும் பேர பிள்ளைகளுக்கும் சுரந்து ஓடுகின்றது. ''அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐநிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கின்றதென்று நிச்சயத்திருக்கின்றேன்,'' என்று பரிசுத்த பவுல் தீமோத்தேயுவை பார்த்து கூறுகின்றார். (2 தீமோ.1:5)

பிரசவத்தினால் ஒரு பெண் அசுத்தம் அடையும் பொழுது ஆண் மகவிற்காக ஏழு நாட்களும், பெண் மகவிற்காக பதினான்கு நாட்களும் சுத்திகரிப்பிற்கு பின் அவள் சுத்தமானவளாக கருதப்படுவாள். அவளுக்கு பணிவிடை செய்யும் பெண்களும் அசுத்தமடைந்தவர்களாக கருதப்பட்டனர். இந்த சுத்திகரிப்பின் நாட்களில் அவள் கணவனும் அவளிடம் வர தடை செய்யப்பட்டிருந்தான். அது மட்டுமல்ல, அவள் தேவாயலத்திற்குள் வரவும், தேவாலயத்தின் சடங்குகளில் பங்கெடுக்கவும், பஸ்கா ஆகாரம் புசிக்கவும், சமாதான பலிகளில் பங்கு பெறவும் தடை செய்யப்பட்டிருந்தாள்.

பிள்ளைபேறு சமயத்தில் அவள் ஒழுங்கு நிதிபடி அசுத்தமானவளாக கருதப்பட்டதற்கு காரணம் பாவம் என்பது அசுத்தமாக இருப்பதே ஆகும். நாம் யாவருமே பாவத்தில் தானே கர்ப்பம் தரிக்க பட்டோம். நீங்கள் வளர்ந்து பெருகுங்கள் என்று கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதம், மனிதனின் வீழ்ச்சிக்கு பின்னர் பாவத்தில் பொதிந்ததாக மாறிவிட்டது. அதற்கு ஆதி காரணம் பெண்ணே. அதனால் பெண் பெற்ற சாபம், ஆசீர்வாதத்தோடு இணைந்து மகப்பேற்றை அசுத்தமுள்ள ஒன்றாக மாற்றி விட்டது.

இந்த ஆதி மீறுதலின் விளைவாக அவள் பரிசுத்த ஆலயத்தில் இருந்தும் அதின் ஆசரிப்புகளில் இருந்தும் அத்தனை நாட்களுக்கு விலக்க பட்டவளாக காணப்பட்டாள். கர்த்தர் தாமே தமது பரம கிருபையினால் சுத்திகரிப்பிற்கும் பாவ நிவிர்த்திக்கும் வழி செய்திருக்காவிட்டால், நாம் நித்தியத்திற்கும் கர்த்தருடைய பிரசன்னத்தில் இருந்து விலக்கப்பட்டவர்களாக காணப்பட்டிருப்போம்

7.4 மகப்பேற்றிற்கு பின் செலுத்த வேண்டிய பலிகள்

அவள் ஆண் பிள்ளையையாவது பெண் பிள்ளையையாவது பெற்றதற்காக அவளுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின பின்பு, அவள் ஒரு வயதான ஆட்டுக்குட்டியை சர்வாங்க தகனபலியாகவும், ஒரு புறாக்குஞ்சையாவது காட்டு புறாவையாவது பாவ நிவாரண பலியாகவும், ஆசரிப்பு கூடார வாசலில் ஆசாரியனிடத்திற்கு கொண்டுவரக்கடவள். அதை அவன் கர்த்தருடைய சந்நிதியில் பலியிட்டு, அவளுக்காக பாவ நிவிர்த்தி செய்வானாக; அப்பொழுது அவள் தன் உதிர ஊறலின் தீட்டு நீங்கி சுத்தமாவாள். இது ஆண்பிள்ளையாவது பெண் பிள்ளையாவது பெற்றவளைக் குறித்த பிரமாணம். ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவளுக்குச் சக்தியில்லாதிருந்தால், இரண்டு காட்டு புறாக்களையாவது இரண்டு புறா குஞ்சுகளையாவது, ஒன்றை சர்வாங்க தகனபலியாகவும் மற்றொன்றை பாவ நிவாரணபலியாகவும் கொண்டுவரக்கடவள்; அதினால் ஆசாரியன் அவளுக்காக பாவ நிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவள் சுத்தமாவாள் என்று சொல் என்றார். (லேவி. 12:6-8)



பிரசவித்த ஸ்திரீ தன் மகவை ஆசாரியனிடத்தில் கொண்டு வருகிறாள்

இந்த வசனங்களில் பிரசவித்த ஸ்திரீ தன்னை எப்படி சுத்திகரித்து கொள்ள வேண்டும் என்பது கூறப்பட்டு உள்ளது. முதலாவது, பிரசவித்த பின்னர் ஏற்ற பெலன் பெறும் வரைக்கும் வீட்டில் தங்கி இருக்க வேண்டும். இரண்டாவது, பெலன் பெற்ற பின்னர் அவள் செல்ல வேண்டிய முதல் இடம், தேவ ஆலயமாக இருக்க வேண்டும். அவள் ஆலயத்தில் இருந்து விலக்கப்பட்ட நாட்களுக்கு பின் செல்லும் போது வெறுங்கையாக செல்லலாகாது. ஆகவே மூன்றாவதாக, தேவ ஆலயத்திற்கு சென்று செலுத்த வேண்டிய பலிகளை அவள் செலுத்த வேண்டும் என்று நியமிக்கப்பட்டது. அவள் செலுத்த வேண்டிய பலிகள் இரண்டு உண்டு: ஒன்று பாவ நிவாரண பலி, மற்றொன்று தகனபலி.

புறா குஞ்சுகள்



காட்டு புறாக்கள்

லேவியராகமம் 12-வது அதிகாரத்தில் தாய் செலுத்தும் பலி, பாவ நிவாரணபலியாக இருக்கின்றது. பெற்ற பிள்ளையின் பாவம் மன்னிக்கப்பட தாய் பாவ நிவாரணபலி செலுத்துகின்றாள். அது அவள் தனது சுத்திகரிப்பை பூரணப்படுத்த செலுத்த வேண்டிய பலி ஆகும். தொடர்ந்து அவள் செலுத்தும் அடுத்த பலி, தகன பலி ஆகும். தனது பிள்ளையை முற்றிலும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்று அவள் கூறுவதற்கு அது ஓர் அடையாளமாக இருக்கின்றது. ''இந்த பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன். நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்கு கர்த்தர் கட்டளையிட்டார். ஆகையால் அவன் உயிரோடு இருக்கும் சகல நாளும் அவனை கர்த்தருக்கே ஒப்பு கொடுக்கிறேன்'' என்று 1 சாமு. 1:27,28 வசனங்களில் நன்றி நிறைந்த இதயத்துடன் அன்னாள் தேவ ஆலயம் சென்று தேவனை துதித்தாள். பிரசவ நேரத்தில் கர்த்தர் எனக்கு செய்த நன்மைகளுக்காக நான் என்னத்தை செலுத்துவேன்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்து அவரை தொழுது கொள்ளுவேன் என்று பெலன் வந்த உடனே பரிசுத்த ஸ்தலம் விரைந்து சென்றாள். கர்த்தர் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று துதிக்கின்றாள். நானும் என் வீட்டாருமோ என்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று சாட்சி கூறுகின்றாள். கர்த்தாதி கர்த்தரிடம் அதிகம் விசுவாசம் உள்ள அந்த தாய் தான் பெற்ற பிள்ளைகளையும் விசுவாசத்திற்கு நேராக நடத்துகின்றாள்.

''என்னுடைய தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' என்று சங். 51:5-வது வசனம் கூறினாலும், பிள்ளைகள் பரிசுத்தமாக்கப்படுவது தாயால் மட்டுமே இடம் பெறுகின்றது. 'பரிசுத்த வேத எழுத்துக்களை நீ சிறு வயது முதல் அறிந்தவன்', என்று பரிசுத்த பவுல் தீமோத்தேயுவை பார்த்து 2 தீமோத்தேயு 3:15-ல் கூறுவதற்கு காரணம், அவனுடைய தாயே ஆகும்.

அத்தியாயம் - 8

தோலில் நோய்கள் வருமாயின் சுத்தம் காப்பது எப்படி?

8.1 சரும நோய்களின் தீட்டுகளில் இருந்து சுத்திகரிப்பு

லேவியராகம புத்தகத்தை நாம் படிக்கும் பொழுது அது பழுது அற்ற பரிசுத்தத்திற்கு நேராக மீட்கப்பட்ட மக்களை வழி நடத்துகின்றது என்பதை அறிகின்றோம். புத்தகத்தின் முதல் அதிகாரத்திலிருந்து பழுது உள்ளது, பழுது இல்லாதது, தீட்டுப்பட்டது தீட்டுப்படாதது சுத்தம் ஆனது அசுத்தமானது, கர்த்தர் கட்டளையிட்டது கர்த்தரால் கட்டளையிடப்படாதது என்று அதிகாரம் அதிகாரமாக பகுத்து பகுத்து கூறப்பட்டு வருகின்றது. இறுதியாக அவை அனைத்தும் இந்த புத்தகத்தின் கருப்பொருளான, 'நான் பரிசுத்தர் நீங்களும் பரிசுத்தராக இருங்கள்,' என்பதற்கு நேராக வழிநடத்துகின்றது. 11-ம் அதிகாரத்தில் உண்ணும் உணவில் சுத்தம் வற்புறுத்தப்பட்டது. 12-வது அதிகாரத்தில் குடும்ப வாழ்க்கையின் ஆசீர்வாதமான பிள்ளைபேறில் சுத்தம் வரையறுக்கப்பட்டுள்ளது. 13,14-ம் அதிகாரங்களில் உள்ளான மனுஷனில் பரிசுத்தம் வலியுறுத்தப்படுகின்றது.

பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: ஒரு மனிதனுடைய சரீரத்தின்மேல் குஷ்டரோகம் போலிருக்கிற ஒரு தடிப்பாவது அசறாவது வெள்ளைப்படராவது உண்டானால், அவன் ஆசாரியனாகிய ஆரோனிடத்திலாகிலும், ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனிடத்திலாகிலும் கொண்டு வரப்படக்கடவன். (லேவி. 13:1,2)

லேவியராகமம் 13-வது அதிகாரம் முதலாம் வசனம், 'பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி' என்று துவங்குகின்றது. அந்த இருவரையும் பார்த்து தேவன் பேசினார். 2-வது வசனம் 'ஒரு மனிதன்' என்று துவங்குகின்றது. பாளையத்தில் இருக்கும் இலட்சக்கணக்கான மக்களைப் பற்றி தேவன் அவர்களிடம் பேசாமல் ஒரே ஒரு தனி மனிதனைப் பற்றி பேசினார். அந்த மனிதனின் சரீரத்தின்மேல் ஒரு நோய் வந்தது. அந்த குறிப்பிட்ட நோயைப் பற்றி பேசினார். அந்த நோயின் பெயர் குஷ்டம் என்பதாகும். 13,14 ஆகிய இந்த இரண்டு அதிகாரங்களில் நாம் பார்க்கும் குஷ்டம் என்ற வியாதி இந்த காலங்களில் நாம் கண்ணால் காணும் குஷ்ட வியாதியுடன் ஒப்பிடக்கூடியது அல்ல. நம்முடைய காலத்தில் நாம் கண்ணால் பார்க்கும் குஷ்டரோக வியாதியை குறிக்கக்கூடிய எபிரெய வார்த்தை எபிபத்தியாசிஸ் என்ற வார்த்தை ஆகும். ஆனால் லேவியராகமம் 13,14 ஆகிய அதிகாரங்களில் காணப்படும் குஷ்டம் என்ற நோயினைக் குறிக்கும் எபிரேய சொல் சராத் (Tzaraath) என்ற எபிரெய வார்த்தை ஆகும். சரா என்ற எபிரெய வார்த்தை, ''மனிதனை எந்த வேலையும் செய்ய முடியாதபடி அடிப்பது அல்லது மனிதனை எதையுமே சிந்திக்காதபடி மாற்றி விடுவது'' என்பது ஆகும். சுருக்கமாக அதனுடைய பொருள், 'அடிக்கப்படல்' என்பது ஆகும். சரா (Tzara) என்ற எபிரெய சொல்லிலிருந்து சராத் என்ற எபிரெய சொல் பிறந்தது. சராத் என்ற சரும வியாதி பலவிதமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அது பாவம் செய்வதால் ஏற்பட்டது என்று ஆசாரியர்கள் கருதினர். குஷ்டம் என்ற வியாதி மனிதனை அடிக்கும் பொழுது மனிதன் எதுவும் செய்ய முடியாதவனாக மாறிவிடுகின்றான் என்பதை குறிக்கின்றது.

லேவியராகமம் 13-ம் அதிகாரத்தில் காணப்படும் குஷ்டரோகம் ஒரு சரும வியாதியை குறிக்கும் ரோகம் ஆகும். அதன் துவக்கம் பொதுவாக மிக சிறியதாகவே காணப்படும். எவரும் அதை பொருட்படுத்துவது கூட கிடையாது. ஆயினும் அந்த குஷ்டம் வெளியே மிக சிறியதாக தெரிந்தாலும், பார்க்கும் பொழுது பயப்படத்தக்கதாக தெரியா விட்டாலும், சரீரத்தின் உள்ளான பகுதிகளில், மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு முன்பாக ஏற்கெனவே வளர்ந்து விட்ட ஒரு வியாதி ஆகும். இப்பொழுது தனது ரூபத்தை மூன்று முறைகளில் அந்த வியாதி வெளியே காட்ட துவங்குகின்றது. 13-வது அதிகாரம் 2-வது வசனத்தில் ஒரு தடிப்பாவது, அசறாவது, வெள்ளை படராவது உண்டானால் என்று கூறப்பட்டு உள்ளது. இந்த தடிப்பு, அசறு, வெள்ளைப்படர் மூன்றில் ஒன்றின் மூலமாக சராத் என்ற வியாதி வெளியே தெரியவருகின்றது.

வெள்ளை படர்

அசறு



ஒரு தடிப்பு

8.2 தவறான நடத்தையினால் வரும் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள்

லேவியராகமம் 13:2-வது வசனத்தில், ஒரு மனிதனுடைய சரீரத்தின்மேல் குஷ்டரோகம் போல் இருக்கிற ஒரு தடிப்பாவது, அசறாவது, வெள்ளை படராவது உண்டானால் அது ஆசாரியனாகிய ஆரோனிடத்தினாலாகிலும், ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனிடத்திலாகிலும் கொண்டுவரப்பட கடவன் என்று படிக்கின்றோம். அந்த மனிதனை ஒரு மருத்துவரிடம் எடுத்து செல்லவில்லை. அந்த காலங்களில் மருத்துவ அறிவும் அதிகமாக பெருகவில்லை. ஆசாரியருக்கே அதை குறித்த போதனைகளை கர்த்தர் கொடுக்கிறார். ஆகவே வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களை ஆசாரியனிடம் மட்டுமே எடுத்து சென்றனர். அதுவே கர்த்தர் இட்ட கட்டளை ஆகும்.

13-ம் அதிகாரம் குஷ்டம் வந்ததை நமக்கு கூறுகின்றது. 14-ம் அதிகாரத்தில் குஷ்டரோகி சுத்தமாகி விட்டதை நாம் படிக்கின்றோம். ஆனால் இதற்கு இடையில் அவன் எப்படி சுத்தமானான் என்பதோ, அதற்கு என்ன சிகிச்சை பெற்றான் என்பதோ, எதுவும் இங்கு கூறப்படவே இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பாவம் என்ற ரோகத்தை தெரிவித்து விளக்கி கூற, 13,14-வது அதிகாரங்களில் குஷ்டரோகம் என்று அன்று கூறப்பட்ட தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் மேற்கோளாக கொடுக்கப்பட்டு உள்ளது. பாவங்களை போக்கிவிட மருத்துவமனைகள் உலகத்தில் இல்லை. பாவிகளை சுத்தமாக்க, சிகிச்சைகள் எதுவும் இல்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி சுத்தம் செய்கின்றது என்பதை 1 யோ.1:7-வது வசனம் கூறுகின்றது. லேவியராகமம் 13-வது அதிகாரத்தில் குஷ்டரோகம் போல் இருந்த தடிப்பு, அசறு அல்லது வெள்ளை படர் கண்ட மனிதனை எடுத்து செல்லும் இடம் ஆசாரியனே ஆகும்.

ஆசாரியனுக்கு மூன்று பொறுப்புகள் உண்டு. லேவியராகமம் 10-வது அதிகாரம் 10,11-வது வசனங்களில் இந்த மூன்று பொறுப்புகள் கொடுக்கப்பட்டு உள்ளது. முதலாவது பொறுப்பு, பரிசுத்தமானது எது? பரிசுத்தம் இல்லாதது எது? என்று ஆசாரியன் கண்டு பிடிக்க வேண்டும். இரண்டாவது பொறுப்பு, கண்டு பிடித்ததற்கு ஏற்ப, ஏற்ற தீர்ப்பை அவன் கூற வேண்டும். மூன்றாவது பொறுப்பு, மோசே மூலம் கொடுக்கப்பட்ட பிரமாணங்களை சபையாருக்கு ஞாபகப்படுத்தி கொண்டே இருக்க வேண்டும். இப்பொழுது குஷ்டரோகமாக இருக்கலாம் என்ற சந்தேகத்திற்கு இடமான அந்த மனிதனை ஆசாரியனிடம் மக்கள் கொண்டு வருகின்றார்கள். கொண்டு வரப்பட்ட மனிதன் சுத்தமானவன்தானா அல்லது அசுத்தமானவன்தானா என்று கண்டுபிடிப்பதும் அதற்கு ஏற்ற தீர்ப்பு கூறுவதும் ஆசாரியனின் பொறுப்பு ஆகும். அந்த மனிதனின் குஷ்டம் குணமாக்கப்பட ஆசாரியனிடம் அவர்கள் கொண்டுவரவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவன் சுத்தவானா அல்லது அசுத்தவானா என்பதை அறிவதற்கே அவனிடம் கொண்டு வந்தார்கள். அவன் சுத்தமான பின்பு, அவன் செலுத்த வேண்டிய பலிகளை செலுத்த திரும்பவும் ஆசாரியனிடம் அவன் கொண்டுவரப்படுகின்றான் என்பதை நாம் பின்னர் பார்க்க இருக்கின்றோம்.

குணமாக்குதலில் சரீர சுகம் முக்கியத்துவம் பெறுகின்றது. சுத்தமாக்க படுதலில், சரீர சுகம் மட்டுமல்ல, ஆத்துமாவும் சுத்தமாக்கப்படுகின்றது. வெறும் குணமாக்கப்படல் என்பதில் மனம் திரும்புதல் இடம் பெறுவது இல்லை. சுத்தமாக்கப்படல் என்பதில், மனம் மாறுகின்றது; சரீரமும் பூரண சுகம் பெறுகின்றது.

நாகமான் என்ற ஒரு படைத்தலைவன் குஷ்டரோகியாக இருந்தான் என்று இராஜாக்களின் 2-வது புத்தகம் 5-ம் அதிகாரம் ஆரம்பிக்கின்றது. அவனை எலிசா என்ற தேவனுடைய மனுஷன் குணமாக்கவில்லை என்பதை அங்கும் நாம் காணலாம். ஆனால் சுத்தமாக்கினான் என்று கூறப்பட்டு உள்ளது. அவன் ஒரு சிறு பிள்ளையின் சரீரத்தைப் போல மாறி அவன் சுத்தமானான் என்று 2 இராஜாக்கள் 5:14-வது வசனம் கூறுகின்றது.

இயேசு தமது ஊழியத்தின் நாட்களிலே குஷ்டரோகிகளை சுத்தமாக்கினார் என்று எழுதப்பட்டிருக்கின்றதே தவிர இயேசு குஷ்டரோகிகளை குணமாக்கினார் என்று புதிய ஏற்பாட்டு நூல்களில் எழுதப்படவே இல்லை. பரிசுத்த மத்தேயு 8:2,3-வது வசனங்களைப் பாருங்கள்: ''அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரை பணிந்து, 'ஆண்டவரே, உமக்கு சித்தமானால் என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும்', என்றான். இயேசு தனது கையை நீட்டி அவனை தொட்டு எனக்கு சித்தம் உண்டு சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.'' தொடர்ந்து பரிசுத்த மாற்கு 1:40,41,42-வது வசனங்களை படியுங்கள்: ''அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து அவர் முன்பாக முழங்கால் படியிட்டு உமக்கு சித்தமானால் என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக் கொண்டான். இயேசு மனதுருகி கையை நீட்டி அவனை தொட்டு எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்றார். இப்படி அவர் சொன்னவுடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று. அவன் சுத்தமானான்.'' 'குஷ்டரோகிகளை சுத்தமாக்குங்கள்' என்று இயேசு தனது சீஷர்களிடம் கூறியதை பரிசுத்த மத்தேயு 10:8-வது வசனத்தில் பார்க்கலாம். குஷ்டரோகிகள் சுத்தமாகுகின்றார்கள் என்பதே இயேசு யோவான் ஸ்நானகனுக்கு சொல்லி அனுப்பிய பதில் ஆகும். இதனை பரிசுத்த மத்தேயு 11:5-வது வசனத்தில் பார்க்கலாம்.

லேவியராகமம் 13-வது அதிகாரத்தில் சுத்தம் இல்லாத மனிதனைக் கண்ட நாம், 14-ம் அதிகாரத்திற்குள் வரும்பொழுது அதே மனிதன் சுத்தமாகி தேவனை துதிப்பதை காண

இருக்கின்றோம். எப்படி அந்த சுத்தத்தை அவன் பெற்றான் என்று அங்கு கூறப்படவில்லை என்பதையும் நாம் காண்கின்றோம். சுத்தமில்லாத ஒரு மனிதனாக இருந்தவன், சுத்தமான ஒரு மனிதனாக மாறிவிட்டான். எப்படி மாறினான்? அதுதான் அற்புதம். அது தேவனுடைய பலத்த கரம்; அது ஆண்டவர் செய்யும் அதிசயம். ''அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடர்களின் செவிகள் திறவுண்டுபோம். முடவன் மானைப்போல் குதிப்பான், ஊமையன் நாவும் கெம்பீரிக்கும், வனாந்திரத்திலே தண்ணீர்களும் கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்து ஓடும்.'' குருடரின் கண்கள் திறக்கப்பட்டது என்று ஏசாயா 35:5,6 ஆகிய வசனங்களில் கூறுகின்றார். ஆனால் எப்படி திறக்கப்பட்டது என்பதை அவர் கூறவில்லை. காரணம் எவரும் அறியார்; அது ஓர் அற்புதம். 'செவிடரின் செவிகள் திறந்தது.' எப்படி திறந்தது? எவரும் அறியார்; அது ஓர் அதிசயம். 'அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்' என்று கூறப்பட்டது. ஆனால் எப்படி குதித்தான் என்பதை எவரும் கூறவில்லை; அது ஓர் ஆச்சரியம். ஊமையான மனிதனின் நாவு கெம்பீரித்தது. ஊமையான மனிதனுக்கு பேச்சு வந்த விதம் எப்படி என்பதை எவரும் அறிய மாட்டார்கள். அது தேவனின் வல்லமையே ஆகும். வனாந்தரத்தில் தண்ணீர்களும் கடுவெளியில் ஆறுகளும் பாய்ந்து ஓடும் அற்புதம்தான் என்ன? வெடிப்பு கண்ட நிலங்களில் நதிகள் ஓடி வருவது எப்படி என்பதை யார் அறிவார்? ஜீவனுள்ள தேவனால் செய்யக்கூடாத அதிசயம் எதுவும் இல்லை என்பதையே லேவியராகமம் 13,14-வது அதிகாரங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

அப்பொழுது ஆசாரியன் அவன் சரீரத்தின்மேல் இருக்கிற ரோகத்தை பார்க்க வேண்டும்; ரோகம் இருக்கும் இடத்தில் மயிர் வெளுத்தும், ரோகமுள்ள இடம் அவனுடைய மற்ற சரீரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் குழிந்தும் இருந்தால் அது குஷ்டரோகம்; ஆசாரியன் அவனைப் பார்த்த பின்பு, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன். (லேவி. 13:3)

லேவியராகமம் 13:3-வது வசனத்தில் ஆசாரியன், தன்னிடம் கொண்டு வரப்பட்ட மனிதனை சோதிக்கின்றான். சோதித்து அறிந்து கொள்ளுகின்றான். ஓர் ஆவிக்குரிய தலைவன் என்ற முறையில் இரண்டு சோதனைகளை ஆரோன் நடத்துகின்றான். ரோகம் இருக்கும் இடத்தில் முடி வெளுத்து இருக்கின்றதா என்றும் பார்க்கின்றான். தடித்து இருக்கும் இடம், மற்ற இடங்களை விட குழியாக இருக்கின்றதா என்றும் அறிந்து கொள்ளுகின்றான். முடி வெளுத்து இருந்தால், குஷ்டம் ஏற்கெனவே சரீரத்தின் உள்ளான பகுதிகளில் தோன்றி விட்டது என்ற பொருள். குழி விழுந்து விட்டால் சரீரத்தின் மேல் பாகமும் பாதிக்கப்பட துவங்கி விட்டது என்பது பொருள். இவை இரண்டும் இருப்பதை ஆசாரியன் கண்டால்

தீட்டுள்ள குஷ்டம் (leprosy)

தீட்டுள்ள கிரந்தி என்ற வியாதி (syphilis)



தீட்டுள்ள மேகவெட்டை நோய் (gonorrhea)

அவனை தீட்டுப்பட்டவன் என்று தீர்க்க வேண்டும். அவைகள் இல்லாவிட்டால் அவன் சுத்தமானவன் என்று தீர்க்க வேண்டும்.

கொண்டு வரப்பட்ட மனிதனின் தோலில் முடி வெளுத்து இருந்தது. குழி விழுந்து இருந்தது. எனவே அவன் தீட்டுப்பட்டவன் என்று தீர்ப்பிடப்பட்டது. மூன்று வருடங்களுக்கு முன் அவன் சரீரத்தினுள்ளே உருவாகிய ரோகம் அகோரமானது; மறைவாக இருக்க முடியாத அளவு பெரிதானது. அவன் முகப்பார்வை மாறி விட்டது. தோலில் குழி கண்டு விட்டது. அனைத்தும் வெளிப்பட்டு விட்டது. அவைகள் அனைத்தும் மனிதன் செய்யும் அந்தரங்க பாவங்களையே குறிக்கின்றது. பாவத்தை ஓரளவுக்கு மேல் மனிதனால் மறைக்க முடியாது என்பதை அவை விளக்குகின்றன. அகத்தின் நிகழ்ச்சிகள் முகத்தில் ஒரு நாள் தெரிய வந்து விடும். இதயத்தின் நிறைவுகள் வார்த்தையில் ஒரு நாள் வெளிப்பட்டே விடும். குஷ்டரோகத்தை விட பாவ ரோகமே மிக மோசமானது.

வெளியாக்கப்படாத மறைபொருள்கள் உலகத்தில் இல்லை. அறியப்படாத இரகசியமும் எதுவும் இல்லை. ''என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாக பெருகிற்று. அவைகள் பார சுமைபோல என்னால் தாங்க கூடாத பாரமாயிற்று. என் மதிகேட்டின் நிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றம் எடுத்தது. நான் வேதனை பட்டு ஒடுங்கினேன். நாள் முழுவதும் துக்கப்பட்டு திரிகின்றேன்.'' (சங். 38:4-6) அதுவே இதயத்தில் பாவம் என்ற ரோகத்தை பெற்ற ஓர் மனிதனின் அபய குரலாக மாறுகிறது. அவ்விதமான குரல்களுக்கு பதில் குரல் கொடுக்கவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். ஒரு அழைப்பு கிறிஸ்துவினிடமிருந்து அந்த மனிதனுக்கு நேராக செல்கிறது. அது இயேசுவின் அன்பின் அழைப்பு ஆகும்.

லேவியராகமம் 13,14-வது அதிகாரங்கள் பாவியின் பரிதாப நிலையையும் வரப்போகும் இரட்சகரான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகத்துவமான பாவ மன்னிப்பையும் முன்னதாக எடுத்து கூறுகின்றன. மிகுந்த மன வருத்தத்துடனும் மிகுந்த மன பாரத்துடனும் வாழ்கின்றவர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு மன நிம்மதி தருவேன். உங்கள் ஆவி, உங்கள் ஆத்துமா, உங்கள் சரீரம் அனைத்தையும் என்னால் சுத்தமாக்க முடியும். இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குவேன். என்னிடத்தில் வருகிற எவரையும் திரும்பி போய்விடுங்கள் என்று நான் கூறவே மாட்டேன் என்று மனுக்குலத்தின் உத்தம பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து அழைக்கின்றார்.

லேவியராகமம் 13:1-3 வசனங்களில், குஷ்டரோகம் இருப்பது போல காணப்பட்ட ஒரு மனிதன் ஆசாரியனிடம் கொண்டு வரப்பட்டான் என்று வாசிக்கிறோம். ஆசாரியன் அவனை பரிசோதித்து பார்த்தான். ஆசாரியனின் பொறுப்புகளில் ஒரு பொறுப்பு சுத்தமுள்ளது எது? சுத்தம் இல்லாதது எது? என்பதை பரிசோதித்து அறிவது ஆகும். அதின் முடிவு, அவன் ஓர் குஷ்டரோகி என்ற முடிவே ஆகும்; அவன் தீட்டுப்பட்டவன்! சமூகத்தின் ஓர் அங்கம் அல்ல அவன்; புறக்கணிக்கப்பட்டவன்! உயிரோடு இருக்கிறவனாக தெரிந்தாலும், எந்த விதமான உபயோகமும் அவனுடைய குடும்பமும் அவனுடைய சமூகமும் எதிர்பார்க்க முடியாமல் போன ஒரு மனிதனாக அவன் மாறிவிட்டான்! இதுவே ஆசாரியனின் தீர்ப்பு.

இந்த அதிகாரங்களில் குஷ்டரோகம் என்பது சரீர பிரகாரமான குஷ்டத்தை எடுத்து கூறுவதைவிட, மனிதனுடைய வாழ்க்கையில் பாவம் என்கிற குஷ்டத்தையே எடுத்து கூறுகின்றது. பாவத்தில் உழல்கின்ற மனிதனால் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும்

எந்தவிதமான உபயோகமும் இருக்க முடியாது என்பதை இந்த அதிகாரங்கள் திட்டவட்டமாக எடுத்து கூறுகின்றது.

அவன் சரீரத்தின்மேல் வெள்ளைப் படர்ந்திருந்தாலும், அவ்விடம் அவனுடைய மற்றத் தோலைப் பார்க்கிலும் அதிக பள்ளமாயிராமலும், அதின் மயிர் வெள்ளையாக மாறாமலும் இருந்தால், ஆசாரியன் அவனை ஏழு நாள் அடைத்து வைத்து, ஏழாம் நாளில் அவனைப் பார்க்கக்கடவன்; தோலில் ரோகம் அதிகப்படாமலும், அவன் பார்வைக்கு ரோகம் நின்றிருந்தாலும், ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழு நாள் அடைத்து வைத்து, இரண்டாந்தரம் அவனை ஏழாம் நாளில் பார்க்கக்கடவன்; தோலில் ரோகம் அதிகப்படாமல் சுருங்கியிருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது அசறு; அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்துச் சுத்தமாயிருப்பானாக. தன்னைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கிறதற்கு அவன் தன்னை ஆசாரியனுக்கு காண்பித்த பின்பு, அசறு தோலில் அதிகமாய் படர்ந்திருந்தால், அவன் மறுபடியும் ஆசாரியனுக்கு தன்னை காண்பிக்கக்கடவன். அப்பொழுது அசறு தோலிலே படர்ந்தது என்று ஆசாரியன் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகம். (லேவி. 13:4-8)

அசறு
(rash or vitiligo)

லேவியராகமம் 13:4-8 வசனங்களில் பிறிதொரு மனிதன் ஆசாரியனிடம் கொண்டு வரப்படுகின்றான். அவனையும் ஆசாரியன் சோதித்து அறிகின்றான். அவனுடைய சரீரத்தின்மேல் வெள்ளைப் படர் காணப்படுகின்றது. ஆனால் ரோகம் இருக்கும் இடத்தில், முடி வெளுப்பு கொள்ளவில்லை; தோலில் குழி காணவில்லை. ஆசாரியன் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க விரும்பவில்லை. எனவே அந்த மனிதனை ஏழு நாட்கள் அடைத்து வைக்கின்றான். அவனிடத்தில் காணப்பட்ட குஷ்டரோக அறிகுறிகள், ஏழு நாட்கள் அவனை அடைபட்டு கிடக்கும் ஓர் நிலைக்குள் தள்ளி விட்டது. அடைத்துப் போடப்பட்டான் என்று இந்த இடத்தில் வரும் எபிரேய சொல்லிற்கு சமமான கிரேக்கச் சொல், ரோமர் 11:32-வது வசனத்தில் பயன்படுத்தப்பட்டு உள்ளது; ''எல்லார்மேலும் இரக்கமாய் இருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப் போட்டார்'' என்று கூறப்பட்டு உள்ளது.

குஷ்டரோகத்தை விட பாவ ரோகமே மிக மோசமானது. மேலும் கலாத்தியர் 3:22-வது வசனத்தில், ''வேதம் எல்லாரையும் ஏகமாய் பாவத்தின் கீழ் அடைத்து போட்டது'' என்று கூறப்பட்டு உள்ளது. வேத வசனங்களை கேட்காதபடியினாலும், கேட்டும் பின்பற்ற முடியாமல் போனபடியினாலும், என்னையே நான் அடைத்துக் கொண்டேன் என்று பரிசுத்த பவுல் கூறியிருக்கின்றார். 'என் மனதின் பிரமாணத்திற்கு விரோதமாய் போராடுகிற வேறு ஒரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்க காண்கின்றேன். அது என்னை

பாவபிரமாணத்திற்கு சிறையாக்கி கொள்ளுகின்றது, என்று பவுல் கூறவதை ரோமர் 7:22-24-வது வசனங்களில் பார்க்கலாம்.

தோலில் கண்ட வியாதியினால் ஏழு நாட்கள் அடைபட்டு கிடந்தான். வாழ்வில் கண்ட பாவத்தினால் மனிதன் வாழ்க்கை முழுவதுமே அடைபட்டு கிடக்கின்றான். ஆசாரியன் அந்த மனிதனுக்கு ஏழு நாட்கள் அவகாசம் கொடுத்து பார்த்தான். எந்த மாற்றமும் ஏழாவது நாளில் காணவில்லை. எனவே மேலும் ஏழு நாட்கள் கூடுதலாக அவனை அடைத்து போட்டான். அது, கர்த்தர் பாவத்தில் வாழும் மனிதனுக்கு மேலும் மேலும் கொடுக்கும் ஏராளமான தவணையின் நாட்களை குறிக்கின்றது. நியாயத்தீர்ப்பு நாளில் சஞ்சலமான ஓர் தீர்ப்பை பெற்று விடாதபடிக்கு தப்பி பிழைத்து கொள்ள, மனம் மாறிவிட, போதுமான நாட்களை கர்த்தர் அனைத்து மனிதர்களுக்கும் கொடுத்துக் கொண்டே இருக்கிறார் என்பதை 2 பேதுரு 3:9 கூறுகின்றது: ''தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்,'' பரிசுத்தம் இல்லாமல் ஒரு மனிதனும் இயேசுவின் இரண்டாவது வருகையில் பங்கு எடுக்க முடியாது. எனவே அனைவரும் அதை பெற்றுவிடத்தக்கதாக, கிறிஸ்து பொறுமையுடன் மனுக்குலத்திற்காக காத்து கொண்டே இருக்கின்றார்.

அடைத்து போடப்பட்ட நாட்கள் முடிந்த பின்னர் அடைபட்டு கிடந்த அந்த மனிதன் சோதிக்கப்படுகின்றான். எந்த விதமான ரோகமும் அவனில் காணப்படவில்லை. அவன் சுத்தமானவன் என்று தீர்ப்பிடப்பட்டது. மிகுந்த மன மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான். ஆனால் சில நாட்கள் சென்ற பின்பு திரும்பவும் அதே மனிதன் ஆசாரியனிடம் அழைத்து வரப்பட்டான். திரும்பவும் சோதனை இடம் பெற்றது. குஷ்டம் திரும்பவும் அவனிடம் காணப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது.

இதில் ஒரு முக்கியமான பொருள் அடங்கி உள்ளது. பாவ மன்னிப்பு பெற்ற மனிதன், பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தை பெற்ற மனிதன், மறுபடியும் பாவத்தில் விழுந்து விடுவதை குறிக்கின்றது. தான் அறிக்கையிட்ட தப்பிதங்களை திரும்பவும் விரும்பி செய்துவிடுவதை குறிக்கின்றது. பின்வாங்கி போன விசுவாசியாக அவன் மாறி விட்டான். எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டானோ, அதற்கு அவன் அடிமையாக இருக்கின்றான் என்று பரிசுத்த பேதுரு கூறுகின்றார். ''கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கி கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலமை முன்னிலமையிலும் கேடுள்ளதாய் இருக்கும்'' (2 பேதுரு 2:20).

குஷ்டரோகம் ஒரு மனிதனுக்கு இருந்தால், அவனை ஆசாரியனிடத்தில் கொண்டு வர வேண்டும். அப்பொழுது ஆசாரியன் அவனைப் பார்த்து, தோலிலே வெள்ளையான தடிப்பிருந்து, அது மயிரை வெண்மையாக மாறப்பண்ணிற்றென்றும், அந்த தடிப்புள்ள இடத்திலே இரணமாம்சம் உண்டென்றும் கண்டால், அது அவன் சரீத்திலுள்ள நாள் பட்ட குஷ்டம்; அவன் தீட்டுள்ளவன். ஆதலால், ஆசாரியன் அவனை அடைத்து வைக்காமல் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன். (லேவி. 13:9-11)

பாலின தோல் வியாதி:
கிரந்தி
(Syphilis)



கிரந்தி வியாதி விளைவிக்கும்
கிருமி டிரிபோனேமா பால்லிடம்
(Treponema Pallidum)

இந்த வசனங்களில் வெள்ளை தடிப்பு சம்பந்தமான விபரங்கள் பற்றி கூறப்பட்டு உள்ளது. வெள்ளை தடிப்பு காணப்பட்டால் அது வெகு நாள்பட்ட வியாதி என்று கணிக்க வேண்டும். மலர் மட்டும் வாடவில்லை. முழு செடியே வாடிவிட்டது என்ற நிலைக்கு வந்து விட்டது. பூ மட்டும்தான் வாடி இருப்பது போன்று செடி காட்சி அளித்தாலும், அதனுடைய வேர்கள் ஏற்கெனவே பாதிக்கப்பட்டு விட்டது. 12-வது வசனத்தின்படி, கொண்டு வரப்பட்ட மனிதனுடைய தலை தொடங்கி அவனது கால் மட்டும் அந்த ரோகம் அவனுடைய உடல் முழுவதையுமே மூடி விட்டது. இந்த கிருமிகள் மற்றவர்களின் உடலுக்குள் புகுந்து நோய் விளைவிக்க வாய்ப்பு உண்டு. ஆகவே அவன் மகா தீட்டுப்பட்டவன் என்று கருதப்பட்டான்; சாவை சந்திக்க வேண்டியவனாக மாறி விட்டான்.

ஆசாரியன் பார்க்கிற இடங்களெங்கும் தோலிலே குஷ்டம் தோன்றி, அந்த ரோகமுள்ளவனுடைய தலை தொடங்கி அவன் கால்மட்டும் அது தேகம் முழுவதையும் மூடியிருக்க கண்டால், அப்பொழுது ஆசாரியன் பார்த்து, குஷ்டம் அவன் சரீரம் முழுவதையும் மூடியிருந்தால் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் உடம்பெல்லாம் வெண்மையாய்ப் போனபடியால், அவன் சுத்தமுள்ளவன்.
(லேவி. 13:12-13)

கைகளில் வெள்ளைபடர்

உடல் முழுவதும் வெள்ளைபடர்

உடம்பு முழுவதும் வெள்ளை படர் தோன்றுகிறது. அதில் ரணம் ஒன்றும் இல்லை என்றால், அந்த ஆளின் மெலானின் (melanin) என்ற நிற அணுக்கள் தோலில்

குறைவடைவதால் வரும் ஒரு நிலை ஆகும். அது வியாதி அல்ல. ஆண்களுக்கும் வரலாம், பெண்களுக்கும் வரலாம். இது எந்த கிருமியினாலும் வருவதல்ல. தொட்டால் பரவும் தொற்று நோயும் அல்ல. இது குடும்பங்களில் உண்டு. 10 முதல் 40 வயதிற்குள் இது வரலாம். வந்தால் வேகமாக உடலின் பல இடங்களில் நிறமாற்றம் அடையும். பின் நின்று விடும். பின்னர் திரும்பவும் பல இடங்களில் வரலாம். இது சாதாரணமாக சூரிய வெளிச்சம் படும் இடங்களில் அதிகம் காணப்படலாம். ஒரு முறை இவ்வாறு வெள்ளை படறு வந்து விட்டால் அந்த இடத்தில் திரும்பவும் இயற்கையான நிறம் வருவதில்லை. இது முடியிலும் கூட வரலாம். இதனை விட்டிலிகோ (vitiligo) அல்லது (leucoderma) வெண்குஷ்டம் என்று கூறுகின்றனர். அவனைச் சுத்தம் உள்ளவன் என்று தீர்க்கக்கடவன், என்று வசனம் 13-ல் கூறப்பட்டு உள்ளது. கர்த்தர் அவன் சுத்தமுள்ளவன் என்று கூறி விட்டார்! எந்த பாவியையும் மன்னித்து ஏற்று கொள்ள, அவனை மகிழ்ச்சியாக்க கர்த்தருக்கு அதிகாரம் உண்டு.

ஆனாலும், இரணமாம்சம் அவனில் காணப்பட்டால், அவன் தீட்டுள்ளவன். ஆகையால், இரணமாம்சத்தை ஆசாரியன் காணும் போது, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; இரணமாம்சம் தீட்டுள்ளது; அது குஷ்டம். அல்லது, இரணமாம்சம் மாறி வெண்மையானால், அவன் ஆசாரியனிடத்துக்கு வரவேண்டும். ஆசாரியன் அவனைப் பார்த்து, ரோகமுள்ள இடம் வெண்மையாக மாறினதென்று கண்டால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் சுத்தமுள்ளவன். (லேவி. 13:14-17)



காலில் குஷ்டம்

''உள்ளங்கால் துவங்கி உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை. அது காயமும் வீக்கமும் நொதிக்கிற இரணமும் உள்ளது. அது சீழ் பிதுக்கப்படாமலும் கட்டப்படாமலும் எண்ணையினால் ஆற்றப்படாமலும் இருக்கின்றது'' என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகின்றார். ஆனால் அவ்விதமாக கூறும் ஏசாயா, 1:18-வது வசனத்திலே, ''.....உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; இரத்தாம்பரச் சிவப்பாக இருந்தாலும் பஞ்சைப்போலாகும்'' என்றும் கூறுகின்றார். பாவங்கள் பயங்கரமானவைகளாக தெரிந்தாலும் பாவங்களை மன்னிக்ககூடிய அதிகாரம் பெற்றிருக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை மிக மிக பெரியது என்பதை இவைகள் காட்டுகின்றன. யோபு 33:28-வது வசனத்தில் ''என் ஆத்துமா படுகுழியில் இறங்காதபடி அவர் அதை இரட்சிப்பார். ஆகையால் என் பிராணன் வெளிச்சத்தை காணும்'' என்று கூறப்பட்டு உள்ளது. 2 சாமு. 12:13-வது வசனத்தில் பாருங்கள்; கொலைகாரன் விபச்சாரக்காரன் என்ற நிலைக்கு வந்த தாவீதுக்கும் நாத்தான் தீர்க்கதரிசிக்கும் நடுவில் இடம் பெற்ற உரையாடலை பாருங்கள்: ''அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில், ''நான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன்,'' என்றான். நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு கர்த்தர்

உன் பாவம் நீங்கச் செய்தார் என்றான்.'' பாவ மன்னிப்பு பெற்ற தாவீது, ''என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்தார். உன் நோய்களையெல்லாம் குணமாக்கினார், உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டார்,'' என்று 103-வது சங்கீதத்தில் கர்த்தரை போற்றினான்.

லேவியராகமம் 13:13-வது வசனத்தில் தலை முதல் கால் வரை ரோகம் இருந்தது. ஆனால் நீ சுத்தமானவன் என்று தீர்ப்பு கூறப்பட்டது. அந்த தீர்ப்பு அவனை பெரும் மகிழ்ச்சிக்கு ஆளாக்கியது. ஆனால் அதே சமயம், பாவமாகிய இரணம், ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றையும் பாதிக்கின்றது. எனவேதான் இரணம் உள்ள எவனும் தீட்டானவன் என்று 14,15-வது வசனங்கள் கூறுகின்றன.

8.3 சரீர புண்ணில் எழும்பும் குஷ்டம்

சரீரத்தின்மேல் புண் உண்டாயிருந்து ஆறிப்போய், அவ்விடத்திலே ஒரு வெள்ளைத் தடிப்பாவது சிவப்புக்கலந்த ஒரு வெள்ளைப் படராவது உண்டானால், அதை ஆசாரியனுக்கு காண்பிக்க வேண்டும். ஆசாரியன் அதை பார்த்து, அவ்விடம் மற்ற தோலை பார்க்கிலும் குழிந்திருக்கவும், அதில் மயிர் வெள்ளையாக மாறியிருக்கவும் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்க வேண்டும்; அது புண்ணில் எழும்பின குஷ்டம். (லேவி. 13:18-20)

லேவியராகமம் 13:18-23 வசனங்களில் வியாதியின் இரண்டாம் அடையாளமாக காணப்படுவது சீழ் கண்டு சுகமான இடத்தில் ஏற்படும் வெள்ளை தடிப்பு என்று கூறப்பட்டு உள்ளது.

உலகின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் திரும்பவும் அதில் மாட்டிக் கொண்டால் வரும் துன்பத்தையும் அதில் வெற்றி சிறந்தால் வரும் ஆசீர்வாதத்தையும் பார்க்கிறோம்.

ஆசாரியன் அதை பார்த்து, அதில் வெள்ளை மயிர் இல்லை என்றும், அது மற்ற தோலை பார்க்கிலும் குழிந்திராமல் சுருங்கி இருக்கிறது என்றும் கண்டானாகில், அவனை ஏழு நாள் அடைத்து வைத்து, அது தோலில் அதிகமாய் படர்ந்திருக்க கண்டால், அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டந்தான். அந்த வெள்ளைப்படர் அதிகப்படாமல், அவ்வளவில் நின்றிருக்குமாகில், அது புண்ணின் தழும்பாயிருக்கும்; ஆகையால், ஆசாரியன் அவனை சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன். (லேவி. 13:21-23)

தீர்ப்பு கூற வேண்டியவன் ஆசாரியனே. அவனுக்கே இவை யாவும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருந்தது. தீட்டுள்ளவன் என்று தீர்க்கப்பட்டவன் சபைக்கு புறம்பாக்கப்படுகிறான்.

8.4 தீ வேக்காட்டில் எழும்பும் குஷ்டம்

ஒருவனுடைய சரீரத்தின்மேல் நெருப்பு பட்டதினாலே வெந்து, அந்த வேக்காடு ஆறிப்போன இடத்திலே சிவப்பான படராவது வெண்மையான

படராவது உண்டானால், ஆசாரியன் அதை பார்க்கக்கடவன்; அந்த படரிலே மயிர் வெண்மையாக மாறி, அவ்விடம் மற்ற தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிருந்தால், அது வேக்காட்டினால் எழும்பின குஷ்டம்; ஆகையால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன், அது குஷ்டரோகந்தான். ஆசாரியன் அதைப் பார்க்கிற போது, படரிலே வெள்ளை மயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப் பார்க்கிலும் குழிந்திராமல், சுருங்கியிருக்கிறது என்றும் கண்டானாகில், அவனை ஏழு நாள் அடைத்து வைத்து, ஏழாம் நாளில் அவனைப் பார்க்கக் கடவன்; அது தோலில் அதிகமாய்ப் படர்ந்திருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகம். படரானது தோலில் பெருகாமல், அவ்வளவில் நின்று சுருங்கியிருந்ததாகில், அது சூட்டினால் உண்டான தழும்பு; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது சூட்டினால் வந்த வேக்காடு. (லேவி. 13:24-28)



குஷ்ட நோய் கிருமிகள்
(mycobacterium leprae)



குஷ்டரோகியின் தோலிலிருந்து
எடுக்கப்பட்ட கிருமிகள்

குஷ்டம் (Hansen's Disease) வருவதற்கு அடிப்படையான காரணம் சுத்தமின்றி வாழ்வதே ஆகும். குஷ்டரோகம் என்பது ஒரு கிருமி (Bacteria) மூலமாக பரவும் வியாதி ஆகும். Mycobacterium leprae என்ற கம்பு போன்ற கிருமி ஆகும்.

இது பாலின பாவங்களினால் வருவதல்ல. குஷ்டம் உள்ள ஒரு மனிதனின் நாசியிலோ, வாயிலோ இருந்து தும்மல் அல்லது இருமலின் போது வரும் துளிகளின் மூலம் இந்த கிருமிகள் பரவுகின்றன. மேலும் இவை புழுதியிலும் காணப்படுவதால் சுத்தம் இல்லாத வாழ்வு இதற்கு காரணமாகிறது. இது நரம்புகளின் கடைசியில் வாழ்வதால் நரம்புகளும், அதனால் நாம் உணரும் உணர்ச்சிகளும் சேதமடைகின்றன. நாள் ஆக ஆக கால் விரல் கைவிரல்கள் தேய்ந்து கொடூரமாக காட்சி அளிக்கின்றது. இது ஒரு தொற்று நோயாக இருப்பதால் இந்த நோய் உள்ளவன் அசுத்தன் என்று தீர்க்கப்படுகிறான்.

8.5 சொறியினால் உண்டாகும் குஷ்டம்

புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் தலையிலாவது தாடியிலாவது ஒரு சொறி உண்டானால், ஆசாரியன் அதை பார்த்து, அவ்விடம் மற்ற தோலை பார்க்கிலும் பள்ளமும் அதிலே மயிர் பொன் நிறமும் மிருதுவுமாயிருக்க கண்டால், ஆசாரியன் அவனை தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது தலையிலும் தாடியிலும் உண்டாகிற சொறி குஷ்டம். (லேவி. 13:29-30)



தலையில் சொறி
itchy on the scalp
(Psoriasis)

தாடியில் சொறி

மனித தோலை அசுத்தமாக்கும் கிருமிகள்



மனித சொறி கிருமி



சிரங்கு கிருமி



மனித தோலை துளைத்து முட்டை இடும் கிருமி

புழுதி கிருமி



முகத்தில் கிருமி
(face mite)



செத்த தோல் செல்களை சாப்பிடும் முக கிருமி

இந்த சொறி கிருமிகளினால் உண்டாவதால் அது பிறருக்கு பரவவும் கூடியது. ஆகவே அது குஷ்டம் என்று தீர்க்கப்படுகிறது.

ஆசாரியன் அந்தசொறி குஷ்டத்தை பார்க்கும்போது, அவ்விடம் மற்ற தோலை பார்க்கிலும் பள்ளமாயிராமலும், அதிலே கறுத்த மயிர் இல்லாமலும் இருக்க கண்டால், ஆசாரியன் அவனை ஏழு நாள் அடைத்து வைத்து, ஏழாம் நாளில் ஆசாரியன் அதை பார்க்க கடவன்; அந்த சொறி இடம் கொள்ளாமலும், அதிலே பொன் நிற மயிர் இல்லாமலும், அவ்விடம் மற்ற தோலை பார்க்கிலும் பள்ளமில்லாமலும் இருந்தால், அந்த சொறியுள்ள இடம் தவிர, மற்ற யாவையும் அவன் சிரைத்து கொள்ளக்கடவன்; பின்பு, ஆசாரியன் இரண்டாம் தரம் அவனை ஏழு நாள் அடைத்து வைத்து, ஏழாம் நாளில் அதை பார்க்கக்கடவன்; சொறி தோலில் இடம் கொள்ளாமலும், அவ்விடம் மற்ற தோலை பார்க்கிலும் பள்ளமில்லாமலும் இருந்தால், ஆசாரியன் அவனை சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் தன் வஸ்திரங்களை தோய்த்த பின் சுத்தமாயிருப்பான். (லேவி. 13:31-34)

ஆசாரியனுடைய பொறுப்பு மிகவும் கனமானது. அவனுடைய தீர்ப்பு தவறானதாகி விட கூடாது என்பதற்காக கர்த்தர் அவனுக்கு துல்லிபமான குறிப்புகளை கொடுக்கிறார்.

இடம் பள்ளமாக இல்லை. ஆனால் கறுத்த மயிரும் இல்லை. அது குஷ்டமா என்று நிர்மாணிக்க முடியவில்லை. இப்படித்தான் அநேக சமயங்களில் மனித வாழ்க்கையும் அனலும் இல்லாமலும் குளிரும் இல்லாமலும் காணப்படுகிறது. ஆனாலும் அன்பின் தேவன் இன்னும் ஒரு தவணை கொடுக்கிறார். ஏழு நாட்களுக்கு பின் சோதித்து பார்த்தபின் அவன் சுத்தமுள்ளவன் என்று ஆசாரியன் தீர்ப்பு இடுகின்றான். என்ன ஒரு சிலாக்கியம்!

அவன் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கப்பட்ட பின், அந்த சொறி தோலில் இடம் கொண்டதானால், ஆசாரியன் அவனை பார்க்க கடவன்; சொறி தோலில் இடம் கொண்டிருந்தால், அப்பொழுது மயிர் பொன் நிறமா அல்லவா என்று ஆசாரியன் விசாரிக்க வேண்டியதில்லை; அவன் தீட்டுள்ளவனே. அவன் பார்வைக்கு அந்த சொறி நீங்கி, அதில் கறுத்த மயிர் முளைத்ததேயாகில், சொறி சொஸ்தமாயிற்று; அவன் சுத்தமுள்ளவன்; ஆசாரியன் அவனை சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன். (லேவி. 13:35-37)

சொறி கிருமிகள் (itch mite) புழுதியிலும் வீட்டில் பல இடங்களிலும் உண்டு. இவை மனித தோலை துளைத்து உள்ளே சென்று முட்டை இட்டு வெளியே வருவதால், அதிக சொறி ஏற்படுகிறது. உடம்பை கழுவி சுத்தமாக வைத்தால் இவற்றை தடுக்கலாம். முகத்தில் வாழும் கிருமிகள், முகத்தில் சுரக்கும் எண்ணெயை சாப்பிடுகின்றன. ஆகவே அவை அங்கு வாழுகின்றன. அந்த கிருமிகள் மிக நுண்ணியவைகள் ஆதலால் நமது கண்களுக்கு தெரிவதில்லை.

ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் அவர்கள் சரீரத்தின் மேல் வெள்ளை புள்ளிகள் உண்டாயிருந்தால், ஆசாரியன் அவனை பார்க்க கடவன்; அவர்கள் சரீரத்திலே மங்கின வெள்ளை புள்ளிகள் இருந்தால், அது தோலில் எழும்புகிற வெள்ளை தேமல்; அவர்கள் சுத்தமுள்ளவர்கள். (லேவி. 13:38-39)

இங்கு கூறப்பட்டுள்ள வெள்ளை தேமல் தோலில் உள்ள நிற அணுக்கள் குறைவதால் ஏற்படுபவை. அது வலியோ, சொறியோ கொடுப்பதில்லை.

ஒருவனுடைய தலை மயிர் உதிர்ந்து, அவன் மொட்டையானாலும், அவன் சுத்தமாயிருக்கிறான். அவனுடைய முன்னந்தலை மயிர் உதிர்ந்தால், அவன் அரை மொட்டையன்; அவனும் சுத்தமாயிருக்கிறான். (லேவி. 13:40-41)

தேமல் எப்படி ஒரு வியாதி இல்லையோ, அது போல் தலைமயிர் உதிர்ந்து மொட்டை ஆகுவதும் ஒரு வியாதி இல்லை.

மொட்டை தலையிலாவது அரை மொட்டை தலையிலாவது சிவப்பு கலந்த வெண்மையான படர் உண்டானால், அது அதில் எழும்புகிற குஷ்டம். ஆசாரியன் அவனை பார்க்க கடவன்; அவனுடைய மொட்டை தலையிலாவது அரைமொட்டை தலையிலாவது, மற்ற அங்கங்களின் மேல் உண்டாகும் குஷ்டத்தை போல், சிவப்பு கலந்த வெண்மையான தடிப்பு இருக்க கண்டால், அவன் குஷ்டரோகி, அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனை தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் வியாதி அவன் தலையிலே இருக்கிறது. (லேவி. 13:42-44)

லேவியராகமம் 13:38-44 வசனங்களில், தலை, தாடி ஆகிய இடங்களில் காணப்படும் சொறி குஷ்டம் உள்ள ஒரு மனிதன் ஆசாரியனிடம் கொண்டு வரப்படுவதை நாம் பார்க்கின்றோம். பாவம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, தலை மட்டும் வந்து விடுகின்றதை இது காட்டுகின்றது. முதலாவது உடலில் குஷ்டம் வந்தது என்று பார்த்தோம். இப்பொழுது தலையிலே குஷ்டம் வந்து விட்டதை பார்க்கின்றோம். உடலில் கண்ட குஷ்டம் ஆதி அன்பை இழந்த நிலையில் மனிதன் வருவதை காட்டுகின்றது. தலையில் கண்ட ரோகம் ஆதியில் கண்ட மேன்மையினை மனிதன் இழந்து விட்ட நிலையை காட்டுகின்றது. சிறியதாக இடம்பெற்ற பாவம் பெரியதாக மாறியது. ஒரு சிறிய தீய எண்ணம் ஒரு பெரிய பாவ செயலுக்கு நேராக வழிநடத்தியும் விடுகின்றது. உணராமல் பாவங்கள் துவங்கப்படுகின்றன. முடிவை கண்ட பின்னர் உள்ளங்கள் நடுங்குகின்றன. எந்த நிலையில் இருந்து தான் விழுந்து விட்டேன் என்பதை அறிந்து பசியுடன் வீடு திரும்பிய இளைய மகனுக்கு விருந்து காத்து கொண்டு இருந்தது. வஸ்திரம் கிழிந்து வந்த அவனுக்கு புத்தாடைகள் போர்த்தப்பட்டது. அனைவராலும் கைவிடப்பட்டு பன்றிகள் நடுவில் ஐக்கியம் கொண்ட அவனுக்கு அரண்மனை ஐக்கியம் காத்துக் கொண்டு இருந்தது. எந்த பாவியானாலும் தள்ளமாட்டேன் என்பதே லேவியராகமம் 13-வது அதிகாரத்தின் செய்தி ஆகும். துரோகம் செய்த போதிலும் நோக்கி பார்த்தால் சுத்தமாக மாறி விடுவாய் என்பதே லேவியராகமம் 14-வது அதிகாரத்தின் செய்தியாகும்.

மிக கடுமையான ரோகத்தினால் பாதிக்கப்பட்ட மனிதனை, லேவி. 13:44-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். சரீரத்தில் காணப்பட்ட ரோகம் படர்ந்து கொண்டே சென்று அவனுடைய தலைக்கு சென்று விட்டது. வியாதி அவனது தலைக்கு வந்து விட்டது என்பதை 44-வது வசனம் கூறுகின்றது. பாவத்தின் விஷம் தலைக்கு ஏறி விட்டது. உள்ளங்காலில் கண்ட வியாதி உச்சந்தலை அடைந்து விட்டது. ஏசாயா 1:6-வது வசனம் கூறுவது போன்று, பாவம் உள்ளங்காலில் துவங்கியது. உச்சந்தலையில் முடிந்தது.

பிசாசு மிக தந்திரமானவன். உள்ளங்கால் வழியாக உச்சந்தலைவரை ஏறிவிடக்கூடியவன். அன்று ஒரு நாள் அழகிய ஏதேன் தோட்டத்தில் மன மகிழ்ச்சியுடன் வாழ்ந்த ஆதி தம்பதிகளிடம் பிசாசு மிக இன்பமாக பேசினான். இதுவரை தனக்கு இனம் அறியாத ஒருவன் இன்று திடீரென்று கண்முன் தோன்றி புது புது விபரங்களை தருகின்றான் என்பதை ஏவாள் அறிந்து கொள்ளவில்லை. அன்னியன் ஒருவன் அதிக அக்கரையுடன் அவளிடம் பேசினான். கள்ளம் இல்லாத அவள், கபடு நிறைந்தவன் தனது கண்முன் நிற்கின்றான் என்பதை உணரவில்லை. தான் அவனிடம் பேசுவதைவிட தனது கணவனை உடனே அழைத்து அறிமுகப்படுத்தி, தான் விலகி கொள்ள வேண்டும் என்பதை ஏவாள் நினைக்கவில்லை. பழத்தை காட்டினான்; அது அவள் கண்ணை கவர்ந்தது. பின்னர் அவளது கரத்தை கவர்ந்தது. தொடர்ந்து அவளது வாழ்க்கையை கவிழ்த்து போட்டது. அற்ப ஆரம்பம், அகோர முடிவு.

உள்ளங்காலில் வியாதி துவங்கியது; உச்சந்தலையில் வியாதி தங்கியது. யோபு என்ற பரிசுத்தவானை இப்படித்தான் பிசாசு தாக்கினான் என்று கூறுகிறது யோபு 2:7-வது வசனம். ''அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியை விட்டு புறப்பட்டு யோபுவின் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் வாதித்தான்'' லேவி. 13:44-வது வசனத்தில் குஷ்டரோகியாகிய அந்த மனிதனின் வியாதி அவன் தலைவரை வந்து விட்டது என்று வாசிக்கின்றோம். உடலின் ரோகம் தலைக்கு ஏறும் பொழுது அவன் தீட்டு உள்ளவன் என்று கருதப்படுகின்றான்.

அந்த வியாதி உண்டாயிருக்கிற குஷ்டரோகி வஸ்திரம் கிழிந்தவனாயும், தன் தலையை மூடாதவனாயும் இருந்து, அவன் தாடியை மூடிக்கொண்டு, ''தீட்டு, தீட்டு'' என்று சத்தமிட வேண்டும். அந்த வியாதி அவனில் இருக்கும் நாள் வரைக்கும் தீட்டுள்ளவனாக எண்ணப்பட கடவன்; அவன் தீட்டுள்ளவனே; ஆகையால், அவன் தனியே குடியிருக்க வேண்டும்; அவன் குடியிருப்பு பாளையத்துக்கு புறம்பே இருக்க கடவது. (லேவி. 13:45-46)

ஐந்து செயல்கள் தீட்டு உள்ளவனின் அன்றாட வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றன என்பதை 45,46-வது வசனங்களில் நாம் பார்க்கின்றோம்: முதலாவது, கிழிந்த வஸ்திரங்களே அவன் உடையாக மாறிற்று. வஸ்திரம் கிழித்து கொள்ளுதல் என்பது துக்கத்தை தெரியப்படுத்துகின்றது. யோசேப்பு இறந்து விட்டான் என்ற பொய்யான தகவல், யாக்கோபை மெய்சிலிர்க்க வைத்தது. யாக்கோபு ''தன் வஸ்திரங்களை கிழித்து தன் அரையிலே இரட்டு கட்டிக்கொண்டு அநேக நாள் தன் குமாரனுக்காக துக்கித்து கொண்டு இருந்தான்'' என்று ஆதியாகமம் 37:34-ல் வாசிக்கின்றோம். மிகுந்த கவலையான மனிதன் செய்யும் செயல், கிழிந்த வஸ்திரங்களை உடுத்தி கொண்டு அலைதல் ஆகும். இரண்டாவதாக, அவன் தன் தலை முடியை விரித்து போடவேண்டும். தனது கண்ணில் பார்க்கும் எதிலும் எவ்வித பிரியமும் தனக்கு இல்லை என்பதற்கு அது அடையாளமாயிற்று. மூன்றாவது தனது தாடியை மூடிக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. அவனது கெம்பீரத்திற்கு ஒரு காரணமாக இருக்கும் தாடியை மூடிக்கொள்ளுதல் தனக்கு எவ்வித கெம்பீரமும் இனிமேல் இல்லை, தான் ஒரு தூசி, எதற்கும் தகுதி அற்றவன் என்று அவன் தன்னை தாழ்மை படுத்துதலை காட்டுகின்றது. நான்காவது தீட்டு, தீட்டு என்று அவன் சத்தமிட்டு கொண்டே இருக்க வேண்டும். அவன் தன்னையே அரோசிப்பதை அது காட்டுகின்றது.

காலையில் கண் விழித்த பின்னர் மாலையில் கண் மூடும் வரை அவன் வாயின் புலம்பல் ஒன்றே ஒன்றுதான். தீட்டு தீட்டு என்று சொல்லிக்கொண்டே இருப்பதுதான். அவன் எவ்வித சுத்தமும் இல்லாதவன். அவன் பூரண அசுத்தன்; அவனுடன் சேரும் எவரையும் அவனது அசுத்தம் பற்றிக்கொள்ளும். எனவே, யாரும் அவனுடன் சேர்ந்து விடக்கூடாது. அவன் மகா பெரிய பாவி. அவனுடன் சேருகிற எவரும் பாவத்திற்கு உட்படுவார்கள். எனவே அவன் பக்கத்தில் எவரும் சென்று விடக்கூடாது. அவன் மகா பெரிய துன்மார்க்கன். ''துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே. தீயோருடைய வழியில் நடவாதே. அதை வெறுத்துவிடு. அதன் வழியாய் போகாதே. அதை விட்டு விலகி கடந்து போ'' என்று நீதிமொழிகள் 4:14,15-வது வசனங்கள் கூறுகின்றன. ஐந்தாவதாக இனிமேல் அவன் பாளயத்திற்கு புறம்பே தனியாக தங்கி இருக்க வேண்டும். அவனுடைய குடியிருப்பு சமுதாயத்திலும் அல்ல, சொந்த குடும்பத்திலும் அல்ல, வெகு தூரத்தில் அமைகின்றது. குடும்பமோ சமூகமோ அவனை சற்றும் விரும்பவில்லை. அவனால் எவருக்கும் எவ்வித உபயோகமும் இல்லை என்ற கோட்டிற்கு வந்து விட்டான். செய்யும் பாவத்தின் முடிவு பாளயத்தில் இருந்தே புறம்பாக்க பட்டவனாக அவனை மாற்றி விட்டது.

''ஆண் பிள்ளையானாலும், பெண் பிள்ளையானாலும் அப்படிப்பட்டவர்களை நீங்கள் விலக்கி, நான் வாசம் பண்ணுகிற தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டுப்படுத்தாத படிக்கு, நீங்கள் அவர்களை பாளயத்திற்கு புறம்பாக்க கடவீர்கள் என்றார்.'' (எண்.5:3) பாளயத்தின் நடுவில் மகா பரிசுத்தர் ஆசரிப்பு கூடாரம் அமைத்து தங்கி இருக்கின்றார். எந்த அசுத்தத்தையும் அவரால் தாங்க முடியாது. எனவே பாளயத்தின் உள்ளே தங்கி இருக்கின்றவர்கள் பழுதற்ற வாழ்க்கை நடத்த வேண்டும். ''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும் உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளயத்திற்கு உள்ளே உலாவி கொண்டிருக்கிறார். ஆகையால் அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தை கண்டு உன்னை விட்டு போகாதபடிக்கு உன் பாளயம் சுத்தமாயிருக்கக்கடவது'' (உபா.23:14). தனியாக குடியிருக்க வேண்டிய ஒரு நிலை அவனுக்கு வந்தது. தனிமையாக குடியிருக்க எந்த மனிதனும் சிருஷ்டிக்கப்படவில்லை. ஒரு சமூகமாக இணைந்து, சேர்ந்து வாழவே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். ஒருவரில் ஒருவர் அன்பு கூர்ந்து, ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஒருமித்து கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவே மனுபுத்திரர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள். ஆனால் பாவம் என்ற ஒன்று, என்று உலகத்தில் பிரவேசித்ததோ, அன்றே மனிதனுக்கும் மனிதனுக்கும் நடுவில் தடுப்புச் சுவர்கள் உருவாகி விட்டன. மனிதன் தங்களை தாங்களே தனிமை படுத்திக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். காயீன், ஆபேல் என்ற இருவரும் இணைந்து வாழவே இல்லை. ஆபேல் பரிசுத்தமாக வாழ தன்னை ஒப்புவித்தான். காயீன் கண் கண்டபடி வாழ தன்னை ஒப்புவித்தான். ஆபிரகாம் ஆண்டவரின் குரல் கேட்டு வாழ தன்னை ஒப்புவித்தான். லோத்து கண்ணிற்கு குளிர்ச்சியான இடங்களுக்கு கால் எடுத்தான். யாக்கோபு இஸ்ரவேல் என்று பெயர் பெற்றான். ஏசாவோ துணிந்து துன்மார்க்கம் செய்தான்.

பாவம் என்பது மனிதனை விட்டு மனிதனை பிரிக்கின்றது. கர்த்தரை விட்டும் மனிதனை பிரிக்கின்றது. பாவம் என் துணை என்றவனுக்கு கர்த்தர் துணையாக போவது இல்லை. அந்த நிலைக்கு ஒரு மனிதன் செல்லும் பொழுது வஸ்திரங்களை கிழித்து வாழும் நிலையும், தலை முடியை விரித்து போடும் நிலையும் அவனுடைய அன்றாட நிகழ்ச்சியாக மாறிவிடும் என்பதையே லேவியராகமம் 13-வது அதிகாரம் உணர்த்தி நம்மை

எச்சரிக்கின்றது. தேவன் கிருபையாக கொடுத்த மகத்துவமான இடங்களை, பாவம் செய்ததினால் அநேகர் இழந்து இருக்கின்றார்கள்.

மோசே, ஆரோன், ஆரோனின் நான்கு பிள்ளைகள் ஆக அந்த ஆறு பேருக்கும் கிடைத்த சிலாக்கியம் உலகில் எவருக்கும் கிடைக்காத சிலாக்கியமாகும். ஆசரிப்பு கூடாரத்தில் அமைந்து இருக்கும் பரிசுத்தரின் அருகில் மிக நெருங்கி சேரவும் அவருக்கு ஆராதனை நடத்தவும் அவர்கள் ஆறு பேரும் அழைக்கப்பட்டார்கள். ஆனால் நாதாப் அபியூவு என்ற இருவரும் தேவ சமூகத்தில் பாவம் செய்தார்கள். அதனால் அவர்களுடைய உயிரையும் ஊழியத்தையும் இழந்தார்கள். இவர்களை பாளயத்திற்கு புறம்பே எடுத்து செல்லுங்கள் என்று மோசே கட்டளையிட்டார். அதே மோசேதான் அவர்கள் இருவரையும் அவர்கள் தகப்பனோடு கூட வரவழைத்தவரும் ஆவார்.

பாவம் செய்யும் பொழுது தேவ சமூகத்தை மனிதன் இழக்கின்றான். தேவ சமூகத்தில் நின்ற லூசிபர் என்ற தேவ தூதன், பெருமை என்ற பாவத்தில் விழுந்த நேரந்தானே தேவ சமூகத்தை விட்டு தள்ளப்பட்டான். பாவம் பிரதான தூதனை தேவ சமூகம் இழக்க செய்தது. பாவங்களின் பிறப்பிடமும், பாவங்களின் இருப்பிடமுமான பிசாசு என்ற பெயரை அவன் எடுத்தான். பாவம் கொடுமையானது; செய்யும் பொழுது இன்பமாக இருந்தாலும் செய்த பின்னர் துன்பமும் துக்கமும் தருகின்றது; வெட்கமும் பயமும் தருகின்றது; தனிமையும் வெறுமையும் தருகின்றது. உன் பாவம் உன்னை தொடர்ந்து பிடிக்கும் என்றும் பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் பரிசுத்த வேதம் கூறுகின்றது.

குஷ்ட ரோகம் கண்ட மனிதன் பாளையத்திற்கு புறம்பே தங்க வேண்டிய நிலையை பெற்றான். பாவ ரோகத்தில் உள்ள மனிதர்கள் கடவுளின் சமூகத்திற்கு புறம்பே தங்க வேண்டிய நிலைக்குள் வருகின்றார்கள். குடும்பமும் விரும்பவில்லை; சமூகமும் ஏற்று கொள்ளவில்லை. அவனை ஏற்று கொள்ள உலகில் எவரும் தயாராக இல்லை. பாவம் அகோரமாகும் பொழுது குடும்பமும் சமூகமும் விலகியே நிற்கின்றது. உயிரோடு இருந்தாலும் உபயோகம் இல்லாதவனாக மாறி விட்டான். சரீரம் இருந்தாலும் சக்தி இல்லாதவனாக மாறி விட்டான். கூடப்பிறந்தவர்கள் இருந்தாலும் ஓர் அனாதையாக மாறி விட்டான். அந்த வியாதி அவனில் இருக்கும் நாள் வரை தீட்டு உள்ளவனாக இருக்கக்கடவன் என்று 46-வது வசனம் கூறுகின்றது.

8.6 வஸ்திரங்களில் வரும் ரோகங்கள்

ஆட்டுமயிர் வஸ்திரத்திலாவது, பஞ்சுநூல் வஸ்திரத்திலாவது, பஞ்சுநூல், அல்லது ஆட்டுமயிரான பாவிலாவது, ஊடையிலாவது, ஒரு தோலிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது குஷ்டதோஷம் தோன்றி, வஸ்திரத்திலாவது, தோலிலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது குஷ்டதோஷம் பச்சையாயாவது சிவப்பாயாவது காணப்பட்டால் அது குஷ்டமாயிருக்கும்; அதை ஆசாரியனுக்கு காண்பிக்க வேண்டும். ஆசாரியன் அதை பார்த்து, ஏழு நாள் அடைத்து வைத்து, ஏழாம் நாளிலே அதை பார்க்க கடவன்; வஸ்திரத்திலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது அது அதிகப்பட்டிருந்தால், அது அரிக்கிற குஷ்டம்; அது தீட்டாயிருக்கும். (லேவி.13:47-51)

தோலினால் செய்யப்பட்ட வஸ்துவில் வரும் குஷ்டம்

பஞ்சு நூலினால் செய்யப்பட்ட உடைகளில் வரும் குஷ்டம்

சரீரத்தில் வந்த குஷ்டத்தை பற்றி கூறிய பின்னர் உடுத்தும் உடைகளில் வரும் குஷ்டம் கூறப்படுகின்றது. லேவியராகமம் 13:47-59-வது வசனங்கள் வரை வஸ்திரங்களிலும் குஷ்டம் வந்தது என்று கூறப்பட்டு உள்ளது. அந்த காலங்களில் குஷ்டம் என்றால் ஒன்றில் இருந்து மற்ற ஒன்றுக்கு பரவும் தன்மை கொண்டது என்பதாகும். வஸ்திரம் என்பது உடலை மூடிக்கொள்ள பயன்படுத்தப்படுகின்றது. உடலில் வந்த குஷ்டத்தை மூடி மறைக்க, பிறர் கண்டு கொள்ளாமல் இருக்க அவன் செய்த முயற்சிகள் கைகூடவில்லை. வியாதியை மறைக்க பயன்படுத்தப்பட்ட தந்திரங்கள் வாய்க்கவில்லை. வியாதி சரீரத்தை அரித்தது. இப்பொழுது சரீரத்தை மூட அவன் செய்த முயற்சியான வஸ்திரங்களையும் அரிக்கின்றது.

பாவங்களை மூடி மறைத்து வாழ முடியாது. ஆனால் அதனை பரிசுத்தராகிய தேவனிடம் தாழ்மையோடும் உள்ளான இருதயத்தோடும் அறிக்கையிட்டு வாழ்ந்து கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. ''நான் அடக்கி வைத்த மட்டும் நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால் என் சாரம் உஷ்ணகால வறட்சி போல வறண்டு போயிற்று, நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களை கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்.'' (சங்.32:3,4,5)

அந்தத் தோஷம் இருக்கிற ஆட்டுமயிரினாலும் பஞ்சுநூலினாலும் செய்த வஸ்திரத்தையும், பாவையும், ஊடையையும், தோலினால் செய்த எந்தவித வஸ்துவையும், சுட்டெரிக்க கடவன். அது அரிக்கிற குஷ்டம். ஆகையால் அக்கினியில் சுட்டெரிக்கப்பட வேண்டும். வஸ்திரத்தின் பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது, அந்த தோஷம் அதிகப்படவில்லை என்று ஆசாரியன் கண்டால், அப்பொழுது ஆசாரியன் அதைக் கழுவச்சொல்லி, இரண்டாந்தரம் ஏழுநாள் அடைத்துவைத்து, அது கழுவப்பட்டபின்பு, அதை பார்க்கக்கடவன்; அந்தத் தோஷம் அதிகப்படாதிருந்தாலும், அது நிறம் மாறாததாயிருந்தால் தீட்டாயிருக்கும்; அக்கினியில் அதை சுட்டெரிக்க வேண்டும்; அது அவ்வஸ்திரத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் உருவ அரிக்கும். (லேவி.13:52-55)

பாவம் எதுவும் அருளுவது இல்லை. பாவம், அரிக்குமே தவிர அருளுவது இல்லை. சரீரமும் குடும்பங்களும் பாவம் என்ற ஒன்றே ஒன்றினால் அரிக்கப்பட்டு கொண்டே இருக்கின்றன. பாதிக்கப்பட்ட வஸ்திரங்கள் அனைத்தும் சுட்டு எரிக்கப்பட வேண்டும் என்று 52-வது வசனம் கூறுகின்றது. மாம்சத்தால் கறைப்பட்ட வஸ்திரங்களை வெறுத்து தள்ள வேண்டும். பாவத்தை மூட எடுக்கும் முயற்சிகள் பலிப்பது இல்லை. எந்த கிரியையினாலும் தேவனுடைய நீதி கிட்டுவது இல்லை என்பதை தெளிவாக தேவன் கூறுகின்றார். செய்த பாவத்தால் மனம் வாதிக்கப்படும் பொழுது மனிதன் தன்னைத்தானே ஆறுதல் படுத்த பற்பல முயற்சிகளை செய்கின்றான். ஆயினும் அவன் கிரியைகளால் அவனது துர்செயல்களை மூட முடியாது என்று வேத புத்தகம் கூறுகின்றது. ''அவைகளின் நெசவுகள் வஸ்திரங்களுக்கு ஏற்றவைகள் அல்ல. தங்கள் கிரியைகளால் தங்களை மூடிக்கொள்ள மாட்டார்கள்'' என்று ஏசாயா 59:6 கூறுகின்றது. மனிதனின் கிரியைகள், பக்திகள், தியாகங்கள் அனைத்தும் பரிசுத்தராகிய தேவனுடைய பார்வையில் ஓர் வேஷமாகவே தெரிகின்றது. பாவ மன்னிப்பு கிரியையில் கிட்டுவது அல்ல; தேவ கிருபையினால் கிடைப்பது ஆகும். மன்னிப்பு என்பது விலைக்கு வாங்கப்படுவது அல்ல; இரண்டு கை ஏந்தி பெற்று கொள்ளுவது ஆகும். பாவம் சரீரத்தை அரிக்கும் பொழுது பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் பெற்ற இயேசு, அனைத்து அரிப்புகளையும் தடுத்து நிறுத்த வல்லவராக இருக்கின்றார். இயேசுவே என்று கூப்பிடும் எவருக்கும் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் எந்த நிமிடமும் உதவி செய்வதற்கு ஆவல் உள்ளவராக இருக்கின்றார். சரீரத்தை மட்டுமல்ல, உடைகளையும், உடைமைகளையும் பாவம் அரித்து விட்டதே என்று ஏங்குகின்றவர்களுக்கு, இழந்த ஆசீர்வாதங்களை அள்ளி கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றார். இயேசுவை அழைக்கும் பொழுது நஷ்டங்கள் லாபம் ஆகும்; கஷ்டங்கள் புறம்பாகும்; மனிதர்கள் வாழ்வார்கள்.

கழுவப் பட்டபின்பு அது குறுகிற்றென்று ஆசாரியன் கண்டானேயாகில் அதை வஸ்திரத்திலாவது, தோலிலாவது, பாவிலாவது, ஊடையிலாவது இராதபடிக்கு எடுத்து போடவேண்டும். அது இன்னும் வஸ்திரத்திலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது காணப்பட்டால், அது படருகிற தோஷம், ஆகையினால் அது உள்ளதை அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும். (லேவி.13:56-57)

வஸ்திரங்களின் நெய்வுகளிலும், அதின் ஊடேயும் இருக்கும் குஷ்டம் என்பது பூஞ்சை (fungus) ஆகும். பூஷணம் (mildew or mold) என்றும் கூறப்படும். இது சிறிய விதைகளால் (spores)பரவும் ஒன்று. வஸ்திரங்களில் இருந்து நீக்குவது மிக கடினம்.



பூஞ்சை
(Mildew)



பூஞ்சையின் சிறுவிதைகள்
(Spores)

வஸ்திரத்தின் பாவாவது, ஊடையாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவாவது கழுவப்பட்ட பின்பு, அந்தத் தோஷம் அதை விட்டு போயிற்றேயானால், இரண்டாம் தரம் கழுவப்பட வேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருக்கும். ஆட்டு மயிராலாகிலும் பஞ்சு நூலாலாகிலும் நெய்த வஸ்திரத்தையாவது, பாவையாவது, ஊடையையாவது, தோலினால் செய்த எந்த விதவஸ்துவையாவது, சுத்தமென்றாவது தீட்டென்றாவது தீர்க்கிறதற்கு அதினுடைய குஷ்டதோஷத்துக்கு அடுத்த பிரமாணம் இதுவே என்றார். (லேவி.13:58-59)

பூஞ்சை, பூஷணம் இவற்றை நீக்க வேண்டும் என்றால் இந்த காலங்களிலும் ஆடைகளில் இருந்து அவற்றை நீக்கி வெயிலில் காய வைக்க வேண்டும். வெயிலில் உள்ள தீவிர ஊதா கதிர்கள் (Ultra Violet Rays) அவற்றை கொன்று விடும். இதனையே ஆசாரியருக்கு கர்த்தர் கட்டளை இடுகிறார். கழுவும்பொழுது அவற்றை காய வைக்கவும் வேண்டும். இருமுறை சுத்தம் செய்கையில் படருவது நீங்கி அது சுத்தமாகும்.

8.7 சுகமடைந்த குஷ்டரோகிக்கு ஆசாரியன் செய்ய வேண்டிய சுத்திகரிப்பு

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளில் அவனுக்கடுத்த பிரமாணம் என்னவென்றால்: அவன் ஆசாரியனிடத்தில் கொண்டுவரப்பட வேண்டும். ஆசாரியன் பாளயத்துக்கு புறம்பே போய்; குஷ்டரோகியின் குஷ்ட வியாதி சொஸ்தமாயிற்று என்று கண்டால், (லேவி. 14:1-3)

கர்த்தர் மோசேயை நோக்கி மட்டும் பேசி கூறிய அதிகாரமாக இந்த அதிகாரம் காணப்படுகின்றது. 'பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி,' என்று முதலாவது வசனம் துவங்குகின்றது. 13-வது அதிகாரத்தில் கண்ட குஷ்டரோகி சுத்தமாகி விட்டான். பாவி நீதிமானாக மாறி விட்டான். சுத்தமான குஷ்டரோகியின் சுத்திகரிப்பு வைபவம் இந்த அதிகாரத்தில் இடம்பெறுகின்றது. குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாள் சிறப்பு மிக்க ஒரு நாளாக கொண்டாடப்படுகின்றது. இதனை 2-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். மிக சிறப்பான அந்த நாளில் துவங்கிய வைபவம், இரண்டு வாரம் வரை நீடிக்கும் நிகழ்ச்சியாக இருப்பதை நாம் அறிகின்றோம். முதலாவது வாரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள், லேவியராகமம் 14:2-9 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன. இரண்டாவது வாரம் நடைபெறும் நிகழ்ச்சிகள், லேவியராகமம் 14:10-20 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன. சுத்தமாக்கப்படும் மனிதன், பொருளாதார வசதி இல்லாதவனாக இருந்தால் அனுசரிக்கப்பட வேண்டிய ஆராதனை முறை, லேவி.14:21-31 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன. 13-வது அதிகாரத்தில் மிக பரிதாபமாக தெரிந்த ஒரு மனிதன், 14-வது அதிகாரத்தில் மிகவும் பரவசமாக காணப்படுகின்றான்.

லேவியராகமம் 13:44,45,46 ஆகிய வசனங்களில் அவனது பாவத்தின் கொடூரத்தை நாம் கண்டோம். வஸ்திரம் கிழிந்தவனாக, அதாவது எப்பொழுதும் அழுது கொண்டு இருக்கிறவனாக அந்த மனிதன் காணப்பட்டான். ஆனால் இந்த அதிகாரத்தில் அவனுக்கு ஒரு புதிய அத்தியாயம் வாழ்வில் திறப்பதை கண்டான். மீட்கப்பட்ட மக்களில் ஒருவனாக இருந்த அவனுக்கு ஒரு வியாதி வந்தது. அந்த வியாதி உள்ளங்காலில் வந்தது. தொடர்ந்து தலை வரை அந்த வியாதி ஏறி விட்டது. அவனது வியாதி தலை வரை ஏறியதால் தரை

அவனது படுக்கையாக மாறியது. ஆயினும் அவன் தேவனை கசக்கவில்லை; தன்னைத்தான் கசந்து கொண்டான். ஆறுதல்படுத்த அவனுக்கு அருகில் யாரும் வரவில்லை. தீட்டு தீட்டு என்று அவன் கத்துவதால் தெரியாமல் அருகில் யாரும் வந்தாலும், தொலைவில் சென்று விடுவார்கள். அருகில் உலகில் எவருமே இல்லாத நேரம் பரலோக பிதாவை நோக்கி அவன் தன் கண்களை ஏறெடுத்தான். கர்த்தாவே, என் அருகில் வர மாட்டீரா? என்று ஜெபிக்க ஆரம்பித்தான். கர்த்தாவே, எனக்கு இரங்கமாட்டீரா? என்பதே இரவும் பகலும் அவனது ஜெபமாக மாறிற்று. அந்த ஜெபத்தில் அவன் சிந்திய கண்ணீர் அவனது உணவாக ஆயிற்று. லேவியராகமம் 13:44-வது வசனத்தில், அவன் தீட்டானவன் என்று தீர்ப்பிட காரணம் வியாதி அவன் தலைக்கு வந்ததே ஆகும். தலைக்கு வியாதி வந்தது: பெருமையே அவனது பெரிய பாவம் என்பதை வியாதி காட்டி விட்டது. இப்பொழுது அவன் கண்ட வியாதி, பெருமையினால் வந்த அவதி, ஏற்பட்ட அவகீர்த்தி அனைத்தும் அவனை பெருமை என்ற சிகரத்தில் இருந்து இறக்கியது. அவன் தன்னை தாழ்த்தினான். பெருமைக்காரன் மிக சிறுமை அடைந்தான். பெருமைப்படுவதற்கு தன்னில் எதுவுமே இல்லை என்ற நிலைக்கு அவன் வந்தான். ''நான்'' என்ற கர்வம் காணாமல் போனது.

சுய அறிவை சார்ந்து வாழ்ந்த அவன் இறுதியில் கண்டது, புண் நிறைந்த சரீரமும், புழுதி நிறைந்த படுக்கையுமே என்று உணர்ந்து விட்டான். தனது சரீரத்தின் பெலன், உடல் கட்டு, சக்தி அனைத்தையும் நடுவாக கொண்டு மிக எடுப்பாக வாழ்ந்தவன், பாவ வலைகளில் சிக்கியதால் பாவம் உடலை அரித்ததை கண்டான். அனைத்து உறவுகளையும் பாவம் முறித்துப் போட்டதை கண்டான். ஊரை விட்டே ஒதுங்கி வாழும் ஒரு நிலையை கண்டான். அந்த நிலையில் அவன் கர்த்தரை நோக்கி பார்த்தான். அனைவராலும் வெறுக்கப்பட்ட அவனில் மூன்று நல்ல செயல்கள் காணப்பட்டன. முதலாவது, அனைவரும் என்னை கைவிட்டாலும் கர்த்தர் என்னை கைவிடவில்லை என்பதை உறுதியாக விசுவாசித்தான். இரண்டாவது, தனக்கு வந்த தாங்கமுடியாத வியாதியினால் பரிசுத்தராகிய தேவனை அவன் கோபித்து கொள்ளவில்லை. மூன்றாவது, கர்த்தரை நோக்கி மனம் உடைந்து ஜெபம் பண்ணினான். சங்கீதம் 44:25,26 ஆகிய வசனங்கள் கூறுவது போல 'என் ஆத்துமா புழுதி மட்டும் தாழ்ந்து இருக்கின்றது. என் வயிறு தரையோடு ஒட்டி இருக்கின்றது. எனக்கு ஒத்தாசை செய்ய எழுந்தருளும், உம்முடைய கிருபையினிமித்தம் என்னை மீட்டருளும்,' என்பதே அவனுடைய ஜெபமாக மாறியது. 'கர்த்தாவே என்னால் எதுவும் செய்யமுடியவில்லை, ஆனால் உம்மால் செய்ய முடியாதது எதுவும் இல்லை. கர்த்தாவே எனக்கு இரங்கும், என்று ஜெபிக்க ஆரம்பித்தான்.' அவனது சூழ்நிலை மிக கொடூரமான ஒன்றாகும். அவனை நேசிக்க யாரும் இல்லை. அவனை விசாரிக்க ஒருவரும் இல்லை. தெரியாமல் யாரும் அருகில் வரவும் முடியாது. இப்பொழுது அவனது ஒரே நம்பிக்கை, பாளயத்தின் நடுவில் இருக்கும் பரிசுத்தராகிய தேவன் மீதும் ஆசரிப்பு கூடார பொறுப்பாளராக இருக்கும் ஆசாரியன் மீதும் மட்டுமே உண்டு. ஆசாரியன் ஒருவன் மட்டுமே அவன் அருகில் வர முடியும்.

நாள் ஒன்று விடிந்தது. ஆசாரியன் புறப்பட்டான். ஆசரிப்பு கூடார ஆராதனையை நடத்துவதற்கு அவன் புறப்படவில்லை. பாளயத்திற்கு புறம்பாக செல்ல அவன் புறப்பட்டான். ஒரு நல்ல செய்தியை கண்ணீரில் வாழும் ஒரு மனிதனுக்கு கூறுவதற்கு புறப்பட்டான். குஷ்டரோகத்தில் இருந்த அவனை நோக்கி ஆசாரியன் புறப்பட்டு வந்தான். பாளையத்திற்கு புறம்பே புறப்பட்டு வந்தான். பாவ ரோகத்தில் இருக்கும் அனைவருக்காகவும் அன்று

ஆசாரியன் புறப்பட்டு வந்தது போல கர்த்தராகிய இயேசு புறப்பட்டு பாளயத்திற்கு வெளியே வந்தார். எபி. 13:12-வது வசனம் இதனை கூறுகின்றது. அப்படியே இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தை பரிசுத்தம் செய்யும்படியாக நகர வாசலுக்கு புறம்பே புறப்பட்டார். தேவ ஊழியக்காரர்கள் புறப்பட்டு செல்லாமல் தேவைகள் சந்திக்கப்பட போவதும் இல்லை. மனிதர்கள் அனைவரும் தங்களுக்கு எந்த உதவியும் எந்த இடத்திலும் வருவதற்கு வழியில்லையே என்று அங்கலாய்த்து கொண்டு இருக்கும் பொழுது, தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார். தேவனுடைய ஒரே பேறான குமாரன், நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரிக்க புறப்பட்டார். பாளயத்திற்கு புறம்பாக வந்தார். குஷ்டரோகியாகிய அந்த மனிதன் எந்த முயற்சியும் செய்யவில்லை. சொந்த முயற்சிகளினால் அவன் சுத்தமாகவில்லை. எந்த வைத்தியரிடமும் அவன் சென்றதாக வேதத்தில் கூறப்படவில்லை. இந்த ரோகங்களை நீக்க வைத்தியமும் இல்லை. வைத்தியரும் இல்லை. 13-வது அதிகாரத்தில் வியாதி வந்ததை நாம் பார்த்தோம். 14-வது அதிகாரத்தில் வியாதி அகன்று போனதை நாம் பார்கின்றோம்.

அவன் சுத்தமானான். எப்படி சுத்தமானான்? 'அது தேவ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாகும்,' என்று பரிசுத்த பவுல் 1தீமோத்தேயு 4:5-வது வசனத்தில் கூறுவது போல அந்த மனிதன் சுத்தமானான். அது அற்புதத்திலும் அற்புதம். தேவனால் செய்யக்கூடாத அற்புதங்கள் உலகத்தில் இல்லை. அவன் ஆத்துமா சுத்தம் ஆயிற்று. அவனது சரீரம் பூரண சுகம் பெற்றது. அவன் ஆவி களிகூறுகின்றது. அனைத்திற்கும் காரணம் அவன் ஜெபத்தை கேட்ட பரிசுத்தராகிய கர்த்தரின் வல்லமையே ஆகும். என் ஜெபத்தை தள்ளாமலும் தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

பாளயத்திற்கு புறம்பாக இருந்த அந்த மனிதனை நோக்கி தேவனுடைய ஊழியக்காரன் புறப்பட்டு வந்தான் என்பதை லேவியராகமம் 14:1-3 வசனங்களிலே நாம் பார்க்கிறோம்.

ஆசாரியன் செய்த சுத்திகரிப்புப் பணிகள்

> ***சுத்திகரிக்கப்பட வேண்டியவனுக்காக, உயிரோடிருக்கும் சுத்தமான இரண்டு குருவிகளையும், கேதுருக் கட்டையையும், சிவப்பு நூலையும், ஈசோப்பையும் வாங்கிவரக் கட்டளையிடக்கடவன். பின்பு, ஆசாரியன் அந்தக் குருவிகளில் ஒன்றை ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்று நீர் மேல் கொல்ல சொல்லி, உயிருள்ள குருவியையும் கேதுருக் கட்டையையும், சிவப்பு நூலையும், ஈசோப்பையும் எடுத்து, இவைகளையும் உயிருள்ள குருவியையும், ஊற்று நீர் மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து, குஷ்டம் நீங்கச் சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச் சுத்தம் பண்ணி, உயிருள்ள குருவியை வெளியிலே விட்டு விடக்கடவன். (லேவி.14:4-7)***

புறப்பட்டு வந்த அந்த ஆசாரியன் செய்தது என்ன என்பதையும் சுத்தமாக்கப்பட்ட அந்த மனிதன் தொடர்ந்து செய்ய வேண்டியது என்ன என்பதையும் நாம் பார்க்க இருக்கின்றோம். முதலாவது புறப்பட்டு வந்த ஆசாரியன் செய்தது என்ன என்பதை நாம் சிந்திப்போம்.

இதுவரை ஆசரிப்பு கூடாரத்தில் சிறப்பான பணிகளை செய்து வந்த ஆசாரியன் இப்பொழுது பாளயத்திற்கு புறம்பே தனிச் சிறப்பு பெற்ற ஒரு பணிவிடையை செய்ய புறப்பட்டு செல்லுகின்றான். பணியை நிறைவேற்ற அவன் எடுத்து சென்றவைகள் என்ன என்று பாருங்கள்! உயிரோடு இருக்கும் இரண்டு குருவிகள், ஒரு கேதுரு கட்டை, சிவப்பு நூல், ஈசோப்பு, மண் பாண்டம், ஊற்று நீர். இதன் விபரத்தை, 4,5-வது வசனங்களில் அறிந்து கொள்ளலாம். அவன் துவங்க இருக்கும் பணி ஒரே ஒரு நாளில் முற்று பெறும் பணி அல்ல; இரண்டு வாரங்கள் எடுக்கப்போகும் பணி ஆகும். 2 முதல் 9 வசனங்களில் அவன் முதலாவது வாரத்தில் நிறைவேற்றும் பணிவிடைகளையும் 10 முதல் 20 வசனங்களில், இரண்டாவது வாரத்தில் அவன் நிறைவேற்றும் பணிகளையும் நாம் பார்க்க இருக்கின்றோம். இந்த இரண்டு வாரங்களில் மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

முதலாவது, குஷ்டரோகியாகிய அந்த மனிதன், பிதாவாகிய தேவனுடன் ஐக்கியம் அடைகின்றான். இரண்டாவது, பரிசுத்த சபையாருடன் இன்னும் ஒரு முறை இணைக்கப்படுகின்றான். மூன்றாவது, தனது சொந்த குடும்பத்துடன் சேர்ந்து கொள்ளுகின்றான். தான் ஒரு உதவாகரை என்று அனைவராலும் உதறி தள்ளப்பட்டதை அவன் கண்டான். ஊரை விட்டே ஓடிப்போ என்று பாளயத்திற்கு புறம்பாக துரத்தப்பட்டதையும் அவன் கண்டான். அப்படி துரத்தப்பட்டவன் இப்பொழுது பட்டணத்திற்குள் பிரவேசம் செய்யப் போகின்றான். காரணம் கர்த்தர் அவனை சுத்தமாக்கி விட்டார். ஆசாரியன் அவனை அழைக்க வந்து விட்டான். பாளயம் விழா கோலம் எடுக்கின்றது. மனந்திரும்புகின்ற ஒரே பாவியினிமித்தம் மனுபுத்திரர் மகிழ்கின்றார்கள்; தேவ தூதர்கள் துதிக்கின்றார்கள்; பரலோகத்தில் பெரிய சந்தோஷம் உண்டாகுகின்றது.

ஆசாரியன் கொண்டு வந்த நிகழ்ச்சி நிரலில் முதலாவது இடம் பெற்றது, செலுத்த வேண்டிய பலிகளே ஆகும். சுத்தமானவனை தேவ சித்தத்திற்கு அர்ப்பணிக்க சுத்தமான இரண்டு குருவிகள் ஆசாரியனிடம் உண்டு. அதில் ஒரு குருவி தெரிந்து எடுக்கப்படுகின்றது. பின்னர் கொல்லப்படுகின்றது. மண்பாண்டத்தில் இருக்கும் ஊற்று நீரில் குருவியின் இரத்தம் கலக்கப்படுகின்றது. பின்னர் ஆசாரியன் கேதுரு கட்டையை கையில் எடுக்கின்றான். அதில் ஈசோப்பை கட்டுகின்றான். கட்டுவதற்கு சிவப்பு நூலை பயன்படுத்துகின்றான். மண்பாண்டத்தில் உள்ள ஊற்று நீர் இரத்தம் கலந்த நீராக மாறிவிட்டது. அதில் ஈசோப்பு நனைக்கப்படுகின்றது. அதனை தொடர்ந்து, உயிருள்ள அடுத்த குருவி எடுக்கப்படுகின்றது. ஊற்று நீர் மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே உயிருள்ள குருவியை நனைத்து, சுத்தமான மனிதன் மீது ஏழு முறை தெளிக்கப்படுகின்றது. அவன் சுத்தமாகின்றான். பின்னர் உயிருள்ள அந்த குருவி பறக்க விடப்படுகின்றது. 4 முதல் 7 வசனங்கள், இதனை ஓர் படம் போல நமக்கு விளக்கிக் காட்டுகின்றன.

கேதுரு மரக்கட்டை:

கேதுரு மரகட்டைகள் மிகுந்த மருத்துவ குணங்கள் கொண்டது. பல நோய்களை போக்க வல்லது. சுத்தமான இந்த குஷ்டரோகியின்மேல் தெளிப்பதற்கு ஆரோன் உபயோகித்த மரம், கேதுரு மர கட்டை என்று நாம் அறிகின்றோம். கேதுரு மர கட்டையை கைப்பிடியாக ஆசாரியன் உபயோகித்தான். கேதுரு மரம் மனித பெருமைகளை காட்டுகின்றது. அனைத்து மனித பெருமைகளும் அனாதி தேவனின் கைப்பிடிக்குள் அடங்கி இருக்கின்றது என்பதை

கேதுரு மரம்



கேதுரு கட்டை

கேதுரு மர இலைகளும் காயும்

அதில் அறிந்து கொள்ளுகின்றோம். வியாதி அவன் தலை ஏறிய போது குஷ்டரோகி பாளயத்தில் இருந்து புறம்பாக்கப்பட்டான். தலைக்கு ஏறிய வியாதி என்பது அவனுக்கு வந்த பெருமை என்று நாம் பார்த்தோம். பெருமை பெரிய இடங்களை இழக்க செய்கின்றது. உயர்ந்த வருங்காலங்களை இழக்க செய்கின்றது. நான் என்ற அகங்காரம் கொண்ட போது பிரதான தூதன் பரலோகத்தில் இருந்து கீழே தள்ளப்பட்டான். நான் கட்டிய பாபிலோன் என்று நேபுகாத்நேச்சார் என்ற அரசன் கூறிய போது அவன் மாட்டை போல புல்லை தின்றான். கேதுரு கட்டை ஆரோனின் கைப்பிடியாக மாறியது. வியாதிப்பட்ட மனிதனின் பெருமை முற்றிலுமாக நீங்கியது. பாவியான அந்த மனிதன் தனது அக்கிரமம் நீங்க முற்றிலும் கழுவப்பட்டான் என்று நாம் பார்க்கின்றோம். அவனது பாவம் அவனது கண்முன் இனி நிற்க போவதும் இல்லை. பரிசுத்தராகிய தேவன் மட்டுமே அவனுக்கு முன்பாக தெரியப்போகின்றார். கண்ணை மூடினாலும், கண்ணை திறந்தாலும் கர்த்தர் ஒருவரே அவன் கண்முன் வரப்போகின்றார்.

ஈசோப்பு, சிவப்பு நூல்:

அநேக மருத்துவ குணங்களைக் கொண்டது ஈசோப்பு. கேதுரு கட்டையால் ஈசோப்பை கட்டுவதற்கு சிவப்பு நூல் ஆசாரியனால் பயன்படுத்தப்படுவதை லேவியராகமம் 14-வது அதிகாரத்தில் நாம் பார்க்கின்றோம். கேதுரு கட்டை, சிகப்பு நூல், ஈசோப்பு ஆகியவைகளை ஆசாரியர் பயன்படுத்துகின்றார். அவை ஒவ்வொன்றிலும் ஆழமான ஆவிக்குரிய அர்த்தங்கள் அடங்கி இருக்கின்றன. சிவப்பு நூல் என்பது இரட்சிப்பை காட்டுகின்றது. ராகாப் என்ற பெண் ஜன்னலில் கட்டி வைத்த சிவப்பு கயிறு, எரிகோ பட்டணம் குடை சரிந்து விழும் பொழுது அவளது உயிரை இரட்சித்தது. (யோசுவா 2:17; 6:25) நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் அப்பொழுது நான் சுத்தமாவேன், என்று சங்கீதம் 51:7-வது வசனத்தில் நாம் பார்ப்பது போல, ஈசோப்பு என்பது சுத்தமாக்கப்படுதலை குறிக்கின்றது. மேலும் ஈசோப்பு நறுமணம் வீசும் தன்மையும் பெற்றது. நறுமணம் வீசும் தன்மை பெற்ற ஈசோப்பு சரீரம் வியாதியினால் துர்மணம் வீசியதை முற்றிலுமாக நீக்கிப்போட்டது என்பதை நாம் பார்க்கின்றோம். அவனுடைய சரீரம், அவனுடைய தோற்றம், அவனது தோல் அனைத்தும் எந்த விதமான வியாதியும் அவனுக்கு இதற்கு முன்பு வந்ததே இல்லை என்பது போல

மாறிவிட்டது. பாவ வாழ்வில் இருந்து ஒரு பாவி இயேசுவின் இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கப்படும் பொழுது, தேவன் அவனை எவ்வித பாவமும் இதற்கு முன்பு செய்யாதவன் போல நடத்துகின்றார். (1யோவா.1:7; ஏசா. 1:18; 43:25; எரே. 31:34)

ஈசோப்பு
(Hyssop)



ஈசோப்பு தோட்டம்

ஈசோப்பு பூவும்
இலைகளும்

வீட்டில் தொங்கவிடப்பட்டிருக்கும்
ஈசோப்பு



ஈசோப்போடு கேதுரு கட்டையில்
சிவப்பு நூலால் கட்டப்பட்ட குருவி

மண்பாண்டம்:

மண்பாண்டம் ஒன்றை ஆசாரியன் கொண்டு வந்தான் என்று நாம் பார்த்தோம். மண்பாண்டம் என்பது மனித வாழ்வை காட்டுகின்றது. மனிதனை உருவாக்குவது கர்த்தரின் கையில் இருக்கிறது. நாம் களிமண்; தேவனே குயவன். (எரே.18:6) ஆசாரியன் மண்பாண்டம் உபயோகித்தான் என்று நாம் பார்க்கும் பொழுது மனித வாழ்வுகள் எவ்வளவு சாதாரணமானவைகள், தற்காலிகமானவைகள் என்பதை அது அறிந்து கொள்ள உதவி செய்கின்றது. இயேசு மானிட உரு எடுப்பதையும் மண்பாண்டம் காட்டுகின்றது. மாசற்ற இரட்சகர் மனித உரு எடுத்து வருவதற்கு மண்பாண்டம் ஓர் முன் அறிகுறியாகிற்று.

ஊற்று நீர்:

மண்பாண்டத்தில் ஊற்று நீர் பிடிக்கப்பட்டது என்பதையும் நாம் பார்த்தோம். ஊற்று நீர் என்று வரும் எபிரெய வார்த்தையின் சரியான பொருள் ஜீவ தண்ணீர் என்பதே ஆகும். ஜீவ தண்ணீர் என்பது பரிசுத்த ஆவியானவரை குறிக்கும் ஒரு சொல் ஆகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடம் விசுவாசம் வைக்கும் எந்த மனிதனின் இருதயத்தில் இருந்தும் பரிசுத்த ஆவியானவர் புரண்டு ஓடுகின்றார் (யோ.7:37-39). மண்பாண்டம் ஜீவ தண்ணீரால் நிரப்பப்படும் பொழுது, மண்பாண்டம் மிக மதிப்பு உள்ளதாக காணப்படுகின்றது. பாவியான மனிதன் பரிசுத்தமாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் பொழுது தேவனுடைய பார்வையிலேயும் மனிதனுடைய பார்வையிலேயும் மிகுந்த கண்ணியம் பெற்றவனாக மாறி விடுகின்றான். பாளயத்திற்கு புறம்பாக அனுப்பப்பட்டவன் பாளயத்திற்கு உள்ளே வலம் வர இருக்கின்றான். காரணம் ஜீவ தண்ணீரால் அவன் கழுவப்பட்டான். மனம் திரும்பும் மனிதன், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் பொழுது, அவன் பெரும் வல்லமை எவராலும் அறிய முடியாது. அவன் மூலம் தேவன் செய்யும் கிரியைகளை எவரும் தடை செய்யவும் முடியாது. மண்பாண்டத்தில் நாம் கண்டது இரத்தமும் தண்ணீருமே ஆகும். மனித உரு எடுத்து இயேசு மனித வர்க்கத்தின் பாவத்திற்காக தன்னையே பலியாக சிலுவையில் ஒப்புவித்த பொழுது உலகம் கண்டது-தண்ணீரும் இரத்தமுமே! அவரது விலாவிலே ஈட்டியால் குத்தினார்கள். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டு வந்தது என்று யோவான் 19:34-ல் நாம் பார்க்கின்றோம்.

பலியான குருவியும் பறக்கவிடப்பட்ட குருவியும்:

கொண்டு வரப்பட்ட இரண்டு குருவிகளில் ஒன்று கொல்லப்பட்டது. அது இயேசுவின் சிலுவை மரணத்தை சுட்டி காட்டுகின்றது. ஆசாரியன் அடுத்த குருவியை எடுக்கின்றான். அந்த குருவி உயிரோடு இருக்கின்றது. உயிரோடு இருக்கும் குருவி கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்தில் தோய்க்கப்படுகின்றது. உயிரோடு இருக்கும் குருவியின் உடல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்தினால் பூசப்படுகின்றது. அதன் பின்னர் நடப்பது என்ன? உயிரோடு இருக்கும் குருவியை ஆசாரியன் பறக்க விடுகின்றான். மேல் நோக்கி செட்டை அடித்து அந்த குருவி பறந்து சென்றது. கொல்லப்பட்ட குருவி இயேசுவின் மரணத்தின் அடையாளமாக மாறியது. பறந்து சென்ற குருவி இயேசுவின் மரணத்தினால் ஒரு பாவி பெரும் விடுதலைக்கும், மறுவாழ்வுக்கும் அடையாளமானது. அது இயேசுவின் உயிர்தெழுதலுக்கும் ஓர் அடையாளமாக மாறி விட்டது. உயிர்த்து எழுந்த கிறிஸ்து பரலோகத்திற்கு சென்ற பின்னர் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். சிலுவையில் கண்ட ஐந்து காயங்கள் இயேசுவின் சரீரத்தில் இருந்தன. அவரது காயங்களை பார்க்கும் பொழுது தேவ குமாரனாக பரலோகத்தில் இருக்கும் இயேசு மனுஷ குமாரனாகவும் காணப்படுகின்றார். மனுபுத்திரரில் ஒரு பிரதிநிதியாக இயேசு பரலோகத்தில் இருக்கின்றார். அதற்கு அடையாளம் அவர் மனிதருக்காக கண்ட காயங்களாகும். பூலோகத்திலே மனுபுத்திரர்களால் காயங்கள் பெற்ற இயேசு அந்த காயத்துடன் உயிர்த்து எழுந்தார். பரலோகத்திற்கு ஒரு நாள் விசுவாசிகளாக நாம் செல்லும் பொழுது பரலோகத்தில் நம்மை அதிகமாக வசீகரிப்பது இயேசுவின் காயங்களைத் தவிர வேறு எதுவும் இல்லை.

குஷ்டரோகி சுத்தமானான். பாவி பரிசுத்தவானாக மாறி விட்டான். இப்பொழுது அவன் சுத்தமான ஒரு மனிதன். அவன் ஒரு தீட்டு உள்ள மனிதன் அல்ல! தீட்டு தீட்டு என்று இனி அவன் கத்த வேண்டிய அவசியமும் இல்லை. அவனுக்கு ஓர் பரிசுத்தம் கிடைத்தது. அது

தேவனால் கிடைத்தது. அவனுக்கு ஓர் அற்புத சுகம் கிடைத்தது. அது தேவனால் கிடைத்தது. அந்த மனிதனின் பாவம், அந்த மனிதனின் வியாதி, அவனுடைய துன்பம், அவனுடைய துக்கம், அவனுடைய கண்ணீர் அனைத்தையும் பறந்து சென்ற குருவி தூக்கிக் கொண்டு போய் விட்டது. இயேசுவை நோக்கி கெஞ்சும், இயேசுவை நோக்கி கதறும் ஒவ்வொரு மனிதனுடைய துக்கமும் ஒவ்வொரு மனிதனுடைய துன்பமும் கண்ணீரும் கவலைகளும் உயிர்தெழுந்த இயேசுவின் வல்லமையினால் இன்றும் தூக்கி செல்லப்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

8.8 சுத்தமானவன் செய்ய வேண்டிய நன்றி கடன்

லேவியராகமம் 14:4-7 வசனங்களில் சுத்தமான மனிதன் பாளயத்தில் திரும்பவும் பிரவேசிக்க ஆசாரியன் செய்த சேவைகள் என்ன என்பதை பார்த்தோம். இனி லேவி.14:8-32 வசனங்களில் சுத்தமான மனிதன் செய்ய வேண்டியவைகள் என்ன என்பதை பார்க்க இருக்கின்றோம்.

> ***சுத்திகரிப்படுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் மயிர் முழுவதையும் சிரைத்து, தான் சுத்தமாகும்படி ஜலத்தில் ஸ்நானம் பண்ணி, பின்பு பாளயத்தில் பிரவேசித்து, தன் கூடாரத்துக்கு புறம்பே ஏழு நாள் தங்கி, ஏழாம் நாளிலே தன் தலையையும் தாடியையும் புருவங்களையும் தன்னுடைய மயிர் முழுவதையும் சிரைத்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம் பண்ண வேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பான். (லேவி. 14:8-9)***

சுத்தம் கிடைப்பதற்கு முன்னர் அவன் ஒரு பெரிய அவமானத்திற்கு நடுவிலே வாழ்ந்து வந்தான். இப்பொழுது அவன் சுத்தமாக்கப்பட்டு விட்டான். இனிமேல் பெற்ற சுத்தம் காக்கப்படாவிட்டால் அவனுக்கு காத்து இருப்பது ஒரு பெரிய இழிவே ஆகும். கிருபையாக அவனுக்கு கிடைத்த அற்புத சுகத்தை அவன் காத்து கொள்ள மூன்று நிலைகளை அவன் கடந்து செல்ல வேண்டும். முதலாவது நிலை, பாளயத்திற்குள் பிரவேசிக்க தன்னை தகுதி படுத்தும் நிலை ஆகும். பாளயத்திற்குள் அவன் பிரவேசிப்பதற்கு அவனை தகுதிப்படுத்த ஆசாரியன் அவனுக்கு மூன்று காரியங்கள் செய்கின்றான். அவனுடைய உடைகள் சுத்தமாக்கப்படுகின்றன. உடல் முழுவதும் சவரம் செய்யப்படுகின்றது. ஜலத்தில் ஸ்நானம் செய்கின்றான். இந்த மூன்றும் அவனுடைய முதலாவது நிலையில் இடம் பெறுகின்றது. 8-வது வசனம் அதனை பற்றி விரிவாக கூறுகின்றது. மனிதனின் சுய பிரயாசம், சுய முயற்சி, சுய பக்தி எல்லாம் கந்தை போன்றது. இயேசுவின் இரத்தத்தில் கழுவப்படும் அனுபவமே மனிதனுக்கு நீதியானது என்பதை வஸ்திரம் தோய்க்கப்பட்டு சுத்தமாக்கப்படுவது வெளிப்படுத்துகின்றது. பூலோகத்தில் நீதியின் வஸ்திரம் தரிக்காமல் பரலோகத்தில் வெள்ளை அங்கிகள் கிடைப்பதும் இல்லை. முடி முழுவதும் சவரம் செய்யப்படுதல் அவனது தற்பெருமை, சுய கௌவரம் அனைத்தும் அகன்று அவனது ஆத்துமா தாழ்மைப்படுகின்றது என்பதை காட்டுகின்றது. ஜலத்தில் சுத்தமாக்கப்படுதல் என்பது பரிசுத்த ஆவியானரால் முற்றிலுமாக கழுவப்படுதலை குறிக்கின்றது. உள்ளங்காலில் துவங்கிய பாவம் உச்சந்தலை வந்தது என்று பார்த்தோம். இப்பொழுதோ முழு சரீரமும் சுத்தமாகி விட்டது. இதற்கு காரணம் ஜலத்தினால் அவன் உடல் முழுவதும் சுத்தமாக்கப்பட்டது. இங்கு மிக முக்கியமான நிகழ்ச்சி இடம்பெற இருக்கின்றது. அவன் பாளயத்திற்குள் திரும்ப பிரவேசிக்க போகின்றான்!

அவன் மிக விரும்பிய மூன்று எதிர்பார்ப்புகள் நிறைவேறுகின்றன. அவன் கர்த்தரை நோக்கி ஜெபித்த பொழுது மூன்று குறிப்பிட்ட எதிர்பார்ப்புகளை வைத்து அவன் ஜெபித்தான். அவனது முதலாவது எதிர்பார்ப்பு, இந்த தண்டனை என்னை விட்டு நீங்காதா? என்பது ஆகும். தண்டனை நீங்கியது. இரண்டாவது எதிர்பார்ப்பு, கர்த்தரும் சபையாரும் என்னை மன்னிக்க மாட்டார்களா? என்பது. கர்த்தரும் சபையாரும் அவனை மன்னித்து விட்டார்கள். மூன்றாவது எதிர்பார்ப்பு, ஆண்டவரின் அன்பும் அனைவரின் அன்பும் இன்னும் ஒரு முறை எனக்கு திரும்பவும் கிட்டாதா? என்பது. இப்பொழுது ஆண்டவரின் அன்பும் அனைவரின் அன்பும் அவனுக்கு திரும்ப கிட்டிவிட்டது. ''அப்படிப்பட்டவனுக்கு அநேகரால் உண்டான இந்த தண்டனையே போதும். ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்து போகாதபடிக்கு நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்ய வேண்டும். அந்தபடி உங்கள் அன்பை அவனுக்கு காண்பிக்கும்படி உங்களை வேண்டி கொள்ளுகின்றேன்'' (2 கொரி. 2:6-8) என்று பரி. பவுல் எழுதுகின்றார். கிருபையாக கிடைத்த சுகத்தை காத்துக் கொள்ள அவன் கடந்து சென்ற முதல் நிலை பாளயத்திற்குள் பிரவேசிப்பது ஆகும். அவன் பாளயத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை பெற்றான். ஆனால் தனது சொந்த கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இன்னும் பெறவில்லை. பரிசுத்த ஸ்தலம் போகாமல் வசிக்கும் ஸ்தலம் பிரவேசிக்க முடியாது.

இதுவரை பாளயத்திற்கு புறம்பாக இருந்தவன், இப்பொழுது தனது சொந்த கூடாரத்திற்கு புறம்பாக தங்குகின்றான். அதற்கு ஒரு காரணம் உண்டு. அவன் இரண்டாவது நிலையை கடந்து செல்ல வேண்டும். இரண்டாவது நிலையாக பாளயத்திற்குள் பிரவேசித்தவன் தேவனின் வாசஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அதற்கு பின்னர்தான் தனது சொந்த கூடாரத்திற்குள் அவன் பிரவேசிக்க முடியும். பாளயத்திற்குள் பிரவேசித்த நாளிலிருந்து ஏழு நாட்கள் சென்ற பின்னர், எட்டாவது நாளில் தேவனின் வாசஸ்தலம் அவன் பிரவேசிக்க வேண்டும். பிறந்த ஆண் பிள்ளை எட்டாவது நாளில் விருத்த சேதனம் செய்யப்படுவது போல அவனும் சுத்தமான எட்டாவது நாளில் பரிசுத்தரின் வாசஸ்தலம் பிரவேசிக்க வேண்டும், என்பதை இதில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். எட்டாவது நாளில் தேவ வாசஸ்தலம் செல்ல ஏழாவது நாளில் ஆயத்தமாகிவிட வேண்டும். இன்னும் ஒரு முறை முன் செய்தபடி வஸ்திரங்களை அதற்கு சுத்தப்படுத்த வேண்டும். சவரம் செய்து கொள்ள வேண்டும். ஸ்நானம் பண்ண வேண்டும். இவை அனைத்தையும் ஏழாவது நாளில் முடித்து எட்டாவது நாளில் ஆசரிப்பு கூடாரம் செல்ல தகுந்த ஆயத்தத்தோடு காத்து இருக்க வேண்டும். இதனை 9-வது வசனத்தில் பார்க்கின்றோம். எட்டாவது நாளில் இடம் பெறும் நிகழ்ச்சி 10-வது வசனத்தில் துவங்குகின்றது.

எட்டாம் நாளிலே அவன் பழுதற்ற இரண்டு ஆட்டு குட்டிகளையும், ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண் ஆட்டு குட்டியையும், போஜனபலிக்காக எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மெல்லிய மாவையும், ஆழாக்கு எண்ணெயையும் கொண்டுவரக் கடவன். சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படும் மனிதனையும் அவ்வஸ்துக்களையும் ஆசரிப்பு கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தக்கடவன். பின்பு, ஆசாரியன் ஒரு ஆட்டு குட்டியைப் பிடித்து, அதையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் குற்ற நிவாரண பலியாக கொண்டு வந்து, கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக

அசைவாட்டி, பாவ நிவாரண பலியும் சர்வாங்க தகன பலியும் இடும் பரிசுத்த ஸ்தலத்திலே அந்த ஆட்டு குட்டியைக் கொல்லக்கடவன்; குற்ற நிவாரண பலி பாவ நிவாரண பலியைப் போல ஆசாரியனுக்கு உரியது; அது மகா பரிசுத்தமானது. அந்த குற்ற நிவாரண பலியின் இரத்தத்தில் ஆசாரியன் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலது காதின் மடலிலும், அவன் வலது கையின் பெரு விரலிலும், வலது காலின் பெரு விரலிலும் பூசக்கடவன். பின்பு, ஆசாரியன் அந்த ஆழாக்கு எண்ணெயிலே கொஞ்சம் தன் இடது கையில் வார்த்து, தன் இடது கையிலுள்ள எண்ணெயில் தன் வலது கையின் விரலைத் தோய்த்து, தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் தெளித்து, தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயிலே கொஞ்சம் எடுத்து சுத்திகரிக்கப்படுகிறவன் வலது காதின் மடலிலும், அவன் வலது கையின் பெரு விரலிலும், வலது காலின் பெரு விரலிலும், முந்தப் பூசியிருக்கிற குற்ற நிவாரண பலியினுடைய இரத்தத்தின் மேல் பூசி, தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையிலே வார்த்து, கர்த்தருடைய சந்நிதியில் அவனுக்காக பாவ நிவிர்த்தி செய்யக்கடவன். ஆசாரியன் பாவ நிவாரண பலியையும் செலுத்தி, சுத்திகரிக்கப்படுகிறவனின் தீட்டு நீங்க, அவனுக்கு பாவநிவிர்த்தி செய்து, பின்பு சர்வாங்க தகனபலியைக் கொன்று, சர்வாங்க தகனபலியையும் போஜன பலியையும் பலிபீடத்தின்மேல் வைத்து, அவனுக்காக பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவன் சுத்தமாயிருப்பான். (லேவி. 14:10-20)

முழு வெற்றியுள்ள வாழ்க்கை நடத்த முழுமையாக தேவ சத்தம் கேட்க வேண்டும். அதற்கு செவிகள் திறக்கப்பட்டன; கேட்டமைக்கு முழுமையாக கீழ்படிவேன் என்பதற்கு இசைய வலது கை பெருவிரல் இரத்த அடையாளம் கொண்டது. கெட்ட எண்ணங்கள் வீணான பேச்சுக்கள், செயல்கள் எதற்கும் இடம் கொடுக்காமல் வாழ பரிசுத்தரின் வேலைகளில் இனிமேல் நான் சுறுசுறுப்பாக இயங்கி கொண்டே இருப்பேன் என்பதற்கு ஓர் அடையாளமாக அவனது வலது கால் பெருவிரலில் இரத்தம் வைக்கப்பட்டது. தனது அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாக பாவத்திற்கு ஒப்புக்கொடுத்த நாட்கள் முடிந்து போனது.

லேவியராகமம் 14:15-18 வசனங்களில் என் தலையை எண்ணையால் அபிஷேகம் செய்கிறீர் என்று அவன் ஸ்தோத்திரம் செய்யும் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. காதிலும், கை விரலிலும் கால் விரலிலும் முதலாவது இரத்தம் வைக்கப்பட்ட இடம் எதுவோ அதே இடத்தில் இப்பொழுது எண்ணையும் வைக்கப்படுகின்றது.

இரத்தம் பாவ மன்னிப்பை அவனுக்கு காட்டியது. எண்ணை பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை காட்டியது. பாவத்தில் இருந்து இரட்சிக்கப்பட்ட அவன், பரிசுத்த ஆவியானவரால் முற்றிலுமாக அபிஷேகம் செய்யப்படவில்லை என்றால், பழைய பாவங்கள் திரும்ப அழைக்கும் பொழுது எளிதில் விழுந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அவனில் நீதி ஓங்கவும் அவனால் அக்கிரமம் ஒதுக்கப்படவும் அபிஷேகம் அவசியப்படுகின்றது. ''நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர், ஆதலால் தேவனே உம்முடைய தேவன் உமது

தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்'' என்று சங்கீதம் 45:7-வது வசனம் கூறுகிறது. வியாதி தலைக்கு வந்த காரணத்தினால் பாளயத்தை விட்டு வெளியே துரத்தப்பட்டவனுக்கு இப்பொழுது தலையில் எண்ணை அபிஷேகம் நடைபெறுகின்றது. அந்த அபிஷேகம் அவனை மூன்றாவது நிலைக்கு வழி நடத்தி விட்டது. அவன் இனி திரும்பி தன் வீட்டிற்கு போகலாம், சாப்பிடலாம், சந்தோஷமாக இருக்கலாம்: அவன் கிரியைகளில் தேவ ஆசீர்வாதம் கிடைக்கப் போகின்றது.

அவன் இம்மாத்திரம் செய்யத் திராணியற்ற தரித்திரனாய் இருந்தால், அவன் தன் பாவ நிவிர்த்திக்கென்று அசைவாட்டும் குற்ற நிவாரண பலியாக ஒரு ஆட்டு குட்டியையும், போஜன பலிக்கு எண்ணெயில் பிசைந்த ஒரு மரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கையும், ஆழாக்கு எண்ணெயையும், தன் திராணிக்கு தக்கபடி இரண்டு காட்டு புறா களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்று பாவ நிவாரண பலியாகவும், மற்றொன்று சர்வாங்க தகன பலியாகவும் செலுத்தும்படி வாங்கி, தான் சுத்திகரிக்கப்படும்படி எட்டாம் நாளில் ஆசரிப்பு கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் ஆசாரியனிடத்துக்கு கொண்டு வருவானாக. (லேவி 14:21-23)

லேவியராகமம் 14:21-32 வசனங்களில், பலியிட ஏற்ற மிருகங்கள் பெற முடியாதவன் பறவைகளை கொண்டு வரவேண்டும் என்றும், ஆனால் 25-வது வசனத்தில் குற்ற நிவாரண பலிக்கு மட்டும் ஆட்டுக்குட்டி அதிக அவசியம் என்றும் நாம் பார்க்கின்றோம். அனைவராலும் புறக்கணிக்கப்பட்டவன், அனைவராலும் ஏற்று கொள்ளப்பட்டான், அது முதல் நிலை. பின்னர் பலிகள் அனைத்தும் செலுத்தி பரிசுத்த தேவனால் ஏற்று கொள்ளப்பட்டான், அது இரண்டாவது நிலை. தொடர்ந்து மூன்றாவது நிலை இடம் பெற்றது. செய்த பாவத்தினால் மனைவி பிள்ளைகளை விட்டு தூரமாய் சென்றுவிட்டவன் இனி அவர்களுடன் சேர்ந்து மகிழ வீட்டிற்கு சென்றான்.

கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய ஐந்து பலிகளில் நான்கு பலிகள் அவன் செலுத்த வேண்டும். அந்த நான்கு பலிகளும் கட்டாய பலிகள் ஆகும். முதலாவது பலி தகன பலி என்பது. இதனை அவன் எப்படி செலுத்த வேண்டும் என்பதின் விபரத்தை லேவியராகமம் முதலாவது அதிகாரத்தில் பார்த்தோம். இரண்டாவது பலி, போஜன பலி என்பது. அதன் விபரம் லேவியராகமம் இரண்டாவது அதிகாரத்தில் சொல்லப்பட்டது. மூன்றாவது பலி, பாவ நிவாரணபலி. அதை நிறைவேற்ற வேண்டிய முறை நான்காவது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டது. நான்காவது பலி, குற்ற நிவாரண பலி என்பது ஆகும். இதனை பற்றி ஐந்தாவது அதிகாரம் கூறுகின்றது.

குற்ற நிவாரண பலி தவிர மற்ற பலிகளில், வசதி குறைவானவர்கள் காட்டு பறவைகளை கூட பலியாக செலுத்தலாம். ஆனால் குற்ற நிவாரண பலியில் மட்டும் ஆட்டு குட்டியை தவிர வேறு எதுவும் மாற்று பலியாக செலுத்த முடியாது. தேவன் தங்கும் ஆசரிப்பு கூடாரம் அவனால் எவ்வித அசுசியும் அடைந்து விடாதபடிக்கு பாவ நிவாரண பலி செலுத்தப்படுகின்றது. தான் தேவனுடன் பூரணமாக ஒப்புரவாகி விட்டேன் என்பதை தெரிவிக்கும் வகையில் தகன பலி செலுத்தப்படுகின்றது. போஜன பலி, பரிசுத்தராகிய தேவனுடன் பாவியாகிய நான் ஐக்கியமாகி விட்டேன். இனிமேலும் தேவனோடு கூட

என்னுடைய ஐக்கியத்தை நான் காத்துக் கொள்ளுவேன். இனிமேல் ஒரு நாளும் நான் பின் வாங்க மாட்டேன் என்பதை காட்டி விட்டது.

அப்பொழுது ஆசாரியன் குற்ற நிவாரண பலிக்குரிய ஆட்டு குட்டியையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் வாங்கி, கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் போஜன பலியாக அசைவாட்டி, குற்ற நிவாரண பலிக்கான அந்த ஆட்டு குட்டியைக் கொன்று, குற்ற நிவாரண பலியின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலது காதின் மடலிலும், அவன் வலது கையின் பெரு விரலிலும், வலது காலின் பெரு விரலிலும் பூசி, அந்த எண்ணெயிலே கொஞ்சம் தன் இடது கையில் வார்த்து, தன் இடது கையிலுள்ள எண்ணெயிலே தன் வலது விரலைத் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில் ஏழு தரம் தெளித்து, தன் உள்ளங்கையில் இருக்கிற எண்ணெயில் கொஞ்சம் எடுத்து சுத்திகரிக்கப்படுகிறவன் வலது காதின் மடலிலும், அவன் வலது கையின் பெரு விரலிலும், வலது காலின் பெரு விரலிலும் குற்ற நிவாரண பலியின் இரத்தம் பூசியிருக்கிற இடத்தின் மேல் பூசி, தன் உள்ளங்கையில் இருக்கிற மற்ற எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையின் மேல் அவனுக்காக கர்த்தருடைய சந்நிதியில் பாவ நிவர்த்தி செய்யும்படி தடவி, பின்பு, அவன் தன் திராணிக்கும் தகுதிக்கும் தக்கதாய்க் காட்டு புறாக்களையாவது புறா குஞ்சுகளையாவது கொண்டு வந்து, அவைகளில் ஒன்றை பாவ நிவாரண பலியும், மற்றொன்றை சர்வாங்க தகன பலியுமாக்கி, போஜன பலியோடே கூட செலுத்தி, இப்படியே ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிறவனுக்காக, கர்த்தருடைய சந்நிதியில் பாவ நிவர்த்தி செய்யக்கடவன். தன் சுத்திகரிப்புக்கு வேண்டியவைகளைச் சம்பாதிக்கக் கூடாத குஷ்டரோகியைக் குறித்த பிரமாணம் இதுவே என்றார். (லேவி 14:24-32)

லேவியராகமம் 5-வது அதிகாரம் 15-வது வசனம் கூறுவது போல ஒருவன் கர்த்தருக்கு உரிய பரிசுத்தமானவைகளில் செய்த குற்றத்திற்காக பலி செலுத்தப்படுகின்றது. தேவனுக்கும் தேவ ஊழியத்தை செய்யும் தேவ ஊழியக்காரர்களுக்கும் எதிராக பேசும் பொழுதும், செயல்படும் பொழுதும் குஷ்டம் சரீரத்தை தாக்கி உள்ளது என்பதை எண்ணாகமம் 12-வது அதிகாரத்திலும் 2 இராஜாக்கள் 5-வது அதிகாரத்திலும் 2 நாளாகமம் 26-ம் அதிகாரத்திலும் நாம் பார்க்கலாம். எனவே தனக்கு வந்த குஷ்டம் ஒருவேளை தேவனுடைய வாசஸ்தலத்திற்கு எதிராகவோ, தேவனுடைய வாசஸ்தலத்தில் ஊழியம் செய்யும் ஊழியக்காரர்களுக்கு எதிராகவோ, அறிந்தோ அறியாமலோ தான் செய்த தவறினால் வந்து இருக்கலாம் என்று குற்ற நிவாரண பலியை அவன் செலுத்துகின்றான். கர்த்தருக்கு பரிசுத்தமானவைகளில் ஒருவன் குற்றம் செய்யும் பொழுது குற்ற நிவாரண பலி செலுத்தப்பட வேண்டும் என்பது சட்டமாகும்.

அவன் பாளையத்திற்கு புறம்பாக்கப்பட்ட நாளில் இருந்து மறுபடி பிரவேசித்த நாள் வரைக்கும் செலுத்தாமல் விட்டுப்போன தசமபாக காணிக்கைகளையும் முதற்பலனான காணிக்கைகளையும் மொத்தம் எவ்வளவு என்று கணக்கு இட்டு ஒரு பாக்கியும் இல்லாமல் ஆசாரியனிடம் அவன் செலுத்த வேண்டும் என்பதையும் குற்ற நிவாரண பலி காட்டுகின்றது.

இவ்விதமாக அவன் பரிசுத்த சபையில் ஒரு முழு உறுப்பினராக மாறி விடுகின்றான். இனி அவன் பின் வாங்க கூடாது. பரிசுத்த சபையில் பரிசுத்தமாக்கப்பட்டு உறுப்பினராக மாறி விட்டான்.

அவனை பின் வாங்க செய்ய அவனுக்கு எதிராக இரண்டு முக்கிய தடைகள் வர இருக்கின்றது. முதலாவது தடை, சோதனைகள் ஆகும். பழைய பாவத்தின் ஆசைகள் மறுபடியும் மறுபடியும் அவனுடைய நினைவிற்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அவனது முதல் தடை அதுவே ஆகும். இதில் அவன் பரிபூரண வெற்றி பெற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவது தடை, பரிசுத்தம், உண்மை, நீதி என்ற பாதைக்கு வந்த அவனுக்கு எதிராக, பரிசுத்தம், உண்மை, நீதி என்பதை ஏற்றுக்கொள்ளாத மற்றவர்களிடம் இருந்து அவனுக்கு உபத்திரவங்கள் வருவது நிச்சயம். அதிலும் அவன் வெற்றிபெற வேண்டும். எனவே சகல பலிகளையும் நேர்த்தியாக செய்து முடித்த அவன் இனி தன்னை பூரணமாக தத்தம் செய்து விட்டான். இதற்கு ஆதாரமாக இடம்பெறும் நிகழ்ச்சிகளை 14-வது வசனத்தில் நாம் பார்க்கலாம்.

8.9 வீட்டில் வரும் குஷ்ட தோஷ சுத்திகரிப்பு

பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: நான் உங்களுக்கு காணியாட்சியாக கொடுக்கும் கானான் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்தபின்பு, உங்கள் காணியாட்சியான தேசத்தில் ஒரு வீட்டிலே குஷ்டதோஷத்தை நான் வரப்பண்ணினால், அந்த வீட்டிற்கு உடையவன் வந்து, வீட்டிலே தோஷம் வந்திருக்கிறதாக தோன்றுகிறது என்று ஆசாரியனுக்கு அறிவிக்கக்கடவன். அப்பொழுது வீட்டிலுள்ள யாவும் தீட்டுப்படாதபடிக்கு, ஆசாரியன் அந்த தோஷத்தை பார்க்க போகும்முன்னே வீட்டை ஒழித்துவைக்கும்படி சொல்லி, பின்பு வீட்டை பார்க்கும்படி போய், (லேவி 14:33-36)

தொடர்ந்து தேவன் மோசே ஆரோன் இருவருக்கும் சேர்த்து கூறுகின்றார். லேவியராகமம் 14:1-32 வசனங்கள் முதல் பகுதி என்று அமைகின்றது. 33-57 வசனங்கள் அந்த அதிகாரத்தின் இரண்டாவது பகுதியாக அமைகின்றது. ஆசாரியன் இரண்டு பகுதிகளிலும் இரண்டு விதமான ஊழியம் செய்வதை நாம் பார்க்கின்றோம். முதலாவது பகுதியில் பாளயத்திற்கு வெளியே ஆசாரியன் சென்றான். பாவமாகிய குஷ்டத்தில் இருந்த ஒரு தனி மனிதனை ஆசாரியன் சந்தித்தான். அது அவன் செய்த தனித்தாள் ஊழியம் என்பது ஆகும்.

இரண்டாவது பகுதியில் ஒரு வீட்டில் குஷ்டம் கண்டதாக ஆசாரியனுக்கு அறிவிக்கப்பட்டது. உடனே அவன் அந்த வீட்டில் வாழ்கிறவர்களை சந்திக்க புறப்பட்டு சென்றான். அது ஆசாரியன் செய்த வீடு சந்திப்பு என்ற ஊழியம் ஆகும். ஆசாரியன் ஆராதனையை நடத்துகிறவனாக மட்டும் அல்லாமல் தனித்தாள் ஊழியம் செய்கிறவனாகவும், சபை மக்களின் வீட்டை சந்திக்கிறவனாகவும் காணப்படுகின்றான். விசேஷமாக 33 முதல் 57 வசனங்களில் ஒரு ஆவிக்குரிய ஆலோசகன் போன்று ஆசாரியன் செயல்படுகின்றான். பாளயத்திற்கு வெளியே இருந்தவன் சுத்தமாகிவிட்டான். தன் சொந்த மக்களுடன் திரும்பவும் இணைந்து கொண்டான். அவனுடைய வீடு பிரகாசமாக காணப்படுகின்றது. ஆசீர்வாதமாக தெரிகின்றது. ஆனாலும் அவனுடைய வீட்டிற்குள் எந்த

நேரத்திலும் பாவம் பிரவேசித்துவிடலாம் என்பதை இந்த பகுதியில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். ''துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கின்றது. நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்.'' (நீதி.3:33)

அந்த தோஷம் இருக்கிற இடத்தை பார்க்கக்கடவன்; அப்பொழுது வீட்டு சுவர்களிலே கொஞ்சம் பச்சையும் கொஞ்சம் சிவப்புமான குழி விழுந்திருந்து, அவைகள் மற்ற சுவரை பார்க்கிலும் பள்ளமாயிருக்க கண்டால், (லேவி. 14:37)

சுவர்களில் வரும் தோஷம் பூஞ்சை, பூஷணத்தினால் வருவதே ஆகும். வெதுவெதுப்பும், ஈரமும், காற்றோட்டம் இல்லாமலும் இருப்பதே இவை வளர காரணம். இந்த தோஷமும் காற்றினால் பரவக்கூடிய சிறு விதைகளால் மற்ற இடங்களுக்கும் பரவும். இந்த சிறிய விதைகள் கொஞ்சம் பச்சையும் கொஞ்சம் சிவப்புமானவை. இவை மனிதரையும் பற்றி அவர்களுக்கு வியாதி வரவைக்க கூடியவை. இவற்றை நீக்குவது மிக கடினம். கருப்பு நிறம் அழுக்கினால் உண்டானால் போய் விடும். பூஞ்சையால் உண்டானால் நீக்குவது மிக கடினம். இந்த காலங்களில் Bleaching Powder அல்லது Chlorine Solution உபயோகப்படுத்தப் படுகிறது.



சுவற்றில் பூஷணம்

வீட்டின் பல இடங்களில் பரவிவிட்ட பூஷணம்



பூஷணத்தின் சிறிய விதைகள்

ஆசாரியன் வீட்டை விட்டு புறப்பட்டு வாசற்படியிலே வந்து, வீட்டை ஏழு நாள் அடைத்து வைத்து, ஏழாம் நாளிலே திரும்ப போய் பார்த்து, தோஷம் வீட்டு சுவர்களில் படர்ந்ததென்று கண்டால், தோஷம் இருக்கும் அவ்விடத்து கல்லுகளை பெயர்க்கவும், பட்டணத்துக்கு புறம்பே அசுத்தமான ஒரு இடத்திலே போடவும் அவன் கட்டளையிட்டு, வீட்டை உள்ளே சுற்றிலும் செதுக்க சொல்லி, செதுக்கிப்போட்ட மண்ணை பட்டணத்துக்கு புறம்பே அசுத்தமான ஒரு இடத்திலே கொட்டவும், வேறே கல்லுகளை எடுத்து வந்து, அந்த கல்லுகளுக்கு பதிலாக கட்டி, வேறே சாந்தை எடுத்து வீட்டை பூசவும் கட்டளை இடுவானாக. (லேவி. 14:38-42)

லேவியராகமம் 38-42 வசனங்களில், வீடு திரும்பிய அவன் தனது வீட்டை இனி எப்படிப்பட்ட வீடாக காத்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. இந்த பகுதி மிக முக்கியமான ஒரு பகுதி ஆகும். வீடு என்பது உயிருக்கு உயிராக, ஒருவரை ஒருவர் நேசிக்கும் இருவர் வாழும் இடம். கணவன், மனைவி என்ற இரண்டு சிற்பிகள் செதுக்கும்

அன்பின் மனையாகும். கல்லுகள் கட்டுவது கட்டடம். கருத்து ஒருமித்த இருவர் கட்டுவது குடும்பம்.

அன்புடன் ஆரம்பிக்கப்பட்ட குடும்பத்தில் தோஷம் வந்து விட்டதை 35-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். அந்த வீட்டிற்கு உடையவன் வந்து வீட்டிலே தோஷம் வந்து இருக்கிறதாக தோன்றுகின்றது என்று ஆசாரியனுக்கு அறிவிக்கிறான். உடனே ஆசாரியன் தோஷம் வந்த அந்த வீட்டை சென்று பார்க்க புறப்படுகின்றான். ஆசாரியன் செய்யும் முதல் வேலை, தோஷம் வீடு முழுவதும் பரவாதபடிக்கு தடுக்க ஏற்ற முயற்சிகள் எடுப்பது ஆகும்.

வீட்டிற்குள் வந்த தோஷம் என்பது கணவன் மனைவி என்பவர் நடுவில் வந்த மன கசப்பு ஆகும். ஒருவருக்கு ஒருவர் மிக அன்பாக இருந்த அவர்கள் நடுவில் ஒரு கசப்பு உதயமாகி விட்டது. அந்த கசப்பு அதிகமாகி விடாமல் இருக்க, அவர்களையும் அவர்களது பிள்ளைகளையும் அது பாதித்து விடாமல் இருக்க ஆசாரியன் அனைத்து முயற்சிகளையும் இப்பொழுது எடுக்கின்றான்.

எபிரேயர் 12 :15-வது வசனத்தில் கூறியபடி ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு யாதொரு கசப்பான வேர் முளைத்து எழும்பி விட வேண்டாம் என்று ஆசாரியன் தீவிர முயற்சி எடுக்கின்றான். கசப்பு வளர்வதால் வெறுப்பும் வளர்ந்தது. 37-வது வசனத்தில் வெண்மையாக இருக்க வேண்டிய சுவர்களில் பச்சை, சிகப்பு நிறங்கள் தெரிய ஆரம்பித்தன. ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கையுடன் வாழவேண்டிய அவர்கள் நடுவில் சந்தேகம் என்பது உருவாகி விட்டது என்பதை அவைகள் காட்டுகின்றன. பச்சை, சிகப்பு நிறங்கள் உள்ள சுவர் மற்ற சுவர்களை விட பள்ளமாகவும் இருக்கின்றது என்று ஆசாரியன் கண்டு கொள்ளுகின்றான். அது கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் நடுவில் இடம் பெற்று விட்ட கருத்து வேற்றுமை, இறுதியில் மன வேற்றுமையாக மாறி விட்டது என்பதை காட்டுகின்றது.

கசப்பு அதிகமாக வளர்ந்து விட்டால் தேவ கிருபை தானாக விலகி விடும். ஆகையால் கசப்பு நிறுத்தப்படுவதற்கு ஏற்ற முயற்சிகளை ஆசாரியன் எடுக்கின்றான். பாவம் என்ற குஷ்டம் ஒரு மனிதனில் காணப்படும் பொழுது முதலாவது அவன் அரிக்கப்படுகின்றான். இரண்டாவது அவனது சரீரம் அரிக்கப்படுகின்றது. மூன்றாவது அவனது உடமைகள் அரிக்கப்படுகின்றன. இறுதியில் அவனது குடும்பமே அரிக்கப்படுகின்றது.

ஆசாரியன் செய்யும் முயற்சிகள் என்ன? எபிரேயர் 12:15-வது வசனம் கூறுவது போல வீடு தேவ கிருபையை இழந்து விடாதபடிக்கு எல்லா முயற்சிகளையும் அவன் செய்கின்றான். வீட்டில் வந்த தோஷம் நீங்க தக்கதாக ஆசாரியன் முதலாவதாக ஏழு நாட்களை ஒதுக்கி கொடுக்கின்றான்.

38-வது வசனத்தில் ஆரோன் அந்த வீட்டை ஏழு நாட்கள் அடைத்து வைத்தான் என்று பார்க்கின்றோம். அந்த ஏழு நாட்களும் ஆசாரியன் எந்த விதமான செயல்களையும் செய்யவே இல்லை. ஏழு நாட்களை ஒதுக்கி கொடுத்தான். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனையில் தான் நேரடியாக குறுக்கிடாமல் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து சரி செய்து விடட்டும் என்று ஏழு நாட்கள் ஆசாரியன் காத்து கொண்டு இருக்கின்றான். அந்த ஏழு நாட்களும் அவன் குறுக்கிடவே இல்லை. கசப்பான வேர் என்பது பெருமை என்ற பாவம் ஆகும். கணவன் அல்லது மனைவி அல்லது இருவரிடமும் ஏற்பட்ட பெருமை, பெருமையினால் ஒருவரை

ஒருவர் புண்படுத்தும் முறையில் பேசுதல் ஆகும். ஒருவருக்கு ஒருவர் உள்ளான அன்பு வரும் பொழுது இவைகள் தானாக மறைந்து போய்விடும் என்று ஆசாரியன் காத்து கொண்டு இருக்கின்றான். அன்பு இறுமாப்பு கொள்ளுவது இல்லை. அன்பு கோபம் அறியாது. அன்பு எதையும் சகிக்கும். ஆசாரியன், அவ்வித ஒரு புதிய அன்பு அவர்கள் இருவர் நடுவிலும் பிறந்து விட ஏழு நாட்கள் காத்து கொண்டு இருக்கின்றான். மனதார ஒருவருக்கு ஒருவர் அன்பு பிறக்க வேண்டும். அதற்கு கணவனும் மனைவியும் மனதார ஒருவரை ஒருவர் மன்னிக்க வேண்டும் என்று ஆசாரியன் பொறுமையுடன் இருக்கின்றான்.

ஏழு நாட்கள் கடந்து சென்று விட்டன. ஆசாரியன் பார்வையிட வருகின்றான். பச்சை சிகப்பு படர்கள் மேலும் அதிகமாக விரிவு அடைந்து இருப்பதை ஆசாரியன் கண்டு கொள்ளுகின்றான். அவைகளை உடனடியாக தடுக்கா விட்டால் வீடு தேவ கிருபையை சீக்கிரமாக இழந்து விடும் என்பதை அவன் அறிவான். தேவ கிருபைகளை இழந்த வீடுகளில் தங்குவது துக்கமும் துயரமுமே ஆகும். சண்டையும் சச்சரவுகளுமே ஆகும். அழுகையும் கண்ணீருமே ஆகும். ஏழு நாட்கள் சென்றும் சுவரில் கண்ட குஷ்டம் சுருங்கி விடாமல் விரிவு அடைந்து வருவதை கண்ட ஆசாரியன் தீவிரமாக செயல்படுகின்றான். பச்சை சிகப்பு காணப்பட்ட கற்களை உடனடியாக பெயர்த்து எறிந்து விடுவதற்கு கட்டளை கொடுக்கின்றான்.

பெயர்த்து எடுக்கப்பட்ட கற்கள் குடும்ப ஜீவியத்தில் கணவன் மனைவிக்கு நடுவில் இடம் பெற்று விட்ட மன கசப்புகள் என்பதே ஆகும். அதற்கு காரணம் தவறான செய்கைகள், தவறான பழக்க வழக்கங்கள், தவறான முறையில் வீட்டிற்குள் வந்த சம்பாத்தியங்கள் ஆகும். கணவன் மனைவி இருவரும் பொருள் தேடுவதில் நேரம் செலவிட்டபடியால் ஒருவருக்கு ஒருவர் பேசவும் பழகவும் அன்பு காட்டவும் நேரம் இல்லாமல் போனது ஆகும். பிள்ளைகளுக்கு பெற்றோர் கொடுக்கும் நேரங்கள் காணாமல் போனது. எனவேதான் ஏழு நாட்கள் ஆசாரியன் வீட்டை பூட்டி வைத்தான். அதாவது அவர்கள் வீட்டை விட்டு வேலைக்கு செல்லாமல் ஒருவருக்கு ஒருவர் பேசட்டும் என்று ஆசாரியன் அடைத்து போட்டான். மன கசப்பு வருவதற்கு காரணமாக இருந்த நபர்கள் யார் யாரோ, பொருட்கள் எவைகளோ, காரணம் எதுவோ அத்தனை கற்களும் ஒன்று ஒன்றாக பிடிங்கி எறியப் படுவதற்கு ஆசாரியன் கட்டளை கொடுத்தான்.

கணவனும் மனைவியும் இணைந்து வாழ்வதற்கு தடையாக இருந்த அனைத்தும் பிடுங்கி எடுக்கப்பட்டன. கணவனும் மனைவியும் தங்களை தாங்களே சரி செய்து கொள்ள முடியாமல் போகும் பொழுது ஆசாரியன் குறுக்கிட வேண்டும் என்பது தேவனுடைய பிரமாணம் ஆகும். ஆசாரியனின் கைகளில் தேவனுடைய அதிகாரம் இருக்கின்றது. பரிசுத்த சபையாரின் குடும்பங்களில் வெள்ளை படர் வராமல் தடுக்க ஆசாரியன் பொறுப்பாளனாக இருக்கின்றான். பாவங்களை வெறுக்காமல் தேவ கிருபைகள் காக்கப்படுவது இல்லை. இதனை அறிந்த ஆசாரியன் குடும்பத்தில் பாவம் இடம்பெற காரணமானவைகள் எவை என்று அறிந்து அவைகள் அனைத்தையும் அகற்றி பட்டணத்திற்கு வெளியே எடுத்து சென்று எறிந்து விடுகின்றான்.

பாவம் கண்ட கற்களை பெயர்த்து எடுப்பது மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டிய ஒரு செயல் ஆகும். தொடர்ந்து அவ்வித படர்கள் இனிமேல் வராதபடிக்கு வீட்டின் சுவர்கள் அனைத்தும் புதிதாக செதுக்கப்படுகின்றன. அதாவது கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் நடுவில் ஏற்பட்ட கர்வம், கோபம், பகை உணர்வு, எரிச்சல், வீண் வார்த்தைகள்

அனைத்தும் பரிசுத்த ஆவியானவரால் சுரண்டி எடுக்கப்படுவதை செதுக்கப்படுதல் என்பது காட்டுகின்றது. சுரண்டி எடுப்பது என்பது கடினமான ஒன்று. கஷ்டமானது, தாங்க முடியாதது, ஆனால் இறுதியில் நன்மை தருவது ஆகும். 40-42 வசனங்களில் இந்த நிகழ்ச்சிகள் நடை பெறுவதை நாம் காணலாம்.

குடும்பத்தில் இப்பொழுது ஓர் மன உடைவு காணப்படுகின்றது. கணவன் மனைவி இருவருக்கும் நடுவில் ஒரு துக்கம் உருவானது. தங்கள் தவறுகளை உண்மையுடன் ஒப்புக்கொள்ள ஆரம்பிக்கின்றார்கள். ஒருவரை ஒருவர் மன்னிக்க முன் வருகின்றார்கள். ஒரு புதிய மகிழ்ச்சி அவர்கள் முகத்தில் தெரிய வருகின்றது. இதற்கு காரணம் அவர்கள் அல்ல; பரிசுத்தராகிய தேவனுக்கு நேராக அவர்களை வழி நடத்த முன் வந்த ஆசாரியனே ஆகும்.

லேவியராகமம் 14:42-வது வசனத்தில் வேறே கற்கள் கொண்டு வரப்பட்டன என்று பார்க்கின்றோம். அவை ஆவியின் கனி என்ற கற்கள் ஆகும். அன்பு குடும்பத்தில் பிறந்தது; சந்தோஷம் வீட்டை நிரப்பியது; சமாதானம் எங்கும் நிறைந்தது; உயர்ந்த குண அதிசயங்கள் அனைத்தும் கணவன் மனைவி இருவரையும் ஆட்கொண்டது. ஒருவரை ஒருவர் மன்னிப்போம், ஒருவரை ஒருவர் நேசிப்போம் என்று இரு கரங்கள் கொண்டு வீட்டை சிற்பிகளாக கட்ட ஆரம்பித்தார்கள். குடும்பத்தில் ஒரு புது ஒளி பிறந்தது. கர்த்தர் வீட்டை கட்டலானார். புதிய சாந்து பயன்படுத்தப்பட்டது. நவமான வீடாக மாறியது. ''துன்மார்க்கர் கவிழ்க்கப்பட்டு ஒழிந்து போவார்கள். நீதிமான்களுடைய வீடோ நிலை நிற்கும்.'' (நீதி. 12:7).

கல்லுகளைப் பெயர்த்து, வீட்டை செதுக்கி, நவமாய்ப் பூசினபின்பும், அந்தத் தோஷம் திரும்ப வீட்டில் வந்ததானால், ஆசாரியன் போய் பார்க்கக்கடவன்; தோஷம் வீட்டில் படர்ந்ததானால், அது வீட்டை அரிக்கிற குஷ்டம்; அது தீட்டாயிருக்கும். ஆகையால் வீடு முழுவதையும் இடித்து, அதின் கல்லுகளையும், மரங்களையும் அதின் சாந்து எல்லாவற்றையும் பட்டணத்துக்கு புறம்பே அசுத்தமான இடத்திலே கொண்டு போகவேண்டும். (லேவி. 14:43-45)

புதிய மகிழ்ச்சி பெற்ற அந்த குடும்பம், அந்த வீடு மறுபடியும் தோஷம் கண்டது. சுத்திகரிக்கப்பட்ட அவர்களுடைய வீடு ஒரு சில நாட்களில், ஒரு சில மாதங்களில் ஒரு சில வருடங்களில் மறுபடியும் தோஷம் கண்டது என்பதை 44-வது வசனத்தில் நாம் பார்க்கிறோம். சுத்திகரிப்பை பெற்ற பின்னர் சுத்திகரிப்பை காத்து கொள்ள முடியாத வீடாக அவர்களுடைய வீடு மாறி விட்டது. லூக்கா 11:24-26-வது வசனங்களில் ''அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டு புறப்படும் போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்; நான் விட்டுவந்த என் வீட்டுக்கு திரும்பி போவேன், என்று சொல்லி அதில் வரும்போது, அது பெருக்கி ஜோடிக்கப்பட்டிருப்பதை கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டு வந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்'' என்று நாம் பார்க்கின்றோம். பிசாசின் கட்டுகள் கட்டுக்கு அடங்காமல் உயர்ந்து விட்டதை அது காட்டுகின்றது. குடும்பம் மறுபடியும் பின் வாங்கி விட்டது. முன் இருந்த நிலைமையை விட இப்பொழுது பின் நிலைமை மிக மோசமாகி விட்டது. இந்த சூழ்நிலையை அறிந்த ஆசாரியன் வீட்டிற்கு விரைந்து வருகின்றான். பார்வை இடுகின்றான். நடைபெற்ற

அனைத்தையும் அறிந்து கொள்ளுகின்றான். அவன் கூறும் தீர்ப்பு என்ன? வீடு முழுவதும் இடிக்கப்பட வேண்டும். வீடு மறுபடியும் கட்டப்பட வேண்டும் என்பதே ஆகும். இதனை 45-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

சற்று முன்னதாக குடும்பத்தில் இடம் பெற்ற ஐக்கியம், ஆழமான ஐக்கியமாக அமைய வில்லை என்பதை ஆசாரியன் அறிந்து கொள்ளுகின்றான். கசப்பு என்ற அந்த மரத்தின் இலைகளும், கிளைகளும் வெட்டப்பட்டதே தவிர அதன் வேர்கள் பிடுங்கப்படவில்லை என்பதை ஆசாரியன் உணருகின்றான். இப்பொழுது மரத்தின் வேர் பிடுங்கப்படட்டும் என்று ஆசாரியன் தீர்ப்பு கூறுகின்றான். மேல் பூச்சான மன ஒற்றுமைகளே முன்பு இடம் பெற்று உள்ளது என்பதை ஆசாரியன் அறிந்து விட்டான். உள்ளங்கள் உடையாமல் கசப்பான வேர்கள் பிடுங்கப்பட முடியாது என்பதை அவன் அறிவான். கட்டடம் இடிக்கப்பட வேண்டும் என்பது கணவனும் மனைவியும் பரிபூரணமாக தங்களை தாழ்த்த வேண்டும் என்பதே ஆகும். தாழ்மை இல்லாமல் அவர்கள் இருவரும் ஒற்றுமையாக வாழ முடியாது என்பதை ஆசாரியன் அறிந்து அவர்களை தாழ்மையின் பள்ளத்தாக்கிற்கு வழி நடத்துகின்றான். தாழ்மை உள்ளவர்கள் உயர்த்தப்படுவார்கள். தாழ்மையின் அறிகுறி மன உடைதலே ஆகும். இவைகள் அந்த குடும்பத்தில் இடம்பெற ஆரம்பிக்கின்றது.

வீடு அடைக்கப்பட்டிருக்கும் நாட்களில் அதற்குள் பிரவேசிக்கிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அந்த வீட்டிலே படுத்தவன் தன் வஸ்திரங்களைக் தோய்க்கக்கடவன்; அந்த வீட்டிலே சாப்பிட்டவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன். ஆசாரியன் திரும்ப வந்து, வீடு பூசப்பட்டபின்பு வீட்டிலே அந்த தோஷம் படரவில்லை என்று கண்டானேயாகில், தோஷம் நிவிர்த்தியானபடியால், ஆசாரியன் அந்த வீட்டை சுத்தம் என்று தீர்க்கக்கடவன். (லேவி 14:46-48)

கணவனும் மனைவியும் கண்ணீர் சிந்த ஆரம்பித்தார்கள். அதன் பின்னர் குடும்பத்தில் எவ்வித தோஷமும் வரவில்லை என்பதை நாம் அடுத்த வசனங்களில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். தாழ்மை இருக்கும் இடங்களில் சண்டைகள் வருவது இல்லை. விட்டுக்கொடுத்தல் இடம் பெறுகின்றன. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் தங்களை விட மேன்மையானவர்களாக எண்ண ஆரம்பித்து விட்டார்கள். ஒருவருக்கு ஒருவர் பணிவிடையாளர்களாக மாறி விட்டார்கள். அன்பினால் ஒருவருக்கு ஒருவர் ஊழியம் செய்ய துவங்கி விட்டார்கள். அவர்கள் புதிதாக கட்டிய கட்டடம், புதிய அஸ்திபாரம் கொண்ட கட்டடம்; கசப்பான வேர் அறவே அகற்றப்பட்ட கட்டடம். பழையவை ஒழிந்த கட்டடம்; எல்லாம் புதிதாக மாறி தூய்மை வீசும் கட்டடம். கர்த்தருடைய வசனத்தை நடுவாக கொண்ட கட்டடம்.

அப்பொழுது வீட்டிற்கு தோஷங்கழிக்க, இரண்டு குருவிகளையும், கேதுரு கட்டையையும், சிவப்பு நூலையும், ஈசோப்பையும் எடுத்து, ஒரு குருவியை ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்று நீரின்மேல் கொன்று, கேதுரு கட்டையையும், ஈசோப்பையும், சிவப்பு நூலையும், உயிருள்ள குருவியையும் எடுத்து, இவைகளை கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலும் ஊற்று நீரிலும் தோய்த்து, வீட்டின் மேல் ஏழுதரம் தெளித்து, குருவியின் இரத்தத்தினாலும், ஊற்று நீரினாலும், உயிருள்ள குருவியினாலும் கேதுரு கட்டையினாலும் ஈசோப்பினாலும்,

சிவப்புநூலினாலும் வீட்டிற்கு தோஷங்கழித்து, உயிருள்ள குருவியை பட்டணத்துக்கு புறம்பே வெளியிலே விட்டு விட்டு, இப்படி வீட்டிற்கு பிராயச்சித்தம் செய்யக்கடவன்; அப்பொழுது அது சுத்தமாயிருக்கும். (லேவி. 14:49-53)

சரீர குஷ்டரோகம் சுத்தமானவுடன் செய்யப்பட்ட சுத்திகரிப்பு முறைமைகளே இங்கும் செய்யப்படுகின்றது என்பதை லேவியராகமம் 14:49-53 வசனங்களில் நாம் பார்க்கின்றோம். சுத்திகரிப்பிற்கு கொண்டு வரப்பட்ட இரண்டு குருவிகளில் ஒன்று பட்டணத்திற்கு வெளியே எடுத்து செல்லப்பட்டு பறக்க விடப்பட்டது. கணவனுக்கும் மனைவிக்கும் நடுவில் இருந்த எல்லா கசப்பான வேர்களும், கருத்து வேற்றுமைகளும், மன வேற்றுமைகளும் அதற்கு காரணமாக இருந்த அனைத்தும் அந்த குருவியின்மேல் சுமத்தப்பட்டது. குருவி அவைகளை சுமந்து கொண்டு செட்டை அடித்து தூரமான ஒரு இடத்திற்கு பறந்து சென்று விட்டது. அடுத்த குருவி கொல்லப்பட்டது. அதின் இரத்தம் மண் பாண்டத்தில் உள்ள ஊற்று நீரில் கலக்கப்பட்டது. கேதுரு கட்டையில் சிகப்பு நூலால் கட்டப்பட்ட ஈசோப்பை ஆசாரியன் எடுத்து இரத்தம் கலந்த நீரில் நனைத்து வீடு முழுவதற்கும் பிராயசித்தம் செய்கின்றான்.

வீடு, ஆசீர்வதிக்கப்பட்ட வீடாக மாறி விட்டது. இனிமேல் அந்த வீட்டிற்குள் எவ்விதமான வெள்ளை படர்களும், அவைகள் வருவதற்கு காரணமாக இருந்த எதுவும் பிரவேசிக்க போவது இல்லை என்பது நிச்சயமானது. ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் மட்டுமே அந்த வீட்டிற்குள் இனிமேல் பிரவேசிக்க போகின்றார்கள். கசப்புகள் காணாமல் போய்விட்டன. மேற்பூச்சான உறவுகள் ஒளிந்து போய்விட்டன. உள்ளங்கள் ஒருமித்து கலந்தன. பொன்னும் பொருளும் அவைகளை இணைக்கவில்லை. அன்பு ஒன்றே அவர்களை இணைத்து விட்டது. மனைவி கணவனிடம் அன்பு கூர முந்தி கொள்ளுகின்றாள். கணவன் மனைவிக்கு பெரும் மதிப்பு கொடுக்க முந்தி கொள்ளுகின்றான். 'அநேகம் பெண்கள் குணசாலிகளாக இருந்தது உண்டு. நீயோ அவர்கள் எல்லாருக்குள்ளும் மேற்பட்டவள்' என்று கணவன் மனைவியை போற்றுகின்றான். 'எங்கள் தாயே நீ பாக்கியவதி,' என்று பிள்ளைகள் தாயை புகழ்கின்றார்கள். ''அவள் சோம்பலின் அப்பத்தை புசியாமல் தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாக இருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளை பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷனும் அவளை பார்த்து, அநேக பெண்கள் குணசாலிகளாக இருந்தது உண்டு, நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள்'' என்று அவளை புகழுகிறான் (நீதி. 31:27-29).

சங்கீதம் 101:2-வது வசனம் கூறுவது போல, வீட்டின் தலைவன் இனிமேல் என் மனைவி பிள்ளைகளுக்கு உண்மையாக இருப்பேன் என்றும் எனது வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்து கொள்ளுவேன் என்றும் சாட்சி கூறுகின்றான். அதே சங்கீதம் 7-வது வசனம் கூறுவது போன்று, கபடு எங்கள் வீட்டில் இருப்பது இல்லை. பொய் பேசுகின்றவர்கள் எங்கள் வீட்டில் வாழுவது இல்லை என்று கணவனும் மனைவியும் பிள்ளைகளும் சேர்ந்து சாட்சி கூறுகின்றார்கள். வீடு பரிசுத்தமான வீடாக மாறியது. வீட்டின் கற்கள் வெள்ளை நிறமாகவே இருக்கின்றது. குடும்பத்தின் கவலைகள் மறைந்து விட்டது. கண்ணீர் ஒழிந்து விட்டது. சந்தோஷம் பிறந்து விட்டது காரணம் கர்த்தர் வீட்டின் தலைவராக மாறி விட்டார்.

இது சகலவித குஷ்டரோகத்துக்கும், சொறிக்கும், வஸ்திர குஷ்டத்துக்கும், வீட்டு குஷ்டத்துக்கும், தடிப்புக்கும், அசறுக்கும், வெள்ளை படருக்கும்

அடுத்த பிரமாணம். குஷ்டம் எப்பொழுது தீட்டுள்ளது என்றும், எப்பொழுது தீட்டில்லாதது என்றும் தெரிவிப்பதற்கு குஷ்டரோகத்துக்கு அடுத்த பிரமாணம் இதுவே என்றார். (லேவி. 14:54-57)

குஷ்டரோகங்களில் இருந்து சுத்திகரிப்பு பெறவேண்டிய பிரமாணங்களின் முடிவு இதுவே. உபாகமம் புத்தகத்தில் இது திரும்பவும் விபரமாக கூறப்படவில்லை. இந்த பிரமாணங்களின் மூலம் நாம் அறிவதாவது: கர்த்தர் தமது மக்களாகிய இஸ்ரவேல் ஜனங்களின் உடல்,உள்ள, சுற்றுப்புற நலனில் எவ்வளவு கிருபையாக கவனமாக இருந்தார் என்பதும் நாம் நமது உடல், உள்ளம், சுற்றுப்புறங்களை எவ்வளவு நீதியுடன் பாதுகாக்க வேண்டும் என்பதுமே. இந்த பிரமாணங்கள் இஸ்ரவேல் மக்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு அல்ல. நாகமானின் குஷ்டம் குணமானதும் அவனை ஆசாரியரிடம் அழைத்து செல்ல பணிக்கவில்லை. அதுபோல் விசுவாசிகளாகிய நமக்கு கொடுக்கப்படும் பிரமாணங்கள் திருச்சபையின் உள்ளே உள்ளவர்களுக்கு மட்டுமே ஆகும். வெளியே உள்ளவர்களை நியாயம் தீர்க்கும் பொறுப்பு கர்த்தருக்கு மட்டுமே உரியது. அது நம்முடையதல்ல. நாம் நம்மை சாத்தானின் மயக்க வலையில் இருந்தும் பாவத்தின் பிடியில் இருந்தும் காத்துக் கொள்ள வேண்டும். அவைதான் நமக்கு வியாதியும் நம்மை அசுசிப்படுத்துவதும் ஆகும். அதுபோல் அசுசியானவர்களிடம் சம்பந்தம் வைப்பதும் தவறானதே ஆகும். ''ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவில் இருந்து புறப்பட்டு பிரிந்து போய், அசுத்தமானதை தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (1 கொரி. 6:17),

8.10 ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரீர தீட்டுக்களில் இருந்து சுத்திகரிப்பு

பாவத்தினால் வரும் வியாதிகளையும் தீட்டுக்களையும் குறித்து 13,14ம் அதிகாரங்களில் பார்த்தோம். அவை சரீரத்தின்மேல், தோலில் வரும் தீட்டுக்களாக இருந்தது. 15ம் அதிகாரத்தில் சரீரத்தின் உள்ளிருந்து வெளிப்படும் இயற்கையான தீட்டுக்களையும் அவையன்றி வியாதியினால் வருபவையையும் பார்க்க இருக்கின்றோம்.

லேவியராகமம் 15-வது அதிகாரத்தில் 33 வசனங்கள் உண்டு. மனித சரீரத்தின் பாடுகள் பற்றியும், பெற்ற சரீரம் சுத்தமாக வைக்கப்பட வேண்டிய அவசியத்தை பற்றியும் இந்த அதிகாரம் எடுத்து உரைக்கின்றது. சரீரத்தில் இயற்கையாக இடம்பெறும் பாடுகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட பாடுகள் என்று இந்த அதிகாரத்தில் நாம் பார்க்க இருக்கின்றோம். அது மட்டும் அல்லாமல் சரீரத்திலே தானாக இடம் பெறும் வியாதிகள், தவறான சேர்க்கையினால் இடம் பெறும் வியாதிகள், இவைகளை பற்றியும் 15-வது அதிகாரம் கூறுகின்றது. முதல் 18 வசனங்களில் ஆண்கள் தங்களை சுத்தமாக காத்து கொள்ளுவதை பற்றி கூறப்பட்டு உள்ளது. 19 முதல் 30-வது வசனங்கள் வரை பெண்கள் தங்களை சுத்தமாக காத்துக்கொள்ளுவதை பற்றி கூறப்பட்டு உள்ளது. 31-வது வசனம் இந்த அதிகாரத்தின் நடுவான வசனமாக அமைகின்றது. சுத்தம் எவ்வளவு முக்கியம் என்பதையும், அசுத்தம் தேவ கோபத்திற்கு மனிதனை ஆளாக செய்யும் என்பதையும் 31-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

பரிசுத்தம் உள்ளவர்களாக இருக்க நாடுங்கள். பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பது இல்லையே என்று எபிரெயர் 12:14-வது வசனம் கூறுவதை இந்த அதிகாரத்திற்கு ஒரு தலைப்பாக எடுத்து நாம் இந்த அதிகாரத்தை ஆராயலாம். அகத்தில் பரிசுத்தத்துடனும் சரீரத்தில் சுத்தத்துடனும் வாழ்க்கை நிலைவரப்படுவதற்கு, அதற்கு ஏற்ற கவனமும்,

சிரத்தையும் தினந்தோறும் எடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த அதிகாரத்தில் பார்க்கின்றோம். பரிசுத்தமாக வாழ்வதற்கு நாடிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதை அறிகின்றோம்.

ஆண்களின் தீட்டு:

பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்; ஒருவனுக்குப் பிரமியம் உண்டானால், அவன் தன் பிரமியத்தினாலே தீட்டானவன். அவனுடைய மாம்சத்திலுள்ள பிரமியம் ஊறிக்கொண்டிருந்தாலும், அவன் பிரமியம் அடைபட்டிருந்தாலும், அதினால் அவனுக்கு தீட்டுண்டாகும். (லேவி. 15:1-3)

தீர்ப்பும் எச்சரிப்பும் மாறி மாறி இந்த அதிகாரத்தில் வருவதை நாம் பார்க்கின்றோம். முதலாவது ஆண் மக்களில் எச்சரிப்பும் தீர்ப்பும் துவங்குகின்றது. முதல் 15 வசனங்கள் அதற்கு ஏதுவாக உள்ளது.

இந்த அதிகாரத்தில் மூன்றாவது வசனத்தில் பிரமியம் என்று ஓர் வியாதி ஆண்களுக்கு வருவது பற்றி கூறப்பட்டு உள்ளது. இந்த வியாதி தானாக வரும் வியாதி அல்ல. தவறாக நடப்பதினால் வரும் வியாதி ஆகும். இயற்கையாக வரும் ஒன்று அல்ல. துர் நடத்தையினால் தோன்றும் ஒன்று ஆகும். பிரமியம் (venereal disease) என்ற வார்த்தை லேவியராகம புத்தகத்தில் மட்டுமே காணப்படுகின்றது. பரிசுத்த வேதாகமத்தில் பிற புத்தகங்கள் எதிலும் இந்த வார்த்தை வரவில்லை. பரிசுத்தமாக இருக்க நாடவேண்டிய மனிதன் தவறான பழக்க வழக்கங்களில் தாராளமாக ஈடுபடுகின்றான். அவனது மறைவான பாவம் ஒரு பகிரங்கமான வியாதியை அவனது சரீரத்தில் உருவாக்கி விட்டது. அவன் அந்த வியாதியை மறைத்து வைக்க எவ்வளவோ முயற்சி செய்தாலும் முடியாதவனாக முடிவில் தோற்று போய்விட்டான். இயற்கையான முறையில், குடும்ப ரீதியில் அவன் சரீரம் பயன்படுத்தப்படவில்லை. சுய விருப்பமான முறையில் அவன் சென்று விட்டான். எனவே பாவம் செய்தான். யாக்கோபு 1:14,15-வது வசனங்களில், ''அவனவன் தன்தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகின்றான். பின்பு இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தை பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும்,'' என்று பார்க்கிறோம்.

சரியான பாதையில் போ என்று அவனிடம் சபை கூறியது. தவறான பாதைக்கு போ என்று எவருமே கூறவில்லை. தவறான உறவுகள் அவனால் உருவாக்கிய உறவுகளே ஆகும். உறவு கொள்ளுவதற்கு கொடுக்கப்பட்ட குடும்ப வாழ்க்கையை உதறி தள்ளிய அவன் இப்பொழுது உடலில் இடம் பெற்ற வியாதியை உதறி தள்ள முடியாமல் திகைக்கின்றான். கண்களின் இச்சை, விபசார மயக்கத்திற்கு மனிதனை வழி நடத்தும் என்று 2 பேதுரு 2:14-வது வசனம் கூறுகின்றது. கண், மனிதனை வாழவும் வைக்கும், வீழவும் வைக்கும். இதயம் இருள் கண்டது, உடல் வியாதி கண்டது. சமூகம் அவனை புறக்கணித்து விட்டது.

பிரமியமுள்ளவன் படுக்கிற எந்த படுக்கையும் தீட்டாகும்; அவன் எதின் மேல் உட்காருகிறானோ அதுவும் தீட்டாகும். அவன் படுக்கையைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகக்கடவன்; சாயங்காலம் மட்டும் அவன் தீட்டுப்பட்டிருப்பானாக.

பிரமியம் உள்ளவன் உட்கார்ந்ததின் மேல் உட்காருகிறவன் தன் வஸ்திரங்களை தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. பிரமியம் உள்ளவனின் சரீரத்தை தொடுகிறவன் தன் வஸ்திரங்களை தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. பிரமியம் உள்ளவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல் துப்பினால், இவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. பிரமியம் உள்ளவன் ஏறும் எந்த சேணமும் தீட்டாயிருக்கும். அவனுக்கு கீழிருந்த எதையாகிலும் தொடுகிறவன் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதை எடுத்து கொண்டு போகிறவன் தன் வஸ்திரங்களை தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. பிரமியம் உள்ளவன் தன் கைகளை தண்ணீரினால் கழுவாமல் ஒருவனைத் தொட்டால், இவன் தன் வஸ்திரங்களை தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. பிரமியம் உள்ளவன் தொட்ட மண்பாண்டம் உடைக்கப்படவும், மரச்சாமான் எல்லாம் தண்ணீரினால் கழுவப்படவும் வேண்டும். (லேவி 15:4-12)

பிரமியம் என்ற இந்த வியாதி உள்ளவனின் படுக்கை பாவம் ஆனது, உட்காரும் இடம் பாவமானது, அவன் உட்கார்ந்த இடத்தின்மேல் உட்காருகிறவன் தீட்டுக்களிக்க வேண்டும், அவன் உபயோகிக்கும் வாகனம் பாவமானது, அவன் பயன்படுத்தும் எதையும் தொட்டவன் தீட்டானவன், அவன் தொடும் அனைத்தும் தீட்டு என்று வரிசை வரிசையாக அந்த வசனங்களிலே அவனை பற்றிய ஓர் தீர்ப்பு வந்து கொண்டே இருக்கின்றது. 4-12 வசனங்களிலே இதனை பார்க்கலாம். ஒரு குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கே அவன் தகுதி இல்லாதவனாக மாறி விட்டவன்போல் காணப்படுகின்றான். மீட்கப்பட்டவர்கள் நடுவில் இருந்தவன், மீட்பருக்கு பலி செலுத்தி தன்னை அர்பணித்தவன், ஆனால் வேசித்தனம் என்ற பாவம் செய்யத்துவங்கினான். அந்தரங்கமாக அவன் செய்த அந்த பாவம் அவனது பெற்றோர், உற்றார், உறவினர், மனைவி, பிள்ளைகளுக்கு முற்றிலுமாக மறைக்கப்பட்டு இருந்தாலும், கர்த்தரின் கண்கள் அவனை பார்த்து கொண்டே இருந்தது. அவன் மனசாட்சி அவனை குத்தி கொண்டே இருந்தது. அவன் மனம் மாறாமல் போகும் பொழுது அவன் விதைத்ததை அவன் அறுக்க வேண்டும். 1 கொரிந்தியர் 6:13-வது வசனம் கூறுவது போன்று சரீரம் வேசித்தனத்திற்கு உரியது அல்ல. கர்த்தருக்கே உரியது ஆகும். நீதிமொழிகள் 29:3-வது வசனம் கூறுவது போன்று வேசிகளுடன் வாழுகிறவனின் சக்தி சம்பாத்தியம் அனைத்தும் இல்லாமல் போய்விடும்.

வேசி ஆழமான படுகுழி என்று நீதிமொழிகள் 23:27-வது வசனம் கூறுகின்றது. படு குழியில் விழுந்தான். படு பாவம் செய்தான்.

இப்பொழுது அவன் செய்த இரகசிய பாவங்கள் அவனை வாட்டுகின்றன, வதைக்கின்றன. அந்த வியாதி வரும் வரை அவனது உள்ளான நிலைமை உலகத்திற்கு தெரியவில்லை. அவனுக்கு மிக நெருங்கியவர் கூட அவனது வாழ்வின் அடுத்த பகுதியை அறியாமல் தான் இருந்தார்கள். மிக மிக நெருங்கிய நண்பனிடம் கூட கூற முடியாத இரகசியங்கள் மனிதனுக்கு உண்டு என்று சாமுவேல் ஜான்சன் என்ற ஆங்கில எழுத்தாளர் கூறுகின்றார். தூக்கத்தில் இருந்து எழும்பிய பின்னர்தான் கண்ட கனவுகள் கூறப்படுகின்றன.

விளைவுகள் வெளியே வந்த பின்னர்தான் செய்த தவறுகள் தெரிய வருகின்றது என்று தத்துவ ஞானி 'செனேகா' கூறுகின்றார்.

பிரமியம் உள்ளவன் தன் பிரமியம் நீங்கி சுத்தமானால், தன் சுத்திகரிப்புக்கென்று ஏழுநாள் எண்ணிக்கொண்டிருந்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் தேகத்தை ஊற்றுநீரில் கழுவக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருப்பான். (லேவி. 15:13)

பிரமியம் என்ற வியாதி கண்ட அந்த மனிதனின் முடிவு மரணமே ஆகும். அவனுக்கு இரண்டு விடுதலை இப்பொழுது தேவை. ஒன்று எங்குமே சுகம் பெற முடியாத இந்த வியாதியில் இருந்து அவனுக்கு ஓர் அற்புத சுகம் தேவை. பிரிதொன்று குறிக்கப்பட்ட காலத்திற்கு முன் சாகாமல் மரணம் தவிர்க்கப்பட வேண்டியதும் தேவை. சுக தேகியாகவும், பூரண ஆயுசு பெற்றவனாகவும் உலகத்தில் இனி வாழ அவன் விரும்புகின்றான். அது ஒரு நல்ல விருப்பம் ஆகும். நல்ல விருப்பங்கள் நடைமுறையில் காண்பதற்கு செயல்களும் அதற்கு ஏற்றதாக அமைந்து விட வேண்டும். முதலாவது அவன் பாவத்தை கசக்க வேண்டும். இரண்டாவது பரிசுத்தமான வாழ்வை அவன் வாஞ்சிக்க வேண்டும். இந்த இரண்டும் இடம் பெறும் பொழுது ஒரு சிறந்த எதிர்காலம் அவனுக்கு எதிர்ப்படும். லேவியராகமம் 15:13-வது வசனத்தில் இதனை நாம் காணலாம். பிரமியம் உள்ளவன் தன் பிரமியம் நீங்கி சுத்தமானால் தன் சுத்திகரிப்புக்கு என்று ஏழு நாள் எண்ணிக்கொண்டு இருந்து தன் வஸ்திரங்களை தோய்த்து தன் தேகத்தை ஊற்று நீரில் கழுவக்கடவன். அப்பொழுது சுத்தமாக இருப்பான். மூன்று நிலைகளை அவன் அந்த வசனத்தில் கடந்து செல்ல வேண்டும் என்று பார்க்கின்றோம்.

முதலாவதாக, அவன் ஏழு நாட்கள் எண்ணிக் கொண்டே இருக்க வேண்டும். அவன் இதுவரை செய்த அனைத்து பாவங்களையும் அவன் சிந்தித்து புலம்ப வேண்டும் என்பதே ஆகும். ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல ஏழு நாட்கள். அந்த ஏழு நாட்களும் அவன் உண்மையில் உத்தமனாக மாறி விட்டானா அல்லது சுகம் பெற்று கொள்ள மட்டுமே ஓர் உத்தமன் போல தன்னை காட்டுகின்றானா என்பது தெரிய வந்து விடும். ஏழு நாட்கள் என்பது அவன் புடமிடப்படும் நாட்கள் ஆகும். பாவ அறிக்கை, மெய்யான மன மாற்றம், சொந்த குடும்பத்தில் நல்ல உறவுகளை புதுப்பித்து கொள்ளுதல், தவறான உறவுகளை நிரந்தரமாக விட்டு விடுதல், இழந்த ஆசீர்வாதங்களை திரும்ப கண்டு கொள்ளுதல், அனைத்தையும் அவன் எண்ணி எண்ணி பெற்று கொள்ள வேண்டும்.

அவன் கடந்து செல்ல வேண்டிய இரண்டாவது நிலை, அவன் சுத்தமான வஸ்திரங்களை பெற்று கொள்ள வேண்டும். இதுவரை அவன் கண்ட வஸ்திரம் அவனது அழுக்கான வாழ்கையை மறைக்கும் வஸ்திரமாக இருந்தது. வியாதிவராமல் இருந்து இருக்குமானால் அவனது வாழ்வின் அந்தரங்கம் தொடர்ந்து நீடித்து கொண்டே இருந்திருக்கும். வெளி உலகத்திற்கு அவன் பெருந்தன்மை படைத்தவனாகவும், எதுவுமே செய்யாதவன் போன்று காட்டிக்கொள்ளவும் அவன் கட்டிய வஸ்திரம் அவனுக்கு உதவி செய்யவில்லை. அந்த வஸ்திரங்கள் சுய நீதி என்ற வஸ்திரங்கள். அவை, அவனுக்கு உதவியாக அமையவில்லை. வியாதி இல்லை என்று இனிமேல் அவன் மாயம் பண்ண முடியாது. அவனது கடந்த கால பெருமைகள் அனைத்தும் ஒரு மண் குதிரையாக மாறி விட்டது. அவனுக்கு இப்பொழுது தேவை, தேவ நீதி என்ற வஸ்திரம் ஆகும். அதை அவன்

பெற்றுக் கொள்ளும் பொழுது, அவனது கடந்தகால பாவங்கள் கணக்கிற்கு எடுக்கப்பட போவது இல்லை. அவனது கடந்தகால தவறுகளினால் அவன் சரீரமோ, அவனுடைய வருங்காலமோ பாதிக்கப்பட போவதும் இல்லை. அவன் இழந்த அனைத்தையும் அவன் திரும்ப பெற்றுக் கொள்ள போகின்றான். அதுவே தேவ நீதி என்பது ஆகும். தேவ நீதி என்ற புதிய வஸ்திரம் இரண்டாவது நிலையில் அவனுக்கு கிடைக்க இருக்கின்றது.

மூன்றாவதாக, அவன் கடந்து செல்ல வேண்டிய முக்கியமான ஓர் நிலை தனது தேகத்தை ஊற்று நீரில் கழுவ வேண்டும். ஏழு நாள் எண்ணிக்கொண்டு இருந்து தன் வஸ்திரங்களை தோய்த்து தன் தேகத்தை ஊற்று நீரில் கழுவக்கடவன். குட்டை நீரில் அல்ல. அப்பொழுது சுத்தமாக இருப்பான் என்று 13-வது வசனம் திட்ட வட்டமாக கூறுகின்றது. ஊற்று நீர் என்று வரும் எபிரெய சொல்லின் சரியான பொருள் ஜீவ தண்ணீர் என்று முன்பு பார்த்தோம். நான் பரிசுத்தர் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்பதே லேவியராகம புத்தகத்தின் கருப்பொருள் ஆகும். பாவியான மனிதன் பரிசுத்தமாக மாறுவது எப்படி முடியும்? ஜீவ தண்ணீரில் கழுவப்படும் பொழுது நிச்சயம் முடியும். புதிய ஏற்பாட்டில் இயேசு 'நானே ஜீவ தண்ணீர்,' என்றார். ஜீவ தண்ணீர் இயேசுவை குறிக்கும் ஓர் வார்த்தை ஆகும். இயேசு மன்னிக்கிறார். இயேசு சுகம் கொடுக்கிறார். இயேசு வாழ வைக்கிறார் என்பதை முன் கூட்டி உரைக்கும் அதிகாரமாக லேவியராக புத்தகத்தின் 15-வது அதிகாரம் திகழ்கின்றது.

''இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்'' (ரோமர் 6:22,23).

எட்டாம் நாளிலே, அவன் இரண்டு காட்டு புறாக்களையாவது, இரண்டு புறா குஞ்சுகளையாவது, ஆசரிப்பு கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்து, ஆசாரியனிடத்தில் கொடுக்கக்கடவன். ஆசாரியன் அவைகளில் ஒன்றை பாவ நிவாரண பலியும் மற்றென்றை சர்வாங்க தகன பலியுமாக்கி, அவனுக்காக கர்த்தருடைய சந்நிதியில் அவன் பிரமியத்தின் நிமித்தம் பாவ நிவிர்த்தி செய்ய வேண்டும். (லேவி. 15:14-15)

14-வது வசனத்தில் அவன் ஆசரிப்பு கூடாரம் புறப்படுகின்றான். சுத்தமான அவன் இப்பொழுது முற்றிலுமாக தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கின்றான். ஸ்தோத்திரம் செலுத்துகின்றான். தனக்காக பலியிட்டு பாவ நிவிர்த்தி செய்கிறான். குடும்பத்துடன் இணைந்து சாட்சியாக வாழுகின்றான்.

ஒருவனிலிருந்து இந்திரியம் கழிந்தது உண்டானால், அவன் தண்ணீரில் முழுக வேண்டும்; சாயங்காலம் மட்டும் அவன் தீட்டு பட்டிருப்பானாக. கழிந்த இந்திரியம் பட்ட வஸ்திரமும் தோலும் தண்ணீரினால் கழுவப்பட்டு, சாயங்காலம் மட்டும் தீட்டாயிருப்பதாக. இந்திரியம் கழிந்தவனோடே ஸ்திரீ படுத்து கொண்டிருந்தால், இருவரும் தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பார்களாக. (லேவி. 15:16-18)

இப்பொழுது கூறப்படுவது இயற்கையாக வரும் இந்திரியம் ஆகும். ஆயினும் அது தீட்டுள்ளதே. அவன் தன்னையும் தன் வஸ்திரத்தையும் சுத்திகரித்து கொள்ளவேண்டும்.

ஸ்திரீகளின் தீட்டு:

சூதகஸ்திரீ தன் சரீரத்திலுள்ள உதிர ஊறலினிமித்தம் ஏழுநாள் தன் விலக்கத்தில இருக்கக்கடவள்; அவளை தொடுகிறவன் எவனும் சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பானாக. அவள் விலக்கலாய் இருக்கையில், எதின் மேல் படுத்து கொள்ளுகிறாளோ எதின் மேல் உட்காருகிறாளோ அதெல்லாம் தீட்டாயிருக்கும். அவள் படுக்கையை தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களை தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பானாக. அவள் உட்கார்ந்த மணையை தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களை தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பானாக. அவள் படுக்கையின் மேலாகிலும், அவள் உட்கார்ந்த மணையின் மேலாகிலும் இருநத எதையாகிலும் தொட்டவன், சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பானாக. ஒருவன் அவளோடே படுத்து கொண்டதும், அவள் தீட்டு அவன் மேல் பட்டதும் உண்டானால், அவன் ஏழுநாள் தீட்டாய் இருப்பானாக; அவன் படுக்கிற படுக்கையும் தீட்டு படும். (லேவி. 15:19-24)

இங்கு நாம் ஒரு பெண்ணுக்கு இயற்கையாக வரும் மாத விடாயை பற்றி பார்க்கிறோம். உடம்பில் இருந்து வெளியே தள்ளப்படும் எதுவும் தீட்டானதே. அது ஒழுங்காக வந்து அவள் ஆரோக்கியமுள்ளவள் என்று காட்டினாலும், அளவுக்கு மிஞ்சி வந்து அவளுக்கு ஏதோ ஒரு பற்றாக் குறையோ அல்லது வியாதியோ இருப்பதை காட்டினாலும், இரண்டும் அவளை தீட்டாக்குவதே. யாரும் அவளையோ அவள் படுக்கையையோ தொட்டால் அவர்களும் தீட்டாவார்கள்.

ஒரு ஸ்திரீ விலகி இருக்க வேண்டிய காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேகநாள் ஊறி கொண்டிருந்தால் அல்லது அந்த காலத்துக்கு மிஞ்சி அது கண்டிருக்கும் நாளெல்லாம் ஊறி கொண்டிருந்தால், தன் விலக்கத்தின் நாட்களில் இருந்தது போல அவள் தீட்டாயிருப்பாளாக. அந்த நாட்களெல்லாம் அவள் படுக்கும் எந்த படுக்கையும், அவள் விலக்கத்தின் படுக்கையை போல, அவளுக்கு தீட்டாயிருக்கும்; அவள் உட்கார்ந்த மணையும், அவளுடைய விலக்கத்தின் தீட்டை போலவே தீட்டாயிருக்கும். அப்படிப்பட்டவைகளைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களை தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பானாக. அவள் தன் உதிர ஊறல் நின்று சுத்தமான போது, அவள் ஏழுநாள் எண்ணி கொள்வாளாக; அதின் பின்பு சுத்தமாயிருப்பாள். எட்டாம் நாளிலே இரண்டு காட்டு புறாக்களையாவது, இரண்டு புறா குஞ்சுகளையாவது, ஆசரிப்பு கூடார வாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டு வரக்கடவள். ஆசாரியன் அவைகளில் ஒன்றை பாவ நிவாரண பலியும், மற்றொன்றை சர்வாங்க தகன பலியுமாக்கி, அவளுக்காக கர்த்தருடைய சந்நிதியில் அவளுடைய உதிர ஊறலினிமித்தம் பாவ நிவிர்த்தி செய்யக்கடவன். (லேவி. 15:25-30)

பெரும் பாடு கொண்ட ஸ்திரீ சுத்தமாகுவதை மாற்கு 5:26-30 வசனங்களில் பார்க்கின்றோம். அதுவும் அற்புத சுகமே ஆகும். பரிசுத்த மாற்கு 5:25-34 வசனம் வரை காணப்படும் பெரும்பாடு கொண்ட ஸ்திரீயை போன்று மிகவும் வருத்தப்பட்டவளாகவும் எத்தனையோ வைத்தியம் பார்த்தும் சுகம் கிட்டாதவளுமான ஒரு ஸ்திரீயை லேவியராகமம் 15-வது அதிகாரத்திலும் நாம் பார்க்கின்றோம். அவளது இறுதி தஞ்சம் பரிசுத்தராகிய தேவனே ஆகும். இயேசுவின் வஸ்திரம் தொட்டவுடன் புதிய ஏற்பாட்டில் பார்க்கும் ஸ்திரீ பூரண சுகம் பெற்றாள். அதுவே பழைய ஏற்பாட்டின் பெண்ணிற்கும் கிடைக்க போகும் பரிசு ஆகும். அவள் சுத்தமானவுடன் எட்டாவது நாள் ஆசாரியனை சந்தித்து, ஏற்ற பலி செலுத்தி, சுகம் பெற்ற பின்னர் பரிசுத்தம் விலகி விட்டால் பெற்ற சுகமும் அவளை விட்டு அகன்றே போகும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நடுவே இருக்கிற என்னுடைய வாசஸ்தலத்தை தீட்டுப்படுத்தி, தங்கள் தீட்டுகளால் சாகாதபடிக்கு, இப்படி நீங்கள் அவர்கள் தீட்டுகளுக்கு அவர்களை விலக்கி வைக்கக் கடவீர்கள். பிரமியம் உள்ளளவனுக்கும் இந்திரிய கழிவினாலே தீட்டானவனுக்கும், சூதக பலவீனமுள்ளவளுக்கும்,பிரமியமுள்ள ஸ்திரீ புருஷருக்கும், தீட்டாய் இருக்கிறவளோடே படுத்து கொண்டவனுக்கும் ஏற்ற பிரமாணம் இதுவே என்றார். (லேவி.15:31-33)

தீட்டானவர்கள், தாங்கள் தீட்டானதற்கு தாங்களே காரணம் இல்லாவிட்டாலும் அவர்கள் ஒதுக்கி வைக்கப் பட்டவர்களாக காணப்பட்டார்கள். அவர்கள் பாளயத்திற்கு புறம்பே செல்ல வேண்டும். கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கவும், பரிசுத்த போஜனத்தில் பங்கு பெறவும் தடை செய்யப்பட்டார்கள்.

லேவியராகமம் 15:31-வது வசனத்தை பாருங்கள். இஸ்ரவேல் புத்திரர், தங்கள் நடுவே இருக்கிற என்னுடைய வாசஸ்தலத்தை தீட்டுப்படுத்தி தங்கள் தீட்டுகளால் சாகாதபடிக்கு இப்படி நீங்கள் அவர்கள் தீட்டுகளுக்கு அவர்களை விலக்கி வைக்கக்கடவீர்கள் என்று கூறப்பட்டு உள்ளது. அவர்களை விலக்கி வைக்கக் கடவீர்கள் என்று அந்த வசனம் முடிகின்றது. அதன் பொருள் அவர்களை கர்த்தருக்கு என்று பிரித்து எடுங்கள் என்பது ஆகும். எல்லாவிதமான அசுத்தங்களிலும் இருந்து என் பிள்ளைகள் பிரித்து எடுக்கப்பட்ட பிள்ளைகளாக வாழவேண்டும் என்பதே கர்த்தரின் பிரியம் ஆகும். இயற்கையாக மனித சரீரங்களில் வரும் உபாதைகளுக்கும் கர்த்தரே தஞ்சமாக இருக்கின்றார். பாதை தவறி விடுவதால் சரீரத்தில் வரும் வாதைகளுக்கும் கர்த்தரே தஞ்சமாக இருக்கின்றார்.

தொகுதி - 5
பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்களுக்கு பாவநிவாரண நாள்

அத்தியாயம் - 9
வருடாந்தர பாவ நிவிர்த்தியும் நித்திய இரட்சிப்பின் திட்டமும்

9.1 ஆசரிப்பு கூடாரத்தில் ஆசாரியர்

லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில் ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதை நாம் பார்க்க இருக்கின்றோம். ஆசாரியனாகிய ஆரோன் பிரகாரத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க போகின்றான். எதற்காக போகிறான்? கர்த்தருக்காக பிரித்து எடுக்கபட்ட ஜனங்கள் பாவ மன்னிப்பின் அனுபவத்திற்குள் பிரவேசிக்க, அவர்களுக்காக மன்றாடுவதற்காக தன் உயிரை பணயம் வைத்து கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்க போகிறான். மக்கள் பரிசுத்த மக்களாக வாழ வேண்டும் என்றால் அவர்கள் தெரியாமல் செய்த பாவங்களுக்கு வருடம் தோறும் மன்னிப்பு பெற்று புது வாழ்வு வாழ வேண்டும். பரிசுத்த வாழ்வுக்கு ஒவ்வாதது அவர்கள் வாழ்வில் காணபட்டால் அதை கண்டுபிடிக்க வேண்டிய ஆசாரியனே, அவர்கள் செய்த பாவங்களுக்கும் விமோசனம் கர்த்தரிடத்தில் இருந்து பெற்று கொடுக்க வேண்டும். இது நடைபெற வேண்டிய பிரமாணங்களை கர்த்தர் இடத்தில் இருந்தே மோசே பெற்று ஆசாரியருக்கு கொடுக்கிறான்.



ஆசரிப்புக் கூடாரம்

ஆசரிப்பு கூடாரமானது பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என்று மூன்று பிரிவுகள் கொண்டது. அதில் பிரகாரம் என்ற பகுதியில் மட்டுமே ஜனங்கள் ஆராதிக்கவும் பலி செலுத்தவும் கூடி வர முடியும். பிரகாரத்தில் தகன பலி பீடம் இருந்தது. மேலும் ஆசாரியர்கள் தங்களை கழுவி சுத்தம் செய்வதற்கு உரிய வெண்கல தொட்டியும் இருந்தது. ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் ஆசாரியர்கள் தங்களை கண்டிப்பாக கழுவி கொள்ள வேண்டும். ஆசரிப்பு கூடாரம் இரண்டு பகுதிகள் கொண்டது. புதிய ஏற்பாட்டில் எபிரேயருக்கு எழுதின நிருபம் இந்த இரண்டு பகுதிகளை முதலாவது கூடாரம் இரண்டாவது கூடாரம் என்று அழைக்கின்றது. முதலாம் கூடாரத்தில் ஆரோனும் அவன் குமாரராகிய ஆசாரியர்கள் மட்டும் பிரவேசிக்கலாம். இரண்டாம் கூடாரத்தில் ஆரோனாகிய ஆசாரியர் ஒருவர் மட்டுமே பிரவேசிக்க முடியும். அதுவும் வருடத்திற்கு ஒரே ஒரு முறை மட்டுமே ஆரோன் பிரவேசிக்க முடியும். ''ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும் படிக்கு முதலாம் கூடாரத்தில் நித்தமும் பிரவேசிப்பார்கள். இரண்டாம் கூடாரத்திலே பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒரு தரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தை தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காவும் செலுத்துவான்,'' என்று எபி. 9:6,7-ல் பார்க்கிறோம்.

9.2 பரிசுத்தம் காத்து கொள்ள ஆசாரியருக்கு கட்டளை

ஆரோனின் இரண்டு குமாரர் கர்த்தருடைய சந்நிதியிலே சேர்ந்து மரித்து போன பின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி. (லேவி. 16:1)

முதலாம் கூடாரம் என்பது பரிசுத்த ஸ்தலம் ஆகும். இரண்டாம் கூடாரம் என்பது மகா பரிசுத்த ஸ்தலம். பரிசுத்த ஸ்தலத்தில் மூன்று பொருட்கள் இருந்தன. அவைகள் பொன் குத்து விளக்கு, சமுகத்து அப்பமேஜை, தூப பீடம் என்ற மூன்றும் ஆகும். மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டி உள்ளது. மகா பரிசுத்தர் அங்கு வீற்று இருக்கின்றார். ஆசாரியனாகிய ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசித்தே தீர வேண்டும். வருடம் ஒரு முறை வலுகட்டாயமாக நடைபெறும் இந்த ஆராதனை வர போகும் மேசியாவிற்கு வழி வகுக்கும் ஆராதனையாக லேவி. 16:1-ல் பார்க்கிறோம். 'கர்த்தர் மோசேயை நோக்கி' என்று அந்த வசனம் துவங்குகின்றது. லேவியராகம புத்தகத்தில் ஆசாரியர்கள் சம்பந்தப்பட்ட குறிப்புகள் நேரடியாக ஆசாரியர்களிடம் கூறப்படவில்லை. முதலாவது மோசேயிடம் கூறப்பட்டது. மோசே மூலமாக ஆசாரியர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆரோன் மூத்த சகோதரனாக இருந்தாலும், ஆசாரியர்களில் முக்கியமானவனாக இருந்தாலும், மோசே தான் முழு பொறுப்பாளனாக இருக்கிறார் என்பதை இது காட்டுகின்றது. உபாகமத்தின் கடைசி அதிகாரம் வரை மோசே என்ற தேவனுடைய ஊழியக்காரன் வீரமும் விவேகமும் உள்ள பொறுப்பாளனாகவும், தூய்மையும் உண்மையும் உள்ள தலைவனாகவும், நீதியும் நேர்மையும் கொண்ட நிர்வாகியாகவும் காணப்படுவதை நாம் பார்க்கலாம். ''மோசே மரிக்கிற போது நூற்றிருபது வயதாயிருந்தான்; அவன் கண் இருள் அடையவில்லை, அவன் பெலன் குறையவும் இல்லை,'' என்று உபா.34:7-ல் பார்க்கிறோம். ''கர்த்தரை முக முகமாய் அறிந்த மோசேயைப் போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினது இல்லை என்று விளங்கும்,'' என்று உபா. 34:12-ல் பார்க்கிறோம்.

லேவியராகமம் 16-வது அதிகாரத்தில் பாவ நிவிர்த்தி ஆராதனை இடம் பெறுகின்றது. ஸ்தோத்திர கீதத்துடன் துவங்கபட வேண்டிய ஆராதனை எச்சரிப்பின் குரல் பெற்று

துவங்குகின்றது. 16-ம் அதிகாரம் ஆரோனின் இரண்டு குமாரர் கர்த்தருடைய சந்நிதியில் மரித்து போன பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி என்று துவங்குகின்றது. ஆரோனின் இரண்டு குமாரர்கள் கர்த்தரின் சந்நிதியில் சேர்ந்து மரித்து போனார்கள் என்பதை 10-வது அதிகாரத்தில் பார்த்தோம். இப்பொழுது ஆரோன் பாவநிவிர்த்தி ஆராதனை நடத்த கர்த்தரின் சந்நிதி செல்ல வேண்டும். பழைய ஞாபகம் திரும்பவும் அவன் நினைவிற்கு கொண்டு வரப்படுகின்றது. தவறு இளைப்பதால் பெறும் தண்டனைகளை மறவாமல் இருப்பது நல்லது. அவ்வித தவறுகளை தவிர்த்து வாழுவதற்கு பெற்ற தண்டனைகளின் ஞாபகங்கள் முன் எச்சரிப்பாக அமைகின்றது. மேலும் பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்களும் அவ்வாறு தவறு செய்ய கூடியவர்களே என்று அவன் உணர்வதால், மக்களுக்காக மன்றாட அவனுடைய இருதயம் ஆயத்தமாக இருக்கிறது.

> ***கிருபாசனத்தின் மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன்; ஆதலால் உன் சகோதரனாகிய ஆரோன் சாகாதபடி, பரிசுத்த ஸ்தலத்திலே திரைக்கு உட்புறத்தில் இருக்கிற பெட்டியின் மேல் உள்ள கிருபாசன மூடிக்கு முன்பாக சகல வேளைகளிலும் வர வேண்டாம் என்று அவனுக்கு சொல். (லேவி. 16:2)***

மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டி உண்டு. அது மகா பரிசுத்தம் ஆனது. யாத். 25:10-22 வசனங்கள் வரை உடன்படிக்கை பெட்டி எப்படி செய்யப்பட வேண்டும் என்று நாம் பார்த்தோம். சித்தீம் மரத்தினால் செய்யப்பட்ட இந்த உடன்படிக்கை பெட்டி மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டது. இரண்டரை முழ நீழமும், ஒன்றரை முழம் அகலமும், ஒன்றரை முழம் உயரமும் கொண்ட உடன்படிக்கை பெட்டியின் மூடி கிருபாசனம் என்று அழைக்கப்பட்டது. யாத். 25:16-ல் சாட்சியின் பிரமாணம் உடன்படிக்கை பெட்டியின் உள்ளே வைக்கப்பட வேண்டும் என்று கர்த்தரால் அறிவிக்கப்பட்டது. கர்த்தர் அறிவித்தபடியே மோசே அதனை செய்தான் என்பதை யாத். 40:20,21-ல் பார்க்கிறோம். ''கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே சாட்சி பிரமாணத்தை எடுத்து அதை பெட்டியிலே வைத்து பெட்டியில் தண்டுகளை பாய்ச்சி பெட்டியின் மேல் கிருபாசன மூடியை வைத்து பெட்டியை வாசஸ்தலத்திற்கு உள்ளே கொண்டு போய், மறைவின் திரை சீலையை தொங்க வைத்து, சாட்சி பெட்டியை மறைத்து வைத்தான்,'' என்று யாத். 40:20,21-ல் பார்க்கிறோம்.

சாட்சி பிரமாணம் என்பது 10 கற்பனைகள் ஆகும். 10 கற்பனைகள் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகள் உடன்படிக்கை பெட்டியில் இடம் பெற்றன. பின்னான நாட்களிலே வனாந்தரத்தில் உணவாக பெற்ற மன்னாவும் சாட்சி பெட்டியில் வைக்கப்பட்டது. சற்று பின்னதாக ஆரோனின் துளிர்த்த கோலும் கூட அங்கு வைக்கப்பட்டது. துளிர்த்த கோலின் விபரம் எண்ணாகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. இவ்வாறாக சாட்சி பெட்டி என்று யாத்திராகம புத்தகத்திலும், உடன்படிக்கை பெட்டி என்று உபாகம புத்தகத்திலும் அழைக்கப்பட்ட மகா பரிசுத்தமான இந்த பெட்டியின் உள்ளே 10 கற்பனைகள் எழுதப்பட்ட உடன்படிக்கையின் கற்பலகைகளும், மன்னா வைக்கப்பட்ட பொற் கலசமும், ஆரோனின் துளிர்த்த கோலும் இருந்தன என்பதை எபிரேயர் நிரூபத்தில் பார்க்கின்றோம். ''அந்த பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற் பாத்திரமும், ஆரோனுடைய துளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன'' (எபி. 9:4).

அந்த மூன்றும் மிக முக்கியத்துவம் பெற்றவைகள் ஆகும். மனிதனின் ஆவிக்குரிய தேவைகளை சந்திக்கிறவர் கர்த்தர் ஒருவரே என்பதை உணர்த்த 10 கற்பனைகள் எழுதப்பட்ட கற்பலகைகள் வைக்கப்பட்டன. மனிதனின் சரீர தேவைகளை சந்திக்க கர்த்தர் ஒருவரால் மட்டுமே ஆகும் என்பதை காட்ட பொற்கலசத்து மன்னா வைக்கப்பட்டது. கர்த்தரால் அழைக்கப்படாமல் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய எந்த மனிதனாலும் முடியாது என்பதை தெரிவிக்க ஆரோனின் துளிர்த்த கோல் வைக்கப்பட்டது. மனிதன் தன் தனிப்பட்ட ஜீவியத்தில் பரிசுத்தம் நிரம்பி வாழ்வதற்கு பத்து கற்பனைகள் ஞாபகப்படுத்துகின்றன. தனது குடும்ப ஜீவியத்தில் எவ்வித பற்றாக்குறையும் இன்றி தேவ ஆசீர்வாதம் பெற்று வாழ்வதற்கு பொற்கலசத்து மன்னா ஊக்கப்படுத்துகின்றது. ஆவிக்குரிய நிர்வாகங்கள் உண்மை, நேர்மை, நீதி நிறைந்து காணப்பட ஆரோனின் துளிர்த்த கோல் ஞாபகப்படுத்துகின்றது. தனி மனிதன், குடும்பம், சமூகம் ஆகிய மூன்றையும் ஒருங்கே தன்னகத்தை கொண்டதாக உடன்படிக்கை பெட்டி காணப்படுகின்றது.

உடன்படிக்கை பெட்டி சாதாரணமானது அல்ல. மிக அசாதாரணமானது. அனைவர் கண்ணிலும் படுவது அல்ல. ஆசாரியன் கண்ணில் மட்டும் படுவது ஆகும். அடிக்கடியும் அல்ல, வருடம் ஒரே ஒரு முறை ஆகும். அதன் அருகில் செல்லுகிறவன் ஆரோனாகிய ஆசாரியனாக மட்டுமே இருக்க முடியும். ஏற்ற சரீர மன ஆயத்தத்துடன் அவன் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவனது மூத்த இரண்டு பிள்ளைகளுக்கும் நேர்ந்த முடிவு ஆரோனின் முடிவு ஆகி விடும் என்ற எச்சரிப்பு 16-வது அதிகாரம் துவக்கத்தில்தானே கொடுக்கப்பட்டது.

மகா பரிசுத்த ஸ்தலத்தின் உடன்படிக்கை பெட்டியின் மீது வைக்கப்பட்ட மூடியின் பெயர் கிருபாசனம் என்பது ஆகும். யாத். 40:20-வது வசனத்தில் சாட்சி பெட்டியின் மேல் கிருபாசன மூடியை மோசே வைத்தார் என்று எழுதப்பட்டு உள்ளது. கிருபாசன மூடியின் இரு பக்கங்களிலும் இரண்டு கேரூபீன்கள் அமர்த்தப்பட்டு இருந்தன. இரண்டு கேரூபீன்களும் தங்கள் செட்டைகளினால் கிருபாசனத்தை மூடி கொண்டன. கிருபாசனம் அல்லது சாட்சி பெட்டியின் மூடி என்பது எப்படி செய்ய வேண்டும் என்பதை யாத். 25:17-21-ல் நாம் பார்த்தோம். இரண்டரை முழ நீழமும், ஒன்றரை முழ அகலமும் கொண்ட கிருபாசன மூடி சுத்த பொன்னினால் செய்யப்பட்டது ஆகும்.

கிருபாசனம் என்பதின் எபிரெய சொல் 'கப்போரத்' (Kapporeth) என்பது ஆகும். அது கஃபார் (Kaphar) என்னும் மூடி என்று பொருள்படும் சொல்லில் இருந்து வந்தது. ஆகவே கப் போரத் என்பதின் பொருள் மூடுதல், துடைத்து விடுதல், சுத்தம் செய்தல் அல்லது நிவிர்த்தி செய்தல் என்பது ஆகும். ஆசாரியனாகிய ஆரோன் பாவ நிவிர்த்தி செய்ய வருடம் ஒரு முறை மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிக்க வேண்டும். உடன்படிக்கை பெட்டி அருகில் நின்று கிருபாசனத்தை நோக்க வேண்டும். கிருபாசனத்தை தங்கள் செட்டைகளால் மூடும் கேரூபீன்கள் நடுவில் கர்த்தர் வீற்று இருக்கின்றார். ''கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார், ஜனங்கள் தத்தளிப்பார்களாக; அவர் கேரூபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார், பூமி அசைவதாக,'' என்று சங். 99:1-ல் பார்க்கிறோம்.

பாவ நிவிர்த்திக்காக ஜெபிக்க கேரூபீன்கள் மத்தியில் வீற்று இருக்கும் தேவனுக்கு முன்பாக ஆரோன் வந்து நிற்க வேண்டும். கிருபாசனம் என்பதின் எபிரெய சொல் 'கப்போரத்' என்று நாம் பார்த்தோம். அதன் சரியான பொருள் 'மூடுதல்' அல்லது 'நிவிர்த்தி செய்தல்'

என்றும் பார்த்தோம். இது ஜெர்மானிய மொழியில் ஞாடென்ஸ்துகி (Gnadenstuhi) என்று லுத்தர் வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதன் பொருள் கிருபையின் ஆசனம் என்பதாகும். கடந்த வருடம் முழுவதும் நாங்கள் செய்த பாவங்களும் துரோகங்களும் மூடப்படட்டும் என்று ஆரோன் கிருபாசனம் நோக்கி வர போகின்றான். எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான் என்று 32-வது சங்கீதம் முதலாவது வசனம் கூறுகின்றது. எங்கள் அனைவரின் பாவத்தையும் மூடும், எங்களை நீதிமான்கள் என்ற நிலைக்கு கொண்டு வாரும் என்று கெஞ்சுவதற்கு ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலம் நோக்கி புறப்பட இருக்கின்றான்.

யாத்திராகமம் 19-வது அதிகாரம் முதல் வசனம் முதல் லேவியராகமம் முடிய ஏராளமான நிபந்தனைகளும், கட்டளைகளும், பிரமாணங்களும் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்றன. யாராவது ஒருவர் தெரியாமல் அதில் ஒன்றை மீறி விட்டாலும் அது பெரிய பாவம் ஆகி விடும். பாவத்தின் சம்பளம் மரணம் ஆகி விடும். லேவி. 16:2-ல் கிருபாசனத்து மூடி என்பதற்கு உபயோகிக்க பட்ட எபிரேய சொல் ரோ. 3:26-வது வசனத்தில் கிருபாதாரபலி என்று வரும் கிரேக்க சொல்லிற்கு சமமாக இருக்கின்றது. ''கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தை பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.''

கிருபாசன மூடியை அதிக அச்சத்துடன் ஆரோன் அணுகினான். கிருபாதார பலியாகிய ஏசுவை அதிக அன்புடன் எவரும் அணுகலாம். தேவன் நீதி உள்ளவராக இருக்கின்றார் என்பதற்கு பழைய ஏற்பாட்டில் பார்க்கும் கிருபாசன மூடி அடையாளமாக நிற்கின்றது. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதற்கு புதிய ஏற்பாட்டில் பார்க்கும் கிருபாதாரபலி அடையாளமாக இருக்கின்றது. ''அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிற்று.'' என்று 1 யோ. 4:10-ல் பார்க்கிறோம். கர்த்தரின் சமுகத்திற்கு முன் ஆரோன் அச்சத்துடன் சென்றான். அதே கர்த்தரின் சமுகத்தின் முன் இன்று அன்புடன் அருகில் செல்லலாம். அதற்கு துணை செய்யும் நாமம் இயேசுவின் நாமம் ஆகும்.

வருடம் ஒரு முறை பாவ நிவிர்த்தி ஆராதனை இடம் பெறுகின்றது. 16-ம் அதிகாரத்தின் இறுதி வசனம் இதனை திட்ட வட்டமாக தெரிவிக்கின்றது. ''இப்படி வருஷத்தில் ஒரு முறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய சகல பாவங்களுக்கும் பாவ நிவிர்த்தி செய்வது, உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது என்று சொல் என்றார்,'' என்று லேவி. 16:34-ல் பார்க்கிறோம். வருடத்தின் எந்த மாதம் எந்த தேதியிலே பாவநிவிர்த்தியின் நாள் இடம் பெற வேண்டும் என்பதனை இதே அதிகாரத்தில் 29-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே சுதேசி ஆனாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசி ஆனாலும் பாவ நிவிர்த்தியின் நாளில் எந்த வேலையும் செய்ய கூடாது என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. பாவ நிவிர்த்தி ஆராதனை வருடம் தோரும் ஏழாவது மாதம் பத்தாவது நாள் அனுசரிக்கப்பட வேண்டும் என்று நாம் பார்க்கிறோம்.

ஏழாம் மாதம் என்பது 'திஸ்ரி மாதம்' (Tishrei) என்று அழைக்கப்பட்டது. 'திஸ்ரி மாதம்' 10-ம் நாள் என்பது இன்றைய நாள் காட்டியில் செப்டம்பர் மாதம் 30-வது நாள் ஆகும். பாவ நிவிர்த்தி ஆராதனை ஒரு உபவாச ஆராதனை ஆகும்.

லேவி. 16:3-28 வசனம் வரை கூறப்பட்டு உள்ள இந்த ஆராதனையில் 14 நிலைகளை நாம் காண்கிறோம். ஆசாரியனாகிய ஆரோன் 14 நிலைகளை இந்த ஆராதனை நடத்தும் பொழுது அதிக கவனத்துடன் கடந்து செல்கிறான் என்பதை நாம் பார்க்கலாம். இந்த 14 நிலைகளையும் நாம் ஓரளவு ஆராய்ந்து கொண்டால் நல்லது.

முதலாவது நிலை பிரகாரத்தில் இருக்கும் வெண்கல தொட்டியில் ஆசாரியன் தன்னை சுத்திகரித்து கொண்டு பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு என்று பிரத்தியேக படுத்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட உடையை அவன் அணிந்து கொள்ளுகிறான். இது முதலாவது நிலையில் நடைபெறும் நிகழ்ச்சி ஆகும். இதனை 16:4-வது வசனத்தில் நாம் காணலாம்.

இரண்டாவது நிலையில் ஆரோன் தனக்காகவும் தனது குடும்பத்திற்காகவும் ஒரு காளையை பாவ நிவாரண பலியாக செலுத்துகின்றான் என்பதை நாம் பார்க்கின்றோம். இதனை 3,11-வது வசனங்கள் கூறுகின்றன.

மூன்றாவது நிலை காளையின் இரத்தத்தை கையில் எடுத்து ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிப்பது ஆகும். 12,13 ஆகிய வசனங்களில் இதனை பார்க்கின்றோம்.

நான்காவது நிலை ஆரோன் கையில் இருந்த இரத்தத்தை கிருபாசனத்தின் மீது தெளிப்பது ஆகும். இதனை 14-வது வசனத்தில் பார்க்கின்றோம்.

ஐந்தாவது நிலையாக ஆராதனையில் இடம் பெறுவது ஆசரிப்பு கூடாரத்திற்கு வெளியே ஆரோன் வருகை தந்து அங்கு இருக்கும் இரண்டு வெள்ளாட்டு கடாக்கள் பெயரில் சீட்டு போடுகின்றான். ஒன்றை பலியிடவும் மற்றொன்றை பவனி செல்லவும் ஆரோன் தீர்ப்பு அளிக்கின்றான். இதனை ஏழாவது வசனத்தில் நாம் காணலாம்.

ஆராதனையில் ஆறாவது நிலை அதிக நிகழ்ச்சிகள் இடம் பெறும் நிலையாக தெரிகின்றது. பலியிடுவதற்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட ஒரு வெள்ளாடு ஜனங்களின் பாவத்திற்காக வெட்டப்படுகின்றது. அதின் இரத்தம் பிடிக்கப்படுகின்றது. அந்த இரத்தத்துடன் ஆரோன் இரண்டாவது முறையாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கின்றான். கிருபாசனத்தின் மேலும் அதற்கு முன்பாக இருக்கும் இடத்திலும் ஆரோன் இரத்தத்தை தெளிக்கின்றான். இதனை 5,9,15-வது வசனங்களிலும் 16-வது வசனத்தின் முன் பாகத்திலும் காணலாம்.

ஏழாவது நிலையில் வெள்ளாட்டு கடாவின் இரத்தத்தில் மீதியாக இருக்கும் இரத்தத்துடன் ஆசரிப்பு கூடாரத்தின் முன்பாக ஆரோன் வருகின்றான். ஜனங்கள் கூடும் இடமான பிரகாரம் இதன் மூலம் தீட்டு கழிக்க படுகின்றது.

எட்டாவது நிலையில் இன்னும் மீதியாக இருக்கும் காளை வெள்ளாடு ஆகிய இரண்டின் இரத்தத்துடன் தகன பலிபீடம் சென்று பலிபீடத்தின் கொம்புகளில் இரத்தத்தை ஆரோன் பூசுகின்றான். 18-வது வசனத்தில் இதனை காணலாம்.

ஆராதனையின் ஒன்பதாவது நிலை 20,21,22 ஆகிய வசனங்களில் தெரிகின்றது. இரண்டாவது ஆட்டினை போக்காடாக ஆரோன் வனாந்தரத்திற்கு அனுப்பி வைக்கின்றான். அந்த ஆட்டினை அழைத்து சென்ற மனிதன் செல்ல வேண்டிய தூரம் சென்று திரும்பி வருவதை 26-வது வசனம் காட்டுகின்றது. இதுவே ஆராதனையின் பத்தாவது நிலையாகும்.

ஆராதனையின் பதினோராவது நிலை ஆரோன் பாவநிவிர்த்தி ஆராதனைக்கு என்று உடுத்தி இருந்த பிரத்தியேகமான ஆடையை களைந்து விடுகின்றான். 23-வது வசனத்தில் இந்த நிகழ்ச்சி இடம் பெறுகின்றது.

ஆராதனையின் பன்னிரெண்டாவது நிலை ஆரோன் தன்னை சுத்தம் செய்து கொண்டு அவனுக்கு என்று உரித்தான வஸ்திரத்தை திரும்பவும் உடுத்தி கொள்ளுகின்றான். இதனை 24-வது வசனம் கூறுகின்றது.

பதிமூன்றாவது நிலையாக ஆராதனையில் இடம் பெறும் நிகழ்ச்சி இறுதி பலி செலுத்தப்படும் நிகழ்ச்சி ஆகும். 24-வது வசனத்தில் இதனை பார்க்கலாம்.

இறுதியான நிலை அல்லது ஆராதனையின் பதினான்காவது நிலை என்பது பலியான மிருகங்களின் பாகங்கள் அனைத்தும் பாளயத்திற்கு புறம்பாக எடுத்து செல்லப்பட்டு சுட்டு எரிக்க படுகின்றது. 27,28 ஆகிய வசனங்களில் இதனை காணலாம். பாவ நிவிர்த்தி ஆராதனை மிக மிக நுட்பமான ஆராதனை ஆகும். எண்ணற்ற ஒழுங்கு முறைகள் குவிந்து நிற்கின்றன. அந்த ஆராதனை ஒழுங்குகளை மிக கவனத்துடன் ஆரோன் கைக்கொண்டு நடத்துவதை நாம் பார்க்கின்றோம்.

பரிசுத்தராகிய தேவனின் கண்களும் அதனை பார்த்து கொண்டே இருக்கின்றது. ஒரு சிறு தவறும் இடம் பெறாத முறையில் ஆரோன் எடுத்து நடத்துகின்றான். ஒவ்வொரு முறையும் ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து உயிரோடு திரும்பி வருவது கண்கொள்ளாத காட்சியாக இருக்கும். ஆராதனையின் இந்த பதினான்கு நிலைகளையும் ஆராதனையில் ஐந்து முக்கிய பகுதிகளாக பிரித்து நாம் பார்க்க வேண்டும்.

9.3 ஆசாரியருக்கு முதலாவது பாவநிவிர்த்தி

ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய விதமாவது; அவன் ஒரு காளையைப் பாவநிவாரண பலியாகவும், ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தி பிரவேசிக்க வேண்டும். (லேவி. 16:3)

மூன்று விதமான ஆயத்தங்களை நாம் பார்க்கிறோம். முதலாவது பாவநிவிர்த்தி நாளுக்கு என்று தேவைப்படும் மிருகங்கள் ஆயத்தமாக்கப்பட வேண்டும். ஆரோன் தனக்கென்றும் தனது குடும்பத்திற்கு என்றும் பலியிடுவதற்கு ஒரு காளையையும் ஒரு ஆட்டுகடாவையும் ஆயத்தம் செய்ய வேண்டும். இதனை 3,6,11 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கலாம். காளை பாவ நிவாரண பலிக்கு என்றும், ஆட்டுகடா தகன பலிக்கு என்றும் தேவைபடுகின்றது. தன் குடும்பத்திற்காக செய்யும் பலி என்பது உடன் ஆசாரியர்களுக்காக ஆரோன் செலுத்த வேண்டிய பலி என்பது ஆகும். ஜனங்களுக்காக பாவ நிவாரண பலியாக இரண்டு வெள்ளாட்டு கடாவும் தகன பலியாக ஒரு ஆட்டு கடாவும் ஆயத்தமாக்கப்பட வேண்டும்.

அவன் பரிசுத்தமான சணல்நூல் சட்டையைத் தரித்து, தன் அரைக்கு சணல்நூல் ஜல்லடத்தை போட்டு, சணல் நூல் இடைக்கச்சையை கட்டி சணல்நூல் பாகையைத் தரித்து கொண்டிருக்க வேண்டும்; அவைகள் பரிசுத்த வஸ்திரங்கள்; அவன் ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, அவைகளைத் தரித்துக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்திலே,

பாவநிவாரணபலியாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், சர்வாங்க தகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கக்கடவன். (லேவி. 16:4-5)

முதலாவது பகுதி அனைவரும் அனைத்திலும் ஆராதனைக்கு ஆயத்தமாகுதல் என்பது ஆகும். லேவி. 16:3-5 வசனங்கள் வரை இந்த ஆயத்த நிகழ்ச்சி இடம் பெறுகின்றன. இதயங்கள் ஆயத்தமாகாமல் பாவ நிவிர்த்தி மனிதனுக்கு கிடைப்பது இல்லை. பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு வருவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக ஆரோன் தன்னை ஆயத்தப்படுத்த ஆரம்பித்து விடுவான் என்றும் அந்த ஏழு நாட்களும் தனது சொந்த வீட்டிற்கு கூட ஆரோன் செல்லாமல் ஆசரிப்பு கூடாரத்தில் மட்டுமே தங்கி இருப்பான் என்றும் ஒரு குறிப்பு கூறுகின்றது. தானே பெலவீனமான ஆரோன், திரள் கூட்ட மக்களின் பெலவீனங்களுக்காக உதவி செய்ய வேண்டும் என்ற நிர்பந்தத்தில் இருக்கின்றான். ''தானும் பலவீனமுள்ளவனாய் இருந்தபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறி தப்பி போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாக இருக்கிறான். அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காக பலியிட வேண்டியது போல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாய் இருக்கிறது,'' என்று எபி. 5:2,3-ல் பார்க்கிறோம்.

இரண்டாவது ஆயத்தம் பாவ நிவிர்த்தி நாளுக்கு என்று ஆரோன் அணிய வேண்டிய உடை ஆகும். இதனை நான்காவது வசனத்தில் பார்க்கலாம். ஆரோன் வழக்கமாக உடுத்தும் பரிசுத்த வஸ்திரம் பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு அவனால் உடுத்தி கொள்ள முடியாது. பொன்னால் மினுங்கும் அங்கியை ஆரோன் அன்றைய தினத்திலே அணிய கூடாது. மிக மிக சாதாரணமான ஒரு உடையில் தான் பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு ஆரோன் வர முடியும். பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு ஆரோன் எடுக்கும் இரண்டாவது ஆயத்தம் மிக முக்கியமான ஆயத்தமாக காணப்படுகின்றது. ஜலத்தில் தன் சரீரத்தை சுத்தபடுத்தி விட்டு அசுசி வேர்வை எதுவும் இல்லாமல் எளிமையான அந்த உடையை அவன் அணிந்து கொள்ள வேண்டும். ஆரோனுக்கே உரிய பரிசுத்த வஸ்திரத்தை அவன் உடுத்தும் பொழுது ஆரோன் ஒரு அரசனை போல கெம்பீரமாக காணப்படுவான். பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு பிரத்தியேக படுத்தப்பட்ட சாதாரண உடையை ஆரோன் உடுக்கும் பொழுது ஆரோன் ஒரு அடிமையை போல் காணப்படுவான். ''ஆசாரியர் உட்பிரகாரத்தின் வாசலுக்குள் பிரவேசிக்கிற போது சணல் நூல் வஸ்திரங்களை உடுத்தி கொள்ளுவார்களாக. அவர்கள் உட்பிரகாரங்களின் வாசல்களிலும் உள்ளேயும் ஆராதனை செய்கையில் ஆட்டு மயிர் உடுப்பை தரிக்கலாகாது'' என்று எசே. 44:17-ல் பார்க்கிறோம்.

உலக இரட்சகராகிய இயேசு தனது மேன்மை அனைத்தையும் துறந்து உலகத்திற்கு வர போவதை ஆரோனின் எளிய உடை காட்டுகின்றது என்பதை பிலி. 2:6,7-ல் பார்க்கிறோம். ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைதாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்து மனுஷ சாயல் ஆனார்.'' மாம்சமும் இரத்தமும் உடையவர்களான மனிதரிடம், ஆவியாக இருக்கும் தேவன் அடிமையின் ரூபம் எடுத்து வந்ததில் இருந்து இதனை அறிந்து கொள்ளுகின்றோம். எனவே மாம்சமும் இரத்தமுமான சரீரம் பெற்று சாதாரண மனிதன் போல இயேசு இந்த உலகத்திற்கு வந்தார் என்பது எபி. 2:14-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. ''ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாக இருக்க, அவரும் அவர்களை போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராக மாறினார்;'' என்று

எழுதப்பட்டு உள்ளது. இவ்விதமாக இயேசு நமக்கு ஏற்ற பிரதான ஆசாரியராக தோன்றி விட்டார். இயேசுவை ஏசாயா தீர்க்கதரிசி ஏசாயா 53-வது அதிகாரத்தில் சித்திரிக்கின்றார். ஏசாயா 53:2-வது வசனத்தில் கூறுவது போன்று அவருக்கு அழகும் இல்லை, சவுந்தரியமும் இல்லை. என்றாலும் இயேசு பதினாயிரம் பேரிலும் சிறந்தவராகவே இருக்கின்றார். பாவ நிவிர்த்தி ஆராதனையில் லேவியராகமம் 16-வது அதிகாரத்தில் ஆரோன் ஓர் அடிமை போல் காணப்பட்டாலும் அவனுடைய ஜனங்களுக்கு அவன் ஓர் ஆசாரியனாகவே இருந்தான். நாம் விரும்பத்தக்க ரூபம் இயேசுவுக்கு இல்லை என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 53-வது அதிகாரம் கூறினாலும் அவரை ருசித்தவர்களுக்கு இயேசு பள்ளதாக்கின் லீலி புஷ்பமாகவே இருக்கின்றார்.

ஆசரிப்பு கூடாரத்தில் இடம் பெறும் பாவ நிவிர்த்தி நாள் நிகழ்ச்சி, பிதாவின் உலக இரட்சிப்பின் திட்டத்திற்கு ஒரு முன் அடையாளமாக தெரிகின்றது. ஆரோன் உடுத்திய உடையில் இருந்து இதனை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். ஏழ்மை கோலமாக வைக்கோல் போர்வையிலும், தாழ்மை கோலமாக கல்வாரி சிலுவையிலும் காணும் இயேசுவை அன்று நடந்த பாவ நிவிர்த்தி நாள் பிரதிபலித்து காட்டுகின்றது. பரிசுத்த பவுல் கொலோ. 2:17-வது வசனம் கூறுவது போல அவைகள் வரும் காரியங்களுக்கு நிழலாய் இருக்கின்றது. அவைகளின் பொருள் கிறிஸ்துவை பற்றினது.

பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு மூன்று ஆயத்தங்கள் இடம் பெற வேண்டும் என்று பார்த்தோம். அதில் இரண்டு ஆயத்தங்களை நாம் கண்டோம். இடம் பெற வேண்டிய மூன்றாவது ஆயத்தம் 29-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. ''ஏழாவது மாதம் பத்தாம் தேதியிலே சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும் தங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்துவதும் அன்றி ஒரு வேலையும் செய்யாமல் இருக்க வேண்டும். இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது,'' என்று லேவி. 16:29-ல் பார்க்கிறோம்.

மூன்றாவதாக முழு சபையாரும் வேலைக்கு செல்லாமல் உபவாசம் செய்ய வேண்டும். தங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்த வேண்டும். திட்ட வட்டமான கட்டளையாக இந்த ஆயத்தம் கொடுக்கப்படுவதை லேவி. 23:26-32-வது வசனங்களில் பார்க்கிறோம். ''பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: அந்த ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்கு பாவ நிவிர்த்தி செய்யும் நாளும் சபை கூடும் பரிசுத்த நாளுமாக இருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்தி கர்த்தருக்கு தகனபலி செலுத்த கடவீர்கள். அந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காக பாவ நிவிர்த்தி செய்யப்படும் பாவ நிவாரண நாளாக இருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். அந்நாளிலே தன்னை தாழ்மை படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். அந்த நாளிலே ஒரு ஆத்துமா யாதொரு வேலை செய்தால், அந்த ஆத்துமாவை அவன் ஜனத்தின் நடுவிலே வைக்காமல் அழிப்பேன். அதில் நீங்களும் எந்த வேலையும் செய்யாது இருப்பது உங்கள் வாசஸ்தலங்களில் எல்லாம் உங்கள் தலைமுறை தோறும் செய்ய வேண்டிய நித்திய கட்டளை. அது உங்களுக்கு விசேஷித்த ஓய்வு நாள்; அதில் உங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்த வேண்டும்; அந்த மாதத்தின் ஒன்பதாம் தேதி சாயங்காலம் துவங்கி, மறுநாள் சாயங்காலம் மட்டும் உங்கள் ஓய்வை ஆசரிக்க கடவீர்கள் என்றார்.'' என்று லேவி. 23:26-32-ல் பார்க்கிறோம்.

மூன்றாவது ஆயத்தம் ஒவ்வொருவரும் தங்கள் ஆத்துமாவை தாழ்மை படுத்த வேண்டும் என்பதே ஆகும். நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவ படுத்தினேன் என்று தாவீது அரசன் சங். 35:13-வது வசனத்தில் கூறுகின்றான். என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன் என்று சங். 69:10-ல் கதறுகின்றான். நம்மை நாமே நிதானித்து பார்ப்பதும், இரட்சிப்புக்கு ஏற்ற துக்கம் கொள்ளுவதும், ஆத்துமாவை தாழ்மை படுத்துவது என்பது ஆகும். அந்த மீட்கப்பட்ட ஜனங்களுக்கு எவ்வித பொருளாதார குறைவும் இல்லை. பரிசுத்த சபையாக காணப்பட்டார்கள். பொன்னும் பொருளும் ஏராளம் பெற்று எகிப்தை விட்டு வெளியே வந்தார்கள். எவருக்கும் அவர்கள் இப்பொழுது அடிமைகள் அல்ல. சுதந்தர செல்வங்களாக வாழ்ந்து வருகின்றார்கள். எல்லாம் பெற்றவராக இருக்கும் அவர்கள் பாவ நிவிர்த்தி மட்டும் பெறவில்லை என்றால் எதுவுமே இல்லாதவர்கள் போல ஒரு வெறுமை உணர்ச்சியுடன் வாழ வேண்டியது இருக்கும்.

மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுவது போல அவர்கள் நெஞ்சம் வாடி விடும். அவர்களின் ஆவி களிகூர்ந்து அவர்கள் வாழ தங்கள் ஆத்துமாக்களை பாவ நிவிர்த்தி நாள் அன்று அவர்கள் தாழ்த்தி கொள்ள வேண்டும். அதன் சரியான பொருள் என்னவென்றால் தங்களை தாங்களே வெறுத்து தள்ள வேண்டும். தாழ்மைக்கும் கர்த்தருக்கு பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாகும் என்று நீதி. 22:4-வது வசனம் கூறுகின்றது. கர்த்தருக்கு முன்பாக தாழ்மை படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

ஆரோன் காளையை கொண்டு வருகிறான்



ஆரோன் இரண்டு வெள்ளாட்டு கடாக்களை கொண்டு வருகிறான்

பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவ நிவிர்த்தி செய்யும்படிக்கு, தன்னுடைய பாவ நிவாரணபலியின் காளையைச் சேரப்பண்ணி, அந்த இரண்டு வெள்ளாட்டு கடாக்களையும் கொண்டு வந்து, ஆசரிப்பு கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி அந்த இரண்டு வெள்ளாட்டு கடாக்களையும் குறித்து கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்று ஒரு

சீட்டும் போட்டு, கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரண பலியாக சேரப்பண்ணி, போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக்கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும் அதை போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தி; (லேவி. 16:6-10)

லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில் பாவநிவிர்த்தி ஆராதனை இடம் பெறுகின்றது. ஐந்து பகுதிளாக பிரிக்கப்பட்ட ஆராதனையின் முதல் பகுதியை நாம் பார்த்தோம். பலியிட தேவையான மிருகங்கள் ஆயத்தமாக்கப்பட்டது. ஆரோனுக்கு சிறப்பான உடை ஒன்று உடுத்துவிக்கப்பட்டது. அனைவரும் தங்களைத் தாழ்த்தினார்கள் என்று லேவி. 16:6-19 வசனங்களில் பார்க்க இருக்கின்றோம். இந்த வசனங்களில் பாவநிவிர்த்தி ஆராதனையின் 2-வது, 3-வது பகுதிகளை கடந்து செல்ல இருக்கின்றோம். ஆரோன் தனக்காகவும் தனது வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்ய ஆயத்தமாக்கப்பட்ட காளையை வெட்டுவதற்கு ஆயத்தப்படுகிறான். அந்த வசனத்தில் தன் வீட்டாருக்காகவும் என்பது அவனது குடும்ப உறுப்பினர்களைக் குறிப்பது அல்ல, அவனது உடன் ஊழியர்களை குறிப்பது ஆகும். ஆரோன் தனக்காகவும் தன்னுடன் ஆசரிப்பு கூடாரத்தில் பணி செய்யும் உடன் ஆசாரியர்களுக்காகவும் முதலாவது பாவ நிவிர்த்தி செய்ய வேண்டும்.

அதனை தொடர்ந்து 7-10-வது வசனம் வரை சபை மக்களுக்காக பாவ நிவிர்த்தி செய்வதற்கு கொண்டுவரப்பட்ட இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களை ஆசரிப்பு கூடார வாசலில் கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்துகின்றான். இந்த இரண்டு வெள்ளாட்டு கடாக்களும் ஜனங்களின் பாவ நிவிர்த்திக்காக இரண்டு முறையில் பலியாக போகின்றன. முதல் ஆடு உயிர் துறந்து பலியாகும். மற்ற ஆடு உயிருடன் பலியாகும். உயிர் துறந்து பலியாகும் ஆட்டின் இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலம் வரை செல்லும். உயிருடன் பலியாகும் ஆடு கண்ணிற்கு தெரியாத தொலைவிற்கு போக்காடாக அனுப்பப்படும்.



கால்பே என்ற பாத்திரமும் எழுதப்பட்ட மரத்துண்டுகளும்

இந்த இரண்டு ஆடுகளில் உயிர் துறக்கப்பட வேண்டிய ஆடு எது என்றும், உயிருடன் அனுப்பப்பட வேண்டிய ஆடு எது என்றும் கண்டு பிடிப்பதற்கு ஆரோன் இப்போது செயல்படுகிறான். இந்த இரண்டு ஆடுகளும் முதலாவது ஆசரிப்பு கூடார வாசலில் நிறுத்தப்படுகின்றன. அந்த இரண்டு ஆட்டிற்கும் நடுவில் ஆரோன் வந்து நிற்கிறான். அவன் முன் ஒரு பாத்திரம் கொண்டு வரப்படுகின்றது. அதில் இரண்டு மரத்துண்டுகள் இருக்கின்றது. ஒவ்வொரு மரத்துண்டிலும் ஒரு வார்த்தை எழுதப்பட்டு உள்ளது. ஒரு மரத்துண்டில் 'லஷம்' (Lashshem) என்று எழுதி இருக்கின்றது. 'லஷம்' என்றால் யெகோவாவினுடையது என்று பொருள். அவர்கள் 'யேகோவா' என்ற பெயரை உச்சரிக்க மாட்டார்கள். ஆகவே வேறு பெயர் எழுதினார்கள். அடுத்த மரத்துண்டில் 'அசாசல்' (Azazel) என்று எழுதியிருக்கும். இந்த கட்டை சிவப்பு நிறமானது. அஸ் (az) என்றால் 'ஆடு' என்று பொருள். அசல் (azel) என்றால் வெளிவே போய் விடுவது என்று பொருள். இந்த இரண்டும் எழுதப்பட்ட கருங்காலி மரத்துண்டுகள் (ebony wood) இருக்கும் பாத்திரம் கால்பே (kalpey) என்று கூறப்பட்டது. அது நன்றாக குலுக்கப்படும்.



மேற்கு புறமாக முகம் வைத்து நிறுத்தப்பட்டுள்ள ஆடுகள்



கருஞ்சிவப்பு நூல் கொம்பில் கட்டப்பட்ட போக்காடு

பின்னர் ஆரோன் அதற்குள் தனது இரண்டு கைகளையும் இட்டு ஒவ்வொரு கையிலும் ஒரு மரத்துண்டினை எடுப்பான். ஆடுகள் மேற்கு புறமாக முகம் வைத்து நிறுத்தப்பட்டிருக்கும். இடது கையில் எடுக்கப்பட்ட மரத்துண்டு சிவப்பு நூலினால் கட்டப்பட்டிருக்கும். அது அவனது இடது பக்கமாக நிற்கும் ஆட்டின் கழுத்தில் உடனடியாக கட்டப்படும். வலதுகையில் எடுக்கப்படும் மரத்துண்டு அவனது வலது பக்கமாக இருக்கும் ஆட்டின் கொம்பில் உடனடியாக கட்டப்படும். 'லஷம்' என்று எழுதப்பட்ட மரத்துண்டு கட்டப்பட்ட ஆடு யெகோவாவிற்கு உரியது. அது வெட்டப்படும். அசாசல் என்று எழுதப்பட்ட மரத்துண்டு கருஞ்சிவப்பு நூலினால் கட்டப்பட்டிருக்கும். அது தரிக்கப்பட்ட ஆடு வனாந்தரத்திற்கு அனுப்பப்படுவதற்காக ஓர் குறிப்பிட்ட இடத்தில் கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தப்படும். இவைகளை கவனத்துடன் ஆரோன் செய்கிறான்.

> ***பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவ நிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவ நிவாரணத்துக்கான காளையைக் கொண்டு வந்து, அதை கொன்று, கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின் மேலுள்ள நெருப்பு தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாக கொண்டுவந்து, தான் சாகாதபடிக்கு தூபமேகமானது சாட்சி பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின் மேல் தூபவர்க்கத்தை போடக்கடவன். (லேவி. 16:11-13)***

11-வது வசனம் முதல் பலி செலுத்தும் நிகழ்ச்சி துவங்குகின்றது. ஆரோன் தனக்காகவும் தனது உடன் ஊழியக்காரர்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படி தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையை கொண்டு வந்து, அதை வெட்டுகின்றான். அதன் இரத்தம் ஒரு பாத்திரத்தில் பிடிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் பாவ நிவிர்த்தியின் மூன்றாவது கட்டம் துவங்குகின்றது. மூன்றாவது பகுதி மிக முக்கியமான பகுதியாகும். இந்த மூன்றாவது பகுதியில் ஆரோன் மூன்று முறை மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிக்க இருக்கிறான். அது பாக்கியமான ஒன்றாக இருந்தாலும் மகா ஆபத்தான ஒன்றாகவும் இருக்கின்றது என்பதை ஆரோன் மிக நன்றாக அறிவான். ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நேரடியாக பிரவேசியாமல், ஒரு ஓரமாக

பிரவேசிப்பான் என்றும், வெளியே வரும் பொழுது முதுகை கிருபாசனத்திற்கு காட்டாமல், பின்னாக, பின்னாக மெதுவாக, மெதுவாக எட்டு எடுத்து வைத்து வெளியே வருவான் என்றும், ஒவ்வொரு முறையும் வெளியே வந்தபின்னர் தன்னை ஜனங்களுக்கு காண்பிப்பான் என்றும் அதன் மூலம் ஆரோன் உயிரோடு இருக்கிறான் என்பதை ஜனங்கள் அறிந்து கொள்வார்கள் என்றும் ஓர் குறிப்பு கூறுகின்றது. எனவே ஆராதனையின் மூன்றாவது பகுதி மிக முக்கியமான பகுதியாகும். 11-ம் வசனம் முதல் 19-வது வசனம் வரை ஆராதனையின் மூன்றாவது பகுதி இடம் பெறுகின்றது.

திரைக்கு உட்புறமாக தூபம் போட வரும் ஆரோன்

முதன் முறையாக ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிக்கக் காரணம் 13-வது வசனத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது. தான் சாகாதபடிக்குத் தூபமானது சாட்சி பெட்டியின் மீது இருக்கும் கிருபாசனத்தை மூட வேண்டும். சங். 99:1-வது வசனம் கூறுவது போன்று ''கர்த்தர் கேரூபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார்.'' அவரது மகிமையை எந்த மனிதனும் பார்த்து, உலகத்தில் உயிருடன் இருக்க முடியாது. ஆகையால் ஆரோன் கேரூபீன் நடுவாக இருக்கும் கிருபாசனத்தின் மூடியை நறுமண புகை மண்டலம் உருவாக்கி மறைக்க தூப வர்க்கம் இட வேண்டும். இதற்கு ஆரோன் பயன்படுத்தும் தூப கலசம், தூப கலசத்தின் அக்கினி, அதில் இடப்படும் தூப வர்க்கம் அனைத்தும் கர்த்தர் கட்டளையிட்ட முறையில் அமைய வேண்டும். ஆரோனின் முதல் பிரவேசம் முறைப்படி அமையவில்லை என்றால் அது அவனது முடிவான பிரவேசமாகிவிடும். எனவே இந்த அதிகாரத்தின் இரண்டாவது வசனத்தில் இந்த எச்சரிப்பு ஏற்கனவே கொடுக்கப்பட்டது.



ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து தூபவர்க்கம் இடுகிறான்

இப்பொழுது ஆரோன் தனது கையில் தூப கலசத்தை எடுக்கின்றான். கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் பலி பீடத்தின் மேல் உள்ள நெருப்பு தணலினாலே அதனை நிரப்புகின்றான். யாத். 30:34-38 வசனங்களில் கூறப்பட்ட முறைப்படி தயார் செய்யப்பட்ட தூபவர்க்கத்தினை இரண்டு கை நிரம்ப எடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்து கொள்ளுகின்றான். பின்னர் ஆராதனைக்கு உரிய சகல மரியாதையுடன், பொறுப்பு உணர்ச்சியுடன், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கின்றான். மற்றவர் பார்க்க முடியாதபடிக்கு திரைச்சீலை நடுவாக தடுத்து கொண்டு நிற்கின்றது. மக்களின் கண்களுக்கு மறைந்து விடுகின்றான். மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிக்கிறான். அத்தியந்த பணிவுடன் தூப கலசத்தினை குனிந்து தரையில்

வைக்கின்றான். மகா அமைதியுடன் அதில் தூபவர்க்கம் இடுகின்றான். நறுமணம் வீசும் புகை மண்டலம் துரிதமாக எழும்பி கிருபாசனத்தை மூடி கொள்ளுகின்றது. கிருபாசனத்தை வெளியே உள்ளவர் பார்க்காதபடி திரைச்சீலை மறைத்தது. மகா பரிசுத்த ஸ்தலத்தின் உள்ளாக வந்த ஆரோன் கிருபாசனத்தை பார்த்து விடாதபடி தூபமேகம் மறைத்து கொண்டது. முதுகை கிருபாசனத்திற்கு காட்டாமல், பின்னாக எட்டு எடுத்து வைத்து மகா பரிசுத்த ஸ்தலத்தை விட்டு திரையை மெல்ல அகற்றி ஆரோன் வெளியே வருகின்றான். ஜனங்கள் ஆரோனை கண்டு கொள்ளுகின்றார்கள். தேவனை துதிக்கின்றார்கள்.

பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து கிருபாசனத்துக்கு முன்பாக ஏழுதரம் தன் விரலினால் தெளிக்கக்கடவன். (லேவி. 16:14)

இரண்டாவது முறையாக ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிக்கின்றான். இப்பொழுது பாத்திரத்தில் பிடிக்கப்பட்ட காளையின் இரத்தத்தை எடுத்து கொள்கின்றான். கிருபாசனத்தின் கீழ் புறமாக நிற்கின்றான். ஆசரிப்பு கூடாரம் அமைக்கையில் அதனை கிழக்கு நோக்கியே அமைத்தார்கள். கிருபாசனமும் கிழக்கு நோக்கியே நிற்கின்றது. ஆரோன் கிருபாசனத்தின் கீழ்புறமாக நிற்கிறான் என்பதின் பொருள் ஆரோன் கிருபாசனத்தின் முன்பாக நின்று கொண்டு இருக்கிறான் என்பதாகும். கிருபாசனத்திற்கு முன்பாக நிற்பது மகா மேன்மையானது. அதே சமயம் மகா ஆபத்தும் ஆனது. யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்து இருப்பான்? முதலாவது கைகளில் சுத்தம் உள்ளவனும், இரண்டாவது இருதயத்தில் மாசில்லாதவனும், மூன்றாவது தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாதவனும், நான்காவது கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே பரிசுத்தரின் ஸ்தலத்தில் நிலை நிற்பான் என்று சங். 24:3,4 ஆகிய வசனங்கள் கூறுகின்றன.

ஆரோன் இரத்தத்தை தன் விரலினால் தெளிக்கிறான்

எல்லோரும் பாவம் செய்து ஏகமாய் கெட்டுப்போன ஒரு உலகில் கையில் சுத்தம் உள்ளவன் யார்? இதயத்தில் மாசு மறு இல்லாதவன் எங்கே? ஆத்துமாவை மாயைக்கு விற்று போடாதவன் யார்? கபடு இல்லாத கண்ணியவான்களை கண்டுபிடிப்பது எங்கே? 15-வது சங்கீதம் கூறும் உத்தமர்கள் உலகில் எங்கு வாழ்கின்றார்கள்? பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகிற்கு வந்தார். அவர்களில் பிரதான பாவி நான் என்று பரிசுத்த பவுல் தன்னை பற்றி 1 தீமோ. 1:15-ம் வசனத்தில் கூறுகின்றார். புனிதன் என்று கூற புவியில் எவரும் இல்லை. பாவத்தால் கறை பட்ட கைகளும், மாய்கைகளை நோக்கி ஓடும் கால்களும் பெற்ற மனிதருக்கு, கிறிஸ்துவின் விலையேற பெற்ற புண்ணிய இரத்தத்தினால் மட்டுமே பிதாவின் முன்பாக நிற்கும் சிலாக்கியம் கிடைக்கின்றது. லேவி. 16:14-வது வசனத்தில் ஆரோன் மகா பரிசுத்தர் முன்பாக மகா பயத்துடன் நின்று கொண்டு இருக்கின்றான். கையில் பாவ நிவிர்த்திக்கு என்று கொல்லப்பட்ட காளையின் இரத்தத்துடன்

நிற்கின்றான். கண்களில் கண்ணீருடன் நிற்கின்றான். பரிசுத்தர் சமூகத்தில் மரணத்தை தழுவிய தனது மூத்த இரண்டு குமாரர்களையும் ஞாபகத்தில் வைத்து மகா எச்சரிக்கையுடன் நின்று கொண்டு இருக்கின்றான்.

''கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர். பூமி அனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்து இருக்கின்றது என்று சேராபீன்கள் துதிக்கும் சர்வ வல்லமையுள்ளவர் முன்பாக ஆரோன் நிற்கின்றான். அது ஓர் மகா பெரிய பாக்கியம்! அதே சமயம் அது ஓர் மகா பெரிய ஆபத்து. அவனது உள்ளத்தில் ஒரு சிறிய தவறான சிந்தனை வந்து விட்டால் அவன் அவமாகி போவான். அவன் அனைத்தையும் முறைப்படி செய்து, உயிருடனும், உற்சாகத்துடனும் வெளியே வர வேண்டும் என்று சபையார் ஊக்கத்துடன் ஜெபித்து கொண்டு இருக்கின்றார்கள். மோசே தனது இரண்டு கைகளையும் கர்த்தருக்கு நேராக விரித்து கொண்டு நிற்கின்றான்.

ஆரோன் இப்பொழுது தனது விரல்களை இரத்தத்தில் நனைக்கிறான். கிருபாசனத்தின் மூடியில் ஒரே ஒரு முறை தெளித்தான். கிருபாசனத்தின் முன்னாக ஏழு முறை தெளித்தான்: தனக்காகவும் தனது உடன் ஊழியர்களுக்காகவும் பாவ நிவிர்த்தி பெற்றான். பின்னர் அமைதலாக பின்னாக எட்டு எடுத்து வைத்தான். திரையினை கடந்து பரிசுத்த ஸ்தலமும் கடந்து ஆசரிப்பு கூடாரத்திற்கு முன்பாக வந்தான். இதுவரை ஜெபித்து கொண்டே இருந்த மக்கள் ஆரோன் வருவதை கண்டு தேவனை துதிக்க ஆரம்பித்தார்கள்.

9.4 சபை மக்களுக்கான பாவநிவிர்த்தி

பின்பு ஜனத்தினுடைய பாவநிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தை திரைக்கு உட்புறமாக கொண்டுவந்து, காளையின் இரத்தத்தை தெளித்ததுபோல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின் மேலும் அதற்கு முன்பாகவும், தெளித்து, (லேவி. 16:15)



வெள்ளாட்டின் இரத்தம் பிடிக்கப்படுகிறது

மக்களுக்காக மன்றாடும் ஆரோன்

தனக்காகவும், தன் உடன் ஊழியர்களுக்காகவும் பாவ நிவிர்த்தி செய்த ஆரோன் இப்பொழுது தனது சபையின் மக்களுக்காக பாவ நிவிர்த்தி செய்ய வேண்டும். அதற்கு என்று ஆயத்தமாக்கப்பட்ட வெள்ளாட்டுக்கடாவை ஆரோன் வெட்டுகிறான். இரத்தம் ஒரு பாத்திரத்தில் பிடிக்கப்படுகின்றது. அதனை தன் கையில் எடுத்து மூன்றாவது முறையாக மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிக்கிறான். முன் செய்தது போல தனது விரலை ஆட்டின் இரத்தத்தில் நனைத்து ஒரு முறை கிருபாசன மூடி மீதும், ஏழு முறை கிருபாசனத்தின் முன்பாகவும் தெளித்தான்; தனது சபை மக்கள் கடந்த ஒரு வருடம் செய்த அனைத்து பாவங்களையும் மன்னிக்க வேண்டினான். அவர்கள் வாழ்வில் செய்த அசுத்தமான செயல்கள், மீறுதல்கள், பாவங்கள் யாவற்றிற்காகவும் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை கொடுத்து அவர்களை மன்னிக்கும்படி கெஞ்சுகின்றான். பாவ நிவிர்த்தி பெற்றான். பின்னர் மிகுந்த மரியாதையுடன் திரைக்கு வெளியே வந்தான். ஆசாரியருக்கும், சபை மக்களுக்கும் பாவநிவிர்த்தி செய்யப்பட்டது.

9.5 ஆசரிப்பு கூடாரத்திற்காகவும், அதன் பொருட்களுக்காகவும் பாவ நிவிர்த்தி

இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளின் நிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களின் நிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காக பிராயச்சித்தம் செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்பு கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன். பாவநிவிர்த்தி செய்யும்படி அவன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, வெளியே வருமளவும் ஆசரிப்பு கூடாரத்தில் ஒருவரும் இருக்கலாகாது. (லேவி. 16:16-17)

பரிசுத்த ஸ்தலம் பரிசுத்த குலைச்சல் ஆகாதபடி, பரிசுத்த ஸ்தலத்திற்காக அவன் மன்றாட வேண்டும். பலவீனமான மனிதர் நடுவில் நிறுத்தப்பட்ட பரிசுத்த ஸ்தலமான ஆசரிப்பு கூடாரத்திற்கு இனிமேல் தீட்டு கழிக்க வேண்டும். பாவ மனிதரின் பாதங்கள் பட்ட பரிசுத்த ஸ்தலம், அதன் சுற்றுப்புறங்கள் அனைத்தும் இனிமேல் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

ஆசரிப்பு கூடாரத்திற்கு தீட்டு கழிப்பதற்கு ஆரோன் இரண்டு செயல்கள் செய்ய வேண்டும். சபையார்கள் உடன் சேர்ந்து அதனை செய்ய வேண்டும். முதலாவது அவர்கள் அனைவரும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். இரண்டாவது அவர்கள் அனைவரும் தேவனுக்கு முன்பாக தாழ்மைப்பட வேண்டும்.

பின்பு அவன் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கிற பலிபீடத்தண்டை வந்து, அதற்காக பிராயச்சித்தம் செய்து, காளையின் இரத்தத்திலும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்து கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசி, தன் விரலினால் அந்த இரத்தத்தில் எடுத்து, ஏழுதரம் அதின்மேல் தெளித்து, அதை இஸ்ரவேல் புத்திரரின் தீட்டுக்கள் நீங்கச் சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தக்கடவன். (லேவி. 16:18-19)



ஆரோன் தகனபலிபீட கொம்புகளில் இரத்தம் பூசுகிறான்

ஆசரிப்பு கூடாரத்தில் யாரும் இல்லை. யாவரும் வெளிவே நிற்கிறார்கள். ஆரோன் தனக்காகவும் தன் குடும்பத்தினருக்காவும் இஸ்ரவேல் மக்கள் அனைவருக்காவும் பாவ நிவிர்த்தி செய்த பின்னர், மகா பரிசுத்த ஸ்தலத்தை விட்டு பயபக்தியுடன் வெளியேறி, பரிசுத்த ஸ்தலத்தையும் கடந்து பிரகாரத்திற்கு வருகிறான். அவன் கையில் காளையின் இரத்தமும் கடாவின் இரத்தமும் உண்டு. வெண்கல நீர்த்தொட்டியையும் கடந்து, கூடார வாசலுக்கு அருகே உள்ள தகன பலிபீடத்திற்கு வருகிறான். அதற்காகவும் பிராயச்சித்தம் செய்ய அதின் கொம்புகளில் இரத்தம் பூசுகிறான்.

காளை, ஆடு ஆகிய இரண்டின் இரத்தங்களையும் ஆரோன் கலந்து தகனபலிபீடம் சென்று, அதன் கொம்புகளில் அதனை பூசுவது ஆசாரியரும், சபையாரும் சேர்ந்து தேவனை மகிமை படுத்துவதற்கு ஒரு எடுத்து காட்டாக இருக்கின்றது. இதனை 18-வது வசனத்தில் பார்க்கிறோம். அதனைத் தொடர்ந்து 19-ம் வசனத்தில் கூறப்பட்டது போல 7 முறை இரத்தம் பலிபீடத்தின் மீது தெளிக்கப்படுகின்றது. அவர்கள் அனைவரும் பரிசுத்தருக்கு முன்பாக தங்களை தாழ்மைப்படுத்துகின்றார்கள் என்பதை அது காட்டுகின்றது.

9.6 மக்களின் பாவங்களை சுமக்கும் போக்காடு

அவன் இப்படி பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்பு கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராய்ச்சித்தம் செய்து தீர்ந்த பின்பு, உயிரோடிருக்கிற வெள்ளாட்டு கடாவைச் சேரப்பண்ணி, அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லா பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும், அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டு கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன். *(லேவி. 16:20,21)*

அடுத்தாற்போல் ஆராதனையின் நான்காவது கட்டம் துவங்க இருக்கின்றது. தூரமான இடத்திற்கு அனுப்பப்பட இருக்கும் ஆட்டினை ஆரோன் நெருங்கிச் சேர வேண்டும். அவர்கள் ஒரு வருடம் முழுவதும் செய்த பாவத்திற்கு அவர்கள் பெறப்போகும் தண்டனைகள் அனைத்தையும் 'அசாசல்' என்று அழைக்கப்பட்ட அந்த ஆட்டின் மீது சுமத்தி அந்த ஆட்டினை அவர்கள் தூரமான ஒரு இடத்திற்கு அனுப்ப வேண்டும். அதுவே ஆராதனையின் நான்காவது பகுதியாகும்.

ஆசாரியனாகிய ஆரோன் நடத்தும் பாவநிவிர்த்தி ஆராதனையினை நாம் அறிந்து வருகின்றோம். லேவியராகமம் 16-வது அதிகாரத்தில் பரிசுத்தராகிய தேவனிடம் பாவிகளான மனிதர் பாவ நிவிர்த்தி பெற கூடி வந்து இருப்பதை நாம் பார்க்கின்றோம். அவர்கள் அனைவர் சார்பிலும் ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிப்பதை காண

இருக்கின்றோம். ஆராதனையின் மூன்று பகுதிகள் முடிந்து விட்டன. ஆராதனையின் நான்காவது பகுதியை 20-22 வசனங்களிலும், இறுதி பகுதியான ஐந்தாவது பகுதியை 23-28 வசனங்களிலும் பார்க்க இருக்கின்றோம்.

ஆரோன் போக்காட்டின் தலையில் தன் கைகளை வைத்து மக்களின் பாவங்களை கடத்தி விடுகிறான்

ஆள் வசமாய் அனுப்பி விடப்படும் போக்காடு

21-வது வசனம் அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து என்று துவங்குகின்றது. ஆரோனும் அவன் குமாரரும் பிரதிஷ்டை செய்யப்படும் பொழுது தங்கள் கைகளை பலியாக போகும் மிருகத்தின் தலை மீது வைக்க வேண்டும். என்பதை யாத். 29:10-வது வசனத்தில் நாம் பார்த்தோம். லேவி. 1:3,4 ஆகிய வசனங்களில் தகனபலி செலுத்த வரும் மனிதனும், 3-வது அதிகாரம் 8-வது வசனத்தில் சமாதானபலி செலுத்த வரும் மனிதனும். 4-வது அதிகாரம் 4-வது வசனத்தில் பாவ நிவாரணபலி செலுத்த வரும் மனிதனும் பலியாக கொண்டு வந்த மிருகத்தின் தலையின் மீது தங்கள் கைகளை வைத்தார்கள் என்பதையும் நாம் பார்த்தோம். லேவி. 16:21-வது வசனத்தில் போக்காடாக அனுப்பப்பட இருக்கும் ஆட்டின் தலை மீது ஆரோன் தனது இரண்டு கைகளையும் வைக்கின்றான்.

ஆரோன் போக்காட்டின் தலையில் தன் கைகளை வைக்கிறான்

தனது பாவங்களையும் பாவம் செய்வதால் வரும் தண்டனைகள் அனைத்தையும் இந்த மிருகத்திற்கு நான் கடத்தி விடுகிறேன் என்பதை காட்ட மிருகத்தின் தலை மீது கைகள் வைக்கப்பட்டன. ஒரு கை அல்ல, ஆரோன் தனது இரண்டு கைகளையும் அந்த ஆட்டின் தலை மீது வைக்கின்றான். ஒரு கை தனக்காகவும், மறு கை ஜனங்களுக்காகவுமாக இரண்டு கைகளையும் வைக்கின்றான். கைகளை வைத்து, அதின் மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும், அவர்களுடைய எல்லா பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டான் என்று 21-வது வசனம் கூறுகின்றது.

எஸ்றா என்ற ஆசாரியன் விண்ணப்பம் பண்ணி அறிக்கையிட்டு அழுதான் என்று எஸ்றா 10:1-வது வசனம் கூறுகின்றது. பாவங்களை அறிக்கையிடாமல் வாழ்க்கையில் புதிய அத்தியாயங்கள் பிறப்பது இல்லை. பாவங்களை இதயத்தில் பதுக்கி வைக்கும் வரை

உள்ளங்கள் உவகை கொள்வதும் இல்லை. பாவங்களை மனிதனிடம் அல்ல பரிசுத்தராகிய தேவனிடமே ஆரோன் அறிக்கை செய்தான். பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் மனிதனுக்கு அல்ல, மகா பரிசுத்தரான தேவனுக்கு மட்டுமே உண்டு. ''பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்'' தமக்கு உண்டு என்பதை கர்த்தராகிய இயேசு பரிசுத்த மத்தேயு 9:6-வது வசனத்திலும், பரிசுத்த மாற்கு 2:10-வது வசனத்திலும், பரிசுத்த லூக்கா 5:24-வது வசனத்திலும் குறிப்பிட்டு கூறியுள்ளார். பாவங்களை பரிசுத்தராகிய தேவனிடம் அறிக்கை செய்வதால் வாழ்வு உண்டு என்றும், பாவங்களை மறைத்து வாழ்வதால் வாழ்வே இல்லை என்றும் நீதி. 28:13-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். ''நமக்கு பாவம் இல்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்,'' என்று 1 யோ. 1:8,9-ல் பார்க்கிறோம்.

ஆரோன் அறிக்கை செய்தான். தன் பாவங்களை, தன் வீட்டாரின் பாவங்களை, தன் ஜனங்களின் பாவங்களை பாவ நிவிர்த்தி நாளிலே ஆரோன் அறிக்கை செய்தான். உதட்டு அளவில் வந்த அறிக்கை அல்ல, உள்ளம் உடைந்து வந்த பாவ அறிக்கை ஆகும். எதுவும் அறியாத அந்த ஆட்டின் மீது அவர்கள் அனைவரின் பாவங்களும், பாதகங்களும், தப்பிதங்களும், அக்கிரமங்களும் சுமத்தப்பட்டன. அவைகள் வெள்ளாட்டு கடாவின் தலையின் மேல் சுமத்தப்படட்டும் என்பதை 21-வது வசனத்தில் பார்க்கிறோம். அந்த ஆடு உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக் குட்டியாகிய இயேசு கிறிஸ்துவிற்கு ஒரு அடையாளமாக மாறிவிட்டது. ''என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்து கொள்ளுவார்'' என்று ஏசாயா 53:11-வது வசனத்தில் தேவ ஆட்டுக்குட்டி அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

அந்த வெள்ளாட்டு கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்து கொண்டு, குடியில்லாத தேசத்துக்கு போவதாக; அவன் அந்த வெள்ளாட்டு கடாவை வனாந்தரத்திலே போக விடக்கடவன். (லேவி. 16:22)

ஆரோன் ஆட்டின் மீது கைகளை வைத்து அனைவரின் பாவங்களையும் அந்த ஆட்டிற்கு கடத்தி விட்டான். பின்னர் அதனை அனுப்பி விட்டான். எங்கே அனுப்பி விட்டான்? 22-வது வசனம் பாருங்கள். ''அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களை எல்லாம் தன்மேல் சுமந்து கொண்டு குடியில்லாத தேசத்துக்கு போவதாக'' என்று கூறப்பட்டுள்ளது. 16-வது அதிகாரம் 10-வது வசனத்தில் ''அதை போக்காடாக வனாந்தரத்திலே போக விடவும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குடியில்லாத தேசம், வனாந்தரம் என்பது என்ன? பாழ் அடைந்த பகுதிகள் ஆகும். வனாந்தர வெடிப்புகள் ஆகும். அங்கு குடியிருக்கும் ஒன்றே ஒன்று அசுத்த ஆவிகளே ஆகும். மாற்கு 5:2,3-வது வசனங்களில் ''அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேத கல்லறைகளில் இருந்து இயேசுவுக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது.'' குடியிருப்பு இல்லாத தேசத்திற்கு போக்காடு அனுப்பப்பட்டது. அங்கு குடியிருந்த ஒன்றே ஒன்று, பாவம் உலகில் பிரவேசிக்க காரணமாக இருந்த பிசாசின் ஆவிகளே ஆகும். அசுத்த ஆவிகள் மனிதனை விட்டு புறப்படும் பொழுது

ஓடிச் செல்லும் இடம் வறண்ட இடங்களே என்பதை பரி. மத். 12:43-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

ஆரோன் இரு கைகளையும் வைத்து ஜனங்களின் பாவங்களை போக்கும் ஆட்டின் மீது சுமத்தியதை பார்த்தோம். இப்பொழுது போக்காடு காட்டு ஆடாக சென்று அதன்மேல் வைத்த அனைவர் பாவத்தையும் பாவம் பிறக்க காரணமாக இருந்தவன் மீது ஒப்புவித்துவிட செல்வதை பார்க்கிறோம். ஏசாயா 34:14-வது வசனத்தில் ''அங்கே காட்டு மிருகங்களும் நரிகளும் ஒன்றை ஒன்று சந்தித்து காட்டு ஆட்டை காட்டு ஆடு கூப்பிடும்! அங்கே சாக்குருவிகளும் தங்கி இளைப்பாறும் இடத்தை கண்டடையும்.''

ஜனங்களின் பாவத்தை சுமந்து செல்லும் போக்காடு அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்று 21-வது வசனத்தில் பார்க்கின்றோம். அதற்கு ஏற்ற ஆள்வசம் என்பது பாவநிவிர்த்தி ஆராதனையில் எவ்வித உதவியும் தேவைப்பட்டால் முன் வந்து நிற்பேன் என்று முன் வரும் மனிதனை குறிக்கின்றது. பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு ஓர் பார்வையாளனாக அல்ல, ஒரு பங்காளனாக வந்தவன் ஆகும். பிறரின் நல் வாழ்விற்கு தன் வாழ்வை அர்பணிக்க ஆசை கொண்டவன் ஆகும். அப்படிப்பட்ட ஒருவன் மூலம் போகவிடப்படும் போக்கு ஆடு வனாந்தரத்திற்கு நேராக வழி நடத்தப்படுகின்றது.

பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு இரண்டு ஆடுகள் கொண்டுவரப்பட்டன. ஒன்று உயிர் கொடுத்து பலியானது. அதன் இரத்தம் கிருபாசனத்தின் மூடியில் தெளிக்கப்பட்டது. கிருபாசனத்தின் மூடியை குறிக்கும் எபிரேயச் சொல் 'கப்போரத்' என்று அறிந்தோம். அதன் பொருள் மூடிப்போடுதல் என்பது ஆகும். மரித்த உடல்களை குழி தோண்டி, புதைத்து, பின்னர் நன்றாக மூடி விடுதல் என்பது போன்றது ஆகும். மூடிப்போடப்பட்ட பிரேதங்களை எவரும் திரும்ப தோண்டுவதும் இல்லை. கிருபாசன மூடியில் இரத்தம் தெளிக்கப்பட்டு மூடப்பட்ட ஜனங்களின் பாவங்களை பரிசுத்தமாகிய தேவன் இனிமேல் தோண்ட போவதும் இல்லை என்பதை அது குறிக்கின்றது. செய்த பாவங்களைக் குறித்து ஒரு கனத்த எண்ணம் இனி ஆரோனுக்கும், அவனது ஜனங்களுக்கும் வரவேண்டிய அவசியம் இல்லை என்பது ஆகும். அடுத்த ஆடு உயிருடன் பலியாகும் ஆடு ஆகும். செய்த பாவத்தினால் வரக்கூடிய எல்லா வினைகளையும், விளைவுகளையும் தன்னில் ஏற்று தூரமாக புறப்பட்டு சென்றது. பாவம் செய்ததால் பரிசுத்தர் என்னை தண்டிப்பார் என்ற ஐய உணர்வு அறவே அவர்களுக்கு அகன்றது. பாவம் தொலைவில் சென்றது. ''அவர் நம்முடைய பாவங்களுக்கு தக்கதாக நமக்கு செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்கு தக்கதாக நமக்கு சரிக்கட்டாமலும் இருக்கின்றார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாக இருக்கிறதோ, அவருக்கு பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாய் இருக்கின்றது. மேற்குக்கும் கிழக்கிற்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.'' என்று சங். 103:10-12-ல் பார்க்கிறோம்.

லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில் இடம் பெறும் பாவநிவிர்த்தி ஆராதனை ஐந்து கட்டங்கள் கொண்டதாக அமைந்து இருக்கின்றது என்பதை நாம் பார்த்து வருகின்றோம். இந்த ஐந்து பிரிவுகளையும் ஒன்று ஒன்றாக பார்க்கின்றோம்.

முதலாவது பிரிவை லேவி. 16:1-5 வசனங்களில் பார்க்கிறோம். ஆராதனைக்கு உரிய ஆயத்தங்கள் அந்த வசனங்களில் இடம் பெறுகின்றன.

இரண்டாம் பிரிவை 16:6-10 வசனங்களில் பார்க்கின்றோம். பலியாகப் போகும் மிருகங்கள் குறிக்கப்படுகின்றன. ஏற்ற இடங்களிலே நிறுத்தப்படுகின்றன. போக்கு ஆடு எது என்பது நிச்சயம் செய்யப்பட்டது. முதல் பலி வெட்டப்பட்டது. ஆராதனையின் இரண்டாவது பிரிவிலே இவைகள் அனைத்தும் இடம் பெறுகின்றன.

ஆராதனையின் மூன்றாவது பிரிவு 11-19 வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. ஆசாரியனாகிய ஆரோன் மூன்று முறை மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசித்து தனக்காகவும், தன் உடன் பணியாளருக்காகவும், தன் ஜனத்திற்காகவும் கிருபாசனத்தின் மூடியில் இரத்தம் தெளிப்பதை பார்க்கின்றோம்.

நான்காவது பிரிவு 20-22 வசனங்களில் ஒரு படம் போல காட்டப்பட்டு உள்ளது. ஆரோன் 'அசாசல்' என்று கூறப்படும் போக்காட்டின் தலைமீது அதன் கைகளை அமர்த்தினான். பாவம், பாவத்தின் விளைவுகள் அனைத்தையும் அதின்மேல் கடத்தினான். ஆட்டை வனாந்திரம் அனுப்பினான்.

ஐந்தாம் பகுதி 23-25 வசனங்களில் அடங்கி உள்ளது. ஆரோன் சணல் வஸ்திரம் களைந்து, தன்னை கழுவி, பரிசுத்த வஸ்திரம் அணிந்து கொண்டு ஜனங்களுடன் கலந்து மகிழ்கின்றான். போக்காட்டினை எடுத்து சென்றவன் தன்னை சுத்தம் செய்து திரும்பி வந்து, ஜனங்களுடன் கலந்து மகிழ்கின்றான். பலியான மிருகங்களின் மற்ற பாகங்களை பாளயத்திற்கு புறம்பே எடுத்து சென்று எரிந்தவன் தன்னை சுத்தம் செய்து விட்டு திரும்பி வந்து ஜனங்களுடன் கலந்து மகிழ்கின்றான். அனைவர் முகத்திலும் பாவ மன்னிப்பின் மகிழ்ச்சியும் பரிசுத்தரை துதிக்கும் துதியும் காணப்படுகின்றது. இவ்விதமாக ஆராதனை நிறைவு பெருகின்றது.

இப்பொழுது ஆராதனையின் நான்காவது பகுதியினை பார்க்க இருக்கின்றோம். 'அசாசல்' என்ற போக்கு ஆடு வனாந்தரம் சென்றது என்று 10-வது வசனத்திலும் குடியில்லாத தேசம் சென்றது என்று 22-வது வசனத்திலும் கூறப்பட்டு உள்ளது. வனாந்தரம் என்பது குடியில்லாத தேசம் என்பதும் மனித சஞ்சாரம் இல்லாத இடங்களாகவும், பிசாசின் ஆதீனத்தில் உள்ள இடங்களாகவும் காணப்படுகின்றது என்பதையும் பார்த்தோம். பரிசுத்த லூக்கா 4:1-வது வசனம், 2-வது வசனத்தின் முன்பாகம் ஆகியவற்றை பாருங்கள். ''இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டு திரும்பி ஆவியானவராலே வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார்'' என்று எழுதப்பட்டு இருக்கின்றது.

இயேசு நமது போக்காடாக வனாந்தரம் சென்றார். வனாந்தரத்தில் அவருக்காக காத்து கொண்டு இருந்தது இரண்டே இரண்டு. அவை சோதனையும் சோதனைக்காரனுமே. இயேசுவின் மீது விசுவாசம் வைக்கும் ஒவ்வொருவரும் சோதனைகளையும் சோதனைக்காரனையும் கடந்து செல்ல வேண்டும் என்பதற்கு அது ஓர் உதாரணமாயிற்று. நாம் அநேக உபத்திரவங்கள் வழியாய் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று அப். 14:22-வது வசனம் கூறுகின்றது. சீனாய் வனாந்தரத்தினை கடந்து கானானுக்குள் மீட்கப்பட்ட ஜனங்கள் பிரவேசித்தார்கள். உலகமான வனாந்தரத்தினை வெற்றியுடன் கடந்து சென்ற பின்னர் இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் பரலோக வாழ்வைப் பெற்று கொள்ளுவார்கள். உலகமாகிய வனாந்தர பாதையிலே விசுவாசிகளுக்கு வரும் உபத்திரவங்கள் போராட்டங்கள் அனைத்திலும் அவர்களுக்கு முழு வெற்றி உண்டு என்பதை

நமது போக்காடாக வனாந்தரத்திற்கு பரிசுத்த ஆவியானவரால் எடுத்து செல்லப்பட்ட இயேசு காட்டி விட்டார். வனாந்தரத்தில் இயேசுவிற்கு காத்து கொண்டு இருந்த சோதனை இயேசுவிற்கு வேதனையாக மாறவில்லை. வேத வசனங்களால் ஒவ்வொரு சோதனையையும் வென்றார். சோதனைக்காரன் அவரை விட்டு கடந்து சென்றான். அதே வெற்றியை இயேசு தம்மை விசுவாசிக்கும் அனைவருக்கும் கொடுக்க இன்றும் வல்லவராக மாறினார்.

எபி. 2:18-ல் ''ஆதலால் அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்,'' என்று எழுதப்பட்டுள்ளது. 2 கொரி. 4:8,9-ல் ''நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறது இல்லை, கலக்கம் அடைந்தும் மனம் முறிவு அடைகிறது இல்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறது இல்லை'' என்று பரிசுத்த பவுல் கூறும் சாட்சியே உலகமாகிய வனாந்தரத்தினை கடந்து செல்லும் உத்தம விசுவாசிகளின் கூட்டத்தின் சாட்சியும் ஆகும்.

வனாந்தரங்கள், பாழான வாசஸ்தலங்கள், குடியிருப்பு இல்லாத வீடுகள், இருட்டுகள் ஆகிய எதுவும் விசுவாசிகளை அச்சுறுத்த போவது இல்லை. விசுவாசிகள் பேய் பிசாசிற்கு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. விசுவாசிகளுக்கு எதிராக உருவாக்கப்படும் எந்த ஆயுதங்களும் வாய்க்க போவதும் இல்லை. மந்திரங்களும் மாய வித்தைகளும் பிசாசின் செய்வினைகளும் விசுவாசிகளை பாதிப்பதே இல்லை. பிசாசு வாழும் எந்த இடத்திற்கும் இயேசுவின் நாமத்தில் தைரியத்துடன் விசுவாசிகள் செல்லவும் வெற்றியுடன் திரும்பி வரவும் கிருபை பெற்று இருக்கிறார்கள் என்பதை இயேசுவின் வனாந்தர அனுபவம் நமக்கு காட்டுகிறது.

மேலும் சிலுவை மரணத்திற்குப் பின் இயேசு அடக்கம் பண்ணப்பட்டார். அப்பொழுது இயேசு மனிதர் குடியில்லாத தேசம் சென்றார், அதாவது பிசாசு குடியிருக்கும் இடம் சென்றார். லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில் போக்காடு குடியிருப்பு இல்லாத தேசம் சென்றது என்று நாம் பார்த்தோம். அதுபோல நமது இரட்சகர் காவலில் உள்ள ஆவிகளுக்கு முன்னாக நின்றார் என்பதை பேதுரு 3:19-வது வசனத்தில் பார்க்கின்றோம். ''அந்த ஆவியினாலே அவர் போய் காவலில் உள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தார்.'' இயேசு அவர்களுக்கு என்ன பிரசங்கித்தார்? பாவ மனிதர் அனைவருக்கும் தாம் சிலுவையில் செய்த பாவ நிவிர்த்தியை பிரசங்கித்தார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை தமது உயிர்த்தெழுதலினால் மாற்றிப்போட்டு விட்டேன் என்று இயேசு பிரசங்கித்தார். தம்மீது விசுவாசம் வைக்கும் அனைத்து மனிதருக்கும் இனிமேல் நித்திய ஜீவன் உண்டு என்று பிசாசின் கூட்டங்களுக்கு பிரசங்கித்தார்.

ஆசாரியனாகிய ஆரோன் அன்று நடத்திய ஆராதனை பாவ நிவிர்த்தி, தண்டனை தவிர்ப்பு ஆகிய இரண்டும் மக்களுக்கு அருளியது. ஆனால் இன்னும் இரண்டு அது அருளவில்லை. முதலாவது குற்ற உணர்வு தவிர்ப்பு, இரண்டாவது வெற்றியுள்ள வாழ்க்கை நடத்த ஏற்ற வல்லமை ஆகிய இரண்டும் லேவியராகமம் 16-வது அதிகாரத்தில் ஆரோன் நடத்திய ஆராதனையில் காணப்படவில்லை. ஆரோன் நடத்திய அந்த ஆராதனையில் இரண்டு காணப்பட்டது. பாவம் மன்னிக்கப்பட்டது. அடுத்தாற்போல் செய்த பாவத்தினால் வரக்கூடிய தண்டனை தவிர்க்கப்பட்டது. ஆனால் பாவம் செய்வதால் பெற்ற குற்ற உணர்வுகள் அவர்களை குத்தி கொண்டே இருந்தது. அவர்கள் பாவம் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக நின்று கொண்டே இருந்தது. குற்றங்கள் மன்னிக்கப்பட்டும், குற்ற

உணர்வுகள் மறக்கப்படவில்லை. பாவ மன்னிப்பு பெற்றும் அவர்கள் பாவ உணர்ச்சிகளில் இருந்து எவ்வித வெற்றியும் பெற்றதாக தெரியவில்லை. மறுபடியும் ஒரு முறை பாவத்தில் விழுவதற்கு ஏற்ற சூழ்நிலை, ஒரு வாய்ப்பு, ஒரு ஆசை வரும் என்றால் அவர்கள் விழத்தான் போகின்றார்கள். அப்படி விழுந்ததற்கு மறு வருடம் அடுத்த ஓர் பாவ நிவிர்த்தி ஆராதனையும் செய்யத்தான் போகின்றார்.

ஆனால் உத்தம பிரதான ஆசாரியனாகிய இயேசுவின் சிலுவை மரணமும், உயிர்த்து எழுதலும் அவரை அணுகுகின்றவருக்கு ஐந்து கிருபைகளைக் கொடுக்கின்றது.

முதலாவது செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றது. இரண்டாவது பாவத்தினால் வந்த வரக்கூடிய தண்டனைகள் நிறுத்தப்படுகின்றது. இழந்து போன நன்மைகள், ஆசீர்வாதங்கள் திரும்பப் பெறப்படுகின்றது. மூன்றாவது முன்பு செய்த பாவங்கள் ஞாபகத்திற்கு வருவதே இல்லை. அவைகளை நினைக்கும் நினைவும் இல்லாமல் போகும். குற்ற உணர்வுகள் குமுறுவது இல்லை. நான்காவது இயேசுவின் சிலுவை மரணமும், இயேசுவின் உயிர்த்தெழுதலும் மனிதனுக்கு அருளும் கிருபை: பாவம் செய்யக் கூடிய சூழ்நிலை, வாய்ப்பு, வசதி அனைத்தும் திரும்பவும் வந்தாலும் அவைகளை கசந்து வெறுப்பது ஆகும். பாவத்தின் மேல் எவ்வித ருசியும் இல்லாத கண்களும், சிந்தையும், இருதயமும் பெற்று விடுவது ஆகும். எல்லாரும் தவறு செய்தாலும் தன்னந்தனியாக தவறை தவிர்த்து நிற்கும் தைரியத்தை பெற்று விடுவது ஆகும். ஒரு முழு வெற்றியுள்ள விசுவாச ஜீவியம் செய்வது ஆகும்.

ஐந்தாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் பெறக்கூடிய கிருபை, பெற்ற முதல் நான்கு கிருபைகளையும் மற்றவர்களுக்கு எடுத்து கூறுவது ஆகும். சமயம் வாய்த்தாலும் வாய்க்கா விட்டாலும் சாட்சி பகறுவது ஆகும். தன் இருதயத்தில் பெற்ற விசுவாசத்தை நாவினால் அறிக்கை செய்வது ஆகும். ஆரோனும், அவனது ஜனங்களும் பெற்ற பாவ மன்னிப்பு அவர்கள் ஒருவருக்கே கொடுத்த பாவ மன்னிப்பாக இருந்தது. இயேசு அருளும் பாவ மன்னிப்போ சகல மனிதருக்கும் உரித்தானது. எனவே அந்த மன்னிப்பை பெற்ற விசுவாசி அதனை பெறாதவர் பெற்று விடட்டும் என்று வாஞ்சிக்கின்றான். வலிய பொறுப்பு எடுக்கின்றான். இயன்ற மட்டும் தனது சாட்சியை சமீபமானவர்களுக்கும் தூரமானவர்களுக்கும் கூறி கொண்டே செல்லுகின்றான். பரிசுத்த வேதாகமம் அருளும் நல்ல செய்தி இயேசு நாம் பாவிகளாக இருக்கையில் நமக்காக சிலுவையில் மரித்தார் என்பதே ஆகும். நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால் நம் அனைவரின் பாவங்களையும், இன்றே, இப்பொழுதே இயேசு மன்னித்து அந்த ஐந்து கிருபைகளையும் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கிறார் என்பதே ஆகும். செய்த பாவத்தினால் துக்கப்படும் ஒவ்வொரு மனிதருக்கும் ஓர் சிறந்த பாதையை பரிசுத்த வேதாகமம் தெரிவிக்கின்றது. பாதையின் நுழைவு வாசல் சிலுவை என்பது ஆகும். சேரும் இறுதி இடம் நித்திய ஜீவன் என்பது ஆகும்.

9.7 பாவ நிவிர்த்தி ஆராதனையின் இரத்தம்

லேவி. 16:23-28 வசனங்கள் பாவ நிவிர்த்தி ஆராதனையின் இறுதி பகுதியை நமக்கு காட்டுகின்றன. பாவ நிவிர்த்தி ஆராதனை, பாவ நிவாரண நாளில் (The Day of Atonement) லேவியராகம புத்தகத்தில் இடம் பெறுகின்றது. இந்த லேவியராகம புத்தகத்தின் நிகழ்ச்சி

புதிய ஏற்பாட்டிலே எபிரெயர் நிருபத்திலே மிகவும் தெளிவாக விளக்கப்பட்டு உள்ளது. எபிரெயருக்கு எழுதின நிருபம் பழைய ஏற்பாட்டின் ஒரு பிரதிபலிப்பாக தெரிகின்றது. 13 அதிகாரங்கள் எபிரெயர் நிருபத்தில் உண்டு. அதில் ஒவ்வொரு அதிகாரத்திலும் பழைய ஏற்பாட்டின் நிழல் விழுகின்றது. ''பூர்வ காலத்தில்'' என்று அதன் முதல் அதிகாரம் முதல் வசனம் துவங்குகின்றது. ''சீர்திருத்தல் காலம்'' என்ற ஒரு காலம் எபிரெயர் நிருபம் 9-வது அதிகாரம் 10-வது வசனத்தில் துவக்குவிக்கப்படுகின்றது. கிரியையின் காலம் நிறைவு கண்டது. கிருபையின் காலம் உதயமானது என்பதை எபி. 9:10-வது வசனம் காட்டுகின்றது. நிழல் நிஜமாகி விட்டதை எபிரெயர் நிருபத்தின் அனைத்து அதிகாரங்களிலும் நாம் பார்க்கலாம். சீனாய் மலை கண்ட ஐந்து பலிகளும் கல்வாரி மலையில் கரைந்து போய்விட்டதை எபிரெயர் நிருபம் எடுத்து காட்டுகின்றது.

எபிரெயர் நிருபத்தை நாம் ஆழமாக பார்க்கும் பொழுது லேவியராகமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முழுமையாக சுட்டி காட்டுகின்றது என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். சீனாய் மலையில் உற்பவித்த தகனபலி, போஜன பலி, சமாதான பலி, பாவ நிவாரண பலி, குற்ற நிவாரண பலி என்ற ஐந்து கிளை நதிகள் கல்வாரி மலையில் புறப்பட்ட இயேசுவின் இரத்த வெள்ளத்தில் சங்கமாயின. லேவியராகம புத்தகத்தில் பாவத்தை போக்க தனது கழுத்தில் ஒரு ஆட்டுக்குட்டியை சுமந்து வந்த காலம் ஒழிந்து போனது. தன் இருதயத்தில் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை சுமக்கும் காலம் துவங்கியது. அந்த காலத்தை ''சீர்திருத்தத்தின் காலம்'' என்று எபி. 9:10-வது வசனம் எடுத்து இயம்புகின்றது. ''இவைகள் சீர்திருத்தம் உண்டாகும் காலம் வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜன பானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல.''

நியாயப் பிரமாணத்தின் காலம் சீர்திருத்த காலத்திற்கு வழி வகுத்தது. நியாயப்பிரமாண காலத்தில் ஆரோன் ஆசாரியனாக இருந்தான். சீர்திருத்தத்தின் காலத்தில் உத்தம பிரதான ஆசாரியராகிய இயேசு ஆசாரியராக மாறினார். ''சீர்திருத்தல்'' (reformation) என்று எபி. 9:10-ல் பயன்படுத்தப்பட்ட கிரேக்க பதம் (diorthosis) பரிசுத்த வேத புத்தகத்தில் வேறு எந்த இடத்திலும் பயன்படுத்தப்படவில்லை. சீர்திருத்தல் காலம் உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே குறிக்கப்பட்டது. அப். 3:21-வது வசனம் ''உலக தோற்றம் முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறி தீரும் காலங்கள் வரும் அளவும் பரலோகம் அவரை ஏற்று கொள்ள வேண்டும்'' என்று கூறுகின்றது.

ஆரோன் கண்ட பாவ நிவிர்த்தி அவனது சொந்த ஜனத்திற்கு மட்டுமே கை கொடுத்தது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக ஆரோன் கண்ட பாவ நிவிர்த்தி அமைந்தது. இயேசுவின் மூலம் கண்ட பாவ நிவிர்த்தி அனைவருக்கும் உரிய பாவ நிவிர்த்தியாக மாறி விட்டது. எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷம் கொடுக்கும் நற்செய்தியாக மாறி விட்டது. நியாயப்பிரமாணத்தின் காலம் தந்த பாவ நிவிர்த்தி கானான் தேசத்து எல்லைக் கற்களுக்குள் கட்டப்பட்டது. சீர்திருத்தல் காலம் தந்த பாவ நிவிர்த்தி கானான் தேசத்து எல்லைக்கு அப்பாற்பட்டது. சீர்திருத்தல் காலம் தந்த பாவ நிவிர்த்தி எருசலேம், யூதேயா, சமாரியா, உலகின் அற்றம் வரை வாழும் அத்தனை மனிதர்களுக்கும் அவர்களது மன வேதனைகளுக்கும் இதய கட்டுக்களுக்கும் ஓர் விடை தந்தது. லேவியராகம புத்தகத்தில் ஆரோன் அறிமுகப் படுத்திய பாவநிவிர்த்தி ஆராதனையில் விபசாரம்,

வேசித்தனம், திருட்டு, கொலை போன்ற கொடிய குற்றங்கள் உட்படவில்லை. அவைகளைச் செய்தவர் கல் எறிந்து கொல்லப்பட்டார்கள். தெரியாமல் செய்த குற்றங்களுக்கு ஆரோன் பாவ நிவிர்த்தி செய்தான். லேவி. 5:15-வது வசனம் கூறுவது போன்று கர்த்தருக்கு உரிய பரிசுத்தமானவைகளில் குற்றம் செய்து விட்டவர்களுக்கு பாவ நிவிர்த்தி கிட்டியது. ஆனால் தெரிந்து செய்த பாவங்களுக்கு பரிகாரம் ஆரோன் தர வில்லை. 'சீர்திருத்தல் காலம்' தந்த பாவ நிவிர்த்தி இயேசு சம்பாதித்து கொடுத்த பாவ நிவிர்த்தி, அது அனைத்து பாவங்களுக்கும் நிவிர்த்தி கண்டது.

தெரியாமல் செய்த பாவத்திற்கு மட்டும் அல்ல. தெரிந்தும் துணிந்தும் செய்த பாவத்திற்கும் பரிகாரம் கிடைத்தது. சறுக்கி விழுந்த பாவத்திற்கு மட்டும் அல்ல. வழுக்கி விழுந்த பாவத்திற்கும் பிராய்ச்சித்தம் செய்யப்பட்டது. விளையாட்டாக செய்த பாவத்திற்கு மட்டும் அல்ல, வினையாக முடிந்த பாவத்திற்கும் இயேசு பாவ நிவிர்த்தி செய்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக விளையாட்டாக செய்த பாவம், வேண்டும் என்று செய்த பாவம் என்று எதுவும் கிடையாது. சின்ன பாவம், பெரிய பாவம் என்று எதுவும் இல்லை. பாவம் பாவமாகவே கருதப்படுகின்றது. கண்களின் பார்வை மூலம் வந்த ஒரு இச்சையான பார்வை கூட விபசாரம் என்ற பாவம் முழுமை பெற்றதாக முடிந்தது. தீய நோக்கம் கூட பாவம் என்ற அட்டவணையின் கீழே வந்து விட்டது. தெரியாமல் செய்த பாவங்களுக்கு ஆரோன் பாவ நிவிர்த்தி செய்தான். தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல பாவங்களுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நிவிர்த்தி கண்டது.

மேலும் ஆரோன் பெற்ற பாவ நிவிர்த்தி காலத்திற்கு உட்பட்டது. வருடா வருடம் தன் உயிரை கையில் பிடித்து, மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிக்க வேண்டும். கர்த்தராகிய இயேசு சிலுவையில் கண்ட பாவ நிவிர்த்தி முக்காலத்திற்கும் உரித்தானது. எபி. 7:23,24-வது வசனங்கள். ''அன்றியும் அவர்கள் மரணத்தின் நிமித்தம் நிலைத்து நிற்க கூடாதவர்களானபடியினால் ஆசாரியராக்கப்படுகின்றவர்கள் அநேகராயிருக்கிறார்கள். இவரோ என்றென்றைக்கும் நிலைத்து இருக்கிறபடியினாலே மாறி போகாத ஆசாரியத்துவம் உள்ளவராக இருக்கிறார்.'' எக்காலத்திற்கும் பயன் அளிக்கும் பாவ நிவிர்த்தி இயேசு கிறிஸ்துவின் மூலம் கிடைத்தது. காரணம் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார். கால சக்கரத்தில் இயேசுவின் பிறப்பு திரும்ப திரும்ப வருவதே இல்லை. பெத்லகேம் பாலனாக ஒரே ஒரு முறை வந்தவர் திரும்ப திரும்ப வர வேண்டிய அவசியம் இல்லை. கல்வாரி நாயகனாக ஒரே ஒரு முறை மரித்த கிறிஸ்து இனி மரிப்பதும் இல்லை. உலகத்திற்கு பாவ மன்னிப்பு வழங்க இன்னொரு இரட்சகன் இனி எழும்ப அவசியம் வரப்போவதும் இல்லை.

மூன்று சிலுவைகள் கல்வாரி மலைகளில் உண்டு. ஒன்று மன்னிப்பு அருளும் சிலுவை, பிறிதொன்று மன்னிப்பை ஏற்றுக்கொள்ளும் சிலுவை. மற்றொன்று மன்னிப்பை மறுத்து விடும் சிலுவை! ஏற்பதும், மறுப்பதும் அவரவர் பிரியம். ஆனால் வருகிற எவரையும் புறம்பே தள்ளாமல் ஆசீர்வதிப்பது இயேசுவின் பிரியம். ஆரோன் தேடிய பாவ நிவிர்த்தி முதலாவது தனக்காக தேடும் பாவ நிவிர்த்தியாக இருந்தது. பின்னர்தான் அவன் ஜனங்களுக்காக பாவ நிவிர்த்தி தேடினான். தனது குற்றம் மன்னிக்கப் பட்ட பின்னர் மற்றவர் குற்றம் மன்னிக்கப்பட ஆரோன் முயற்சி எடுத்தான். தான் குணப்பட்ட பின்னர் தன் சகோதரரை ஸ்திரப்படுத்த முன் வந்தான். கர்த்தராகிய இயேசு அருளிய பாவ நிவிர்த்தியில் முதலாவது தமக்காக எவ்வித பாவ மன்னிப்பும் அவர் தேடவே இல்லை. இழந்து போனதை தேட மட்டுமே இயேசு இறங்கி

வந்தார். தனக்காக எதுவும் தேட தரணி வரவே இல்லை. ''அவர் பிரதான ஆசாரியர்களை போல முன்பு தன் சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டுவதில்லை. ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் செய்து முடித்தார்.'' என்று எபி. 7:27-ல் பார்க்கிறோம்.

என்னில் குற்றம் உண்டென்று உங்களில் யார் சொல்லக்கூடும் என்றவர்க்கு எவ்வித பாவ அறிக்கையும் தேவைப்படவில்லை. ''அவர் பாவம் செய்யவில்லை; அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவும் இல்லை'' என்று பரிசுத்த பேதுரு 2:22-வது வசனம் கூறுகின்றது. ஆரோன் ஒரு மிருகத்தின் இரத்தம் கையில் எடுத்து பிராயச்சித்தம் தேடினான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ தமது சொந்த இரத்தம் சிந்தி பாவ நிவிர்த்தி செய்தார். நம்மை நாமே நல்லவராக்க முடியாது. நம்மை நீதிமான்கள் என்ற நிலைக்கு கொண்டு வந்தது இயேசுவின் சொந்த இரத்தமே ஆகும். ''நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டு இருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே'' என்று ரோமர் 5:9-வது வசனம் கூறுகின்றது. ''இயேசுவினுடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கின்றது,'' என்று எபே. 1:7-ல் பார்க்கிறோம்.

உலகம் முழுவதும் உள்ள விசுவாசிகளின் திரள் என்று அழைக்கப்படும் சபை அவரது சொந்த இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட சபை ஆகும். கர்த்தராகிய இயேசு இரத்தப்பாடு பட்டு சம்பாதித்த சபைக்கு பொறுப்பு எடுக்கின்றவர்கள் ஜாக்கிரதையுடன் பணிபுரிய வேண்டும் என்று அப். 20:28-வது வசனம் கூறுகின்றது. ''ஆகையால் உங்களை குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் சம்பாதித்து கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள்'' என்று கூறப்பட்டு உள்ளது. தேவனாகிய கர்த்தர் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்து கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள் என்று தேவன் கூறுவதை அந்த வசனத்தில் நாம் அறிந்து கொள்ளுகின்றோம். கர்த்தர் தம் சுய இரத்தத்தினால் தமது சபையை சம்பாதித்து கொண்டு இருக்கின்றார்.

ஆரோன் கொடுத்தது அடுத்த இரத்தம். இயேசு கொடுத்தது சொந்த இரத்தம். ஆரோன் பயந்து பயந்து அஞ்சி, அஞ்சி மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான் என்று நாம் லேவியராகம புத்தகத்தில் பார்க்கின்றோம், காரணம் சங்கீதம் 18:11-ம் வசனம் கூறுவது போன்று இருளைத் தமக்கு மறைவிடமாக்கி கர்த்தர் அங்கு வீற்றிருக்கின்றார். 1 இரா. 8:11-வது வசனம் கூறுவது போன்று கார்மேகத்தில் கர்த்தர் வாசம் பண்ணுகிறார். 1 தீமோ. 6:16-வது வசனம் கூறுவது போன்று சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவராக கர்த்தர் இருக்கின்றார். கார் இருளில், கடும் ஒளியில் வாசம் பண்ணும் கர்த்தாதி கர்த்தர் முன் யார் தான் பிரவேசிக்க முடியும்? எனவே கனத்த திரைச்சீலை ஒன்று அவரைப் பார்க்க கூடாதபடி அனைவரின் கண்களையும் குருடாக்கி போட்டது.

ஆனால் சீர்திருத்தத்தின் சாட்சியை சிலுவையில் துவக்கிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நாம் நன்றி உள்ளவர்களாக இருக்கின்றோம். எருசலேம் தேவாலயத்தின் திரைச் சீலையை மேல் இருந்து கீழாக கிழித்து அனைவரும் அருகில் வருக என்ற ஓர் புதிய அத்தியாயத்தை இயேசு கிறிஸ்து துவங்கினார். பரிசுத்த மாற்கு எழுதிய சுவிசேஷம்

இயேசுவின் இரத்தம் ஆரோனின் பலிகளின் இரத்தத்தை அவமாக்கிற்று

15:38-வது வசனம். ''அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாக கிழிந்தது.'' ஆரோன் திரைச்சீலையை கடந்து சென்றான். நாம் எவ்வித தடையும் இன்றி நேராக கர்த்தாதி கர்த்தரிடம் செல்ல முடியும் என்பதை நாம் அறிந்து கொண்டோம். ஆரோனின் காலத்தில் அவனை தவிர பரிசுத்தர் அருகில் யார் செல்ல முடியும்?. சீர்திருத்தல் காலத்தில் வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் எவரும் செல்ல முடியும். ஆரோனின் காலத்தில் பயந்து பயந்து கிருபாசனத்தை நெருங்கினான். சீர்திருத்தல் காலத்தில் மிகுந்த தைரியத்துடன் நெருங்குவதற்கு வாய்ப்பு பிறந்தது. அச்ச உணர்வுடன் ஆண்டவரை நோக்கி அண்ணார்ந்து பார்த்த காலங்கள் முடிந்து போனது. அன்பு நெஞ்சத்துடன் இயேசுவை கிட்டி சேரும் காலம் பிறந்து விட்டது. ஆரோனை போல் ஆண்டவர் சமுகத்தில் வாய் பொத்தி நிற்கும் காலங்கள் மறைந்து போனது. அப்பா பிதாவே என்று கர்த்தாதி கர்த்தரை கூப்பிடும் காலம் பிறந்தது. ஆரோன் மூலம் அல்ல, இயேசுவின் மூலம் பிறந்தது. கிரியையின் மூலமாக அல்ல. இயேசுவின் கிருபையின் மூலம் பிறந்தது. நியாயப்பிரமாணத்தின் காலம் சிலுவையில் முடிந்தது. சீர்திருத்தல் காலம் இயேசுவில் தோன்றியது.

ஆரோன் ஆசரிப்பு கூடாரத்துக்குள் வந்து, தான் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும் போது, உடுத்தியிருந்த சணல் நூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு, பரிசுத்த இடத்திலே ஜலத்தில் ஸ்நானம் பண்ணி, தன் வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, வெளியே வந்து, தன் சர்வாங்க தகனபலியையும் ஜனங்களின் சர்வாங்க தகனபலியையும் இட்டு, தனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, பாவ நிவாரண பலியின் கொழுப்பை பலிபீடத்தின் மேல் தகனிக்கக்கடவன். (லேவி. 16:23-25)

ஆரோன் நடத்தும் பாவ நிவிர்த்தி ஆராதனையின் இறுதி பாகமான 5-வது பாகத்தை 23-28 வசனங்களில் நாம் படிக்கின்றோம். ஆரோன் ஆசரிப்பு கூடாரத்திற்குள் வந்து தான் பரிசுத்த ஸ்தலத்திற்கள் பிரவேசிக்கும் பொழுது உடுத்தியிருந்த சணல் நூல் வஸ்திரங்களை களைந்து விடுவதையும் அங்கே அவைகளை வைத்து விடுவதையும் நாம் 23-வது வசனத்தில் பார்க்கின்றோம். ஆரோன் ஆசரிப்பு கூடாரத்திற்குள் வந்து தான் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது உடுத்தியிருந்த அந்த ஏழை கோலம் காணக்கூடிய சணல் நூல் வஸ்திரங்களை எடுத்து போட்டு விடுகின்றான். மிகவும் சிறப்பு நிறைந்த தனது வஸ்திரத்தை உடுத்தி கொள்ளுகின்றான். சணல் நூல் வஸ்திரம் அவனை ஒரு துக்கம் உள்ள மனிதனாக முன்பு காட்டியது. இப்பொழுது பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்றவுடன் ஆரோனின் துக்கம் சந்தோஷமாக மாறியது. சணல் நூல் வஸ்திரம் இனிமேல் தேவைப்படவே இல்லை. களையப்பட்டது. புதிய வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டது. ஆரோன் பாவ நிவிர்த்தி ஆராதனை முடிந்தவுடன் களைந்து போட்டு விடும் அந்த சணல் நூல்

வஸ்திரத்தை பின்னதாக அவன் ஒரு பொழுதும் உடுத்தியதே இல்லை. மறுவருடம் இடம் பெறும் பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு புதிதாக வேறு ஒரு சணல் நூல் வஸ்திரம் தயாரிக்கப்பட்டது. ஒரு முறை உபயோகிக்கப்பட்ட சணல் நூல் வஸ்திரம் மறுமுறை பயன்படுத்தப்படவே இல்லை.

24-ம் வசனத்தில் பரிசுத்த இடத்திலே ஜலத்தில் ஸ்நானம் பண்ணி என்று கூறப்பட்டுள்ளது. வெண்கலத் தொட்டி நீரில் தன்னை ஆரோன் சுத்தப்படுத்தி கொள்ளுகின்றான். ஆசாரியர்கள் தங்களை சுத்தப்படுத்தி கொள்ள வெண்கலத் தொட்டியில் இருந்த தண்ணீர் தவிர அவர்களை சுத்தம் செய்துகொள்ள தண்ணீர் தொட்டிகள் வேறு எதுவும் ஆசரிப்பு கூடாரத்தின் எல்லைகளில் இடம்பெறவில்லை என்பதை யாத்திராகம புத்தகத்தில் நாம் ஏற்கெனவே பார்த்தோம். வெண்கலத் தொட்டியில் இருந்த தண்ணீர் ஆரோனுக்கும் அவனது குமாரரான ஆசாரியர்களுக்கும் போதுமானதாக இருந்தது.

ஆரோன் தன்னை சுத்திகரித்த பின்னர் தன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு வெளியே வருகிறான். மகிமை பொருந்திய வஸ்திரம், முகத்தில் ஒரு புதிய மகிழ்ச்சி இரண்டும் அவனில் தெரிகின்றது. பின்னர் ஆரோன் தனது சர்வாங்க தகனபலியை செலுத்த முன் வருகின்றான். லேவி. 16:3-வது வசனத்தில் ஒரு காளை, ஒரு ஆடு என்று இரண்டும் ஆரோன் பலியிடுவதற்கு ஆயத்தப்படுத்தி இருந்தான். காளை ஏற்கெனவே பலியாகி விட்டது. ஆடு இப்பொழுது பலியாக போகின்றது. 5-வது வசனத்தில் ஜனங்களின் பலியாக இரண்டு வெள்ளாடும் ஒரு ஆட்டுக்கடாவும் வாங்கப்பட்டது என்று பார்த்தோம். அந்த இரண்டு வெள்ளாடுகளில் ஒன்று உயிர் கொடுத்து பலியாகி விட்டது. மற்றொன்று உயிரோடு பலியாகி விட்டது. மீதியாக இருந்த ஒரு ஆட்டுக்கடா தகனபலிக்கு பயன்படுத்தப்பட்டது.

பின்னர் ஆரோன் தனக்காகவும், ஜனங்களுக்காகவும் பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட மிருகங்களின் கொழுப்பை பலிபீடத்தின்மேல் தகனிக்கின்றான். பாவ நிவிர்த்தி பெற்ற ஜனங்கள் அதனை காத்துக்கொள்ள மனத்தாழ்மையுடன் வாழ வேண்டும். 'நான்' என்ற கர்வத்திற்கு காரணமாக இருக்கும் கொழுப்பு சுட்டு எரிக்கப்படுகின்றது. மனிதனின் மமதைகள் சுட்டு எரிக்கப்படும் பொழுது மனிதன் மேன்மை அடைகின்றான். பெருமையின் சிகரத்தில் இருக்கும் மனிதனுக்கு சிறுமையும் வறுமையும், துக்கமும் துயரமும் மாறிமாறி வாழ்க்கையில் வந்து கொண்டே இருக்கும்.

போகவிடப்படும் போக்காடாகிய வெள்ளாட்டு கடாவைக் கொண்டு போய் விட்டவன், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம் பண்ணி, பின்பு பாளயத்திற்குள் வருவானாக. பாவ நிவிர்த்திக்கென்று பரிசுத்த ஸ்தலத்துக்குள் இரத்தம் கொண்டுவரப்பட்ட பாவ நிவாரணபலியாகிய காளையையும், பாவநிவாரண பலியாகிய வெள்ளாட்டுக்கடாவையும், பாளயத்துக்கு புறம்பே கொண்டு போய், அவைகளின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியிலே சுட்டெரிக்கக்கடவர்கள். அவைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம் பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வருவானாக. (லேவி. 16:26-28)

21,22 ஆகிய வசனங்களில் போக்கு ஆடு வனாந்தரத்திற்கு அனுப்பப்பட்டதை நாம் பார்த்தோம். அதற்கான ஆள் வசமாக ஆரோன் அதனை அனுப்பியதை நாம் பார்த்தோம்.

இப்பொழுது அந்த ஆள் தனது வேலையை வெற்றிகரமாக முடித்து, தன் வஸ்திரங்களை துவைத்து ஜலத்தில் ஸ்நானம் செய்து திரும்பி வந்து ஆரோனுடனும் ஜனங்களுடனும் சேர்ந்து கொள்ளுகின்றான். இதனை 26-வது வசனத்தில் பார்க்கிறோம். அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்கின்றார்கள். பாவ நிவிர்த்திக்கு என்று கொல்லப்பட்ட மிருகங்கள் பலவாகும். அதன் எஞ்சிய பாகங்கள் பாளயத்திற்கு புறம்பாக ஒரு மனிதனால் எடுத்து செல்லப்பட்டு எரிக்கப்படுகின்றது. அவைகளை எரித்த மனிதன் தன் வஸ்திரங்களை தோய்த்து ஸ்நானம் செய்து ஜனங்களுடன் சேர்ந்து கொள்ளுகின்றான். இன்னும் அதிகமாக ஜனங்கள் மகிழ்கிறார்கள். இதை 27,28 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கிறோம்.

பாவ நிவிர்த்தியின் ஆராதனை பயபக்தியுடன் ஆரம்பிக்கப்பட்டது. பாவ நிவிர்த்தியின் ஆராதனையின் முடிவு மிகவும் சந்தோஷத்துடன் நிறைவு பெறுகின்றது. ஆராதனையின் ஆரம்பத்தில் அமைதி காணப்பட்டது. ஆராதனையின் முடிவில் சாட்சியின் நேரங்கள் ஆரம்பித்தது. இதுவரை ஆரோன் மூன்று முறை மகா பரிசுத்தரின் சந்நிதி முன் கண்ணீருடன் நின்றான். இப்பொழுது மக்களுக்கு முன்பாக களிப்போடு நிற்கின்றான். அவனது கண்ணீர் எப்படி களிப்பாக மாறியது என்று அனைவருக்கும் முன்பாக சாட்சி கூறுகின்றான். போக்கு ஆட்டை வனாந்தரத்திற்கு துரத்தி சென்றவன் பாவமும் அதன் சாபமும் எப்படி துரத்தப்பட்டது என்பதை பற்றி தொடர்ந்து சாட்சி கூறுகின்றான். பலியான மிருகங்களின் பாகங்களை பாளையத்திற்கு புறம்பே எடுத்து சென்று சுட்டு எரித்தவன் திரும்பி வந்து சாட்சி கூறுகின்றான். சாட்சிக்கு மேல் சாட்சி அங்கு கேட்கப்படுகின்றது. நான்காவது முறையாக ஆரோன் அதன் பின்னர் மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசிப்பான். முதலாவது பிரவேசிக்கும் பொழுது தூப கலசத்துடன் பிரவேசித்து, மகா பரிசுத்த ஸ்தலத்தின் தரையில் தூப கலசத்தை வைத்தான். பாவம் நீக்கப்படும் பொழுது சாட்சி கூறுதல் ஆரம்பமாகுகின்றது. உதடுகள் திறக்கப்படும் பொழுது கர்த்தரின் புகழ் அறிவிக்கப்படுகின்றது. இருதயத்தில் விசுவாசிக்கப்படும், வாயினால் அறிக்கை பண்ணப்படும்.

சாட்சியின் நேரம் முடிந்த பின்னர் ஆரோன் நான்காவது முறையாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கின்றான். முதலாவது பிரவேசிக்கும் பொழுது தூப கலசத்துடன் பிரவேசித்தான் என்று பார்த்தோம். அந்த தூப கலசத்தை மகா பரிசுத்த ஸ்தலத்தின் தரையில் மகா பயபக்தியுடன் வைத்தான் என்றும் பார்த்தோம். இப்பொழுது ஆராதனையின் முடிவில் அதனை திரும்பவும் எடுத்து கொள்ளத்தக்கதாக அவன் நான்காவது முறையாக பரிசுத்த ஸ்தலம் பிரவேசிக்கின்றான். பிரவேசித்த ஆரோன் தூப கலசத்தை எடுத்து மிகுந்த பயபக்தியுடன் வெளியே வந்து ஜனங்களுக்கு முன்பாக நிற்கின்றான். இவ்விதமாக பாவ நிவிர்த்தி நாளின் ஐந்தாவது பகுதியும் பூர்த்தியானது. ஜனங்களின் மனம் பூரிப்பானது.

பாவ நிவிர்த்தி ஆராதனை பாவங்கள் மூடப்பட நடத்தப்பட்டது. ஆராதனையின் 14 நிலைகளையும் ஆரோன் அதிக கவனத்துடன் நிறைவேற்றி தனது பாவங்களையும் தனது ஜனங்களின் பாவங்களையும் பரிசுத்தராகிய தேவன் மூடி போட்டுவிட மூன்று முறை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று வந்தான். பாவ நிவிர்த்தி பெற்று விட்டார்கள் என்பதற்கு ஆதாரம் பரிசுத்தராகிய தேவன் இளைப்பாறுகிறார் என்பதே ஆகும். பரிசுத்தராகிய தேவன் அவர்கள்மேல் எவ்வித கோபமும் கொள்ளாமல் அமைதியாக இருக்கின்றார் என்பதே ஆகும். மனிதர் செய்யும் பாவங்களினால் பரிசுத்தராகிய தேவன் அமைதி அற்றவராக மாறி விடுகின்றார். செய்த பாவங்களுக்கு பாவ நிவிர்த்தி பெற்று விட்டால் தேவ கோபத்திற்கு மக்கள் விலகி விடுகின்றார்கள். தேவனுடன் ஒப்புரவாகும் ஓர் நிலைமை மனிதனுக்கு

மட்டற்ற ஆசீர்வாதத்தை கொண்டு வரும் நிலைமை ஆகும். பாவங்களை அறிக்கை இட்டு மன்னிப்பு பெறுவதின் மூலம் அவர்கள் தேவனை திருப்தி செய்தார்கள் என்று பார்க்கின்றோம். தேவ சாபத்திற்கு நீங்கலாகி மகிழ்ச்சி பெற்றார்கள் என்று பார்க்கின்றோம். பாவங்கள் மனிதனுக்கும் தேவனுக்கும் நடுவில் ஓர் சுவர் போல் உயர்ந்து கொண்டே போகின்றது. கர்த்தாதி கர்த்தரை விட்டு மனிதனை பிரிக்கின்றது. மனிதன் கர்த்தாதி கர்த்தரை விட்டு பிரிந்து வாழும் வரை எல்லாம் அவனுக்கு இருந்தும் அவன் எதுவும் இல்லாதவன் போலவே வாழுகின்றான். அவன் விரும்பும் அனைத்தும் இந்த உலகில் அவனுக்கு இருந்தாலும் அவைகளை அனுபவிக்க முடியாதவனாகவே காணப்படுகின்றான். பரிசுத்தராகிய கர்த்தருடன் அவன் மீண்டும் இணைக்கப்பட, பாவமாகிய தடுப்பு சுவர் உடைக்கப்பட வேண்டும். மனத்தாழ்மை என்பதின் மூலமாக, ஆத்துமா தாழ்மைபடுவதின் மூலமாக, பாவ அறிக்கை என்பதின் மூலமாக, கண்ணீர் என்பதின் மூலமாக தான் ஒரு பாவி என்பதை ஒப்புக்கொள்ளுவதின் மூலமாக, பாவமாகிய சுவர்கள் உடைக்கப்பட வாய்ப்பு இருக்கின்றது.

பாவத்தை குறித்து வரும் துக்கம், பாவத்தை அறிக்கை செய்யும் இதயம், பரிசுத்தம் வாஞ்சிக்கும் உள்ளம், இவைகளே பாவ நிவிர்த்தி பெறுவதற்கு மனிதனுக்கு ஏற்ற முறைகளாகும். ஆரோன் நடத்திய பாவ நிவிர்த்தி ஆராதனையின் மூலமாக பாவமாகிய தடுப்பு சுவர் நீக்கப்பட்டது. பரிசுத்தராகிய தேவனின் பிரசன்னம் வெளிப்பட்டது. அதன் விளைவாக பரிசுத்தம், உண்மை, நீதி என்பது குடிகொள்ளும் ஒரு பாளையமாக அவர்கள் பாளையம் மாறியது. துதியும் ஸ்தோத்திரமும் தொனிக்கின்றது. உள்ளங்கள் ஒருமித்து நிற்கின்றது. தேவனுடைய நாமம் உயர்த்தப்படுகின்றது.

எபிரெயர் நிருபம் நான்கு சுவிசேஷங்களையும் தன்னகத்தை ஒருங்கே கொண்ட நிரூபமாகும். சிருஷ்டிப்பின் காலம் முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலம் வரை தெரிவிக்கும் ஒரு நிருபம் ஆகும். பழைய ஏற்பாட்டினை ஒன்று திரட்டி கூறும் ஒரு நிருபம் ஆகும். எபிரெயர் நிருபம் புதிய ஏற்பாட்டின் லேவியர் ஆகமம் ஆகும். அதில் உத்தம பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்து நமக்காக வெட்டப்பட்ட பலி ஆடாக அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றார்.

முதல் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களும் பூர்வ காலம் முதல் தேவனின் இதய பாரம் மனிதனின் நல்வாழ்வே என்பதையும், அந்த நல்வாழ்விற்கு ஒரே வழியாக, ஒரே பலியாக வந்தவர் தேவ குமாரன் என்றும் துவக்கவுரை ஆற்றுகின்றது. எபிரெயர் நிருபம் 1:4 - 2:18-வது வசனங்கள் வரை தேவ தூதரின் சர்வ சேனைகளையும் விட மேலானவர் உத்தம பிரதான ஆசாரியராக இருக்கும் இயேசு கிறிஸ்து என்று கூறுகின்றது. எபிரெயர் நிருபம் 3-வது அதிகாரம் மோசேயையும் விட மேலான பிரதான ஆசாரியர் இயேசு என்று எடுத்து உரைக்கின்றது. எபி. 4:1-13 வசனங்கள் யோசுவா கொடுத்த இளைப்பாறுதல் கானானுக்கு உட்பட்டது. இயேசுவாகிய உத்தம பிரதான ஆசாரியர் தரும் இளைப்பாறுதல் இடம், காலம், அனைத்திற்கும் அப்பாற்பட்டது என்று கூறுகின்றது. தொடர்ந்து எபிரெயர் நிருபம் 5-வது அதிகாரத்தை பார்ப்போம் என்றால், இயேசு பிதாவாகிய தேவனால் உயர்த்தப்பட்ட பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்பதை அந்த அதிகாரத்தின் 5-வது வசனம் குறிப்பிட்டு கூறுகின்றது. எபி. 6:20-வது வசனம் இயேசு நித்திய பிரதான ஆசாரியர் என்று அறிவிக்கின்றது. 7:2-வது வசனம் இயேசு நீதியின் இராஜா, சாலேமின் இராஜா, சமாதானத்தின் இராஜா என்று பறைசாற்றுகின்றது. எபி. 8:8-வது வசனத்தில் இருந்து புது

உடன்படிக்கையின் காலம் இயேசுவின் மூலம் பிறந்ததை அறிகின்றோம். 9:11-வது வசனத்தின் மூலம் சீர்த்திருத்த காலத்தின் சிற்பி இயேசுவாகிய உத்தமபிரதான ஆசாரியர் என்று காண்கின்றோம்.

எபி. 10:19-வது வசனத்தில் மனிதரின் நல்வாழ்விற்கு புதியதும் ஜீவனுமான மார்க்கமாக இயேசு அமைந்துவிட்டதை பார்க்கின்றோம். எபி. 11:6-வது வசனம் விசுவாசமாகிய படிக்கட்டுகளில் ஏறி பரம கானானின் வாசலில் பிரவேசிக்கலாம் என்று பார்க்கின்றோம்.

எபி. 12:24-வது வசனத்தில் பரிசுத்தராகிய தேவனுக்கும், பாவிகளாகிய மனிதருக்கும் நடுவில் இயேசு ஒரு பாலமாக மாறி விட்டார் என்று பார்க்கின்றோம். எபிரெயர் நிருபத்தின் இறுதி அதிகாரமான 13-வது அதிகாரம் இனிமேல் எந்த பலியும் தேவை இல்லை. ஸ்தோத்திரபலி ஒன்றே போதும் என்று 15-வது வசனத்தில் முழங்கி நிறைவு பெறுகின்றது. அன்று ஆரோன் வருடா வருடம் தேடிய பாவ நிவிர்த்தியை பழைய ஏற்பாடு காட்டியது. இயேசு ஒரே ஒரு முறை உலகில் வெளிப்பட்டு நிரந்தரமாக கண்ட பாவ நிவிர்த்தியை புதிய ஏற்பாடு தெரிவிக்கின்றது. சகரியா 13:1-ம் வசனம் ''அந்நாளில் பாவத்தையும் அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்'' என்று கூறுகின்றது. அந்த ஊற்று நீர் இயேசுவாகிய ஜீவ தண்ணீர் என்று ஆயிற்று. மீகா தீர்க்கதரிசியின் புத்தகம் 7-வது அதிகாரம் 19-வது வசனம் கூறுவதை பாருங்கள். ''அவர் திரும்ப நம்மேல் இறங்குவார். நம்முடைய அக்கிரமங்களை அடக்கி நம்முடைய பாவங்களை எல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டு விடுவார்'' என்று கூறியது. மீகா தீர்க்கர் கூறியபடியே பாவ விமோசனம் இயேசுவில் பிறந்தது. அவரை விசுவாசிக்கும் அனைவருடைய பாவங்களும் சமுத்திரத்தில் எறியப்படுகின்றது.

''அக்கிரமத்தை ஒரே நாளிலே நீக்கிப் போடுவேன்'' என்று சகரியா 3:9-வது வசனம் முன் உரைத்தது. அது பெரிய வெள்ளிக்கிழமை அன்று நிறைவேறியது. அக்கிரமத்தை ஒரே நாளிலே நீக்கிப்போடுவார் என்று சகரியா அன்று கூறியது இயேசு சிலுவையில் மரித்த நாளாகிய பெரிய வெள்ளிக்கிழமை நாளாக மாறியது. அனைத்து மனிதரின் பாவ நிவிர்த்தியும் 'முடிந்தது' என்று கூறி தமது ஜீவனை இயேசு ஒப்புக்கொடுத்ததே அந்த நாளாகும். இயேசு நமக்கு ஓர் பாவ நிவிர்த்தி நாளை உருவாக்கி கொடுத்து விட்டார். அந்த வெள்ளிக்கிழமையை பெரிய வெள்ளிக்கிழமை என்று கூறுகின்றோம். அந்த மாபெரும் நிகழ்ச்சியின் துவக்கம் முதல் ஆரோனின் பாவ நிவிர்த்தியும் அஸ்தமாகி போனது. 'அசாசல்' என்ற போக்கு ஆடும் அர்த்தம் அற்ற ஒன்றாக மாறிவிட்டது.

நியாயப்பிரமாணம் தூரமாய் சென்றது. இரட்சிப்பு சமீபமாய் வந்தது. ஆரோனுக்கும் அவன் ஜனங்களுக்கும் மிக தேவையான அற்புதம் பாவ நிவிர்த்தி என்ற அற்புதமே ஆகும். அந்த அற்புதத்தை அன்றுள்ள குறிப்பிட்ட ஒரு மக்களுக்கு மட்டும் அல்ல, உலகம் எங்கும் உள்ள அனைத்து மக்களுக்கும் அள்ளிக் கொடுக்க வந்த உத்தம பிரதான ஆசாரியராக இயேசு மாறிவிட்டார். இயேசுவிடம் அந்த அற்புத பாவ நிவிர்த்தி வாங்க முதலாவது ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டியது ஆரோன் கொடுத்தது போன்று பலியிடப்படும் மிருகங்களை அல்ல, ஆனால் அவன் தன்னையே ஒப்புக்கொடுக்க வேண்டியது. எபி. 10:5-வது வசனம். ''பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. அதே அதிகாரம் 7-வது வசனம் கூறுவதை

பாருங்கள். ''இதோ உமது சித்தத்தின்படி மட்டும் செய்வதற்கு என் சரீரத்தை ஒப்புக்கொடுக்கிறேன்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. பெற்றுக்கொள்ளுவதற்கு ஒப்புக்கொடுத்தல் அவசியப்படுகின்றது. இயேசு அருளும் பாவ மன்னிப்பை அனுபவிக்க மனிதன் தன்னை அர்ப்பணிப்பது அவசியம் என்று தெரிகின்றது. தாகம் இல்லாமல் தண்ணீர் மீது ஆர்வம் வருவது இல்லை. பசி இல்லாமல் உணவின் மீது ஆசை வருவது இல்லை. பசி தாகம் இல்லாமல் பாவ மன்னிப்பு தேவை என்ற உணர்வு ஒருவருக்கும் வருவது இல்லை.

மனம்போல் வாழ்வதற்கு தன் தகப்பன் ஓர் தடையாக இருக்கிறார் என்று வீட்டில் உள்ள பணங்களை வாரிக்கொண்டு இளைய மகன் தூரமாக ஓடிப்போனான். கையிலும், பையிலும் உள்ள அனைத்தும் செலவாகி விட்டதை ஓர் நாள் கண்டான். முன்னும், பின்னும், இடது புறமும், வலது புறமும் இருந்த இன்ப சிநேகிதங்கள் எல்லாம் இல்லாமல் போய் விட்டதையும் கண்டான். ஏன் இப்படி செய்தேன் என்ற குற்ற உணர்வும் இனிமேல் என்ன நான் செய்வேன் என்ற துக்க உணர்வும் அப்பா, அப்பா என்ற பசி தாகத்தை அவனுக்குள் எழுப்பியது. திரும்பி போய் அப்பாவிடம் வாங்க சென்றான். பொன்னும் பொருளும் அல்ல. அன்பும் மன்னிப்பும் வாங்க சென்றான். வாங்குவதற்கு ஒன்று செய்தான். அப்பாவின் காலடிகளில் விழுந்து தன்னையே முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தான்.

அப்பாவின் காலில் விழுந்து என்னை மன்னித்து விடுங்கள் அப்பா என்று விம்மி, விம்மி அழுதான். பெற்றது மன்னிப்பு மட்டுமல்ல, புதிய வஸ்திரம், கையில் மோதிரம், சுற்றி சூழ உண்மையாக அவனை நேசிக்கும் உத்தமர்கள் கூட்டம். தன்னை முற்றிலுமாக இயேசுவின் காலடிகளில் ஒப்புக்கொடுக்காமல் மனிதன் மன்னிப்பும், மகிழ்ச்சியும், நிறைவும், பூரணமும் பெறப்போவதும் இல்லை. தன்னை முழுவதுமாக ஒப்பு கொடுக்கின்றவர்களுக்கு இயேசு முதலாவது கொடுப்பது பாவ மன்னிப்பு ஆகும். அதை தமது சிலுவை மரணத்தின் மூலம் வழங்கி கொடுக்கின்றார். இயேசு இரண்டாவது கொடுப்பது திரும்பவும் பாவத்தில் விழாமல் வெள்ளையுள்ள ஜீவியம் செய்ய அற்புத வல்லமை ஆகும். அதை தமது உயிர்த்தெழுதலில் அற்புத வல்லமையினால் வழங்கி கொடுக்கின்றார். சிலுவை பாவியை மன்னிக்கப்பட்ட பாவியாக மாற்றுகின்றது. இயேசுவின் உயிர்த்தெழுதல் மன்னிக்கப்பட்ட பாவியை நீதிமான் என்று மாற்றுகின்றது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சுய இரத்தத்தினால் சம்பாதித்த அத்தனை ஆசீர்வாதங்களையும் வாங்கி கொள்ளுவதற்கு ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தங்களையே காணிக்கைகளாக கொடுக்க வேண்டும் என்று நாம் பார்க்கின்றோம். தம்முடைய சொந்த குமாரன் என்றும் பாராமல் நம் எல்லாருக்காகவும் இயேசுவை ஒப்புக்கொடுத்தவர், இயேசுவிடம் தங்களை ஒப்புக்கொடுக்கின்றவர்களுக்கு இயேசுவுடன் கூட இயேசுவிற்கு உரிய மற்ற எல்லாவற்றையும் அள்ளி அருளுகின்றார். நூறத்தனையாக இம்மையிலும் அருளுகின்றார். மறுமையிலும அருளுகின்றார். ஒப்புக்கொடுக்காமல் பெற்றுக்கொள்ளுவது இல்லை.

9.8 பாவ நிவாரண நாள்

ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும் தங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்துவதுமன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்க வேண்டும்; இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது. (லேவி. 16:29)

பாவ நிவிர்த்தி அல்லது பாவத்தில் இருந்து நிவாரணம் என்பது எப்பொழுது இடம்பெற வேண்டும் என்பதையும் அதன் முக்கியத்துவத்தையும் 29-ம் வசனம் முதல் அறிகின்றோம். மிக முக்கியமான இந்த ஆராதனை வருடம் தோறும் எந்த மாதம் எந்த நாளில் இடம்பெற வேண்டும் என்பது குறிக்கப்படுகின்றது. திட்ட வட்டமான முறையில் பாவ நிவிர்த்தி ஆராதனை ஒழுங்காகவும் சீராகவும் நடைபெறும் குறிப்புகள் இந்த வசனத்தில் கொடுக்கப்படுகின்றன.

ஏழாம் மாதம் 10-ம் தேதியிலே என்று ஒரு குறிப்பு வருகின்றது. ஏழாவது மாதம் 10-வது தேதி பாவ நிவிர்த்தி ஆராதனை நடைபெறும் நாளாக குறிக்கப்படுவதை காண்கின்றோம். இதே குறிப்பு லேவி. 23:27-வது வசனத்தில் மறுபடியும் ஞாபகப்படுத்தப்படுகின்றது. ''அந்த ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்கு பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபை கூடும் பரிசுத்த நாளுமாக இருப்பதாக.'' என்று அந்த வசனம் கூறுகின்றது. ஏழாவது மாதம் எபிரெய நாள் காட்டியில் ''திஸ்ரி'' என்ற மாதம் ஆகும். எபிரெய மக்களுக்கு இரண்டு விதமான நாட்காட்டிகள் இருந்தன. ஒன்று தேசீய நாட்காட்டி என்பது ஆகும். மற்றொன்று சமய நாட்காட்டி என்பது ஆகும். திஸ்ரி என்ற மாதம் தேசிய நாட்காட்டியில் முதலாவது வரும் மாதமாக இருந்தது. ஆனால் சமய நாட்காட்டியில் திஸ்ரி மாதம் ஏழாவது வரும் மாதமாக இருக்கின்றது.

எபிரெய மக்கள் ஏழு பண்டிகைகளை ஒரு வருடத்தில் அனுசரித்தார்கள். அதில் மூன்று பண்டிகைகள் திஸ்ரி மாதத்தில்தான் இடம் பெற்றன. திஸ்ரி மாதத்தின் முதலாவதுநாள் பண்டிகையில்தான் துவங்கியது. எண். 29:1-வது வசனத்தை பாருங்கள். ''ஏழாம் மாதம் முதல் தேதி பரிசுத்தசபை கூடும் நாளாக இருக்கக்கடவது. அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. அது உங்களுக்கு எக்காளம் ஊதும் நாளாக இருக்க வேண்டும்.'' எக்காளம் ஊதும் பண்டிகை என்பது திஸ்ரி மாதம் முதல் நாளும் இரண்டாவது நாளும் அனுசரிக்கப்பட்டது. இதே திஸ்ரி மாதம் 10-வது நாளில் பாவநிவிர்த்தி நாள் இடம்பெற்றது. அதற்கு ஓர் ஆயத்தமாக மாதத்தின் முதலாவது நாள் எக்காளம் ஊதும் பண்டிகை இடம் பெறுகின்றது. அவர்கள் எக்காளம் ஊதுவதற்கு ஆட்டு கொம்புகளைதான் பயன்படுத்தினார்கள். பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு தயார் ஆக்கப்பட வேண்டிய பலிஆடுகளை அந்த ஆட்டு கொம்புகளான எக்காளங்கள் ஞாபகப்படுத்தின. திஸ்ரி மாதத்தின் 15-வது நாள் முதல் 22-வது நாள் வரை 7 நாட்கள் திஸ்ரி மாதத்தில் இடம்பெறும் கூடாரப் பண்டிகை அல்லது சேர்ப்பின் பண்டிகை என்பது கொண்டாடப்பட்டது. இவ்விதமாக திஸ்ரி மாதத்தில் 9 நாட்கள் பண்டிகையிலும், ஒரு நாள் பாவநிவிர்த்தி ஆராதனையிலும் கடந்து சென்றது.

லேவியராகம புத்தகம் 16-வது அதிகாரத்தில் அறிமுகமாக்கப்பட்ட பாவ நிவிர்த்தி ஆராதனை நிறுத்தப்பட முடியாத ஒரு ஆராதனையாகும். வருடா வருடம் இடம் பெற்று கொண்டே இருக்க வேண்டிய ஆராதனை ஆகும். 29-வது வசனம். ''இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்ககடவது'' என்று கூறுகின்றது.

பஸ்கா பண்டிகை அனுசரிப்பு இதற்கு முன்னர் நித்திய கட்டளையான அனுசரிப்பாக கூறப்பட்டதை யாத். 12:14-வது வசனத்தில் பார்த்தோம். ''அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள்'' (யாத். 12:14). அதனைத் தொடர்ந்து ஆசரிப்பு கூடாரத்தில் உள்ள குத்துவிளக்கு இரவில் அணையவே கூடாது என்றும்,

எரிந்து கொண்டே இருக்க வேண்டும் என்றும் யாத். 27:21-வது வசனத்தில் பார்த்தோம். சமாதான பலி செலுத்த வருகின்றவர்கள் பலியின் ஒரு பகுதியை ஆசாரியர்களுக்கு கொடுத்து விடவேண்டும் என்பதும் நித்திய கட்டளையாக கூறப்பட்டதை லேவி. 7:34-வது வசனத்தில் பார்த்தோம். இங்கு பாவ நிவிர்த்தி ஆராதனையும் நிறுத்தப்பட முடியாத ஒரு ஆராதனையாக நித்திய கட்டளையாக கொடுக்கப்படுகின்றது. லேவி. 23:26-32 வசனங்களில் மோசேயிடம் ஏழாம் மாதம் 10-வது நாள் பாவ நிவிர்த்தியின் நாள் என்று மறுபடியும் ஒருமுறை கர்த்தர் கூறுவதை பார்க்கின்றோம். பாவ நிவிர்த்தி நாளில் ஆராதனை முடிந்தவுடன், பெரிய மகிழ்ச்சி ஆசாரியர்களுடைய முகத்திலும் அனைவரின் முகத்திலும் தெரியவரும். அந்த மகிழ்ச்சியின் உச்ச கட்டமாக எக்காளங்கள் ஊதப்படும் என்று லேவி. 25:9-வது வசனத்தில் நாம் பார்க்கிறோம். ''அப்பொழுதும் ஏழாம் மாதம் 10-ம் தேதியில் எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும். பாவ நிவாரண நாளில் உங்கள் தேசம் எங்கும் எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்.''

மனதை புண்படுத்தும் பாவம், நிவிர்த்தி ஆக்கப்பட்டது என்ற சந்தோஷ செய்தி சாட்சியாக பற்பல இடங்களில் எக்காளம் ஊதப்பட்டு தேசம் எங்கும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்று லேவி. 25:9-வது வசனம் கூறுகின்றது. அந்த எக்காளத்தொனியுடன் யூபிலி ஆண்டும் நினைவுபடுத்தப்பட்டது. ''யூபிலி'' (jubilee-Hebrew-yobed or yoved meaning 'a ram horn trumpet' or coronet) என்பதின் சரியான பொருள் ''ஆட்டின் கொம்பு'' என்பது ஆகும். பாவநிவிர்த்தி ஆராதனை முடிவு பெற்றவுடன் பாவ நிவிர்த்திக்கு காரணமாக இருந்த பலியின் மிருகமான 'ஆட்டின் கொம்பு' 'யூபிலி' ஊதப்படுகின்றது. விடுதலை பெற்றோம். பாவத்தில் இருந்தும், பாவம் தரும் சாபத்தில் இருந்தும் விடுதலை பெற்றோம் என்று எக்காளம் ஊதப்படுகின்றது. விடுதலை நினைவு கூறப்படுகின்றது.

ஜனங்கள் அனைவரும் தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைபடுத்தினார்கள் என்று இந்த வசனத்தில் பார்க்கின்றோம். ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துதல் என்பது ஆத்துமாவை ஒடுக்குதல் என்பது ஆகும். ஏசாயா 58:5-வது வசனத்தில் இதனை காணலாம். மேலும் ஆத்துமாவை உபத்திரவப்படுத்துதல் என்பதும் ஆகும். சங். 35:13-வது வசனத்தில் இதனை பற்றி நாம் பார்க்கலாம். அவைகளின் பொருள் பாவத்தை குறித்த மெய்யான



ஆட்டின் கொம்பு எக்காளம்

எக்காளம் ஊதப்படுகின்றது

மனஸ்தாபம் அவர்கள் இருதயங்களில் இடம் பெறுதல் என்பதே ஆகும். ஏன் இப்படி செய்தாய் என்று மற்றவர் கேட்கவேண்டிய அவசியப்படவில்லை. தானே தன்னைப் பார்த்து நான் ஏன் இப்படி செய்தேன் என்று மனம் உடைந்து கண்ணீர் சிந்துவதே ஆத்துமாவை

உபத்திரவபடுத்துதல் என்பது ஆகும். நான் இப்படி செய்திருக்கவே கூடாது என்று செய்த பாவத்தை குறித்து வெட்கப்படுவது ஆத்துமாவை உபத்திரவபடுத்துதலும் ஒடுக்குதலும் ஆகும். நான் இனி ஒரு நாளும் பாவத்தில் ஈடுபடவே மாட்டேன் என்று பாவத்தை கசப்பது ஆகும். அதுவே மெய்யான மனஸ்தாபம் ஆகும். அதுவே ஆத்துமாவை உபத்திரவப்படுத்துதலும் ஒடுக்குதலும் ஆகும். பரிசுத்தராகிய தேவன் பாவத்தை வெறுக்கின்றார். ஆனால் பாவம் செய்து விட்ட மனிதரை வெறுக்கவே இல்லை என்பதை வேத புத்தகம் கூறுகின்றது.

லேவி. 16:29-வது வசனம் கூறுவது போல பாவ நிவிர்த்தி நாளிலே ஜனங்கள் தங்கள் தவறுதல்களை, மீறுதல்களை மனதார ஒப்புக்கொள்ளுவார்கள். அறிக்கை செய்வார்கள். ஒருவருக்கு ஒருவர் மன்னிப்பு கேட்பார்கள். கோபம், சண்டை முதலியவற்றினால் ஒருவருக்கு ஒருவர் பேசாமல் இருந்தவர்கள் தங்களை தாழ்த்தி கொள்ளுவார்கள். ஒருவரை பற்றி ஒருவரிடம் குறை கூறியவர்கள், கோள் சொன்னவர்கள் தவறாக எடுத்து உரைத்தவர்கள் சம்பந்தப்பட்ட நபரிடம் வலிய சென்று நான் உங்களைக் குறித்து மற்றவர்களிடம் தப்பிதமாக எடுத்து உரைத்தேன் என்று ஒப்பு கொள்ளுவார்கள். மனிதர் மனிதரிடம் திறந்த மனதுடன் பழக துவங்கும் நாளே உண்மையான பாவ நிவிர்த்தியின் நாள் என்பது ஆகும். அதுவே ஆத்துமாவை உபத்திரவப்படுத்துதல் என்பதும் ஆகும்.

பரிசுத்த ஸ்தலம் வந்து தேவனுடன் மட்டும் ஒப்புரவு ஆகிவிட்டு மனிதர்களுடன் பகை உணர்வுடன் வீடு திரும்புதல் அல்ல. தேவனுடனும் மனிதனுடனும் ராசி ஆகிவிடுதல் என்பதே பாவ நிவிர்த்தி நாளின் உச்சகட்டமாகும். அதற்கு ஆத்துமா ஒடுக்கப்படாமல் வேறு வழி எதுவுமே இல்லை. அவ்வித நேரங்களில் கடுமையான உபவாசங்கள் எடுக்கப்பட்டன. எந்த வேலையிலும் எவரும் ஈடுபடவே இல்லை. 29-வது வசனம் கூறுவது போல ஒரு வேலையும் செய்யாமல் இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது.

கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கி சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச் சுத்திகரிக்கும்பொருட்டு, உங்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்யப்படும். உங்களுக்கு அது விசேஷித்த ஓய்வுநாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மை படுத்தக்கடவீர்கள்; இது நித்திய கட்டளை. (லேவி. 16:30-31)

பாவ நிவிர்த்தி தினம் ஒரு விடுமுறை நாள் அல்ல. அது ஒரு உபவாச நாள் ஆகும். உபவாசம் செய்யும் பொழுது வேலையும் செய்து விட்டால், உபவாசம் அர்த்தம் இல்லாத உபவாசமாக மாறி போய்விடும். முழங்கால், கண்ணீர், பாவ அறிக்கை, தேவனுடனும் மனிதனுடனும் திறந்த மனதுடன் ஒப்புரவு ஆகுதல் என்பவைகளே உண்மையான உபவாசங்கள் ஆகும். அதுவே தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்துதல் என்பதும் ஆகும். ஆத்துமாவை தாழ்மைப்படுத்துதல் என்பது தேவனுடனும் மனிதனுடனும் மன்னிப்புக்கேட்டு ஒப்புரவாகி விடுவதற்கு சமமானது ஆகும். குற்றங்களை ஒப்புக்கொள்ளுதலும், மன்னிப்பு கேட்பதும் எல்லோரும் செய்ய முடியாத ஒரு செய்கை. பரிசுத்த ஆவியானவர் மட்டும் தரும் தைரியம் கொண்டு, தரும் நேர்மை கொண்டு மனிதர்கள் செய்யக்கூடிய செய்கை. குற்றங்களை ஒப்புக்கொள்ளுவதினால் தரம் குறைவது இல்லை. கையிட்டு செய்யும் காரியங்களிலே மிகவும் ஆசீர்வாதங்களும் மேன்மைகளும் வாழ்க்கையில் முன்னேற்றங்களும் ஜனங்கள் பெற்றுக்கொள்ளுவார்கள். பாவங்களை

ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டு விட்டு விடுகின்றவர்களுக்கு வாழ்வும், உயர்வும் காத்துக்கொண்டு இருக்கின்றன என்பவைகளை இந்த பாவ நிவிர்த்தியின் நாளில் இடம்பெறும் பற்பல நிகழ்ச்சிகளில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

அபிஷேகம் பெற்றவனும், தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியஞ்செய்யப் பிரதிஷ்டை பண்ணப்பட்டவனுமாகிய ஆசாரியனே பாவநிவிர்த்தி செய்யக்கடவன். அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய சணல்நூல் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்பு கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து, ஆசாரியருக்காகவும் சபையின் சகல ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்யக்கடவன். (லேவி.16:32-33)

பாவ நிவிர்த்தி ஆராதனையினை முன் நின்று நடத்துகின்றவன் அபிஷேகம் பண்ணப்பட்டவனாகவும், பிரதிஷ்டை பண்ணப்பட்டவனாகவும் ஆசாரிய ஊழியம் செய்கின்றவனாகவும் இருக்க வேண்டும் என்று 32-வது வசனத்தில் நாம் பார்க்கிறோம். அவன் மிகுந்த மனத்தாழ்மையுடனும், மனத் தூய்மையுடனும் ஆராதனை முறைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதைக் குறிக்க, அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய சணல் நூல் வஸ்திரங்களை உடுத்திக்கொள்ள வேண்டும் என்று 32-வது வசனம் கூறுகின்றது.

அவன் எதற்கெல்லாம் பாவ நிவிர்த்தி செய்யவேண்டும் என்பதை பற்றி 33-வது வசனம் விளக்கம் கொடுக்கின்றது. பரிசுத்த ஸ்தலத்திற்கு, ஆசரிப்பு கூடாரத்திற்கு, பலிபீடத்திற்கு, ஆசாரியருக்கு, சபையின் சகல ஜனங்களுக்கு பாவ நிவிர்த்தி செய்யும் நாளாக அந்த நாள் அமைந்தது.

இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய சகல பாவங்களுக்கும் பாவநிவிர்த்தி செய்வது, உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது என்று சொல் என்றார். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே ஆரோன் செய்தான். (லேவி. 16:34)

34-வது வசனத்தில் இது நித்திய கட்டளையாக இருக்கட்டும் என்று மறுபடியும் ஒரு முறை கூறப்படுகின்றது.

லேவியராகமம் 16-வது அதிகாரத்தில் ஆரோன் நடத்திய பாவ நிவிர்த்தி ஆராதனை முதன் முதலாக இடம் பெற்ற ஆராதனை ஆகும். கி.மு. சுமார் 1445-வது வருடம் இந்த முதலாவது ஆராதனை இடம்பெற்றது. எண்ணாகமப் புத்தகம் 20-ம் அதிகாரம் 25 முதல் 29 வசனங்களில் ஆரோன் மறுமைக்குள் பிரவேசிப்பதையும், அவனது மகன் எலெயாசார் ஆரோனின் இடத்தில் ஆசாரியனாக பொறுப்பு எடுப்பதையும் பார்க்கிறோம்.

எலெயாசார் தலைமையில் இடம்பெற்ற முதல் பாவ நிவிர்த்தி ஆராதனையை எண். 29:7-11 வசனங்களில் காணலாம். அதாவது லேவியராகமம் 16-வது அதிகாரத்தில் இடம் பெற்ற பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு பின்னர் 38 வருடங்கள் கழித்து ஆரோனின் மகன் தலைமையில் பாவ நிவிர்த்தி ஆராதனை நடைபெறுகின்றது. ஆரோன் உண்மையுடன் வருடா வருடம் பாவ நிவிர்த்தி ஆராதனையினை நடத்தி வந்தான் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளுகின்றோம்.

தொகுதி - 6
பரிசுத்தமான வாழ்வில் நிலைத்து நிற்பது எப்படி?

அத்தியாயம் - 10
உயிர், உடல், ஆவியில் பரிசுத்தம் காக்க பிரமாணங்கள்

10.1 முகவுரை

லேவியராகமத்தை கற்றுக்கொள்ள துவங்கும் பொழுது லேவியராமத்தில் மொத்தம் 27 அதிகாரங்கள் உண்டு என்று அறிந்தோம். அந்த 27 அதிகாரங்களையும் இரண்டு பகுதிகளாக பிரித்து நாம் படித்து வருகின்றோம். முதல் பகுதியில் இடம் பெறும் அதிகாரங்கள் 1-16 அதிகாரங்களும், கடைசி அதிகாரமான 27-வது அதிகாரமும் ஆகும். இந்த 17 அதிகாரங்களில் பரிசுத்தமான வாழ்வை பெற்று கொள்ளுவது எப்படி என்று கூறப்பட்டு உள்ளது. லேவியராகத்தின் இரண்டாவது பகுதியாக லேவியராகமம் 17-ம் அதிகாரம் முதல் 26-ம் அதிகாரங்கள் வரை அடங்கி உள்ளது. இந்த இரண்டாவது பகுதியில் 10 அதிகாரங்கள் இருப்பதை பார்க்கின்றோம். இந்த 10 அதிகாரங்களிலும் பரிசுத்தமான வாழ்வில் நிலைத்து நிற்பது எப்படி என்று கூறப்பட்டு உள்ளது. நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்பதே லேவியராகம புத்தகத்தின் தலையங்கம் ஆகும். ஒரு சங்கு போன்று இந்த வசனம் லேவியராகம புத்தகம் முழுவதும் முழங்குகின்றது என்பதை நாம் பார்க்கின்றோம். லேவி. 11:44,45 ஆகிய வசனங்களிலும் 19:2-வது வசனத்திலும் 20:7,26 21:8,15, 22:9,16,32 ஆகிய அனைத்து வசனங்களிலும் நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்று திரும்ப திரும்ப பரிசுத்த சங்கு முழங்கி கொண்டே இருக்கின்றது. காரணம் பரிசுத்தம் இல்லாமல் ஒருவரும் தேவனை தரிசிப்பது இல்லை.

தேவன் பரிசுத்தர். தேவனாகிய கர்த்தரிடம் நெருங்கி சேருகின்றவர்களும், பரிசுத்தர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க படுகின்றார்கள். பிதா பூரண சற்குணர். பிதாவின் பிள்ளைகளாக வாஞ்சிக்கின்றவர்கள் ஒவ்வொருவரும் பூரண சற்குணர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

லேவியராகமம் 17-வது அதிகாரம் முதல் 26-வது அதிகாரங்கள் வரை பரிசுத்த வாழ்விற்கு வழி நடத்தும் அநேக குறிப்புகளை நாம் பார்க்கின்றோம். ஆகவே இந்த அதிகாரங்களை பரிசுத்த வாழ்விற்கு வழி நடத்தும் அதிகாரங்கள் என்று அழைக்கின்றார்கள். பரிசுத்தமான மனிதன், பரிசுத்தமான குடும்பம், பரிசுத்தமான சபை என்பதே தேவனுடைய விருப்பமாக இருக்கின்றது. பரிசுத்தம் என்பதை மனிதன் இழந்து அடிமையாகி போனதை ஆதியாகம புத்தகம் காட்டியது. யாத்திராகம புத்தகம் அடிமையாகி போன மனிதனுக்கு கர்த்தர் அளித்த விடுதலையை காட்டியது. லேவியாராகம புத்தகம் கர்த்தர் அருளிய விடுதலை அனைத்தையும் காத்து கொள்ளுவது எப்படி என்று காட்டுகின்றது. பரிசுத்தராகிய தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தம் என்ற வார்த்தை மூன்று முக்கிய எபிரெய சொற்கள் மூலம் குறிப்பிட்டு காட்டப்படுகின்றது. முதலாவது பயன்படுத்தப்பட்ட சொல் ''கோடேஷ்'' (ko-desh) என்ற எபிரெய சொல் ஆகும். யாத்.15:11-வது வசனத்தில் வரும் ஸ்தோத்திர

பாட்டினில் ''கோடேஷ்'' என்ற வார்த்தை பயன் படுத்தப்பட்டு உள்ளது. ''கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?'' என்று அந்த வசனம் கூறுகின்றது. ''கோடேஷ்'' என்ற சொல் பரிசுத்தராகிய தேவன் ஒருவருக்கே பொருந்தும் சொல்லாக நிற்கின்றது. ''கோடேஷ்'' என்ற எபிரெய சொல் 'மகிமையான புனிதத்துவம் கொண்டவர்' என்று பொருள் கொண்டு பரிசுத்தம் என்பதை ஆணித்தரமாக குறிக்கின்றது. பரிசுத்த வேதாகமத்தில் 830 முறை இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டு உள்ளது.

முதல் 5 ஆகமங்களில் மட்டும் 350 தடவை இந்த சொல் காணப்படுகின்றது. கோடேஷ் என்ற இந்த மகத்துவம் நிறைந்த சொல்லின் பொருள் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்படுதல் என்பது ஆகும். யாத்திராகமம், பாவத்தில் இருந்து பிரித்து எடுக்கப்படுதல் என்பதற்கு மாதிரியாக உள்ளது. லேவியாராகமம் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்படுதலை தெரிவிக்கின்றது. பாவத்தில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட பின்னரே கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்படுதல் துவங்குகின்றது. கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட பின்னர் பிற எதுவும் அதனை நெருங்க முடியாது, அணுக முடியாது. கைப்பற்ற முடியாது, வசீகரிக்க முடியாது. கோணலும் மாறுபாடும் நிறைந்த ஒரு உலகில் வாழ்ந்தாலும், சோதனைகளும், வேதனைகளும் நிறைந்த ஓர் உலகில் வாழ்ந்தாலும் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட பின்னர் நீதியும், நேர்மையும் சற்றும் விட்டு கொடுக்கப்படுவது இல்லை. வெற்றியும், முன்னேற்றமும் தடுத்து நிறுத்தப்படுவதும் இல்லை என்று பார்க்கின்றோம். ''சிறுமைப் பட்டவனை அவனிலும் பலவானுடைய கைக்கும், சிறுமையும் எளிமையுமானவனை கொள்ளையிடுக்கிறவனுடைய கைக்கும் தப்பிவிக்கிற உமக்கொப்பானவர் யார் கர்த்தாவே? என்று என் எலும்புகளெல்லாம் சொல்லும்'' என்று சங். 35:10-ல் பார்க்கின்றோம். தொடர்ந்து சங். 71:19-வது வசனம், ''தேவனே உம்முடைய நீதி உன்னதமானது. பெரிதானவைகளை நீர் செய்தீர். தேவனே உமக்கு நிகரானவர் யார்,'' என்று கூறுகிறது.

கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்க்கையினை பத்திரமாக பாதுகாப்பது பரிசுத்தம் என்பது ஆகும். கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்க்கையை காத்துக்கொள்ள பயன்படுத்தப்படும் இன்னொரு எபிரெய சொல் 'செரம்' என்ற சொல் ஆகும். 'செரம்' என்று வரும் அந்த எபிரெய சொல்லின் பொருள் என்னவென்றால் ஈவு, இரக்கம் எதுவுமின்றி அழித்துவிடுதல் என்பது ஆகும். 'கோடேஷ்' என்றால் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்படுதல் என்று பார்த்தோம். கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்வுகளை கெர்ச்சிக்கிற சிங்கம் போல வந்து விழுங்கிவிட, பிடுங்கி எடுத்து விட முற்படும் எதையும் ஈவு, இரக்கம் இல்லாமல் சற்றும் காலதாமதம் இல்லாமல், எவ்வித இரண்டாவது சிந்தனைகளும் இல்லாமல் உடனடியாக ஒழித்து கட்டுவதே 'செரம்' என்ற எபிரெய சொல்லின் பொருள் ஆகும். உலகம், மாம்சம், பிசாசு ஆகிய மூன்று தீய சக்திகளும் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்வுகளை திசை திருப்ப முற்படும் பொழுது அவ்விதமான உள் உணர்வுகளை உடனடியாக அழித்து விடுதல் என்பது ஆகும். பாவ அழைப்புகளை நிராகரிக்கும் தைரியம் காணப்படுவது ஆகும்.

போத்திபார் என்ற ஒருவனின் மனைவி அவளது வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்ட யோசேப்பு என்ற இளைஞனை பாவ சேர்க்கைக்கு அழைத்தாள். யோசேப்பு என்ற அந்த வாலிபன் கர்த்தருக்கென்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்க்கை ஒன்றை நடத்தி வந்தான். பாவ

அழைப்பு வரும் பொழுது பரிசுத்தமான ஒரு ஜீவியத்தை விட்டு கொடுக்கவே மாட்டேன் என்றான். எவ்வித தயக்கமும் இல்லாமல் சோதனை அவனால் விரட்டப்பட்டது. அழிக்கப்பட்டது. எரிகோ பட்டணம் பின் ஒரு நாள் பிடிக்கப்படும் பொழுது சாபத்தீடான அனைத்தும் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. இதையே 'செரம்' என்று சொல்லப்படும் அந்த எபிரெய சொல் பிரதிபலித்து காட்டுகின்றது. எவரும் பார்க்கவில்லை என்றாலும் என் ஆண்டவர் என்னை பார்த்து கொண்டே இருக்கின்றார் என்ற நிச்சயம் பாவத்தை உடனுக்குடன் அழிக்க செய்து விடுகின்றது. பாவ அழைப்புகளை நிராகரிக்க செய்கின்றது.

தைரியம், உறுதி, தீர்மானம் அனைத்தும் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்க்கையை தீவிரமாக பாதுகாக்கின்றது. 1 சாமுவேல் 21-வது அதிகாரத்தில் தாவீது தேவ ஆலயத்தின் ஆசாரியனிடத்தில் வருவதை பார்க்கின்றோம். தாவீதுக்கு பசி அதிகமாக இருக்கின்றது. ஆசாரியனிடம் புசிப்பதற்கு ஆகாரம் ஏதாகியும் இருக்கின்றதா என்று கேட்கின்றான். ஆசாரியன், தாவீதினிடத்தில் பரிசுத்த அப்பம் இருக்கின்றது, சாதாரண அப்பம் எதுவும் என்னிடத்தில் இல்லை என்று கூறுவதை நாம் 1 சாமு. 21:4-வது வசனத்தில் பார்க்கின்றோம். சாதாரணம் என்பதை குறிப்பது 'ஜோல்' என்ற எபிரேய சொல் ஆகும். சாதாரணமான அப்பம் என்னிடத்தில் இல்லை என்று ஆசாரியன் தாவீதை பார்த்து கூறுகின்றான். அதாவது சாதாரணம் என்பது பரிசுத்தரின் சமூக அப்ப மேஜைகளில் இடம் பெறுவதே இல்லை என்பதே ஆகும். பரிசுத்தம் என்பதை சாதாரணம் என்று மாற்றவே முடியாது என்று ஆசாரியன் கூறுகின்றான். பரிசுத்தம், பரிசுத்த குலைச்சலுக்கு உட்பட முடியாத ஒன்றாக காணப்படுகின்றது. பரிசுத்தம் எது என்றும் அசுத்தம் எது என்றும் அறிந்து கொள்வதற்கு ஒரு முயற்சி தேவை இல்லை.

பரிசுத்தம் என்பது பளிச்சிட்டு தெரியும் ஒன்று ஆகும். கலங்கரை விளக்குகளுக்கு விளம்பரம் தேவை இல்லை. காரணம் அவைகள் பளிச்சிட்டு தெரிகின்றன. ''நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி அவர் பாதபடியிலே பணியுங்கள். அவர் பரிசுத்தமுள்ளவர். அவருடைய ஆசாரியரில் மோசேயும், ஆரோனும், அவர் நாமத்தை பற்றி கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். அவர் அவர்களுக்கு மறு உத்தரவு அருளினார். மேக ஸ்தம்பங்களிலிருந்து அவர்களோடே பேசினார். அவர்கள் அவருடைய சாட்சி பிரமாணங்களையும் அவர் தங்களுக்கு கொடுத்த கட்டளைகளையும் கைக்கொண்டார்கள். எங்கள் தேவனாகிய கர்த்தாவே நீர் அவர்களுக்கு உத்தரவு அருளினீர். நீர் அவர்கள் கிரியைகளினிமித்தம் நீதி சரிக்கட்டின போதிலும் அவர்களுக்கு மன்னிக்கிற தேவனாயிருந்தீர். நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவருடைய பரிசுத்த பர்வதத்திற்கு நேராக பணியுங்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தம் உள்ளவர்!'' என்று சங். 99:5-9-ல் பார்க்கின்றோம்.

லேவியராகம புத்தகம் 17-26 அதிகாரங்கள் சகல விதத்திலும் ஜனங்கள் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்க்கையை காத்துக்கொள்ள வேண்டும் என்று ஏவுகின்றது. லேவியராகமம் 17-26-வது அதிகாரங்களில் வரும் அத்தனை வசனங்களும், அத்தனை அதிகாரங்களும் சிறு சிறு விபரங்களை கூட மிக துல்லிபமாக விளக்கி காட்டுகின்றன. கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்வுகள் உறுதியாக நிற்பதற்கு மிக சிறிய செயல்களை கூட சாதாரணமாக விட்டு விடக்கூடாது என்றும் மிக சாதாரணமாக தெரிகின்றவைகள் கூட பரிசுத்தம் என்பதில் மிகவும் கவனமாக கையாள வேண்டியவை என்றும் நாம் இந்த அதிகாரங்களில் பார்க்கின்றோம். சிறு சிறு விபரங்களில் கூட பெரிய

அளவு பரிசுத்தமும், உண்மையும், நீதியும் காக்கப்பட வேண்டும் என்று 17-26 அதிகாரங்கள் கூறுகின்றன. பழைய ஏற்பாட்டு புத்தகம் மட்டும் அல்லாமல் புதிய ஏற்பாட்டு புத்தகமும் பரிசுத்தம் என்பதற்கு சம மதிப்பு கொடுக்கின்றது. பழைய ஏற்பாட்டு புத்தகம் எபிரெய மொழியில் எழுதப்பட்டது. எபிரெய மொழியில் ''கோடேஷ்'' என்ற சொல் கர்த்தருக்கு என்று பிரிக்கப்படுதல் என்பதை கூறுகின்றது. புதிய ஏற்பாட்டு நூல் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. கிரேக்க மொழியில் ''கர்த்தருக்கு என்று பிரிக்கப்படல்'' என்பதை குறிக்கும் வார்த்தை ''ஹாக்கியஸ்'' என்ற வார்த்தையாகும்.

புதிய ஏற்பாட்டு தொகுப்பில் மொத்தம் 27 புத்தகங்கள் உண்டு. அந்த 27 புஸ்தகங்களிலும் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்படுவதை குறிக்கும் கிரேக்க வார்த்தையான ''ஹாக்கியஸ்'' என்ற கிரேக்க வார்த்தை 230 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. லேவியராகமம் நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்று கூறுகின்றது. அதே அழைப்பை புதிய ஏற்பாடும் தொடர்ந்து கூறுகின்றது. ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.'' என்று 1 பேது. 1:15,16-ல் பார்க்கின்றோம்.

கர்த்தராகிய தேவன் அனைத்தில் இருந்தும் பிரித்து எடுக்கப்பட்டவர். மகா பரிசுத்தர், அது போன்று அவருடைய பிள்ளைகளாகிய நீங்களும் அனைத்திலும் இருந்து பிரித்து எடுக்கப்பட்டவர்களாக இருங்கள். தீட்டானது ஒன்றும் பிரவேசிக்க இடம் கொடாதேயுங்கள் என்று மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு கூறியதை பரி. பேதுரு விசுவாசிகளுக்கு தனது நிருபத்தில் கூறுகின்றார். 'இஸ்ரவேலின் பரிசுத்தரே' என்று ஏசாயா கர்த்தரை அழைக்கின்றார். தீமையை பார்க்க மாட்டாத சுத்த கண்ணனே என்று ஆபகூக் கர்த்தரை அழைக்கின்றார். ''நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கின்றது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து தேவனை அறியாத அஞ்ஞானிகளை போல மோக இச்சைக்கு உட்படாமல், உங்களில் அவனவன் தன் தன் சரீர பாண்டத்தை பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டு கொள்ளும்படி அறிந்து: இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்கு சொல்லி, சாட்சியாக எச்சரித்த படியே இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றையும் குறித்து கர்த்தர் நீதியை சரிக்கட்டுகிறவராய் இருக்கிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.'' என்று 1 தெச. 4:37-ல் பார்க்கின்றோம்.

10.2 இரத்தத்தில் பரிசுத்தம்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்ல வேண்டியதாவது; கர்த்தர் கட்டளையிடுகிறது என்னவென்றால்: (லேவி. 17:1-2)

லேவியராகமம் 1,4,6 ஆகிய அதிகாரங்களும் மற்றும் 11,15,16 ஆகிய அதிகாரங்களும் துவங்குவது போன்று 17-வது அதிகாரமும் துவங்குகின்றது. கர்த்தர் மோசேயை நோக்கி என்றே அந்த அனைத்து அதிகாரங்களும் துவங்குகின்றது. அதனை

தொடர்ந்து நான் உனக்கு சொல்கிறவைகளை நீ ஆரோனுக்கும், அவன் குமாரருக்கும் ஜனங்கள் அனைவருக்கும் சொல்லு என்றும் துவங்குகின்றது.

கர்த்தர் மோசேயிடம் சொல்லும் அனைத்து வார்த்தைகளும் வசனங்களும் மோசே தனக்குள் அடக்கி வைத்து கொள்வதற்கு அல்ல, அனைவருக்கும் அறிவிப்பதற்காகவே ஆகும். மோசே அதை எவ்வளவு உண்மையாக செய்தாரோ அவ்வளவு அதிகமாக கர்த்தர் மோசேயிடம் கூறிக்கொண்டே இருந்தார். கர்த்தருடைய வசனத்தை தேவையுள்ள மக்களுக்கு கொடுத்து கொண்டே இருக்கின்றவர்களுக்கு கர்த்தர் வசனங்களை கொடுத்து கொண்டே இருப்பார். இதனை லேவி. 17:1,2 ஆகிய வசனங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

இஸ்ரவேல் குடும்பத்தாரில் எவனாகிலும் மாட்டையாவது செம்மறியாட்டையாவது வெள்ளாட்டையாவது ஆசரிப்பு கூடார வாசலாகிய கர்த்தருடைய வாசஸ்தலத்துக்கு முன்பாக, கர்த்தருக்கு செலுத்தும்படி கொண்டுவராமல், (லேவி. 17:3)

லேவியராகமம் 11-வது அதிகாரத்தில் உண்ண வேண்டிய உணவு எவைகள் என்று கூறப்பட்டது. லேவியராகமம் 17-வது அதிகாரத்தில் அதனை உண்ண வேண்டிய முறை எவ்வாறு என்று கூறப்படுகின்றது. 1-7 அதிகாரங்களில் ஐந்து பலிகளை பற்றி கூறப்பட்டது. இந்த அதிகாரத்தில் பலியிடும் இடம் எது என்று கூறப்படுகின்றது. பலி இடும் இடம் ஆசரிப்பு கூடாரமே அன்றி வேறு எந்த இடமும் இல்லை என்பது நிச்சயப்படுத்தப்படுகின்றது. கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட அந்த ஜனங்களின் தனிப்பட்ட வாழ்வில் கர்த்தர் மிக தாராளமாக குறுக்கிடுவதை இந்த அதிகாரத்தில் நாம் பார்க்கின்றோம். சிறு சிறு செயல்களில் கூட அவர்கள் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். சாதாரணமாக எதையும் எடுக்க பரிசுத்த வாழ்வில் இடமே இல்லை என்பதே ஆகும். சிறிய செயல்களில் கூட தேவ கட்டளை மீற படக்கூடாது என்ற கட்டுப்பாடு ஜனங்களுக்கு இருக்குமானால் பெரிய சோதனைகளையும் எளிதாக வென்று அவர்கள் முன் செல்லுவதற்கு வாய்ப்பு இருக்கும். பாசி படிந்த இடங்களில் நடக்கும் பொழுது ஒரு சிறிய கவனக்குறைவு கூட வழுக்கி கீழே விழ செய்து விடும். கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்வில் வளர்ந்து வரும் பொழுது சிறிய செயலிலும் கூர்மையாக இல்லை என்றால் பெரிய அளவில் ஒரு நாள் தூய்மை பாதிக்கப்படும். எனவே தேவன் திட்டவட்டமான ஓர் கட்டளையை 3 முதல் 7 வசனங்களில் கூறுகின்றார்.

மீட்கப்பட்ட ஜனங்களின் ஆய்வாளராக ஆண்டவர் இருப்பதை பார்க்கின்றோம். அந்நாட்களில் பூமியின் வளம் பெருக வேண்டும் என்று இஷ்டமான இடங்களில் குழி தோண்டி, பலியிட்டு, பலியின் இரத்தத்தை அந்த குழியில் ஊற்றி விடுவார்கள். கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்கள் இஷ்டமான இடங்களில், இஷ்டமான முறைகளில் பலியிட முடியாது என்பதை 3-7 வசனங்கள் கூறுகின்றது.

பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்களின் ஆராதனை மற்ற அனைத்தையும் விட முற்றிலும் வேறுபட்டது. ஆராதனை நடத்தும் இடம், நடத்தும் முறை, நடத்தும் நபர், அதில் கலந்து கொள்ள வரும் ஜனங்களின் பரிசுத்தம் அனைத்தும் லேவியராகம புத்தகத்தில் கூறப்பட்டு உள்ளது. ஆனாலும் பிசாசானவன் அவர்களை திசை திருப்புகின்றான். கர்த்தரின் விருப்பப்படி அல்ல, தங்கள் இஷ்டப்படி பலி செலுத்தலாம், ஆராதனை நடத்தலாம் என்று தூண்டி

விடுகின்றான். மாய்மாலமான தாழ்மை, பொய்யான அன்பு அனைத்தும் கொண்டு ஏதேனில் ஏவாளை வஞ்சித்தது போல தேவ ஜனங்களை வஞ்சிக்கின்றான். தேவசித்த ஆராதனைகள் அகலவும், மனித இஷ்ட ஆராதனைகள் புகுத்தப்படவும் செய்கின்றான். ''இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர, ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தை பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.'' என்று கொலோ. 2:23-ல் பார்க்கின்றோம்.

லேவி. 17:3-வது வசனத்தில் உணவு வகைக்காகவோ பலியின் நோக்கத்திற்காகவோ எதற்கு என்றாலும் கொல்லப்படும் எந்த மிருகமும் முதலாவது கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு முன்பாக கொண்டு வரப்பட வேண்டும் என்று அறிகின்றோம். இரண்டாவது கர்த்தரிடம் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்று பார்க்கின்றோம். ஒரு அசைவாட்டும் காணிக்கை போன்று கர்த்தருக்கு முதலாவது கொடுத்து பின்னர் திரும்ப பெற்று, சமைத்து சாப்பிட வேண்டும் என்று பார்க்கின்றோம். கர்த்தருக்கு என்று பிரித்தெடுக்கப்பட்ட மக்களின் உணவு கர்த்தரால் கொடுக்க படுகின்றது. அதனை உண்ணுவதற்கு முன் கர்த்தர் நினைவு கூறப்பட வேண்டும். ஜெபம் செய்யாமல் சாப்பிட வேண்டாம் என்பதற்கு ஓர் ஏற்ற முன் அறிவிப்பாக இந்த கட்டளை அமைகின்றது.

வனாந்தர பிரயாணத்தில் மக்கள் தங்கியிருந்த கூடாரங்கள் ஆசரிப்பு கூடாரத்தை சுற்றி இருந்தன. எனவே உணவுக்காக தயாராகும் மிருகம் கூட ஆசரிப்பு கூடாரத்தில், கர்த்தரின் சமூகத்தில் நிறுத்தப்பட்டு, வெட்டப்பட்டு, அதின் இரத்தம் முற்றிலுமாக வடிக்கப்பட்டு, பின்னர் எடுத்து செல்லப்பட்டது. மேலும் வனாந்தர பிரயாணத்தில் அவ்வப்போது மட்டுமே மாமிசம் புசித்தார்கள். ஆனால் கானான் தேசத்திற்குள் சென்று குடியிருந்த பின்னர் அவர்கள் உணவுக்காக அடிக்கப்படும் மிருகங்களை தேவ ஆலயம் கொண்டு வந்து கர்த்தரின் சமூகத்தில் நிறுத்த அவசியம் இல்லை என்று பின்னர் ஆண்டவரால் கூறப்பட்டது. ஆண்டவர் கூறுகிறபடி இரத்தம் முற்றிலுமாக அகற்றி, துதித்து, புசிக்கலாம் என்று கூறப்பட்டது. வனாந்தரத்தில் இருந்தபோது அவர்கள் கூடாரங்கள் ஆசரிப்பு கூடாரத்தை ஒட்டி இருந்தது. கானான் சென்ற பின்பு பல மைல்கள் தள்ளி வாழ போகின்றார்கள். எனவே உபாகம புஸ்தகம் 12-வது அதிகாரத்தில் அதற்கு ஏற்ற விதி முறைகள் கொடுக்கப்பட்டன. ''உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொள்ளும் ஸ்தானம் உனக்கு தூரமானால், கர்த்தர் உனக்கு அளித்த உன் ஆடுமாடுகளில் எதையாகிலும் நான் உனக்கு விதித்தப்படி நீ அடித்து, உன் இஷ்டப்படி உன் வாசஸ்தலங்களிலே புசிக்கலாம்.'' என்று உபா. 12:21-ல் பார்க்கின்றோம்.

> ***பாளயத்திற்குள் உள்ளேயாகிலும் பாளயத்துக்கு புறம்பேயாகிலும் அதை கொன்றால், அது அந்த மனிதனுக்கு இரத்த பழியாக எண்ணப்படும். அந்த மனிதன் இரத்தம் சிந்தினபடியால், தன் ஜனத்தில் இராமல் அறுப்புண்டு போவான். (லேவி. 17:4)***

ஜனங்கள் வனாந்தர வாழ்வில் இருக்கும் வரை உணவு வகைக்காகவும், பலி முறைக்காகவும் கொல்லப்படும் மிருகங்கள் பாளயத்திற்கு உள்ளேயும், பாளயத்திற்கு வெளியேயும் வெட்டப்படக் கூடாது என்பது திட்டவட்டமாக கூறப்பட்டது. 'அறுப்புண்டு போவான்' என்று ஓர் தீர்ப்பு இந்த அதிகாரத்தில் மூன்று இடங்களில் வருகின்றது. 17:4,9,14

ஜெபித்து புசிப்பது போல சமாதான பலி காணப்படுகின்றது. அவ்விதமான ஒரு பலியை, கர்த்தரின் சமூகத்தில், ஆசாரியரின் பார்வையில், குடும்பம் அனைத்தையும் கலந்து கொண்டு செய்யாமல் தன் இச்சையாக, தன் இஷ்டப்படி பாளயத்திற்கு புறம்பாக, தேவ சமூகத்திற்கு விலகி சென்று ஒருவன் செலுத்துகின்றான். அது ஓர் இரகசிய பாவமாக காணப்படுகின்றது. இரகசிய பாவங்கள் இடம் பெறும் பொழுது ''அறுப்புண்டு போவான்'' என்ற தீர்ப்பும் தொடர்ந்து வருகின்றது.

யாத்திராகம புஸ்தகம் 30-வது அதிகாரத்தின் கடைசி பகுதியில் ஆசரிப்பு கூடாரத்தின் உபயோகத்திற்கு தேவைப்படும் தூபவர்க்கம் எப்படி தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளதை நாம் பார்த்தோம். பரிசுத்த தூபவர்க்கம் மிகவும் வாசனை நிறைந்தது. மனிதர் பொதுவாக அந்த வாசனையை விரும்புவார்கள். எனவே அதனை ஒரு வியாபார பொருளாக மாற்ற வியாபார நோக்கத்திற்க்காக ஒருவன் தயாரிக்க ஆரம்பிக்கின்றான். யாருக்குமே தெரியாமல் ஆசரிப்பு கூடாரத்திற்கே உரித்தான தூப வர்க்கத்தை வர்த்தகத்தில் பயன்படுத்தி வருமானம் தேட ஆரம்பிக்கின்றான். அவன் எவருக்கும் தெரியாமல் அமைதலாக அந்தரங்கமாக தூப வர்க்கத்தை தயாரிக்கின்றான். அப்படி செய்கின்ற ஒருவனை யாராலும் கண்டு பிடிக்க முடியாது. ஆனால் பரிசுத்தராகிய தேவனின் கண்கள் அவனை பார்த்து கொண்டே இருக்கின்றன. அவன் அறுப்புண்டு போவான் என்று யாத்திராகமம் 30-வது அதிகாரம் 38-வது வசனம் கூறுகின்றது. ''இதற்கு ஒப்பானதை முகறுகிறதற்காக செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போகக்கடவன் என்றார்.'' என்று கர்த்தர் கூறுவதை நாம் பார்க்கின்றோம்.

'அறுப்புண்டு போகக்கடவன்' என்ற தீர்ப்பு பெறுவதற்கு 4 காரணங்கள் எண்ணாகம புத்தகத்தில் கூறப்பட்டு உள்ளது. ''அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் அந்நியர்களிலாகிலும் எவனாவது துணிகரமாய் யாதொன்றை செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போக வேண்டும். அவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டை பண்ணி, அவர் கற்பனையை மீறினபடியால், அந்த ஆத்துமா அறுப்புண்டு போக வேண்டும்; அவன் அக்கிரமம் அவன் மேல் இருக்கும் என்று சொல் என்றார்.'' என்று எண். 15:30,31-ல் பார்க்கிறோம்.

முதலாவது அவன் செய்யும் பாவம் துணிகரமான பாவம் என்று நாம் பார்க்கின்றோம். இரகசியமான பாவம், திட்டமிட்டு, துணிந்து செய்யும் பாவமாக தெரிகின்றது. இரண்டாவது அவன் செய்யும் பாவம் கர்த்தரை நிந்திக்கும் பாவம் என்பது ஆகும். இரகசியமான பாவங்களை ஒருவன் செய்யும் பொழுது கர்த்தர் நிந்திக்கப்படுகின்றார். மூன்றாவது அவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டை பண்ணினான். கர்த்தர் அவனுடன் பேசும்பொழுது மனதை கல்லாக்கினான். நான்காவது கர்த்தரின் பத்து கற்பனைகளை மீறினான். ஒரு கற்பனையை மீறினாலும் 10 கற்பனைகளும் மீறப்பட்டதற்கு சமமாகும். தீர்ப்பு என்ன? அறுப்புண்டு போவதே ஆகும்.

ஆபிரகாம் காலத்தை ஒட்டி வாழ்ந்த ஹமுராபி என்ற அரசனின் சட்டங்களில் 154-வது பிரிவில் அரசனுக்கு தெரியாமல் எதையும் யாராவது ஒருவன் செய்து விட்டால் அவன் நாடு கடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. ஆனால் பரிசுத்தராகிய தேவனின் பிரசன்னத்தை விட்டு ஏசாவை போல விலகி போய் இஷ்டமான இடத்தில், இஷ்டமான முறையில் பலி செலுத்துகின்றவன் அறுப்புண்டு போவான் என்று லேவியராகம புத்தகத்தின் சட்டம் கூறுகின்றது. 'அறுப்புண்டு போவான்' என்பதின் பொருள் மனதிற்கு கஷ்டமான

பொருள் ஆகும். இரகசிய பாவங்களில் ஈடுபடுகின்றவன், அதில் நீடித்து கொண்டு இருக்கிறவன் தலையின் மீது தேவனுடைய கை அவனை அடிப்பதற்காக நீட்டப்பட்டு கொண்டே அவனை தொடர்ந்து செல்லும். எந்த நேரமும், எந்த இடத்திலும் அவன் அடிக்கப்பட போகின்றான். அந்த அடி மரண அடியாக இருக்கும் என்பதே ஆகும்.

லேவியராகமம் 17-வது அதிகாரம் முதல் 26-வது அதிகாரங்கள் வரை தேவன் சொல்லுகிறபடி செய்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் கொடுக்கப்படுகின்றது. தேவன் சொல்லுகின்றபடி செய்ய மறுக்கின்றவர்களுக்கு பெரும் சாபம் காத்து கொண்டே இருக்கின்றது. ''நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ, நீ நன்மை செய்யாது இருந்தால் பாவம் வாசல் படியில் படுத்து இருக்கும்'' என்று கர்த்தர் காயீனை பார்த்து ஆதி. 4:7-ல் கூறினார்.

கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்வை காத்து நடக்கின்றவர்கள் இடம் கொள்ளாமல் போகும் மட்டும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். முழு இருதயத்தோடும் முழு சிந்தையோடும் முழு பெலனோடும் முழு ஆத்துமாவோடும் கர்த்தாதி கர்த்தருக்கு தங்கள் வாழ்நாள்களை அர்பணித்து வாழ்கின்றவர்களுக்கு நிகழ்காலம் ஆசீர்வாதமானதாகவும் வருங்காலம் நம்பிக்கைக்கு உரியதாகவும் அமைகின்றது. முப்பதும், அறுபதும், நூறுமாக அவர்களின் கைகளின் பிரயாசத்தில் அறுவடைகளை அவர்கள் காண்கின்றார்கள். நன்மையும் கிருபையும் அவர்களை தொடர்ந்து கொண்டே செல்லுகின்றது.

லேவி. 17:7-16 வசனங்களை பார்க்க இருக்கின்றோம். கர்த்தருக்கு என்று பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள் வழுகிப் போகும் இதயம் பெற்றவராக இருக்க முடியாது என்பதை 7-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

தாங்கள் சோர மார்க்கமாய் பின்பற்றுகிற பேய்களுக்கு தங்கள் பலிகளை இனி செலுத்தாது இருப்பீர்களாக; இது அவர்கள் தலைமுறை தோறும் அவர்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது. (லேவி. 17:7)

இனி செலுத்தாது இருப்பீர்களாக என்பதில் இருந்து அவர்கள் முன்பு அப்படி செய்து இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளுகின்றோம். பேய்கள் என்பதின் சரியான பொருள் ரோமம் நிறைந்த மிருகம் என்பது ஆகும். அவர்கள் எகிப்தில் இருந்த நாட்களில் அவ்வித மிருகங்களுக்கு பலி செலுத்தினார்கள். அதன் எதிரொலியை யாத்திராகமம் 32-வது அதிகாரத்தில் நாம் பார்த்தோம். ஆரோனின் தலைமையில் கன்றுக்குட்டி ஒன்று சுத்த பொன்னினால் மிக சீக்கிரமாக தயாரிக்கப்பட்டது. அதற்கு பலியும் செலுத்தப்பட்டது. ''அவர்கள் கையிலிருந்து அவன் அந்த பொன்னை வாங்கி, சிற்ப கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதை பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தை கட்டி, நாளைக்கு கர்த்தருக்கு பண்டிகை என்று கூறினான்,'' என்று யாத். 32:4,5-ல் பார்க்கின்றோம்.

ஏற்கெனவே அவர்கள் மிருகங்களுக்கு அவ்விதமான பலி செலுத்தி இருந்தபடியினால் அவர்கள் மிக சீக்கிரமாக பழைய வழி பாட்டிற்கு திரும்பி விட்டார்கள். ஆகையினால் ஏழாவது வசனத்தில் இனி செலுத்தாது இருப்பீர்களாக என்று கூறப்படுகின்றது. சுமார் 525 ஆண்டுகளுக்கு பின்னர் யெரோபெயாம் என்ற ஒரு அரசன் மீட்கப்பட்ட ஜனங்களை இவ்விதமான ஒரு வணக்கத்திற்கு துணிகரமாக வழி நடத்தினான். 2 நாளா. 11:15-வது

வசனம் ''அவன்; மேடைகளுக்கு என்றும் பேய்களுக்கு என்றும் தான் உண்டாக்கின கன்று குட்டிகளுக்கு என்றும் ஆசாரியர்களை ஏற்படுத்தினான்'' என்று நாம் பார்க்கின்றோம். வசதிக்கு ஏற்ப ஆராதிக்கும் இடங்களை அமைத்து கொண்டான். ஆராதனை முறைகளை மாற்றி கொண்டான். இஷ்டமான இடத்தில் இஷ்டமான முறையில் இடம் பெறும் ஆராதனைகளை ''இஷ்ட ஆராதனை'' என்று பரிசுத்த பவுல் அழைக்கின்றார். தேவ சித்தப்படி இடம் பெறும் ஆராதனைகள் வேறே, இஷ்டம் போல் மனிதனால் மாற்றப்பட்டு இடம் பெறும் ஆராதனைகள் வேறே என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார். ஆண்டவர் மீதும், ஆண்டவரின் வசனத்தின் மீதும், மிகுந்த அக்கறை உள்ளவர்கள் போல காட்டி, இஷ்டமான ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. மாய்மாலமான தாழ்மை, செயற்கையான சிரிப்பு அனைத்தும் கொண்டு இஷ்ட ஆராதனைகள் புகுத்தப்படுகின்றன என்று பரி. பவுல் எச்சரிக்கின்றார். இதனை கொலோ. 2:23-வது வசனத்தில் பார்க்கலாம். ''இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றிய ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தை பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.''

லேவி. 17:7-வது வசனத்தில் பார்க்கும் எச்சரிப்பு மீட்கப்பட்ட மக்களாக இருந்தாலும் காக்கப்பட்ட மக்களாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். ஏதேன் தோட்டத்தில் வேலி தாண்டி ஆதி தாயான ஏவாளை இஷ்டமான தீர்மானத்திற்கு பிசாசு வழி நடத்தினான். சிவந்த சமுத்திரத்தை தோத்திர பாட்டு பாடி கடந்து வந்தவர்கள், கர்த்தாதி கர்த்தரை கருத்து ஒருமித்து சேவித்தவர்கள், கவனமாக இல்லை என்றால் கர்த்தரின் கட்டளைகளை காலத்திற்கு ஏற்ப மனித அறிவிற்கு ஏற்ப தங்கள் வசதிக்கு ஏற்ப மாற்றி விடுவார்கள் என்பதை தேவன் அறிந்து இருந்தார்.

உபா. 32:17-வது வசனத்தை பாருங்கள். ''அவர்கள் தேவனுக்கு பலியிடவில்லை. தாங்கள் அறியாதவைகளும் தங்கள் பிதாக்கள் பயப்படாதவைகளும் நூதனமாய் தோன்றிய புது தெய்வங்களுமாகிய பேய்களுக்கே பலியிட்டார்கள்.'' பலியிடுதல் என்பது விண்ணப்பித்தல், வேண்டிக்கொள்ளுதல் என்பது ஆகும். தகனபலி என்பது எபிரெய சொல் 'ஓலா' என்று அறிந்தோம். 'ஓலா' என்பதின் சரியான பொருள் 'விண்ணப்பம் மேலாக செல்லுதல்' என்பது ஆகும். மனதில் வரும் பாரங்களை கர்த்தர் மீது வைத்துவிட, இதய, குடும்ப தேவைகளுக்காக வேண்டிக்கொள்ள தகனபலி ஒரு விண்ணப்ப பலியாக அமைந்தது. இருதய பாரங்களும், குடும்ப தேவைகளும் திரும்ப திரும்ப வந்து கொண்டே இருக்கும். எனவே காலையும், மாலையும் இடைவிடாமல் விண்ணப்பம் கர்த்தரை நோக்கி ஏறெடுக்கப்பட்டு கொண்டே இருக்க வேண்டும் என்ற கட்டளை யாத். 29:39-வது வசனத்தில் கூறப்பட்டது. கர்த்தருடைய ஜனங்களை கீழாக தள்ளிவிட பாரங்களும், பிரச்சனைகளும், கவலைகளும், தேவைகளும் வர வர, விண்ணப்பங்கள் ஓலாவாக மேலாக சென்று கொண்டே இருக்க வேண்டும் என்பது தெளிவாக அறிவிக்கப்பட்டது. விண்ணப்பங்களை கேட்கும் தேவனிடம் கூற வேண்டுமே தவிர வேறு எவரிடமும் ஏறெடுக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதே அறிவிக்கப்படுகின்றது. ஜெபத்தை கேட்கிறவரிடம் ஜெபம் செய்யும் பொழுது ஜெபம் கேட்கப்படுகின்றது. ஆனாலும் கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்டவர்களை தன் கட்டிற்குள் கொண்டு வர பிசாசின் சூழ்ச்சிகள் வரவே செய்கின்றது. எனவே லேவி. 17:7-வது வசனம் ஜனங்களை கடுமையாக எச்சரிக்கின்றது. அந்த நாட்களில் மனதிடம் இல்லாதவர்கள், உடல் உற்சாகம் இல்லாதவர்கள், பயத்தினால் பதறி சத்தம் இடுகின்றவர்கள் ஆகியோர் அனைவரையும் பிசாசு

பிடித்தவர்களாக கருதினார்கள். பிசாசின் கட்டுகளில் இருந்து அவர்களை நீக்க, ரோமம் நிறைந்த ஓர் மிருகத்திற்கு பலி கொடுத்தார்கள். பிசாசின் பிடியிலிருந்து வெளிவர பிசாசினிடமே வேண்டி கொண்டார்கள். பிசாசு நன்மை செய்ய போவது இல்லை. தீமையின் பிறப்பிடமாகவும் தீமையின் இருப்பிடமாகவும் இருக்கும் பிசாசு நன்மை எதுவும் செய்ய போவது இல்லை. நன்மை பெற்று கொள்ள எல்லா நன்மைக்கும் ஊற்றும் காரணருமாக இருக்கிற பரிசுத்தராகிய தேவனுக்கு பலி செலுத்துங்கள், ஜெபம் ஏறெடுங்கள் என்று 7-வது வசனம் கூறுகின்றது. பிசாசிற்கு செய்த பலிகளில் இரத்தம் நீக்கப்படுவது இல்லை. அபிஷேகம் செய்யப்பட்ட ஆசாரியர்கள் பிசாசுக்கு செலுத்தும் பலிகளில் நியமிக்கப்படவில்லை. பிசாசுக்கு செலுத்தும் பலிகளில் குற்றங்கள் அறிக்கை செய்யப்படுவதும் இல்லை. பொதுவாக இரகசியமாகவே அவ்வித பலிகள் இடம் பெற்றன. பய உணர்ச்சியுடன், குற்ற உணர்வுடன் அவ்வித பலிகள் இடம் பெற்றன. ஆனால் பரிசுத்தராகிய தேவன் பலி செலுத்துவதற்கு ஏற்ற இடம், பலி செலுத்த ஆசாரியன், பலி ஆராதனை முறை அனைத்தும் கொடுத்து இருக்கின்றார். பலி பய உணர்வுடன் அல்ல. அன்பு, நம்பிக்கை என்ற உணர்வுகளுடன் ஏறெடுக்கப்பட்டது. மீட்கப்பட்ட மக்கள் விரும்பிய நேரம் ஆசரிப்பு கூடாரத்திலும், விரும்பிய நேரம் அவர்களுக்கு இஷ்டமான இடத்திலும் பலி செலுத்த முடியாது என்பதை ஏழாவது வசனம் கூறுகின்றது. இரண்டில் ஏதாவது ஒன்றை மட்டுமே அவர்கள் தெரிந்து எடுத்து கொள்ள முடியும். இதைத்தான் திஸ்பியனாகிய எலியா என்ற தீர்க்கதரிசி பின் ஒருநாள் கூறினான். ''அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்தி குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனை பின் பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.'' என்று 1 இரா. 18:21-ல் பார்க்கிறோம்.

மனித இருதயங்கள் பரிசுத்த ஆவியானவர் தங்கி நிரப்பும் இடங்களாக மாறுவதை புதிய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். அவ்வித வாழ்க்கையில் இரண்டு எஜமான்களுக்கு வேலை செய்ய முடியாது என்று இயேசு கிறிஸ்து கூறுகின்றார். ''இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனை பகைத்து, மற்றவனை சிநேகிப்பான்; அல்லது ஒருவனை பற்றி கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது'' என்று மத். 6:24-ல் பார்க்கிறோம். ''எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது; ஒருவனை பகைத்து மற்றவனை சிநேகிப்பான், அல்லது ஒருவனை பற்றி கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களாலே கூடாது என்றார்,'' என்று லூக்கா 16:13-ல் பார்க்கிறோம்.

லேவி. 17:7-வது வசனத்தில் பார்க்கும் அந்த மனிதன் தேவைப்படும் பொழுது ஆசரிப்பு கூடாரம் செல்லுகின்றான். பரிசுத்தமான தேவனை நோக்கி பார்க்கிறான். ஆசைப்படும் நேரம் பேய்களுக்கு பலியிடவும் செய்கின்றான். பரிசுத்தத்திற்கு ஒரு கையும் பாவத்திற்கு ஒரு கையும் கொடுக்கும் மனிதனாக இருக்கின்றான். உலகத்திற்கு ஒரு கையும் உன்னதத்திற்கு ஒரு கையும் கொடுக்கும் மனிதனாக இருக்கின்றான். தன் வசதிக்கு ஏற்ப பலகைகளையும், பலியிடும் இடங்களையும் கூட்டியும், குறைத்தும் வைத்து கொள்ளுகின்றான். இதற்கு காரணம் அவனது மன நிலையே ஆகும். மனதில் மாசுபடியும் பொழுது, மனிதன் ஒரு பிளவுபட்ட பிம்பமாக தெரிகின்றான். ஒரு முடிவு எடுக்க முடியாதவனாக திகைக்கின்றான். இங்கும் அங்கும் அலைகின்றான். ''இருமனமுள்ளவன் தன்

வழிகளிலெல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான்.'' என்று யாக். 1:8-ல் பார்க்கிறோம். ''தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளை சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களை பரிசுத்தமாக்குங்கள்,'' என்று யாக். 4:8-ல் பார்க்கிறோம்.

மேலும் நீ அவர்களை நோக்கி: இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியர்களிலும் எவனாகிலும் சர்வாங்க தகனபலி முதலானவைகளை இட்டு, அதை ஆசரிப்பு கூடார வாசலிலே கர்த்தருக்கு செலுத்தும்படி கொண்டு வராவிட்டால், அவன் தன் ஜனத்தில் இராமல் அறுப்புண்டு போவான் என்று சொல். (லேவி. 17:8,9)

லேவி. 17:8-வது வசனத்தில் அந்நியர்கள் தகன பலியிட அனுமதி வழங்கப்படுவதை பார்க்கின்றோம். கர்த்தரின் சமூகத்தில் பாரபட்சம் என்பதே இல்லை என்பது தெளிவாகுகின்றது. தகன பலியின் முக்கியத்துவம் என்னவென்றால் பலியாக செலுத்தப்பட்ட மிருகம் முழுவதும் எரிக்கப்பட்டதாகும். அது கர்த்தருக்கு தன்னை முற்றிலுமாக அர்ப்பணிப்பதற்கு அடையாளம் என்று லேவியராகமம் முதலாம் அதிகாரத்தில் ஏற்கெனவே நாம் பார்த்தோம். மீட்க பட்டவன் என்று கூறுகின்றவனோ, மீட்கப்படவில்லையே என்று வருந்துகிறவனோ, யாரானாலும் ஒரே ஒரு விதிமுறைக்கு அடியில் வருகின்றார்கள். அவர்கள் தங்களை முற்றிலுமாக கர்த்தருக்கு அர்ப்பணிக்க வேண்டும். அந்த அர்ப்பணிப்பு ஆசரிப்பு கூடார வாசலில், அதாவது பரிசுத்த தேவனின் பிரசன்னத்தில், பரிசுத்த தேவனின் சித்தப்படி இடம்பெற வேண்டும்.

மீட்கப்பட்ட ஜனங்கள் நடுவில் அந்த அனுபவத்திற்குள் வராதவர்கள் எவராவது வந்து தங்கினால், அந்நியர்கள் என்று அவர்கள் இருந்தாலும் மீட்கப்பட்டவர்களாக அவர்கள் மாறிவிட வேண்டும் என்பதை 8,9 ஆகிய வசனங்களில் இருந்து அறிகிறோம். மீட்கப்பட்ட ஜனங்களுக்கு உரிய சட்டமே அவர்களுக்கும் உரியது. தகன பலி என்பது பரிசுத்தராகிய தேவனுக்கு உரிய பலி ஆகும். அதை யார் செலுத்தினாலும் ஆசரிப்பு கூடாரத்தில் மட்டுமே செலுத்த முடியும். எனவே அந்த விபரம் தெரியாத அந்நியர் பாளயத்திற்குள் வரும் பொழுது மீட்கப்பட்ட ஜனங்கள் அவர்களை வழி நடத்த வேண்டிய பொறுப்புக்கு உட்படுகின்றார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.

சோதோம் கொமோரா பட்டணங்களில் தங்கி தாபரித்த லோத்துவும் அவன் குடும்பமும் அப்படிப்பட்ட ஒரு ஊழியத்தை செய்யாமல் போனார்கள். நீதிமான்கள் என்ற நிலைக்கு வருவதற்கு காரணம் மற்றவர்களும் நீதிமான்கள் என்ற நிலைக்கு வர உதவி செய்வதற்காகவே என்பதை ஆபிரகாமின் ஜெபத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். 50 நீதிமான்கள் இருந்தால் சோதோம் கொமோரா பட்டணங்களை அழிக்க வேண்டாம் என்று ஆபிரகாம் ஜெபித்தான். லோத்து என்பவனோ தன்னை நீதிமானாக காத்தாலும் அவன் பட்டணத்தில் உள்ள மற்றவர்களுக்கு அந்த புண்ணியம் கிடைக்க பிரயாசம் எடுக்கவில்லை. முடிவு சோதோம் கொமோரா பட்டணங்கள் அழிக்கப்பட்டன. வானத்தில் இருந்து வந்த கந்தகமும் அக்கினியும் அழித்து விட்டது. ''அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்க பண்ணி, அந்த பட்டணங்களையும், அந்த சமபூமி அனைத்தையும், அந்த பட்டணங்களின் எல்லா குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்து போட்டார்.'' என்று ஆதி. 19:24,25-ல் பார்க்கிறோம். அறிந்தவர்கள் அறிவிக்காவிட்டால் அறியாதவர்கள்

அறிய போவது இல்லை. அந்நியர்கள் மீட்கப்படுகின்றவர்கள் நடுவில் வரும் பொழுது அவர்களும் ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெற்று கொள்ள மீட்கப்பட்டவர்கள் பொறுப்பு எடுக்க வேண்டும் என்பதை இந்த வசனங்களில் நாம் பார்க்கின்றோம்.

''இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரை காணும். அவரை குத்தினவர்களும் அவரை காண்பார்கள். பூமியின் கோத்திரத்தார் எல்லாரும் அவரை பார்த்து புலம்புவார்கள்'' என்று வெளி. 1:7-வசனம் கூறுகின்றது. அந்த தேவ கோபாக்கினையின் நாள் வருவதற்கு முன்பு அனைவரும் நீதிமான்களாக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையே நீதிமான்கள் என்ற அனுபவத்திற்குள் வந்தவர்களுடைய வாஞ்சையாக இருக்க வேண்டும்.

இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்களுக்குள் தங்கும் அந்நியர்களிலும் எவனாகிலும் இரத்தம் என்னப்பட்டதை புசித்தால், இரத்தத்தை புசித்த அவனுக்கு விரோதமாக நான் என் முகத்தை திருப்பி, அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அவனை அறுப்புண்டு போக பண்ணுவேன். மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்கு பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்கவேண்டாம், உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்னேன். (லேவி. 17:10-12)

10-வது வசனத்தில் இரத்தம் புசிக்கப்பட கூடாது என்பதை நாம் அறிகின்றோம். திட்டவட்டமாக இந்த தீர்ப்பு கூறப்படுகின்றது. 10-14 வசனங்களில் ஆறுமுறை இரத்தம் புசிக்க வேண்டாம் என்பது திரும்ப திரும்ப கூறப்படுகின்றது. 15,16 ஆகிய வசனங்கள் தானாக இறந்த உயிர்களையும் புசியாமல் விட்டுவிட வேண்டும் என்று கூறுகின்றது. இரத்தம் சிந்துதல் ஆகாது என்பது புதிதாக கூறப்பட்ட ஒரு கட்டளை அல்ல. இதே கட்டளை நோவா என்பவர் காலத்தில் ஆதியாகம புத்தகம் 9-வது அதிகாரம் 4-வது வசனத்தில் ஏற்கெனவே கூறப்பட்டு உள்ளது. மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம் என்று அந்த வசனம் கூறுகின்றது. லேவியராகமம் 7-வது அதிகாரம் 26,27 ஆகிய வசனங்கள் உபாகம புத்தகம் 12-வது அதிகாரம் 16,23 ஆகிய வசனங்கள் 15-வது அதிகாரம் 23-வது வசனம் ஆகிய அனைத்து இடங்களிலும் இரத்தம் புசிக்க கூடாது என்பது மறுபடியும், மறுபடியும் நினைவு ஊட்டப்படுகின்றது. பின் ஒரு நாள் சவுல் என்ற அரசன் இந்த கட்டளையை மீறினான். துணிகரம் கொண்டு மீறிய அவனுக்கு தேவ தீர்ப்பு வந்தது. இரத்தத்துடன் மிருகங்களை அவனது வீரர்கள் புசிப்பதற்கு அவன் இடம் கொடுத்தான். கர்த்தர் சவுல் மீது கோபம் கொண்டார். இதனை 1 இராஜாக்களின் புத்தகம் 14-ம் அதிகாரத்தில் பார்க்கலாம்.

இரத்தம் புசிக்கலாகாது என்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது இரத்தத்தில் உயிர் இருக்கின்றது. எந்த உடலை விட்டும் இரத்தம் வடிக்கப்படும் பொழுது உடல் உயிர் இழக்கின்றது. இரத்தம் புசிக்காமல் இருப்பது உயிர்களை மதிப்பதற்கு சமமாக இருக்கின்றது. உயிர் என்பது கர்த்தரால் கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட உயிர் கர்த்தரால் மட்டுமே திரும்பவும் எடுக்கப்பட முடியும். எந்த உயிருக்கும் தன் உயிர்மேல் உரிமை இல்லை. உயிரை கொடுத்தவருக்கே உயிர் மேல் உரிமை இருக்கின்றது. உரிமை

இல்லாதவர்கள் உயிரை ஒன்றுமே செய்ய முடியாது. இரத்தமே உயிர். என் சரீரம், என் உயிர், என் இரத்தம் என்று சொல்லுவதற்கு எவருக்கும் அனுமதி இல்லை.

கர்த்தரால் புண்ணியம் பெற்ற ஓர் சரீரம் ஒரு குறிப்பிட்ட காலம் இந்த உலகத்தில் பிரயாணம் செய்வதற்கு கொடுக்கப்பட்ட ஒரு உயிர். என் சிருஷ்டி கர்த்தாவாகிய தேவனின் கிருபையினால் இயங்குகின்றேன் என்பதை மீட்கப்பட்ட மக்கள் பரிபூரணமாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த கட்டளை வருகின்றது.

கொலை செய்வது என்பது ஒரு பெரிய பாவம் என்பதை 10 கட்டளை கூறியது. காரணம் கொலைகாரன் இரத்தத்தை சிந்துகின்றான். தற்கொலை மிகப்பெரிய பாவம் ஆகும். காரணம் கர்த்தர் கிருபையாக கொடுத்த உயிரை ஒருவன் தானாகவே கொன்று விடுகின்றான். இரத்தத்தில் உயிர் இருக்கிறது என்று லேவி. 17:11-வது வசனம் கூறுகின்றது. காற்று வீசுவதை உணர்ந்து காற்று அடிக்கிறது என்பதை உணருகின்றோம். நாடி துடிப்பதை அறிந்து உயிர் இருக்கின்றது என்பதை அறிகின்றோம். காற்று எப்படி இருக்கிறது, எங்கிருந்து வருகிறது, எங்கு போகிறது என்பதை நாம் அறியோம். உயிர் எப்படி வந்தது, எந்த நிமிடம் நீங்க போகின்றது என்பதை அறியோம். காற்று ஒப்பற்று இருப்பது போல உயிரும் ஒப்பற்றதாக இருக்கின்றது. அந்த உயிர் இரத்தமே ஆகும். இரத்தத்தை மதிக்கிறவன் உயிரை மதிக்கிறான். உயிரை மதிக்கிறவன் உயிரை கொடுக்கவும் எடுக்கவும் உரிமை பெற்ற கர்த்தாதி கர்த்தரை மதிக்கிறான். அவ்விதம் மதித்து நடக்காதவர் எவரோ அவருக்கு எதிராக கர்த்தரின் முகம் திருப்பப்படும், அவன் அறுப்புண்டு போவான் என்று 10-வது வசனம் கூறுகின்றது.

இரத்தம் புசிக்கலாகாது என்பதற்கு இரண்டாவது காரணம் இரத்தம் பாவ நிவிர்த்தி செய்கின்றது. லேவியராக புத்தகத்தில் பாவ நிவிர்த்தியை பற்றி திரும்ப திரும்ப கூறப்படுகின்றது. பாவ நிவிர்த்தி என்பது கூறப்பட்ட இடம் எல்லாம் இரத்தமும் சேர்ந்து கூறப்பட்டது. அந்த இரத்தம் அனைத்து உயிர்களும் இனிது வாழ நமது சொந்த இரத்தம் சிந்திய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே காட்டியது. கர்த்தாதி கர்த்தரின் உலக இரட்சிப்பின் திட்டம் இரத்தம் சிந்தி பாவ நிவிர்த்தி செய்வதே ஆகும். இரத்தத்தில் உயிர் இருக்கின்றது. சிந்தப்பட போகும் இரத்தம் உலர்ந்த எலும்புகள் அனைத்திற்கும் புது உயிர் கொடுக்கும் இரத்தமாக மாறப்போகின்றது. ''இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது'' என்று எபிரேயர் 9:2-வது வசனம் கூறுகின்றது. சிந்தப்பட்ட இயேசுவின் சொந்த இரத்தம் மன்னிப்பு வழங்குகின்றது. ஆனால் சிந்தப்பட்ட மற்ற மனிதர்களின் இரத்தம் பழியை தேடுகின்றது. இயேசுவின் இரத்தம் அன்பினால் சிந்தப்பட்டது. மனித இரத்தங்கள் கோபம், சண்டை, கசப்பு, பகை, பழி வாங்கும் திட்டங்களால் சிந்தப்படுகிறது. எனவே சிந்தப்பட்ட மனித இரத்தங்கள் பழி, பழி என்று கத்தி கொண்டே இருக்கின்றன. ''அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தின் நிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியின் நிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களை பலிபீடத்தின் கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தை குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும் பழி வாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டு கூப்பிட்டார்கள்.'' என்று வெளி. 6:9,10-ல் பார்க்கிறோம்.

காயீன், ஆபேல் என்ற இரு சகோதரர்களுக்குள் இடம் பெற்ற பொறாமை, பகை உணர்வு அண்ணன் தம்பியை கொலை செய்து விட வெறி ஊட்டியது. ஆபேலின் இரத்தம் தரையில்

ஊற்றப்பட்டது. ஊற்றப்பட்ட இரத்தம் உடனே உயிரை கொடுத்தவரை நோக்கி கூப்பிட்டது. ''அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது.'' என்று ஆதி. 4:10-ல் பார்க்கிறோம். ஆபேலின் இரத்தம் கர்த்தரை நோக்கி கூப்பிட்டது. கூப்பிட்ட இரத்தம் கூறியது என்ன? கர்த்தாவே பழி வாங்கும், நிரபராதியாகிய என் இரத்தத்தை சிந்திய என் அண்ணன் மீது பழி வாங்கும் என்று கூப்பிட்டது. பேசியது! உலகில் அன்றும் இன்றும் மனித கோபங்களால் சிந்தப்படும் இரத்தங்கள் அனைத்தும் சிருஷ்டி கர்த்தாவாம் தேவனை நோக்கி பழி, பழி என்றே முறையிட்டு கொண்டே இருக்கிறன. ஆனால் மனிதனின் பாவ மன்னிப்புக்காக சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தமோ பிதாவே இவர்களுக்கு மன்னியும், இவர்கள் செய்யும் தவறுகளை தெரியாமல் செய்கின்றார்கள் என்று பொறுத்து கொள்ளும், பழி வாங்காதேயும், மன்னித்து விடும் பிதாவே என்று கூறிக்கொண்டே இருக்கின்றது. ஆபேலின் இரத்தம் முதல் அனைவரின் இரத்தமும் பழி, பழி என்று பேசிற்று. இயேசுவின் இரத்தம் மட்டுமே மனிதருக்கு நலமான மன்னிப்பு, மன்னிப்பு என்று பேசுகின்றது. எபிரெயர் நிரூபம் 12:24, ''புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இயேசுவினிடத்திற்கும் ஆபேலினுடைய இரத்தம் பேசினதை பார்க்கிலும் நன்மையானவைகளை பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தின் இடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்'' என்று கூறுகின்றது. பரிசுத்த யோவான் எழுதின முதலாவது நிரூபம் 7-வது வசனம் கூறுவது போல இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கின்றது. அந்த திரு இரத்தம், ஒவ்வொரு பரிசுத்த நற்கருணை வேளையிலும் விசுவாசிகளினால் நினைவு கூறப்படுகின்றது.

> ***இஸ்ரவேல் புத்திரரிலும் உங்களுக்குள் தங்குகிற அந்நியர்களிலும் எவனாகிலும் புசிக்கத்தக்க ஒரு மிருகத்தையாவது ஒரு பட்சியையாவது வேட்டையாடி பிடித்தால், அவன் அதின் இரத்தத்தை சிந்தப்பண்ணி, மண்ணினால் அதை மூடக்கடவன். சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் ஜீவனுக்கு சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்க வேண்டாம்; சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதை புசிக்கிற எவனும் அறுப்புண்டு போவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்னேன். (லேவி. 17:13-14)***

இரத்தத்தில் உயிர் இருக்கின்றது. இரத்தம் பாவ நிவிர்த்தி செய்கின்றது. எனவே இரத்தம் புசிக்கப்படுவதற்கு தடை செய்யப்பட்டது. 11-வது வசனத்தில் ஆத்துமா என்ற வார்த்தை இரண்டு முறை வருகின்றது. அதனுடன் பாவ நிவிர்த்தி என்ற வார்த்தையும் இணைந்து வருகின்றது. மிக சமீபத்தில்தான் பாவ நிவிர்த்தி ஆராதனை லேவியராகம புத்தகம் 16-வது அதிகாரத்தில் இடம் பெற்றதை நாம் கண்டோம். 'ஆத்துமா' என்று 11-வது வசனத்தில் வரும் இந்த வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேய சொல் நாபீஸ் (Napes) என்பது ஆகும். அதனுடைய பொருள் மனித ஜீவன், மனித வாழ்க்கை என்பதை முழுவதுமாக குறிக்கும் ஒன்று ஆகும். மனித ஜீவன் என்பது சரீரம், ஆவி, ஆத்துமா மூன்றும் சேர்ந்ததே ஆகும். எனவே ஆத்துமாவிற்கு பாவ நிவிர்த்தி என்று 11-வது வசனம் கூறும் பொழுது முழு மனிதனுக்கும் பாவ நிவிர்த்தி கிடைக்க பெறுகின்றது என்பதே ஆகும். லேவியராகமம் 16-வது அதிகாரத்தில் பெற்ற பாவ நிவிர்த்தி ஆராதனை 'ஆத்துமா' என்ற ஒன்றிற்கு மட்டும் உரித்தான பாவ நிவிர்த்தி ஆராதனை இல்லை. முழு மனிதனுக்கும் உரிய பாவ நிவிர்த்தி ஆராதனை ஆகும்.

புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் பரிசுத்த மத்தேயு 16:26-வது வசனத்திலும், பரிசுத்த மாற்கு 8:37-வது வசனத்திலும் மனித ஜீவன் நஷ்டமாகி, உலகம் லாபமாகி என்ன பயன் என்று இயேசு கூறினார். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தி கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன என்று வரும் அந்த வசனத்தில் ஜீவன் என்பது முழு மனிதனையும் குறிக்கும் ஒரு சொல் ஆகும். வாழ்க்கை கறைப்பட்டு வருமானம் பெலப்பட்டு பலன் என்ன என்பதே அந்த வசனத்தின் பொருள் ஆகும். லேவி. 17:11-வது வசனத்தில் 'ஆத்துமா' என்பது மனிதன் என்பவனே ஆகும். ஆதி. 2:7-வது வசனத்தில் மனித சரீரத்தில் தேவன் ஊதும் பொழுது ஜீவ ஆத்துமா என்ற நிலையை மனிதன் பெற்றான் என்று நாம் பார்க்கின்றோம். ''தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவ ஆத்துமாவானான்.''

தானாய் இறந்துபோனதையாவது, பீறுண்டதையாவது, புசித்தவன் எவனும், அவன் சுதேசியானாலும் பரதேசியானாலும், தன் வஸ்திரங்களை தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டாயிருப்பானாக; பின்பு சுத்தமாயிருப்பான். அவன் தன் வஸ்திரங்களை தோய்க்காமலும், ஸ்நானம் பண்ணாமலும் இருந்தால், தன் அக்கிரமத்தை சுமப்பான் என்று சொல் என்றார். (லேவி. 17:15-16)

சரீரம், ஆவி, ஆத்துமா அனைத்தும் சேர்ந்து மனிதன் என்ற ஒருவனை உருவாக்குகின்றது. சரீரம் ஒன்றிற்கும் உதவாது, ஆத்துமா ஒன்றே முக்கியமானது என்று பரிசுத்த வேதம் கூறுவது இல்லை. சரீரத்தை எப்படியும் பயன்படுத்தி கொள்ளலாம். ஆத்துமாவை மட்டும் தூய்மையாக வைத்து கொள்ள வேண்டும் என்று வேத புத்தகம் கூறுவது இல்லை. சரீரம் மண்ணுக்கும் ஆத்துமா கடவுளுக்கும் சொந்தமானது என்று பரிசுத்த வேதம் கூறுவதே இல்லை.

முழு மனிதனுக்கும் பரிசுத்த வேதம் முழு முக்கியத்துவம் கொடுக்கின்றது. சரீரம் பரிசுத்தராகிய தேவனுக்கு பரிசுத்தமான பலியாக அர்ப்பணிக்கப்படும் பொழுது புத்தியுள்ள ஆராதனை மனித வாழ்வில் இடம் பெறுகின்றது. சக்தி உள்ள மனிதனாக மனிதன் மாறி விடுகின்றான்.

10.3 உடலிலும், உறவுகளிலும் பரிசுத்தம்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்ல வேண்டியது என்னவென்றால்: நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 18:1-2)

லேவியராகமம் 18-வது அதிகாரத்தில் 30 வசனங்கள் உண்டு. அந்த 30 வசனங்களும் திருமணத்தின் முக்கியத்துவத்தையும், முறையையும் எடுத்து காட்டுகின்றன. 7 பிரிவாக 30 வசனங்களும் பிரிக்கப்பட்டு குடும்ப வாழ்வின் சிறப்பையும் பொறுப்பையும் கூறுகின்றது. 18:2-வது வசனம் உன் தேவனாகிய கர்த்தர் நானே என்று கூறுகின்றது.

லேவி. 18:1-5 வசனங்களில் மகத்துவம் உள்ள ஆண்டவர் தன்னையே முன் வைத்து லேவியராகமம் 18-வது அதிகாரத்தை துவக்குகின்றார். 18:2-வது வசனத்தில் நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்ற அறிவிப்பு வருகின்றது. 18 முதல் 26-வது அதிகாரம் வரை 42

தடவை நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்ற அறிவிப்பு வந்து கொண்டே இருக்கின்றது. தேவனாகிய கர்த்தர் என்ற அறிமுகம் மனித வர்க்கத்திற்கு ஆதி. 2:4-வது வசனத்தில் கிடைக்க பெற்றது. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சர்வ வல்லமையுள்ள தேவன் அந்த சாதாரண மனிதர்களை பார்த்து கூறுவது அவர்களுக்கு கிடைத்த பெரும் புண்ணியம் ஆகும்.

கர்த்தரை தங்களுக்கு தெய்வமாக கொண்ட ஜாதியும், அவர் தமக்கு சுதந்திரமாக தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியம் உள்ளது என்று சங். 33:12-வது வசனம் உரைக்கின்றது. அந்த அறிமுகம் அவர்களுக்கு எகிப்து தேசத்தில் கிடைத்த அறிமுகம் ஆகும். அடிமைகளாக அவதிப்பட்டு கொண்டு இருந்த காலத்தில் தேவனாகிய கர்த்தரின் அறிமுகம் அவர்களுக்கு கிடைத்தது. அவர்களுக்கு அன்று முன்னும் பின்னும், இடது புறமும் வலது புறமும் ஒருவர் கூட உதவிக்கு இல்லாமல் இருந்தது. செய்வது என்னது என்று தெரியாமல் அங்கலாய்த்து வானத்தை அண்ணார்ந்து பார்த்த பொழுது கர்த்தரின் அறிமுகம் அவர்களுக்கு கிடைத்தது. ''சில காலம் சென்றபின், எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டு கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டு, தாம் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார்; தேவன் இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார்;'' என்று யாத். 2:23-25-ல் பார்க்கிறோம். ''கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நான் இஸ்ரவேலை தெரிந்து கொண்ட நாளிலே யாக்கோபு வம்சத்து ஜனங்களுக்கு நான் ஆணையிட்டு, எகிப்து தேசத்தில் என்னை அவர்களுக்கு தெரியப்படுத்தி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று ஆணையிட்டேன்,'' என்று கூறுவதை எசே. 20:5-ல் பார்க்கிறோம்.

''உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே; நீங்கள் என் கட்டளைகளில் நடந்து. என் நியாயங்களை கை கொண்டு, அவைகளின் படி செய்து, என் ஓய்வு நாட்களை பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாக இருக்கும் என்றேன்'' என்று எசேக். 19,20-ல் பாக்கிறோம். ''உங்களை எனக்கு ஜனங்களாக சேர்த்து கொண்டு உங்களுக்கு தேவனாக இருப்பேன். உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள்'' என்று யாத். 6:7-வது வசனம் கூறுகின்றது. யாத்திராகம புத்தகம் பாவத்தில் இருந்து விடுதலை கொடுப்பதற்கு சமமாக இருக்கின்றது. லேவியராகம புத்தகம் பரிசுத்தமான வாழ்விற்கு அழைப்பு கொடுப்பதற்கு சமமாக இருக்கின்றது. லேவி.18:3-ம் வசனம் அவர்கள் முன்பு குடியிருந்த இடத்தில் உள்ள செய்கைகளை செய்து விடாமலும் இனிமேல் குடியிருக்க போகின்ற இடத்தில் உள்ள செய்கைகளின்படி செய்யாமலும் தேவனாகிய கர்த்தர் சொல்லுகின்ற கட்டளைகளுக்கும் கொடுக்கின்ற நியாயங்களுக்கும் இசைந்து அவர்கள் நடத்தை இருக்க வேண்டும் என்று தேவனாகிய கர்த்தர் இந்த அதிகாரத்திலே தெள்ளத்தெளிவாக கூறுகின்றார். பரிசுத்தமான வாழ்விற்கு தங்களை அர்பணித்த மக்கள், முன்பு செய்த தவறான செயல்களை திரும்பவும் செய்யாமல் இருக்க வேண்டும் என்றும், வரும் நாட்களிலும் தவறு செய்யாமல் வாழ வேண்டும் என்றும் எச்சரிக்கப்படுகின்றார்கள். முதலாவது சங்கீதம் முதலாம் வசனம் கூறுவது போல துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில்

நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருந்து தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கவும் சேவிக்கவும் அழைக்கப்படுகின்றார்கள்.

நீங்கள் குடியிருந்த எகிப்து தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், நான் உங்களை அழைத்து போகிற கானான் தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், அவர்களுடைய முறைமைகளின்படி நடவாமலும், என்னுடைய நியாயங்களின்படி செய்து, என்னுடைய கட்டளைகளை கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் (லேவி. 18:3-4)

18:3-வது வசனம் மனிதனுக்கு நீ அடிமைப்பட்டு இருந்த இடத்தையும், இருந்த நாட்களையும் மறந்து விடாதே என்று கூறுகின்றது. எகிப்து கர்த்தரை அறியாத ஒரு தேசம். மோசேயின் காலத்தில் எகிப்தியர் சுமார் 80 தேவ தேவதைகளை வணங்கினர். சில தெய்வங்கள் வன்முறையையும், தேசீய பேரின வாதத்தையும், காம விகாரத்தையும் சித்தரிப்பவை. அவை சக்திவாய்ந்த மனிதர்கள் சிலரின் குணாதிசயங்களோடு கடவுள்களாக்கப்பட்டவை என்று சில சமூக அறிஞர்கள் கூறுகின்றனர். ஆகவே கர்த்தர் எகிப்து தேசத்தாரின் செய்கையின்படி செய்யாதே என்கிறார்.

18:4-வது வசனம் பெற்ற விடுதலையை எனது சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடந்து காத்துக்கொள் என்று தூண்டுகின்றது. சுயாதீனம் என்பது கட்டுப்பாடுகளை மீறுவதற்கு அல்ல. கட்டுப்பாடு கொண்ட ஒரு வாழ்க்கையை நடத்துவதற்கே என்று விளம்புகின்றது. மோசேயின் காலத்தில் கானான் தேசத்து மக்கள் கட்டுப்பாடு எதுவும் இல்லாத வாழ்க்கை நடத்தினர். பிள்ளைகளை பலியிட்டனர். மன இஷ்டப்படி உடல் உறவுகள் கொண்டனர். இதனால் வந்த வியாதிகள் அநேகம்.

எல்லாரும் அப்படித்தானே செய்கிறார்கள் என்று நீங்களும் அப்படி செய்து விடாதீர்கள் என்று லேவி. 18:3-வது வசனத்தில் இரண்டு முறை கூறுகின்றது. அதை தொடர்ந்து 24,26,27,30 ஆகிய வசனங்களிலும் அதே போன்று கூறுகின்றது. மொத்தம் ஆறு தடவை 18-வது அதிகாரத்தில் மற்றவர் செய்கிறார் என்று நீங்களும் செய்து விடாதீர்கள் என்ற முன் எச்சரிக்கை இடம் பெறுகின்றது. பெரும்பான்மை பெருவதால் தீயது தூயதாக மாறிவிடாது என்பதை லேவியராகமமம் 18-வது அதிகாரம் திட்டவட்டமாக கூறுகின்றது. அனைவரும் சொல்லுவதை செய்ய அல்ல. ஆண்டவர் வார்த்தையின் படி செய்வதற்காகவே வாழ்க்கை கொடுக்கப்பட்டு உள்ளது. தற்காலிக மனிதரை பிரியப்படுத்துவதற்கு அல்ல. உருவாக்கிய தேவனை பிரியப்படுத்துவதற்காகவே வாழ்க்கை கொடுக்கப்பட்டு உள்ளது. எல்லாரும் முகம் குப்புற விழுந்தார்கள் என்பதால் தாங்களும் அப்படி செய்ய வேண்டும் என்று சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற அந்த தேவனுடைய மனிதர்கள் முடிவு செய்யவில்லை என்பதை தானியேலின் புஸ்தகம் 3-வது அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம். பயம் அச்சம் ஆகியவை கொண்டு அனைவரும் குப்புற விழுந்தார்கள். அவர்களோ அப்படி செய்யவில்லை. பரிசுத்த வேதாகமம் பயம், அச்சம் கொண்ட ஒரு வாழ்க்கையை அறிமுகப்படுத்தவில்லை. பரிசுத்தம், உண்மை, நீதி, நேர்மை அனைத்தும் கொண்ட ஓர் வாழ்வை மட்டுமே அறிவிக்கின்றது. அந்த அறிவிப்பை ஏற்ற வாழ்வுகள் எதற்கும் கை தூக்குவது இல்லை. அனைவருக்கும் ஆம் என்று சொல்லுவதும் இல்லை. தனித்தே நிற்க நேரிட்டாலும் தைரியமாக நிற்கும். அப். 4:19-ல் ''பேதுருவும் யோவானும் அவர்களுக்கு பிரதியுத்தரமாக: தேவனுக்கு செவி கொடுக்கிறதை பார்க்கிலும் உங்களுக்கு செவிகொடுக்கிறது தேவனுக்கு

முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்து பாருங்கள்.'' என்று ஆதி அப்போஸ்தலர்கள் பரிசுத்தராகிய தேவனை கனம் பண்ணுவதை பார்க்கின்றோம். என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் என்றார். அவர்கள் நடந்து செல்லும் பொழுது விழுந்த நிழல்கூட வல்லமை பெறும் அளவிற்கு பேதுருவும் யோவானும் கனம் பண்ணப்பட்டார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் அனுதினமும் சபையில் இணைய இடம் கொள்ளாமல் போகும் அளவிற்கு ஆத்தும ஆதாயம் செய்தார்கள்.

லேவி. 18:3-வது வசனம் கடந்த காலத்தை ஞாபகப்படுத்துகின்றது. எகிப்து என்பது கடந்த காலத்தை ஞாபகப்படுத்தி காட்டுவது ஆகும். அதே போன்று வருங்காலத்தையும் 18:3-வது வசனம் முன்கூட்டி தெரிவிக்கின்றது. கானான் என்பது வருங்காலத்தை காட்டுவது ஆகும். நேற்று சந்தித்த மனிதர் கூறியபடியும் செய்ய வேண்டாம் நாளைக்கு சந்திக்க போகும் மனிதர் கூறியபடியும் செய்ய வேண்டாம், நேற்றும் இன்றும் என்றும் மாறாமல் இருக்கும் தேவனாகிய கர்த்தர் கூறுகிறபடி மட்டும் செய்யுங்கள் என்பதே லேவி. 18:3-வது வசனம் கூறும் சத்தியம் ஆகும். இருக்கிறவராக இருக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தர் கூறுகிறபடி செய்யுங்கள் என்பதே அழைப்பு. பரிசுத்த யோ. 2:5-வது வசனம் கூறுவது போன்று ''இயேசு உங்களுக்கு என்ன சொல்லகிறாரோ, அதின்படி செய்யுங்கள்'' என்பதே அழைப்பு.

லேவி. 18:4-வது வசனத்தில் என்னுடைய நியாயங்களின்படி செய்யுங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். அதன் சரியான பொருள் நான் வரையும் கோட்டை தாண்டாதேயுங்கள் என்பது ஆகும். எனது கட்டளைகளை கைக்கொண்டு நடவுங்கள் என்று கூறுகின்றார். கர்த்தரின் கட்டளைகள் சாவிலிருந்து மனிதனை காப்பாற்றும் கட்டளைகள் ஆகும். ''தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.'' என்று ஆதி. 2;16,17-ல் பார்க்கிறோம். கட்டளை உதாசீனம் செய்யப்பட்டது. கண்ட அத்தனை ஆசீர்வாதங்களும் அவர்களை விட்டு கடந்து சென்றது. ''என் மகனே நீ என் வார்த்ததைகளை காத்து, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து.'' என்று நீதி. 7:1-ல் பார்க்கிறோம். ''பிதாவின் கட்டளைகளை கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்து இருக்கிறான்,'' என்று 1யோ.3:24-வது வசனம் கூறுகின்றது. கர்த்தரின் கட்டளைகளை கைக்கொள்ளுவதின் மூலம் சாவு தவிர்க்கப்படுகின்றது. வாழ்வு வளம் பெறுகின்றது. கர்த்தரின் நியாயங்களை கைக்கொள்ளுவதின் மூலம் வளர்ச்சி அதிகரிக்கின்றது. உயர்வு காணப்படுகின்றது. அதையே அடுத்த வசனமாக லேவி. 18:5-வது வசனம் கூறுகின்றது.

ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ள கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்; நான் கர்த்தர். (லேவி. 18:5)

ஆண்டவர் எதிர்பார்ப்பதின்படி நடந்துவிட்டால் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும் என்று கூறுகின்றது. கட்டுப்பாடுள்ள வாழ்க்கை நீடிய சுகத்தை கொடுக்கும்.

எசேக்கியல் 20:11-வது வசனத்தில் ''என் கட்டளைகளை அவர்களுக்கு கொடுத்து என் நியாயங்களை அவர்களுக்கு தெரியப்படுத்தினேன். அவைகளின் படி செய்கிற மனிதன்

அவைகளால் பிழைப்பான்'' என்று பார்க்கிறோம். மனிதனின் தீர்மானங்கள் அவனது விருப்பத்தினை நடுவாக கொண்ட தீர்மானங்களாக இருக்கின்றது. அவனது விருப்பம் பரிசுத்தம் என்பதாக இருக்கும் என்றால் அவன் பிழைத்து மகிழுவான். கர்த்தரின் கட்டளைக்கு கருத்துடன் கீழ்ப்படிகின்றவர்கள் கர்த்தரின் சிநேகிதர்களாக மாறுகின்றார்கள் என்பதை பரிசுத்த யோவான் 15:14-வது வசனம் கூறுகின்றது. ''நான் உங்களுக்கு கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராக இருர்பீர்கள்'' என்று இயேசு கூறியதை நாம் பார்க்கிறோம்.

கர்த்தர் கொடுக்கும் கட்டளை ஒன்றே ஒன்றுதான்; விபசாரம் என்ற கொடிய பாவத்திற்கு சரீரத்தை முற்றிலுமாக தவிர்த்து வாழுங்கள் என்பதே ஆகும். சரீரம் என்பது கர்த்தர் தங்கும் ஸ்தலமாக மாறட்டும் என்று 1 கொரி. 3:16,17 வசனங்களில் கூறுகின்றார். நீங்கள் தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும் அறியீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தை கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாக இருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் என்று அந்த வசனம் கூறுகின்றது.

லேவியராகம புத்தகம் 26-வது அதிகாரம் கர்த்தரின் கட்டளையின்படி செய்கிறவர்களுக்கு எண்ணி முடியாத ஆசீர்வாதங்களை கொடுக்கின்றது. செய்ய மறுக்கின்றவர்களுக்கு தாங்க முடியாத சாபங்களை குவிக்கின்றது. உபாகம புத்தகத்தில் 28-வது அதிகாரத்தை பார்போம் என்றால் கர்த்தர் கர்த்தரின் கட்டளைகளை, கர்த்தரின் நியாயங்களை கைக்கொள்ளுகிறவர்களை ஆசீர்வாதத்தினால் முடிசூட்டுவதை காணலாம். மறுக்கின்றவர்களை சாபத்தினால் எதிர்ப்பதை காணலாம். ஆசீர்வாதம் அவரது கட்டளைக்கு அடிபணிகிறவர்களுக்கு இரண்டு இடங்களில் வருகின்றது. இம்மையிலும் வருகின்றது. மறுமையிலும் வருகின்றது. இம்மையில் கர்த்தரின் ஆலோசனைகள் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் கிடைக்கின்றது. அவருடைய கோலும் அவருடைய தடியும் அவர்களை வழி நடத்துகின்றது. மகிமையில் கர்த்தரால் அவர்கள் வரவேற்க படுகின்றார்கள். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி முடிவிலே என்னை மகிமையில் ஏற்று கொள்வீர் என்று சங். 73:24-வது வசனம் கூறுகின்றது. ஒருவன் என் வார்த்தையை கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தை காண்பது இல்லை என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய இயேசு கூறினார். ''பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.'' என்று தானி. 12:2-ல் பார்க்கிறோம்.

''நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்க வேண்டும்: நாம் விசுவாசிகளான போது இரட்சிப்பு சமீபமாயிருந்ததை பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களை தரித்து கொள்ளக்கடவோம். களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போல சீராய் நடக்கக்கடவோம், துர் இச்சைகளுக்கு இடமாக உடலை பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்து கொள்ளுங்கள்'' என்று ரோமர் 13:11-14-ல் பார்க்கிறோம்.

ஒருவனும் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்கும்படி அவளை சேரலாகாது; நான் கர்த்தர். உன் தகப்பனையாவது உன் தாயையாவது நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாயானவள்; அவளை நிர்வாணமாக்கலாகாது. உன் தகப்பனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் தகப்பனுடைய நிர்வாணம். உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகது. உன் குமாரனுடைய மகளையாவது உன் குமாரத்தியினுடைய மகளையாவது நிர்வாணமாக்கலாகாது; அது உன்னுடைய நிர்வாணம். உன் தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்கு பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகது; அவள் உனக்கு சகோதரி. (லேவி. 18:6-11)

மிகவும் நெருங்கிய உறவினர்கள் ஒரே குடும்பத்தினர். அவர்களுடன் உடல் உறவு கொள்வது மிகவும் தகாத செயல் என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் புறஜாதியினர் இதனை பின்பற்றவில்லை என்பதை புராண கதைகளில் நாம் காணலாம்.

லேவியராகமம் 18:6-23 வசனங்கள் குடும்ப தாம்பத்தியம் என்பது என்ன என்று கூறுகின்றது. 24-30 வசனங்கள் இல்லற வாழ்வின் புனித தன்மைகளை காத்து கொள்ளாதவர்களை பூமி காப்பது இல்லை, கக்கிப்போட்டு விடும் என்று கூறுகின்றது. 30-வது வசனத்தின் கடைசி வரி நான் உன் தேவனாகிய கர்த்தர். எனவே அனைத்தையும் முன் கூட்டி உனக்கு கூறிவிட்டேன் காரணம் நீ நன்றாக இருக்க வேண்டும் என்பதே எனது பிரியம் என்று முடிக்கின்றது.

லேவி. 18-ம் அதிகாரம் ஏழாவது கற்பனையின் விரிவுரை போன்று காணப்படுகின்றது. விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது 7-வது கற்பனையாக யாத். 20:14-வது வசனத்தில் கொடுக்கப்பட்டது. அந்த வசனத்திற்கு ஓர் விரிவான, தெளிவான விளக்கம் லேவியராகம புத்தகம் 18-வது வசனத்தில் கூறப்படுகின்றது. ஒழிவு மறைவின்றி, அச்சம் கூச்சம் எதுவும் இன்றி கூறப்படுகின்றது. உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் கூறுகின்றது. அதனை மிஞ்சி இடம் பெறும் அனைத்தும் தீமையாகவே இருக்கும் என்பதை உறுதி செய்கின்றது. முறை தவறி இடம் பெறும் அனைத்து சேர்க்கைகளும் 'விபசாரம்' என்ற அட்டவணையின் கீழ் வருகின்றது. எனவே 'விபசாரம்' என்ற பாவத்தில் விழுந்துவிட வேண்டாம் என்பது 7-வது கற்பனை ஆகும். அந்த கட்டளை உபா. 5:18-வது வசனத்தில் திரும்பவும் கூறப்படுகின்றது. பரி. மத்தேயு, பரி. மாற்கு ஆகிய இரண்டு நூல்களிலும் கர்த்தராகிய இயேசு விபசாரம் செய்யாதிருப்பாயாக என்ற கற்பனையை விளக்கி கூறுகிறார். பூர்வத்தில் கேள்விப்பட்டதை சமீபத்தில் பிறந்தவர்களுக்கு விளக்கி கூறுகின்றார். கண் என்பது ஒரு விளக்கு என்று விளக்குகின்றார். விளக்கு அணையும் பொழுது வாழ்வு இருள் அடையும், உடல் கறைப்படும் என்று இயேசு கூறுகின்றார். ''விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்வி பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு சொல்லுகிறேன்; ஒரு ஸ்தீரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று.'' என்று மத். 5:27,28-ல் பார்க்கிறோம்.

ரோமர் 13:9-ம் வசனத்தில் 7-வது கற்பனையை மறுபடியும் கர்த்தர் ஞாபகப்படுத்துகிறார். விபசாரம் செய்யாதே என்பது ஓர் அபாய சங்கு போன்று யாத். 20:14 -வது வசனம் முதல் வேதாகமம் முழுவதுமே ஒலித்து கொண்டே இருக்கிறது. ஆதியாகம

புத்தகம் முதல் இரண்டு அதிகாரங்களிலும் முறையான குடும்ப வாழ்வு இடம் பெற்றது. முறைகளை மீற மனித உணர்வுகளை தூண்டும் பிசாசின் தந்திரத்திற்கு முதல் தம்பதிகள் இரையானதை, ஆதியாகமம் புத்தகம் மூன்றாவது அதிகாரம் கூறுகின்றது. யாத். 20-ம் அதிகாரம் வரை மனிதனின் சேர்க்கைகள் முறை தவறிய சேர்க்கையாக இருந்தது என்பதை ஆதியாகமம் 4-வது அதிகாரம் முதல் நாம் பார்த்து கொண்டே வருகின்றோம். மனிதனின் ஆயுசு நாட்கள் பூரணமாகாமல் போவதற்கு ஒரு காரணம் விபசாரம் என்பதை ஆதி. 6:3-வது வசனத்தில் இருந்து அறிகின்றோம். தங்கள் மனம் போல் வாழ்ந்த மக்கள் நடுவில், மனசாட்சியை மழுக்கி பெறும் இன்பங்கள் வேண்டாம் என்று வாழ்ந்த நோவாவின் குடும்பம் தேவ கோபத்திற்கு தப்பியது என்பதையும் நாம் அறிவோம்.

மனசாட்சியின் காலம், யாத்திராக புத்தகத்தில் முற்று பெற்று மனசாட்சியினை மேலும் கூர்மையாக்க நியாப்பிரமாணத்தின் காலம் பத்து கற்பனைகள் என்பதை நடுவாக வைத்து உதயமானதை, யாத்திராகமம் 20-வது அதிகாரத்தில் பார்த்தோம். பத்து கற்பனைகளில் 7-வது கற்பனை இல்லற வாழ்வை மீண்டும் இனிய வாழ்வாக மாற்றும் ஓர் கற்பனையாக மாறியது. ஒரு மனிதனுக்கு ஒரே ஒரு பெண் மட்டுமே மனைவியாக இருக்க முடியும் என்பதை தெளிவாக்கி விட்டது. மனைவியாக கொள்ளும் பெண் எந்த முறையில் வந்த பெண்ணாக இருக்க வேண்டும் என்பதை லேவியராகம புத்தகம் தெளிவாக்கி விட்டது.

நெருங்கின உறவுகள் யாரிடமும் உடலுறவு கொள்ளலாகாது என்று கர்த்தர் திட்டவட்டமாக தமக்காக பிரித்து எடுக்கப்பட்ட மக்களுக்கு கட்டளையாக கூறுகின்றார். அவர்கள் தகப்பன், தாய், மாற்றாந்தாய், சகோதரி, குமாரன் குமாரத்தியின் பிள்ளைகள் முதலியவர் ஆகும்.

லேவியராகமத்தின் நடு வசனமாக நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்ற வசனம் அமைகின்றது. லேவி. 11:44,45 ஆகிய வசனங்களிலும், 19-வது அதிகாரம் 2-வது வசனத்திலும் லேவி. 20:7,26 ஆகிய இடங்களிலும் 21-வது அதிகாரம் 8,15 ஆகிய வசனங்களிலும் 22:9,16,32 ஆகிய அனைத்து இடங்களிலும் நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்ற வசனம் வந்து கொண்டே இருக்கின்றது. நீங்கள் என்பது கணவன் மனைவி என்ற இருவரையும் குறிக்கும் ஓர் சொல் ஆகும். ஒரு குடும்பத்தை பார்த்து கூறுவதாக இந்த வசனங்கள் அமைகின்றது. தொடர்ந்து சபையில் உள்ள ஒவ்வொரு குடுபத்தையும் சேர்த்து மொத்தமாக கூறும் ஒரு அறிவிப்பாகவும் இந்த வசனம் இருக்கின்றது. நான் பரிசுத்தர் நீங்களும் பரிசுத்தராக இருங்கள். தனியாக, குடும்பமாக, சபையாக என்ன செய்தாலும் பரிசுத்தமானதாகவே அனைத்து செய்கைகளும் இருக்கட்டும் என்பதே இந்த வசனத்தின் எதிர்பார்ப்பு ஆகும்.

உன் தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தகப்பனுக்கு நெருங்கின இனமானவள். உன் தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாய்க்கு நெருங்கின இனமானவள். உன் தகப்பனுடைய சகோதரனை நிர்வாணமாக்கலாகாது; அவன் மனைவியை சேராயாக; அவள் உன் தகப்பனுடைய சகோதரி. உன் மருமகளை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் குமாரனுக்கு மனைவி, அவளை நிர்வாணமாக்கலாகாது. உன் சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் சகோதரனுடைய நிர்வாணம். ஒரு

ஸ்திரீயையும் அவள் மகளையும் நிர்வாணமாக்கலாகாது; அவளுடைய குமாரரின் மகளையும் அவளுடைய குமாரத்தியின் மகளையும் நிர்வாணமாக்கும்படி விவாகம் பண்ணலாகாது; இவர்கள் அவளுக்கு நெருங்கின இனமானவர்கள்; அது முறைகேடு. (லேவி. 18:12-17)

மனைவியை துரத்தி விடுவதும், துன்பப்படுத்துவதும், தள்ளி விட்டு பிறிதொரு பெண்ணை சேர்த்து கொள்ளுவதும் அனைத்தும் கொடூர செயல்கள், கொடூரமான பாவம் என்று லேவியராகம புத்தகம் கூறுகின்றது. நம்பி வந்த பெண்ணிற்கு செய்யும் துரோகம் அது என்று அனைத்து அதிகாரங்களிலும் பரிசுத்த வேதம் கூறுகின்றது. லேவியராகம புத்தகத்தின் அழைப்பு தூய்மை, உண்மை, நீதி, நேர்மை என்பதே ஆகும். அதன் துவக்கம் குடும்பம் என்பதே ஆகும். அடிமைத்தன வாழ்வில் இருந்த மக்களுக்கு ஒரே இரவில், நிலையில் பூசப்பட்ட இரத்தத்தினால் ஒரு பெரும் விடுதலை கிடைத்தது. விடுதலை பெற்று விரைந்து சென்ற மக்களை செங்கடல் இருபுறமும் ஒதுங்கி நின்று வரவேற்று அனுப்பி வைத்தது. சீனாய் மலை அடிவாரத்தில் நீண்ட நாட்கள் அவர்களை தங்க வைத்து, பெற்ற விடுதலையினை இனிமேல் எப்படி காத்துக்கொள்ள வேண்டும் என்பது கற்று கொடுக்கப்பட்டது. கற்று கொள்ளும் பாடத்தின் தலைப்பு 'பரிசுத்தம்' என்பது ஆகும். காரணம் கற்று கொடுக்கும் ஆசிரியரின் பெயர் 'பரிசுத்தர்' என்பது ஆகும். கற்கும் பாடம் கடினமான பாடமாகவே தெரிகின்றது. புதிய ஏற்பாட்டில் இயேசுவிடம் சிலர், இது கடினமான உபதேசம், யாரால் இப்படி நடக்க முடியும் என்று கூறினார்கள் என்பதை பரி. யோவான் 6-வது அதிகாரம் 60-வது வசனத்தில் பார்க்கலாம். 'பரிசுத்தம்' என்ற பாதை மனிதன் விரும்பிய அனைத்தையும் செய்யக்கூடாத ஒரு பாதையாகும். தேவன் விரும்பும் ஒன்றை மாத்திரம் செய்யும் பாதையாகும்.

பரிசுத்தம் என்பது பரிசுத்த விவாகத்தினை நடுவாக வைத்து 18:6-20 வசனங்கள் வரை ஒரு எச்சரிப்பு போல கொடுக்கப்படுகின்றது. குடும்ப உறவு என்பது நிரந்தரமானது. மரணம் பிரிக்கும் வரை பிரிக்க முடியாதது. மற்ற அனைவரையும் விட்டு பிரிந்து, இருவர் ஒன்றாக வாழ்வது என்பது குடும்பம் ஆகும். குடும்ப அமைப்பு தேவனால் கொடுக்கப்பட்ட அமைப்பு ஆகும். ஆதி. 2:24-வது வசனத்தில் இந்த குடும்ப அமைப்பு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ''இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்,'' என்று அந்த வசனம் கூறுகின்றது.

உன் மனைவி உயிரோடிருக்கையில் அவளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும் நிர்வாணமாக்கும் பொருட்டு அவளை விவாகம் பண்ணலாகாது. (லேவி. 18:18)

அன்பு, நம்பிக்கை இரண்டும் நடுவாக வைத்து முழு நம்பிக்கைக்கு உரிய அவரவர் பெற்றோர்களை விட்டு, ஒருவருக்கு ஒருவர் முழு அன்பும் நம்பிக்கையும் கொண்டு தனியாக சென்று துவங்கும் குடும்ப வாழ்வில் பரிசுத்தம் என்பதே நடுவாக இருக்க வேண்டும் என்று தெள்ளந்தெளிவாக கூறப்படுகின்றது. லேவி. 18:6-20 வசனங்கள் மிகவும் உச்சிதமான நன்மைகளை உலகத்திற்கு எடுத்து கூறுகின்றது. முறை தவறி இடம் பெறும் மணம் திருமணமாக இருக்க முடியாது என்று கூறுகின்றது. எனவே முறை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று விளக்கி கூறுகின்றது. முறையாக இடம் பெறாத மனங்கள் மணம் வீசப்

போவது இல்லை. துரோகங்கள் என்ற முடிவே அங்கு இடம் பெறும். அதற்கு காரணம் அவர்கள் அமைத்த குடும்பத்தின் அஸ்திபாரம் பரிசுத்தமான முறையில் அமைக்கப்படாத அஸ்திபாரமாக மாறி விட்டது. எனவே லேவியராகம புத்தகம் 18-வது அதிகாரம் ஓர் எச்சரிப்பாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் கர்த்தரால் கொடுக்கப்படுகின்றது. மல்கியா 2:15-வது வசனத்தில் குடும்பமும், குடும்பம் பெற்று எடுக்கும் பிள்ளைகளும் எப்படி இருக்க வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. ''அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனை படைத்தார்? தேவ பக்தியுள்ள சந்ததியை பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்கு துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியை குறித்து எச்சரிக்கையாயிருங்கள்'' என்று பார்க்கிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆதி. 2:24-வது வசனத்தை நடுவாக வைத்து கொடுத்த சிறப்பு உரையை பாருங்கள். பரிசுத்த மாற்கு 10:2-வது வசனம் முதல் அந்த சிறப்பு உரை இடம் பெறுகின்றது. ''அப்பொழுது பரிசேயர் அவரை சோதிக்க வேண்டும் என்று அவரிடத்தில் வந்து புருஷனானவன் தன் மனைவியை தள்ளி விடுவது நியாயமா என்று கேட்டார்கள். அவர் பிரதியுத்திரமாக மோசே உங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறது என்ன என்று கேட்டார். அதற்கு அவர்கள் தள்ளுதல் சீட்டை எழுதி கொடுத்து அவளை தள்ளி விடலாம் என்று மோசே உத்தரவு கொடுத்து இருக்கிறார் என்றார்கள். இயேசு அவர்களுக்கு பிரதியுத்திரமாக உங்கள் இருதய கடினத்தினிமித்தம் இந்த கட்டளையை உங்களுக்கு எழுதி கொடுத்தான். ஆகிலும் ஆதியிலே மனுஷரை சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்து இருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாமிசமாக இருப்பார்கள். இவ்விதமாய் அவர்கள் இருவராய் இராமல் ஒரே மாமிசமாய் இருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்ககடவன் என்றார்.'' ஆதி. 2:24-வது வசனம் முதல் உலகில் தோன்றும் ஒவ்வொரு குடும்ப வாழ்வும் தேவனால் இணைக்கப்பட்ட வாழ்வாகவே காணப்படுகிறது. தேவனால் இணைக்கப்படும் உறவு முறை என்ன என்பது லேவி. 16:6-20 வசனங்களில் வருகின்றது. அது ஓர் கட்டளையாக மாற்ற முடியாத பிரமாணமாக கொடுக்கப்படுகின்றது. ஆதியாகம புத்தகத்தில் யாக்கோபு என்ற நபர் ஒரே மனைவிக்கு சொந்தக்காரனாக இல்லாமல் போனதினாலும் அவன் திருமணம் செய்த பெண்கள் அநேகராய் இருந்ததினாலும், அவர்கள் வயது அவனது வயதை விட மிகவும் குறைந்த வயதாக இருந்ததினாலும் அவனது பிள்ளைகளில் ஒருவன் அவனது மறுமனையாட்டிகளில் ஒருவளுடன் தவறாக நடந்தான் என்பதை ஆதியாகம புத்தகம் 35-வது அதிகாரம் கூறுகின்றது. அந்த துன்பமான நிகழ்ச்சி தகப்பனை தனது அத்திமகாலம் வரைக்கும் துயருக்குள் ஆக்கியது. அவ்விதமான நிகழ்ச்சிகள் இடம் பெறுவதற்கு ஓர் முடிவு கட்டவே லேவியராகம புத்தகம் 18-வது அதிகாரம் முன் வந்தது.

யாக்கோபின் சகோதரனாகிய ஏசா முறை தவறி சம்பந்தம் கலந்தான். அவர்கள் ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் மன நோவாக இருந்தார்கள் என்று ஆதி. 26:35-வது வசனம் கூறுகின்றது. அவ்விதமான முறை தவறான சம்பந்தங்களுக்கு ஒரு முடிவு கட்டவே லேவியராகம புத்தகம் 18-வது அதிகாரம் கூறப்படுகின்றது. ஆதியாகம புத்தகத்தில் யூதா என்ற ஒருவன் தனது மருமகளுடன் தவறாக நடந்தான் என்பதை ஆதியாகமம் 38-வது அதிகாரம் கூறுகின்றது. லேவியராகம புத்தகம் 18-வது அதிகாரம் அவைகள் அனைத்தையும் ஒரு திட்டவட்டமான ஒழுங்கு முறைக்குள் கொண்டு வருகின்றது. பாவம் பிரவேசிப்பதற்கு முன்னர் ஆதி.2:24-ல் தேவன் அமைத்த குடும்ப வாழ்வை ஏகமாக

திரும்பவும் சரி செய்ய முடியாமல் போனாலும், மீட்கப்பட்ட மக்களின் குடும்ப உறவுகள் உண்மை, தூய்மை, நீதி நிறைந்த உறவுகளாக இருக்க வேண்டும் என்பதே லேவியராகம புத்தகத்தின் எதிர்ப்பார்ப்பு. இதற்கு லேவியராகம புத்தகம் தேவ சட்டங்களை தனது 18-வது அதிகாரத்தில் பகிர்ந்து கொடுக்கின்றது. அந்த சட்டங்களுக்கு, அந்த நியாயங்களுக்கு மனம் இசைக்கின்றவர்கள் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை பெற்று கொள்ளுகின்றார்கள்.

தேவன் அவரை நேசிக்கிறவர்களுக்கும், அவருக்கு உண்மையாக இருக்கிறவர்களுக்கும் சிறந்த குடும்ப வாழ்க்கையை அருளுகின்றார். எகிப்து தேசத்தின் மருத்துவச்சிகள் ஆண்டவருக்கு உண்மை உள்ளவர்களாக இருந்த பொழுது தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார் என்று யாத். 1:20-வது வசனம் கூறுகின்றது. ''மருத்துவச்சிகள் தேவனுக்கு பயந்ததினால் அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்'' என்று 21-வது வசனத்தில் பார்க்கலாம். கர்த்தராகிய இயேசு, மனைவி என்பவள் கணவனால் தள்ளப்பட கூடியவள் அல்ல என்பதை தெளிவாக கூறிவிட்டார். பரிசுத்த மத்தேயு 19:9-வது வசனத்தில் அதனை காணலாம். ''மனைவியானவள் தன் புருஷன் உயிரோடு இருக்கும் காலம் அளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டு இருக்கிறாள்,'' என்று பரி.பவுல் 1 கொரி. 7:39-வது வசனத்தில் கூறுகின்றார். விவாகம் என்பது பொறுப்பு நிறைந்த இருவர் பொறுப்புக்குள் பிரவேசிப்பது ஆகும். அருவருப்பான முறையில் விவாகம் அமைய முடியாது என்பதை லேவி. 18:6-20 வசனங்கள் தெளிவாக விளக்குகின்றன. தாய், தகப்பன், தகப்பனுடன் பிறந்த சகோதரர்கள், சகோதரிகள் குடும்பத்தில் உள்ள சகோதரர்கள் சகோதரிகள், மருமகன்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஒவ்வொருவரையும் இந்த அதிகாரம் குறிப்பிட்டு பேசி, அவருக்கு உரிய உறவு முறைகள் என்ன என்பதை தெளிவு படுத்துகின்றது.

1கொரி. 5:1-வது வசனத்தில் இருந்து புதிய ஏற்பாட்டு காலத்தில் கூட முறைகேடான விவாக இணைப்புகள் இடம் பெற்று இருந்ததை நாம் பார்க்கலாம். முறைகேடான குடும்ப உறவுகள் விவாகம் என்று அழைக்கப்படாமல் விபசாரம் என்றே வேதத்தில் அழைக்கப்பட்டுள்ளது. பரிசுத்த வேதம் விவாகம் என்பதை பரிசுத்தமானதாக கருதுகின்றது. பரிசுத்தமான சந்ததி பெற குடும்பங்கள் பரிசுத்தராகிய தேவனால் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது. பரிசுத்ததிற்கு புறம்பான மற்ற அனைத்து செயல்களும் அசுத்தமானது என்ற முறையில் கருதப்படுகின்றது. சிம்சோனின் உறவு முறைகள் ஒழுங்கீனமாக இருந்ததினால் அவனது வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது. தாவீதின் உறவு முறை தவறாக அமைந்ததினால் அவனது வாழ்வு பாதிக்கப்பட்டது.

ஆயினும் உணர்ச்சி வசப்பட்டு இழைத்த பிழைகளை பரிசுத்தராகிய தேவனிடம் அறிக்கையிட்டு மன்னிப்பு பெற்று வாழ்வை சரிசெய்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதை சிம்சோன், தாவீது மற்றும் அநேகர் மூலம் நாம் அறிந்து கொள்ளுகின்றோம். ''வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்து போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான். அதற்கு தகப்பன்: மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்று சொன்னான் என்றார்,'' என்று பரி. லூக். 15:30-32-ல் பார்க்கிறோம்.

ஸ்திரீயானவள் சூதகத்தால் விலக்கத்திலிருக்கையில் அவளை நிர்வாணமாக்க அவளோடே சேராதே. பிறனுடைய மனைவியோடே சேரும்படி சயனித்து, அவளால் உன்னை தீட்டுப்படுத்தி கொள்ள வேண்டாம். (லேவி. 18:19-20)

பரிசுத்தம் என்ற பாதை விசாலமான பாதை அல்ல. எங்கள் விருப்பமானபடி வாழுவோம் என்பவர்களின் பாதையும் அல்ல. இடுக்கமான பாதை என்று இயேசு மிக தெளிவாக கூறியதை பரிசுத்த மத்தேயு 7:13,14 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கின்றோம். ''இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்கு போகிறவாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது, அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாய் இருக்கிறது. அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்,'' என்று மத். 7:13,14-ல் பார்க்கிறோம்.

லேவியராகம புத்தகம் பரிசுத்தமான வாழ்விற்கு வழி நடத்தும் புத்தகமாக இருப்பதை அதன் அனைத்து பக்கங்களில் இருந்தும் நாம் அறிந்து கொள்ளுகின்றோம். லேவியராகமம் 18-வது அதிகாரத்தில் குடும்ப உறவு முறைகள் 6-20 வசனங்கள் வரை கூறப்பட்ட உடனே அதனை தொடர்ந்து குடும்பத்தில் தோன்றும் பிள்ளைகளின் வளர்ப்பில் பெற்றோர் எப்படி இருக்க வேண்டும் என்பதை பற்றியும் கூறப்படுகின்றது. குறிப்பாக லேவி. 18:21-வது வசனம் இதனை திட்டவட்டமாக கூறுகின்றது.

10.4 உன் சந்ததியை பரிசுத்தமாக காத்து கொள்

நீ உன் சந்ததியில் யாரையாகிலும் மோளேகுக்கென்று தீக்கடக்கும்படி இடங்கொடாதே; உன் தேவனுடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்காதே; நான் கர்த்தர். (லேவி. 18:21)

மோளேகுக்கு என்று இந்த வசனத்தில் வரும் வார்த்தையின் பொருள். ''ஆட்சி ஆளன்'' என்பது ஆகும். அந்த நாட்களில் வாழ்ந்த மக்கள் வெண்கலத்தினால் இதனை செய்தார்கள். இதன் இரு கைகளும் நீட்டப்பட்டதாக இருக்கும். குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளின் எதிர்காலம் ஏற்றமிக்க எதிர்காலமாக இருக்க வேண்டும் என்று மோளேக்கின் நீட்டப்பட்ட கைகளில் ஏதாவது ஒரு பிள்ளையை பலியாக வைத்து தீ வைத்து விடுவார்கள். அந்த ஒரு பிள்ளையை பலியாக கொடுத்து விட்டால் மோளேக்கு வீட்டின் மற்ற பிள்ளைகள் அனைத்தையும் நல்ல எதிர்காலம் கொடுத்து காத்து கொள்ளும் என்று அவர்கள் நம்பினார்கள். மோளேக்கின் கைகளில் வைக்கப்பட்ட பிள்ளை நெருப்பில் துடித்து அழும் பொழுது கொண்டு வந்த கொட்டுகளை உச்ச தொனியில் தொனிக்க செய்வார்கள். இந்த சம்பவம் இன்னோம் புத்திரனின் பள்ளத்தாக்கில் உள்ள தோபேத் என்ற இடத்தில் இடம் பெற்றது என்பதை 2 இரா. 23:10-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். இப்படி செய்யலாம் என்று கர்த்தர் கூறியதே இல்லை. ஆயினும் இஸ்ரவேல் ஜனங்கள் கூட அப்படி செய்தார்கள் என்று எரேமியா 7:31-வது வசனம் கூறுகின்றது. ''தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக அவர்கள் இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடைகளை கட்டினார்கள். அதை நான் கட்டளையிடவுமில்லை, அது என் மனதில் தோன்றவும் இல்லை.'' அதனை தொடர்ந்து எரே.32:35-வது வசனத்தையும் பாருங்கள். ''அவர்கள் மோளேகுக்கு என்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்க பண்ணும்படி இன்னோம் உடைய

குமாரனின் பள்ளத்தாக்குகளில் இருக்கிற பாகாலின் மேடைகளை கட்டினார்கள். யூதாவை பாவம் செய்ய பண்ணுவதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தை செய்ய வேண்டும் என்று நான் அவர்களுக்கு கற்பித்ததும் இல்லை. அது என் மனதிலே தோன்றினதும் இல்லை.'' லேவி. 18:5-வது வசனத்தில் கர்த்தர் கட்டளையிட்டவைகளை மட்டும் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் அவர்களது வனாந்தர பிரயாணம் முடிந்து கானான் தேசம் சென்ற பின்னர் கர்த்தரின் கட்டளைகள் அவர்களுடைய கருத்தில் இடம் பெறவில்லை. நிலைத்து நிற்கவில்லை. வேண்டிய அனைத்தும் பெற்ற பின்னர் விரும்பிய அனைத்தும் செய்வதற்கு அவர்களுடைய மனம் விரைந்தது. கடினமான சூழ்நிலைகளை கடந்து சென்ற பொழுது கர்த்தர் துணை என்றார்கள். கானானின் நலன்கள் கண்டபின்னர் கற்பனைகளை மறந்தார்கள். கர்த்தர் கட்டளையிடாதவைகளை செய்தார்கள். அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் பிசாசுகளுக்கு பலியிட்டார்கள் என்று சங். 106:7-வது வசனம் கூறுகின்றது. தாங்கள் எனக்காக பெற்ற பிள்ளைகளை அவர்களுக்கு இறையாக கொடுத்தார்கள் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசியும் கூறுகின்றார். லேவியராகம புத்தகம் பரிசுத்தம் என்பதை பறைசாற்றும் புத்தகம் ஆகும். பரிசுத்தமான பாதையில் செல்லுகின்றவர்களின் குடும்பங்களையும் பிள்ளைகளையும் சிறந்த எதிர்காலம் செட்டை அடித்து தேடி வரும். ஆனால் பரிசுத்தம், உண்மை, நீதி என்பது மறையும் பொழுது ஜனங்கள் மோளேகுக்கு என்ற ஆட்சியாளன் கைகளுக்கு அடியில் மறைந்து கொள்ள முயற்சித்தார்கள். செய்த தவறுதல்களுக்கு தேவனிடத்தில் ஒப்புரவு ஆவதற்கு பதில் மோளேகுக்கு பிள்ளைகளை பலியிட்டார்கள். லேவி. 18:21-வது வசனம் கூறுகின்றபடி தேவனுடைய நாமம் அதன் மூலம் பரிசுத்த குலைச்சல் அடைந்தது.

இஸ்ரவேல் ஜனங்களுடைய பாவங்களை சுட்டிக்காட்டி ஸ்தேவான் பேசிய அஞ்சா உரையில் மோளேக்கை பற்றியும் குறிப்பிடுகின்றார். இதனை அப். 7:43-வது வசனத்தில் பார்க்கலாம். பரிசுத்தமான, நேர்மையான பாதை தவறி விடுவதால் அவர்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை லேவி. 20:3-5 வசனங்கள் கூறுகின்றன. ''அவன் என் பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப்படுத்தி, என் பரிசுத்த நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கும்படி தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேக்குக்கு கொடுத்ததினாலே நான் அப்படி பட்டவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்று அவனை தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவேன். அவன் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேக்குக்கு கொடுக்கும் போது தேசத்தின் ஜனங்கள் அவனை கொலை செய்யாதபடிக்கு கண் சாடையாக இருந்தால் நான் அந்த மனிதனுக்கும் அவன் குடும்பத்திற்கும் விரோதமாக எதிர்த்து நின்று அவனையும் அவன் பிறகே மோளேக்கை விபசார மார்க்கமாய் பின் பற்றின யாவரையும் தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவேன்.'' 2 இராஜாக்களின் புத்தகத்தில் மனாசே என்ற ஒரு அரசன் கி.மு. 696-வது வருடம் முதல் 641-வது வருடம் வரை ஆட்சி செய்து வந்தான் என்று பார்க்கிறோம். தேவ பக்தியுள்ள எசேக்கியா என்ற அரசனுக்கு பிறந்த மனாசே என்ற அரசனிடம் சற்றும் தேவ பக்தி காணப்படவில்லை. தூய்மை என்பது எதுவும் இல்லை. இன்னோம் பள்ளத்தாக்கிற்கு தன் பிள்ளைகளை கூட்டிக்கொண்டு சென்றான். தீயில் இட்டான். கர்த்தரின் கோபம் அவனை பற்றியது. அசீரியா நாட்டு அரசன் அவனுக்கு எதிரே போரிட வந்தான். மமதை என்பதை கொண்ட மனாசே என்ற அந்த அரசனை அசீரியா நாட்டு அரசன் தோற்கடித்தான். அவனை ஓர் கைதியாக எடுத்து தன் நாட்டிற்கு எடுத்து சென்றான். 2 நாளா. 33:11-வது வசனத்தில் ''ஆகையால் கர்த்தர் அசீரியா ராஜாவின் சேனைகளை அவர்கள்மேல் வரப்பண்ணினார்.

அவர்கள் மனாசேயை முட்செடிகளில் பிடித்து இரண்டு வெண்கல சங்கிலியினால் அவனை கட்டி பாபிலோனுக்கு கொண்டு போனார்கள். மோளேக்கின் கைகளுக்கு தனது பிள்ளைகளை கையளித்த அவனுக்கு இப்பொழுது மோளேகு கைக்கொடுக்க வரவேல்லை. அசீரியா நாட்டின் போர்வீரர்கள் மனாசே என்ற அவனை சித்திரவதை செய்தார்கள். அவன் அழுதான். பரிசுத்தராகிய தேவனை நோக்கி பார்த்தான். கர்த்தர் சிறை கூடத்திலிருந்து கதரும் அவனுடைய ஜெபத்தை கேட்டார். கர்த்தருக்கு அவன் துரோகம் செய்து இருந்தாலும் கர்த்தர் அவனுக்கு இரங்கினார்.

கர்த்தர் பாவிகளை நேசிக்கின்றார். கர்த்தர் பாவங்களை மட்டுமே வெறுக்கின்றார். துரோகம் செய்தாலும் நோக்கி பார்க்கும் பொழுது கர்த்தர் இரங்கவே செய்கின்றார் என்பதற்கு இது ஓர் நல்ல மாதிரியாக இருக்கிறது. 2 நாளா. 33:12,13 ஆகிய வசனங்கள். ''இப்படி மனாசே நெருக்கப்படுகையில் தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி கெஞ்சி தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக மிகவும் தன்னை தாழ்த்தினான். அவரை நோக்கி அவன் விண்ணப்பம் பண்ணி கொண்டு இருக்கிற போது, அவர் அவன் கெஞ்சுதலுக்கு இரங்கி அவன் ஜெபத்தை கேட்டு அவனை திரும்ப எருசலேமில் உள்ள தன்னுடைய இராஜியத்திற்கு வர பண்ணினார். கர்த்தரே தேவன் என்று அப்பொழுது மனாசே அறிந்தான். பரிசுத்தமாக நடப்பதற்கு மனம் தயங்கும் பொழுது இஷ்ட ஆராதனைகள் துவங்கப்படுகின்றன. கர்த்தரின் கையில் இருந்து பிள்ளைகளுக்கு ஏற்ற ஆசீர்வாதங்களையும் ஏற்ற வருங்காலங்களையும் வாங்காமல் மோளேக்கின் கைகளில் பிள்ளைகளுக்கு நன்மை பெற்று கொள்ள விரும்பினார்கள். அதற்கு காணிக்கையாக தங்கள் பிள்ளைகளில் ஒன்றை அதன் இரு கைகளில் கிடத்தினார்கள். தீ கொழுத்தினார்கள். பிள்ளைகளின் நீண்ட ஆயுசு கர்த்தர் அருளும் கிருபை என்பதை மறந்து விட்டார்கள். கர்த்தரின் கட்டளைகளுக்கும், கர்த்தரின் நியாயங்களுக்கும் கீழ்படிந்தால் பிள்ளைகளுக்கு எதிர்காலமும் தீர்க்காயுசும் தானாக கிடைக்கும் என்பதை அவர்கள் அறியத்தான் செய்வார்கள். ஆயினும் அவர்களுடைய இருதயம் வழுவி போகும் இருதயமாக இருப்பதை வரும் புத்தகங்களிலே நாம் பார்க்க இருக்கின்றோம்.

பிள்ளைகளின் வருங்காலம் மேன்மையாக அமைய பிள்ளைகள் கர்த்தர் எதிர்பார்க்கும் கட்டளையை நிறைவேற்ற வேண்டும். கர்த்தர் கொடுத்த கட்டளை ஒன்றே ஒன்றுதான். அதுவும் பிள்ளைகளுக்கு என்றுதான். உன் தாயையும் உன் தகப்பனையும் கனம் பண்ணுவாயாக என்பதே அந்த கட்டளை ஆகும். யாத். 20:12-வது வசனம். ''உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கிற தேசத்தில் உன் நாட்கள் நீடித்து இருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக'' என்று கூறுகின்றது. பிள்ளைகள் பெற்றோரை கனம் பண்ணுவதின் மூலமும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வேத வசனத்தை கற்று கொடுப்பதின் மூலமும் பிள்ளைகளின் வாழ்க்கை நலம் பெறுகின்றது. வளம் பெறுகின்றது. அப்படி செய்ய மனம் இல்லாமல் பிள்ளைகளின் நல் வாழ்விற்காக மோளேக்கை தேடி செல்ல வேண்டாம் என்பதே லேவி. 18:21-வது வசனம் கூறுவது ஆகும். உபா. 11:19,20 ஆகிய வசனங்கள். ''நீங்கள் என் வார்த்தையை உங்கள் இருதயத்திலும், உங்கள் ஆத்துமாவிலும் பதித்து அவைகளை உங்கள் கையின் மேல் அடையாளமாக கட்டி உங்கள் கைகளின் நடுவில் ஞாபக குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்து இருக்கிற போதும் வழியிலே நடக்கிற போதும் படுத்து கொள்ளுகிற போதும் எழுந்திருக்கிற போதும் அவைகளை குறித்து பேசுவீர்களாக. பிள்ளைகள் பெற்றோரை கனம் பண்ணும் பொழுதும்

பெற்றோர் பிள்ளைகளிடம் கர்த்தருடைய வசனத்தை நடுவாக வைத்து பேசும் பொழுதும் பிள்ளைகளின் வாழ்வு நீண்ட வாழ்வாக மாறுகின்றது.

பெற்றோர்களின் மனம் களிகூறுகின்றது. அப்படி செய்யும் பொழுது முதலாவது கர்த்தருடைய நாமம் மகிமை அடைகின்றது. இரண்டாவது விசுவாச குடும்பங்கள் வளர்ச்சி பெருகின்றன. மூன்றாவது பிள்ளைகளின் எதிர்காலங்கள் பாதுகாப்பாக மாறுகின்றது. லேவியராகம புத்தகத்தில் இருந்து பரிசுத்தம் என்பது எல்லா குடும்பங்களுக்கும் அவசியம் என்று பறை சாற்றப்படுகின்றது. மோளேக்கின் கைகளில் பிள்ளைகளை கிடத்துவதை விட கர்த்தரின் கைக்கு குடும்பமும் பிள்ளைகளும் அடங்கி வாழ்வதே உத்தமம் என்று லேவியராகம புத்தகம் கட்டளையிடுகின்றது.

10.5 கர்த்தரால் தடை செய்யப்பட்ட உடல் உறவுகள்

பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறது போல ஆணோடே சம்யோகம் பண்ணவேண்டாம்; அது அருவருப்பானது. (லேவி. 18:22)

லேவியராகம புத்தகம் சுத்தம், பரிசுத்தம், ஆராதனை ஆகிய அனைத்தையும் பற்றிய குறிப்புகளை குறிப்பிட்டு கூறுவதை நாம் பார்த்து வருகின்றோம். பரிசுத்த சபையார், ஆசாரியர், ஆராதனை, குடும்ப உறவுகள், சமூக நெறிகள், அனைத்தும் எழுதப்பட்ட ஒரு கையேடாக லேவியராகம புத்தகம் நமக்கு தெரிகின்றது. குறிப்பாக 17 முதல் 26 அதிகாரங்கள் பாவம் எது பரிசுத்தம் எது என்று தெளிவாக ஒரு கோட்டை நமக்கு முன்பாக வரைகின்றது. 18-வது அதிகாரம் மனித உறவுகள் அமைய வேண்டிய ஆழமான முறையை எடுத்து கூறுகின்றது. ஆதியாகம புத்தகம் சிருஷ்டிப்பின் மகிமையை நமக்கு தெரிவித்தது. குறிப்பாகவும் சிறப்பாகவும் குடும்பம் என்பதை ஆண் பெண் என்ற இரு பாலாரையும் நடுவாக வைத்து தேவன் துவக்கினார் என்பதை ஆதியாகம புத்தகம் முதலாம் அதிகாரம் 27-வது வசனத்தில் நாம் பார்த்தோம். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாக சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார் என்று அந்த வசனம் கூறுகின்றது. ஆணும் பெண்ணுமாக குடும்பம் அமைக்கப்பட்டதே தவிர ஆணும் ஆணுமாக குடும்பம் அமைக்கப்படவில்லை என்பதை லேவி.18:22-வது வசனம் கூறுகின்றது. தேவனால் ஏற்பட்ட முறைகள் மாற்றப்பட முடியாத முறைகள் ஆகும்.

தேவ கட்டளைகள் மீறப்படவே முடியாது. இதனை லேவியராகம புத்தகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் பார்த்து வருகின்றோம். ஆதாம், ஏவாள் என்ற இரண்டு பேரை நடுவாக வைத்து குடும்ப உறவு துவங்கப்பட்டது. இரண்டு ஆதாமை கொண்டோ, இரண்டு ஏவாளை கொண்டோ குடும்ப உறவுகள் துவங்கப்படவில்லை என்பது திட்டவட்டமாக, ஒளிவு மறைவின்றி லேவியராகம புத்தகத்தில் அறிவிக்கப்படுகின்றது. பாவங்களில் இருந்து மீட்கப்பட ஒளிவு மறைவுகள் தேவை இல்லை என்பதை வேத புத்தகம் கூறுகின்றது. சீரான பாதைக்கு எட்டு எடுத்து வைக்க வீணான தயக்கங்கள் அவசியமே இல்லை. ஆண் ஆணோடே உறவு கொள்ள முடியாது என்பதே பரிசுத்த வேத புத்தகத்தின் திட்டவட்டமான அறிவிப்பு.

இந்த கொடூர பாவம் துவங்கிய இடம் சோதோம் கொமாரா என்ற பட்டணங்கள் ஆகும். ''அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின்

வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களை கண்டு, லோத்து எழுந்து எதிர் கொண்டு தரைமட்டும் குனிந்து; ஆண்டவன்மார்களே, அடியேனுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களை கழுவி, இராத்தங்கி, காலையில் எழுந்து பிரயாணப்பட்டு போகலாம் என்றான். அதற்கு அவர்கள்; அப்படியல்ல, வீதியிலே இராத்தங்குவோம் என்றார்கள். அவன் அவர்களை மிகவும் வருந்தி கேட்டு கொண்டான்; அப்பொழுது அவனிடத்திற்கு திரும்பி, அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்பில்லாத அப்பங்களை சுட்டு, அவர்களுக்கு விருந்து பண்ணினான். அவர்கள் புசித்தார்கள். அவர்கள் படுக்கும் முன்னே, சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர் முதல் கிழவர் மட்டுமுள்ள ஜனங்கள் அனைவரும் நானாதிசைகளிலுமிருந்து வந்து, வீட்டை சூழ்ந்து கொண்டு, லோத்தை கூப்பிட்டு இந்த இராத்திரி உன்னிடத்தில் வந்த மனுஷர் எங்கே? நாங்கள் அவர்களை அறியும் படிக்கு அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டுவா என்றார்கள். அப்பொழுது லோத்து வாசலுக்கு வெளியே வந்து, தனக்கு பின்னால் கதவை பூட்டி, அவர்களிடத்தில் போய், சகோதரரே, இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம். இதோ, புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்கு உண்டு; அவர்களை உங்களிடத்திற்கு வெளியே கொண்டு வருகின்றேன். அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; இந்த புருஷர் என் கூரையின் நிழலிலே வந்தபடியால், இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்ய வேண்டாம் என்றான். அதற்கு அவர்கள்: அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்கு செய்வதை பார்க்கிலும உனக்கு அதிக பொல்லாப்பு செய்வோம் என்று சொல்லி, லோத்து என்பவனை மிகவும் நெருக்கி கதவை உடைக்க கிட்டினார்கள். அப்பொழுது அந்த புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி லோத்தை தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்து கொண்டு, கதவைப்பூட்டி, தெருவாசலிலிருந்த சிறியோரும் பெரியோருமாகிய மனிதருக்கு குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள்; அப்பொழுது அவர்கள் வாசலை தேடித்தேடி அலுத்து போனார்கள்,'' என்று ஆதி. 19:1-11-ல் பார்க்கிறோம். ''கிழக்கு வெளுக்கும் போது அந்த தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்து கொண்டு போ என்று சொல்லி, அவனை துரிதப்படுத்தினார்கள்.'' என்று ஆதி. 19:15-ல் பார்க்கிறோம். ''அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும், கொமாராவின் மேலும் கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும், அக்கினியையும் வருஷிக்க பண்ணி அந்த பட்டணங்களையும் அந்த சம பூமி அனைத்தையும் அந்த பட்டணங்களின் எல்லா குடிகளையும் பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்.'' என்று ஆதி. 19:24,25-ல் பார்க்கிறோம். தொடர்ந்து புதிய ஏற்பாட்டில் ''அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளை சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களை போல விபசாரம் பண்ணி, அந்நிய மாம்சத்தை தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்க பட்டிருக்கிறார்கள்,'' என்று அப்போஸ்தலனாகிய யூதா எழுதின பொதுவான நிருபம் 7-ல் பார்க்கிறோம்.

ஆண் ஆணோடே தவறாக நடக்கும் பாவம் சோதோம் கொமோரா பட்டணத்தில் தொடர்ந்து இடம் பெற்றது. எனவே அவ்வித பாவத்தை சோதோமின் பாவம் என்றும் அப்படி செய்பவர்களை சோதோமியன் (Sodomite) என்றும் இன்றும் அழைக்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்திற்கு இந்த பாவம் முற்றிலும் முரண் பட்டது. சமூக உணர்விற்கு முற்றிலும் எதிரானது. குடும்ப உறவிற்கு முற்றிலும் அப்பாற்பட்டது. ஒரு வாலிபனின் பெலனை வற்றி

போக செய்ய கூடியது. அவனது வருங்காலத்தை ஓர் சுடுகாடாக மாற்றி போட கூடியது. இப்பாவத்தில் ஈடுபடும் எந்த ஆணும் தனது ஆயுசுநாட்களைதானே குறைத்து கொள்ளுகின்றான். அவன் மீதே அவனுக்கு நம்பிக்கை வரப்போவது இல்லை.ஓர் குடும்ப வாழ்க்கை அமைக்கும் தைரியம் பிறப்பதும் இல்லை. அவனது படிப்பு, தொழில், உத்தியோகம் எதிலும் அவனது கவனம் பதிவதும் இல்லை. அவனுக்கு என்று அவன் அமைத்த ஓர் அந்தரங்க உலகில் அவனை அடைத்து கொண்டான். வெளி உலகில் ஒரு புனிதன் போல் தெரியும் பாவியாக அவன் மாறினான். மற்றவர் முன் நல்லவன் போல் தெரியும் தீயவனாக மாறினான். உபா. 23:17-வது வசனத்தில் வேசிகளின் பாவமும் ஆண் ஆணுடனும் செய்யும் பாவமும் சமமாக கருதப்படுகிறது. தேவ ஆலயத்திற்கு வேசிகளிடம் இருந்தும், தவறான உறவு கொள்ளும் இரு ஆண்களிடம் இருந்தும் எந்த காணிக்கையும், எந்த நன்கொடையும் பெற்று கொள்ள வேண்டாம் என்று உபா. 23:18-வது வசனம் கூறுகின்றது. அந்த வசனத்தில் ''வேசிப்பணம், நாயின் கிரயம்'' என்று வருவதை பார்க்கலாம். ஆண் ஆணோடு செய்யும் பாவம் நாயின் கிரயத்திற்கு ஒப்பிடப்படுகின்றது.

'நாயானது' தான் கக்குவதை திரும்பவும் சாப்பிடுகிறது. அதே போன்று இவ்வித பாவத்திற்கு உட்படும் இரு ஆண்கள் இடம் பெறுகின்றார்கள். அவர்கள் செய்வது அவர்களுக்கே சரியில்லை என்று அவர்களுக்கு தெரிந்தாலும் அதனை தவிர்த்து வாழ முடியாத ஒரு நிலையை அவர்கள் அடைகின்றார்கள். அந்த நிலை பரிசுத்த பவுல் ரோமர் 27:28-வது வசனத்திலும் விரிவாக கூறப்பட்டு உள்ளது. அவர்கள் சிந்தை பாதிக்கப்படுகின்றது. மனதின் திடம் இழக்கப்படுகின்றது. அதிக கூச்சம் அல்லது அதிக சீற்றம் கொண்டவர்களாக அப்படிபட்டவர்கள் மாறுகின்றார்கள். நாய் கக்கிவிட்ட பின்பு, திரும்பவும் ஒருமுறை அதனை சாப்பிட முற்படுவதை பார்க்கின்றவர்கள் முகத்தை திரும்பி கொள்ளுகின்றார்கள். அதே நிலை உபா. 23:18-வது வசனத்தில் கூறப்படுகின்றது. அந்த பாவத்தில் இருக்கின்றவர்கள் கொடுக்கும் நன்கொடைகள் பரிசுத்தரின் ஊழியத்திற்கு பயன்படுத்தப்பட முடியாது, திருப்பி கொடுத்து விட வேண்டும் என்று தேவனுடைய கட்டளை கூறுகின்றது. நாய் தான் கக்கினதை தின்னும்படி திரும்புவது போல் மூடன் தன் மூடத்தனத்திற்கு திரும்புகிறான் என்று நீதி.26:11-வது வசனம் கூறுகின்றது. இந்த மேற்கோளை 2 பேதுரு 2:22-வது வசனத்தில் திரும்பவும் ஒரு முறை கூறுகின்றார்.

இந்த குறிப்பிட்ட பாவத்தின் கொடுமையினால் ஆயிரக்கணக்கான ஆண்கள் மரணம் அடைந்த சோக நிகழ்ச்சியினை நியாயதிபதிகள் 19,20 ஆகிய இரண்டு அதிகாரங்களில் பார்க்கலாம். இந்த பாவம் பரிசுத்த வேதாகமம் புறக்கணிக்கும் பாவமாகும். இவ்வித பாவம் செய்கின்றவர்களை பரிசுத்த சபை ஏற்பது இல்லை என்றும் பரலோக கதவுகள் இவர்களுக்கு திறப்பதும் இல்லை என்று பரி. பவுல் 1 கொரி. 6:9-வது வசனத்தில் கூறுகின்றார். ''கைச்செய்கை இல்லாமல் ஒரு நிமிஷத்தில் சோதோம் கவிழ்க்கப்பட்டது,'' என்று எரேமியாவின் புலம்பல் 4:6-வது வசனம் கூறுகின்றது. அதே முடிவு இந்த பாவத்தில் நிலைத்து நிற்கும் எவருக்கும் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

யாதொரு மிருகத்தோடும் நீ புணர்ச்சி செய்து, அதினாலே உன்னை தீட்டுப்படுத்த வேண்டாம்; ஸ்திரீயானவள் மிருகத்தோடே புணரும்படி அதற்கு முன்பாக நிற்கலாகாது; அது அருவருப்பான தாறுமாறு. (லேவி. 18:23)

பெண்களின் சேர்க்கையும் முறையான சேர்க்கையாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பரிசுத்தம் என்பது ஆண், பெண் இருபாலரின் வாழ்வுகளிலும் சம முக்கியத்துவம் பெருகின்றது. நாகரீகம், கலாச்சாரம், அறிவு பெருக்கம், உரிமை என்பவைகள் பரிசுத்தம் என்பதை விழுங்கிவிட முடியாது என்பதே லேவியராகம புத்தகத்தின் தீர்ப்பு ஆகும். வேதாகமத்தின் முடிவும் ஆகும். மிருகங்கள் என்பது மனித இடங்களை பெற முடியாது. மனிதனுக்கு உரிய மரியாதைகளை மிருகங்கள் கவர முடியாது. இதனை லேவி. 18:23-வது வசனத்தில் தெளிவாக விளக்கப்பட்டு இருப்பதை நாம் காணலாம். அந்த அளவிற்கு உள்ளமும், உணர்வும், தரமும் குறையும்பொழுது, அவர்கள் கல்லெரிந்து கொல்லப்படடார்கள் என்பதை லேவி. 20:16-வது வசனம் ஓர் தீர்ப்பாக அன்று கூறியது. இது எனது சரீரம், இதனை எப்படியும் பயன்படுத்த எனக்கு உரிமை உண்டு என்று கூற எவருக்கும் உரிமை இல்லை என்று பரிசுத்த வேத புத்தகம் கூறுகின்றது. ''நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல'' என்று 1 கொரி. 6:19-வது வசனம் திட்டமாக கூறுகின்றது. ''உங்கள் சரீரம் கிறிஸ்துவின் ஆலயம்'' என்று கூறுகின்றது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை மனுகுலத்திற்கு கொடுக்கப்பட்ட பின்னர் இவ்வித பாவங்களில் மட்டும் அல்ல, எவ்வித பாவங்களில் இருக்கின்றவர்களுக்கும் மன்னிப்பு வழங்கப்படுகின்றது. மறுமுறையும் ஓர் புது வாழ்வு பெற்று கொள்ள ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகின்றது. பரிசுத்த யோவான் 1:9-வது வசனம் கூறுவதை போன்று நம்முடைய பாவங்களை நாம் கிறிஸ்துவிடம் ஒளிவு மறைவின்றி, மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு வருந்தி கூறினால் இயேசு மன்னிக்கிறார். அதே அதிகாரம் 7-வது வசனம் கூறுகின்றது போன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிப்பதற்கு வல்லமை பெற்றதாக இருக்கின்றது. கர்த்தர் பாவங்களை வெறுக்கிறார். பாவம் செய்கின்றவர்களை வெறுப்பதே இல்லை. இயேசு சிலுவையில் சிந்திய தமது இரத்ததினால் பாவ மன்னிப்பு அனைவரும் பெற்றுக்கொள்ள விரும்புகிறார். பாவத்தை திரும்பவும் செய்து விடாமல் தூய வாழ்வு நடத்த பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை பெற்று கொள்ள விரும்புகின்றார். அன்றாட வாழ்வில் வரும் அனைத்து தீய எண்ணங்களையும், தீய உணர்ச்சிகளையும் உடனுக்கு உடன் மேற்கொண்டுவிட வேத வசனங்களினால் உள்ளத்தை நிரப்பி கொள்ள கர்த்தர் விரும்புகின்றார். முழங்காலில் நின்று ஜெபிக்க கர்த்தர் விரும்புகின்றார்.

மனதை கல்லாக்கி, பாவத்தை தொடர்ந்து செய்கின்றவர்கள் வாழ்க்கையில் சடுதியில் முடிவு வரும் என்று வசனம் கூறுகின்றது. ''அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான்'' என்று நீதி. 29:1-ல் பார்க்கிறோம்.

தூய்மையான வாழ்வு சிறப்பு மிக்க எதிர்காலத்தை அருள போகின்றது. வாழ்க்கையை ஒளியாக்குவதும் இருள் ஆக்குவதும் இருதயத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தை பொருத்தே அமைந்து இருக்கின்றது. இதுவே அநுக்கிரக காலம் என்று வேதம் கூறுகின்றது. இப்பொழுதே இரட்சண்ய நாள் என்று வசனம் உரைக்கின்றது. தவறுகளை நிறுத்தி விடுவதற்கு நாளையதினம் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இவைகளில் ஒன்றினாலும் உங்களை தீட்டுப்படுத்தாதிருங்கள்; நான் உங்கள் முன்னின்று துரத்திவிடுகிற ஜாதிகள் இவைகளெல்லாவற்றினாலும் தங்களை தீட்டுப்படுத்தி இருக்கிறார்கள்; தேசமும் தீட்டுப்படுத்த

பட்டிருக்கிறது. ஆகையால் அதின் அக்கிரமத்தை விசாரிப்பேன்; தேசம் தன் குடிகளை கக்கி போடும். இந்த அருவருப்புகளையெல்லாம் உங்களுக்கு முன் இருந்த அந்த தேசத்தின் மனிதர் செய்ததினாலே தேசம் தீட்டாயிற்று இப்பொழுதும் உங்களுக்கு முன் இருந்த ஜாதிகளை தேசம் கக்கி போட்டதுபோல், நீங்கள் அதை தீட்டுப்படுத்தும் போது அது உங்களையும் கக்கி போடாதபடிக்கு, நீங்கள் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்ய வேண்டாம். இப்படிப்பட்ட அருவருப்பானவைகளில் யாதோன்றை யாராவது செய்தால், செய்த அந்த ஆத்துமாக்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள். ஆகையால் உங்களுக்கு முன் செய்யப்பட்ட அருவருப்பான முறைமைகளில் யாதொன்றை நீங்கள் செய்து, அவைகளால் உங்களை தீட்டப்படுத்தி கொள்ளாதபடிக்கு என் கட்டளையை கைக்கொள்ளுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார். (லேவி. 18:24-30)

ஏதேனில் கண்ட திருமண முறை, திரும்பவும் ஒரு முறை அமுல்படுத்தப்படுவதை லேவியராகம புத்தகத்தில் நாம் பார்க்கிறோம். முறை தவறி மணம் செய்வதும், மணம் செய்த பின்னர் மனைவியை துரத்திவிடுவதும் தடை செய்யப்பட்ட நியாப்பிரமாணம் மோசேயினால் அறிமுகப்படுத்தப்பட்டது. நியாயப்பிரமாணம் விடுதலைக்கு நேராக நடத்தவில்லை. பெற்ற விடுதலையை எப்படி காத்து கொள்ளலாம் என்பதற்கு நேராக நடத்தியது. அதற்கு ஏற்ற விதி முறைகளை நியாயப்பிரமாணம் அளித்தது. விடுதலை என்பது வாசல் நிலையில் இரத்தம் பூசினால் பிழைப்பேன் என்ற விசுவாசம் பெற்றவர் அனைவருக்கும் கிடைத்தது. அதனை யாத்திராக புத்தகம் 12-வது அதிகாரத்தில் நாம் பார்த்தோம். விடுதலை விசுவாசத்தினால் வருகின்றது. விடுதலையை காத்துக்கொள்ளும் விதி முறைகள் நியாயப்பிரமாணத்தினால் வருகின்றது. விசுவாசம் இரட்சிக்கின்றது. நியாயப்பிரமாணம் இரட்சிப்பில் நிலைத்து நிற்பதற்கு உதவி செய்கின்றது. நியாயப்பிரமாணம் இரட்சிப்பது இல்லை. விசுவாசம் ஒன்றே இரட்சிக்கின்றது. ''அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறார் என்று வேதம் முன்னாக கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு சுவிசேஷமாய் முன்னறிவித்தது. அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளை எல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே. நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது, வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே,'' என்று கலா. 3:6-11-ல் பார்க்கிறோம்.

வாழும் காலம் மனசாட்சியின் காலமானாலும், நியாப்பிரமாணத்தின் காலமானாலும், கிருபையின் காலமானாலும் திருமண ஒழுங்கும், திருமண முறையும் தூய்மை என்பதை நடுவாக கொண்டதாகவே இருக்கின்றது. இடம், காலம், வசதிக்கு ஏற்ப பரிசுத்தம்

மாற்றப்படுவது இல்லை. தேவ சித்தம், திருத்தி திருத்தி அமைக்கப்படுவதும் இல்லை. மாந்தர் பரிசுத்தமாக வேண்டும் என்பதே தேவ சித்தம் என்பது உறுதியாக அன்றும் இன்றும் தெரிவிக்கப்படுகின்றது.

லேவி. 18:24-30 வசனங்கள் மிக முக்கியமான ஐந்து தகவல்கள் தருகின்றன. அது தரும் முதலாவது தகவல் பாவம் மனிதரை மட்டும் அல்ல, மண்ணையும் தீட்டுப்படுத்துகின்றது என்பது ஆகும். இரண்டாவது தகவல் அத்து மீறிய பாவத்தை தொடரும் பொழுது மனிதரை பூமி கக்கி போடும் என்று மூன்று முறை இந்த வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. மூன்றாவது அனைத்து அக்கிரமும் கர்த்தரால் ஓர் நாள் விசாரிக்கப்படும் என்பது ஆகும். நான்காவது தகவல் கர்த்தரின் கட்டளைகள் கை கொள்ளப்பட வேண்டும் என்பது ஆகும். ஐந்தாவது நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பது ஆகும். இந்த அதிகாரத்தின் துவக்கத்திலும் முடிவிலும் நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று வருவதை நாம் பார்க்கிறோம்.

முதலாவது பாவம் மனிதரை மட்டும் அல்ல, மனிதன் வாழும் இடத்தையும் தீட்டுப்படுத்துகின்றது என்ற தகவலை நாம் பார்த்தோம். கானானில் வாழ்ந்த மக்களின் பாவ செயலினால் கானான் தேசம் தீட்டுப்பட்டது என்று லேவி. 18:24,26,27 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. சோதோம் கொமோரா மக்கள் செய்த பாவத்தினால் அந்த பட்டணங்களே தீட்டாக கருதப்பட்டன. தீயினால் அழிக்கப்பட்டன. பாவம் செய்வதால் பரிசுத்த தேவனின் பிரசன்னம் மறைகின்றது. இடம் வெறுமை பெறுகின்றது. ''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளயத்திற்குள்ளே உலாவி கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தை கண்டு, உன்னை விட்டு போகாதபடிக்கு, உன் பாளயம் சுத்தமாய் இருக்கடவது'' என்று உபா. 23:14-ல் பார்க்கிறோம்.

ஆதாம் ஏவாளுடன் ஏதேனில் உலாவிய தேவன் அவரை பின்பற்றும் ஜனங்களின் இருப்பிடங்களில் உலாவ விரும்புகிறார். அசுத்தங்கள் ஆண்டவரின் ஆளுகைக்கு தடையாக வரும் பொழுது கர்த்தர் விலகுகிறார். நினிவே பட்டணம், கோராசீன் பட்டணம், பெத்சாயிதா பட்டணம் என்று பல பட்டணங்கள் தீட்டாக கருதப்படுவதற்கு காரணம் அந்த பட்டணங்களில் வாழ்ந்த மனிதர்களின் தீய செயல்களே ஆகும். இரண்டாவது தகவல் பாவம் அத்து மீறும் பொழுது பூமி கூட பொறுப்பு எடுப்பது இல்லை. கக்கி போட்டு விடும் என்று வசனம் கூறுகின்றது. மனிதன் பாவத்தில் ஆழமாக செல்லும் பொழுது அவன் அந்தரங்கமான வாழ்க்கை, உலகத்திற்கு தெரிய முடியாதபடி ஓர் வாழ்க்கையை அவன் நடத்துகின்றான். ஆனால் கர்த்தருடைய கண்கள் அவனை பார்த்து கொண்டே இருக்கின்றது. அவனது பேச்சு அவனது செயல் அவனது நடத்தை அனைத்தும் அவன் நல்லவன் என்றோ அல்லது தவறானவன் என்றோ சொல்ல முடியாதபடி அமைந்து விடுகின்றது. அவன் திறமைசாலியாகவும் இல்லை. புத்திசாலியாகவும் இல்லை. ஆனால் சாமர்த்திய சாலியாக இருக்கிறான் என்பதை தேவன் அறிந்து கொள்ளுகின்றார். அவனை நம்பவும் தயக்கம், சந்தேகிக்கவும் தயக்கம் என்ற ஓர் நிலை வருகின்றது. அந்த நிலை மாய்மாலம் என்ற ஓர் நிலையே ஆகும். மனம் மட்டுக்கு மிஞ்சி கடினப்படும் பொழுது மனிதனுடைய நிலை ஒரு மாயமான நிலையாகவே மாறி விடுகின்றது. வெளிப்படுத்தின விசேஷம் 3-வது அதிகாரத்தில் காணப்படும் லவோதிக்கேயா என்ற ஒரு சபை போன்ற நிலை அந்த மனிதருக்கு வருகின்றது. ''உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல

அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்,'' என்று வெளி. 3:15,16-ல் பார்க்கிறோம்.

பூமி கக்கி போடும் என்பது கர்த்தர் வாந்தி பண்ணி போடுவார் என்பதை குறிக்கின்றது. எரே. 6:19-வது வசனம். ''பூமியே கேள். இந்த ஜனங்கள் என் வார்த்தைகளை கேளாமல் இருந்து என் நியாயப்பிரமாணத்திற்கு செவி கொடாமல் அதை வெறுத்து விடுகின்றார்கள். அவர்கள்மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்,'' கர்த்தர் வரப்பண்ணும் தீங்கு ஒன்றே ஒன்றுதான். பூமி அவர்களை கக்கி போடுகின்றது. கர்த்தர் அவர்களை வாந்தி பண்ணி விடுகின்றார். கர்த்தர் வாந்தி பண்ணி விடுதல் என்பது கர்த்தர் அவர்களை நினைக்கும் நினைவை தன்னை விட்டு எடுத்து விடுகின்றார் என்பது ஆகும். கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் மனிதனை விட்டு எடுபடும் பொழுது மனிதனுக்கு வாழ்வு என்பது ஓர் நரகமாக மாறி விடும். இந்த வசனங்கள் கொடுக்கும் மூன்றாவது தகவல் அனைத்து அக்கிரமங்களும் கர்த்தரால் ஓர் நாள் விசாரிக்கப்படும் என்பதே ஆகும். ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் என்று பிர.12:14-வது வசனம் கூறுகின்றது. சகல எண்ணங்களையும், சகல செய்கைகளையும் நியாயம் தீர்க்கும் காலம் இனி இருக்கின்றது என்று பிர. 3:17-வது வசனம் கூறுகின்றது. ''பாவி நூறு தரம் பொல்லாப்பை செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாக பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாக பயப்படாதிருக்கிறபடியால் நிழலை போலிருக்கின்ற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை'' என்று பிர. 8:12,13-ல் பார்க்கிறோம்.

ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர் பூமியின்மேல் காணப்படும் அக்கிரமங்களை பாராமுகமாக இருக்கவே இல்லை. தவறு செய்யும் மனிதன் தனது தவறுகளை மூடி மறைக்க முயற்சிப்பது போல பூமி மூடுவது இல்லை. பூமி வெளிப்படுத்தும் என்று ஏசா. 26:21-ல் பார்க்கிறோம். ''இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தின் நிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார்; பூமி தன் இரத்த பழிகளை வெளிப்படுத்தி, தன்னிடத்தில் கொலை செய்யப்பட்டவர்களை இனிமூடாதிருக்கும்.''

லேவி. 18:24-30 வசனங்கள் கூறும் நான்காவது தகவல் கர்த்தரின் கட்டளைக்கு கருத்து ஒருமித்து கீழ்ப்படிந்து விடுங்கள் என்பதே ஆகும். இந்த அதிகாரத்தின் துவக்கத்தில் கர்த்தருடைய கட்டளைக்கும் நியாயங்களுக்கும் கீழ்ப்படிவது மிக அவசியம் என்று கூறப்பட்டது. அதுவே தொடர்ந்து முடிவுரையாக கூறப்படுகின்றது. கர்த்தரின் கட்டளைகள் மனிதனுக்கு விளக்கு போன்றது. பாதைக்கு வெளிச்சம் தருவது. கர்த்தரில் நிலைத்திருப்பதின் இரகசியம் அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதே ஆகும்.

இந்த வசனங்களில் ஐந்தாவது வரும் தகவல் ஆரம்பத்தில் வந்த தகவலே ஆகும். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதே ஆகும். 30-வது வசனத்தில் அதனை மறுபடியும் நாம் பார்க்கிறோம். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதற்குள் அனைத்தும் அடங்கியிருக்கின்றது. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பது உண்மையாக இருக்கும் என்றால் வாழ்க்கை அதற்கு ஏற்றதாக இருக்கும் என்று அந்த வசனம் கூறுகின்றது. நான்

பரிசுத்தராக இருப்பது போல நீங்களும் பரிசுத்தராகவே இருப்பீர்கள். அனைத்தில் இருந்தும் பிரித்து எடுக்கப்பட்டவர்களாக இருப்பீர்கள். வாழ்க்கையை சாதாரணமாக கையாளாதபடிக்கு பொறுப்பு உணர்ச்சியுடன் கையாளுவீர்கள் என்று அந்த வசனம் கூறுகின்றது. மேலும் நான் அன்பானவராக இருப்பது போல நீங்களும் அனைவருக்கும் சம அன்பு வழங்குவீர்கள் என்று அந்த வசனம் கூறுகின்றது. குடும்பஉறவுகள் சீராக அமைய 18-வது அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவர்கள் நிரந்தரமாக தங்க இருக்கும் கானான் என்ற இடம் செல்லுவதற்கு முன் அவர்கள் நடத்தை நிரந்தரம் பெறாமல் சமூகம் நிரந்தரம் பெறப்போவதும் இல்லை. 10 கட்டளைகளை தொடர்ந்து நியாயங்களும் பிரமாணங்களும் கொடுக்கப்பட்டது. அவைகளை கருத்தாக கைக்கொண்டால் ஆசீர்வாதம் உண்டு. அவைகளில் கவலையீனமாக இருந்தால் சாபம் காத்து இருக்கும். மனிதனுக்கு மனம்போல் வாழவும் வாய்ப்பு உண்டு. மனதை கர்த்தருக்கு அர்பணித்து தூய்மையாக காத்து கொள்ளவும் வாய்ப்பு உண்டு. விரும்பியபடி விசாலமான பாதையில் செல்லவும் உரிமை உண்டு. இடுக்கமான பாதை சென்று மகிழ்ச்சியை பெற்றுக்கொள்ளவும் வரவேற்பு உண்டு.

இரண்டில் ஒன்றுதான் ஒரு வாழ்வில் இடம் பெற முடியும். செய்வது எதுவோ அதற்கு ஏற்ற பலனையும் பெறமுடியும். மோசேயின் காலத்திற்கு பின்னர் யோசுவாவின் தலைமையில் அவர்கள் நடத்தப்பட்டார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் அதாவது சுமார் 38 வருடங்களுக்கு பின்னர் மறுபடியும் ஒரு முறை லேவியராகம புத்தகம் 18-வது அதிகாரம் வாசிக்க கேட்டார்கள். யோர்தான் நதியை கடந்த பின்னர் இரண்டு மலைகள் இருந்தன. ஒன்றின் பெயர் ஏபால் என்பது ஆகும். ஏபால் என்றால் வெறுமை என்று பொருள். மற்றொரு மலையின் பெயர் கெர்சீம் என்பது ஆகும். கெர்சீம் மலை ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக இருந்தது. ஏபால் கெர்சீம் என்ற இரண்டு மலைகளும் ஒன்றுக்கு ஒன்று எதிராக இருந்தன. இரண்டிற்கும் நடுவில் ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. 12 கோத்திரத்தாரில் சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் ஆகிய 6 கோத்திரத்தார்களும் ஆசீர்வாதமான மலை என்ற கெர்சீம் மலையின்மேல் நிறுத்தப்பட்டார்கள். மற்ற ஆறு கோத்திரத்தாரான ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி கோத்திரத்தார்கள் வெறுமை என்று பொருள்படும் ஏபால் என்ற மலையிலே நிறுத்தப்பட்டார்கள். இரண்டு மலையின் நடுவில் இருந்த பள்ளத்தாக்கில் லேவியர்கள் நின்று கொண்டார்கள். லேவியர்கள் அங்கு நின்று கொண்டு லேவி. 18,19 ஆகிய இரண்டு அதிகாரங்களில் இருந்து 12 சாபங்களை எடுத்து ஒன்று ஒன்றாக அவர்கள் கூறும் பொழுது வெறுமை என்ற ஏபால் மலையில் நின்றவர்கள் அதற்கு ஆமென் ஆமென் என்று சொல்ல வேண்டும். அடுத்தாற்போல் லேவி. 26-வது அதிகாரத்திலும், உபா. 28-வது அதிகாரத்திலும் உள்ள ஆசீர்வாதங்களை லேவியர்கள் அடுக்கடுக்காக கூறும்பொழுது கெர்சீம் என்ற ஆசீர்வதிக்கப்பட்ட மலையில் நிற்பவர்கள் ஆமென், ஆமென் என்று சொல்ல வேண்டும். இதை எப்படி செய்ய வேண்டும் என்றும், சொல்ல வேண்டிய சாபம் எது என்றும், சொல்ல வேண்டிய ஆசீர்வாதங்கள் எது என்றும் தான் உயிரோடு இருக்கும் பொழுது மோசே மிக விபரமாக கூறியதை உபாகம புத்தகத்தில் 27,28 ஆகிய அதிகாரங்களில் இருந்து நாம் அறிந்துகொள்ள இருக்கின்றோம். குறிப்பாக மோசே தெரிந்து எடுத்த 12 சாபங்களும் இப்பொழுது நாம் படித்து கொண்டு இருக்கும் லேவியராகம புத்தகம் 18,19 ஆகிய அதிகாரங்களில் இருந்து எடுக்கப்பட்டவைகளே ஆகும்.

லேவியராகமம் 18,19- வது அதிகாரம் ஆகிய இரண்டு அதிகாரங்களும் தனிப்பட்ட வாழ்வில் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்றும், குடும்ப வாழ்வை மனிதன் எப்படி வாழ

வேண்டும் என்றும் கூறுகின்றது. பள்ளத்தாக்கில் நின்ற லேவியர்கள் ஆசீர்வாதம் கூறினார்கள். அதற்கு கெர்சீம் மலைமீது நின்ற ஆறு கோத்திரத்தார்கள் ஆமென் ஆமென் என்று கூறினார்கள். லேவியராகம புத்தகம் 18,19 ஆகிய அதிகாரங்களில் வருகின்ற வசனங்கள் ஒவ்வொன்றும் குடும்பமுறைகளை மீறி மனிதனுடனும் மிருகங்களுடனும் தவறாக நடக்கிறவர்களுக்கு, பெற்றோர்களை மதிக்காமல் நடக்கின்றவர்களுக்கு, தேவ கட்டளைகளை அறிந்தும் துணிந்து மீறி நடக்கின்றவர்களுக்கு 12 சாபங்களை கூறுகின்றன. பள்ளத்தாக்கில் உள்ள லேவியர்கள் அதனை ஒன்று ஒன்றாக கூறுகின்றார்கள். வெறுமை என்ற ஏபால் மலைமீது நின்ற ஆறு கோத்திரத்தார்கள் அதற்கு ஆமென் என்கிறார்கள். இதனை மோசே கூறியபடி யோசுவா நிறைவேற்றினார் என்பதை யோசு. 8:30-வது வசனம் கூறுகின்றது. மனித நன்மைக்காக லேவியராகம புத்தகம் 18,19 ஆகிய அதிகாரங்களும் மற்றும் லேவியராகம புத்தகத்தின் அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டது. ஆசீர்வாதமான குடும்ப வாழ்க்கை நடத்த அனைத்து குறிப்புகளும் அந்த அதிகாரங்களில் கொடுக்கப்பட்டது. அதனை கருத்தோடு கைக்கொண்டு வாழுங்கள் என்று கூறி லேவியராகம புத்தகம் 18-வது அதிகாரம் விடைபெறுகின்றது.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்; உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். (லேவி. 19:1,2)

பின்னர் கர்த்தர் மோசேயை நோக்கி என்று மோசேயிடம் கர்த்தர் தொடர்ந்து பேசுவதை இந்த அதிகாரத்திலும் நாம் பார்க்கின்றோம். தேவனின் சத்தத்தை சற்றும் இடைவெளி விடாமல் கேட்டு கொண்டு இருக்கும் கிருபை மோசேக்கு இருந்து கொண்டே இருந்தது என்பதை நாம் அறிகின்றோம். நான் உன்னிடத்தில் கூறுவதை நீ திரும்பி சென்று என் மக்களுக்கு சொல்ல வேண்டும் என்ற நிபந்தனையுடன் கர்த்தர் மோசேயிடம் பேசுகின்றார். சொல்ல வேண்டியது என்ன என்பதின் முதலாவது குறிப்பு 19:2-ல் வருகின்றது. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். நான் பரிசுத்தர் ஆகையால் என்னை பின் பற்ற முன்வருகிறவர்கள் பரிசுத்தமான வாழ்க்கை நடத்துகின்றவர்களாக இருக்க வேண்டும் என்பது ஆரம்பத்திலேயே தெளிவு படுத்தப்படுகின்றது. அதற்கு ஓர் காரணம் உண்டு. பரிசுத்தம் என்பது இல்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிக்க முடியாது.

லேவியராகம புத்தகத்தின் தலைப்பு பரிசுத்தம் என்பதே ஆகும். அதன் முதல் விபரத்தை லேவி. 11:44,45 ஆகிய வசனங்களில் நாம் ஏற்கெனவே பார்த்தோம். கர்த்தர் பரிசுத்தம் உள்ளவராக இருக்கிறார் என்பது கர்த்தர் அனைத்திலும் இருந்து பிரித்து எடுக்கப்பட்டவராக இருக்கிறார் என்பதே ஆகும். தீட்டான ஒன்றும் கர்த்தரின் சமூகத்தில் பிரவேசிக்க முடியாது என்பதே ஆகும்.

தீட்டான மனிதர் கர்த்தரின் சமூகம் பிரவேசிக்க தீட்டு கழிக்கப்பட வேண்டும். பாவம் நீக்கப்பட வேண்டும். பரிசுத்தம் காக்கப்பட வேண்டும். நீங்கள் பரிசுத்தராக மாறாமல் நான் உங்கள் தேவனாகிய கர்த்தராக மாற போவது இல்லை என்பதே ஆரம்பத்தில் தெளிவாக்கப்படும் விபரமாகும். நீங்கள் பரிசுத்த அலங்காரம் பெறும் பொழுது நீங்கள் ஆராதிக்கும் ஆண்டவர் நான்தான் என்பதை உங்கள் ஆவி அறிந்து கொள்ளும். பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பது இல்லை. கர்த்தரை தேவனாக கொள்ள பரிசுத்தம் என்பது தேவைப்படுகின்றது என்பதை 19-வது அதிகாரம் வலியுறுத்தி துவங்குகின்றது.

பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராக இருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராக இருக்க தடை செய்யும் எதையும் சிந்திக்கவே வேண்டாம். பேசவே வேண்டாம். செய்யவே வேண்டாம் என்று கூறுகின்றது. அதில் கவனமாக இருங்கள். உறுதியாக இருங்கள். அவ்வித ஓர் முயற்சியை எடுக்க தீர்மானம் கொண்டவராக இருந்து கொண்டே இருங்கள் என்று இந்த அதிகாரம் கூறுகின்றது. பொல்லாங்காக தோன்றும் எதையும் விட்டு விலகி செல்லுங்கள்! தவறான ஆலோசனை கொடுக்கும் எவரிடமும் எவ்வித சம்பந்தமும் கொள்ளாதேயுங்கள். பாவ விருப்பத்தையும், பாவ ஆசையையும், பாவ உணர்வையும் தூண்டும் எதையும் எவரையும் துண்டித்து வாழுங்கள் என்று கூறுகின்றது. எல்லாவற்றையும் சோதித்து பார்த்து, நலமானது எது என்று அறிந்து விடுங்கள் என்று கூறுகின்றது. அதில் இறுதிவரை உறுதியுடன் நிலைத்து நிற்பதற்கு 16-26 அதிகாரங்கள் வரை லேவியராகம புத்தகம் உதவி செய்கின்றது.

அகம் தூய்மையானால் முகம் பிரகாசம் காணும். இருதயத்தின் நினைவுகள் வார்த்தையில் வெளிவரும். மனிதனின் யோக்கியங்கள் செய்கையில் தெரியவரும். செய்கை தூய்மை, உண்மை, நேர்மை கொண்டு இருக்கும் வாழ்க்கை கர்த்தருக்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட வாழ்க்கை. பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை. உலகத்திலும், உன்னதத்திலும் உயர்ந்து நிற்க போகும் வாழ்க்கை. அவ்வித வாழ்க்கை துவங்க வேண்டிய இடம் குடும்பமாக இருக்கட்டும் என்பதை லேவி. 19:3-வது வசனத்தின் முதல் பகுதி கூறுகின்றது.

10.6 தூய்மையான வாழ்விற்கு கற்பனைகள் முக்கியமானவைகள்

1. பெற்றோருக்கு பயந்திரு

உங்களில் அவனவன் தன் தன் தாய்க்கும் தன் தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும், என் ஓய்வு நாட்களை ஆசரிக்கவும் கடவீர்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 19:3)

பரிசுத்தத்திற்கு வரும் அழைப்புகளில் முதலாவது அழைப்பாக லேவி. 19:3-வது வசனம் காணப்படுகின்றது. உலகின் அனைத்து மனிதருக்கும் கர்த்தர் பரம தகப்பனாக இருக்கின்றார். குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் அப்பா சொந்த தகப்பனாக இருக்கின்றார். அப்பாவும், அம்மாவும் வருந்த விடாதேயுங்கள்; மனம் நோவ விடாதேயுங்கள் என்பதே கர்த்தர் கூறும் முதலாவது அறிவிப்பு ஆகும்.

பரிசுத்தம் என்பது வீட்டிற்குள் உதயமாக வேண்டும். பெற்றோரை கனம் பண்ணுவதில் தோன்ற வேண்டும். அது 10 கற்பனைகளில் ஐந்தாவது ஆகும். ''உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்து இருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயா'' என்று யாத்திராகம புத்தகம் 20:12-வது வசனம் கூறியது. அது கர்த்தரால் கற்பலகைகளில் எழுதப்பட்ட கற்பனைகளில் ஒன்று. பிள்ளைகளின் இதயங்களில் எழுதப்பட வேண்டிய கற்பனை! கர்த்தாவே என் இதயத்திலும் அந்த கற்பனைதனை எழுதும் என்று கேட்கும் பிள்ளைகள் தாய்க்கும் தகப்பனுக்கும், பயப்படும் பிள்ளைகள் என்று லேவி. 19:3-வது வசனம் கூறுகின்றது. ''கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்'' என்று நீதி. 1:7-ல் பார்க்கிறோம். இரண்டு வசனங்களிலும் பயம் என்ற வார்த்தை வருகின்றது. இரண்டு வசனங்களிலும் பயம் என்ற வார்த்தைகக்கு உபயோகப்படுத்தப்பட்டு உள்ள எபிரெய சொல் ஒரே சொல் ஆகும். கர்த்தருக்கு பயந்து

வாழ்வது என்பது என்ன? என் ஆண்டவருக்கு பிரியம் இல்லாதது எதுவோ அதை பேசமாட்டேன், என் ஆண்டவருக்கு பிரியம் இல்லாதது எதுவோ அதை பார்க்க மாட்டேன். வாசிக்க மாட்டேன், செய்யமாட்டேன். என் ஆண்டவருக்கு பிரியம் இல்லாத சேர்க்கைகள் எதுவோ அவைகளுடன் சேரமாட்டேன் என்ற உறுதியான தீர்மானமே கர்த்தருக்கு பயப்படும் பயம் என்பது ஆகும். அதன் முடிவு என்ன? ஞானம் என்பதை பெற்று கொள்ளுவது ஆகும்.

அம்மா, அப்பாவிற்கு பயந்து நடப்பது என்பது என்ன? நான் எங்கு இருந்தாலும் என் பெற்றோர் என்னை பார்த்து கொண்டு இருந்தாலும், என் பெற்றோர் என்னை பார்க்கா விட்டாலும் என் அம்மாவிற்கும் என் அப்பாவிற்கும் பிரியம் இல்லாத எதையும் நான் செய்யவே மாட்டேன். அவ்விதம் என்னை தூண்டும் எவருடனும் நான் சேரவும் மாட்டேன் என்பதே ஆகும். அவ்வித ஓர் சிறந்த முடிவு எடுக்கும் பிள்ளைகளுக்கு கிடைக்கும் பரிசு என்ன? உன் வாழ் நாட்கள் நீடித்து இருக்கும். அதாவது எவ்வித குறையும் இல்லாமல் இந்த உலகத்தில் நீ வாழுவாய் என்பதே ஆகும். கர்த்தர் உனது பரம தகப்பன். அப்பா உன் சொந்த தகப்பன். அம்மா, அப்பா இருவரும் கனம் பண்ணப்பட வேண்டும் என்பதே பத்து கற்பனைகளில் ஐந்தாவது கற்பனையாக வருகின்றது. கனம் பண்ணுதல் என்பது பெற்றோரை மற்றோருக்கு முன்பாக மேன்மை படுத்துதல் என்பது ஆகும். பிள்ளைகளின் பரிசுத்தமான வாழ்க்கை, அனைத்திலும் சிறந்து விளங்கும் தன்மை முதலியவை பெற்றோரை மற்றோருக்கு முன்பாக மேன்மை படுத்துகின்றது. தாவீது என்ற சிறுவன் கோலியாத்தை ஜெயித்தவுடன் இவன் யாருடைய மகன் என்றுதான் கேட்டார்கள்! வீட்டிலும், வெளியிலும் பிள்ளைகள் சிறந்தவர் என்ற பெயர் எடுக்கும் பொழுது இவன், இவள் யாருடைய மகன், யாருடைய மகள் என்றுதான் உலகம் கேட்கப்போகின்றது. அனைவரையும்விட அனைத்தையும்விட, சால சிறந்தவர் என்று பெயர் எடுக்கும் பொழுது பெற்றோர் கனம் பண்ணப்படுகிறார்கள். சண்டையிடுகிறவர், குடித்து வெறிக்கிறவர், தவறாக நடக்கின்றவர் என்று பிள்ளை பெயர் எடுக்கும் பொழுது பெற்றோர் தலை குனிகின்றார்கள். பரிசுத்தராக இருங்கள் என்பது குடும்பத்தில் தோன்ற வேண்டும். பெற்றோரை கனம் பண்ணு என்பதில் இரண்டாவது பொருள் பெற்றோருக்கு பிள்ளைகள் பொறுப்பு எடுக்க வேண்டும் என்பது ஆகும். உனது வாழ்வு நாள் நீடித்து இருக்க உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்ற கற்பனையின் இரண்டாவது பொருள் உன் தாய்க்கும் உன் தகப்பனுக்கும் நீ பொறுப்பு எடு என்பதே ஆகும். தேவைப்படும் நேரம் அவர்களை அணுகுவதும், பின்னர் அலட்சியம் செய்வதும் பரிசுத்தமான வாழ்விற்கு வந்த பிள்ளைகள் செய்யவே முடியாது என்பதே லேவி. 19:3-வது வசனம் கூறும் சத்தியம் ஆகும். பெற்றோரின் சந்தோஷமே பிள்ளைகளின் சந்தோஷம். பெற்றோரை மகிழ செய்வதே பிள்ளைகளின் மகிழ்ச்சி. பெற்றோர்களை தனிமை படுத்துவதும், அவர்களுக்கு பெலமாக அமையாமல் போகுவதும், அவர்களை பொறுப்பு எடுக்க தயங்குவதும் பிள்ளைகள் செய்யும் தவறுகள் ஆகும்.

பெற்றோரை கனம் பண்ணுதல் என்பதின் மூன்றாவது பொருள் பெற்றோருக்கு மரியாதை செலுத்துதல் என்பதாகும். பெற்றோரை எதிர்த்து பேசுதல், கெட்ட வார்த்தைகள் சொல்லி பேசுதல், பெற்றோரை அடித்தல், பெற்றோரை கண்ணீர் சிந்த வைத்தல் அனைத்தும் பரிசுத்தராகிய தேவனுக்கே எதிராக செய்யும் மகா பெரிய, மகா கொடிய குற்றங்கள் ஆகும். ''உன்னை பெற்ற தகப்பனுக்கு செவிகொடு. உன் தாய் வயது சென்றவள் ஆகும் பொழுது அவளை அசட்டை பண்ணாதே'' என்று நீதி. 23:22-வது வசனம்

கூறுகின்றது. ''ஞானம் உள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான். மதியற்ற மனுஷனோ தன் தாயை அலட்சியம் பண்ணுகிறான்'' என்று நீதி. 15:20-வது வசனம் கூறுகின்றது. நீதி. 30:17-ல் தாயையும் தகப்பனையும் கனம் பண்ணாத பிள்ளைகளுக்கு சாபம் இருக்கின்றது. ''தகப்பனை பரியாசம் பண்ணி தாயின் கட்டளையை அசட்டை பண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்'' என்று அந்த வசனம் கூறுகின்றது.

முழு வேதாகமத்திலும் பெற்றோருக்கு முழு மதிப்பை கொடுக்க பிள்ளைகள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அவ்விதம் அவர்கள் செய்ய மறுக்கும் பொழுது தேவன் அவர்களுக்கு எந்த ஆசீர்வாதத்தையும் கொடுக்க மறுக்கிறார். பிள்ளைகள் தாய்க்கும் தகப்பனுக்கும் முழு மரியாதை, முழு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதே பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்கள் அனைத்தும் கூறும் அறிவிப்பும், எச்சரிப்பும் ஆகும். அதனை செய்து பரிசுத்தராகிய தேவனுக்கு மரியாதை செய்து விடுங்கள் என்று வேத புத்தகம் கூறுகின்றது. பெற்றோருக்கு கொடுக்கும் மரியாதை பரிசுத்தராகிய தேவனுக்கு கொடுக்கும் மரியாதை ஆகும். ''நான் பரிசுத்தர் நீங்களும் பரிசுத்தராக இருங்கள்'' என்று லேவியராகமம் 19-வது அதிகாரம் துவங்குகின்றது. துவக்கத்தின் ஆரம்பம் தாய், தகப்பன் என்று இருக்கின்றது. உலகத்தில் உள்ள மனிதர் அனைவரும் கர்த்தருடைய பிள்ளைகள்! அவர்கள் அனைவரும் சீராகவும் சிறப்பாகவும் வாழ பரம தகப்பனாகிய கர்த்தர் விரும்புகின்றார். இந்த ஆசீர்வாதத்தை கிறிஸ்துவில் பெற்று மகிழ வாஞ்சிக்கின்றார். வீட்டில் பிறந்த குழந்தைகள் அனைவரும் பெற்றோரின் பிள்ளைகள். அவர்கள் அனைவரும் எவ்வித குறையும் இன்றி வாழவே பெற்றோர்கள் வாஞ்சிக்கின்றார்கள்.

பெற்றோரை உதாசீனம் செய்வது கர்த்தாதி கர்த்தரை அலட்சியம் செய்வதற்கு சமமானது. பெற்றோரை மேன்மைபடுத்துவது, பெற்றோருக்கு பொறுப்பு எடுப்பது, பெற்றோருக்கு மரியாதை செலுத்துவது, கர்த்தாதி கர்த்தரை மகிழ்விக்கின்றது. பரிசுத்தம் என்பதில் வளர்வது என்பதை லேவியராகம புத்தகம் 19-வது அதிகாரத்தின் ஆரம்ப வரிகள் அறிவிக்கின்றன. பத்து கற்பனைகளில் ஒரு வாக்குத் தத்தத்துடன் வரும் முதலாவது கற்பனை ஐந்தாவது கற்பனையே ஆகும். ''பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாய் இருக்கிறது'' என்று எபே. 6:1-3-ல் பார்க்கிறோம்.

பரிசுத்தம் என்பது துவங்கும் இடம் குடும்பம். துவங்கும் விதம் பெற்றோருக்கு கொடுக்கும் கனம்.

லேவியராகமம் 16-வது அதிகாரம் முதல் 26-வது அதிகாரங்கள் வரை பரிசுத்தம் என்பது துல்லிபமாக விளக்கப்பட்டு வருகின்றது. இந்த அதிகாரங்களில் கூறப்படும் விளக்கங்கள் புதிய ஏற்பாட்டு புத்தகத்திலும் தொடர்ந்து எடுத்து உரைக்கப்படுகின்றன. பரிசுத்த பேதுரு எழுதின முதலாவது நிரூபம் முதலாவது அதிகாரம் 14,15 ஆகிய வசனங்கள், ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராக இருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராக இருங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள்'' என்று லேவியராகமத்தின் அழைப்பை தொடர்ந்து எடுத்து

உரைக்கின்றன. வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான், உமது வசனத்தின்படி தன்னை காத்து கொள்ளுகிறதினால் தானே என்று சங். 119:9-வது வசனம் கூறுகின்றது. அந்த உன்னத வசனங்கள் லேவியராகமத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒலிக்கின்றது.

2. ஓய்வு நாளை ஆசரி

லேவியராகமம் 19-வது அதிகாரத்தில் 'பரிசுத்தராக இருங்கள்' என்பதில் கூறப்படும் இரண்டாவது குறிப்பு 3-வது வசனத்தின் பின் பாகத்தில் காணப்படுகின்றது. ''என் ஓய்வு நாட்களை ஆசரிக்கவும் கடவீர்கள். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.''

ஆதி. 2:2,3-வது வசனங்களில் கர்த்தர் ஏழாவது நாளில் ஓய்ந்து இருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஆறு நாட்களும் சிருஷ்டிப்பின் வேலையை முடித்து ஏழாவது நாளில் கர்த்தர் அமர்ந்து இருந்தார், அகம் களிகூர்ந்து இருந்தார், சிருஷ்டிப்பில் மகிழ்ந்து கொண்டு இருந்தார் என்பதே ஆகும். ஆறு நாட்களும் வேலை செய்ததினால் களைப்பு அடைந்து கர்த்தர் ஓய்ந்து இருந்தார் என்பது அல்ல; கர்த்தருக்கு களைப்பு வருவது இல்லை. கர்த்தர் களைப்பு அறியார். ஓய்வு நாள் என்பதை குறிக்கும் எபிரெய சொல் 'சேபத்' என்பது ஆகும். அந்த எபிரெய சொல்லின் பொருள் உடலும் சேர்ந்து இளைப்பாறுதல் பெறுதல் என்பது ஆகும். ஆனால் அந்த குறிப்பிட்ட எபிரெய சொல் ஆதி. 2:2,3 ஆகிய வசனங்களில் உபயோகிக்கப்படவில்லை. 'சேபத்' என்ற சொல் உபயோகிக்கப்பட்ட முதல் இடம் யாத்திராகம புத்தகம் 16-வது அதிகாரம் 23-வது வசனமே ஆகும். ''கர்த்தர் சொன்னது இதுதான்: நாளைக்கு கர்த்தருக்கு உரிய பரிசுத்த ஓய்வு நாளாகிய ஓய்வு'' என்று கூறுகின்றது. இந்த இடத்தில்தான் முதல் முதலாக 'சேபத்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு உள்ளது.

தொடர்ந்து யாத். 20:8-11 வசனங்கள் வரை ஓய்வு நாள் ஆசரிப்பு என்பது 10 கட்டளைகளில் 4-வது கட்டளையாக இடம் பெற்றது. இதனை நெகே. 9:14-வது வசனத்தில் மறுபடியும் ஒருமுறை எடுத்து கூறுகின்றார். ''உமது பரிசுத்த ஓய்வு நாளை அவர்களுக்கு தெரியப்படுத்தி உமது தாசனாகிய மோசேயை கொண்டு அவர்களுக்கு கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாய பிரமாணங்களையும் கற்பித்தீர்'' என்று நெகேமியா கூறுகின்றார். யாத்திராகம புத்தகம் 20-ம் அதிகாரத்தில் கூறப்பட்டதை தொடர்ந்து யாத். 23:12, 31:12-17, 34:21, 35:1-3, லேவி. 19:3, லேவி. 23:1-3, உபா. 5:12-15 ஆகிய அனைத்து வசனங்களிலும் ஓய்வு நாள் ஆசரிப்பு என்பது ஒரு கட்டளையாக கர்த்தரால் கொடுக்கப்பட்டு கொண்டே வருவதை நாம் காணலாம்.

பரிசுத்தமான வாழ்விற்கு அழைப்பு கொடுக்கும் லேவியராகம புத்தகம் 19-ம் அதிகாரத்தில் கொடுக்கும் முதல் அழைப்பு பெற்றோரை கனம் பண்ணுவதற்கு வரும் அழைப்பு என்பதை நாம் அறிந்தோம். இரண்டாவதாக வரும் குறிப்பு தேவனை கனம் பண்ணுதல் என்பது ஆகும். ஓய்வு நாளை கடைப்பிடிப்பது தேவனுக்கு கனம் கொடுப்பதும் ஆகும். பெற்றோர்களுக்கு கொடுக்கும் கனம் பரிசுத்தத்தில் முதல் குறிப்பாக வருகின்றது. தேவனுக்கு கொடுக்கும் கனம் பரிசுத்தத்தில் இரண்டாவது குறிப்பாக வருகின்றது. ஓய்வு நாளில் எந்த வேலையும் செய்யாமல் மனதை தேவனாகிய பரிசுத்தருக்கு நேராக ஒருமுகப்படுத்தி கர்த்தர் தங்களுக்கு செய்த சகல உபகாரங்களையும் நினைவு கூற வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. அது ஓர் விடுமுறை நாள் அல்ல. கர்த்தரை அறியும் அறிவில் வளரும் ஓர் நாள். அவரை ஆராதித்து போற்றும் ஒரு நாள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்று வரும் அழைப்பை ஏற்க முன்

வருகின்றவர்கள் யார் யார் என்பதற்கு ஓய்வு நாள் ஓர் அடையாளமாக இருக்கின்றது. எசே. 20:12-வது வசனத்தில் ''நான் தங்களை பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும் படிக்கு எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்காக என் ஓய்வு நாட்களையும் அவர்களுக்கு கட்டளையிட்டேன்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. ''என் ஓய்வு நாட்களை பரிசுத்தமாக்குங்கள். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும் படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாக இருக்கும்'' என்று எசே. 20:20-வது வசனம் கூறுகின்றது.

ஓய்வு நாள் ஆசரிப்பு கர்த்தருக்கு கனம் கொடுக்கின்றார்கள் என்பதற்கு ஓர் அடையாளம் ஆகும். கர்த்தருக்கு கனம் கொடுப்பது மட்டும் அல்ல, சக மனிதருக்கும் கனம் கொடுப்பதற்கு ஓர் அடையாளமாக ஓய்வு நாள் இடம் பெறுவதை உபாகம புத்தகத்தில் நாம் பார்க்கலாம். ''நீ இளைப்பாறுவது போல உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும் இளைப்பாற வேண்டும்'' என்ற கட்டளை உபா. 5:14-வது வசனத்தில் காணப்படுகின்றது. அவர்கள் எகிப்தில் வாழ்ந்த நாட்களில் எவ்வித ஓய்வும் அறிந்தது இல்லை. பார்வோன் கட்டளையின்படி வருடத்தின் அத்தனை நாட்களும் வேலை நாட்களாகவே அவர்களுக்கு இருந்தது. நீண்ட பகல்களையும் குறுகிய இரவுகளையும் அவர்கள் கண்டார்கள். பார்வோனுக்கு வேலை செய்வதற்கு வேளையே இல்லை. அடிமைகளுக்கோ ஓய்வு எடுப்பதற்கு நேரமே இல்லை. இப்பொழுது அடிமைத்தனம் முடிந்து விட்டது. சொந்த தேசம் கிடைக்க இருக்கின்றது. எஜமான்களாக மாறப்போகும் அவர்கள் இனிமேல் அவர்களின் கைக்கு அடியில் வேலைக்கு அநேகரை அமர்த்த இருக்கின்றார்கள். அவர்களின் கைக்கு அடியில் இனி வேலை செய்ய இருக்கிறவர்களை பார்வோன் அவர்களை நடத்தியது போன்று நடத்தக் கூடாது என்பதே உபா. 5:14,15 ஆகிய வசனங்கள் கூறும் கட்டளை ஆகும்.

லேவி. 19:3-வது வசனத்தில் மட்டும் அல்ல; 19:30-வது வசனத்திலும் ஓய்வு நாள் ஆசரிப்பு கூறப்பட்டு உள்ளது. ''என் ஓய்வு நாட்களை ஆசரித்து என் பரிசுத்த ஸ்தலத்தை குறித்து பயபக்தியாக இருப்பீர்களாக, நான் கர்த்தர்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. ஆண்டவர் ஓய்வு நாளை ஒரு சடங்காச்சாரமாக அறிமுகப்படுத்தவில்லை. பரிசுத்தமான வாழ்விற்கு முன் வருகின்றவர்கள் ஆண்டவரையும் மதிக்க வேண்டும். அடுத்தவரையும் மதிக்க வேண்டும் என்று கற்று கொடுப்பதற்காகவும் ஊக்கப்படுத்துவதற்காகவும் கொடுக்கப்பட்டது. பரிசுத்தராக இருங்கள் என்ற வரிசையில் வரும் நான்காவது குறிப்பு யாத்திராகமம் 32-வது அதிகாரத்தில் வருகிறது. அது செய்த பாவத்தை திரும்பவும் ஒரு முறை செய்து விடாதேயுங்கள் என்பதே ஆகும். முதல் இரண்டு கற்பனைகளையும் அந்த அதிகாரத்தில் அவர்கள் மீறினார்கள் என்பதை நாம் பார்த்தோம். கடுக்கண்கள் கழற்றப்பட்டு, கன்று குட்டி ஒன்று உருவாக்கப்பட்டு பலி செலுத்தினார்கள் என்பதை யாத்திராக புத்தகம் 32-வது அதிகாரத்தில் நாம் பார்த்தோம்.

3. அந்நிய தெய்வங்களை உனக்காக உருவாக்காதே!

தேவன் ஆவியாக இருக்கிறார். அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்கள் என்பது லேவியராகம புத்தகம் 19-வது அதிகாரத்தில் இன்னும் ஒரு முறை கூறப்படுகின்றது. யாத். 20:3-6-வது வசனங்கள் வரை 10 கற்பனைகளில் இடம் பெற்ற இந்தக் குறிப்பு உபா. 5:7-10 வசனங்களில் இன்னும் ஒரு முறை கூறப்படுகின்றது.

விக்கிரகங்களை நாடாமலும், வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்காமலும் இருப்பீர்களாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 19:4)

4. நான் உன் தேவனாகிய கர்த்தர்

திரும்பவும் திரும்பவும் 'நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்' என்று கர்த்தர் சொல்லுவதின் நோக்கம் அவர்கள் வழுகி போகிறவர்களானதாலேயே ஆகும். கண்களுக்கு தெரியாத தெய்வத்தை விட கண்களுக்கு தெரிகிற ஒரு விக்கிரகம் தெய்வமாக அவர்களுக்கு தெரிகிறது. அது தங்கள் கைகளாலேயே செய்ய பட்டது. அது தெய்வமல்ல என்பதை மறந்து விடுகின்றனர். தேவனை கனம் பண்ணுவது என்றால் விக்கிரகங்களை செய்யாமலும், அவற்றை வணங்காமலும் இருப்பதுவே என்று திட்டவட்டமாக இங்கு நாம் காண்கின்றோம்.

5. பலிகளை உற்சாகத்துடன் செலுத்து

நீங்கள் சமாதானபலியை கர்த்தருக்கு செலுத்தினால், அதை மனம் உற்சாகமாய் செலுத்துங்கள். நீங்கள் அதை செலுத்துகிற நாளிலும், மறுநாளிலும் அதை புசிக்க வேண்டும்; மூன்றாம் நாள் மட்டும் மீதியானது அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது. மூன்றாம் நாளில் அதில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால் அருவருப்பாய் இருக்கும்; அது அங்கிகரிக்கப்பட மாட்டாது. அதை புசிக்கிறவன் கர்த்தருக்கு பரிசுத்தமானதை பரிசுத்த குலைச்சலாக்கினபடியால் அவன் தன் அக்கிரமத்தை சுமந்து தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். (லேவி. 19:5-8)

கர்த்தருக்கு செலுத்தப்படும் பலிகள் மன உற்சாகத்துடன் செலுத்தப்பட வேண்டும் என்பது பரிசுத்த வாழ்விற்கு வரும் அழைப்பில் 5-வது குறிப்பாக அமைகின்றது. சமாதானபலி என்பது பொருத்தனை, துதி, உற்சாகம் என்பவைகளை குறிக்கும் ஓர் பலியாகும். மன உற்சாகம் இல்லாமல் சமாதானபலி செலுத்த வேண்டாம் என்று கர்த்தர் இந்த வசனங்களில் கூறுகின்றார். உள்ளத்தில் உற்சாகம் இல்லாமல் உற்சாகபலி பிறப்பது இல்லை. அப்படி செலுத்தும் பொழுது கர்த்தரின் நாமம் பரிசுத்த குலச்சல் அடையும் என்று கூறுகின்றார். தேவனுடன் முழுவதுமாக ஒப்புரவாகாமல் இருதயத்தில் உற்சாகம் பிறப்பது இல்லை. மன உற்சாகம் இல்லாமல் போவதற்கு காரணம் என்ன என்பதை கண்டுபிடித்து அவைகளில் மன்னிப்பு பெற்று பின்னர் ஸ்தோத்திர பலி என்று கூறப்படும் சமாதான பலியை செலுத்துங்கள் என்று அந்த வசனம் கூறுகின்றது. பாவத்தை அறிக்கை செய்யாமல் மன உற்சாகம் வருவது இல்லை. மன உற்சாகம் பெறாமல் ஸ்தோத்திரபலி செலுத்த முற்பட வேண்டாம் என்று இந்த வசனங்கள் கூறுகின்றன. உள்ளம் சுத்திகரிக்கப்படாமல் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் ஏறெடுக்கப்படும் என்றால் அவ்வித துதிகள் அவ்வித சமாதான பலிகள் உதட்டு அளவில் ஏறெடுக்கப்பட்டதாகவே அமையும். பரிசுத்த வாழ்விற்கு உகந்த உள்ளம் பெற்று சமாதான பலி செலுத்தப்பட வேண்டும். ஸ்தோத்திரபலி செலுத்தப்பட வேண்டும் பொருத்தனைகள் ஏறெடுக்கப்பட வேண்டும் என்று அந்த வசனங்கள் கூறுகின்றன.

6. ஏழைக்கு இரங்கு

நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும் போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதை தீர அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களை பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டு விடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 19:9,10)

6-வது வரும் குறிப்பு எளியவர்களை நினைத்து வாழுங்கள் என்பதே ஆகும். 9,10 வசனங்களில் பயிர் அறுவடை நேரத்தில் கீழே விழுந்த கதிர்களை ஏழைகள் வந்து எடுத்து கொள்ள விட்டு விடுங்கள் என்று அந்த வசனம் கூறுகின்றது. உபா. 10:18-வது வசனம் ''அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயம் செய்கிறவரும் அந்நியன்மேல் அன்பு வைத்து அவனுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்கிறவருமாக இருக்கிறார்'' என்று கூறுகிறது.

7. களவு செய்யாதே

நீங்கள் களவு செய்யாமலும், வஞ்சனை பண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள். என் நாமத்தை கொண்டு பொய் ஆணை இடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர். (லேவி. 19:11,12)

7-வது வரும் குறிப்பு களவு செய்யாதேயுங்கள் என்பது ஆகும். 10 கற்பனைகளில் எட்டாவதாக களவு செய்யாதே என்பது இடம் பெறுகின்றது. அந்த 8-வது கற்பனை 7-வது குறிப்பாக ஞாபகப்படுத்தப்படுகின்றது. மறுபடியும் ஒரு முறை உபா. 5:19-வது வசனத்திலும் களவு செய்யாதேயுங்கள் என்பது கூறப்படுகின்றது. உழைத்து உயராமல், உடனே உயர விரும்புகின்றவர்களின் முடிவு களவு என்பது ஆகும். மனிதனின் கண்களுக்கு மறைத்து களவு என்பது இடம் பெற்றாலும் கர்த்தரின் கண்கள் அனைத்தையும் கண்டு கொண்டே இருக்கின்றன. மனிதருக்கு மறைத்து செய்யும் எந்த பாவங்களும் இரகசிய பாவங்கள் என்ற அட்டவணையின் கீழே வருகின்றன.

8. பொய் சொல்லாதே

8-வது வரும் குறிப்பு லேவி. 19:11,12 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டு உள்ளது. ஒருவருக்கு ஒருவர் பொய் சொல்லாமல் இருங்கள் என்பதும், பொய்யான ஆணைகள் செய்யாமல் இருங்கள் என்பதும் ஆகும். கர்த்தர் சத்தியம் உள்ளவர். அவரது பாதையில் செல்ல வாஞ்சிக்கிறவர் பொய் பேச முடியாது. உண்மை பேசுதல் பரிசுத்தமானது. பொய் பேசுதல் பாவமானது. உண்மை கர்த்தருடனும், மனிதருடனும் ஒளிவு மறைவு எதுவும் இல்லாத ஓர் உறவை பெருக செய்யும். பொய் அதனை இழக்க செய்யும். பொய்களை பேசுகிறவன் நாசமடைவான் என்று நீதி. 19:9-வது வசனம் கூறுகின்றது. ''மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையாக இருந்தான்'' என்று எபி. 3:2-வது வசனம் கூறுகின்றது. ஒருவருக்கு ஒருவர் பொய் சொல்லாமல் இருங்கள் என்று லேவியராக புத்தகம் 19-வது அதிகாரம் 11-வது வசனம் கூறுவதை கொலோ. 3:9-வது வசனம் அப்படியே திரும்பவும் ஒருமுறை கூறுகின்றது. ''கடைசியாக சகோதரரே உண்மை உள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கம் உள்ளவைகள் எவைகளோ, நீதி உள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்பு உள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தி உள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தியுங்கள்.

அவைகளையே செய்யுங்கள்.'' அவைகள் நித்திய மகிழ்ச்சிக்கு நேராக நடத்தும் படிக்கட்டுகள்.

9. பிறனை ஒடுக்காதே

பிறனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருப்பாயா; கூலிக்காரனுடைய கூலி விடியற்காலம் மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது. (லேவி. 19:13)

ஒடுக்குதல், கொள்ளையிடுதல் கூலியை கொடுக்காமல் மடக்கி வைத்தல் ஆகிய மூன்றும் எகிப்திலே அவர்கள் இருந்த நாட்களில் பார்வோன் என்ற அரசன் அவர்களுக்கு எதிராக செய்த குற்றம் ஆகும். அவ்வித குற்றங்களை நீங்கள் பிறருக்கு செய்யாதேயுங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். பார்வோன் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தீர்களோ அதை இனிமேல் மற்றவர்களுக்கு செய்யுங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். உங்களிடம் பார்வோன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தீர்களோ அப்படியே நீங்கள் இனிமேல் மற்றவர்களிடம் நடந்து கொள்ளுங்கள் என்பதே அந்த வசனம் கூறுவது ஆகும். ''எஜமான்களே அப்படியே நீங்களும் வேலைக்காரருக்கு செய்ய வேண்டியவைகளை செய்து அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறார் என்றும், அவரிடத்தில் பாரபட்சம் இல்லை என்றும் அறிந்து கடும் சொல்லை விட்டு விடுங்கள்'' என்று எபே. 6:9-ல் பார்க்கின்றோம். வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதை செய்யுங்கள் என்று அந்த வசனம் கூறுகின்றது.

10. ஊனமுற்றோருக்கு இடுக்கண் செய்யாதே

செவிடனை நிந்தியாமலும், குருடனுக்கு முன்னே தடுக்கலை வையாமலும், உன் தேவனுக்கு பயந்திருப்பாயாக; நான் கர்த்தர். (லேவி. 19:14)

உடலில் அங்கவீனம் உள்ளவர்களை பரியாசம் செய்யாதேயுங்கள் என்பது பரிசுத்த குறிப்பில் 10-வது குறிப்பாக வருகின்றது. தேவனுக்கு பயந்து இருப்பவர்கள் அனைவரையும் மதித்து நடப்பார்கள் என்பது அந்த வசனத்தின் மூலம் அறியப்படுகின்றது. மனிதர் அனைவரும் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். எனவே அனைத்து மனிதர்களுக்கும் சம மதிப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பது அந்த வசனத்தில் இருந்து அறியப்படுகின்றது. உடலில் எவ்வித குறைவும் உள்ளவர்களை நிந்திப்பதும், பகடி செய்வதும், ஏமாற்றுவதும் பரிசுத்தம் என்பதற்கு முற்றிலும் புறம்பானது. ''குருடனை வழிதப்ப செய்தவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்கள் எல்லாரும் அதற்கு ஆமென் என்று சொல்லக்கடவர்கள்,'' என்று உபாகம புத்தகம் 27:18-வது வசனம் எச்சரிக்கின்றது. கர்த்தராகிய இயேசு அங்கவீனம் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் அன்பு செலுத்தினார். அவர்களுக்கு கொடுக்கும் அன்பு, மதிப்பு, மரியாதை அனைத்தும் பரிசுத்தராகிய தேவனுக்கு கொடுக்கும் அன்பு மதிப்பு மரியாதை என்பதே ஆகும். இந்த சிறியரில் ஒருவனுக்கு என்ன செய்கின்றீர்களோ அதை எனக்கே செய்கின்றீர்கள் என்று கர்த்தர் தமது வருகையிலே கூற போகின்றார் என்பதை புதிய ஏற்பாட்டு நூல் கூறுகின்றது. பரிசுத்தமாக வாழும் ஜனங்கள் அங்கவீனம் கொண்டவர்களுக்கு பரிபூரண அன்பு செலுத்த வேண்டும் என்பதே பரிசுத்தராகிய தேவனின் விருப்பமாக இருக்கின்றது என்பது 10-வது குறிப்பில் தெரிய வருகின்றது.

11. நீதியை காத்து கொள்; முகதாட்சணியம் செய்யாதே

நியாய விசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முக தாட்சணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாக பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக. (லேவி. 19:15)

11-வது குறிப்பு நியாய விசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள் என்பது ஆகும். நியாயம் என்பது மறையும் இடங்களில் இடம் பெறுவது அநியாயம் என்பதே ஆகும். ''அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான்'' என்று நீதி. 22:8-ல் பார்க்கிறோம். அதிக மதிப்பு கொடுத்து கேட்க வேண்டும் என்றும், அதிக ஞானத்துடன் பேச வேண்டும் என்றும், அதிக பொறுமையுடன் சீர்தூக்கி பார்க்க வேண்டும் என்றும் பின்னர் எவ்வித பாரபட்சமும் இல்லாமல் தீர்ப்பு கூற வேண்டும் என்று சாக்கரட்டீஸ் கூறுகிறார்.

12. கோள் சொல்லாதே

உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள் சொல்லி திரியாயாக; பிறனுடைய இரத்தபழிக்கு உட்பட வேண்டாம்; நான் கர்த்தர். (லேவி. 19:16)

12-வது வரும் குறிப்பு ''உன் ஜனங்களுக்குள்ளே அங்கும் இங்கும் கோள் சொல்லி திரிய வேண்டாம்'' என்பது ஆகும். நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்று கூறும் தேவன் பரிசுத்தம் என்பதற்கு பேசும் வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை கூறுகின்றார். பரிசுத்தம் என்பதற்கும் பேசும் வார்த்தைக்கும் உள்ள நெருங்கிய தொடர்புகள் இந்த வசனத்தில் காணப்படுகின்றன. வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானங்களும் கர்த்தர் அங்கீகரிக்கத்தக்கதாக அமைய வேண்டும் என்பதை நாம் அறிகின்றோம். யார் கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான் என்ற கேள்விக்கு 15-வது சங்கீதம் 3-வது வசனம் ஒரு விடை கொடுக்கின்றது. தன் நாவினால் புறங்கூறாமல் இருக்கிறவன், தன் தோழனுக்கு தீங்கு செய்யாமல் இருக்கின்றவன், தன் அயலான்மேல் சொல்லப்படும் தீங்கான சம்பாஷனைகளில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருக்கிறவன் கர்த்தரின் பார்வையில் சிறந்தவன் என்று அந்த வசனம் கூறுகின்றது.

கோள் சொல்லுதல் ஓர் கொடிய குற்றம் என்றே வேதம் கூறுகின்றது. சமாதானமாக இருக்கும் ஒருவர் நடுவில் கோள் சொல்லுகிறவன் தோன்றி விட்டால் வீணான சந்தேகங்களும் தோன்றி விடும். ஒருவரை ஒருவர் மனதார நேசிக்கும் இருவர் நடுவில் கோள் சொல்லும் நாவு எழும்பி விட்டால் தீ பிறந்து விடும். அதிகாரிகளை பிரியப்படுத்த விரும்புகிறவன், குறுக்கு வழியில் சிறக்க விரும்புகிறவன். வேலை செய்யாமல் வாழ விரும்புகிறவன் கோள்காரன் என்ற தொழிலை துவங்குவான் என்று வேதம் கூறுகின்றது. ''கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுபோல் இருக்கும். ஆனாலும் அவைகள் உள்ளத்தை தைக்கும்'' என்று நீதி. 18:8-வது வசனம் கூறுகின்றது. ''இப்படி இருக்க கர்த்தர் தயை உள்ளவர் என்பதை நீங்கள் ருசித்து பார்த்தது உண்டானால், சகல துர்க்குணத்தையும் சகலவித கபடத்தையும் வஞ்சகங்களையும் பொறாமைகளையும் சகலவித புறம் கூறதல்களையும் ஒழித்து விடுங்கள்'' என்று 1பேதுரு 2:1,2 ஆகிய வசனங்கள் உரைக்கின்றன.

13. கள்ளமில்லாதவர்களை கொலை செய்யாதே

பரிசுத்தம் என்ற பாதையில் வரும் 13-வது குறிப்பு கள்ளம் இல்லாத மனிதர்களை கொன்று போடாதேயுங்கள் என்பது ஆகும். கள்ளம் இல்லாத மனிதர்களை சதி செய்து கொல்லுவதற்கு விலகி வாழுங்கள் என்பதே ஆகும். லேவி. 19:16-வது வசனத்தின் பின் பகுதியில் இந்தக் குறிப்பு காணப்படுகின்றது. ''இரத்த பழிக்கு உட்பட வேண்டாம்'' என்று கூறப்பட்டுள்ளது. குற்றம் இல்லாத இரத்தத்தை பழைய ஏற்பாட்டு நூலில் சிந்திய பார்வோனும் புதிய ஏற்பாட்டு நூலில் சிந்திய ஏரோதும் இரத்த பழிக்கு உட்பட்டவர்கள். குற்றம் இல்லாத இரத்தத்தை காட்டி கொடுத்த யூதாஸ்காரியோத் இரத்த பழிக்கு உட்பட்டவன். பிறனை, பிறனுக்கு உரியவைகளை அபகரிக்க தனது அதிகாரம், தந்திரம், பலாத்காரம், முன் திட்டம் அனைத்தும் செய்து நிரபராதியின் இரத்தம் சிந்துவது இரத்த பழி என்பது ஆகும். உரியா என்ற மனிதனின் மனைவியை தனது மனைவியாக மாற்ற தாவீது என்ற அரசன் தனது அதிகாரத்தை துர் பிரயோகம் செய்தான். பெரும் தந்திரம் செய்தான். இதயத்தில் திட்டம் வகுத்தான். இனிதாக பேசினான். அவனது இதயத்தில் உள் அட்டவணை உரியா சாக வேண்டும் என்பதே ஆகும். அது தாவீதின் இரத்த பழியாக மாறியது. எனவே சங். 51:14-வது வசனத்தில் தேவனே, என்னை இரட்சிக்கும் தேவனை இரத்த பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடும் என்று வருந்தி கேட்கின்றான்.

14. உன் சகோதரனை பகைக்காதே

உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமாரதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ள வேண்டும். (லேவி. 19:17)

''நீங்களும் பரிசுத்தராக இருங்கள்'' என்பதை வற்புறுத்தும் இந்த அதிகாரத்தில் 14-வது வரும் ''உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகைக்காதே'' என்பதே பரிசுத்தம் என்ற படிக்கட்டில் 14-வது தெரியும் படிக்கட்டு ஆகும். பகை என்பதை பற்றி நீதிமொழிகளின் புத்தகம் எடுத்து கூறுவதை பாருங்கள். ''பகைஞன் தன் உள்ளத்தில் கபடத்தை மறைத்து, தன் உதடுகளினால் சூது பேசுகிறான். அவன் இதம் பேசினாலும் அவனை நம்பாதே; அவன் இருதயத்தில் ஏழு அருவருப்புகள் உண்டு. பகையை வஞ்சகமாய் மறைத்து வைக்கிறவனெவனோ, அவனுடைய பொல்லாங்கு மகா சபையிலே வெளிப்படுத்தப்படும். படு குழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான்; கல்லை புரட்டுகிறவன் மேல் அந்த கல் திரும்ப விழும். கள்ள நாவு தன்னால் கிலேச பட்டவர்களை பகைக்கும்; இச்சகம் பேசும் வாய் அழிவை உண்டு பண்ணும்'' என்று நீதி. 26:24-28-ல் பார்க்கிறோம்.

''மறைவான சிநேகத்தை பார்க்கிலும் வெளிப்படையான கடிந்து கொள்ளுதல் நல்லது'' என்று நீதி 27:5-ல் பார்க்கிறோம். பகை என்பது இரண்டு வகைப்படும். முதலாவது மனிதன் தேவனை பகைப்பது என்பதாகும். தேவனுக்கு விரோதமான பகை கொள்வது என்பதாகும். ரோமர் 8:7-வது வசனத்திலும் யாக். 4:4-வது வசனத்திலும் இதன் விபரம் கொடுக்கப்பட்டு உள்ளது. வாழ்வில் வரும் வருத்தங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள் இழப்புகள் அனைத்திற்கும் காரணம் கடவுளே என்று கூறி கடவுளை பகைப்பதும் கசப்பதும் தேவனுக்கு விரோதமான பகை என்பது ஆகும். மற்றொரு பகை மனிதன் மனிதனை பகைப்பது ஆகும். ஏசா தன் சகோதரனாகிய யாக்கோபை பகைத்தான் என்று ஆதி. 27:41-வது வசனம் கூறுகின்றது.

யோசேப்பின் சகோதரர்கள் அவனை பகைத்தார்கள் என்பதை ஆதியாகம புத்தகத்தில் நாம் பார்த்தோம். பகைக்கு காரணம் பொறாமை என்பது ஆகும். தன்னை விட திறம்பட செய்யும், திறம்பட விளங்கும் மற்றவர் மீது பொறாமையும், பகையும் பெருகுகின்றது. பகை பார்ப்பதற்கு தெரிவதில்லை. ஆனால் பகை மறைந்து இருக்கும் ஓர் விஷம் ஆகும். பிறரை பகைக்கிறவனுக்கு எதிர்காலம் இல்லை என்பதே வேத புத்தகத்தின் தீர்ப்பு ஆகும். ''ஒளியிலே நிலை கொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. தன் சகேதாரனை பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களை குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான். பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்க பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்'' என்று 1 யோ. 2:9-11-ல் பார்க்கிறோம்.

தொடர்ந்து 1 யோ. 4:20-வது வசனத்தையும் பாருங்கள். ''தேவனிடத்தின் அன்பு கூறுகின்றேன் என்று ஒருவன் சொல்லியும் தன் சதோரனை பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமல் இருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்.''

பரிசுத்தமான வாழ்வு, பரிசுத்தமான குடும்பம் என்பதற்கு பாதை காட்டும் அதிகாரமாக 19-வது அதிகாரம் அமைந்து உள்ளது. இதுவரை அந்த பாதையில் வெற்றியுடன் நடக்க உதவக்கூடிய 14 குறிப்புகளை நாம் பார்த்தோம். லேவி. 19:18-வது வசனத்தில் மேலும் மூன்று குறிப்புகள் கொடுக்கப்பட்டு உள்ளது.

15. பழிக்கு பழி வாங்காதே

பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனம் புத்திரர் மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்பு கூருவது போல் பிறனிலும் அன்பு கூருவாயாக; நான் கர்த்தர். (லேவி. 19:18)

இந்த வசனத்தில் காணப்படும் மூன்று குறிப்புகளில் முதலாவது குறிப்பாக பழிக்குப்பழி வாங்காதே என்ற இந்த குறிப்பு 15-வது குறிப்பாக மாறுகின்றது. மனித உணர்வுகள் நன்மை செய்கின்றவர்களுக்கு நன்மை செய்யும் உணர்வுகள், தீமை செய்கின்றவர்களுக்கு தீமையே செய்யும் உணர்வுகள் ஆகும். நன்மை செய்கின்றவர்களுக்கு நன்மை செய்ய உள்ளம் உடனே விரும்புவது போல தீமை செய்கின்றவருக்கும் நன்மையே செய்யுங்கள் என்பதே பழிக்குப்பழி வாங்காதே என்ற 15-வது குறிப்பு ஆகும். தீமை செய்கின்றவருக்கு நன்மை செய்யும் பொழுது தீமை செய்தவர் பெற வேண்டிய தீர்ப்பு கர்த்தரிடம் விடப்படுகின்றது. ''அவன் எனக்கு செய்த பிரகாரம் நானும் அவனுக்கு செய்வேன். அவன் செய்த செய்கைக்கு தக்கதாக நானும் அவனுக்கு சரிக்கட்டுவேன் என்று நீ சொல்லாதே'' என்று நீதி. 24:29-வது வசனம் கூறுகின்றது. ''பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதில் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடம் கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு போஜனம் கொடு, அவன் தாகமாக இருந்தால், அவனுக்கு பானம் கொடு; நீ இப்படி செய்வதினால் அக்கினி தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு'' என்று ரோமர் 12:19-21-ல் பார்க்கிறோம்.

''பழிவாங்குவதும், பதில் அளிப்பதும் எனக்கு உரியது. ஏற்ற காலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்; அவர்களுடைய ஆபத்து நாள் சமீபமாக இருக்கின்றது; அவர்களுக்கு நேரிடும் காரியங்கள் தீவிரித்து வரும்'' என்று உபா. 32:35-வது வசனம் கூறுகின்றது.

16. பொறாமை கொள்ளாதே

லேவி. 19:18-வது வசனத்தின் இரண்டாவது வரியில் வரும் வசனம், 16-வது குறிப்பை கொடுக்கும் வசனம் ஆகும். 'பொறாமை படாதே' என்பதே பரிசுத்தமான பாதையில் செல்லுகின்றவர்களுக்கு லேவியராகமம் 19-வது அதிகாரம் கொடுக்கும் 16-வது குறிப்பு ஆகும். ராகேல் தனது சொந்த சகோதரியின் மீது பொறாமை பட்டாள். சொந்த சகோதரர்கள் யோசேப்பின் மீது பொறாமை கொண்டார்கள். யூத சமயத்து தலைவர்கள் இயேசுவின் மீது பொறாமை கொண்டார்கள். பொறாமை படுகின்றவர்களே பொறாமையினால் பாதிக்க படுவார்கள் என்று நீதிமொழிகள் கூறுகின்றது. பொறாமையோ எலும்பு உருக்கி என்று நீதி. 14:30-வது வசனம் கூறுகின்றது. தங்களைவிட பிறர், பிறரது குடும்பம் வளர்ச்சி பெறுவதை தாங்க முடியாமல் வரும் உணர்ச்சியே பொறாமை என்பது ஆகும். பொறாமை என்பது ஓர் இரகசிய பாவம் ஆகும். பொறாமைக்கு நிறம் இல்லை, உருவம் இல்லை, கண்களுக்கு பொறாமை தெரிவதும் இல்லை.

பரிசுத்தமான கர்த்தர் பொறாமை என்ற அசுத்தமான தன்மை நம்மை விட்டு அகல வேண்டும் என்று கூறுகின்றார். பொறாமை இருக்கும் இடங்களில் ஒருமனம் என்பது வருவது இல்லை. ஒன்றும் இல்லாதவைகளும் பொறாமை ஆளும் இடங்களில் பெரிது படுத்தப்படும். சிறிய குற்றங்களும் பொறாமை தங்கும் இடங்களில் பெரியதாக மாற்றப்படும். தேவனுடைய ஊழியக்காரனான மோசே மீது இரண்டு தனி நபர்கள் பொறாமை கொண்டார்கள். அவர்களின் குறிப்பு சங். 106:16,17-ல் காணப்படுகின்றது. ''பாளயத்தில் அவர்கள் மோசேயின் மேலும், கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோனின் மேலும் பொறாமை கொண்டார்கள். பூமி பிளந்து தாத்தானை விழுங்கி, அபிராமின் கூட்டத்தை மூடிப் போட்டது'' என்று சங். 106:16,17-ல் பார்க்கிறோம்.

பொறாமைக்கு வயது இல்லை. எந்த வயதினரும் இந்த பாவத்திற்கு உட்படக்கூடும் பொறாமைக்கு தூரம் இல்லை. மிக அதிக தூரத்தில் இருப்பவர் மீதும் பொறாமை கொள்ள முடியும். பொறாமைக்கு கல்வி புகட்ட முடியாது. உயர்ந்த கல்வி கற்றவர்கூட பொறாமைப்பட முடியும். பிரதான ஆசாரியனும் சதுசேய சமயத்தார் அனைவரும் எழும்பி பொறாமையினால் நிறைந்து அப்போஸ்தலர்களை பிடித்தார்கள் என்று அப். 5:17,18 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. பொறாமை என்பதற்கு முன் வருவது கோபம், மூர்க்கம் என்ற குணங்கள் என்பதை கொலோசேயர் நிரூபம் 3-வது அதிகாரம் 8-வது வசனம் எடுத்து கூறுகின்றது. பொறாமை என்பது அந்த தவறு செய்கின்றவனை நிம்மதி அற்றவனாக மாற்றிவிடும்.

17. உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடம் அன்பு செலுத்து

பரிசுத்தம் என்பதின் 17-வது வரும் குறிப்பு மிக முக்கியமான குறிப்பு லேவி. 19:18-வது வசனத்தின் பின்னான பாகத்தில் வருவதாகும். ''உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக'' என்பதே அந்த அதிமுக்கிய அறிவிப்பாகும். மத். 19:19-வது வசனத்திலும் 22:39-வது வசனத்திலும், மாற்கு 12:31-வது வசனத்திலும், லூக்கா. 10:27-வது வசனத்திலும் இந்த உன்னதமான

அறிவிப்பு உரக்க கூறப்படுகின்றது. உன்னில் நீ அன்பு கூருவது போல பிறனிலும் அன்பு கூருவாயாக என்ற சத்தியத்தை மறுபடியும் மறுபடியும் அன்பின் இரட்சகராகிய கிறிஸ்து கூறினார்.

ரோமர் 13:9-வது வசனத்திலும், கலா. 5:14-வது வசனத்திலும், பரிசுத்த பவுல் மறுமுறையும் இதனை குறிப்பிட்டு கூறுகின்றார். யாக். 2:8-வது வசனம், நீ உன்னிடத்தில் அன்பு கூருவது போல பிறனிலும் அன்பு கூருவாயாக என்று லேவி. 19:18-வது வசனம் கூறும் கட்டளையை ஒரு புதிய பெயர் கொடுத்து கூறுகின்றார். அது நியாயப்பிரமாணம் அல்ல. ராஜரீக பிரமாணம் என்று பரிசுத்த யாக்கோபு கூறுகின்றார். ''உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்ற வேத வாக்கியம் சொல்லுகின்ற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்'' என்று யாக். 2:8-ல் பார்க்கிறோம். மத். 22:36-40 வசனங்களையும் ரோமர் 13:8-10 வசனங்களையும் ஒருங்கே கொண்ட ஒரு வசனமாக யாக். 2:8-வது வசனம் திகழ்கின்றது. மத். 22:36-40 வசனங்கள் ''போதகரே நியாயப்பிரமாணத்திலே எந்த கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாக இருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்.''

''ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்த கற்பனைகளும், வேறே எந்த கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது. அன்பானது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கிறது'' என்று ரோ. 13:8-10-ல் பார்க்கிறோம்.

அனைத்தும் இருந்தும் அன்பு என்ற ஒன்று இல்லை என்றால் அந்த இடம் ஒன்றுமே இல்லாத இடமாக மாறி விடுகின்றது. எதுவுமே இல்லாமல் போனாலும், அன்பு மட்டும் இருக்கும் என்றால் எல்லாம் பெற்ற இடமாக அந்த இடம் மாறி விடுகின்றது. 10 கற்பனைகளில் முதல் நான்கு கற்பனைகள் மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் 5 முதல் 10 கற்பனைகள் மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு எப்படி இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றன. அன்பு இதயத்தை நிரப்பும் பொழுது உறவுகள் முறிக்கப்படுவது இல்லை. உறவுகள் மீறப்படுவதும் இல்லை.

லேவி. 19:18-வது வசனத்தில் அன்பு என்ற வார்த்தையை குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெய சொல் 250 தடவை பழைய ஏற்பாட்டு நூலில் வருகின்றது. அந்த சொல்லின் பொருள் வலிய சுரந்து வரும் அன்பு என்பதாகும். கைமாறு கருதாமல் கை கொடுக்கும் அன்பு என்பதாகும். எவ்வித கெட்ட எண்ணமும் இல்லாமல் தூய்மை உள்ளம்

கொண்ட அன்பு என்பது ஆகும். எவ்வித சந்தேகமும், எவ்வித கேள்வி குறியும் எழுப்பாத அன்பு என்பது ஆகும். சிநேகிதன் எதிரி என்று யோசிக்க தெரியாத ஒரு அன்பு ஆகும். என்னை சேர்ந்தவன் என்னை சேராதவன் என்பதை பொருட்படுத்தாத அன்பு ஆகும். அந்த ஒப்பற்ற எபிரெய சொல் 'ஆகாப்' என்று கூறப்படும் எபிரெய சொல் ஆகும். அந்த உயர்ந்த ராஜரீக அன்பு லேவி. 19:18-வது வசனத்தில் பரிசுத்தம் என்ற படிக்கட்டுகளில் ஏறிவரும் பொழுது 17-வது படிக்கட்டாக அமைகின்றது.

பழைய ஏற்பாட்டு நூலில் அன்பு என்பதை குறிக்கும் மற்றொரு எபிரெய சொல் 'கெசட்' என்பதாகும். 'கெசட்' என்ற எபிரெய சொல்லின் சரியான பொருள் ''எதிரி என்று தெரிந்தும் பரிவுடன் இரங்கி அன்பு செலுத்துதல்'' என்பது ஆகும். எனக்கும் என் குடும்பத்திற்கும் என் தொழிலுக்கும் இவர் தீங்கு செய்தவர், கேடு விளைவித்தவர், எதிராக நின்றவர் என்று அனைத்தும் அறிந்தாலும் அவைகள் எதையும் பொருட்படுத்தாமல், மனதில் எடுக்காமல், பழி வாங்க வேண்டும் என்ற உணர்ச்சி எழும்பாமல் இரங்கும் அன்பு எபிரெய மொழியில் 'கெசட்' என்று அழைக்கப்படுகின்றது. ஜனங்கள் பரிசுத்தம் உள்ளவர்கள் என்பதற்கு ஒரு நடுவர் போன்று அன்பு அமைகின்றது. 'உன்னை போல் பிறனை நேசி, உன்னில் அன்பு கூருவது போல் பிறனில் அன்பு கூரு' என்பது உன்னை நீ எப்படி நடத்துகின்றாயோ அப்படியே அயலாரையும் நடத்து என்பதாகும். லேவி. 19:18-வது வசனம் கூறும் அன்பு என்பது காணப்படாத உள்ளம் பெருக்கி, ஜோடிக்கப்பட்ட உள்ளமாக இருக்குமேயன்றி நிரப்பப்பட்ட உள்ளமாக இருப்பது இல்லை. அது வெறுமையான உள்ளமாக தெரியும். அன்பு என்பது காணப்படாத உள்ளங்கள் வழிந்தோடும் உள்ளங்களாக இருப்பது இல்லை. ஆழமாக வெட்டப்பட்ட கிணறு போல் இருக்கும். ஆனால் ஊற்று என்பது சுரப்பது இல்லை. எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாத உறவு. கடும் பிரயாசம் பட்டும் விளைவு எதும் கிட்டாத உழைப்பு. புதிய ஏற்பாட்டு நூலில் சவுல் என்ற ஒரு மனிதன் உண்டு. அவன் மும்முரமாக உழைத்தான். முழுமூச்சுடன் உழைத்தான். யூத சமயத்தின் இணையில்லாத தலைவர்களில் அவனும் ஒருவன். ஆனால் அவனது உழைப்பு கர்த்தரின் பார்வையில் முள்ளில் உதைப்பது போன்று தெரிந்தது. அவனையே அவன் வதைப்பதாக தெரிந்தது. உள்ளங்களை கொள்ளை கொள்ளுவதற்கு பதிலாக உயிர்களை கொலை செய்யும் உழைப்பாகவே அவன் உழைப்பு இருந்தது. காரணம் பரிசுத்த வேதாகமம் கூறும் அன்பு அவனிடம் காணப்படவில்லை. ஒரு நாள் அந்த அன்பை அவன் முக முகமாக கண்டான். இயேசுவின் முகத்தையே கண்டான். முற்றிலும் மனம் மாறினான். அந்த மாற்றத்திற்கு முன்னதாக அவன் செய்தது வைராக்கியம். அந்த மாற்றத்திற்கு பின்னதாக அவன் செய்தது ஊழியம்.

18. எதிலும் கலப்படம் செய்யாதே

என் கட்டளைகளை கைக்கொள்வீர்களாக; உன் மிருக ஜீவன்களை வேறு ஜாதியோடே பொலிய விடாயாக; உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளை கலந்து விதையாயாக; சணல் நூலும் கம்பளி நூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக. (லேவி. 19:19)

லேவியராகம புத்தகம் ஒரு கருகலான புத்தகமாக காணப்பட்டாலும், கருத்துக்களை தெரிவிக்கும் புத்தகமாக காணப்படுகின்றது. வாசிக்க விளங்காத ஒரு புத்தகமாக காணப்பட்டாலும் ஆத்துமாவை போஷிக்கும் புத்தகமாக காணப்படுகின்றது. பரிசுத்தம் என்பது பளிச்சிட்டு காட்டும் புத்தகம் அது. அன்பு என்ற நாதம் பளிச்சிட்டு ஒலிக்கும் புத்தகம்

அது. லேவியராகம புத்தகம் இரண்டு வரவேற்பு வளையங்களை அமைக்கின்றது. ஒன்று லேவி. 11:44-வது வசனம் தரும் வரவேற்பு வளையம் ஆகும். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று அந்த வரவேற்பு வளையத்தில் எழுதப்பட்டு உள்ளது. மற்றொன்று லேவி. 19:18-வது வசனம் தரும் வரவேற்பு வளையம் ஆகும். அதில் உன்னில் அன்பு கூறுவது போல பிறனிலும் அன்பு கூறு என்று எழுதப்பட்டு உள்ளது. அன்பு இல்லாதவன் தேவனை அறியப்போவது இல்லை. பரிசுத்தம் இல்லாதவன் கர்த்தரை தரிசிக்க போவதும் இல்லை. எனவே லேவியராகம புத்தகம் 19-வது அதிகாரம் மிக முக்கியமானதாக தெரிகின்றது. பரிசுத்தம் என்ற பாதையின் படிக்கட்டுகளில் 17-வது படிக்கட்டு அன்பு என்று நாம் கண்டோம். அதனை தொடர்ந்து வரும் 18-வது குறிப்பு லேவி. 19:19-வது வசனத்தில் வருகின்றது. கலப்படம் செய்ய வேண்டாம் என்பதே அந்த குறிப்பு ஆகும். வித்தியாசமான இரண்டு மிருகங்கள் சேர வேண்டாம். வித்தியாசமான இரண்டு விதைகள் ஒரே நிலத்தில் விதைக்க வேண்டாம். வித்தியாசமான இரண்டு நூல்களை பாகில் ஏற்ற வேண்டாம் என்பது அந்த குறிப்பாக தெரிகின்றது. பரிசுத்தம் என்பது கலப்படம் அற்றது. ஒளிவு மறைவு இல்லாத அன்பில் உள் ஒன்று புறம் ஒன்று இருப்பது இல்லை. கலப்படம் முரண்பாடு என்பவை பரிசுத்தம் என்பதில் இடம் பெறுவதும் இல்லை என்பதை 18-வது குறிப்பு காட்டுகின்றது. அன்புக்கு மாறுவேடம் அணிய தெரிவது இல்லை என்பதே லேவி. 19:19-வது வசனம் கூறுவது ஆகும்.

19. வரம்பு மீறியவனுக்கும் மன்னிப்பு

ஒருவனுக்கு அடிமையானவள் ஒரு புருஷனுக்கு நியமிக்கப்பட்டவளாய் இருந்து, முற்றிலும் மீட்க படாமலும் தன்னிச்சையாய் விடப்படாமலும் இருக்க, அவளோடே ஒருவன் சம்யோகமாய் சயனம் பண்ணினால், அவர்கள் கொலை செய்யப்படாமல், அடிக்கப்பட வேண்டும்; அவள் சுயாதீனமுள்ளவள் அல்ல. அவன் தன் குற்றநிவாரண பலியாய் ஆசரிப்பு கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் ஒரு ஆட்டுக்கடாவை கொண்டு வரக்கடவன். அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தினிமித்தம் அவனுக்காக கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவன் செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும். (லேவி. 19:20-22)

தொடர்ந்து 20-22 வசனங்களில் 19-வது குறிப்பு தெரிகின்றது. ஏழாவது கற்பனையான விபசாரம் செய்யாதே என்பது இந்த வசனங்களில் மறுபடியும் ஒரு முறை ஞாபகப்படுத்தப்படுகின்றது. திருமணமான பெண் பிறிதொருவனிடம் தவறான உறவு கொள்ளும் பொழுது இருவரும் கல் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்று உபா. 22:22-24 வசனங்கள் கூறுகின்றன. ஆனால் லேவி. 19:20-22 வசனங்களில் பெண் கொலை செய்யப்பட வேண்டாம். சாட்டையினால் அடிக்கப்பட வேண்டும் என்று கூறுப்பட்டு உள்ளது. ஆனால் புதிய ஏற்பாட்டின் நாட்களில் அப்படி எதுவும் செய்ய வேண்டாம் என்று இயேசு கூறினார். கொல்லவும் வேண்டாம் சாட்டையினால் அடிக்கவும் வேண்டாம் அவர்கள் மனந்திரும்பி வாழட்டும் என்றே இயேசு கூறினார். அன்பு திருத்துவது நிரந்தரமானது. அடிகள் திருத்துவது தற்காலிகமானது.

20. முதிர்ச்சி அடையாத மரத்தின் கனிகளை அனுபவிக்காதே

நீங்கள் அந்த தேசத்தில் வந்து, புசிக்கத்தக்க கனிகளை தருகிற பலவித மரங்களை நாட்டின பின்பு, அவைகளின் கனிகளை விருத்த சேதனமில்லாதவைகள் என்று எண்ணுவீர்களாக; மூன்று வருஷம் அது புசிக்கப்படாமல், விருத்த சேதனமில்லாததாய் உங்களுக்கு எண்ணப்பட வேண்டும். பின்பு நாலாம் வருஷத்திலே அவைகளின் கனிகளெல்லாம் கர்த்தருக்கு துதி செலுத்துகிறதற்கு ஏற்ற பரிசுத்தமாயிருக்கும். ஐந்தாம் வருஷத்திலே அவைகளின் கனிகளை புசிக்கலாம்; இப்படி அவைகளின் பலன் உங்களுக்கு பெருகும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 19:23-25)

பரிசுத்தம் என்ற பாதைக்கு வழி நடத்த வந்து கொண்டு இருக்கும் 20-வது குறிப்பு லேவி. 19:23-25 வசனங்களில் காணப்படுகின்றது. மரத்தை வளரவிட்டு பின்னர் அனுபவிக்க வேண்டும் என்று அந்த குறிப்பு கூறுகின்றது. மரம் ஏற்ற முதிர்ச்சி அடையாமல் செடியாக இருக்கும் பொழுது கிடைக்கும் கனிகளை புசிக்க வேண்டாம் என்று இந்த வசனங்கள் கூறுகின்றன. செடிகள் கொடுப்பது விருத்தசேதனம் இல்லாத கனிகள் என்று இந்த வசனங்களில் ஒரு உதாரணமாக உபயோகப்படுத்தப்பட்டு உள்ளது. அதன் சரியான பொருள் செடிகள் முறைப்படி வளர, பெலன் பெற்று வளர, கனி கொடுக்கும் விருட்சமாக வளர கால அவகாசம் கொடுத்து விடுங்கள் என்பதே ஆகும். எந்த செடியையும் அப்படியே வளர விடாதேயுங்கள் என்பது ஆகும். பக்குவம் படுத்தப்படாமல் வளரும் செடிகளிலும், மரங்களிலும் இலைகளும் கிளைகளும் இருக்கலாம். ஆனால் அவைகள் முதிர்ச்சி அடையாதபடியால் நல்ல கனிகளை தரும் சக்தி இருக்காது என்பதே ஆகும். பழம் தரும் விருட்சங்களில் இலையும், கிளையும் அடர்த்தியாக இருக்க காரணம் அதன் கனிகளை பத்திரமாக மறைத்து காத்து கொள்வதற்கே ஆகும். எனவே மரம் ஏற்ற கனி தர மூன்று வருட அவகாசம் கொடுங்கள் என்று கூறப்படுகின்றது. மூன்று வருடம் பக்குவம் படுத்தப்படும் வருடமாக அதாவது விருத்தசேதனம் செய்யப்படும் வருடமாக, அதாவது தேவை இல்லாதவைகள் கிள்ளி எறியப்படும் வருடமாக இருக்கட்டும் என்று வசனம் கூறுகின்றது. அதன் பின்னரும் மரம் எதிர்பார்க்கும் கனி தரவில்லை என்றால் கிள்ளி எடுக்க வேண்டாம் தோண்டியே எடுத்து விடுங்கள் என்று கூறப்பட்டு உள்ளது. ''அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்; ஒருவன் தன் திராட்சை தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியை தேடினபோது ஒன்றும் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்தி மரத்திலே கனியை தேடி வருகிறேன்; ஒன்றையும் காணவில்லை, இதை வெட்டி போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்,'' என்று லூக்.13:6,7-ல் பார்க்கிறோம்.

மரம் என்பது கனி கொடுப்பதற்காகவே வைக்கப்படுகின்றது. கனி இல்லாத மரங்கள் இருப்பதினால் கிடைப்பது என்ன, எடுப்பதினால் இழப்பது என்ன? இலைகளும் கிளைகளும் அடர்த்தியாக இருந்தால் அதன் இலைகளுக்கு பின்னதாக ஏராளமான கனி மறைந்து இருக்கின்றன என்பது தெரியவரும். ''மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்கு பசியுண்டாயிற்று. அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தை தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்ற பார்க்க வந்தார். அத்திப்பழ காலமாய் இராதபடியால், அவர் அதினிடத்தில் வந்த போது அதில்

இலைகளேயல்லாமல் வேறொன்றையும் காணவில்லை,'' என்று மாற்கு 11:12,13-ல் பார்க்கிறோம்.

அத்தி பழம் பழுக்கும் காலம் இல்லாமல் இருந்தால் அவ்விதமான காலத்தில் அத்தி மரங்களில் இலையும் காணப்படுவது இல்லை. கிளையும் காணப்படுவது இல்லை. இலையும் கிளையும் காணப்படும் என்றால் கனி இருந்தே தீர வேண்டும். தூரத்தில் இருந்து பார்ப்பதற்கு கனி தரும் மரம் போல் இருப்பது அருகில் வந்து பார்த்த உடனே கனி தவிர அத்தனையும் இருப்பதை இயேசு கண்டார். ஒவ்வொரு இலையாக இயேசு எடுத்து பார்த்தார். கனி மட்டும் இல்லை. அவ்விதமான மரங்கள் மனிதனை ஏமாற்றும் போலி மரங்கள். புற அழகு இருக்கின்றது. உள் அழகு இல்லை. மூன்று வருடத்திற்கு மேல் வாழ இடம் கொடுக்கப்படவில்லை. சபிக்கப்படுவதே முடிவாக ஆயிற்று.

புதிய ஏற்பாட்டு நூலில் பரிசுத்த பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாவது நிரூபம் 3-வது அதிகாரத்தில் முழுநேர ஊழியம் செய்கிறவன் எப்படி பட்டவனாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றார். அதில் குறிப்பாக 6-வது வசனத்தில் முழு நேரப்பணிக்காக தெரிந்து எடுக்கப்படுகின்றவன் நூதன சீஷனாக இருக்கக்கூடாது என்று கூறுகின்றார். நூதன சீஷன் என்பதின் சரியான பொருள் சமீபத்தில் இரட்சிக்கப்பட்டவனாக இருக்க கூடாது என்பதே ஆகும். இரட்சிப்பின் அனுபவத்தில் பல வருடம் நிலைத்து நின்றவனும், காற்று, மழை ஆகியவை வீசியும் விசுவாசத்தில் உறுதியாக நின்றவனுமாக முழுநேர ஊழியத்திற்கு வருகின்றவன் இருக்க வேண்டும் என்று பவுல் கூறுகின்றார். அவனது பழைய சுபாவங்கள் அனைத்தும் பரிசுத்த ஆவியானவரால் கிள்ளி எறியப்பட்டு, ஆவியின் கனி நிரம்பி காணப்படுகின்றவனாக இருக்க வேண்டும் என்பது ஆகும். அந்த நிபந்தனைகள் மீறப்பட்டு முழு நேர ஊழியர் தெரிந்து எடுக்கப்படும் பொழுது பணி என்பது திகழும், ஆனால் பணியில் கனி என்பது இருப்பது இல்லை. அறுவடை அதிகமாக இருந்தாலும் வேலையாட்கள் கொஞ்சமாக இருந்தாலும் முழு நேரப்பணிக்கு கர்த்தர் அவசரப்பட்டு ஆட்களை தெரிந்து கொள்ளுவது இல்லை. லேவி. 19:24-வது வசனத்தில் மூன்று வருடம் சென்ற பின்னர் நான்காவது வருஷத்தில் இந்த மரத்திற்காக ஸ்தோத்திரம், திரளான கனி தருகிறது என்று கூறப்படும் நிலை ஏற்படுகிறதை நாம் பார்க்கலாம். தொடர்ந்து 25-வது வசனத்தில் மரம் 5-வது வருஷத்தில் பெரும் பலன் தருவதை நாம் பார்க்கலாம். முப்பதும், அறுபதும் நூறுமாக பலன் கொடுக்கும் மரமாக மரம் மாறி விட்டது. முறைப்படி செய்து விட்டால் முழு நேர ஊழியத்தில் பெரும் பலன் கிட்டும் என்பதை இதன் மூலம் நாம் அறிகின்றோம். முழுநேர ஊழியர்கள் தேவனால் தெரிந்து எடுக்கப்படும் பொழுது அவர்களது தளம், அவர்களது சபை பெருமை அடைய போவது இல்லை. ஆனால் இடம் கொள்ளாமல் போகும் மட்டும் இரட்சிக்கப்பட்டவர்கள் அனுதினமும் சபையில் சேர்ந்து கொண்டே இருப்பார்கள்.

21. இரத்தம் புசிக்காதே

யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்கவேண்டாம், (லேவி. 19:26a)

21-வது வரும் குறிப்பு இரத்தத்துடன் புசிப்பது பரிசுத்தமான பாதையில் செல்லுகின்றவரின் பழக்கம் அல்ல என்பதே ஆகும். லேவி. 19:26-வது வசனத்தின் முன் பாகத்தில் காணப்படும் இந்த குறிப்பு லேவி. 17:10-12 வசனங்களில் ஏற்கெனவே நாம் பார்த்த குறிப்பு ஆகும்.

22. குறி கேட்காதே

குறி கேளாமலும், நாள் பாராமலும் இருப்பீர்களாக. (லேவி. 19:26b)

22-வது வரும் குறிப்பு குறி கேட்க வேண்டாம், நல்ல நாள் கெட்ட நாள் என்று எந்த நாளையும் தீர்ப்பிட வேண்டாம் என்பதே ஆகும். லேவி. 19:26-வது வசனத்தின் பின் பாகத்தில் இந்தக் குறிப்பு கூறப்பட்டுள்ளது. உள்ளம் தூய்மையாக இருக்கும் பொழுது ஆசீர்வாதங்கள் வீட்டு வாசலில் தேடிவரும். வாழ்வின் தாழ்வும் உயர்வும் நாட்களின் தூய்மையில் அமைகின்றது அல்ல, அவை இதயத்தின் தூய்மையில் அமைந்து இருக்கின்றது என்பதை இந்த வசனம் தெளிவு படுத்துகின்றது. 28-வது வசனத்தின் பின் பாகத்திலும் 31-வது வசனத்திலும் இந்த குறிப்பு கூறப்படுகின்றது.

23. மரித்தவர்களுக்காக உடம்பை வருத்தாதே

உங்கள் தலைமயிரை சுற்றி ஒதுக்காமலும், தாடியின் ஓரங்களை கத்தரிக்காமலும், செத்தவனுக்காக உங்கள் சரீரத்தை கீறி கொள்ளாமலும், அடையாளமான எழுத்துக்களை உங்கள்மேல் குத்தி கொள்ளாமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர். (லேவி. 19:27,28)

23-வது வரும் குறிப்பு மரணம் வாழ்வின் முடிவு அல்ல என்பதே ஆகும். மரணம் என்பது மறுமையின் துவக்கமாகவே தெரிகின்றது. பரிசுத்தமான வாழ்வு தரும் படிக்கட்டுகளில் ஏறி செல்லுகின்றவர்கள் இறுதியாக நுழையும் வாசல் நித்திய ஜீவன் என்பதே ஆகும். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது என்று சங். 16:15-வது வசனம் கூறுகின்றது. எனவே மீட்கப்பட்ட ஜனங்கள் மரித்தவர்களுக்காக தங்களை வருத்தி கொள்ள வேண்டாம் என்று 27-ம் வசனம் கூறுகின்றது.

அடையாளமான எழுத்துக்களை உடம்பில் சாயம் கொண்டு குத்தி கொள்வது (tattoo) ஆதி காலத்தில் வழக்கில் இருந்தது. ஒரு எஜமான் தன் அடிமையை தன்னுடையவன் என்பதை காட்ட அவன் நெற்றியிலாவது, கையிலாவது தன் பெயரை அடையாளமாக குத்தினான். ஆனால் இஸ்ரவேல் மக்களோ, கர்த்தரால் அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்பட்டவர்கள். அவர்களது எஜமான் கர்த்தரை தவிர வேறு எவரும் கிடையாது. ஆகவே வேறு எதையும் அவர்கள் அடையாளமாக குத்தலாகாது என்று கர்த்தர் 28-ம் வசனத்தில் கட்டளை இடுகிறார்.

24. பிள்ளைகளை வேசித்தனம் பண்ண விடாதே

தேசத்தார் வேசித்தனம் பண்ணி தேசமெங்கும் முறைகேடான பாவம் நிறையாதபடிக்கு உன் குமாரத்தியை வேசித்தனம் பண்ண விடுகிறதினாலே பரிசுத்த குலைச்சல் ஆக்காயாக. (லேவி. 19:29)

24-வது வரும் குறிப்பு பெற்ற பிள்ளைகள் தவறான செயலுக்கு சென்றுவிட இடம் கொடுக்காதேயுங்கள் என்பதாகும். பெண் பிள்ளைகள் விழுந்து விடக்கூடிய சூழ்நிலைகளுக்குள் அவர்களை அனுப்பாதேயுங்கள் என்பதே ஆகும். விபசாரம் என்ற ஒரு பாவம் ஓர் தொழிலாக அந்த நாட்களிலும் இந்த நாட்களிலும் இடம் பெற்று வருவது. அந்த

முறைகேடான தொழிலை நடத்துபவர்கள் பெண் பிள்ளைகளை நயமாக பேசி, ஏமாற்றி, அவர்களை ஓர் வர்த்தக பொருளாக பயன்படுத்தி வருவார்கள். எனவே லேவி. 19:29-வது வசனம் அவ்வித முறைகேடான இடங்களுக்கு உங்கள் பிள்ளைகளை விலக்கி காத்து கொள்ளுங்கள் என்று கூறுகின்றது.

25. அஞ்சனம் பார்க்காதே

என் ஓய்வு நாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தை குறித்து பய பக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர். அஞ்சனம் பார்க்கிறவர்களை தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்பட வேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 19:30,31)

முன் வசனத்தில் கூறப்பட்டுள்ள கேட்டில் இருந்து பாதுகாப்பு பெற ஒரே வழி சபையார் ஓய்வு நாளை ஆசரிப்பதாகும். இஸ்ரவேல் மக்கள் ஓய்வு நாளில் ஆசரிப்பு கூடாரத்திற்கு வருவார்கள். ஆகவே அந்த இடமும் பரிசுத்தமாக காக்கபட வேண்டிய ஒன்றாகும். ஓய்வு நாளுக்கும், பரிசுத்த ஸ்தலத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்க கர்த்தர் கட்டளை இடுகிறார்.

31-ம் வசனம் 26-வது வசனத்தின் பின் பகுதியோடு சேர்ந்து ஒரு கட்டளை ஆகின்றது. குறி சொல்பவர்கள், அஞ்சனம் பார்ப்பவர்கள், நாள் பார்க்கிறவர்கள் யாவரும் ஆவியின் உலகத்தோடு தொடர்பு கொள்ளுபவர்கள். அஞ்சனம் பார்க்கிறவர்கள் என்பதின் எபிரெய சொல் 'oboth' என்பதாகும். அதன் பொருள் அவர்கள் ஏவுதலினால் வரும் ஒரு காண கூடாத ஆவி அவர்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை தெரிவிப்பது ஆகும். இந்த பொருள்தான் யோபு 32:18-ல் 'என் உள்ளத்திலுள்ள ஆவி' என்று எலிகூ கூறுகையில் வருகிறது.

மேலும் அஞ்சனக்காரர் என்பவர்கள் மனிதனின் வருங்காலத்தில் நடக்க போவதை கூறுவது போல் கூறி மக்களை ஏமாற்றுபவர்கள். பழங்கால முறைப்படி இவர்கள் 'yadua' என்ற பறவையின் எலும்பை வாயில் வைத்து கொண்டு தூபம் போடுவார்கள். அந்த புகையினால் அவர்கள் ஒரு மதி மயங்கிய நிலைக்குள் பிரவேசிப்பார்கள். அந்த நிலையில் அவர்கள் வரும் காலத்தை பற்றி கூறுவார்கள். இவர்கள் பிசாசோடு உடன்படிக்கை பண்ணி கொண்டவர்கள். ஆகவேதான் வரப்போகிற காரியங்களையும், இரகசியங்களையும் கூறுவார்கள். லேவி. 20:27; உபா. 18:11; 1 சாமு. 28:3,7,9; 2 இரா. 21:6 முதலிய வசனங்களை பாருங்கள்.

26. முதியவரை கனம் பண்ணு

நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர் வயதுள்ளவன் முகத்தை கனம் பண்ணி, உன் தேவனுக்கு பயப்படுவாயாக; நான் கர்த்தர். (லேவி. 19:32)

26-வது வரும் குறிப்பு வயது சென்றவர்களுக்கு அன்பும் மரியாதையும் செலுத்த வேண்டும் என்பதே ஆகும். இதனை லேவி.19:32-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

பெற்றோரை கனம் பண்ணுவது போல மற்றோரையும் கனம் பண்ண வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முதியவர்கள் நின்று கொண்டு இருக்க வயதில் குறைந்தவர் உட்கார்ந்து கொண்டு இருப்பது முறைகேடு என்று பார்க்கின்றோம். ''அவர்கள் தன்னை பார்க்கிலும் வயது சென்றவர்கள் ஆனபடியால் எலிகூ யோபுவின் வார்த்தைகள் முடிந்து தீருமட்டும் காத்து இருந்தான்'' என்று யோபு 19:32-வது வசனம் கூறுகின்றது.

பெரியவர்களின் ஆலோசனையை உதாசீனம் செய்த ரெகோபெயாம் என்ற அரசனின் இராஜ்ஜியம் இரண்டாக உடைந்தது. முதியோரின் முகங்கள் மதிக்கப்படவில்லை என்று புலம்பல் 5:12-வது வசனம் கூறுகின்றது. குடும்பத்தின் கிரீடமாக பெரியவர்கள் அமைகின்றார்கள். அவர்களுக்கு முழு மரியாதையும், முழு மதிப்பும் கொடுத்தால் குடும்பம் ஆசீர்வதிக்கப்படும் என்று வசனம் கூறுகின்றது. வயதில் சிறியவர்கள் வயதில் பெரியவர்களுக்கு மரியாதை செலுத்த தேவனாகிய கர்த்தர் விரும்புகின்றார். வயதில் பெரியவர்கள் வயதில் சிறியவர்களுக்கு முன்பாக ஒரு மாதிரியான வாழ்க்கை நடத்தவும் கர்த்தர் விரும்புகின்றார். மரியாதை என்பது கேட்டு வாங்குவது இல்லை. வலிய வருவது ஆகும். சொல்லி செய்வது இல்லை. தானாக செய்ய வேண்டியது ஆகும்.

26-வது குறிப்பு நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று முடிகின்றது. தேவனாகிய கர்த்தர் சிறியோர் பெரியோருக்கு மரியாதை செலுத்துவதை விரும்புகிறார். பெரியோர் சிறியோருக்கு முன் மாதிரிகளாக வாழ எதிர்பார்க்கிறார். மரியாதை என்பது கேட்டு வாங்குவது அல்ல, வலிய வருவது ஆகும். சொல்லிச் செய்வது அல்ல, தானாக செய்ய வேண்டியது ஆகும்.

27. அந்நியருக்கு ஆறுதல் கொடு

யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால், அவனை சிறுமை படுத்த வேண்டாம். உங்களிடத்தில் வாசம் பண்ணுகிற அந்நியனை சுதேசி போல எண்ணி, நீங்கள் உங்களில் அன்பு கூறுகிறது போல அவனிலும் அன்பு கூறுவீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியராயிருந்தீர்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 19:33,34)

லேவி 19:1-32 வசனங்களில் பரிசுத்தம் என்பதை எடுத்து உரைக்கும் 26 குறிப்புகளை நாம் பார்த்தோம். 27-வது குறிப்பு அந்நியனுக்கு நியாயம் செய்ய வேண்டும் என்பது ஆகும். எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் மக்கள் சுமார் 400 வருடத்திற்கும் மேலாக அந்நியர்கள் என்ற நிலையில் தான் இருந்தார்கள். அடிமைகளாக மாறி போனார்கள். எவ்வித உரிமையும் இன்றி சிறுமை பட்டார்கள். கடினமான உடல் உழைப்பிற்கு உட்பட்டார்கள். பிழை செய்து விட்டால் முதுகில் பிரம்பால் அடிக்கப்பட்டார்கள். அவர்கள் அந்நியர்கள் என்ற வரிசையில் இடம் பெற்று விட்டதால் மற்றவர்களுக்கு இருந்த சலுகைகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. வசதிகள் பெறவில்லை. அவர்கள் சார்பில் எகிப்தின் அரசன் முன்னாக வந்து நிற்க எவருமே இல்லை. கர்த்தராகிய தேவன் குறுக்கிடும் நாள் வரைக்கும் விமோசனம் எதுவும் அவர்களுக்கு பிறக்கவில்லை. அந்நியராக இருந்த அவர்கள், அடிமைகளாக இருந்த அவர்கள் இப்பொழுது மீட்கப்பட்ட மக்களாக மாறி விட்டார்கள். இனிமேல் அவர்கள் பட்ட துன்பம் எவரும் படுவதற்கு அவர்கள் ஒரு காரணமாக இருக்க வேண்டாம் என்று கர்த்தர் கூறுகின்றார். எகிப்து தேசத்தில் இருந்து அவர்கள் புறப்பட்ட இரவிலே வாசல் நிலையில் இரத்தம் பூசப்பட்ட ஜனங்கள் அனைவருமே புறப்பட்டு சென்றார்கள்.

''அவர்களோடே கூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருக ஜீவன்களும் போயிற்று'' என்று யாத். 12:38-ல் பார்க்கிறோம். இஸ்ரவேல் புத்திரர் அனைவருடனும் கூட தேவன் கூறியதை விசுவாசித்த மற்றவர்களும் சேர்ந்து கொண்டார்கள். மீட்கப்பட்ட ஜனங்கள் அனைவருக்கும் அன்பு பாராட்ட

அழைக்கப்பட்டார்கள். அனைவருக்கும் நல்ல மதிப்பு கொடுக்கவும் நல்ல உதவி செய்யவும் அழைக்கப்பட்டார்கள். தங்களை மீட்கப்பட்டவர்களாகவும் மற்றவர்களை அந்நியர்களாகவும் அவர்கள் கருதக்கூடாது என்று 26-வது குறிப்பு கூறுகின்றது. ''அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் அதினால் சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்தது உண்டு'' என்று எபிரெயர் நிரூபம் 13:2-ல் பார்க்கிறோம். பத்து குஷ்டரோகிகள் இயேசுவிடம் சுகம் பெற வந்த பொழுது அதில் ஒருவர் அந்நியராகவே இருந்தார். ஆயினும் இயேசு எவ்வித வித்தியாசமும் பாராட்டாமல் அனைவருக்கும் சுகம் கொடுத்தார். தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை என்று ரோமர் 2:11-வது வசனம் கூறுகின்றது. தேவனை பின்பற்றுகின்றவர்களும் எவ்வித பட்ச பாதமும் காட்ட முடியாது என்று இந்த குறிப்பு கூறுகின்றது. ''பசியாயிருந்தேன், எனக்கு போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தை தீர்த்தீர்கள்; அந்நியனாய் இருந்தேன், என்னை சேர்த்து கொண்டீர்கள். வஸ்திரம் இல்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலில் இருந்தேன், என்னை பார்க்க வந்தீர்கள் என்பார். அப்பொழுது நீதிமான்கள் அவருக்கு பிரதியுத்தரமாக ஆண்டவரே நாங்கள் எப்பொழுது உம்மை பசியுள்ளவராக கண்டு உமக்கு போஜனம் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை தாகமுள்ளவராக கண்டு உம்முடைய தாகத்தை தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராக கண்டு உம்மை சேர்த்து கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரம் இல்லாதராக கண்டு உமக்கு வஸ்திரம் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலில் இருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரர் இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகின்றேன் என்பார்'' என்று மத். 25:35-40-ல் பார்க்கிறோம்.

உலகில் உள்ள மனிதர்களை அந்நியர் என்று வித்தியாசம் பாராட்டாமல் அனைவருக்கும் அன்பு கொடுங்கள் என்பது 26-வது குறிப்பாக வருகின்றது.

28. அளவுகளில் உண்மையோடு இரு

நியாய விசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யாது இருப்பீர்களாக. சுமுத்திரையான தராசும், சுமத்திரையான நிறை கல்லும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்க வேண்டும்; நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 19:35,36)

பரிசுத்தம் என்ற 28-வது படிக்கட்டாக நிறுவை செய்யும் படிகளும், அளக்க உதவும் அளவுகளும் கூறப்படுகின்றன. லேவி. 19:35,36 ஆகிய வசனங்களில் இந்த குறிப்பு கொடுக்கப்பப்பட்டு உள்ளது. அளக்கும் அளவு சரியாக இருக்கட்டும். நெறுக்கும் நெறுவை உண்மையாக இருக்கட்டும் என்று 28-வது குறிப்பு கூறுகின்றது.

''உன் பையிலே பெரிதும் சிறிதுமான பலவித நிறை கற்களை வைத்திருக்க வேண்டாம். உன் வீட்டில் பெரிதும் சிறிதுமான பலவித படிகளையும் வைத்திருக்க வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கும் தேசத்தில் உன் நாட்கள் நீடித்திருக்கும்படி, குறையற்ற சுமுத்திரையான நிறை கல்லும், குறையற்ற சுமுத்திரையான படியும் உன்னிடத்தில் இருக்க வேண்டும்'' என்று உபா. 25:13-15-ல் பார்க்கிறோம்.

கள்ள தராசு கர்த்தருக்கு அருவருப்பானது. சுமுத்திரையான நிறை கல்லோ அவருக்கு பிரியம் என்று நீதி. 11:1-வது வசனம் கூறுகின்றது. அளவுகளை குறைப்பதும் எடைகளை மாற்றுவதும் நம்பிக்கை துரோகம் என்பது ஆகும். நேர்மை தவறுதல் என்பது ஆகும். எனவே பரிசுத்தத்திற்கு அப்பால் பட்டதாக அவைகள் தெரிகின்றது. நீதி. 20:10,23 ஆகிய வசனங்களும் தவறான அளவுகளை உபயோகிக்க வேண்டாம் என்று கூறுகின்றன. எல்லாவற்றையும் அறியும் வல்லமை உள்ள தேவன் மனிதன் மனிதனை வஞ்சிக்கும் பொழுது அதனை பார்த்து கொண்டே இருக்கின்றார். நீதி நிலை நாட்டுவதற்கு தீவிரிக்கின்றார். இதயம் பரிசுத்தம் என்பதற்கு அத்தாட்சியாக கைகள் சுத்தமாக காணப்பட வேண்டும். மீகா. 6:11-வது வசனம் ''கள்ள தராசும் கள்ள படிக்கற்களும் உள்ள பையும் இருக்கும் பொழுது அவர்களை சுத்தம் உள்ளவர்கள் என்று எண்ணுவேனோ'' என்று கூறுகின்றது.

தேவன் தம்முடையவர்களை அறிவார். கர்த்தர் தம்மை பின் பற்றுகின்றவர்கள் தூய்மை, உண்மை, நேர்மை, நீதி, அன்பு அனைத்திலும் குன்றாத வாழ்வு நடத்த விரும்புகின்றார். அவ்விதமான ஒரு வாழ்வு நடத்துவது நடைமுறையில் முடிய கூடியதுதானா என்று திகைக்கின்றவர்களுக்கு உதவி செய்வதற்கு கர்த்தர் வல்லவராக இருக்கின்றார். எகிப்து தேசத்தில் 7 வருஷம் செழிப்பு வந்த பொழுது கொடுக்கப்பட்ட அளவின்படி மட்டுமே யோசேப்பு என்பவர் சேமித்து கொண்டார். 7 வருஷம் பஞ்சம் வந்த பொழுது கொடுக்கப்பட்ட அளவை கூட்டாமலும், குறைக்காமலும் அளந்து கொடுத்து கொண்டே இருந்தார். நேர்மையாக அளக்கும் பொழுது மா பிசைகிற தொட்டி வற்றுவது இல்லை. நாம் எந்த அளவினால் மற்றவர்களுக்கு அளக்கிறோமோ அதே அளவினால் நமக்கும் ஓர் நாள் அளக்கப்படும். இன்று மற்றவர்களை வஞ்சிக்கின்றவர்கள் நாளைய தினத்தில் பிறிதொருவரால் வஞ்சிக்கப்படுவார்கள். ''கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்'' என்று பரி. லூக்கா. 6:38-வது வசனம் கூறுகிறது. ''ஏனெனில், நீங்கள் மற்றவர்களை தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்,'' என்று மத். 7:2-ல் பார்க்கிறோம்.

பரிசுத்தம் என்பது நடுவாக இருக்கும் பொழுது உண்மை என்பது ஒளித்து வாழ்வது இல்லை. பொய் தலை எடுப்பதும் இல்லை. எங்கும் உண்மை காணப்படும். எதிலும் உண்மை காணப்படும். ஒருவருக்கு ஒருவர் பெரும் நம்பிக்கை பிறந்து விடும். கேள்வி கேட்டு, வாதாடி வற்புறுத்தி எதுவும் வாங்கவும் வேண்டியது இல்லை. கொடுக்கவும் வேண்டியது இல்லை. என்ற நிலை பிறந்து விடும். 19-ம் அதிகாரம் பரிசுத்தம் என்பதற்கு 27 விளக்கங்களை கொடுக்கின்றது. அதனை இதுவரை நாம் பார்த்தோம்.

ஆகையால் என்னுடைய கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கை கொண்டு, அவைகளின் படி நடக்கக்கடவீர்கள்; நான் கர்த்தர் என்று சொல் என்றார். (லேவி. 19:37)

என்னுடைய கட்டளைகள் யாவையும் கை கொண்டு நடவுங்கள் என்று அந்த வசனம் கூறுகின்றது. எதை செய்தாலும் கர்த்தரின் மகிமைக்காகவே செய்யுங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்ற தலையங்கம் உச்சக்கட்டம் அடைவதை லேவியராகமம் 17 முதல் 26 அதிகாரங்கள் கூறுகின்றன. பழைய ஏற்பாட்டு புத்தகங்களில்

பரிசுத்தத்தில் நிலைத்து நிற்க கர்த்தர் கட்டளையிட்ட கட்டளைகளில் நிலைத்து இருக்க வேண்டும் என்று நாம் அறிகின்றோம்.

புதிய ஏற்பாட்டில் பரிசுத்தமான ஜீவியத்தில் நிலைத்து நிற்க பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குள் வர வேண்டும் என்பது வற்புறுத்த படுகின்றது. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றதும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறது என்றும், நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்றும் அறியீர்களா? என்று 1 கொரி. 6:19-ல் பார்க்கிறோம்.

லேவியராகம புத்தகம் 5 அழைப்பினை கொடுப்பதை பார்க்கிறோம். முதலாவது அழைப்பு தனிப்பட்ட வாழ்வை சுத்தமாக காத்துக்கொள்வதற்கு கொடுக்கும் அழைப்பு ஆகும். 19:2-வது வசனத்தில், பரிசுத்தராக இருங்கள் என்பது ஒவ்வொரு தனி நபருக்கும் கொடுக்கப்பட்ட அழைப்பு ஆகும். அதில் ஒருவர் தவறினாலும் அந்த ஒருவரின் தவறு அநேகரை தடுமாற செய்யும். அந்த அழைப்பை ஏற்பதினால் தனிப்பட்ட வாழ்வில் மட்டுக்கும் மிஞ்சிய ஆசீர்வாதம் பெறுவீர்கள் என்பது லேவி. 26:3-வது வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது அழைப்பு நீதி, நியாயம் என்பதை சற்றும் விட்டு கொடுக்காமல் வாழ்வதற்கு கொடுக்கப்படும் அழைப்பு ஆகும். அந்த அழைப்பில் உறுதியாக இருப்பதே கர்த்தரை அறியும் அறிவில் வளருவதும் ஆகும். ''அவன் சிறுமையும் எளிமையும் ஆனவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படி செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்'' என்று எரே. 22:16-ல் பார்க்கிறோம். ''திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும் உலகத்தால் கறைபடாதபடிக்கு, தன்னை காத்து கொள்ளுகிறதுமே, பிதவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாக இருக்கிறது'' என்று யாக். 1:27-ல் பார்க்கிறோம். ''உன் புத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளெல்லாம் அவரை நினைத்து கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைபடுத்துவார். நீ உன்னை ஞானியென்று எண்ணாதே, கர்த்தருக்கு பயந்து, தீமையை விட்டு விலகு'' என்று நீதி. 3:5-7-ல் பார்க்கிறோம்.

லேவியராகம புத்தகம் கொடுக்கும் மூன்றாவது அழைப்பு உள்ளான மனுஷனில் வல்லமையாக பலப்பட வேண்டும் என்பதே ஆகும். ''ஆகையால் என் கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கை கொண்டு, அவைகளின்படி நடவுங்கள்'' என்று லேவி. 19:37 வசனம் முடிகின்றது. ஒன்று கூட விடாமல், ஒரு நாள் கூட விடாமல் கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானமாக இருக்கும்படி அழைப்பு வருகின்றது.

நான்காவது வரும் அழைப்பு நம்பிக்கை மிகுந்த எதிர் காலத்திற்கு ஆயத்தப்படு என்பது ஆகும். கர்த்தருடைய கட்டளைகளை கருத்துடன் கை கொண்டு விட்டால் வேண்டி கொள்வதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக குடும்பமும், பிள்ளைகளும், சந்ததியும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதையே லேவியராகமம் 26-வது அதிகாரம் உரைக்கின்றது. உயிர்த்தெழும் நாளின் ஆசீர்வாதத்திற்கு பரிசுத்தமான ஜனங்கள் ஆயத்தப்பட்டவர்களாக இருக்க அந்த அழைப்பு வருகின்றது. ஏசாயா 26:19-வது வசனம் கூறுவது போல

மரித்தோரை பூமி புறப்பட பண்ணும் அந்த நன்நாளிலே பரிசுத்தமாக்கப்பட்ட மக்கள் அனைவரும் உயிர்தெழும்பும் ஆசீர்வாதத்தை பெற்று கொள்ள வேண்டும் என்று நான்காவது அழைப்பு அழைக்கின்றது.

ஐந்தாவது வரும் அழைப்பு நிரந்தரத்துவம் என்பதை குறிக்கின்றது. பரிசுத்தம் என்பது தற்காலிகமானது அல்ல. அவர்கள் காலத்துக்கு உரியது மட்டும் அல்ல, பூலோக வாழ்க்கையுடன் முற்று பெறுவதும் அல்ல. பரிசுத்தம் என்பது இடம், காலம், அளவு அனைத்திற்கும் அப்பாற்பட்டது. பரிசுத்தம் என்பது அவ்வித வாழ்க்கை நடத்துகிறவர்களை இன்றும் என்றும் பாதுகாக்கவும், பராமரிக்கவும், ஆசீர்வதிக்கவும் ஏற்படுத்தப்பட்டது. பாவம் என்பது எந்த விதமாக மனிதனை தொடர்ந்து பிடிக்கின்றதோ அதே போல பரிசுத்தம் என்பதும் பரிசுத்தவான்களை தொடர்ந்து, தொடர்ந்து வந்து ஆசீர்வதிக்கின்றது. பாவம் அல்லது பரிசுத்தம் என்ற இரண்டில் ஒன்றைத்தான் ஒவ்வொரு மனிதனும் உலக வாழ்க்கையில் தெரிந்து கொள்ள முடியும். இரண்டுமே நிரந்தர தத்துவம் உடையது. பாவம் என்பது கண்ணீர் சிந்த செய்யும். பரிசுத்தம் என்பது ஸ்தோத்திரம் செய்ய செய்யும்.

10.7 அந்நிய தேவ வணக்கம் வேண்டாம்

கர்த்தர் மோசேயை நோக்கி: பின்னும் நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரரிலும் இஸ்ரவேலில் வாசம் பண்ணுகிற அந்நியர்களிலும் எவனாகிலும் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேகுக்கு கொடுத்தால் அவன் கொலை செய்யப்பட வேண்டும்; தேசத்தின் ஜனங்கள் அவன் மேல் கல்லெறிய வேண்டும். அவன் என் பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப்படுத்தி, என் பரிசுத்த நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கும்படிக்கு, தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேகுக்கு கொடுத்ததினாலே, நான் அப்படிப்பட்டவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அவனை தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவேன். அவன் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேகுக்கு கொடுக்கும் போது, தேசத்தின் ஜனங்கள் அவனை கொலை செய்யாதபடிக்கு கண்சாடையாய் இருந்தால், நான் அந்த மனிதனுக்கும் அவன் குடும்பத்துக்கும் விரோதமாக எதிர்த்து நின்று, அவனையும், அவன் பிறகே மோளேகை விபசார மார்க்கமாய்ப் பின்பற்றின யாவரையும், தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போக பண்ணுவேன். (லேவி. 20:1-5)

பிள்ளைகளின் எதிர் காலத்திற்காக மோளேகு நோக்கி செல்ல வேண்டாம். அவ்விதம் செல்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கட்டளை பிறக்கிறது. சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வர இடம் கொடுங்கள் என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார். லேவி. 19:33,34 ஆகிய வசனங்களில் அந்நியர் அனைவருக்கும் ஏற்ற மரியாதையும் உபசரிப்பும் செய்யும்படி கூறப்பட்டது. அதே சமயம் அவர்களோ அல்லது அந்நியரோ பரிசுத்தம் என்பதை பாதிக்கும் வாழ்க்கை நடத்தினால் பாதிக்கப்படுவார்கள் என்பதும் இந்த வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம் போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ,

அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அவனை தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போக பண்ணுவேன். (லேவி. 20:6)

வரும் காலங்களில் தங்களுக்கு என்ன நடக்குமோ என்று பயந்து மக்கள் அஞ்சன காரரிடமும் குறி சொல்கிறவர்களிடமும் செல்கின்றனர். கெட்டது நடக்கும் என்று அவர்கள் கூறினால், அதை செய்யும் கெட்ட ஆவிகளை சமாதானம் செய்ய அவர்கள் கூறும் பிரகாரம் கர்த்தருக்கு பிரியம் இல்லாத, அவர் அனுமதிக்காத காரியங்களை செய்கின்றனர். 6-வது வசனத்தில் நாளைய தினத்திற்காக கவலை படாதேயுங்கள் என்பது தெளிவாக்கப்படுகின்றது. நாளைய தினத்தை பற்றி சிந்திக்கும் சிந்தனை அச்சம் தரும் சிந்தனையாக மாறும் பொழுது இன்றைய தினம் இழக்க படுகின்றது. ஒரு நாளை கையில் எடுங்கள். ஒரு படி கட்டை ஒரு முறை ஏறி தாண்டுங்கள். நீண்ட எட்டுகள் வேண்டாம். அதிகாலையில், இருக்கும் நாட்காட்டியை பார்ப்பதைவிட இன்றைய தேதிக்கு முக்கியத்துவம் கொடுங்கள். அப்படி செய்தால் பதற மாட்டீர்கள். நேற்றைய தினம் சரித்திரத்திற்கு சொந்தம். நாளைய தினம் கர்த்தருக்கு சொந்தம். இன்றைய தினம் உங்களுக்கு சொந்தம். அதனை உயர்ந்த முறையில் பயன்படுத்துங்கள். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பது உண்மையானால் நாளைய தினத்தை பற்றி அளவுக்கு மிஞ்சி சிந்தித்து, அத்துமீறி செல்ல மாட்டீர்கள். என்னிடத்தில் ஜெபிப்பவர்க்கு நாளைய தினம் நன்மை தருவதாகவே அமையும். இன்றைய தினம் இடம் பெறுவது அனைத்தும் நன்மையானதாகவே அமையும்.

10.8 நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர்

ஆதலால் நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தராய் இருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளை கை கொண்டு நடவுங்கள்; நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர். (லேவி. 20:7,8)

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரும் ஜலம், இடம், காற்று எங்கும் வியாபித்து இருக்கிறவரும், சர்வ வல்லமை உள்ளவருமான தேவன் மீது விசுவாசம் உள்ளவர்கள் பதற்றமடைய மாட்டார்கள். குறுக்கு வழிகளை தேட மாட்டார்கள். அஞ்ஞனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் நாட மாட்டார்கள் என்று லேவி. 20:6,27 ஆகிய இரண்டு வசனங்களும் கூறுகின்றன. மனம் தூய்மையாகி விட்டால் உள்ளம் பதபதைப்பது இல்லை என்பதே 7,8 ஆகிய வசனங்கள் தரும் தகவல் ஆகும். உங்களை பரிசுத்தப்படுத்தி கொள்ளுங்கள் என்று 7-வது வசனம் கூறுகின்றது. பாவியாகிய மனிதன் தன்னையே தான் பரிசுத்தப்படுத்தி கொள்ளுவது எப்படி? நீர் இல்லாமல் அழுக்குகள் நீங்குவது எப்படி? இரத்தம் சிந்தப்படாமல் பாவங்கள் தீர்க்கப்படுவது எப்படி? தவறை தவிர்த்து வாழ எடுக்கும் நல்ல தீர்மானங்கள் நாளைய தினம் வரை கூட நீடிப்பது இல்லை. இப்படியிருக்க 7-வது வசனத்தில் நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்தி கொள்ளுங்கள் என்று கர்த்தர் கூறுவது எப்படி?

7-வது வசனத்தில் அப்படி கூறும் கர்த்தர் 8-வது வசனத்தில் அதற்கு ஓர் பதிலும் கூறுகின்றார். நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று கூறுகின்றார். ஒருவன் எவ்வளவு உயரத்தில் இருக்கிறானோ அந்த உயரம் வரைதான் மற்றொருவனை தூக்க முடியும். பரிசுத்தம் என்பதில் சிகரமாக இருக்கும் கர்த்தர் பாவம் என்ற படுகுழியில் கிடக்கும் மனிதனிடம் வலிய வந்து, என்னுடன் சிகரத்திற்கு ஏறி வா என்கிறார். உனக்கு அது பிரியம் என்றால் என் கையை எட்டி பிடித்து கொள். நீ விழுந்து விட்ட பாவ படுகுழியில் இருந்து

உன்னை தூக்குகிறேன் என்கிறார். நீங்களாக உங்களுக்கு வாழ்க்கை தேட முடியாது. ஆனால் ஓர் நல்ல வாழ்க்கை உங்களுக்கு வேண்டும் என்ற உண்மையான விருப்பம் உங்களை உந்த தள்ளுமானால் நான் உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறேன் என்பதே லேவி. 20:7,8 ஆகிய வசனங்கள் கூறுவதும் ஆகும்.

நான் உங்களை பரிசுத்தமான வாழ்விற்கு வழி நடத்துவேன். ஆனால் அவ்வித ஓர் வாழ்வு எனக்கு தேவை என்பதை நீங்கள் மனதார விரும்ப வேண்டும் என்பதே ஆகும். வருத்தப்பட்டு வாழ்க்கை நடத்துகிறேன் என்று உணருகிறவர் என்னிடம் வரலாம். நான் உங்கள் வருத்தங்களை சந்தோஷமானதாக மாற்றி விடுவேன். உங்கள் தோல்விகளை வெற்றியாக மாற்றி விடுவேன் என்பதே இயேசு புதிய ஏற்பாட்டில் தரும் அழைப்பு. உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்று வாழும். சோர்ந்து போன நெஞ்சங்கள் புது உற்சாகம் கண்டு மலரும். இனி எனக்கு எதிர் காலம் உண்டா என்று கண்ணீர் விட்டு கதறும் ஒவ்வொருவருக்கும் அவர்கள் அறியாததும், அவர்கள் புத்திக்கு எட்டாததுமான பிரகாசம் நிறைந்த வரும் காலம் கொடுக்கப்படும். நான் உங்களை பரிசுத்தமாக்குகிறவர். நான் உங்கள் வரும் காலங்களை அமைத்து தர இருக்கிறவர்.

'நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர்' என்பதை ஏற்று தங்கள் வாழ்வை பரிசுத்தரின் கைகளில் கிடத்துகிறவர்களுக்கு, அவரது பாதத்தில் அமருகிறவர்களுக்கு கர்த்தர் அருளும் ஆசீர்வாதங்களை ஏசா. 49:8-21 வசனங்களில் பார்க்கலாம்.

லேவியராகம புத்தகம் பரிசுத்தத்திற்கு அழைக்கின்றது என்பதைவிட மனித வாழ்க்கைகளை ஓர் ஒப்பற்ற சமாதானம், சந்தோஷம், ஆசீர்வாதத்திற்கு அழைக்கின்றது என்பதையே அறிகின்றோம். பரிசுத்தமான வாழ்க்கை நடத்துவது ஓர் கடினமான அபிப்பிராயமாக தெரிய காரணம் பாவம் என்பதின் மீது பூரணமான வெறுப்பு காணப்படாமல் இருப்பதே ஆகும். பாவம் எவ்வளவாக வெறுக்கப்படுகின்றதோ அத்தனை அதிகமாக ஆசீர்வாதம் குவிக்கப்படுகின்றது. கண்ணீர் விட்டு அழுது கொண்டே வாடி வாழ கர்த்தர் மனிதனை சிருஷ்டிக்கவில்லை. நாளைய தினத்தை குறித்து பயந்தும், பதறியும் வாழ கர்த்தர் மனிதனை சிருஷ்டிக்கவில்லை. மனிதன், மனிதன் அமைக்கும் கூண்டுகளில், கூட்டில் மாட்டி கொண்ட சிறை பறவையாக வாழ கர்த்தர் மனிதனை சிருஷ்டிக்கவில்லை.

10.9 குடும்ப உறவுகள் காக்கப்பட வேண்டும்

தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலை செய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக. (லேவி. 20:9)

பரிசுத்தமாக வாழ கர்த்தர் கொடுத்த முதலாவது படிக்கட்டாகிய உன் தகப்பனுக்கும் தாய்க்கும் பயந்திரு என்ற பிரமாணத்தோடு சேர்ந்து வரும் குறிப்பு இந்த வசனத்தில் உள்ளது.

10.10 தவறான உடல் உறவுகளில் ஈடுபடாதே

ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபச்சாரம் செய்தால், பிறன் மனைவியோடே விபச்சாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப்பட கடவர்கள். தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் தன் தகப்பனை நிர்வாணமாக்கினபடியால், இருவரும்

கொலை செய்யப்பட கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல் இருப்பதாக. ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால், இருவரும் கொலை செய்யப்பட கடவர்கள்; அருவருப்பான தாறுமாறு பண்ணினார்கள், அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக. (லேவி. 20:10-12)

அவனும் ஆண்டவரும் இணைந்து வாழ, இகத்தில் வெற்றியுடனும் பரத்தில் மகிழ்ச்சியுடனும் வாழ மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். அந்த வாழ்க்கைக்கு லேவியராகமம் அழைப்பு கொடுக்கின்றது. நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்பதே முழு வேத புத்தகம் கூறும் அன்பின் வாசகம். நான் உங்களை பரிசுத்தம் ஆக்குவேன் என்று முன் வரும் கர்த்தர் அதனை துவங்கும் இடம் குடும்ப வாழ்க்கையே என்று கூறுவதை முன்பு பார்த்தோம். இந்த அதிகாரத்திலும் 9-21-வது வசனம் வரை மறுபடியும் ஒரு முறை அவைகள் கூறப்படுகின்றன. முன்பு செய் என்று வந்தது. இப்பொழுது செய்யாவிட்டால் சந்திக்கப்போவது மரணம் என்று வருகின்றது.

ஆணோடு ஆண் உடலுறவு கொள்வது தவறு

ஒருவன் பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ணினால், அருவருப்பான காரியம் செய்த அவ்விருவரும் கொலைசெய்யப்பட கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக. (லேவி. 20:13)

சோதோம் கொமோராவின் பாவங்கள் மீட்கபட்ட ஜனங்களினிடையேயும் காணப்பட்டால், அந்த பாவத்தில் ஈடுபட்ட இருவரும் கொல்லப்பட வேண்டும் என்பதே கட்டளை ஆகும்.

ஒருவன் ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் படைத்தால், அது முறைகேடு; இவ்வித முறைகேடு உங்களுக்குள் இராதபடிக்கு, அவனையும் அவர்களையும் அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும். (லேவி. 20:14)

முறைகேடான காரியங்கள் உங்கள் மத்தியில் நடக்க கூடாது என்று கர்த்தர் கட்டளை இடுகிறார். இந்த பாவம் செய்தவர்கள் இரக்கம் காட்டாமல் சுட்டெரிக்கப்பட வேண்டும் என்கிறார்.

மிருகத்தோடு உடலுறவு கொள்வது தவறு

ஒருவன் மிருகத்தோடே புணர்ந்தால், அவன் கொலை செய்யப்பட கடவன்; அந்த மிருகத்தையும் கொல்ல கடவீர்கள். ஒரு ஸ்திரீ யாதொரு மிருகத்தோடே சேர்ந்து சயனித்தால், அந்த ஸ்திரீயையும் அந்த மிருகத்தையும் கொல்லக்கடவாய்; இரு ஜீவனும் கொலை செய்யப்பட வேண்டும்; அவைகளின் இரத்தப்பழி அவைகளின்மேல் இருப்பதாக. (லேவி. 20:15-16)

மிருகத்தோடே உடலுறவு கொள்ளலாகாது. அப்படி செய்பவர்கள் உடனே கொலை செய்யப்பட வேண்டும்.

சகோதரியோடு உடலுறவு கொள்வது தவறு

ஒருவன் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது குமாரத்தியாயிருக்கிற தன் சகோதரியை சேர்த்துக்கொண்டு, அவன் அவளுடைய நிர்வாணத்தையும், அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால், அது பாதகம்; அவர்கள் தங்கள் ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அறுப்புண்டு போகக்கடவர்கள்; அவன் தன் சகோதரியை நிர்வாணப்படுத்தினான்; அவன் தன் அக்கிரமத்தை சுமப்பான். (லேவி. 20:17)

குடும்ப உறவுகளை பரிசுத்தமாக காத்து கொள்ள வேண்டும் என்பதே கர்த்தரின் எதிர்பார்ப்பு.

சூதக ஸ்திரீயோடு உடலுறவு கொள்வது தவறு

ஒருவன் சூதகஸ்திரீயோடே சயனித்து, அவளை நிர்வாணமாக்கினால், அவன் அவளுடைய உதிர ஊற்றை திறந்து, அவளும் தன் உதிர ஊற்றை வெளிப்படுத்தினபடியால், இருவரும் தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போக வேண்டும். உன் தாயினுடைய சகோதரியையும் உன் தகப்பனுடைய சகோதரியையும் நிர்வாணமாக்காயாக, அப்படிப்பட்டவன் தன் நெருங்கிய இனத்தை அவமானமாக்கினான்; அவர்கள் தங்கள் அக்கிரமத்தை சுமப்பார்கள். ஒருவன் தன் தகப்பனின் சகோதரனுடைய மனைவியோடே சயனித்தால், அவன் தன் தகப்பனின் சகோதரனை நிர்வாணமாக்கினான்; அவர்கள் தங்கள் பாவத்தைச் சுமப்பார்கள், சந்தானமில்லாமல் சாவார்கள். ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம் பண்ணினால், அது அசுத்தம்; தன் சகோதரனை நிர்வாணமாக்கினான், அவர்கள் சந்தானமற்றிருப்பார்கள். (லேவி. 20:18-21)

பாவத்தின் சம்பளம் மரணம் என்று பரி. பவுல் ரோமருக்கு எழுதின நிரூபம் 6:23-வது வசனம் கூறுகின்றது. பாவம் என்ற புத்தகத்தின் கடைசி அத்தியாயம் சாபம் என்றே இருக்கின்றது. அந்த இறுதி அத்தியாயம் வரும் வரை பாவத்தின் முடிவை உணருவது இல்லை. பாவம் தவிர்க்கப்பட வேண்டும் என்று லேவியராகம புத்தகத்தின் முன் அத்தியாயங்கள் கூறின. தவிர்க்கப்படவில்லை என்றால் தண்டனைகள் தொடங்கப்படட்டும் என்று முடிவாக வரும் அத்தியாயங்கள் கூறுகின்றன.

10.11 தேசம் உங்களை கக்கி போடாதபடி காத்து கொள்ளுங்கள்

ஆகையால் நீங்கள் குடியிருப்பதற்காக நான் உங்களை கொண்டு போகிற தேசம் உங்களை கக்கி போடாதபடிக்கு, நீங்கள் என் கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கை கொண்டு நடவுங்கள். நான் உங்களுக்கு முன்பாக துரத்திவிடுகிற ஜனத்தினுடைய வழிபாடுகளில் நடவாதிருங்கள்; அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் செய்தபடியால் நான் அவர்களை அரோசித்தேன். (லேவி. 20:22-23)

22-26 வசனங்கள் பாவத்தை வெறுத்து வாழ தீர்மானம் செய்த பின், அதில் தொடர்ந்து நிலைவரப்பட பாவத்தை வெறுக்காமல் வாழும் எவருடனும் கவனமாக வாழ வேண்டும் என்று கூறுகின்றது. ''உங்களை மற்ற ஜனங்களை விட்டு பிரித்து எடுத்தேன்'' என்று 24-வது வசனத்தில் கர்த்தர் கூறுகின்றார்.

பரிசுத்தம் என்ற வார்த்தையின் பொருள் பிரித்து எடுக்கப்படுதல் என்பதை நாம் அறிவோம். தவறான வாழ்க்கைக்கு முடிவு கட்டாமல் நேர்மையான வாழ்வு பிறப்பது இல்லை. பாவ சேர்க்கையில் இருந்து வெளியேறாமல் பரிசுத்த ஐக்கியம் பெறுவதில்லை.

நீங்கள் அவர்கள் தேசத்தை சுதந்தரிப்பீர்கள் என்று உங்களோடே சொன்னேன்; பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை உங்களுக்கு சுதந்தரமாக கொடுப்பேன்; உங்களை மற்ற ஜனங்களை விட்டு பிரித்து எடுத்த உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே. (லேவி. 20:24)

பிரித்து எடுக்கப்பட்ட மக்கள் பிரித்து எடுத்தவரையே நோக்கி செல்லாவிட்டால் வாழ்வில் வழி தவறி விடுவர். நான் பரிசுத்தர், ஆகவே நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் என்று அழைக்கும் கர்த்தர் அவ்வாறு வாழ வழிமுறைகளையும் மனிதனுக்கு வலிய தருகிறார்.

ஆகையால் சுத்தமான மிருகங்களுக்கும் அசுத்தமான மிருகங்களுக்கும், சுத்தமான பறவைகளுக்கும் அசுத்தமான பறவைகளுக்கும் நீங்கள் வித்தியாசம் பண்ணி, நான் உங்களுக்கு தீட்டாக எண்ண சொல்லி விலக்கின மிருகங்களாலும் பறவைகளாலும் தரையிலே ஊருகிற யாதொரு பிராணிகளாலும் உங்களை அருவருப்பாக்காதிருப்பீர்களாக. கர்த்தராகிய நான் பரிசுத்தராய் இருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாய் இருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும் படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டு பிரித்து எடுத்தேன். (லேவி. 20:25-26)

பிரித்து எடுக்கப்பட்ட மக்கள் தாங்கள் உண்ணும் உணவில் மிகவும் கவனம் செலுத்த அழைக்கபடுகிறார்கள்.

அஞ்சனம் பார்க்கிறவர்களும் குறி சொல்லுகிறவர்களுமாய் இருக்கிற புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கொலை செய்யப்பட வேண்டும்; அவர்கள் மேல் கல்லெறிவார்களாக; அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல் இருக்கக்கடவது என்று சொல் என்றார். (லேவி. 20:27)

லேவி. 20:26-வது வசனம் ஓர் திட்டவட்டமான முடிவுக்கு ஜனங்களை அழைக்கின்றது. பரிசுத்தராகிய நான் எதிர்பார்க்கும் வாழ்க்கை நடத்துவீர்கள் என்றால் குறையில்லா எதிர்காலம் காண்பீர்கள் என்பதே அந்த திட்டவட்டமான அழைப்பு. எனக்கு ஏற்றபடி நடந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வில் நடப்பது அனைத்தும் உயர்வுக்கு ஏற்றபடி நடக்கும்.

அத்தியாயம் - 11

ஊழியம் செய்கிற ஆசாரியருக்கு பிரமாணங்கள்

11.1 ஆசாரியர் விசேஷித்தவர்கள்

லேவியராகமம் 17-26-வது அதிகாரம் வரை பரிசுத்தம் என்பதின் பிரமாணங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்த 10 அதிகாரங்களில் 8 அதிகாரங்கள் சபை மக்களின் பரிசுத்தம் நிலைவரப்படுவதற்கு ஏற்ற குறிப்புகளை கொடுக்கின்றன. 21,22 ஆகிய இரண்டு அதிகாரங்கள் ஆசாரியரின் பரிசுத்தம் காக்கப்படுவதற்கு ஏற்ற குறிப்புகளை கொடுக்கின்றன. ஆசாரியரில் இரண்டு நிலைகள் உண்டு என்பதை 21-வது அதிகாரம் கூறுகின்றது. சாதாரண பொறுப்புகளை பெற்ற ஆசாரியர்கள் என்றும், பெரிய பொறுப்புகளை பெற்ற ஆசாரியர் என்றும் இரண்டு வித ஆசாரியர்கள் 21-வது அதிகாரத்தில் பார்க்கிறோம். இதுவரை ஆசாரியர் என்றே ஆரோனும், மற்றவரும் அழைக்கப்பட்டு வந்தனர். ஆனால் லேவி. 21:10-வது வசனத்தில் முதல் முதலாக பிரதான ஆசாரியன் என்று ஆரோன் அழைக்கப்படுவதை பார்க்கலாம்.

மக்களிடம் எதிர்பார்க்கும் தூய்மையை விட ஆசாரியரிடம் அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசாரியரிடம் எதிர்பார்க்கும் பரிசுத்தத்தை விட பிரதான ஆசாரியனிடத்தில் அதிகமான பரிசுத்தம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதை 21,22 ஆகிய அதிகாரங்களில் காண்கிறோம். ஆசாரியருக்கும் பிரதான ஆசாரியருக்குமாக குறிப்புகள் 21,22 ஆகிய இரண்டு அதிகாரங்களையும் சேர்த்து கொடுக்கப்பட்டுள்ளது.

11.2 ஆசாரியர் தங்கள் பரிசுத்தம் காக்க பிரமாணங்கள்

ஆசாரியர் ஈம சடங்குகளில் பரிசுத்தம் காத்து கொள்ள வேண்டும்

பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களில் ஒருவனும் தன் ஜனத்தாரில் இறந்து போன யாதொருவருக்காக தங்களை தீட்டுபடுத்தலாகாதென்று அவர்களோடே சொல். (லேவி. 21:1)

முதலாவது குறிப்பு 21:1-5 வசனங்களில் பார்க்கலாம். ஆசாரியர்கள் இறந்து போனவர்களின் ஈம சடங்குகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று முதலாவது குறிப்பில் கூறப்பட்டுள்ளது. ஆசாரிய பணி பொறுப்பு முக்கிய பணி என்பது என்றும், அவர்கள் சரீரங்கள் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமான ஜீவ பலியாகவும் காக்கப்பட வேண்டும் என்றும் அறிகின்றோம். அவர்களது பரிசுத்தம் பாதிக்கப்படாதபடிக்கு அவர்களை சுற்றி பரிசுத்த வேலி போடப்படுகின்றது. ஏதேனின் வேலியை தாண்டி தீமை பிரவேசித்தது. இதய வேலிகளை துருவி பிரவேசித்துவிட சிங்கம் போல் பிசாசு சுற்றி வருகிறான். பரிசுத்தம் முன்னாக செல்ல செய்யும், பாவம் பின்னாக தள்ளி விடும். ஒவ்வொரு தவறும் முன்றேற்றம் என்பதை முடங்க வைக்கின்றது.

செத்து போனவனுடைய பிரேதத்தை தொட்டவன் ஏழு நாள் தீட்டுப்பட்டிருப்பான் என்று எண்ணாகம புத்தகம் 19:11-வது வசனம் கூறுகின்றது. ஆசாரியர் தீட்டுப்படும் பொழுது 7 நாட்கள் அவர்கள் ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசிக்க முடியாது. அந்த

நாட்களில் இடம் பெற இருக்கும் ஆராதனைகள் தடைபட்டு விடும். காலையும், மாலையும் செலுத்தப்பட வேண்டிய தகனபலிகள் நிறுத்தப்படும். நிற்காமல் எரிந்து கொண்டே இருக்க வேண்டிய குத்துவிளக்கு அணைந்து விடும். எனவே ஆசாரியர் அவ்வித பொறுப்புகளின் தலைமையை பிறருக்கு கொடுத்து விடுதல் நல்லது என்று 21:1-வது வசனம் கூறுகின்றது. பாவம் பெற்ற உயர்வுகளை இழக்க செய்வது மட்டும் அல்ல, மறுபடியும் துவக்கத்தில் இருந்து ஆரம்பிக்க செய்யும். காலங்களை இழக்க செய்யும், வாழ்நாள் எல்லாம் வீண் நாட்களாக சென்று விட்டதே என வருந்த செய்யும். காலத்தை பார்த்தால் போதகராக இருக்க வேண்டிய நீங்கள் தவழும் குழந்தை போன்று எத்தனை காலம் வாழ போகின்றீர்கள் என்றும், பலமான ஆகாரம் உட்கொள்ளும் பருவம் பெற்று இருக்க வேண்டிய நீங்கள் பால் மட்டும் போதும் என்று இன்னும் கூறுவது என்ன என்றும் எபிரேயர் நிரூபத்தை எழுதியவர் எபி. 5:11-வது வசனத்தில் வருந்துகின்றார்.

> ***தன் தாயும், தன் தகப்பனும், தன் குமாரனும், தன் குமாரத்தியும், தன் சகோதரனும், புருஷனுக்கு வாழ்க்கைப்படாமல் தன்னிடத்தில் இருக்கிற கன்னியாஸ்திரீயான தன் சகோதரியுமாகிய தனக்கு நெருங்கின இனமான இவர்களுடைய சாவுக்காக தீட்டுப்படலாம். (லேவி. 21:2,3)***

ஆசாரியர் தீட்டுப்படும் பொழுது முன் செல்ல வேண்டிய ஏழு நாட்கள் இழக்கப்படுகின்றது. பாவம் ஓர் வேகத்தடையாக அமைகின்றது. ஆயினும் தன் தாய் தகப்பன், குமாரன், குமாரத்தி, சகோதரன், திருமணமாகாத சகோதரி இவர்களின் இறுதி சடங்குகளில் ஆசாரியன் பங்கு பெறலாம் என்று லேவி. 21:2,3 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. ஆனால் அவனது சொந்த மனைவியை பற்றி எதுவும் கூறப்படவில்லை. காரணம் கூற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கணவன், மனைவி இருவரும் ஒரே சரீரமாக இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அனைத்து சமயத்திலும் அனைத்து தேவையிலும் உதவியாக இருக்க கடமை பட்டவர்கள். பரி. வேதாகமத்தில் தனது மனைவியின் இறுதி கட்டத்தில் அழாத ஒரு ஊழியக்காரன் எசேக்கியேல் என்ற தீர்க்கதரிசி ஆகும். எசேக்கியேல் தீர்க்கதரிசி அவனது மனைவியை கி.மு. 578-வது வருடம் இழந்தான். அவளது ஈம சடங்கில் கலந்து கொள்ளவில்லை. அதை பற்றி எசே. 24:15-18 வசனங்கள் கூறுகின்றன. அதற்கு காரணம் அதே வருடம் எருசலேம் பாபிலோனியரால் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. அவனை போன்று அநேகர் தங்கள் குடும்பத்தில் பலரை பறி கொடுத்தார்கள். யார் யாருக்காக அழுவது என்ற சூழ்நிலை உருவானது. நலமானாலும் பேச முடியாமல் எசேக்கியேல் மவுனமாக இருக்க கட்டளை பெற்றான்.

அந்த ஒரே ஒரு இடத்தில்தான் ஒரு ஆசாரியன் தனது மனைவியின் அந்திம நேரத்தில் கலந்துகொள்ளவில்லை. மற்ற அனைத்து ஆசாரியர்களும் தங்கள் குடும்பத்திற்கு செலுத்த வேண்டிய மரியாதைகளை செலுத்தி இருக்கிறார்கள். மனைவி பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய நேரங்களை, மரியாதைகளை கொடுத்து இருக்கிறார்கள். தன் சொந்த குடும்பத்தை விருப்பத்துடன் எடுத்து நடத்த தெரியாதவன் சபையை முழு பொறுப்புடன் எப்படி நடத்த கூடும் என்று பரி. பவுல் 1 தீமோ. 3:5-ல் ஓர் கேள்வி எழுப்புகிறார்.

> ***தன் ஜனத்தாரில் பெரியவனாகிய அவன் வேறொருவருக்காகவும் தன்னை பரிசுத்த குலைச்சலாக்கி தீட்டுப்படுத்தலாகாது. அவர்கள் தங்கள் தலையை மொட்டை அடிக்காமலும், தங்கள் தாடியின் ஓரங்களை சிரைத்து***

போடாமலும், தங்கள் தேகத்தை கீறி கொள்ளாமலும் இருப்பார்களாக. தங்கள் தேவனுடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்காமல் அவருக்கு ஏற்ற பரிசுத்தராய் இருப்பார்களாக; அவர்கள் கர்த்தரின் தகனபலிகளையும் தங்கள் தேவனுடைய அப்பத்தையும் செலுத்துகிறவர்கள் ஆதலால் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். (லேவி. 21:4-6)

அந்நாட்களில் மரித்தவர்களுக்கு அழும் பொழுது அவர்கள் பெயரை சொல்லி கூப்பிடுவார்கள். சத்தமாக அழைப்பார்கள். பதில் வருவது இல்லை. பதில் வரவில்லை என்றவுடன் தங்களையே அடித்து கொள்ளுவார்கள். கீறி கொள்ளுவார்கள். அருமையானவர்கள் கடந்து செல்லும் பொழுது ஆசாரியர் இவ்விதம் செய்ய வேண்டாம் என்று 5-வது வசனம் கூறுகின்றது. எலியா தீர்க்கதரிசியின் காலத்தில் பாகாலை நோக்கி கூப்பிட்டார்கள். அலறினார்கள் பதில் எதுவும் வரவில்லை. தங்களை தாங்களே கீறி கொண்டார்கள். 1 இரா. 18:28-வது வசனத்தில் அதை நாம் பார்க்கிறோம். ''அவர்கள் உரத்த சத்தமாய் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின் படியே இரத்தம் தங்கள் மேல் வடியும் மட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களை கீறி கொண்டார்கள்'' என்று பார்க்கிறோம்.

ஆசாரியர் தங்கள் திருமணத்தில் பரிசுத்தம் காத்து கொள்ள வேண்டும்

அவர்கள் தங்கள் தேவனுக்கு பரிசுத்தமானவர்கள், ஆகையால் வேசியையாகிலும் கற்பு குலைந்தவளையாகிலும் விவாகம் பண்ணார்களாக; தன் புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீயையும் விவாகம் பண்ணார்களாக. அவன் தேவனுடைய அப்பத்தை செலுத்துகிறபடியால் நீ அவனை பரிசுத்தப்படுத்த வேண்டும்; உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நான் பரிசுத்தராய் இருக்கிறபடியால், அவனும் உனக்கு முன்பாக பரிசுத்தனாய் இருப்பானாக. (லேவி. 21:7-8)

ஆசாரியர்களிடம் எதிர்பார்க்கப்படும் பரிசுத்தத்தின் இரண்டாவது குறிப்பு 7,8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளன.

தகனபலி ஆசரிப்பு கூடாரத்திற்கு வெளியே பிரகாரத்தில் செலுத்தப்பட்டது. தேவனுடைய அப்பம் ஆசரிப்பு கூடாரத்தின் உள்ளே உள்ள சமூகத்து அப்ப மேஜை மீது வைக்கப்பட்டது. ஆசரிப்பு கூடாரத்தின் உள்ளேயும் ஆசாரியருக்கு வேலை உண்டு. வெளியேயும் வேலை உண்டு. நகரத்தின் உள்ளேயும் வெளியேயும் பணிபுரியும் அவர்கள் பரிசுத்தராகிய தேவனிடம் மிகவும் நெருங்கி சேர்ந்து பழகும், பணிபுரியும் பொறுப்பில் உள்ளனர். உள்ளும் புறமும் சென்று மேய்ச்சலை கண்டடைகிறவர்கள் அந்த சிலாக்கியத்தை உத்திரவாதத்துடன் காத்து கொள்ள வேண்டும். ஆகவே அவர்கள் மனைவியை தெரிந்து எடுப்பதிலும் பரிசுத்தம் காக்க வேண்டும். மூன்றாவது வரும் குறிப்பு ஆசாரியர் திருமணம் செய்யும் பெண் பரிசுத்தராகிய தேவன் மீது விசுவாசமும், அர்ப்பணமும் நிறைந்தவளாக இருக்க வேண்டும் என்பதை 1 தீமோ. 3:11,12 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கலாம்.

ஆசாரியனுடைய குமாரத்தி, வேசித்தனம் பண்ணி, தன்னை பரிசுத்த குலைச்சல் ஆக்கினால், அவள் தன் தகப்பனையும் பரிசுத்த குலைச்சல் ஆக்குகிறாள்; அவள் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவள். (லேவி. 21:9)

ஆசாரியனின் மகளும் மாசற்றவளாக இருக்க வேண்டும் என்று லேவி. 21:9-வது வசனம் கூறுகின்றது. பொதுவாக விபசாரம் செய்த பெண்களை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று பிரமாணம் கூறியது. ஆனால் ஆசாரியனின் பிள்ளை அவ்விதம் செய்தால் சுட்டு எரிக்கப்பட வேண்டும் என்று அந்நாட்களில் கட்டளை பிறந்தது. பொறுப்பில் இருப்பவர் பொறுப்பற்று நடக்கும் பொழுது பெறும் தண்டனை சாதாரண மக்கள் பெறும் தண்டனையை விட பெரிதானது. குடும்ப சாட்சி இல்லாமல் ஊரிடத்தில் சாட்சி வருவது இல்லை.

லேவியாராகமம் 21-வது அதிகாரத்தில் ஆசாரியர்கள் என்ற சமூகம் சாதாரண ஆசாரியர் பிரதான ஆசாரியர் என்று இரண்டு கூறுகளாக பிரிக்கப்படுவதை நாம் பார்த்தோம். சாதாரண ஆசாரியர் எந்த அளவிற்கு தங்கள் பரிசுத்தத்தை காத்துக்கொள்ள வேண்டும் என்பதை பற்றி லேவி. 21:1-9 வசனங்களில் நாம் பார்த்தோம்.

11.3 பிரதான ஆசாரியர்கள் பரிசுத்தம் காக்க பிரமாணங்கள்

ஈம சடங்குகளில் பரிசுத்தம்

பிரதான ஆசாரியனின் பரிசுத்தம் எந்த அளவிற்கு இருக்க வேண்டும் என்பதை லேவி. 21:10-15 வசனங்களில் நாம் அறிகின்றோம். இதுவரை ஆரோன், அவன் குமாரர் அனைவரும் ஆசாரியர் என்று மொத்தமாக அழைக்கப்பட்டார்கள். 21-வது அதிகாரத்தில் ஆசாரியன், பிரதான ஆசாரியன் என்று பிரித்து அழைக்கப்படுகின்றார்கள். லேவி. 21:10-வது வசனத்தில் பிரதான ஆசாரியன் என்று முதன் முதலாக வருவதை நாம் கவனிக்கின்றோம். லேவி. 21:10-வது வசனத்தில் ஆரோன் பிரதான ஆசாரியனாக உயர்த்தப்படுகின்றான். இதனை தொடர்ந்து எண். 35:25-வது வசனத்திலும் ஆரோன் பிரதான ஆசாரியன் என்று திரும்பவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ''எலெயாசார் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன்'' என்று எஸ்றா 7:5-வது வசனம் கூறுகின்றது.

பிரதான ஆசாரியனான ஆரோன் மோசேயினுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தான். ஆரோன் என்ற இந்த முதல் பிரதான ஆசாரியன் மோசேயினால் பிரதிஷ்டை செய்யப்பட்டதை லேவியராகமம் 8-வது அதிகாரத்தில் நாம் கண்டோம். ''அவன் தலையிலே பாகையும் வைத்து பரிசுத்த கிரீடத்தை பாகையின்மேல் தரித்து அபிஷேக தைலத்தையும் எடுத்து அவன் தலையின்மேல் வார்த்து அவனை அபிஷேகம் செய்வாயாக'' என்று யாத். 29:6,7-ல் பார்க்கிறோம். லேவி. 21:10-வது வசனத்தில் ''தன் சகோதரர்களுக்குள்ளே பிரதான ஆசாரியனாக தன் சிரசில் அபிஷேக தைலம் வார்ப்பிக்கப்பட்டவன்'' என்று ஒரு குறிப்பு ஆரோனை பற்றி வருகின்றது. அதே குறிப்பு அதனை தொடர்ந்து 12-வது வசனத்தில் தேவனின் அபிஷேகத் தைலம் என்ற கிரீடம் ஆரோனின் தலையின் மேல் இருக்கிறதே என்று கூறப்பட்டு உள்ளது.

பிரதான ஆசாரியன் பரிசுத்தத்தின் உச்சத்தில் இருந்தால் ஆசாரியர்கள் பரிசுத்தமாக இருப்பார்கள். பிரதான ஆசாரியனுடைய பரிசுத்தமும் ஆசாரியர்களுடைய பரிசுத்தமும் ஜனங்கள் பரிசுத்தத்தில் வளர்வதற்கு உதவியாக அமைகின்றது. ''அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தம் ஆக்குகிறேன்'' என்று கர்த்தராகிய இயேசு பரி. யோவான் 17:18 -வது வசனத்தில் பிதாவிடம் தெரிவிப்பதை நாம் பார்க்கலாம். ஏலி என்ற பிரதான ஆசாரியன் சாமுவேலின் முதலாம் புத்தகத்தின் ஆரம்ப அதிகாரங்களில் காணப்படுகிறான். அவன்

குடும்பத்து பிள்ளைகளின் பாவம் அனைத்து மக்களையும் பாவம் செய்ய வைத்தது. பொறுப்பில் இருக்கின்றவர்கள் தூய்மை, உண்மை, நேர்மை கொண்டு வாழும் பொழுது அவர்களுக்கு அடியில் இருக்கின்றவர்கள் அவ்விதம் வாழ்வதற்கு முன் வருகின்றார்கள்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் தீட்டுப்பட்டு விட்டால் அனைவரும் தீட்டுப்பட்டு விட்டதற்கு அது சமமாக மாறிவிடுகின்றது.

தன் சகோதரருக்குள்ளே பிரதான ஆசாரியனாக தன் சிரசில் அபிஷேக தைலம் வார்க்கப்பட்டவனும், அவனுக்குரிய வஸ்திரங்களை தரிக்கும்படி பிரதிஷ்டை பண்ணப்பட்டவனுமாக இருக்கிறவன் எவனோ அவன் தன் பாகையை எடுக்காமலும் தன் வஸ்திரங்களை கிழித்து கொள்ளாமலும் பிரேதம் கிடக்கும் இடத்தில் போகாமலும், தன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னை தீட்டுப்படுத்தி கொள்ளாமலும் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து புறப்படாமலும் தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்த குலைச்சலாக்காமலும் இருப்பானாக. அவனுடைய தேவனின் அபிஷேக தைலம் என்னும் கிரீடம் அவன் மேல் இருக்கிறதே. நான் கர்த்தர். (லேவி. 21:10-12)

ஆரோனின் சிரசில் இருக்கும் அபிஷேக தைலத்தை பற்றி 133-வது சங்கீதம் 2,3 ஆகிய வசனங்கள் கூறுவதை பாருங்கள். ''அது ஆரோனின் சிரசின் மேல் ஊற்றப்பட்டு அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்திற்கும், எர்மோன் மேலும், சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாக இருக்கிறது. அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.'' எர்மோன், சீயோன் பர்வதம் ஆகிய மலைச்சிகரங்களில் இறங்கும் பனிக்கு சமமாக ஆரோன் தலையில் இருக்கும் அபிஷேக தைலம் கூறப்படுகின்றது. எர்மோன், சீயோன் பர்வதங்களில் குறிப்பிட்ட காலத்தில் பனி இறங்க வேண்டும் என்று விவசாயிகள் காத்து கொண்டு இருப்பார்கள். அவ்விதம் பனி இறங்கி விட்டால் பருவ கால மழை சீராக இருக்கும். விளைச்சல் மிகுதியாக இருக்கும். செழிப்பு எங்கும் காணப்படும்.

ஆரோனின் தலையில் உள்ள அபிஷேக தைலம் அவனது தாடி வழியாக இறங்கி, அவனது வஸ்திரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் நியாயவிதி மார்பதக்கத்தில் இறங்கும். மார்பதக்கத்தில் 12 கோத்திரங்களின் நாமங்கள் உச்சிதமான கற்களில் பதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆரோனின் அபிஷேக தைலம் அந்த 12 நாமங்கள் மீதும் பனி போல இறங்குகின்றது. 12 கோத்திரங்களும் செழிப்புடன் வாழ அபிஷேக தைலம் வழி வகுக்கின்றது. ஒற்றுமையுடன் வாழ அபிஷேக தைலம் வழி வகுக்குகின்றது. மகிழ்ச்சியுடன் வாழ வழி வகுக்கின்றது. மூன்று பெரிய ஆசீர்வாதங்களை ஆரோனின் அபிஷேக தைலம் சபை மக்களுக்கு வழங்குகின்றது. அனைவரையும் ஐக்கியமாக வாழ செய்கின்றது. சபையில் எவ்வித பிரிவினைகளும் வராமல் அபிஷேக தைலம் காத்து கொள்ளுகின்றது. இரண்டாவது சபை மக்களின் வருமானம் குறைவு இன்றி, நிறைவாக இருக்க, விவசாயம் செழிக்க, நலமும், வளமும் பெருக செய்கின்றது. மூன்றாவது சமாதானமும் சந்தோஷமும் குடும்பங்களில் நிலவ செய்கின்றது, ''அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்'' என்று 133-வது சங்கீதம் நிறைவு பெறுகின்றது. அவ்வளவு உன்னதமான ஆசீர்வாதங்களுக்கு காரணமாக இருக்கும் ஆரோனின் அபிஷேக தைலம் ஒரு

பிரேதத்தை தொடுவதினால் பாதிக்கப்பட வேண்டாம் என்பதே கட்டளை ஆகும். பிரதான ஆசாரியர்களுக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகள் சாதாரண ஆசாரியர்களுக்கு கொடுக்கப்படும் நிபந்தனையைவிட மிகவும் கடினமான நிபந்தனையாக இருக்கின்றது. சாதாரண ஆசாரியர் தங்கள் தாய், தகப்பன் ஈம சடங்குகளில் கலந்து கொள்ளலாம் என்று லேவி. 21:2-வது வசனம் கூறுகின்றது. ஆனால் பிரதான ஆசாரியன் அவ்விதம் செய்ய முடியாது என்று லேவியராகமம் 21-வது அதிகாரம் 11-வது வசனம் கூறுகின்றது. இதன் காரணத்தினால்தான் மோசே லேவியராகமம் 10-வது அதிகாரத்தில் இடம் பெற்ற சோக சம்பவத்தில் ஆரோன் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும் என்று கேட்டு கொண்டான். லேவி. 10:6,7-ல் அதனை நாம் காணலாம். அபிஷேகத்தைலம் ஒரு கிரீடம் போன்றது என்று லேவி. 21:12-வது வசனம் கூறுகின்றது. கிரீடம் பாதிக்கப்படும் பொழுது அனைத்தும் பாதிக்கப்படுகின்றது.

தன் விவாகத்தில் பரிசுத்தம்

> ***கன்னிகையாயிருக்கிற பெண்ணை அவன் விவாகம் பண்ண வேண்டும். விதவையை ஆனாலும் தள்ள பட்டவளை ஆனாலும் கற்பு குலைந்தவளை ஆனாலும் வேசியை ஆனாலும் விவாகம் பண்ணாமல், தன் ஜனங்களுக்குள்ளே கன்னிகையை விவாகம் பண்ணக்கடவன். அவன் தன் வித்தை தன் ஜனங்களுக்குள்ளே பரிசுத்த குலைச்சலாக்காமல் இருப்பானாக; நான் அவனை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல் என்றார். (லேவி. 21:13 -15)***

பிரதான ஆசாரியனின் பரிசுத்தத்தை குறித்த அடுத்த குறிப்பு அவன் தனது மனைவியாக எவ்விதமான பெண்ணை தெரிந்து எடுக்க வேண்டும் என்பது ஆகும். அவனுக்கு பிரியமானதாக அல்ல, அவன் செய்யும் பணிக்கு ஏற்றதாக பெண் அமைய வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. அவனது அழைப்பும், ஊழியமும் நடுவாக கொண்டு பெண் தெரிந்து எடுக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. சிம்சோன் கண்ணிற்கு பிரியமான பெண்ணை தெரிந்து எடுத்தான். அவனது பொறுப்பிற்கு ஏற்ற பெண்ணை பெற்று கொள்ளவில்லை. அதன் விளைவாக அவளையும் இழந்தான். அவனையும் இழந்தான். அனைத்தையும் இழந்தான்.

பிரதான ஆசாரியனின் மனைவி, அவன் பெற்ற அழைப்பை காத்து கொள்ள கை கொடுக்கின்றவளாக இருக்க வேண்டும். ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றும் பரிசுத்தராகிய கர்த்தருக்கு அர்ப்பணித்து வாழ்கின்றவளாக இருக்க வேண்டும் என்று 13-15 வசனங்கள் கூறுகின்றன.

அங்கவீனர்கள் ஆசாரியத்துவம் செய்யலாகாது

> ***பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்; உன் சந்ததியாருக்குள்ளே அங்கவீனமுள்ளவன் தலைமுறை தோறும் தேவனுடைய அப்பத்தை செலுத்தும்படி சேரலாகாது. அங்கவீனமுள்ள ஒருவனும் அணுகலாகாது; குருடனானாலும், சப்பாணியானாலும், குறுகின அல்லது நீண்ட அவயம் உள்ளவனானாலும், கால் ஒடிந்தவனானாலும், கை ஒடிந்தவனானாலும்,***

கூனனாலும், குள்ளனானாலும், பூவிழுந்த கண்ணனானாலும், சொறியனானாலும், அசறுள்ளவனானாலும், விதை நசுங்கினவனானாலும் அணுகலாகாது. ஆசாரியனாகிய ஆரோனின் சந்ததியாரில் அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின் தகனபலிகளை செலுத்த சேரலாகாது; அவன் அங்கவீனம் உள்ளவனாகையால், அவன் தேவனுடைய அப்பத்தை செலுத்த சேரலாகாது. (லேவி. 21:16-21)

ஆசரிப்பு கூடாரம் சம்பந்தப்பட்ட பணிகளை லேவியர்கள் மட்டுமே பொறுப்பு எடுத்து செய்ய வேண்டியது என்று நாம் அறிவோம். சேனைகளின் கர்த்தராகிய தேவனின் சேனை போன்று லேவியர்கள் கருதப்பட்டனர் என்பதை எண். 4:3-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். உடலில் எவ்வித குறைபாடுகளும் உள்ளவர்கள் சேனையில் இணைய முடியாது. கண் பார்வை இழந்தவர், கை, கால் குறுகியவர் அல்லது நீண்டவர், உடலில் சக்தி இழந்தவர் ஆசரிப்பு கூடாரம் சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபட முடியாது என்று லேவி. 21:17-23 வசனங்கள் கூறுகின்றன.

அவன் தன் தேவனுடைய அப்பமாகிய மகா பரிசுத்தமானவைகளிலும் மற்ற பரிசுத்தமானவைகளிலும் புசிக்கலாம். ஆனாலும் அவன் அங்கவீனம் உள்ளவனாகையால், அவன் என் பரிசுத்த ஸ்தலங்களை பரிசுத்த குலைச்சல் ஆக்காதபடிக்கு திரைக்குள்ளே போகாமலும் பலிபீடத்தண்டையில் சேராமலும் இருப்பானாக; நான் அவர்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல் என்றார். மோசே இவைகளை ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னான். (லேவி. 21:22-24)

21-வது அதிகாரமும் 22-வது அதிகாரமும் இரண்டு முக்கியமான குறிப்புகளை தெரிவிக்கின்றன. முதலாவது செலுத்தப்படும் பலி பழுதற்ற பலியாக இருக்கவேண்டும் என்பதாகும். இரண்டாவது செலுத்தும் ஆசாரியன் பரிபூரணம் பெற்றவனாக இருக்க வேண்டும் என்பதாகும். இந்த இரண்டு குறிப்புகளும் உத்தம பிரதான ஆசாரியனாகிய இயேசுவை எதிர் நோக்கி அழைக்கும் அழைப்புகள் ஆகும். இயேசுவே பழுதற்ற பலியாகும். இயேசுவே பரிபூரணம் பெற்ற ஆசாரியனும் ஆகும். வரப்போகும் மேசியாவிற்கு லேவியராகமம் 21,22 அதிகாரங்களும் வழியை திறந்து விடுகின்றன.

''பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள், நடுக்கத்துடனே களி கூறுங்கள்'' என்று இரண்டாவது சங்கீதம் 11-வது வசனம் கூறுகின்றது. பயத்துடன் கர்த்தரை சேவிக்க, நடுக்கத்துடன் களிகூற, லேவியராகமம் 22-வது அதிகாரம் பிரதான ஆசாரியனையும் மற்ற ஆசாரியர்களையும் அழைக்கின்றது.

11.4 மக்கள் செலுத்தும் காணிக்கையை குறித்த பிரமாணங்கள்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் எனக்கென்று நியமித்து செலுத்துகிற பரிசுத்த வஸ்துக்களை குறித்து ஆரோனும் அவன் குமாரரும் என் பரிசுத்த நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று அவர்களுக்கு சொல், நான் கர்த்தர். (லேவி. 22:1-2)

கர்த்தருடைய எச்சரிப்பு ஊழியக்காரர்களை அச்சுறுத்துவதற்கு வருவது இல்லை, ஆத்துமாவில் பெலப்படுவதற்காகவே வருகின்றது. கர்த்தருக்கு பயப்படும் பயம் ஞானத்தின் ஆரம்பமாகவே இருக்கின்றது. அவ்வித பயம் இல்லாமல், எச்சரிப்புகளை மீறும் பொழுது அவர்களுடைய வாழ்க்கை பாதிக்க படுகின்றது என்பதை 3-வது வசனம் எடுத்து கூறுகின்றது. ஏலி என்ற பிரதான ஆசாரியன் எச்சரிப்புகளை துச்சமாக எண்ணினான். அவனது முடிவு துக்கமான முடிவாக மாறி போய்விட்டது. 1 சாமுவேல் 2-வது அதிகாரத்தில் மிகவும் பரிசுத்தமான இடங்களை மிகவும் பாவமான இடங்களாக அவனும் அவன் பிள்ளைகளும் மாற்றினார்கள். மிகவும் வயது சென்ற ஏலியிடம் கர்த்தர் பேசுவதை நிறுத்தி விட்டார். மிகவும் சிறிவனான சாமுவேலிடம் கர்த்தர் பேச துவங்கி விட்டார். பெரியவர் சிறியவர் என்று கர்த்தர் பார்ப்பது இல்லை. தூய்மையில் சிறந்தவர் யார் என்றே கர்த்தர் பார்க்கின்றார்.

லேவி. 22:4-வது வசனத்தில் கூறப்பட்டுள்ள சில குறிப்புகள் ஏற்கெனவே லேவி. 13:1-46 வசனங்களிலும் 15:1-18 வசனங்களிலும் கூறப்பட்ட குறிப்புகள் தான். ஆசாரிய பணி செய்கின்றவனிடத்தில் எவ்விதமான அந்தரங்க பாவங்களும் காணப்படக்கூடாது என்பதே அந்த அத்தனை வசனங்களும் அறிவிக்கும் எச்சரிப்பு ஆகும். லேவி. 22:4-வது வசனம் மிகவும் குறிப்பாக இதனை எச்சரிக்கின்றது.

11.5 ஆசாரியர்கள் தீட்டுள்ளதை விட்டு விலகி இருக்க வேண்டும்

அன்றியும் நீ அவர்களை நோக்கி: உங்கள் தலைமுறைகளிலுள்ள சந்ததியாரில் எவனாகிலும் தான் தீட்டுப்பட்டிருக்கும் போது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு நியமித்து செலுத்துகிற பரிசுத்தமானவைகள் அண்டையில் சேர்ந்தால் அந்த ஆத்துமா என் சந்நிதியில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்று சொல்; நான் கர்த்தர். ஆரோனின் சந்ததியாரில் எவன் குஷ்டரோகியோ, எவன் பிரமியமுள்ளவனோ, அவன் சுத்தமாகும் மட்டும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது; பிணத்தினாலே தீட்டானவைகளில் எதையாகிலும் தொட்டவனும் இந்திரியங்கழிந்தவனும். தீட்டு படுத்துகிற யாதொரு ஊரும் பிராணியையாகிலும் தீட்டுள்ள மனிதனையாகிலும் தொட்டவனும், சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பான்; அவன் ஜலத்தில் ஸ்நானம் பண்ணும் வரைக்கும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது. சூரியன் அஸ்தமித்த பின்பு சுத்தமாய் இருப்பான்; அதன் பின்பு அவன் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாம்; அது அவனுடைய ஆகாரம். (லேவி. 22:3-7)

லேவி. 11:29-வது 31-வது வசனங்கள் வரை கொடுக்கப்பட்ட குறிப்புகளை லேவி. 22:5,6 ஆகிய வசனங்கள் இன்னும் ஒரு முறை ஞாபகப்படுத்துகின்றன. தீட்டானவைகளை தொட்டு விட்டு, ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த பொருட்களை ஆசாரியன் தொட முடியாது என்பதே அந்த அறிவிப்பு ஆகும்.

தானாய் செத்ததையும் பீறுண்டதையும் அவன் புசிக்கிறதினாலே தன்னை தீட்டு படுத்தலாகாது; நான் கர்த்தர். (லேவி. 22:8)

பரிசுத்தம் எது, அசுத்தம் எது என்பதை அறிந்து கொள்ளும் கிருபையும், அசுத்தமானவைகளை விட்டு விலகி வாழும் வல்லமையும் ஆசாரியர் கண்டிப்பாக பெற்று

கொள்ள வேண்டும் என்பதை லேவி. 22:1-8 வசனங்கள் உணர்த்துகின்றன. ஆசாரியர்கள் தீட்டு பட்டவர்களாக மாறும் பொழுது பகல் முழுவதும் ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசிப்பதற்கு தடை பட்டவர்களாக மாறுகின்றார்கள். இதனை லேவி. 22:6,7 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. அவ்விதமான ஆசாரியர்கள் பகல் முழுவதும் வேலை எதுவும் இன்றி இருக்க வேண்டிய நிர்பந்தத்திற்குள் ஆளாகின்றார்கள். பரிசுத்தம் எது அசுத்தம் எது என்று அறியும் ஆற்றல், ஆவிகளை பகுத்து அறியும் கிருபை, அசுத்தம் முற்றிலும் அகற்றி வாழும் தீர்மானம் அனைத்தும் ஊழியக்காரர்களுக்கு மிக அவசியம் என்பதை இந்த வசனங்கள் உணர்த்துகின்றன.

ஆகையால் பரிசுத்தமானதை அவர்கள் பரிசுத்த குலைச்சல் ஆக்குகிறதினாலே பாவம் சுமந்து அதினிமித்தம் சாகாதபடிக்கு என் கட்டளையை காக்கக்கடவர்கள். நான் அவர்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர். (லேவி. 22:9)

9-வது வசனம் தங்களை தாங்களாக பரிசுத்தமாக்க ஆசாரியருக்கு முடியாது என்பதையும், அந்த வாஞ்சையுடன் தம்மிடம் வந்தால் தான் அவர்களை பரிசுத்தம் ஆக்குகிற கர்த்தராக இருப்பார் என்றும் கூறப்பட்டு இருப்பதை நாம் காணலாம். வாஞ்சை உள்ள ஆத்துமாக்களை திருப்தி செய்யும் கர்த்தராக கர்த்தர் இருக்கின்றார். கேட்கின்றவர்களுக்கு கொடுக்கின்ற தயாளராக இருக்கின்றார். தட்டுகின்றவர்களுக்கு திறக்கும் அன்பராக கர்த்தர் இருப்பதை காண்கின்றோம். பரிசுத்தமாக வாழ வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் அந்த நல் விருப்பம் நடைமுறையில் கொண்டு வர முடியாத சக்தி இல்லாத மனிதர்களாகவே அவர்கள் காணப்பட்டார்கள். பரிசுத்தமான பாதையில் செல்லுவதற்கு சக்தி தாரும் என்று கேட்கின்றவர்களுக்கு வல்லமை கொடுக்க ஆவல் உள்ளவராக கர்த்தர் இருக்கின்றார். செய்யுங்கள் என்று கூறி விட்டு தள்ளி நின்று கொள்ளும் கர்த்தராக இல்லாமல் செய்ய வைக்கும் தேவனாகவும் இருக்கின்றார்.

11.6 பரிசுத்தமானவைகளில் புசிக்க தடை செய்ய பட்டவர்கள்

அந்நியன் ஒருவனும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது; ஆசாரியன் வீட்டில் தங்கியிருக்கிறவனும் கூலிவேலை செய்கிறவனும் பரிசுத்தமானதில் புசிக்கலாகாது. ஆசாரியனால் பணத்துக்குக் கொள்ளப்பட்டவனும், அவன் வீட்டிலே பிறந்தவனும் அவனுடைய ஆகாரத்தில் புசிக்கலாம். ஆசாரியனுடைய குமாரத்தி அந்நியனுக்கு வாழ்க்கைப்பட்டால், அவள் பரிசுத்தமானவைகளின் படைப்பிலே புசிக்கலாகாது. (லேவி. 22:10-12)

10 முதல் 16 வசனங்கள் கர்த்தருக்கு படைக்கப்படும் பலிகள் உள்ளான மனிதனில் வல்லமையாக பலப்படுவதற்கு செலுத்தப்படும் பலிகளாக காணப்படுவதை அறிகின்றோம். அதனை புசிக்கின்றவர்கள் பாவத்தில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆசாரியர்கள் தங்கள் அன்பிற்கு உரியவர்கள் நண்பர்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் எவருடனும் பரிசுத்தமான உணவு பதார்த்தங்களை தேவ சமூகத்து அப்பங்களை பகிர்ந்து கொடுக்க முடியாது என்பதை 10-வது வசனம் தெளிவாக கூறுகின்றது. கர்த்தர் தன்னை மதித்து வாழும்படி ஆசாரியர்களுக்கு கட்டளை கொடுக்கின்றார்.

10-வது வசனத்தில் அந்நியன் என்று வரும் வார்த்தை அடுத்த நாட்டை சேர்ந்தவன் அல்ல. லேவியர் கோத்திரம் சேராதவன் என்பதே ஆகும். ஆசரிப்பு கூடாரத்தில் எஞ்சியவை அனைத்தும் லேவியர்கள் உணவாக கொள்ளுவதற்கு கொடுக்கப்பட்டது. லேவியர்களுக்கு வேறு தொழில் வருமானம் எதுவும் இல்லை. அவர்கள் முழு நேரமும் ஜனங்களுக்காக ஆசரிப்பு கூடாரத்தின் பணிகளை செய்யும் தேவ ஊழியக்காரர்கள். எனவே லேவியர்களுக்கு ஆசரிப்பு கூடாரத்திற்கு வரும் பலிகள், காணிக்கைகள் ஓர் உதவியாக அமைந்தது. அந்நியன் அதாவது லேவியர் இல்லாதவன் அவைகளை புசிக்க வேண்டாம். அவைகளை எடுக்க வேண்டாம் என்பதே கட்டளையாக வருகின்றது. அந்நியன் என்பதை குறிப்பதற்கு லேவியராகமம் 21,22 ஆகிய அதிகாரங்களில் பயன்படுத்தப்பட்டு உள்ள எபிரெய சொல் 'சார்' என்பது ஆகும். அதன் பொருள் அடுத்த நாட்டை சேர்ந்தவன் என்பது அல்ல. லேவியர் இல்லாதவன் என்பது ஆகும். அடுத்த நாட்டை சேர்ந்தவன் என்பதை குறிக்கும் எபிரெய சொல் 'பெசார்' என்பது ஆகும். அந்த எபிரெய சொல் லேவியராகமம் 21,22 ஆகிய அதிகாரங்களில் பயன்படுத்தப்படவில்லை. தமது ஊழியத்தை செய்யும் ஊழியக்காரர்களின் நலத்தையும் சுகத்தையும் பெலத்தையும் கர்த்தர் விரும்புகின்றார். ஊழியக்காரர்களின் குடும்பங்களில் எவ்வித பற்றா குறையும் இடம்பெற தேவன் விரும்பவில்லை. பரிசுத்தம் இல்லாதவர்கள் பரிசுத்தமானவைகளை புசிக்க முடியாது என்பதே லேவி. 22:9-16 வசனங்கள் கொடுக்கும் செய்தி ஆகும்.

ஆசாரியனுக்கு பிறந்த பிள்ளைகளாக இருந்தாலும் வீட்டிற்கு வந்த விருந்தாளிகளாக இருந்தாலும்கூட பரிசுத்தமான அப்பம் சாப்பிட முடியாது என்பதை நாம் பார்க்கின்றோம். பரிசுத்தமான சமூகத்தின் அப்பங்கள் அவருக்கு முற்றிலும் தங்களை அற்பணித்தவர்கள் மட்டுமே சாப்பிட முடியும் என்று நாம் பார்க்கின்றோம். 1 கொரி. 11:27-31 வசனங்கள். ''இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தை புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாய் இருப்பான். எந்த மனுஷனும் தன்னை தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினால் எனில், அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினை தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதி உள்ளவர்களாயும் இருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள் நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்'' என்று 1 கொரி. 11:27-31-ல் பார்க்கிறோம்.

> ***விதவையாய்ப்போன அல்லது தள்ளப்பட்டவளான ஆசாரியனுடைய குமாரத்தி பிள்ளையில்லாதிருந்து, தன் தகப்பன் வீட்டில் தன்னுடைய இளவயதில் இருந்ததுபோல திரும்ப வந்து இருந்தாளேயாகில், அவள் தன் தகப்பன் ஆகாரத்தில் புசிக்கலாம்; அந்நியனாகிய ஒருவனும் அதில் புசிக்கலாகாது. (லேவி. 22:13)***

பரிசுத்தமான வாழ்வில் ஆசாரியர்கள் தங்களையும் காத்துக்கொள்ள வேண்டும். சபை மக்களையும் காத்துக்கொள்ள வேண்டும் என்று லேவி. 22:15,16 ஆகிய வசனங்கள் எடுத்துரைக்கின்றன.

> ***ஒருவன் அறியாமல் பரிசுத்தமானதில் புசித்ததுண்டானால், அவன் அதிலே ஐந்தில் ஒரு பங்கு அதிகமாய் கூட்டி பரிசுத்தமானவைகளோடுங்கூட***

ஆசாரியனுக்கு கொடுக்கக் கடவன். அவர்கள் கர்த்தருக்கு படைக்கிற இஸ்ரவேல் புத்திரருடைய பரிசுத்தமானவைகளை பரிசுத்த குலைச்சலாக்காமலும், அவைகளை புசிக்கிறதினால் அவர்கள்மேல் குற்றமான அக்கிரமத்தை சுமரப்பண்ணாமலும் இருப்பார்களாக; நான் அவர்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல் என்றார். (லேவி. 22:14-16)

அறியாமல் ஒருவன் பரிசுத்தமானதை புசித்தாலும், தவறு தவறே. ஆகவே அவன் அதை திருப்பி கொடுப்பதுடன் அதின் ஐந்தில் ஒரு பங்கை அதனோடு கூட்டி கொடுக்க வேண்டும்.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் இஸ்ரவேலில் தங்குகிற அந்நியர்களிலும் தங்களுடைய பொருத்தனைகளின் படியாகிலும் உற்சாகத்தின் படியாகிலும் சர்வாங்க தகனபலிகளாக கர்த்தருக்கு தங்கள் காணிக்கையை எவர்கள் செலுத்த போகிறார்களோ, அவர்கள் தங்கள் மனதின் படியே மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆணை பிடித்து வந்து செலுத்துவார்களாக. (லேவி. 22:17-19)

17-25 வசனங்கள் வரை பலி எவ்வித பழுதும் இல்லாத பலியாக அமைய வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. அவர்கள் நடுவில் வாழும் அந்நியரும் கர்த்தருக்கு தங்கள் காணிக்கைகளை செலுத்த அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.

பழுதுள்ள ஒன்றையும் செலுத்த வேண்டாம், அது உங்கள் நிமித்தம் அங்கிகரிக்கப்படுவதில்லை. ஒருவன் விசேஷித்த பொருத்தனையாயாவது, உற்சாகமாயாவது, கர்த்தருக்கு மாடுகளிலும் ஆடுகளிலும் சமாதானபலிகளை செலுத்த போனால், அது அங்கிகரிக்கப்படும்படி, ஒரு பழுதுமில்லாமல் உத்தமமாயிருக்க வேண்டும். குருடு, நெரிசல், முடம், கழலை, சொறி, புண் முதலிய பழுதுள்ளவைகளை நீங்கள் கர்த்தருக்கு செலுத்தாமலும், அவைகளாலே கர்த்தருக்கு பலிபீடத்தின்மேல் தகனபலியிடாமலும் இருப்பீர்களாக. நீண்ட அல்லது குறுகின அவயவமுள்ள மாட்டையும் ஆட்டையும் நீ உற்சாக பலியாக இடலாம்; பொருத்தனைக்காக அது அங்கிகரிக்கப்பட மாட்டாது. விதை நசுங்கினதையும் நொறுங்கினதையும் காயம் பட்டதையும் விதை அறுக்கப்பட்டதையும் நீங்கள் கர்த்தருக்கு செலுத்தாமலும், அவைகளை உங்கள் தேசத்திலே பலியிடாமலும் இருப்பீர்களாக. அந்நிய புத்திரன் கையிலும் இப்படிப்பட்டதை வாங்கி, தேவனுக்கு அப்பமாக செலுத்தீர்களாக; அவைகளின் கேடும் பழுதும் அவைகளில் இருக்கிறது. அவைகள் உங்களுக்காக அங்கீகரிக்கப்படுவதில்லை என்று சொல் என்றார். (லேவி. 22:17-25)

அரை குறையான மனதுடன் பலிகளை தெரிந்து எடுக்க வேண்டாம். அவசரப்பட்டு ஆராதனைக்கு புறப்பட்டு செல்ல வேண்டாம். அமர்ந்து இருந்து நான் கர்த்தர் என்று அறிந்து

கொள்ளுங்கள் என்பது ஞாபகப்படுத்த படுகின்றது. நான் கர்த்தர் என்பது ஒரு பல்லவி போன்று 22-வது அதிகாரத்தில் திரும்ப திரும்ப வருகின்றது.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: ஒரு கன்றாவது செம்மறியாட்டு குட்டியாவது, வெள்ளாட்டு குட்டியாவது பிறந்தால், அது ஏழு நாள் தன் தாயினிடத்தில் இருக்கக்கடவது; எட்டாம் நாள் முதல் அது கர்த்தருக்கு தகனபலியாக அங்கீகரிக்கப்படும். (லேவி. 22:26-27)

கன்று அல்லது இளமையான ஆட்டு குட்டி முதல் ஏழு நாள் என்பதில் கபடம் அற்றதாக இருக்கின்றது. எட்டாவது நாள் முதல் வினா உள்ளதாக மாறுகின்றது. கபடமற்றதாக இருப்பது மட்டும் அல்ல. வினா உள்ளதாகவும் மாறும் மட்டும் பொறுத்து இருங்கள் என்று கூறப்படுகின்றது. ஏழு நாள் பொறுத்து இருந்து, எட்டாவது நாள் கொண்டு வந்தால், அந்த பலி அங்கீகரிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. பலியாக மாறும் மிருகம் ஓரளவு வயது வந்த மிருகமாக இருக்க வேண்டும் என்பதாக அறிகின்றோம். முதிர்ச்சி பெற்றதாக அமைய வேண்டும் என்பதை பார்க்கின்றோம். மற்றவர் சொன்னதினால் அல்ல, தானாக மனம் உவந்ததினால் உயர்ந்த தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பதை காண்கின்றோம். வற்புறுத்தி வந்த தீர்மானங்களாக அல்ல. தூய்மையான வாழ்விற்கு வலிய வந்த தீர்மானங்களாக சுரந்து வரும் விருப்பங்களாக இருக்க வேண்டும் என்பதை பார்க்கின்றோம். கர்த்தருக்கு என்று தங்களது வாழ்வை அர்ப்பணிப்பது அவரவர் யோசித்து தானாக செய்யும் தீர்மானமாக இருக்க வேண்டும் என்பதே லேவி. 22:27-வது வசனம் கூறுவது ஆகும்.

பசுவையும் அதின் கன்றையும், ஆட்டையும் அதின் குட்டியையும் ஒரே நாளில் கொல்ல வேண்டாம். (லேவி. 22:28)

கானான் தேசத்து பகுதியில் வாழ்ந்த மக்கள் அந்த நாட்களில் இவ்விதமாக செய்தார்கள். யாத். 23:19-வது வசனத்திலும் 34:26-வது வசனத்திலும் மற்றவர் செய்கிறார் என்று நீங்கள் செய்ய வேண்டாம் என்று கர்த்தர் கூறுவதை நாம் பார்க்கின்றோம். மற்றவர்கள் செய்கிறதற்காக நீங்கள் செய்ய வேண்டாம். கர்த்தர் உங்களுக்கு என்ன சொல்லுகின்றாரோ அப்படி செய்யுங்கள் என்பதே அந்த வசனம் தரும் செய்தி ஆகும்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரபலியை செலுத்துவீர்களானால் மனப்பூர்வமாய் அதை செலுத்துவீர்களாக. (லேவி. 22:29)

மனம் திறந்த மனமாக இருக்கும் என்றால் ஆலயத்தின் கதவுகள் உங்களுக்கு திறந்ததாகவே இருக்கும், பரலோகத்தின் வாசல்கள் உங்களை வரவேற்க காத்து இருக்கும். நாளைய தினத்தின் சாவிகள் உங்கள் கைகளில் இருக்கும். திறந்த மனம் இன்றி இடம்பெறும் பலிகள் கர்த்தருக்கு உகந்த பலிகள் அல்ல. அவ்வாறு நடத்தும் ஆராதனைகளில் கர்த்தரின் பிரசன்னம் வெளிப்படுவதும் இல்லை. ஜெபிக்கும் நேரங்கள் ஜெயத்தின் நேரங்களாக மாறுவதும் இல்லை. பரிசுத்தம் என்பதை மனப்பூர்வமாக விரும்பாமல் பாவங்கள் பரிபூரணமாக கசக்கப்படுவதும் இல்லை. முழு மனதுடன் தூய்மையை விரும்பாமல் தவறான உறவுகள் முறிக்கப்படுவதும் இல்லை. இறங்கும் மனதுடன் என்னை சேவிக்க வேண்டாம். இரு சிந்தனைகளுடன் என்னுடன் வாழ வேண்டாம். பரிசுத்தம், உண்மை, நீதி, நேர்மை, அன்பு என்ற கோட்டிற்கு மனப்பூர்வமாக நடந்து வாருங்கள் என்பதே லேவி. 22:29-வது வசனம் கொடுக்கும் அழைப்பு ஆகும்.

அந்நாளிலேதான் அது புசிக்கப்பட வேண்டும்; விடியற்காலம் மட்டும் நீங்கள் அதில் ஒன்றும் மீதியாக வைக்க வேண்டாம்; நான் கர்த்தர். நீங்கள் என் கட்டளைகளை கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; நான் கர்த்தர். என் பரிசுத்த நாமத்தை பரிசுத்த குலைச்சல் ஆக்காதிருப்பீர்களாக; நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர் என்று மதிக்கப்படுவேன்; நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர். நான் உங்களுக்கு தேவனாயிருப்பதற்காக உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினேன்; நான் கர்த்தர் என்று சொல் என்றார். (லேவி. 22:30-33)

லேவி. 22:30-33 வசனங்களில் கர்த்தர் தம்மை யார் என்று வெளிப்படுத்துகின்றார். ஏழு குறிப்புகள் கூறி கர்த்தர் தம்மை வெளிப்படுத்துகின்றார். முதலாவது குறிப்பாக தாம் பரிசுத்தம் என்ற நாமத்தை உடையவர் என்கின்றார். இரண்டாவது குறிப்பாக தன்னுடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக மாற்றும் எவரையும் தாம் அனுமதிக்க போவது இல்லை என்று கூறுகின்றார். மூன்றாவது குறிப்பாக தான் தூரமாக தள்ளி ஒதுங்கி நிற்கும் தேவன் அல்ல. மக்கள் நடுவே வந்து தங்கி தாபரிக்கும் தேவன். தயை செய்யும் தேவன் என்று கூறுகின்றார். நான்காவது குறிப்பாக தன்னை போல் பரிசுத்தமாக பிரித்து எடுக்கப்பட்ட வாழ்க்கை நடத்த முன் வருகின்றவர்கள் யார் யாரோ அவர்கள் அனைவருக்கும் தன்னுடைய வல்லமையை வாரி வழங்குவதற்கு தான் முன் வருகின்றேன் என்று கூறுகின்றார். ஐந்தாவது குறிப்பாக தன்னை நோக்கி கூப்பிடுகின்றவர்களை அச்சம் அவதி அடிமைத்தனம் அனைத்தில் இருந்தும் அற்புதம் செய்து விடுவிக்கும் தேவனாக இருப்பேன் என்று கூறுகின்றார். ஆறாவது குறிப்பாக யார் யார் தன்னால் விடுதலை பெற்று வாழ்கின்றார்களோ அவர்கள் பெற்ற புது வாழ்வை காத்து கொள்ளுவதற்கு அவர்கள் வாழ்விலே தான் நடுவாக அமைந்து கொள்ளுவேன் என்று கூறுகின்றார். ஏழாவது குறிப்பாக தன்னை விசுவாசிக்கின்றவர்களை முடிவு பரியந்தம் நடத்துவேன் என்று கூறுகின்றார்.

அத்தியாயம் - 12

பிரித்து எடுக்கப்பட்ட மக்கள் ஆசரிக்க வேண்டிய பண்டிகைகளின் பிரமாணங்கள்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: சபை கூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூற வேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன: (லேவி. 23:1-2)

லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் 7 பண்டிகைகள் அறிமுகம் செய்து வைக்கப்படுக்கின்றன. பஸ்கா பண்டிகை, புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை, முதற்பலன் படைக்கும் பண்டிகை, 50-வது நாள் பண்டிகை அல்லது வாரங்களின் பண்டிகை, எக்காளம் ஊதும் பண்டிகை, பாவ நிவிர்த்தி பண்டிகை, கூடார பண்டிகை என்று ஏழு விதமான பண்டிகைகளின் விபரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு பண்டிகையும் வரப்போகும் மேசியாவாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை எதிர்நோக்கும் பண்டிகையாக காணப்படுகின்றது. பரிசுத்த பவுல் பழைய ஏற்பாட்டின் பற்பல அனுசரிப்புகளை, பண்டிகைகளை பற்றி கூறும் பொழுது கொலோ. 2:16,17 ஆகிய வசனங்களில் ஓர் முக்கியாமான விபரத்தை தெரிவிக்கின்றார். ''ஆகையால் போஜனத்தையும், பானத்தையும் குறித்தாவது பண்டிகை நாளையும், மாதப்பிறப்பையும், ஓய்வு நாட்களையும் குறித்தாவது ஒருவனும் உங்களை குற்றப்படுத்தாது இருப்பானாக. அவைகள் வருங்காலங்களுக்கு நிழலாக இருக்கின்றது. அவைகளின் பொருள் கிறிஸ்துவை பற்றியது'' என்று பவுல் எழுதி இருக்கின்றார். லேவியராகமம் 1-22 அதிகாரங்கள் வரை பரிசுத்தமான மனிதர்கள் பரிசுத்தமான பொருட்கள் பரிசுத்தமான இடங்கள் என்பவைகளை பற்றிய விபரங்களை கண்டோம். லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் பரிசுத்தமான பண்டிகைகள் எவை என்ற விபரத்தை நாம் காண்கின்றோம்.

12.1 ஓய்வு நாள்

ஆறு நாளும் வேலை செய்ய வேண்டும்; ஏழாம் நாள் பரிசுத்த சபை கூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்ய வேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களில் எல்லாம் கர்த்தருக்கு என்று ஓய்ந்திருக்கும் நாளாய் இருப்பதாக. (லேவி. 23:3)

பண்டிகையின் வரிசை துவங்குவதற்கு முன்பு ஓய்வு நாள் ஆசரிப்பு என்பது பற்றி கூறப்படுகின்றது. 10 கட்டளைகளுக்கு ஏற்ற மதிப்பு கொடுத்தால் பண்டிகை என்பது மகிழ்ச்சி நிறைந்த பண்டிகையாக காணப்படும். யாத். 20:9,10 ஆகிய வசனங்களில் ஓய்வு நாள் ஆசரிப்பு ஓர் கட்டளையாக கொடுக்கப்பட்டது.

வாரத்து நாட்கள் காலை தோறும் ஒரு ஆட்டுக்குட்டி தகனபலியாக ஆசரிப்பு கூடாரத்தில் பலியிடப்பட்டது. தகனபலி என்பது முற்றிலும் எரிக்கப்படும் பலி ஆகும். அதில் ஒன்றும் மீதியாக வைப்பது இல்லை. தகனபலியை குறிக்கும் எபிரெய சொல் ''ஓலா'' என்பதை நாம் அறிந்து இருக்கின்றோம். ஓலா என்ற அந்த எபிரெய சொல்லின் பொருள்

மேலாக செல்லுதல் என்பது ஆகும். வாரத்தின் ஒவ்வொருநாள் காலையிலும் பரிசுத்தமான ஜீவியத்தில் வளருவதற்கு தங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுக்கின்றோம் என்பதையும் காலையில் நாங்கள் ஏறெடுக்கும் ஜெபங்கள், காலையில் நாங்கள் ஏறெடுக்கும் மன்றாட்டுகள், விண்ணப்பங்கள் பெருமூச்சுகள் மேலாக செல்லட்டும் என்பதையும் தகனபலி காட்டியது. வாரத்தின் நாட்களில் ஒரு தகனபலி, ஓய்வு நாட்களில் இரண்டு தகனபலிகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதை எண். 28:9,10 ஆகிய வசனங்கள் கூறுகின்றன.

சாதாரண நாட்களில் ஏறெடுக்கப்படும் ஜெபம், மன்றாட்டு ஓய்வு நாட்களில் இரண்டு மடங்காக மாற வேண்டும் என்பதை அது காட்டுகின்றது. செய்யும் விண்ணப்பம் மேலாக செல்ல வேண்டும். அதன் பயனாக குடும்பம் உயர்ந்து உயர வேண்டும். வனாந்தர பிரயாணத்தில் அவர்கள் ஆறு நாட்கள் வெளியே சென்று உணவு தேடினார்கள். மன்னா சேகரித்தார்கள். ஏழாவது நாள் உணவு தேட வெளியே சென்றவர்கள் வெறுமையாகவே வீடு திரும்பினார்கள். ஏழாவது நாளில் ஓய்ந்து இருந்தவர்களோ இதயத்திலும் இல்லத்திலும் ஆசீர்வாதம் நிரம்ப கண்டார்கள். ஆறு நாட்களின் உழைப்பு கர்த்தருடன் சேர்ந்து உழைக்கும் உழைப்பாக இருக்கும். ஓய்வு நாளிலும் செல்லும் வேலை கர்த்தர் கட்டாத வீடாக இருக்கும். ஆறு நாட்களும் கைகள் கண்ட பிரயாசங்கள் வாய்க்கு வந்து எட்டும், ஏழாவது நாள் எடுக்கும் பிரயாசமோ ஏமாற்றத்தில் முடியும் என்பதை அவர்கள் அறிந்தார்கள். யாத். 16:27-வது வசனம். ''ஏழாம் நாளில் ஜனங்களில் சிலர் அதை சேர்க்க புறப்பட்டார்கள் அவர்கள் அதை காணவில்லை.'' கர்த்தருடைய நாளில் இஷ்டம்போல் வாழ்ந்தவர்கள் வாழ்க்கையில் வளம்பெற்றது இல்லை என்பதை அது சுட்டி காட்டுகின்றது. ஆறு நாளும் வேலை செய்ய வேண்டும். ஏழாம்நாள் பரிசுத்த சபை கூடுதலான ஓய்வு நாள் அதில் ஒரு வேலையும் செய்ய வேண்டாம். அது உங்கள் வாசஸ்தலங்களில் எல்லாம் கர்த்தருக்கு என்று ஓய்ந்து இருக்கும் நாளாக இருப்பதாக என்று லேவி. 23:3-வது வசனம் உரைக்கின்றது. கர்த்தருடைய வசனங்களை பிள்ளைகளுக்கு போதிக்கும் நாளாகவும் குடும்பமாக இதுவரை கர்த்தர் செய்த நன்மைகளை நினைவு கூறும் நாளாகவும் ஓய்வு நாள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உபா. 6:7-வது வசனம், ''நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து நீ உன் வீட்டில் உட்கார்ந்து இருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்து கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளை குறித்து பேசு'' என்று கூறுகின்றது. ஓய்வு நாளில் ஒவ்வொரு வீடும் ஒரு ஓய்வு நாள் பாடசாலை போன்று காட்சி தர வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக தெரிகின்றது. ஆவிக்குரிய வாழ்வின் ஆழம் கர்த்தருடைய நாள் எந்த முறையில் அனுசரிக்கப்படுகின்றது என்பதிலிருந்து அறியப்படுகின்றது.

சபை கூடிவந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி, நீங்கள் குறித்தகாலத்தில் கூற வேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன: (லேவி. 23:4)

23:4-வது வசனம் சபை மக்கள் கூடி வந்து பரிசுத்தம் என்பதை நடுவாக கொண்டு குறிப்பிட்ட காலத்தில் பண்டிகை ஆசரிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது. ''சபை கூடி வந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி நீங்கள் குறித்த காலத்தில் கூற வேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன'' என்று அந்த வசனம் முடிகின்றது. பண்டிகை என்பது சபை அனைத்தும் கூடி வர வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது. சபை கூடி வருவதை விட்டு விடக்கூடாது, வீடுகளில் பின் தங்கிவிட கூடாது, சொந்த கூடுதல்கள் துவங்கி விடக்கூடாது என்று எபி. 10:25-வது வசனம் கூறுகின்றது. சபை கூடி வருதலை சிலர் விட்டு விடுகிறது போல

நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்ல கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும் என்று வசனம் கூறுகின்றது. பரிசுத்தம் என்பது நடுவாக இருக்கும் என்றால் ஒன்றாக கூடி வருதல் நன்றாக இருக்கும். பரிசுத்தம், உண்மை, நேர்மை குன்றும் பொழுது கூடி வருதல் என்பது கோபம், சண்டை, வன்முறை ஆகியவைகளில் முற்றுப்பெறும்.

ஆராதனை பண்டிகை என்பது பரிசுத்தம் என்பதை நடுவாக கொண்டே இருக்க முடியும் என்பதே லேவியராகம புத்தகம் கூறுவது ஆகும். லேவியராகம புத்தகத்தில் கூறப்பட்டு உள்ள ஏழு பண்டிகைகளில் மூன்று பண்டிகைகள் கட்டாய பண்டிகைகள் என்று கூறப்படுகின்றது. அந்த மூன்று பண்டிகைகளிலும் 20 வயதிற்கு மேற்ப்பட்ட ஆண்கள் அனைவரும் எங்கு இருந்தாலும் புறப்பட்டு வந்து பங்கு பெற்று கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பஸ்கா பண்டிகை, 50-வது நாள் பண்டிகை அல்லது வாரங்களின் பண்டிகை, கூடார பண்டிகை அல்லது சேர்ப்பின் பண்டிகை என்ற மூன்று பண்டிகைகளும் கட்டாய பண்டிகையாக இருந்தது. அவர்கள் அனுசரித்த ஏழு பண்டிகைகளுக்கும் ஓய்வு நாள் ஆசரிப்பு ஓர் மகுடமாக அமைந்தது. அவர்களது அன்றாட வாழ்க்கை ஆழமானதாக அமைய அவைகள் உதவின. அனைத்து மனிதருக்கும் அவ்விதமான பெரும் ஆசீர்வாதமான வாழ்க்கை ஒரு நாள் அருளப்படும் என்ற ஓர் முன் தகவல் அனைத்து ஆசரிப்புகளிலும், அனைத்து பண்டிகைகளிலும் தெரியவருகின்றது.

பண்டிகை என்பது கர்த்தருடையது என்பதை லேவியராகம புத்தகம் எடுத்து கூறுகின்றது. ஓய்வு நாள் என்பது கர்த்தருடைய நாளாக இருப்பது போல பண்டிகை நாட்களும் கர்த்தருடைய நாட்களாகவே கருதப்பட்டது. ஓய்வு நாட்களில் சொந்த அலுவல்கள் எதுவும் செய்ய முடியாதது போல பண்டிகை நாட்களிலும் சொந்த வேலைகள் தவிர்க்கப்பட்டது. காரணம் பண்டிகை என்பது மனிதருக்கு உரியது அல்ல. பண்டிகை என்பது கர்த்தருக்கு உரியது என்று லேவி. 23:1-வது வசனம் தெள்ளந்தெளிய கூறுகின்றது. உள்ளம் உண்மையாக அமையாமல் பண்டிகை பயன் தரப்போவது இல்லை. தூய்மை என்பதை நடுவாக கொண்டதாக பண்டிகை இடம் பெற வேண்டும். யாத்திராகம புத்தகம் 32-வது அதிகாரத்தில் ஒரு நாள் அவர்கள் கன்றுக்குட்டி பண்டிகை என்று ஒன்று கொண்டாடினார்கள். அன்று அவர்கள் நடத்திய கொண்டாட்டத்தில் மது அருந்தி மயங்கி கிடந்தார்கள். ஆண்களும் பெண்களும் தவறாக நடந்து கொண்டார்கள் என்று பார்த்தோம். பண்டிகை என்பது மேலும் மேலும் கெட்டு போவதற்கு அல்ல, மேலும் மேலும் பரிசுத்தத்தில் வளருவதற்கு, உண்மையில் ஒங்குவதற்கு, நீதி செழிப்பதற்கு, அன்பில் சிறப்பதற்கு, ஐக்கியத்தில் பெருகுவதற்கு கர்த்தரால் கொடுக்கப்பட்டதாகும்.

லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் கர்த்தர் கட்டளையிட்ட ஏழு பண்டிகைகளும் கர்த்தர் மனுக்குலத்திற்கு செய்ய போகும் ஏழு பெரிய நன்மைகளை முன் கூட்டி கூறுகின்றன. மனிதனையும் மனுக்குலத்தையும் ஈடு இணையின்றி நேசிக்கும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனை ஏழு பண்டிகைகளும் எடுத்து இயம்புகின்றன. பஸ்கா பண்டிகை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்திற்காக ஓர் நாள் சிலுவையில் பலியாக கொல்லப்படுவார் என்பதை முன்னாக கூறுகின்றது. பஸ்கா பண்டிகை காட்டுவது சிலுவையே ஆகும். பாவ நிவிர்த்தி பண்டிகை என்பது லேவியராகம புத்தகம் 16-வது அதிகாரத்தில் மிக தெளிவாக நாம் கண்டோம்.

தொடர்ந்து லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் அதனை ஒரு பண்டிகையாகவும் பார்க்க இருக்கின்றோம். பாவ நிவிர்த்தி பண்டிகை கர்த்தராகிய இயேவின் இரத்தம் சகல மனிதரையும் மன்னிக்கின்றது, சகல பாவங்களையும் மன்னிக்கின்றது, எவ்வித நிபந்தனையும் இல்லாமல் மன்னிக்கின்றது என்பதை முன்கூட்டி தெரிவிக்கின்றது. பாவ நிவிர்த்தி பண்டிகை வெறும் சிலுவை அல்ல, மன்னிப்பு வழங்கும் சிலுவை மனுக்குலத்திற்கு காத்து கொண்டு இருக்கின்றது என்பதை முன் கூட்டி காட்டியது.

மூன்றாவது பண்டிகை முதற்பலன் படைக்கும் பண்டிகை என்பது ஆகும். இயேசு கிறிஸ்து உயிர்த்து எழுந்து முதற்பலன் ஆனார் என்று 1 கொரி. 15:20-வது வசனம் கூறுகின்றது. முதற்பலன் படைக்கும் பண்டிகை இயேசுவின் உயிர்த்தெழுதலை சுட்டிக்காட்டியது.

லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் வரும் நான்காவது பண்டிகை ஐம்பதாவது நாள் பண்டிகை என்பது ஆகும். அந்த பண்டிகை இயேசுவின் உயிர்த்தெழுதலில் இருந்து சரியாக ஐம்பதாவது நாள் வந்து இறங்கிய பரிசுத்த ஆவியானவரை குறிக்கின்றது. கர்த்தராகிய இயேசு உயிர்த்து எழுந்த பின்பு உங்களுடன் நிரந்தரமாக தங்கிக்கொண்டே இருக்க பரிசுத்த ஆவியானவரை அனுப்ப போகின்றார் என்று அந்த பண்டிகை முன்னாக உரைத்தது.

ஐந்தாவது காணப்படும் பண்டிகை கூடார பண்டிகை என்பது ஆகும். இயேசுவின் மீது விசுவாசம் வைக்கும் மாந்தர்களை, விசுவாசிகளின் கூட்டத்தை திருச்சபையை முன் கூட்டி கூறும் பண்டிகை ஆகும். அநித்தியமான பூமியில் தற்காலிகமான வாழ்வில் கிறிஸ்துவை தலையாக கொண்ட சபை தோன்றும் என்பதை கூடார பண்டிகை முன்னாக கூறியது.

ஆறாவது வரும் பண்டிகை புளிப்பு இல்லாத அப்ப பண்டிகை என்பது ஆகும். புளிப்பு இல்லாத அப்பம் பாவம் இல்லாத வாழ்க்கை என்பதை குறிக்கின்றது. பாவ உலகில் பாவம் இல்லாத மக்கள் கூட்டம் ஒன்று உருவாக இருக்கின்றது. அவர்களின் ஐக்கியம் பாவத்துடனும் அல்ல, பாவம் என்பதை செய்வதற்கு தூண்டுகிறவர்களுடனும் அல்ல, பிதாவோடும் அவரது குமாரனோடும் அவர்கள் ஐக்கியம் உருவாகும் என்பதை புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை முன்கூட்டி உரைத்தது.

ஏழாவதாக பார்க்க இருக்கும் பண்டிகை எக்காள பண்டிகை என்பது ஆகும். உலகம் என்பது சதம் அல்ல. வாழ்க்கை என்பது நிரந்தரம் அல்ல. சரித்திரத்திற்கும் ஒரு கடைசி பக்கம் காத்து கொண்டு இருக்கின்றது. அன்று எக்காளம் தொனிக்கப்படும். முட்கிரீடம் தரித்தவராக அல்ல, மகிமையின் கிரீடம் அணிந்தவராக இயேசு வெளிப்படுவார் என்பதை எக்காள பண்டிகை முன் அறிவித்தது. அர்த்தம் இல்லாமல் பண்டிகைகள் கொடுக்கப்படுவது இல்லை. ஆசீர்வாதத்தை பெற்று கொள்ளாமல் அவைகளை அனுசரித்தவர்கள் வீடு திரும்பியதும் இல்லை. சொல்ல முடியாத நன்மைகளை வழங்க பண்டிகைகள் கொண்டாடப்பட்டது. ஏற்ற முறையில் அவைகளை அனுசரித்தவர்களுக்கு எண்ண முடியாத நன்மைகளை வாரி வழங்கியது. ஒவ்வொரு பண்டிகையாக பார்க்க கர்த்தர் உதவி செய்வராக.

23-வது அதிகாரத்தை வசனம் வசனமாக பார்க்காமல் பண்டிகை பண்டிகையாக பார்க்கும் பொழுது அதனுடைய தொடர்ச்சி தெளிவாக தெரிகின்றது. பஸ்கா பண்டிகை, புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை, முதற்பலன் படைக்கும் பண்டிகை, ஐம்பதாவது நாள் பண்டிகை, எக்காள பண்டிகை, பாவ நிவிர்த்தி பண்டிகை, கூடார பண்டிகை என்ற முறையில் இந்த அதிகாரத்தில் பழைய ஏற்பாட்டு மக்களுக்கு கொடுக்கப்பட்ட பண்டிகைகளை பஸ்கா

பண்டிகை, பாவ நிவிர்த்தி பண்டிகை, முதற்பலன் படைக்கும் பண்டிகை, ஐம்பதாவது நாள் பண்டிகை, கூடார பண்டிகை, புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை எக்காள பண்டிகை என்ற வரிசையில் பார்க்கும் பொழுது புதிய ஏற்பாட்டு காலத்து மக்களுக்கு பழைய ஏற்பாட்டு பண்டிகை பல புதிய தகவல்களை கொடுக்கின்றன. அர்த்தம் மிக்க ஆசாரங்களாக அவைகள் விளங்குகின்றன. இந்த வரிசையில் பஸ்கா பண்டிகை என்பதை முதலாவது நாம் எடுத்து கொள்ளுகின்றோம்.

12.2 பஸ்கா பண்டிகை

முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்தி நேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகையும், (லேவி. 23:5)

இந்த வசனத்தில் பஸ்கா பண்டிகை குறிப்பிடப்பட்டு உள்ளது. யாத்திராகமம் 12-வது அதிகாரத்தில் பஸ்கா ஆசரிப்பு இடம் பெற்றதை நாம் நன்கு அறிவோம். லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் அதிகார பூர்வமாக பஸ்கா ஆசரிப்பு அறிவிக்கப்படுகின்றது. யாத். 12:1-13:16-வது வசனம் வரை பஸ்கா பண்டிகையின் ஆசரிப்பு மிக மிக தெளிவாக கர்த்தாதி கர்த்தரால் கொடுக்கப்பட்டது.

இந்த பகுதியில் பஸ்கா பற்றிய 10 குறிப்புகள் உண்டு. முதலாவது குறிப்பு யாத். 12:2-வது வசனத்திலும் யாத். 13:3-வது வசனத்திலும் கூறப்பட்டு உள்ளது. பஸ்கா ஆசரிக்கப்பட்ட மாதம் நிசான் என்ற மாதம் ஆகும். யாத். 12:2-வது வசனம். ''இந்த மாதம் உங்களுக்கு பிரதான மாதம் இது வருஷத்தின் முதலாவது மாதமாக இருப்பதாக'' என்று கூறப்பட்டு உள்ளது.

இரண்டு விதமான சமய நாட்காட்டிகள் எபிரெயர்களால் பயன்படுத்தப்பட்டது. ஒன்று நிலவை நடுவாக கொண்ட லூனார் நாட்காட்டி என்பது, மற்றொன்று ஜூபிலி நாட்காட்டி என்பது. லூனார் நாட்காட்டியில் மாதங்கள் 29 அல்லது 30 நாட்கள் கொண்டாதாக இருக்கும். எனவே பஸ்கா பண்டிகை வருடா வருடம் வித்தியாசமான நாட்களில் இடம் பெறும். ஆனால் ஜூபிலி நாட்காட்டி சரியாக ஐம்பத்து இரண்டு வாரங்கள் கொண்டதாகவும் வருடம் 364 நாட்கள் கொண்டதாகவும் அமைந்தது. வருடங்கள் வித்தியாசமான நாட்களில் துவங்காமல் ஜூபிலி நாட்காட்டியில் புதன் கிழமை மட்டுமே வருட பிறப்பு இடம் பெற்றது. ஆதி. 1:14-ன் படி வாரத்தின் நான்காவது நாளான புதன்கிழமை சூரியனும் சந்திரனும் சிருஷ்டிக்கப்பட்டது. எனவே ஜூபிலி நாட்காட்டியின்படி வருடத்தின் துவக்க நாள் புதன் கிழமையாக மாறியது. நாட்காட்டிகள் பற்பல வகைகளாக அமைந்தாலும் யாத். 12:2-வது வசனத்தின்படி பஸ்கா ஆசரிப்பு செய்த வருடமே வருடத்தின் முதல் மாதமாக மாற்றி அமைக்கப்பட்டது. கானானியரின் நாட்காட்டியின்படி ஆபிப் மாதமும் பாபிலோனியரின் நாட்காட்டியின்படி நிசான் மாதமும் பஸ்கா ஆசரிப்பு இடம் பெற்றது. இந்த மாதம் என்று யாத். 12:2-வது வசனத்தில் வருவது ஆபிப் என்ற மாதம் ஆகும். அது கானானிய நாட்காட்டியில் ஏழாவது மாதம் ஆகும்.

யாத். 12:1-13:16-வது வசனம் வரை பஸ்கா என்பதை பற்றி 10 குறிப்புகள் கொடுக்கப்பட்டு உள்ளது.

முதலாம் குறிப்பு யாத்திராகமம் 12-வது அதிகாரம் முதல் எபிரெயர்களுக்கு ஏழாவது மாதம் வருடத்தின் முதல் மாதமாக மாறியது ஆகும். வருடம் அடிமைத்தன உணர்வுடன்

பிறக்காமல் விடுதலை உணர்வுடன் பிறக்கட்டும் என்பதற்கு அது அடையாளமாக மாறிவிட்டது. 430 வருடம் அவர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த காலம் முற்று பெற்றது. புதிய ஓர் உலகம் பிறந்து விட்டது. புது வருடம் துவங்கியது. அது ஓர் புதிய நம்பிக்கையில் துவங்கி விட்டது. அதற்கு காரணம் பஸ்கா என்பதே ஆகும்.

இரண்டாவதாக அமையும் குறிப்பு யாத். 12:3-5 வசனங்களில் காணப்படுகின்றது. ஆபீப் என்ற மாதத்தில் 10-வது நாளில் பஸ்காவின் பலியாக வெட்டப்பட ஒரு வயது நிரம்பிய ஆண் ஆட்டு குட்டியை செம்மறி அல்லது வெள்ளாட்டு இனத்தில் இருந்து தெரிந்து கொள்ள வேண்டும், குடும்பத்தின் உறுப்பினருக்கு தக்கதாக ஆட்டு குட்டி அமைய வேண்டும்.

பஸ்கா பண்டிகையின் மூன்றாவது குறிப்பு 14-வது தேதி மாலை கதிரவனின் கடைசி கதிர்கள் மறையும் வேளை ஆட்டு குட்டி வெட்டப்பட வேண்டும் என்பது ஆகும். வெட்டப்பட்ட ஆட்டு குட்டியின் இரத்தம் ஒரு பாத்திரத்தில் பிடிக்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். இதனை பற்றிய விபரம் யாத். 12:6-வது வசனத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது.

நான்காவதாக கொடுக்கப்பட்ட குறிப்பு யாத். 12:7-22 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றது. பாத்திரத்தில் பிடிக்கப்பட்ட ஆட்டு குட்டியின் இரத்தம் ஈசோப்பு என்ற செடியின் கொழுந்தில் தோய்க்கப்பட்டு வீட்டுக்கு முன் வாசலில் இருக்கும் இரு கதவு நிலைகளிலும் கதவின்மேலே இருக்கும் சட்டத்திலும் பூசப்படுகின்றது.

பஸ்கா அனுசரிப்பின் ஐந்தாவது குறிப்பு யாத். 12:9-46 ஆகிய இரண்டு வசனங்களிலும் உண்டு. ''பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்லது அதின் தலையையும், அதின் தொடைகளையும் அதற்கு உள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதை புசிப்பீர்களாக'' என்று யாத். 12:9-ல் பார்க்கிறோம். ''அதை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்க வேண்டும். அந்த மாம்சத்தில் கொஞ்சமாகிலும் வீட்டில் இருந்து வெளியே கொண்டு போகக்கூடாது. அதில் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது'' என்று யாத். 12:46-ல் பார்க்கிறோம்.

12:8-வது வசனத்தில் பஸ்கா ஆசரிப்பை பற்றிய ஆறாவது குறிப்பு அமைந்து உள்ளது. புளிப்பு இல்லாத அப்பத்துடனும் கசப்பான கீரையுடனும் பஸ்காவை சாப்பிட வேண்டும் என்று அந்த வசனம் கூறுகின்றது.

ஏழாவது குறிப்பு 10-வது வசனம் கூறுவது போல எதுவும் மீதியாக இருக்கலாகாது. மீதியானவைகள் அனைத்தையும் சுட்டு எரித்துவிட வேண்டும் என்று கூறுகின்றது.

எட்டாவது குறிப்பு 11-வது வசனத்தில் காணப்படுகின்றது. ''அதை புசிக்க வேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அறைகளில் கச்சை கட்டி கொண்டும் உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்து கொண்டும் உங்கள் கையில் தடி பிடித்து கொண்டும் அதை தீவிரமாய் புசிக்கக்கடவீர்கள். அது கர்த்தருடைய பஸ்கா.''

பஸ்கா அனுசரிப்பு அன்றோடு நின்று விடுவது அல்ல. பஸ்கா அனுசரிப்பு நிரந்தரமாக மாற்றப்பட்டது என்பதே ஒன்பதாவது குறிப்பு ஆகும். அதனை பற்றிய விபரம் 12:14,24,42,47 ஆகிய வசனங்களில் கூறப்பட்டு உள்ளது.

பஸ்கா அனுசரிப்பை பற்றி கடைசி குறிப்பு அதாவது 10-வது குறிப்பு எபிரெயர் மட்டும் அல்ல, விடுதலை பெற்று வாழ விரும்பும் எவரும் பஸ்காவை அனுசரிக்கலாம். மனம் உள்ளவர் அனைவரும் பஸ்கா தரும் விடுதலையை பெற்று வாழட்டும் என்பதே ஆகும். அந்த விபரம் யாத். 12:44,48 ஆகிய வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. பஸ்கா பண்டிகை சிலுவையை சித்தரிக்கும் பண்டிகை ஆகும். பழுதற்ற ஆட்டு குட்டி பலியாக தேவைப்பட்டது. இதோ உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டு குட்டி என்று யோவான் ஸ்நானகன் பரிசுத்த யோவான் 1:29-ல் சுட்டி காட்டிய இயேசு கிறிஸ்துவே பழுதற்ற பஸ்கா ஆட்டு குட்டியாக மாறி விட்டார். 1 கொரி. 5:7-வது வசனம் ''ஆகையால் நீங்கள் புளிப்பு இல்லாதவர்களாய் இருக்கிறபடியே புதிதாய் பிசைந்த மாவாக இருக்கும் படிக்கு பழைய புளித்த மாவை புறம்பே களித்து போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டு இருக்கிறாரே'' 1பேதுரு 1:19-வது வசனம், ''குற்றம் இல்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்களே,'' என்று கூறுகின்றது.

பஸ்கா என்பதின் பொருள் கடந்து செல்லுதல் என்பது ஆகும். சங்கார தூதன் நள்ளிரவில் கடந்து செல்லும் பொழுது இரத்தம் நிலைகளில் பூசப்பட்ட வீடுகளில் எவ்வித தீங்கும் செய்வதற்கு அவன் முன் வர முடியவில்லை. இயேசுவின் இரத்தம் சுத்தம் செய்யும் மனித வாழ்வுகளை மரணம் தொடுவதற்கு உரிமை இல்லை. யோவான் 5:24-வது வசனத்தில், ''என் வசனத்தை கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினை தீர்ப்புக்கு உட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டு இருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்,'' என்று பார்க்கிறோம்.

12.3 பாவ நிவிர்த்தி பண்டிகை

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: அந்த ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்கு பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபை கூடும் பரிசுத்தநாளுமாய் இருப்பதாக அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்தி, கர்த்தருக்கு தகனபலி செலுத்தக்கடவீர்கள். அந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காக பாவநிவிர்த்தி செய்யப்படும் பாவநிவாரண நாளாய் இருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். அந்நாளிலே தன்னை தாழ்மை படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். அந்நாளிலே ஒரு ஆத்துமா யாதொரு வேலையை செய்தால், அந்த ஆத்துமாவை அவன் ஜனத்தின நடுவிலே வைக்காமல் அழிப்பேன். அதில் நீங்கள் எந்த வேலையும் செய்யாதிருப்பது உங்கள் வாசஸ்தலங்களில் எல்லாம் உங்கள் தலைமுறை தோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை. அது உங்களுக்கு விசேஷித்த ஓய்வுநாள் அதில் உங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்த வேண்டும் அந்த மாதத்தின் ஒன்பதாம் தேதி சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம் மட்டும் உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார். (லேவி. 23:26-32)

பஸ்கா பண்டிகையினை தொடர்ந்து அடுத்தாற்போல் பார்க்கும் பண்டிகை பாவ நிவிர்த்தி பண்டிகை என்பது ஆகும். பஸ்கா பண்டிகை சிலுவையை காட்டியது. பாவ நிவிர்த்தி

பண்டிகை சிலுவை தரும் மன்னிப்பை காட்டுகின்றது. இதனை இதே புத்ததகம் 16ம் அதிகாரத்தில் மிக தெளிவாக நாம் பார்த்தோம். பாவ நிவிர்த்தி தினம் ஒரு துக்கமான நாளாக ஆத்துமாவை ஒடுக்கும் நாளாக இருந்தாலும் பாவம் மன்னிக்கப்பட்டு விட்டது என்ற நிச்சயம் பண்டிகை தரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. இரட்சிப்பின் சந்தோஷத்திற்கு ஈடு இணையான சந்தோஷம் இந்த தரணியில் எங்குமே இல்லை. இன்ப நாள் இன்ப நாள் என் பாவம் தீர்ந்து போன நாள் என்று பாவ நிவிர்த்தி பண்டிகை மகிழ செய்கின்றது.

12.4 முதல் பலன் படைக்கும் பண்டிகை

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்கு கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய் சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதல் பலனாகிய ஒரு கதிர் கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு வரக்கடவீர்கள். உங்களுக்காக அது அங்கிகரிக்கப்படும்படி, ஆசாரியன் அந்த கதிர் கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும். நீங்கள் அந்த கதிர்க்கட்டை அசைவாட்டும் நாளில் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஆட்டு குட்டியையும், கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய போஜன பலியையும், திராட்ச பழரசத்திலே காற்படியாகிய பானபலியையும் செலுத்த கடவீர்கள். உங்கள் தேவனுக்கு காணிக்கையை நீங்கள் கொண்டு வரும் அந்நாள் மட்டும், அப்பமும் வாட்டிய கதிரும் பச்சை கதிரும் புசியீர்களாக. இது உங்கள் வாசஸ்தலங்களில் எல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை. (லேவி. 23:9-14)

பாவ நிவிர்த்தி பண்டிகையை தொடர்ந்து பார்க்க வேண்டிய அடுத்த பண்டிகை முதல்பலனை படைக்கும் பண்டிகை ஆகும். லேவி. 23:9-14 வசனங்களில் இந்த பண்டிகையின் விபரமும் கொடுக்கப்பட்டு உள்ளது. அறுவடை ஆரம்பிக்கும் பொழுது முதலாவது அறுத்த கதிரை ஆசரிப்பு கூடாரம் எடுத்து வந்து அசைவாட்டும் காணிக்கையாக படைப்பார்கள். முதல்பலனாகிய ஒரு கதிர் கட்டையை ஆசாரியரிடத்திற்கு கொண்டு வரக்கடவீர்கள் என்று லேவி. 23:11-வது வசனம் கூறுகின்றது. அந்த முதல் பலன் நமக்கு உயிர்த்து எழுந்த கிறிஸ்துவே என்று பரிசுத்த பவுல் 1 கொரி. 15:23-வது வசனத்தில் கூறுகின்றார். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதல்பலனானவர் கிறிஸ்து என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார். அதே அதிகாரம் 20-வது வசனத்தையும் பாருங்கள். ''கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரை அடைந்தவர்களில் முதல்பலனானார்'' என்று கூறுகின்றது. முதல்பலன் படைக்கும் நாளில் மெல்லிய மாவு படைக்கப்பட வேண்டும் என்று லேவி. 23:13-வது வசனம் கூறுகின்றது. நமக்கு முதல்பலனாக இருக்கும் ''இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாய் இருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியனர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கு ஏதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்'' என்று ரோமர் 8:11-வது வசனம் கூறுகின்றது. உயிர்த்து எழுந்த வல்லமை உள்ளத்தில் பெரும் பொழுது துப்புரவான இதயம் பெற்று கொள்ள படுகின்றது.

ரோமர் 15:16-வது வசனத்தை பாருங்கள். முதல்பலனாகிய மாவானது பரித்தமாக இருந்தால் பிசைந்த மா முழுவதும் பரிசுத்தமாக இருக்கும். வேரானது பரிசுத்தமாக இருந்தால் கிளைகளும் பரிசுத்தமாக இருக்கும்.

மூன்று பண்டிகைகளை நாம் முறைப்படி பார்த்தோம். பஸ்கா பண்டிகை சிலுவையில் காணும் தேவ ஆட்டு குட்டியை காட்டுகின்றது. பாவ நிவிர்த்தி பண்டிகை இயேசுவின் இரத்தம் மன்னிக்கின்றது என்ற அறிவிப்பை கொடுக்கின்றது. முதல்பலன் படைக்கும் பண்டிகை இயேசு உயிர்த்து எழுந்தார். இயேசு ஜீவிக்கிறார் என்று விளம்புகின்றது.

12.5 ஐம்பது நாள் பண்டிகை

நீங்கள் அசைவாட்டும் கதிர் கட்டை கொண்டு வரும் ஓய்வுநாளுக்கு மறுநாள் முதற்கொண்டு எண்ண துவக்கி, ஏழு வாரங்கள் நிறைவேறின பின்பு, ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்கு புதிய போஜன பலியை செலுத்த கடவீர்கள். நீங்கள் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாக பாகம் பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாய் இருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களில் இருந்து கர்த்தருக்கென்று முதல்பலனாக கொண்டு வந்து, அப்பத்தோடே கூட கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டு குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டு கடாக்களையும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாக அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் செலுத்தி, வெள்ளாடுகளில் ஒரு கடாவை பாவநிவாரண பலியாகவும், ஒரு வயதான இரண்டு ஆட்டு குட்டிகளைச் சமாதான பலியாகவும் இடக்கடவீர்கள். அவைகளை ஆசாரியன் முதல் பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டு குட்டிகளோடும் கூட கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டக்கடவன் கர்த்தருக்கு பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகள் ஆகும். அந்த நாள் உங்களுக்கு சபை கூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும் அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது இது உங்கள் வாசஸ்தலங்களில் எல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை. உங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், சிந்தி கிடக்கிற கதிர்களை பொறுக்காமலும், எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிட வேண்டும் நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார். (லேவி. 23:15-22)

லேவியராகம புத்தகம் 23-வது அதிகாரத்தில் நாம் பார்த்து வரும் பண்டிகைகளில் நான்காவது பண்டிகை ஐம்பதாவது நாள் பண்டிகை என்பது ஆகும். ஐம்பதாவது நாள் பண்டிகை என்பதை வாரங்களின் பண்டிகைகள் என்றும் கூறுவார்கள். இந்த பண்டிகையை குறித்து லேவி. 23:15,16 ஆகிய வசனங்களில் பாருங்கள். நீங்கள் அசைவாட்டும் கதிர் கட்டை கொண்டு வரும் ஓய்வு நாளுக்கு மறுநாள் முதல் கொண்டு எண்ண துவங்கி ஏழு வாரங்கள் நிறைவேறின பின்பு ஏழாம் ஓய்வு நாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள் மட்டும்

எண்ணி கர்த்தருக்கு புதிய போஜன பலியை செலுத்தக்கடவீர்கள்.'' பஸ்கா பண்டிகை முடிந்ததில் இருந்து நாட்களை எண்ண வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. சரியாக ஐம்பதாவது நாள் அந்த பண்டிகையினை கொண்டாட வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. பஸ்கா பண்டிகை சிலுவை மரணத்தையும், பாவ நிவிர்த்தி பண்டிகை இயேசுவின் இரத்தம் அருளும் பாவ மன்னிப்பையும், முதல் பலன் படைக்கும் பண்டிகை இயேசுவின் உயிர்த்தெழுதலையும் சுட்டி காட்டியது என்றும் நாம் பார்த்தோம்.

ஐம்பதாவது நாள் பண்டிகை அல்லது வாரங்களின் பண்டிகை என்று அழைக்கப்படும் இந்த பண்டிகை அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம் 2-வது அதிகாரத்தை சுட்டி காட்டுகின்றது. பரிசுத்த ஆவியானவர் இரங்கி வந்ததை சுட்டி காட்டும் பண்டிகையாக ஐம்பதாவது நாள் பண்டிகை காணப்படுகின்றது. பெரிய வெள்ளிக்கிழமை நமது பஸ்காவாகிய கிறிஸ்து சிலுவையில் மரித்தார். அன்றிலிருந்து சரியாக ஐம்பதாவது நாள் பரிசுத்த ஆவியானவர் பூமியில் இறங்கினார். ஐம்பது என்பதை குறிக்கும் கிரேக்க வார்த்தை ''பெந்தகோஸ்தா'' என்பது ஆகும். இப்பண்டிகையினை பெந்தேகோஸ்தே பண்டிகை என்று புதிய ஏற்பாடு கூறுகின்றது. 1கொரி. 14:8-வது வசனத்தில் ''ஆகிலும் பெந்தேகோஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன்'' என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார். இயேசுவின் மரணத்திற்கு பின் வந்த முதல் பெந்தேகோஸ்தே பண்டிகை நாள்தனிலே நூற்று இருபது விசுவாசிகள், இயேசுவின் சீஷர்கள் அனைவரும் எருசலேம் பட்டணத்தில் ஒரு இடத்தில் ஒருமனப்பட்டு ஜெபித்து கொண்டு இருந்தார்கள் என்பதையும் அவ்விதமாக ஜெபித்து கொண்டு இருக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் ஒவ்வொருவர் மீதும் வந்து அமர்ந்ததையும் அப். 2:1-4 வசனங்கள் கூறுகின்றன. ''பெந்தேகோஸ்தே என்னும் நாள் வந்த போது அவர்கள் எலலாரும் ஒருமனப்பட்டு ஓர் இடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்தில் இருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி அவர்கள் உட்கார்ந்து இருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் போல பிரிந்து இருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு தந்து அருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்''.

யாத்திராகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் எபிரெயர்கள் அடிமைகளாக இருந்த நேரத்தில் பஸ்காவை அனுசரித்ததை நாம் பார்த்தோம். எகிப்தில் இருந்து வெளியேறியதையும் நாம் பார்த்தோம். செங்கடலை கடந்து சீனாய் மலை அடிவாரம் வந்த ஐம்பதாவது நாள் இந்த பண்டிகை அனுசரிக்கப்பட கட்டளை பிறந்தது. பஸ்கா ஆசரித்ததில் இருந்து ஐம்பதாவது நாள் கொண்டாடப்பட்டபடியினால் இந்த பண்டிகையின் பெயர் ஐம்பதாவது நாள் பண்டிகை என்று பெயர் பெற்றது. பழைய ஏற்பாட்டில் ஐம்பதாவது நாள் என்று வரும் அந்த பண்டிகை புதிய ஏற்பாட்டில் கிரேக்க சொல் முறைப்படி பெந்தேகோஸ்தே பண்டிகை என்று அழைக்கப்படுகின்றது. இயேசு சிலுவையில் தமது ஜீவனை விட்டு மூன்றாவது நாள் உயிர்த்து எழும்பி நாற்பதாவது நாள் பரத்திற்கு ஏறி ஐம்பதாவது நாளில் பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். எபிரெய மக்களுக்கு நியாயப்பிரமாணம் வழங்கப்பட்ட பொழுது இடி முழக்கங்களை கேட்டார்கள் என்று யாத்திராகமம் 20-வது அதிகாரம் 18-வது வசனத்தில் நாம் பார்க்கிறோம். விசுவாசிகளாகிய அவர்கள் புதிய ஏற்பாட்டிலே ஐம்பதாவது நாளிலே கூடி ஜெபித்த பொழுது அவர்களும் பெரிய

முழக்கங்களை கேட்டார்கள் என்று அப். 2:2-வது வசனம் கூறுகின்றது. யாத்திராகமம் 20-வது அதிகாரத்தில் அக்கினி அந்த எபிரெய மக்களை அச்சுறுத்துவதாக இருந்தது. ஜனங்கள் வாய் மூடி நின்றார்கள். நாங்கள் செத்து போவோம் என்று கூறினார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டிலே அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் 2-வது அதிகாரத்தில் ஐம்பதாவது நாளில் அவர்கள் ஒருமித்து கூடி ஜெபித்த நாளில் விசுவாசிகளுடைய வாய் பூட்டப்பட்டு இருக்கவில்லை. விசுவாசிகள் வாய் திறந்து வெவ்வேறு பாஷைகளில் பேசினார்கள் என்று பார்க்கின்றோம். அவர்கள் கண்ட அக்கினி அவர்களை அச்சுறுத்தவில்லை. அவர்களை அபிஷேகம் செய்தது. செத்து போவோம் என்று அவர்கள் பழைய ஏற்பாட்டு மனிதர்கள் போல கூறவில்லை. உலர்ந்த எழும்புகளுக்கு உயிர் ஊட்டும் வல்லமையை பெற்றார்கள். மோசே நீர் பேசும் போதும் என்று கூறவில்லை. கர்த்தாவே சொல்லும் அடியார்கள் கேட்கிறோம் என்று அவர்கள் கர்த்தருடைய வல்லமையை பெற்று கர்த்தரின் சாட்சிகளாக எழும்பி நின்றார்கள்.

வல்லமையும், வரமும் பெற்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாட்சியாக திகழ்ந்தார்கள். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அற்புதத்திற்கு மேல் அற்புதம் கர்த்தாதி கர்த்தரை நம்பும் ஒரு தனிமனிதனுடைய வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும், ஊழிய பாதையிலும் இடம் பெற்று கொண்டே இருக்கும் என்பதையே நாம் பார்க்கின்றோம். அற்புதங்களை நம்புவதற்கு தயங்கும் உள்ளங்கள் பெரும் பயன்களை தங்கள் வாழ்க்கையில் இழக்கின்றன. லேவியராகம புத்தகம் 24-வது அதிகாரத்தில் ஐம்பதாவது நாள் பண்டிகை இடம் பெறும் பொழுது பழைய ஏற்பாட்டு புத்தகத்திலே அவர்கள் பற்பல பலிகளையும் அந்த பண்டிகை சமயத்தில் செலுத்தி இருந்து இருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். அவர்கள் செலுத்திய பலிகள் தகன பலி, போஜன பலி, பான பலி, பாவ நிவாரணபலி, சமாதான பலி, அசைவாட்டும் பலி என்று ஆறு பலிகளை அன்று அவர்கள் செலுத்தினார்கள் என்பதை 24:17,18,19,20 ஆகிய வசனங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

தகனபலி என்பது முற்றும் ஒப்புக்கொடுக்கும் ஓர் வாழ்க்கையை கொடுக்கின்றது. பரிசுத்த ஆவியானவர் முற்றும் கீழ்படிகின்றவர்களுக்கு என்றும் கொடுக்கப்பட்டு கொண்டே இருக்கின்றார் என்பதற்கு அன்று அவர்கள் ஐம்பதாவது நாள் பண்டிகையில் செலுத்திய தகனபலி நமக்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது.

போஜன பலி கர்த்தருடன் ஐக்கியம் என்பதற்கு ஓர் அடையாளமாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மை பிதாவோடும் அவரது ஒரே பேறான குமாரனோடும் ஐக்கியப்படுத்துகின்றார் என்பதற்கு போஜனபலி ஓர் அடையாளமாக இருக்கின்றது.

பான பலி என்பது வாழ்க்கை முழுவதையும் கர்த்தருக்கு ஊற்றி விடுவதற்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது. பழைய ஏற்பாட்டில் தனது வாழ்க்கை பான பலியாக யாக்கோபு என்பவர் கர்த்தருக்கு ஊற்றுவதை ஆதி. 35:14-வது வசனத்திலே நாம் பார்க்கின்றோம். ''அப்பொழுது யாக்கோபு தன்னோடே அவர் பேசின ஸ்தலத்தில் ஒரு கல் தூணை நிறுத்தி அதின் மேல் பான பலியை ஊற்றி எண்ணையையும் வார்த்தான்.'' பழைய ஏற்பாட்டிலே யாக்கோபு என்பவர் பான பலியாக தனது வாழ்க்கையை கர்த்தருக்கு வார்த்துவிட எண்ணையை ஊற்றினார். புதிய ஏற்பாட்டிலே பரிசுத்த பவுல் தனது ஜீவியத்தையே ஊற்றினார் என்பதை 2 தீமோத். 4:6-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். ''நான் இப்பொழுதே பான பலியாக வார்க்கப்பட்டு போகிறேன். நான் தேகத்தை விட்டு பிரியும் காலம் வந்தது,''

என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார். பான பலி பற்றி கர்த்தர் இட்ட கட்டளைகளை எண். 15:1-12 வசனங்களிலும் எண். 28:7,24 ஆகிய வசனங்களிலும் நாம் பார்க்கலாம். எவ்வித நிபந்தனையும் இடாமல் எவ்வித கேள்வியும் எழுப்பாமல் கைமாறு கருதாமல் அர்ப்பணிப்பது பானபலிக்கு சமமான ஒரு வாழ்வு என்று நாம் அறிகின்றோம். இரவு பகல் என்று பார்க்காமல், துன்பம் துயரங்கள் என்று எண்ணாமல் சன்மானம் கருதாமல் கர்த்தரின் பணியில் முன்னேறி செல்லுவது பான பலி என்று நாம் பார்க்கின்றோம்.

ஐம்பதாவது நாள் பண்டிகையிலே லேவியராகம புத்தகத்தில் அவர்கள் செலுத்திய அடுத்தபலி பாவ நிவாரணபலி என்பது ஆகும். பாவம் என்பது தேடி வந்தாலும் அதை நாடி செல்லாமல் பாவத்தை அறவே கசந்து வாழ்வதே பாவ நிவாரணபலி என்பது ஆகும். அதுவே பரிசுத்த ஆவியானவர் தரும் கிருபையும் ஆகும். இடம் பெறும் எதுவும் என்னால் அல்ல என்னுடைய ஆண்டவரால் மட்டுமே இடம் பெறுகிறது என்று அறிந்து கர்த்தரை கருத்தோடு துதித்து ஸ்தோத்திரத்தோடு வாழ்வதே சமாதான பலி என்பதின் பொருள் ஆகும். பரிசுத்த ஆவியானவர் தங்கும் இதயங்களின் உதடுகள் ஏறெடுக்கும் ஒரே பலி ஸ்தோத்திரபலி என்பதே ஆகும். அனைத்தையும் கர்த்தருக்கு கொடுப்பதும் அப்படி கொடுப்பதால் இன்னும் அதிகமாக பெற்று மகிழ்வதும் அசைவாட்டும் காணிக்கை என்பது ஆகும்.

பரிசுத்த ஆவியானவர் தரும் அனைத்து வரங்களையும் அனைத்து கிருபைகளையும் இயேசுவின் மகிமைக்காக மாத்திரம் பயன்படுத்துவது கிறிஸ்துவின் திருச்சபைக்கு உரமாக மாறுவதும் அசைவாட்டும் காணிக்கை என்பது ஆகும். லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் ஐம்பதாவது நாள் பண்டிகையுடன் சேர்ந்து செலுத்தப்படும் ஒவ்வொரு பலியும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் வாழ்க்கைகளுடன் சேர்ந்து வந்து இணையும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களாக தெரிகின்றது. பழைய ஏற்பாட்டில் லேவி. 23:21-வது வசனத்தில் ஐம்பதாவது நாள் பண்டிகை சபை கூடும் பரிசுத்த நாள் என்று கூறப்பட்டது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் 2-ம் அதிகாரத்தில் பெந்தேகோஸ்தே பண்டிகை தினத்தில் விசுவாசிகளுடைய அனைவரின் முதல் கூடுகை இடம் பெற்றது. பழைய ஏற்பாட்டில் லேவி. 23:22-வது வசனத்தில் ஐம்பதாவது நாள் பண்டிகை என்பது தரித்திரர்களை நினைக்கும் பண்டிகையாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது புதிய ஏற்பாட்டில் ஐம்பதாவது நாள் இடம் பெற்ற பெந்தேகோஸ்தே என்ற அந்த பண்டிகையின் பொழுது பரிசுத்த ஆவியானவரால் அவர்கள் நிரப்பப்பட்டார்கள். அது முதல் அவர்களும் தேவை உள்ள மனிதர்களை தேடி செல்லுவதற்கு புறப்பட்டார்கள். எருசலேம் சமாரியா யூதேயா என்று உலகின் அற்றம் வரை புறப்பட்டு சென்றார்கள். பசி தாகம் உள்ள அனைவருக்கும் கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்து பார்ப்பதற்கு ஓர் உதவியாளர்களாக அவர்கள் இருந்தார்கள்.

லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் ஏழு பண்டிகைகள் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதுவரை நான்கு பண்டிகைகளை நாம் பார்த்தோம். முதலாவது நாம் பார்த்த பண்டிகை பஸ்கா பண்டிகை என்பது ஆகும். அது இயேசுவிற்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது. இரண்டாவது நாம் பார்த்த பண்டிகை பாவ நிவிர்த்தி பண்டிகை என்பது ஆகும் அது இயேசு வழங்கும் பாவ மன்னிப்பிற்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது. மூன்றாவது நாம் பார்த்த பண்டிகை முதல்பலன் படைக்கும் பண்டிகை என்று நாம் பார்த்தோம். அது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது. பின்பு நாம் பார்த்த ஐம்பதாவது நாள் பண்டிகை என்பது பரிசுத்த ஆவியானவருக்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது. பரிசுத்தமான

மக்கள் கூட்டம் என்று அழைக்கப்படும் திருச்சபையின் பிறந்த நாளுக்கு ஓர் முன் அடையாளமாக இருக்கின்றது.

12.6 கூடார பண்டிகை

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாய் இருப்பதாக. முதலாம் நாள் சபை கூடும் பரிசுத்த நாள் அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. ஏழு நாளும் கர்த்தருக்கு தகனபலி செலுத்த கடவீர்கள் எட்டாம் நாள் உங்களுக்கு சபை கூடும் பரிசுத்த நாள் அதிலே கர்த்தருக்கு தகனபலி செலுத்த கடவீர்கள் அது ஆசரிக்கப்படும் நாள், அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாட்களில் செலுத்துவதும் தவிர, நீங்கள் கர்த்தருக்கு படைக்கிற உங்கள் எல்லா காணிக்கைகளும், பொருத்தனைகளும் உற்சாக பலிகளும் தவிர, நீங்கள் அந்தந்த நாளுக்கு தக்கதாய் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலி, போஜனபலி, இரத்தபலி, பானபலி, முதலானவைகளை செலுத்தும்படி சபை கூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக நீங்கள் கூற வேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகளே. நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்துவைக்கும் ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் கர்த்தருக்கு பண்டிகையை ஏழு நாள் ஆசரிக்க கடவீர்கள் முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு. முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டு வந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழு நாளும் மகிழ்ச்சியாய் இருங்கள். வருஷம் தோறும் ஏழு நாள் கர்த்தருக்கு இந்த பண்டிகையை ஆசரிக்க கடவீர்கள் இது உங்கள் தலைமுறை தோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை; ஏழாம் மாதத்தில் அதை ஆசரிக்கவேண்டும். நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணினபோது, அவர்களை கூடாரங்களில் குடியிருக்க பண்ணினதை உங்கள் சந்ததியார் அறியும்படிக்கு, ஏழு நாள் கூடாரங்களில் குடியிருக்க கடவீர்கள் இஸ்ரவேலில் பிறந்தவர்கள் எல்லோரும் கூடாரங்களில் வாசம்பண்ண வேண்டும் நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார். அப்படியே மோசே கர்த்தருடைய பண்டிகைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு தெரிவித்தான். (லேவி. 23:33-44)

லேவியராகம புத்தகத்தில் 23-வது அதிகாரத்தில் கூறப்பட்டு உள்ள ஏழு பண்டிகைகளில் ஐந்தாவது பண்டிகையான கூடார பண்டிகை என்பதை பற்றி நாம் பார்க்க இருக்கின்றோம். இதன் விபரம் லேவி. 23:33-44 வசனங்கள் வரை கொடுக்கப்பட்டு உள்ளது. அடிமைத்தன வாழ்வில் இருந்து மீட்கப்பட்டு கானான் நோக்கி செய்த பிரயாணத்தில் தங்கி தாபரித்த பொழுது அவர்கள் கூடாரங்களில்தான் வாழ்ந்து வந்தார்கள். வாழ்க்கை என்பது ஓர் வனாந்தர பிரயாணம் என்பதை வர்ணிப்பதற்கு கூடார பண்டிகை

கொடுக்கப்பட்டது. வனாந்தர பிரயாணத்தில் போராட்டங்கள் நிரம்ப உண்டு. கானான் என்பதற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு கண்கள் காண வேண்டிய வேதனைகள், ஏமாற்றங்கள், தோல்விகள் வனாந்தர பாதையில் அநேகம் உண்டு என்பதை கூடார பண்டிகை முன் கூட்டி தெரிவிக்கின்றது. இந்த உலகத்தில் எவரும் நிரந்தரம் இல்லை என்பதை கூடார பண்டிகை குறிக்கின்றது. மனுஷனுடைய ஆயுசு நாட்கள் எழுபது வருஷம் ஒருவேளை பெலத்தின் மிகுதியினால் எண்பது வருஷமாக இருக்கலாம் என்று கூறுகின்றது. அப்படியே இருந்தாலும் மனுஷனுடைய ஆயுசு நாட்களில் அவன் காணப்போவது வருத்தமும் சஞ்சலமும் தான் என்று கூடார பண்டிகை கூறுகின்றது. நாம் அநேக உபத்திரவங்கள் வழியாகத்தான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று பரிசுத்த பவுல் கூட அப். 14:22-வது வசனத்தில் கூறுகின்றார். வாழ்க்கை என்பது நிழல் போன்றது, தற்காலிகமானது என்பதை கூடார பண்டிகை ஒவ்வொரு மனிதனுக்கும் உணர்த்தி காட்டியது. ''நாளைக்கு நடப்பது உங்களுக்கு தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலம் தோன்றி பின்பு தோன்றாமல் போகின்ற புகையைப்போல் இருக்கின்றதே'' என்று பரிசுத்த யாக். 4:14-வது வசனத்தில் கூறுகின்றார்.

சங். 90:7-12 வசனங்களில் ''நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து உமது உக்கிரத்தினால் கலங்கி போகிறோம். எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும் எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர். எங்கள் நாட்கள் எல்லாம் உமது கோபத்தால் போய் விட்டது. ஒரு கதையை போல் எங்கள் வருஷங்களை கழித்து போட்டோம். எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியினால் எண்பது வருஷமாக இருந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே. அது சீக்கிரமாய் கடந்து போகின்றது, நாங்களும் பறந்து போகிறோம். உமது கோபத்தின் வல்லமையையும் உமக்கு பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்து கொள்ளுகிறவன் யார்? நாங்கள் ஞான இருதயம் உள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்கு போதித்தருளும்,'' என்று பார்க்கிறோம்.

கூடார பண்டிகை என்ற இந்த பண்டிகைக்கு இன்னொரு பெயர் சேர்க்கை பண்டிகை என்பதும் ஆகும். அறுவடைகள் காணும் பொழுது அதற்கு காரணமாக இருந்த கர்த்தரை மறந்து விடுவது நல்லது அல்ல. தற்காலிகமான வாழ்வில் வரக்கூடிய செல்வங்கள் சிறப்புகள் எதிலும் மனதை பதித்துவிட வேண்டாம் என்று அந்த பண்டிகை கூறுகின்றது. மனம் மேட்டிமை அடைவது நல்லதல்ல என்பதை காட்டும் பண்டிகையாக கூடார பண்டிகை அவர்களை உணர்த்துகிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட ஒவ்வொரு இதயமும் உலகத்திலும் அதில் உள்ளவைகளிலும் அன்பு கூறாமல் நமது குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது என்ற உள்ளான உறுதியுடன் வனாந்தர பிரயாணங்களை வெற்றியுடன் முடித்து கொள்ளுங்கள் என்று கூடார பண்டிகை கூறுகின்றது.

12.7 புளிப்பு இல்லாத அப்ப பண்டிகை

அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்கு புளிப்பில்லா அப்ப பண்டிகையுமாய் இருக்கும்; ஏழு நாள் புளிப்பில்லா அப்பங்களை புசிக்க வேண்டும். முதலாம் நாள் உங்களுக்கு பரிசுத்தமான சபை கூடுதல்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். ஏழு நாளும் கர்த்தருக்கு தகனபலி இடவேண்டும். ஏழாம் நாள் பரிசுத்தமான சபை

கூடுதல்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது என்று சொல் என்றார். (லேவி. 23:6-8)

லேவியராகமம் 23-வது அதிகாரத்தில் அடுத்ததாக பார்க்கும் பண்டிகை ஆறாவது பண்டிகை ஆகும். அது புளிப்பு இல்லாத அப்ப பண்டிகை என்பது ஆகும். லேவி. 23:6,7,8 ஆகிய வசனங்களில் இதனை பார்க்கின்றோம். அடிமை, எஜமான் என்ற உறவு எகிப்தில் இருந்தது. மீட்கப்பட்ட பின்பு உறவு வித்தியாசமாக இருந்தது. மீட்பர் மீட்கப்பட்டவர் என்ற உறவு உதயமானது. பாவத்தின் உறவு முறிந்தது. பயம், வெட்கம் அனைத்தும் நீங்கியது. நான் கர்த்தரை தேடினேன் அவர் எனக்கு செவி கொடுத்து என்னுடைய எல்லா பயத்திற்கும் என்னை நீங்கலாக்கி விட்டார் என்று சங். 34:4-வது வசனம் கூறும் கிருபையை கொடுப்பதே புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை என்பது ஆகும்.

புளிப்பு இல்லாத அப்ப பண்டிகை என்பது பாவத்தினால் முடங்கி கிடக்கும் வாழ்வுகளை தூக்கி நிறுத்துகின்றது. பயத்தினால் ஒதுங்கி வாழும் வாழ்வுகளை தைரியம் கொடுத்து முன்னாக செல்லுவதற்கு உறுதி கொடுக்கின்றது. வெட்கத்தினால் தலை குனிந்து வாழும் வாழ்வுகளை தலை நிமிர்ந்து வாழ செய்கின்றது. புளிப்பு என்பது பாவத்தை குறிக்கின்றது. முழு மனதுடன் பரிசுத்தமான ஒரு வாழ்வை விரும்பாமல் புளிப்பு என்பது புறக்கணிக்கப்படுவது இல்லை. பாவத்தை கசக்கவும் பரிசுத்தத்தை விரும்பவும் பரிசுத்த ஆவியானவர் உதவி செய்ய வரப்போகின்றார் என்பதை புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை முன் கூட்டி அறிவிக்கின்றது. சோர்ந்து போன வாழ்வுகளை இன்னும் ஒருமுறை உற்சாகப்படுத்த, மக்கிப்போன வாழ்வுகளை இன்னும் ஒரு முறை தீபம் ஏற்றி வாழ வைக்க இதோ பரிசுத்த ஆவியானவர் வரப்போகின்றார் என்று புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை அன்று முன் கூட்டி சொல்லியது. 1 கொரி. 5:7-வது வசனம். ''நீங்கள் புளிப்பு இல்லாதவர்களாய் இருக்கிறபடியே புதிதாய் பிசைந்த மாவாய் இருக்கும்படிக்கு பழைய புளித்த மாவை புறம்பே கழித்து போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டு இருக்கிறாரே.'' 2 கொரி. 7:1-ம் வசனத்தையும் பாருங்கள் ''இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்து கொண்டு பரிசுத்தமாக்குதலை தேவ பயத்தோடே பூரண படுத்த கடவோம்''. பாவத்தை முற்றிலும் வெறுத்து விடவும் பரிசுத்தராகிய தேவனுடன் மாத்திரம் ஐக்கியப்பட்டு வாழவும் புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை ஓர் அடையாளமாக கொடுக்கப்பட்டது. வனாந்தர பிரயாணம் வெற்றியாக அமைய வழிநடத்தும் கர்த்தருடன் ஐக்கியம் அதிக அவசியம் என்பதை புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை காட்டுகின்றது.

12.8 எக்காளம் ஊதும் பண்டிகை

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யாமல், கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும் என்று சொல் என்றார். (லேவி. 23:23-25)

பண்டிகையின் வரிசையில் ஏழாவதாக பார்க்கும் பண்டிகை எக்காளம் ஊதும் பண்டிகை என்பது ஆகும். லேவி. 23:23-25 வசனங்கள் வரை அதன் விபரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளது. எண். 10:1-9 வசனங்களிலும் எக்காள பண்டிகை அனுசரிப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் எக்காளம் என்பது இரண்டு முறையில் பயன் படுத்தப்பட்டது. முதலாவது எக்காளம் மக்களை ஓர் குறிப்பிட்ட சம்பவத்திற்கு ஆயத்தப்படுத்தியது. இரண்டாவது எக்காளம் ஓர் குறிப்பிட்ட சம்பவத்திற்கு அனைத்து மக்களையும் அழைத்தது. புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் ஊழியர்கள் ஓர் எக்காளம் போன்று அழைக்கின்றார்கள். வருத்தத்துடன் வாழ்க்கை நடத்தும் அனைவருக்கும் பரிசுத்தம் என்பது தரும் சமாதானம் சந்தோஷம் பெற்று வாழ அழைப்புகள் கொடுக்கப்படுகிறது.

ஊழியக்காரர்களுடைய நாட்கள் நிறைவேறிய பின்னர் தேவ தூதர்கள் எக்காளம் ஊத ஆரம்பிப்பார்கள். ஆயத்தப்படுத்துவதற்காக அல்ல. அவருக்கு உண்மையாக இருந்தவர்களை அழைத்து செல்லுவதற்காக தேவ தூதர்களுடைய எக்காள சத்தம் ஓர் நாள் கேட்கப்படும். அதுவரை ஒவ்வொரு ஊழியக்காரர்களும் உண்மையுடன் அவர் நமக்கு நியமித்த ஊழியத்தை செய்து முடிப்பதற்கு அவர்கள் கையில் கொடுக்கப்பட்ட எக்காளத்தை ஊதுவதற்கு கடமை பட்டு இருக்கின்றார்கள். எசே. 33:1-4 வசனம்: ''கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: மனுபுத்திரனே, நீ உன் ஜனத்தின் புத்திரரோடே பேசி, அவர்களோடே சொல்ல வேண்டியதாவது: நான் தேசத்தின் மேல் பட்டயத்தை வரப்பண்ணுகையில் தேசத்தின் ஜனம் தங்கள் எல்லைகளிலுள்ள ஒருவனை அழைத்து, அவனை தங்களுக்கு காவற்காரனாக வைத்த பின்பு, இவன் தேசத்தின்மேல் பட்டயம் வருதை கண்டு, எக்காளம் ஊதி, ஜனத்தை எச்சரிக்கும் போது, எக்காளத்தின் சத்தத்தை கேட்கிறவன் அதைக் கேட்டும், எச்சரிக்கையாயிராமல், பட்டயம் வந்து அவனை வாரி கொள்ளுகிறது உண்டானால் அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின்மேல் சுமரும்'' 6-வது வசனம்: ''காவற்காரன் பட்டயம் வருவதை கண்டும், அவன் எக்காளம் ஊதாமலும் ஜனங்கள் எச்சரிக்கப்படாமலும், பட்டயம் வந்து அவர்களில் யாதொருனை வாரி கொள்ளுகிறது உண்டானால், அவன் தன் அக்கிரமத்திலே வாரி கொள்ளப்பட்டான். ஆனாலும் அவன் இரத்தப்பழியை காவற்காரன் கையிலே கேட்பேன்.'' ''சத்தமிட்டு கூப்பிடு; அடக்கி கொள்ளாதே; எக்காளத்தை போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும்'' தெரிவிக்குமாறு ஏசாயா 58:1-வது வசனம் ஊழியக்காரர்களை எச்சரித்து அழைக்கின்றது.

லேவியராகம புத்தகம் 23-வது அதிகாரத்தில் பார்க்கும் எக்காளம் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் எக்காளம் ஊத வேண்டும் என்று கூறுகின்றது. கர்த்தரின் வசனங்களை அறிவிப்பதற்கு அவர்கள் கடமைப்பட்டு இருக்கிறார்கள் என்பதை எடுத்து கூறுகின்றது. உள்ளதை உள்ளது என்றும் இல்லதை இல்லது என்றும் எடுத்து உரைக்கவே பரிசுத்த ஆவியானவர் ஊழியர்களை நிரப்புகிறார் என்று கூறுகின்றது. நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமல் இருக்க கூடாது என்று பரிசுத்த பேதுருவும் பரிசுத்த யோவானும் அப். 4:20-வது வசனத்தில் எடுத்து கூறினார்கள். கர்த்தரின் ஊழியர்கள் ஊதும் எக்காளம் மக்களை மனம் திரும்ப, வருகையை எதிர்நோக்க ஆயத்தப்படுத்தும் எக்காளமாக அமைகிறது.

கர்த்தராகிய இயேசுவின் வருகையின் போது கர்த்தரின் ஊழியர்கள் அல்ல பரலோகத்தின் தூதர்களின் திரள் எக்காளம் ஊதுவார்கள். அது உலகை

ஆயத்தப்படுத்துவதற்காக அல்ல. ஆண்டவராகிய கர்த்தருக்கு உண்மையும் உத்தமுமாக வனாந்தர வாழ்க்கையிலே நடந்த அத்தனை பேர்களையும் அழைத்து செல்லுவதற்கு ஓர் நாள் தேவ தூதர்கள் எக்காளம் ஊதுவார்கள். மரித்த பரிசுத்தவான்களை தட்டி எழுப்புவதற்கு ஒரு நாள் கடைசி எக்காளம் ஊதப்படும். 1 கொரி. 15:51-59 வசனங்கள்: ''இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கின்றேன். நாம் எல்லாரும் நித்திரை அடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் பொழுது ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே நாம் எல்லாரும் மறுரூபம் ஆக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவு இல்லாதவர்களாய் எழுந்து இருப்பார்கள். நாமும் மறுரூபம் ஆக்கப்படுவோம். அழிவு உள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கு ஏதுவாகிய இது சாவாமையையும் தரித்து கொள்ள வேண்டும். அழிவு உள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கு ஏதுவாகிய இது சாவாமையும் தரித்து கொள்ளும் பொழுது மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர்மை பாவம். பாவத்தின் பலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால் எனக்கு பிரியமான சகோதரரே கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாக இராது என்று அறிந்து நீங்கள் உறுதி பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியைகளிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.''

மத். 24:30,31 ஆகிய வசனங்கள். ''அப்பொழுது மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷ குமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியில் உள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதல் கொண்டு மறு முனை மட்டும் நாலு திசைகளிலும் இருந்து கூட்டி சேர்ப்பார்கள்.'' 1 தெச. 4:16 முதல் பாருங்கள். ''ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்தில் இருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்து இருப்பார்கள். பின்பு உயிரோடு இருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்து கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரை ஒருவர் தேற்றுங்கள்.''

12.9 ஏழு பண்டிகைகள் காட்டும் வரும்கால நிகழ்வுகள்

லேவியராகம புத்தகம் 23-வது அதிகாரத்தில் ஏழு பண்டிகைகள் காணப்படுகின்றன. ஏழு பண்டிகைகளும் வரப்போகும் ஏழு நன்மைகளை நமக்கு எடுத்து காட்டுகின்றன. முதலாவது பண்டிகை பஸ்கா. அது இயேசுவை காட்டியது. இரண்டாவது பண்டிகை பாவ நிவிர்த்தி, அது இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் மன்னிக்கும் என்பதை காட்டியது. மூன்றாவது முதல் பலன் படைப்பு, உயிர்த்து எழுந்த இயேசுவை, ஜீவிக்கும் தேவனை, நேற்றும் இன்றும் என்றும் மாறாத இரட்சகரை காட்டியது. நான்காவது பண்டிகை ஐம்பதாவது நாள் பண்டிகை. அது அப்போஸ்தலர் 2-வது அதிகாரத்தை காட்டும் பண்டிகையாக மாறியது. பரிசுத்த ஆவியானவரை காட்டும் பண்டிகையாக மாறியது. திருச்சபையின் பிறந்த நாளை முன் காட்டும் பண்டிகையாக மாறியது. ஐந்தாவது பண்டிகை கூடார பண்டிகை.

விசுவாசிகளுக்கு நிலையான இடம் பூலோகம் அல்ல பரலோகமே என்று அது முன் கூட்டி சொல்லியது. ஆறாவது புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை என்பது ஆகும். வனாந்தர வாழ்விலே பரிசுத்தத்தை காத்து கொள்ளுங்கள், பரிபூரண வெற்றியுள்ள ஜீவியத்தை செய்து விடுங்கள், பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தில் நிலைவரப்பட்டு காணப்படுங்கள், ஆத்தும ஆதாயத்தில் முன் செல்லுங்கள் என்பதை புளிப்பு இல்லாத அப்பப்பண்டிகை காட்டியது. ஏழாவது பண்டிகை எக்காளம் ஊதும் பண்டிகை. பரிசுத்தம், வெற்றியுள்ள ஜீவியம், ஆத்தும ஆதாயம் செய்து வனாந்தர வாழ்விலே வாழ்ந்தவர்களுக்கு ஒரு நாள் விடியும், அன்றே அவர்களது விசுவாசத்தின் பலன் தெரியும். தேவ தூதரின் எக்காளம் தொனிக்கும். இயேசு சீக்கிரம் வரப்போகின்றார்.



யூதர்களின் பண்டிகை நாள்காட்டி

அத்தியாயம் - 13

கர்த்தராகிய தேவனை கனம் பண்ண பிரமாணங்கள்

13.1 எப்பொழுதும் குத்து விளக்கு எரிய வேண்டும்

லேவி. 24:1-9 வசனங்களில் இன்னும் ஒரு முறை ஆசரிப்பு கூடாரத்தின் மகிமையை நோக்கிப் பார்க்கின்றோம். ஆசரிப்பு கூடாரம் பரிசுத்த ஸ்தலம் மகா பரிசுத்த ஸ்தலம் என்று இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருப்பதை நாம் அறிவோம். அதில் பரிசுத்த ஸ்தலத்தில் மூன்று பொருட்கள் வைக்கப்பட்டு உள்ளன. அந்த மூன்று பொருட்களையும் சார்ந்த விபரங்கள் இன்னும் ஒரு முறை லேவி. 24:1-9 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன. அந்த மூன்று பொருட்களின் பெயர்கள் எது என்று நாம் நன்கு அறிவோம். பொன் குத்து விளக்கு, சமுகத்து அப்ப மேஜை, தூபபீடம் என்பவைகளே பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டு இருந்த மூன்று பொருட்கள் ஆகும். அதில் குத்து விளக்கு பற்றி சில குறிப்புகள் லேவி. 24:2,3,4 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன.

பசும் பொன்னினால் ஒரு குத்து விளக்கையும் உண்டாக்குவாயாக என்று குத்துவிளக்கு செய்யும் விதத்தை கர்த்தர் மோசேயிடம் யாத்திராகம புத்தகத்தில் கூறினார். அந்த குறிப்பு யாத். 25:31-39 வசனங்களில் பார்க்கலாம். கர்த்தர் கூறிய வண்ணமே மோசே குத்துவிளக்கினை செய்தார் என்பதை யாத். 37:17-24 வசனங்கள் கூறுகின்றன. அதனை எப்படி பயன்படுத்துவது, பராமரிப்பது என்ற குறிப்புகள் யாத். 27:20,21 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன. ''குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டு இருக்கும்படி இடித்து பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டு வரும்படி இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையிடுவாயாக.'' ஆசரிப்பு கூடாரத்தில் சாட்சி சந்நிதிக்கு முன்நிற்கும் திரைச்சீலைக்கு வெளிப்புறமாக ஆரோனும் அவன் குமாரரும் சாயங்காலம் தொடங்கி விடியற் காலம் மட்டும் கர்த்தருடைய சந்நிதானத்தில் அந்த விளக்கை எறிய வைக்க கடவர்கள். இது இஸ்ரவேல் புத்திரருக்கு தலைமுறை தலைமுறையாக நித்திய கட்டளையாக இருக்கக்கடவது என்று அந்த இரண்டு வசனங்களும் கூறுகின்றன. தொடர்ந்து யாத். 40:24,25 ஆகிய வசனங்களையும் பாருங்கள். ''பின்பு கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே குத்துவிளக்கு ஆசரிப்பு கூடாரத்தில் மேஜைக்கு எதிராக வாசஸ்தலத்தின் தென்புறத்திலே வைத்து கர்த்தருடைய சந்நிதியில் விளக்குகளை ஏற்றினான்.''

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: குத்து விளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும்படி அதற்காக இடித்து பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை இஸ்ரவேல் புத்திரர் உன்னிடத்தில் கொண்டு வரும்படி அவர்களுக்கு கட்டளையிடு. ஆசரிப்பு கூடாரத்தில் சாட்சி சந்நிதியின் திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை எப்பொழுதும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம் மட்டும் கர்த்தருடைய சந்நிதியில் எரியும்படி ஏற்றக்கடவன்; இது உங்கள் தலைமுறை தோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை. அவன் எப்பொழுதும் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான குத்து விளக்கின் மேல் இருக்கிற விளக்குகளை எரிய வைக்கக்கடவன். (லேவி. 24:1-4)

குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டு இருக்க வேண்டும் என்று 2-வது வசனம் துவங்குகின்றது. எப்பொழுதும் என்பது, சாயங்காலம் துவங்கி விடியற்காலம் மட்டும் என்று மூன்றாவது வசனம் திட்டவட்டமாக கூறுகின்றது. குத்துவிளக்கு ஏற்றி வைப்பது பிரதான ஆசாரியனுடைய பணியாக தெரிகின்றது. அவன் எப்பொழுதும் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான குத்து விளக்கின் மேல் இருக்கிற விளக்குகளை எரிய வைக்க வேண்டும். பிரகாசம் காணப்படுவதற்கு முதல் முதலாக பிரயாசம் எடுக்க வேண்டியவர் தீர்மானம் எடுக்கும் இடங்களில் இருக்கின்றவர்கள் என்பதை அது காட்டுகின்றது. அனைத்தும் ஒழுங்கும் கிரமமுமாக நடக்க பொறுப்பு எடுக்க வேண்டியவர்கள் பொறுப்பான இடத்தில் இருக்கிறவர்கள் என்பதை அது காட்டுகின்றது. தேவனுடைய வீட்டின் பணி முறைகளும் அவைகளை ஏற்ற பிரகாரம் எடுத்து நடத்தும் வகைகளும் ஊழியக்காரனாகிய ஆரோனுக்கும் அவனுடைய உடன் ஊழியக்காரர்களாகிய ஆசாரியருக்கும் கற்று கொடுக்கப்படுகின்றது. பரிசுத்த பவுலும் இவ்விதமாக தீமோத்தேயுவுக்கு கற்று கொடுத்தார் என்பதை 1தீமோ. 3:15-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். ''தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாய் இருக்கின்றது.''

லேவியராகம புத்தகம் லேவியர்களுக்காக கொடுக்கப்பட்ட குறிப்பு புத்தகம் ஆகும். எனவே கொடுக்கப்பட்ட ஊழியத்தை சொல்லப்பட்ட முறையில் செய்து முடிக்க அனைத்து குறிப்புகளும் கூறப்படுகின்றன. ஆதலால் நான் நிச்சயம் இல்லாதவனாக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ண மாட்டேன் என்று 1 கொரி. 9:26-வது வசனத்தில் மிக தெளிவாக தனது ஊழியத்தை வரையறுத்து பரிசுத்த பவுல் கூறுவதை நாம் பார்க்கின்றோம். சாயங்காலம் முதல் விடியற்காலம் வரை குத்து விளக்கு என்பது எரிந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதையும் அந்த பொறுப்பு பிரதான ஆசாரியனை சேரும் என்பதையும் லேவி. 24:4-வது வசனத்தில் தெளிவாக பார்க்கிறோம். ஆயினும் ஏலி என்ற பிரதான ஆசாரியன் அந்த ஆணையை அலட்சியம் செய்தான் என்பதை 1சாமு. 3:3-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். கர்த்தருடைய ஆலயத்தில் தேவனுடைய விளக்கு அணைந்து போகும் முன்னே சாமுவேலும் படுத்து கொண்டு இருக்கிறான் என்று அந்த வசனத்தில் நாம் பார்க்கிறோம். சிறிய சாமுவேலும் தூங்கும் பொழுது குத்து விளக்கு எரியவேண்டும். ஆனால் அணைந்து விட்டது. சாயங்காலம் துவங்கி விடியற்காலம் வரை எரிய வேண்டும். ஆனால் ஏலியின் காலத்தில் அப்படி நடக்கவில்லை. அது பிரதான ஆசாரியனின் வேலையாகும். ஆரோன் அப்படி செய்தான் என்று எண். 8:3-வது வசனம் கூறுகின்றது. கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்ட பிரகாரம் ஆரோன் செய்த விளக்கு தண்டிற்கு மேலே ஒழுங்காக அதின் விளக்குகளை ஏற்றினான் என்று பார்க்கின்றோம். அர்ப்பணத்துடன் ஆரோன் அன்று செய்த பணி போன்று பின்பு வந்த ஏலி செய்யவில்லை என்பதையும் நாம் பார்க்கின்றோம். தலைமை பொறுப்புகளை கடமை உணர்ச்சியுடன் எடுத்து நடத்துங்கள் என்று லேவி. 24:4-வது வசனம் ஞாபகப்படுத்துகின்றது.

குத்துவிளக்கு எரிந்துகொண்டே இருக்க வேண்டும் என்பது பிரதான ஆசாரியனின் வேலையாக இருந்தாலும் அதனை எரிய வைப்பதற்கு தேவைப்படும் ஒலிவ எண்ணையை கொடுத்து கொண்டே இருப்பது சபையாரின் கடமையாகும் என்று 2-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். இடித்து பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணையை இஸ்ரவேல் புத்திரர் பிரதான ஆசாரியனிடத்தில் கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்று நாம் படிக்கின்றோம்.

குத்துவிளக்கு எரிந்து கொண்டே இருப்பது ஒரே ஒருவனின் பொறுப்பு அல்ல என்பதை அதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். நாம் ஒருமித்து கர்த்தருடைய நாமத்தை உயர்த்த வேண்டும் என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. பிரதான ஆசாரியன், ஆசாரியன், சபை மக்கள் அனைவரும் ஏகோபித்து எடுத்து செய்ய வேண்டிய பணியாக ஆசரிப்பு கூடாரத்தின் அனைத்து பணிகளும் குத்துவிளக்கு இடைவிடாமல் எரிந்து கொண்டே இருப்பதும் இடம் பெறுகின்றது என்பதை அறிகின்றோம். பிரகாசம் கொடுப்பதற்காகவே குத்துவிளக்கு நிறுத்தப்பட்டது. வெளிச்சம் வீசுவதற்காகவே விசுவாசிகள் அழைக்கப்படுகின்றார்கள். மத். 5:14,15,16 ஆகிய வசனங்கள். ''நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள். மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கை கொழுத்தி மரக்காலால் மூடி வைக்காமல் அதை விளக்கு தண்டின் மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டில் உள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளை கண்டு பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது''. விசுவாசிகளின் வெளிச்சத்தின் அளவுகோல் அவர்கள் கண்களே என்று இயேசு கூறுவதை மத். 6:22,23 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கலாம். ''கண்ணானது சரீரத்தின் விளக்காய் இருக்கிறது. உன் கண் தெளிவாய் இருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாய் இருக்கும். உன் கண் கெட்டதாய் இருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாய் இருக்கும். இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாய் இருந்தால் அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்.'' குத்துவிளக்கு எரிவதற்கு ஒலிவ எண்ணை தேவைப்பட்டது. விசுவாசிகளின் ஜீவியம் பிரகாசிப்பதற்கு பரிசுத்தமான கண்கள் தேவைப்படுகின்றது. ''முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாக இருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்'' என்று எபே. 5:8-வது வசனம் கூறுகின்றது. மற்ற அனைவருக்கும் பிரகாசிக்கிற ஒழியாக வந்த இயேசுவே ஆசரிப்பு கூடாரம் கண்ட குத்துவிளக்கு ஆகும்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் விளக்கு ஏற்ற வேண்டும். உத்தம பிரதான ஆசாரியனாகிய இயேசு தாமே விளக்காக மாற வேண்டும். நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன் என்றார் இயேசு. அதனை தொடர்ந்து என்னை பின்பற்றுகிறவன் இருளில் வாழ்வது இல்லை என்றும் கூறினார். சாதாரண ஒளி அல்ல. ஜீவ ஒளியே என்னை பின் பற்றுகின்றவர்கள் காணும் ஒளி என்றார். அதை வேறு யாரிடமும் கூறவில்லை. விபசார குற்றத்தில் கையும் மெய்யுமாக பிடிபட்ட ஒரு பெண்ணிடம் அவ்வாறு கூறினார். பரிசுத்த யோவான் 8:10-12 வசனங்கள். ''இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயை தவிர வேறு ஒருவரையும் காணாமல் ஸ்திரியே உன் மேல் குற்றம் சாட்டினவர்கள் எங்கே, ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள் இல்லை ஆண்டவரே என்றாள். இயேசு அவளை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை. நீ போ, இனி பாவம் செய்யாதே என்றார். மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னை பின்பற்றுகின்றவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்து இருப்பான் என்றார்.''

அனைவரும் அவளை கல் எறிந்து கொன்றுவிட ஆயத்தமாகி கொண்டு இருக்கும் பொழுது இருளில் இருந்த அந்த பெண்ணிற்கு பெரிய வெளிச்சமாக இயேசு மாறினார். நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன் என்று கூறும் இயேசு தவறும் மனிதன் எவருக்கும் ஒளியாகவே இருக்கின்றார்.

ஆசரிப்பு கூடாரத்தின் குத்துவிளக்கு பரிசுத்தமான குத்துவிளக்கு என்று லேவி. 24:4-வது வசனம் கூறுகின்றது. குத்துவிளக்கு அணைந்து விடுதல் என்பது பரிசுத்தமே மறைந்து விடுதல் என்பதற்கு சமமாக தெரிகின்றது. பிரதான ஆசாரியனான ஏலியின் நாட்களில் குத்துவிளக்கு எரியவில்லை. ஏலியின் வீடு துவங்கி அனைவரின் வீட்டிலும் பரிசுத்தம் காணப்படவில்லை. லேவியராகமத்தின் கருப்பொருள் பரிசுத்தம் என்பதே ஆகும். அதன் பொருள் பிரகாசமான வாழ்வு என்பதே ஆகும். இதயத்தில் இருள் இன்றி வாழ்கின்றவர்களுக்கு எதிர்காலம் என்றுமே ஒளிர் விட்டு காணப்படும்.

லேவி. 24:1-9 வசனங்கள் பரிசுத்த ஸ்தலத்திலுள்ள பற்பல பொருட்களை பற்றி கூறுகின்றது. பரிசுத்த ஸ்தலத்தில் குத்துவிளக்கு, சமுகத்து அப்பமேஜை, தூப பீடம் என்ற மூன்று பொருட்கள் இருந்தன. குத்துவிளக்கு பற்றிய குறிப்புகள் 1-4 வசனங்களில் கொடுக்கப்பட்டது. 5-7 வசனங்களில் சமுகத்து அப்பமேஜை, தூபத்தில் இடப்படும் தூபவர்க்கம் ஆகிய இரண்டு குறிப்புகளும் காணப்படுகின்றன.

13.2 சமுகத்து அப்ப மேஜையில் நித்திய அப்பம்

அன்றியும் நீ மெல்லிய மாவை எடுத்து, அதை பன்னிரண்டு அப்பங்களாக சுடுவாயாக; ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே பத்தில் இரண்டு பங்கு மாவினால் செய்யப்பட வேண்டும். அவைகளை நீ கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின் மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைத்து, ஒவ்வொரு அடுக்கினிடத்தில் சுத்தமான தூபவர்க்கம் போடக்கடவாய்; அது அப்பத்தோடு இருந்து, ஞாபக குறியாக கர்த்தருக்கு ஏற்ற தகன பலியாயிருக்கும். அப்பத்தை நித்திய உடன்படிக்கையாக இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி, ஓய்வுநாள் தோறும் கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கி வைக்கக்கடவன். அது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அதை பரிசுத்த இடத்திலே புசிக்கக்கடவர்கள்; நித்திய கட்டளையாக கர்த்தருக்கு இடப்படும் தகன பலிகளில் அது அவனுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும் என்றார். (லேவி. 24:5-9)

சமுகத்து அப்ப மேஜை செய்யப்பட வேண்டிய முறை யாத். 25:23-30 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. சமுகத்து அப்ப மேஜை சித்தீம் மரத்தினால் செய்யப்பட்டது. சித்தீம் மரம் என்பது கர்த்தராகிய இயேசுவின் மானிட வாழ்விற்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது. சமுகத்து அப்ப மேஜை பசும் பொன்னினால் மூடப்பட்டது. இயேசுவின் தேவ மகத்துவத்திற்கு அது ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது. மனுஷ குமாரனும் தேவ குமாரனுமாக இயேசுவை ஏற்றி கூறுவதே சமுகத்து அப்ப மேஜை என்பது ஆகும். எனவே லேவியராகமம் 24-வது அதிகாரத்தில் சமுகத்து அப்ப மேஜை மிக முக்கியத்துவம் பெறுகின்றது. மேஜையின் உயரம் இரண்டேகால் அடி ஆகும். எட்ட முடியாத தூரத்தில் அல்ல, ஏற முடியாத உயரத்தில் அல்ல வந்து அடையத்தக்க கன்மலையாகவே இயேசு இருக்கிறார் என்பதை சமுகத்து அப்ப மேஜையின் உயரம் நமக்கு காட்டுகின்றது. நாங்கள் கேட்டும் கண்டும் பார்த்தும் தொட்டும் இருக்கிற இயேசு என்பதே பரிசுத்த யோவான் தனது முதலாவது நிரூபத்தில் முதலாவது வசனத்தில் கொடுக்கும் சாட்சி ஆகும்.

சமுகத்து அப்ப மேஜையும் அகலமும் நீளமும் மிக பெரியது அல்ல. மூன்று அடி நீளமும் ஒன்றரை அடி அகலமும் கொண்டது ஆகும். ஆயினும் அதில் 12 சமுகத்து அப்பங்கள் இரண்டு வரிசையாக வைக்கப்படுவதற்கு போதுமான இடம் இருந்ததாக அறிகின்றோம். பன்னிரண்டு சமுகத்து அப்பங்களும், பன்னிரண்டு கோத்திரங்கள் சார்பாக வைக்கப்பட்டன. பன்னிரண்டு கோத்திரங்கள் பின் ஒரு நாள் இரண்டாக பிரிந்து யெரோபெயாம் என்பவர் தலைமையில் 10 கோத்திரங்களும், ரெகோபெயாம் என்பவர் தலைமையில் இரண்டு கோத்திரங்களுமாக மாறி போய்விட்டன. ஆயினும் அப்பொழுதும் கூட சமுகத்து அப்ப மேஜையில் பன்னிரண்டு அப்பங்கள் தவறாமல் வைக்கப்பட்டன என்பதை 2 நாளா. 13:11-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். கர்த்தராகிய இயேசு தம்மிடத்தில் வருகிற எவரையும் தள்ளுகிறவர் அல்ல. மேஜையின் அகலமும் நீளமும் மிக சிறியதாக இருந்தாலும் கூட பன்னிரண்டு அப்பங்களுக்கு இடம் இருந்தது. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு என்பதே இயேசு அறிவிக்கும் அறிவிப்பு ஆகும்.

என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருபோதும் புறம்பே தள்ளுவது இல்லை என்பதே இயேசுவின் அன்பான அழைப்பு ஆகும். தம்மை நிராகரித்தாலும் தாம் எவரையும் நிராகரிக்க போவது இல்லை என்றே இயேசு கூறுகின்றார். கோத்திரங்கள் இரண்டாக பிரிந்து விட்டாலும், பன்னிரண்டு சமுகத்து அப்பங்கள் இரண்டாக பிரிக்கப்படவே இல்லை.

நான் பரிசுத்தராக இருப்பது போன்று நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்பதை லேவியராகம புத்தகத்தில் ஒரு நிபந்தனையாக கர்த்தர் வைத்து இருக்கிறார். ஒவ்வொரு கோத்திரமும் தன் சமூகத்தில் மட்டும் தங்கி இருக்க வேண்டும் என்பதை கர்த்தர் எதிர்பார்க்கின்றார். சமுகத்து அப்ப மேஜை கிருபாசனத்திற்கு மிகவும் சமீபமாக இருந்தது. கர்த்தர் தமது பிள்ளைகளை தமது நிழலில் வாழும் படியே எதிர்பார்க்கின்றார். 12 கோத்திரமும் பரிசுத்தராகிய தேவனுக்கு ''எங்களை முற்றிலும் சமர்ப்பிக்கிறோம், அர்பணிக்கிறோம்'' என்று கூறுவதற்கு ஓர் அடையாளமாக ஓர் சமுகத்து அப்பம் அத்தனை அருகில் கிருபாசனத்து அண்டையிலே வைக்கப்பட்டது. அர்ப்பணம் பிரதிஷ்டை என்பது புதுப்பிக்கப்பட்டு கொண்டே இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். அதற்கு ஒரு மாதிரியாக ஒவ்வொரு ஓய்வு நாளும் 12 அப்பங்களும் புதுப்பிக்கப்பட்டு கொண்டே இருந்தன. புதிய அப்பங்கள் ஒவ்வொரு ஓய்வு நாளிலும் மாற்றி வைக்கப்பட்டது.

லேவி. 24:8-வது வசனம். ''அப்பத்தை நித்திய உடன்படிக்கையாக இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி ஓய்வுநாள் தோறும் கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கி வைக்கக்கடவன்.'' சபையார் அப்பங்களை சுட்டு கொண்டு வரவில்லை. அப்பங்கள் சுடுவதற்கு உரிய மாவுகளை தயாரித்து கொண்டு மட்டும் வந்தார்கள். பரிசுத்தமான சமுகத்து அப்பங்களை தயாரிக்கும் பொறுப்பு லேவியருக்கு மட்டுமே உரிய பொறுப்பு ஆகும். 1 நாளா. 9:32-வது வசனம் ''அவர்கள் சகோதரராகிய கோகாத்தேரின் புத்திரரில் சிலருக்கு ஓய்வு நாள் தோறும் சமுகத்து அப்பங்களை ஆயத்தப்படுத்தும் விசாரிப்பு இருந்தது. ஓய்வு நாள் தோறும் பழைய அப்பங்கள் எடுக்கப்பட்டன. புதிய அப்பங்கள் வைக்கப்பட்டன. கர்த்தருடைய நாளை கருத்துடன் ஆசரிப்பதினால் இழந்து போன பெலன்கள் புதுப்பிக்கப்படுகின்றன. பழையவைகள் மறைந்து போகின்றன. எல்லாம் புதியவைகளாக மாறுகின்றன. கர்த்தருடைய ஆலயத்திற்கு கர்த்தருடைய நாளில் செல்லும் பொழுதெல்லாம் வரும் நாட்களுக்கு தேவையான ஒரு புதிய வல்லமை பெற்று கொண்டே வீடு திரும்புகின்றோம். எடுக்கப்பட்ட பரிசுத்த அப்பங்களை ஆசாரியர்கள் தவிர மற்றவர்கள் பயன்படுத்த முடியாது.

பரிசுத்தமானவைகளை பரிசுத்த ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட ஊழியர்கள் மட்டும் பரிசுத்தமான முறையில் கையாளவேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.''

ஒவ்வொரு ஓய்வு நாளும் அப்பங்கள் மாற்றப்படுவது பன்னிரெண்டு கோத்திரங்களும் மறவாமல் கர்த்தருக்கு நன்றி தெரிவிப்பதற்கு ஓர் அடையாளமாக அமைகின்றது. ஓய்வு நாளில் இதுவரை கர்த்தர் பாராட்டிய சகல உபகாரங்களையும் மறவாமல் ஒருவருடன் ஒருவர் பகிர்ந்து கொள்ள வேண்டும், கர்த்தர் நல்லவர் என்பதை மனதில் நினைத்து மகிழ வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நன்றி உணர்வுடன் கர்த்தரை விசுவாசிக்கின்றவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பது ஓர் எதிர்பார்ப்பு. 10 குஷ்டரோகிகளை இயேசு சுத்தமாக்கினார். ஆனால் ஒரே ஒருவர் மட்டும் வந்து இயேசுவுக்கு நன்றி கூறினார். சுத்தமானவர்கள் 10 பேர் அல்லவா என்று இயேசு வியந்தார். ஜெபிக்க பத்து பேர் செல்லும் பொழுது துதிக்க ஒரே ஒருவர் மட்டுமே செல்லுகின்றார். சமுகத்து அப்ப மேஜையில் உள்ள 12 அப்பங்களும் 12 கோத்திரங்களையும் போஷிப்பதற்காகவும் காப்பாற்றுவதற்காகவும் ஸ்தோத்திரம் என்று கிருபாசனத்தை நோக்கி கூறுவதை போல அமைக்கப்பட்டு உள்ளன. சமுகத்து அப்பம் ஜீவ அப்பமாகிய இயேசுவிற்கு ஓர் முன் அடையாளமாக தெரிகின்றது. யாத்திராகமம் 3-வது அதிகாரத்தில் மோசேயிடம் இருக்கிறவராக இருக்கிறேன் என்று கூறிய கர்த்தர் பசியாக இருக்கிறவர்களுக்கு இதோ நான் ஜீவ அப்பமாக இருக்கிறேன் என்று கூறுவது போல இருக்கின்றது. தாகமாக இருக்கின்றவர்களுக்கு ஜீவ தண்ணீராக இருக்கிறார் என்பதற்கு அனைத்தும் ஓர் அறிகுறியாக மாறுகின்றது. ஆத்தும பசிக்கு ஓர் இறுதியான விடையாக இயேசு இருக்கிறார் என்பதை மேஜை மீது வைக்கப்பட்ட அத்தனை அப்பங்களும் சாட்சியாக கூறுகின்றன. யோவான் 6:35-வது வசனம். ''இயேசு அவர்களை நோக்கி ஜீவ அப்பம் நானே என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசி அடையான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.'' அதே அதிகாரம் 33-வது வசனம். ''வானத்தில் இருந்து இறங்கி உலகத்தில் ஜீவனைக்கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்.'' அதே அதிகாரம் 47-51 வசனங்கள். ''என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகின்றேன். ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவை புசித்து இருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமல் இருக்கும்படி வானத்தில் இருந்து இறங்கின அப்பம் இதுவே. நானே வானத்தில் இருந்து இறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்.'' நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாமிசம் என்றார்.

அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு தாரும். எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் பசியில் வாட விடாதேயும் என்று ஜெபிக்க சமுகத்து அப்பங்கள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. இதயத்தில் ஏற்படும் ஆத்தும பசியை போக்கும் ஜீவ அப்பமாக இயேசுவே எங்களுக்கு நீர் இருந்தருளும் என்று கேட்க, ஆத்துமா நஷ்டமாக விடாதேயும் என்று ஜெபிக்க சமுகத்து அப்பங்கள் நம்மை ஊக்கப்படுத்துகின்றன. வயிற்று பசியையும் ஆத்துமாவின் தேவையையும் பூர்த்தி செய்ய வந்த ஜீவ அப்பம் இயேசு என்பதை சமுகத்து அப்பம் நினைவு ஊட்டுகின்றது. 12 அப்பங்களும் சமுகத்து அப்ப மேஜை மீது இரண்டு அடுக்காக அடுக்கி வைக்கப்பட்டது என்று நாம் பார்க்கிறோம். இரு அடுக்குகளின் நடுவிலே தூப வர்க்கம் இடப்பட்டது. லேவி. 24:7-வது வசனம் இதனை கூறுகின்றது. தூபவர்க்கம் என்பது ஜெபம் விண்ணப்பம் என்பதற்கு சமமானதாகும். இரண்டு அடுக்குகளை இணைக்க நடுவாக தூப வர்க்கம் வருகின்றது. இரண்டு தனி நபர்களை இணைக்க நடுவாக ஜெபமே

வருகின்றது. கணவனையும் மனைவியையும் இணைக்கும் ஓர் வர்க்கமாக தூபவர்க்கம் ஜெபம் விண்ணப்பம் என்பது அமைகின்றது. குடும்ப ஜெபம் என்பது மிக முக்கியமானது என்பதை இந்த இரண்டு அடுக்குகள் நடுவில் தூப வர்க்கம் இடம் பெறுவதில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

ஜெபம் என்ற ஒன்றே குடும்பங்களையும், சபைகளையும், விசுவாசிகளையும் இணைப்பதாக இருக்கின்றது. தூப வர்க்கத்தின் புகை மண்டலமும் நறுமணமும், பரிசுத்தராகிய தேவனை நோக்கி செல்லுகின்றது. உடைந்த இருதயங்களில் இருந்து வரும் கதறல்களும், கண்ணீர்களும் கர்த்தரை நோக்கி செல்லுகின்றது. ஜீவ அப்பத்தை உட்கொள்ளுகின்றவர் ஜெப தூபம் என்பதை நிறுத்தாமல் ஏறெடுத்து கொண்டு இருப்பவர், இராஜாக்கள் ஆசாரியர்கள் என்ற வரிசையில் ஒரு நாள் நிறுத்தப்படுவார்கள் என்று வேதம் கூறுகின்றது. அவர்கள் மகா மேன்மை அடைவார்கள் என்று வேதம் கூறுகின்றது. வெளி. 5:8,9,10 ஆகிய வசனங்கள். ''அந்த புஸ்தகத்தை அவர் வாங்கின போது அந்த நான்கு ஜீவன்களும் இருபத்து நான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும் பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து தேவனின் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராக இருக்கிறீர். ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு சகல கோத்திரங்களையும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலும் இருந்து எங்களை தேவனுக்கு என்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர். நாங்கள் பூமியிலே அரசாளுவோம்'' என்ற புதிய பாட்டை பாடினார்கள்.

13.3 கர்த்தரின் நாமத்தை நிந்தித்தவன் கொலை செய்ய படுவான்

அக்காலத்திலே இஸ்ரவேல் ஜாதியான ஸ்திரீக்கும் எகிப்திய புருஷனுக்கும் பிறந்த புத்திரனாகிய ஒருவன் இஸ்ரவேல் புத்திரரோடே கூட புறப்பட்டு வந்திருந்தான்; இவனும் இஸ்ரவேலனாகிய ஒரு மனிதனும் பாளயத்தில் சண்டை பண்ணினார்கள். அப்பொழுது இஸ்ரவேல் ஜாதியான அந்த ஸ்திரீயின் மகன் கர்த்தரின் நாமத்தை நிந்தித்து தூஷித்தான். அவனை மோசேயினிடத்தில் கொண்டு வந்தார்கள். அவன் தாயின் பெயர் செலோமித்; அவள் தாண் கோத்திரத்தானாகிய திப்ரியின் குமாரத்தி. கர்த்தரின் வாக்கினாலே தங்களுக்கு உத்தரவு வருமட்டும், அவனை காவல் படுத்தினார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: தூஷித்தவனை பாளயத்துக்கு புறம்பே கொண்டு போ; கேட்டவர்கள் எல்லாரும் தங்கள் கைகளை அவன் தலையின் மேல் வைப்பார்களாக; பின்பு சபையார் எல்லாரும் அவனை கல்லெறிய கடவர்கள். மேலும் நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: எவனாகிலும் தன் தேவனை தூஷித்தால், அவன் தன் பாவத்தை சுமப்பான். கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலை செய்யப்பட வேண்டும்; சபையார் எல்லாம் அவனை கல்லெறிய வேண்டும்; பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தை தூஷிக்கிறவன் கொலை செய்யப்பட வேண்டும். (லேவி. 24:10-16)

லேவி. 24:10-14 வசனங்கள் நியாயம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று கூறுவதை நாம் பார்க்கலாம். யார் யார் என்ற வித்தியாசம் பாராட்டப்படாமல் நியாயம் என்பது உறுதியாக நிறைவேற்றப்பட வேண்டும் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். விரும்பியவர்களுக்கு ஒன்றும் வெறுக்கின்றவர்களுக்கு ஒன்றுமாக நியாயம் என்பது அமைய முடியாது என்பதை இந்த வசனங்களில் நாம் அறிந்து கொள்ளுகின்றோம். தெரிந்தவர்களுக்கு ஒன்றும் தெரியாதவர்களுக்கு ஒன்றும், வசதி உள்ளவர்களுக்கு ஒன்றும் வசதி இல்லாதவர்களுக்கு ஒன்றும், நெருங்கி பழகுகின்றவர்களுக்கு ஒன்றும் தள்ளி நிற்கின்றவர்களுக்கு ஒன்றும் என்ற நியாயம் மோசேயினால் நடத்தப்படவில்லை என்று நன்றாக இந்த அதிகாரம் விளக்கி கூறுகின்றது. லேவி. 24:22-வது வசனம். ''உங்களில் பரதேசிக்கும், சுதேசிக்கும் ஒரே நியாயம் இருக்க வேண்டும். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்.''

நியாயம் ஒரே நியாயமாக இருக்க கர்த்தர் விரும்புகின்றார். தமக்கு கீழ்படிகின்ற அனைவருக்கும் ஒரே நியாயத்தை கர்த்தர் கட்டளையிடுகின்றார். யார் என்ற வித்தியாசம் பாராட்டாமல் கொடுக்கப்படும் நியாயமாக கர்த்தருடைய நியாயங்கள் இருக்கின்றன என்று ரோமர் 2:11-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை என்று அந்த வசனம் கூறுகின்றது. அப். 10:34,35 ஆகிய இரண்டு வசனங்களையும் பாருங்கள். ''அப்பொழுது பேதுரு பேச தொடங்கி தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல என்றும் எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்து நீதியை செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்து இருக்கிறேன்'' என்று அந்த வசனங்கள் கூறுகின்றன. யார் என்ற வித்தியாசமே பாராட்டாமல் தீர்ப்பு என்பது கொடுக்கப்படும் என்பதற்கு ஒரு எடுத்து காட்டாக லேவி. 24:10-12 ஆகிய வசனங்களில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். கர்த்தருடைய நாமத்தை தூஷித்தான் என்பதே அந்த மனிதன் செய்த குற்றம் ஆகும்.

நீதியும் நியாயமும் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதை இந்த அதிகாரம் கூறுகின்றது. லேவி. 24:11-வது வசனத்தில் தூஷித்தல் என்ற குற்றம் இடம் பெற்றது. வேத புத்தகத்தில் தூஷித்தல் என்பது இரண்டு முறைகளில் இடம் பெறலாம் என்று கூறப்பட்டு உள்ளது. முதலாவது பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனை தூஷிப்பது என்பதும் இரண்டாவது பெற்று எடுத்த பெற்றோர்களை தூஷிப்பது என்பதும் ஆகும். இந்த இரண்டு தூஷணங்களையும் கர்த்தர் விரும்பவில்லை என்பதை பரிசுத்த வேதாகமம் தெளிவாக கூறுகின்றது. கர்த்தர் பரம தகப்பன். அப்பா சொந்த தகப்பன். பரம தகப்பனின் பிள்ளைகள், சொந்த தகப்பனுக்கு பிறந்த பிள்ளைகள் என்று அழைக்க படுகின்ற பிள்ளைகள் தேவனையும் பெற்றோரையும் தூஷிக்கக்கூடிய அளவிற்கு அவர்களுடைய இருதயம் கடினப்பட்டு போவது அவர்களுக்கே நல்லது அல்ல என்று வேத புத்தகம் எச்சரிக்கின்றது.

மத்தேயு 15:9-வது வசனத்திலும், மாற்கு 7:20-23-வது வசனம் வரையும் தூஷணம் என்பது இதயத்தில் இருந்து எழும்புகின்ற ஒரு பாவம் என்று கூறப்பட்டு உள்ளது. மாற்கு 7:20-23 வசனங்களை பாருங்கள். ''மனுஷனுக்கு உள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனை தீட்டு படுத்தும். எப்படியெனில் மனுஷருடைய இருதயத்திற்குள் இருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்ட தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய

இவைகளெல்லாம் உள்ளத்தில் இருந்து புறப்பட்டு மனுஷனை தீட்டுப்படுத்தும் என்றார்.'' இதயத்தில் கோபம் பொங்கும் பொழுது வாயின் வார்த்தைகள் வடிகட்டப்படுவதில்லை.

மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கு பதிலாக சாபங்களே வாயில் இருந்து வருகின்றன. யாக். 3:8-10 வசனங்களை பாருங்கள். ''நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்கு உள்ளதும், சாவுக்கு ஏதுவான விஷம் நிறைந்ததுமாய் இருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனை துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகின்றது. என் சகோதரரே இப்படி இருக்கலாகாது'' என்று அந்த வசனங்கள் கூறுகின்றது.

லேவி. 24:10-12 வசனங்களில் இரண்டு நபர்கள் கோபம் பொங்கி சண்டை இடுவதை பார்க்கின்றோம். உணர்ச்சிவசப்பட்டு ஒருவன் சாபம் கூறுவதையும் பார்க்கின்றோம். லேவி. 24:11-வது வசனத்தில் அப்பொழுது இஸ்ரவேல் ஜாதியான அந்த ஸ்திரீயின் மகன் கர்த்தரின் நாமத்தை நிந்தித்து தூஷித்தான் என்று எழுதப்பட்டு உள்ளது. அவனது தாயின்பெயர் செலோமித் என்று கொடுக்கப்பட்டு உள்ளது. ஆனால் அவளது கணவனுடைய பெயர் கொடுக்கப்படவில்லை. அவன் எகிப்து தேசத்தை சேர்ந்தவன் என்று மட்டுமே கூறப்பட்டு உள்ளது. அவளது தகப்பன் பெயர் கொடுக்கப்பட்டு உள்ளது. அவளது கோத்திரத்தின் பெயரும் கூட கொடுக்கப்பட்டு உள்ளது. எபிரெயர்கள் அன்று சுமார் 430 வருஷம் எகிப்தில் இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அப்பொழுது எபிரெயர்களும் எகிப்தியர்களும் சம்பந்தம் கலந்தது உண்டு. பஸ்கா ஆட்டின் இரத்தம் தங்களது வீட்டின் வாசல் நிலையில் தோய்த்து விட்டால் வீட்டில் தலை பிள்ளைகள் சாவதில்லை என்ற அறிவிப்பை நம்பிய அனைவருமே மீட்பிற்குள் வந்தார்கள். விசுவாசித்த அனைவரின் குடும்பங்களும் பிழைத்து கொண்டன. எகிப்தை விட்டு வெளியேறியவர்களில் எபிரெயர் அல்லாத விசுவாசித்த மற்ற குடும்பங்களும் இணைந்து கொண்டு எகிப்தை விட்டு வெளியே சென்றார்கள். அவர்கள் அனைவருமே மீட்பின் இரவில் எகிப்தை விட்டு ஒன்றாக புறப்பட்டு சென்றார்கள்.

யாத். 12:37,38 ஆகிய வசனங்களில் இந்த சம்பவங்கள் கூறப்பட்டு உள்ளது. ''இஸ்ரவேல் புத்திரர் ராமசேசை விட்டு கால் நடையாய் பிரயாணம் பண்ணி சுக்கோத்துக்கு போனார்கள். அவர்கள் பிள்ளைகள் தவிர ஆறு லட்சம் புருஷராய் இருந்தார்கள். அவர்களோடே கூட பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருக ஜீவன்களும் போயிற்று.'' மீட்பு என்பதை அறிவதற்கு முன்பாக அவர்கள் அனைவருமே கர்த்தரை நிந்தித்து தூஷித்தது உண்டு. ஆனால் மீட்கப்பட்ட நிலைமைக்குள் வந்த பின்னர், அவ்விதம் பேசுவது முறையானது அல்ல. பரிசுத்தம் ஆக்கப்பட்ட நிலைமைக்குள் வந்தவர்களுடைய பேச்சு அப்படிப்பட்ட பேச்சாக இருக்க முடியாது என்பதை லேவியராகம புத்தகம் 24-வது அதிகாரம் உணர்த்துகின்றது. மீட்கப்பட்டவர்களும், மீட்கப்படாதவர்களும் திருமண வாழ்வில் இணையும் பொழுது தீர்மானம் எடுப்பதில் ஒருமனம் வருவது இல்லை.

கர்த்தரை தூஷித்த அந்த மனிதனின் தாயின் பெயர் செலோமித் என்று கூறப்பட்டு உள்ளது. அவள் குடும்ப வாழ்வு வசந்தம் காணவில்லை. வருத்தமே கண்டது. விசுவாச வாழ்விற்குள் வந்த பெண்கள் திருமணம் செய்யும் பொழுது அவர்களுடைய விசுவாசத்தை போன்று விசுவாசத்தில் வந்தவர்களுடன் மட்டும் இணைவதே சிறந்தது என்பதற்கு

செலோமித் ஒரு எச்சரிப்பாக நிற்கின்றாள். அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்க படாதிருப்பீர்களாக என்று பரிசுத்த பவுலும் 2 கொரி. 6:16-வது வசனத்தில் முன் எச்சரிக்கை கொடுக்கின்றார். மேலும் செலோமித் தாய்மார்களுக்கு ஓர் வேண்டுகோள் கொடுப்பது போல இந்த வசனம் காணப்படுகின்றது. என்னுடைய மகனை நான் ஒழுங்காக வளர்க்கவில்லை. எனவே என்னுடைய பெயர் பாதிக்கப்பட்டது. அது போன்று உங்கள் பெயரும் பாதிக்கப்படாமல் இருக்க உங்கள் பிள்ளைகள் கர்த்தரை தூஷிக்கின்றவர்களாக அல்ல கர்த்தரை நேசிக்கின்றவர்களாக வளர்த்து விடுங்கள் என்று செலோமித் ஒரு எச்சரிப்பு கொடுப்பது போல அவள் பெயர் குறிப்பாக அந்த வசனத்தில் கூறப்பட்டு உள்ளது.

தூஷித்தல் என்பது ஒரு கொடூரமான குற்றமாக பழைய ஏற்பாட்டு நூல்களில் கருதப்பட்டது. அவ்வித குற்றங்களுக்கு தண்டனை கல் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்பதே ஆகும். ஆயினும் ஏற்ற சாட்சிகள் இல்லாமல் அவ்வித தண்டனைகள் நிறைவேற்றப்படவும் இல்லை. தூஷித்தல் என்பது இடம் பெற்ற சம்பவத்தை தங்கள் கண்களால் நேராக கண்டவர்கள் முன்னாக வந்து கூற வேண்டும். திட்டவட்டமான சாட்சியாக அவைகள் இருக்க வேண்டும். உறுதி படுத்தப்பட வேண்டும். சாட்சிகள் இல்லாமல் தூஷித்தல் என்ற குற்றம் நிரூபிக்க பட்டதே இல்லை. என் கண்களினால் நான் கண்டேன் என் காதுகளினால் நான் கேட்டேன் என்பதை சாட்சியாக உரைத்து விட்டு திரும்பி செல்லவும் அவர்களுக்கு அனுமதி இல்லை. தூஷித்தவன் மீது கல் எறியப்படுவதற்கு முன்னர் தூஷித்தவன் தலையின் மீது சாட்சி சொன்னவர்கள் தங்கள் கைகளை வைக்க வேண்டும். நீ உண்மையாகவே குற்றம் செய்தவன் என்பதை என்னுடைய கைகளை உன் தலையின்மீது வைப்பதின் மூலம் நான் உறுதி படுத்துகின்றேன் என்பதே அதன் பொருள் ஆகும். அது மட்டும் அல்ல அவ்விதம் தலைமீது கை வைத்தவர்கள்தான் முதலாவது கல்லை அவன்மீது வீசவும் வேண்டும்.

லேவி. 24:14-வது வசனம். ''தூஷித்தவனை பாளயத்திற்கு புறம்பே கொண்டு போ. கேட்டவர்கள் எல்லாரும் தங்கள் கைகளை அவன்மேல் வைப்பார்களாக பின்பு சபையார் எல்லாரும் அவனை கல் எறியக்கடவர்கள்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. கர்த்தருடைய நாமத்தை தூஷிக்கக்கூடாது என்று மூன்றாவது கற்பனை கூறியது. யாத். 20:7-வது வசனத்தில் அதனை காணலாம். லேவி. 24:10,11 ஆகிய வசனங்களில் செலோமித் என்ற பெண்ணின் மகன் கர்த்தரை தூஷித்தான். பார்த்தவர் கேட்டவர் அனைவரும் மோசே என்பாரிடம் அவனை கொண்டு வந்தார்கள். மோசே உடனடியாக தீர்ப்பு எதுவும் கூறவில்லை.

கர்த்தரிடம் கேட்டு சொல்லுகின்றேன் என்று மோசே தீர்ப்பு கூறினார். கர்த்தரிடமிருந்து உத்தரவு பிறக்கும் வரைக்கும் அவனை காவலில் வைக்கும்படி உத்தரவு கொடுத்தான். லேவி. 24:12-வது வசனம், ''கர்த்தரின் வாக்கினாலே தங்களுக்கு உத்தரவு வரும் மட்டும் அவனை காவல்படுத்தினார்கள்'' என்று பார்க்கின்றோம். மோசே என்பவர் இறுதி தீர்மானம் எடுக்கும் ஒரு பொறுப்பில் இருந்தாலும், முக்கியமான ஒரு இடத்தில் இருந்தாலும், எந்த சூழ்நிலையிலும் பதட்டப்பட்டு அவர் ஓர் இறுதி முடிவிற்கு வரவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். சுயமான தீர்மானங்களை அவர் எடுத்தது இல்லை. கர்த்தரை கலந்து கொள்ளாமல் மோசே எதையும் கூறியது இல்லை என்பதை யாத்திராகம புத்தகம் மூன்றாவது அதிகாரம் முதல் உபாகம புத்தகம் கடைசி அதிகாரம் வரை நாம் பார்க்கலாம். மோசே அவர்களுடைய நியாயத்தை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போனான் என்று எண். 27:5-வது வசனம் கூறுகின்றது.''

தேவனை தூஷித்தல் போன்று பெற்றோரையும் தூஷிக்கின்றவன் கல் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்று அந்த நாட்களில் நியாயப்பிரமாணம் கூறியது என்பதை உபா. 27:16-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். ஆயினும் பழைய ஏற்பாட்டு அரசர்களும் அரசிகளும் தங்களுக்கு பிரியம் இல்லாதவர்களை இல்லாமல் போக்கி விடுவதற்காக தேவ தூஷணம் கூறினான் என்ற பொய்யான குற்ற சாட்டுகளை சுமத்தி நிரபராதிகளை கொன்று இருக்கின்றார்கள் என்பதை வேதத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். பொய் சாட்சிகளை ஏற்படுத்தி கபடற்றவர்களை கல் எறிந்து கொன்று உள்ளனர். பழைய ஏற்பாட்டு நூலிலே ''தேவனையும் இராஜாவையும் தூஷித்தான் என்று அவன் மேல் சாட்சி சொல்லுகின்ற பேலியாளின் மக்களாகிய இரண்டு பேரை அவனுக்கு எதிராக நிறுத்தி அவனை வெளியே கொண்டு போய் அவன் சாகும்படிக்கு அவனை கல் எறியுங்கள்'' என்று எழுதி அனுப்பினார்கள் என்பதை 1இரா. 21:10-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். 1இராஜாக்கள் 21-வது அதிகாரத்தில் ஆகாப் என்ற அரசனும் அவனுடைய மனைவியும் சதி செய்து நிரபராதி ஒருவன் கொல்லப்பட்டதை கூறுகிறது. அந்த விதமான சூழ்நிலைகளில் சர்வ வல்லமை உள்ள தேவன் குறுக்கிடுகின்றார். அவ்விதம் அநியாயம் செய்தவர்களை தண்டித்து இருக்கின்றார் என்பதை 1 இராஜாக்கள் 22-வது அதிகாரத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ஆகாப் என்ற அரசனையும் அவனுடைய மனைவியையும் மிகவும் கடுமையாக தண்டிக்க கர்த்தர் முற்பட்டார் என்பதை நாம் பார்க்கலாம்.

லேவியராகமம் 24-வது அதிகாரம் ஒரே நியாயம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. நியாயப்பிரமாணம் என்பது தவறு செய்கின்றவர்களை திருத்தும் சக்தி பெற்றதாக இல்லை. ஆனால் மேலும் வருத்தும் சக்தி பெற்றதாகவே இருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டின் பக்கங்களுக்குள் நாம் பிரவேசிக்கும் பொழுது நியாப்பிரமாணம் என்பதை விட அன்பின் பிரமாணமே மேலாக கருதப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஆனால் கல் எறிந்து கொல்லுவதைவிட அன்பின் கணை தொடுத்து வென்று விடுவதே மேலானது என்று நாம் கண்டு கொள்ளலாம்.

லேவி. 24:15-23 வசனங்களில் தூஷித்தல் என்பது ஒரு கொடூர பாவமாக நியாயப்பிரமாணத்தின் காலத்தில் கருதப்பட்டது. தூஷித்தவரை நேசிக்க எவரும் முன்வராத காலமாக நியாயப்பிரமாணத்தின் காலம் காணப்பட்டது.

13.4. மனிதருக்கு எதிரான குற்றங்கள்: கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்

ஒரு மனிதனை கொல்லுகிறவன் எவனோ அவன் கொலை செய்யப்பட வேண்டும். மிருகத்தை கொன்றவன் மிருகத்துக்கு மிருகம் கொடுக்க கடவன். ஒருவன் பிறனை ஊனப்படுத்தினால், அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்படக்கடவது. நொறுக்குதலுக்கு நொறுக்குதல், கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்; அவன் ஒரு மனிதனை ஊனப்படுத்தினது போல அவனும் ஊனப்படுத்தப்பட வேண்டும். மிருகத்தை கொன்றவன் பதில் கொடுக்க வேண்டும்; மனிதனை கொன்றவனோ கொலை செய்யப்பட கடவன். உங்களில் பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே நியாயம் இருக்க வேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார். அப்படியே, தூஷித்தவனை பாளயத்துக்கு புறம்பே கொண்டு போய், அவனை கல்லெறியும்படி மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்;

கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே செய்தார்கள். (லேவி. 24:17-23)

தேவன் அன்பாகவே இருக்கின்றார். யாருக்கும் எந்த விதமான தீங்கும் கர்த்தர் செய்கிறவர் அல்ல. தீங்குக்கு மனஸ்தாபம் படுகின்றவராக கர்த்தர் இருக்கின்றார். நன்மை செய்கின்றவராக கர்த்தர் இருக்கின்றார். ஒரு பெரிய நன்மையை அந்த எபிரெய மக்களுக்கு கர்த்தர் ஏற்கெனவே செய்து இருக்கின்றார். சுமார் 430 வருடம் அடிமைத்தனத்தில் இருந்த அவர்களை மீட்டவர் கர்த்தாதி கர்த்தரே ஆவார். அவர்களால் எது முடியாததாக தோன்றினதோ அதுவே அவர்களுக்கு மிகவும் அவசியப்பட்டதாகவும் இருந்தது. அவர்கள் வாஞ்சித்ததை பெற்று கொள்ள ஒரு வல்லமை மிக்க கரம் அவர்களுக்கு தேவைப்பட்டது. காரணம் அவர்களுடைய கரம் பெலவீனமான கரமாக இருந்தது. அவர்களை விடுவிக்க வந்த கரம் கர்த்தருடைய பலத்த கரமாக இருந்தது.

கர்த்தர் பலத்த கையினால் அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார் என்பதை யாத். 13:2-வது வசனத்தில் பார்க்கலாம். அன்பும், ஆதரவும் கொடுக்கின்றவரை கோபிக்க வேண்டாம், தூஷிக்க வேண்டாம் என்பது நியாயப்பிரமாணத்தின் நிபந்தனையாக மாறியது. உங்களால் எது முடியாதது என்று நினைத்து மனதில் சோர்ந்து போய் இருந்தீர்களோ அதை முடியவைத்தவரை இனிமேல் நீங்கள் எந்த காரணத்தை முன்னிட்டும் கோபித்து விடாதேயுங்கள், தூஷித்து விடாதேயுங்கள் என்று நியாயப்பிரமாணம் கூறியது. வலிய வந்து இரட்சித்தவரை, முற்றிலுமாக பாதுகாக்கின்றவரை, மனம் உவந்து வழி நடத்துகின்றவரை நீங்கள் தூஷித்தால் அவரது கோபம் பற்றி எரிய ஆரம்பிக்கும் என்பதை ஏற்கெனவே அவர்களுக்கு மோசேயின் மூலம் தெரியப்படுத்தி உள்ளார்.

அன்பு செய்தவருக்கு அன்பு கொடுக்க கர்த்தர் எதிர்பார்க்கின்றார். யாத். 23:20,21 ஆகிய வசனங்கள். ''வழியில் உன்னை காக்கிறதற்கும் நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்திற்கு உன்னை கொண்டு போய் சேர்க்கிறதற்கும் இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகின்றேன். அவர் சமூகத்தில் எச்சரிக்கையாயிருந்து அவர் வாக்குக்கு செவி கொடு. அவரை கோபப்படுத்தாதே. உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பது இல்லை. என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது''. பாபிலோன் தேசத்தில் அரசாட்சி செய்த நேபுகாத்நேச்சார் என்ற அரசன் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்று மூன்று கர்த்தருடைய விசுவாசிகள் மூலம் ஜீவனுள்ள கர்த்தரை ஒரு நாள் அறிந்து கொண்டான். சில மணி நேரங்களுக்கு முன்னதாக தன்னை தூஷித்தவரும் சாக வேண்டும் என்று அறிவித்தவன், தன்னையும் விட வல்லவர் ஒருவர் இருக்கின்றார் என்பதை அறிந்து விட்டான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய வாழ்க்கை அதனை அவனுக்கு தெரிவித்தது. உடனே அவன் ஒரு மறு அறிவிப்பு கொடுத்தான். கர்த்தரை தூஷித்தவரே சாக வேண்டும். என்னை தூஷித்தவர் அல்ல. கர்த்தரை தூஷித்தவரே சாகவேண்டும் என்று கூறினான். நேபுகாத்நேச்சார் என்ற அந்த அரசன் கொடுத்த மறு அறிவிப்பு தானி. 3:29-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது.

இரட்சிக்கவும் பாதுகாக்கவும் வழி நடத்தவும் வல்லமை பெற்ற கர்த்தாதி கர்த்தரை தூஷிப்பது வாழ்வை துரத்துவதற்கும் சாபத்தை அழைப்பதற்கும் சமமாக மாறியது என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். கர்த்தரை விட்டு விலகி செல்லும் இதயம் உள்ளவர்களாக அவர்கள் மாறும் பொழுது தங்களுக்கு எதிராக இருக்கும் ஒரு நல்ல காலத்தை அவர்கள்

தங்கள் வார்த்தைகளினாலே துரத்தி விடுகின்றார்கள் என்பதை அறிகின்றோம். கர்த்தர் விலகும் பொழுது இரட்சிப்பு விலகி நிற்கின்றது. பாதுகாப்பு மறைந்து விடுகின்றது. வழிநடத்துதல் என்பது கிடைப்பதே இல்லை. எவனாகிலும் தன் தேவனை தூஷித்தால் தன் பாவத்தை சுமப்பான் என்று லேவி. 24:15-வது வசனம் கூறுகின்றது. பிள்ளைகளின் வாழ்வில் வரும் வருத்தங்களுக்கும் மன மடிவுகளுக்கும் பெற்றோர்கள்தான் காரணம் என்று அவர்களை கோபிப்பதும், தூஷிப்பதும் நல்லது அல்ல என்று வேத புத்தகம் கூறுகின்றது. கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு நீதிமானை ஒரு போதும் தள்ளாடவொட்டார் என்று வேதம் உற்சாகப்படுத்துகின்றது. கனத்த சூழ்நிலைகளும் இருளாக தோன்றும் காலங்களும் பெற்றோரை தூஷிப்பதினால் இன்னும் கூடத்தான் செய்யுமே தவிர குறைய போவது இல்லை என்று வேதம் உரைக்கின்றது.

நீதி. 20:20-வது வசனம், ''தன் தகப்பனையும், தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்து போகும்'' என்று கூறுகின்றது. என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் என்று ஆண்டவர் கூறுகின்றார். நீடிய வாழ்வு நீங்காத ஆசீர்வாதம் நிலைப்பெற்று ஓங்க உன் தாயையும் உன் தகப்பனையும் கனம் பண்ணு என்று 10 கற்பனைகளின் 5-வது கற்பனை கூறுகின்றது. மோசே என்பவர் கொடுத்த நியாயப்பிரமாணத்தின் காலத்தில் இருந்து கர்த்தராகிய இயேசு அருளிய கிருபையின் யுகத்தில் பிரவேசிக்கும் பொழுது தண்டனை என்பதற்கு பதிலாக மன்னிப்பு வாரி வழங்கப்பட்டது. பழிக்கு பழி என்பதில் இருந்து சத்துருக்களை சிநேகித்து விடுங்கள் என்ற அறிவிப்பு பிறந்தது. இவ்விதமான புதிய அன்பின் அறிவிப்புகளை அறிவித்த இயேசு கிறிஸ்துவை யூத சமயத்து தலைவர்கள் தேவ தூஷணம் கூறுகின்றார் என்று அறிவித்தார்கள். உள்ளதை உள்ளது என்று உரைத்தவரை கள்ளர்கள் நடுவில் நிறுத்தினார்கள். அவர்கள் இயேசுவின் மீது சாட்டிய குற்றம் இயேசு தேவனை தூஷித்தார் என்பதே ஆகும். பரிசுத்த மத்தேயு 26:65,66 ஆகிய வசனங்கள். ''அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு இவன் தேவ தூஷணம் சொன்னான். இனி சாட்சிகள் நமக்கு வேண்டியது என்ன? இதோ இவன் தூஷணத்தை இப்பொழுதே கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய் தோன்றுகின்றது என்று கேட்டான். அதற்கு அவர்கள் மரணத்திற்கு பாத்திரமாய் இருக்கிறான் என்றார்கள்.'' ஸ்தேவான் என்ற ஊழியக்காரன் உண்மையை உரக்க கூறியதினால் பொய் சாட்சிகள் அவனுக்கு எதிராக நிறுத்தப்பட்டார்கள் என்பதை அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

லேவி. 24:23-வது வசனத்தில் பழைய ஏற்பாட்டு காலத்தில் நடந்த ஓர் சம்பவத்தை நாம் பார்க்கின்றோம். செலோமித் என்பவள் தன் மகன் கல் எறியப்பட்டு கொல்லப்படுவதை அவளுடைய கண்களினால் பார்த்து கொண்டு இருக்கின்றாள். அதே போன்று ஒரு சம்பவம் புதிய ஏற்பாட்டின் காலத்திலும் கூட நடந்தது என்பதை நாம் அப்போஸ்தலர் 6-வது அதிகாரத்திலும் 7-வது அதிகாரத்திலும் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

அப். 7:58,59 ஆகிய வசனங்கள், ''அவனை நகரத்திற்கு புறம்பே தள்ளி அவனை கல் எறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களை கழற்றி சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தின் அருகே வைத்தார்கள். அப்பொழுது கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்று கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுது கொள்ளுகையில் அவனை கல் எறிந்தார்கள்'' என்று கூறுகின்றன. இயேசு தம்மை சிலுவையில் அடித்தவர்களுக்கு அன்பு பாராட்டியது போன்று ஸ்தேவானும் தன் மேல் கல் எறிந்தவர்களுக்கு மன்னிப்பு வழங்க

வேண்டும் என்று ஜெபித்தது தனது இறுதி வருத்தங்களும் தாங்க முடியாத கஷ்டங்களும், நஷ்டங்களும் அழிவுகளும் வாழ்க்கையில் ஏற்படும் பொழுது மனித இதயங்கள் கர்த்தரை கோபிக்க வேண்டாம் என்று எச்சரிக்கினறது. பரிசுத்தமான வாழ்வு என்ற உச்சத்திற்கு எடுத்து செல்லும் படிக்கட்டுகளில் தூஷித்தல் என்ற ஒரு படிக்கட்டு காணப்படுவது இல்லை. இரட்சித்து வழி நடத்தும் கர்த்தாதி கர்த்தரை தூஷிப்பதும் பெற்று எடுத்து பேணி காத்து வளர்க்கும் பெற்றோர்களை தூஷிப்பதும் பரிசுத்தமான பாகை என்பதில் இருக்க முடியாது என்பதை வசனம் கூறுகின்றது. சொற்களின் மிகுதியினால் பாவம் இல்லாமல் போகாது. துன்பமான நேரங்களில் கோபமான வார்த்தைகள் அறியாமல் பிறந்து விடுகின்றன. வீணான சொற்களின் மிகுதியினால் பாவம் உருவாகுகின்றது.

ஆகாத சம்பாஷனைகள் நல்ல ஒழுக்கத்தை கெடுத்து விடுகின்றது. மோசம் போக வைத்து விடுகின்றது. தூஷித்தல் என்பது இதயத்தில் உதயமாகி வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. கர்த்தரை தூஷித்தல் என்பதின் முடிவு பாவத்தை சுமத்தல் என்ற முடிவே ஆகும். பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் கர்த்தர் யோபு என்ற ஒருவனை தமது தாசன் என்று கூறினார். உத்தமன் என்று கூறினார். நேர்மை உண்மை தூய்மை குன்றாதவன் யோபு என்று அறிவித்தார். அதற்கு பிசாசு ஒரு பதில் கூறினான். யோபு. 1:8-11 வசனங்கள். ''கர்த்தர் சாத்தானை நோக்கி என் தாசனாகிய யோபுவின்மேல் கவனம் வைத்தாயோ, உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார். அதற்கு சாத்தான் கர்த்தருக்கு பிரதியுத்தரமாக யோபு விருதாவாகவா தேவனுக்கு பயந்து நடக்கின்றான். நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலி அடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர். அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று. ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவை எல்லாம் தொடுவீரானால் அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மை தூஷிக்கானோ பாரும் என்றான்.''

யோபு கடினமான ஒரு வாழ்வை கடந்து சென்றான். ஆயினும் யோபு ஆண்டவரை தூஷிக்கவே இல்லை. யோபு பாவம் செய்யவும் இல்லை. தேவனை பற்றி குறை சொல்லவும் இல்லை. இதனை யோபு 1:22-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். கடினமான சூழ்நிலை. கண்ணீரின் பாதை. இவைகளை பொறுமையுடன், நம்பிக்கையுடன், ஸ்தோத்திரத்துடன் யோபு கடந்து சென்றான். அதன் விளைவாக இறுதியில் வெகுவாக ஆசீர்வதிக்கப்பட்டான். கர்த்தர் யோபுவின் முன் நிலைமையை பார்க்கிலும் அவனுடைய பின் நிலைமையை அதிகமாக ஆசீர்வதித்தார் என்று யோபுவின் புத்தகம் இறுதி அதிகாரம் 12-வது வசனம் கூறுகின்றது. வருத்தங்களும் மன மடிவுகளும் வரும் பொழுது கர்த்தரை தூஷிக்க வேண்டாம். வாழ்க்கையில் மன மடிவுகள் வரும் பொழுது அநேகர் கர்த்தரை தூஷிப்பார்கள் என்று வெளி. 16:11-வது வசனம் கூறுகின்றது. ''தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும் பரலோகத்தின் தேவனை தூஷித்தார்களே அல்லாமல் தங்கள் கிரியைகளை விட்டு மனம் திரும்பவில்லை.''

மத்தேயு 12:31,32 ஆகிய வசனங்கள், ''ஆதலால் நான் உங்களுக்கு சொல்லுகின்றேன், எந்த பாவமும், எந்த தூஷணமும் மனுஷனுக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாவது மனுஷக்குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பேசினால் அது இம்மையிலும்

மறுமையிலும் மன்னிக்கப்படுவதே இல்லை'' என்று கூறுகின்றன. ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் என்பது என்ன? பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக பேசுவது என்பது என்ன? அதன் விளக்கத்தை மத்தேயு 12:24-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். ''பரிசேயர் அதை கேட்டு இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே பிசாசுகளை துரத்துகிறானே அல்லாமல் மற்றப்படி அல்ல என்றார்கள்.'' பரிசுத்த ஆவியானவரை பெயல்செபூல் என்று கூறி விட்டார்கள். பெயல்செபூல் என்பது பிசாசுகளின் தலைவன் என்பவனுடைய பெயர் ஆகும். பெயல்செபூல் என்று அழைக்கப்படுகின்றவனுடன் பரிசுத்த ஆவியானரை ஒப்பிட்டு பேசுவது, கர்த்தாதி கர்த்தருடைய ஆவியானவரை அவமதிக்கும் ஓர் குற்றமாகும். பிசாசின் சக்திகள் அனைத்திற்கும் தலைவன் பெயல்செபூல் என்று 24-வது வசனம் கூறுகின்றது. தொடர்ந்து மாற்கு 3:29-வது வசனம். ''ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாக தூஷணம் சொல்வானேயாகில் அவன் என்றென்றைக்கும் மன்னிப்பு அடையாமல் நித்திய ஆக்கினைக்கு உள்ளாக இருப்பான் என்றார்.'' எந்த மனிதரையும் பழித்து பேச, தூஷித்து கூற வேண்டவே வேண்டாம் என்று பரிசுத்த வேதாகமம் செய்தி அளிக்கின்றது. பரிசுத்த பவுல் தீத்து என்ற தனது உடன் ஊழியக்காரனுக்கு எழுதிய நிரூபத்தில் மூன்றாவது அதிகாரம் 2-வது வசனத்தில் ஒருவனையும் தூஷியாதே என்று கட்டளை கொடுக்கின்றார். சகோதர சிநேகத்தில் ஒருவர்மேல் ஒருவர் பட்சமாக இருங்கள். கனம் பண்ணுவதில் ஒருவருக்கு ஒருவர் முந்தி கொள்ளுங்கள். ஒருவருக்கும் தீமைக்கு தீமை செய்யாது இருங்கள் என்கிறார்

அத்தியாயம் - 14

கர்த்தர் கொடுக்கும் தேசத்தை கனம் பண்ண பிரமாணங்கள்

14.1 தேசத்திற்கு ஓய்வு வருடம் கொடு

கர்த்தர் சீனாய் மலையில் மோசேயை நோக்கி: (லேவி. 25:1)

கர்த்தர் சீனாய் மலையில் இருந்து மோசேயிடம் பேசினார் என்பது கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்து மோசேயிடம் பேசினார் என்பதையே குறிக்கின்றது. கர்த்தர் சீனாய் மலையின் அடிவாரத்தில் இருந்த ஆசரிப்பு கூடாரத்தில் இருந்து பேசி கொண்டு வருகின்றார் என்பதை லேவியராகமம் முதல் அதிகாரம் முதல் வசனம் கூறியதை நாம் ஏற்கெனவே பார்த்தோம்.

ஆசரிப்பு கூடாரம் என்ற ஒன்றை அமைக்கும் வரை கர்த்தர் சீனாய் மலையில் இருந்துதான் பேசினார். ஆனால் ஆசரிப்பு கூடாரம் அமைக்கப்பட்ட பின்னர். கர்த்தரின் மகிமை ஆசரிப்பு கூடாரத்தில் வந்து இறங்கி, பின்னர் கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்தே மோசேயிடம் பேசினார். லேவி. 25:2-7 வசனங்களில் 7-வது வருடத்தை ஓய்வு வருடமாக ஆசரிக்க வேண்டும் என்ற ஒரு கட்டளை பிறப்பதை நாம் பார்க்கலாம்.

நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால் நான் உங்களுக்கு கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய் சேர்ந்து இருக்கும் பொழுது தேசம் கர்த்தருக்கு என்று ஓய்வு கொண்டாட வேண்டும். (லேவி. 25:2)

ஓய்வு வருடம் என்று ஒரு வருடம் ஏழு வருடங்களுக்கு ஒருமுறை அனுசரிக்கப்பட வேண்டும் என்று இந்த வசனத்தில் நாம் பார்க்கின்றோம். ஜனங்களும் அதின் குடிகளும் கர்த்தருடையது என்பதை உறுதி படுத்துவதற்கும், ஜனங்களின் காலங்கள் கர்த்தருடைய கைகளில் இருக்கின்றது என்பதை உறுதி படுத்துவதற்கும் ஓய்வு வருடம் என்பது ஏழு வருடங்களுக்கு ஒருமுறை அனுசரிக்கப்பட வேண்டும் என்று லேவி. 25:2-வது வசனம் கூறுகின்றது.

ஓய்வு என்பது கர்த்தருக்கு என்ற ஓய்வு என்று வசனம் கூறுகின்றது. ஓய்வு வருடம் என்பது கர்த்தர் பரிசுத்தம் உள்ளவர் ஆகையால் ஜனங்களும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பதையும், கர்த்தருடைய ஜனங்கள் தங்களில் அன்பு கூறுகிறது போல மற்றவர்கள் மேலும் அன்பு கூற வேண்டும் என்பதையும் தெரியப்படுத்தும் ஓர் வருடமாக கொடுக்கப்பட்டது. ஓய்வு வருடத்தை பற்றிய தகவல் முதலாவது மோசேயிடம் யாத்திராகம புத்தகத்தில் கொடுக்கப்பட்டது. யாத். 23:10,11 ஆகிய வசனங்கள், ''ஆறு வருஷம் நீ உன் நிலத்தில் பயிரிட்டு, அதின் பலனை சேர்த்துக்கொள். ஏழாம் வருஷத்தில் உன் ஜனத்தில் உள்ள எளியவர்கள் புசிக்கவும், மீதியானதை வெளியின் ஜந்துக்கள் தின்னவும், அந்த நிலம் சும்மா கிடக்க விட்டு விடுவாயாக. உன் திராட்ச தோட்டத்தையும் உன் ஒலிவ தோப்பையும் அப்படியே செய்வாயாக'' என்று கூறுகின்றது.

ஆறு வருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்ச தோட்டத்தை கிளை கழித்து, அதின் பலனை சேர்ப்பாயாக. (லேவி. 25:3)

ஆறு வருடங்கள் களைப்பு அடையாமல் உழைக்க வேண்டும் என்றும், ஏழாவது வருடம் எந்த வேலையும் செய்யாமல் கர்த்தருக்கு என்று ஓய்ந்து இருக்க வேண்டும் என்றும் இந்த வசனங்கள் கூறுகின்றன. லேவியராகம புத்தகத்திற்குள் வரும் பொழுது ஏழு வருடம் பற்றிய குறிப்புகளை மேலும் அறிந்து கொள்ளுகின்றோம். லேவியராகமத்தை தொடர்ந்து உபாகம புத்தகத்திற்குள் வரும் பொழுது ஓய்வு வருடத்தின் அனுசரிப்பு மிகவும் முக்கியப்படுத்தி கூறப்பட்டு உள்ளது. இதனை உபா. 15:1-11 வசனங்களிலும் உபா. 39:10-13 வசனங்களிலும் நாம் பார்க்கலாம். ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக என்பது 10 கற்பனைகளில் ஒரு கற்பனையாக மாறியதை யாத்திராகமம் 20-வது அதிகாரம் நமக்கு கூறுகின்றது. ஏழு வருடங்களில் ஒரு வருடம் ஓய்வு வருடமாக மாற வேண்டும் என்பதை லேவியராகமம் 25-வது அதிகாரம் நமக்கு கூறுகின்றது. ஏழு நாட்களில் ஒரு நாள் ஓய்வு நாள். ஏழு வருடங்களில் ஒரு வருடம் ஓய்வு வருடம். ஓய்வு வருடம் என்பதை பற்றி யாத்திராக புத்தகமும், லேவியராகமம் புத்தகமும், உபாகம புத்தகமும் மூன்று முக்கிய தகவல்களை நமக்கு கொடுக்கின்றன.

யாத்திராகம புத்தகம் கூறுவது என்ன? பொருளாதாரத்தில் ஏற்ற வாழ்வு இல்லாத ஒரு சமூகமாக மீட்கப்பட்டவர்களின் சமூகம் இருப்பதற்கு ஓய்வு வருடம் என்பது ஓர் பயன் உள்ள வருடமாக இருக்கும் என்று யாத். 23:10,11 ஆகிய வசனங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

ஓய்வு வருடத்தை பற்றி லேவியராகம புத்தகம் கூறுவதை லேவி. 25:1-7 வசனங்களில் நாம் பார்க்கின்றோம். நிலம் முக்கியமானது என்றும், பூமி கர்த்தருடையது என்றும், இயற்கை என்பது கர்த்தரின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நிற்கின்றது என்றும், பூமியின் குடிகளுக்கு தெரியப்படுத்த ஏழு வருடங்களுக்கு ஒரு வருடம் ஓய்வு வருடமாக கொடுக்கப்பட்டு உள்ளது.

உபா. 15:1-11 வசனங்களில் ஓய்வு வருடம் விளக்கப்பட்டு உள்ளது. மனிதன் வறுமை என்பதினால் கடன் பட்டு மீழ்வதற்கு வழியே இல்லாமல் தவிக்கும் பொழுது ஓய்வு வருடம் என்பது வருகின்றது. ஓய்வு வருடத்தில் கடன்கள் அனைத்தும் மன்னிக்கப்பட வேண்டும் என்று உபாகம புத்தகம் கூறுகின்றது. ஆறு வருடங்கள் அயராமல் உழைக்க ஜனங்கள் அழைக்கப்பட்டார்கள். உழைக்காமல் உயர முடியாது என்பதை வேதபுத்தகம், தொடக்கம் முதல் தெளிவாக கூறுகின்றது. வேலை என்பது ஆதியாகம புத்தகம் 2-வது அதிகாரத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. வளம் மிக்க நான்கு நதிகள் ஏதேனில் ஓடின. ஏதேனில் கண்ட நீர், நிலம் இரண்டையும் மனிதன் ஏற்ற முறையில் பயன் படுத்த தேவனாகிய கர்த்தர் விரும்பினார். ஆதாம் ஏவாள் என்பவர்களின் அனைத்து தேவைகளையும் சந்திக்க அனைத்து வாய்ப்புகளும் ஏதேன் தோட்டத்தில் இருந்தன. ஆனால் அவர்களுடைய வாழ்க்கை சிறப்பான வாழ்க்கையாக மாறுவதற்கு அந்த வாய்ப்புகளை வேலை செய்து பயன் படுத்தி கொள்ள வேண்டும் என்ற கட்டளை பிறந்தது.

வேலை செய்யாதவன் சாப்பிடாமல் இருக்கக்கடவன் என்று பரிசுத்த பவுல் 2 தெச. 3:10-12 வசனங்களில் கூறுகின்றார். ஆறு வருடங்கள் கடினமாக உழைக்க வேண்டும் என்பது கட்டளையாக லேவியராகமம் 25-வது அதிகாரத்தில் கூறப்படுகின்றது. கடின உழைப்பிற்கு தயங்குகின்றவர்களாக மீட்கப்பட்டவர்கள் இருக்க வேண்டாம் என்பதே அதன் பொருள். ஏழாவது வருஷம் என்பது வேகமாக வந்து விடும். எனவே ஆறு வருடங்களும் அயராது உழைத்து விடுங்கள் என்று லேவி. 25:3-வது வசனம் கூறுகின்றது.

''காற்றை கவனிக்கின்றவன் விதைக்க மாட்டான். மேகங்களை நோக்குகின்றவன் அறுக்க மாட்டான்'' என்று பிர. 15:4-வது வசனம் கூறுகின்றது. இன்று கடினமாக உழைத்தால் நாளைக்கு வெகுவாக பலன் உண்டு என்பதே அந்த வசனம் கூறும் எச்சரிப்பு ஆகும். அநேக நாட்களுக்கு பின்னர் பலனை காண்பாய் என்று பிர. 11:1-வது வசனம் கூறுகின்றது.

உன் கைகளின் பிரயாசத்தை சாப்பிடுவாய் என்று சங். 128:2-வது வசனம் உற்சாகப்படுத்துகின்றது. ஏழாவது வருடத்தின் ஓய்வு நிம்மதி நிறைந்த ஓய்வாக இருப்பதற்கு ஆறு வருடங்கள் உழைக்கும் வருடங்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க படுகின்றது. உழைக்கும் கரங்களே உண்ணும் கரங்களாக மாறும் என்பதை லேவியராகமம் தெளிவு படுத்துகின்றது. இன்று செய்து முடித்துவிட வேண்டிய வேலைகளை இன்னொரு நாளுக்கு தள்ளி வைக்கின்றவன் வேலைகளில் அசதியாய் இருக்கின்றவன் என்று கூறப்படுகின்றது. தன் வேலையில் அசதியாய் இருக்கின்றவன் அழிவு என்பதின் சகோதரன் என்று நீதி. 18:9-வது வசனம் கூறுகின்றது. ஆறு வருஷம் வயலை விதைத்து திராட்சத்தோட்டத்தை கிளை கழித்து அதன் பலனை சேர்ப்பாயாக என்று லேவி. 25:3-வது வசனம் கூறுகின்றது. ஆறு வருடங்கள் கடினமாக உழைத்து வந்த பலன்கள் பத்திரமாக சேமிக்கப்பட வேண்டும். பலனை சாப்பிடுவது மட்டும் அல்ல, வரும் காலங்களுக்கு பலனை சேர்த்தும் வைப்பாயாக என்றும் 3-ம் வசனம் கூறுகின்றது.

யோசேப்பு என்ற ஒரு பரிசுத்தவான் ஒரு சிறந்த நிர்வாகியாகவும் இருந்தான் என்பதை ஆதியாகம புத்தகத்தில் நாம் பார்த்தோம். எகிப்து தேசத்தை ஏழு வருடங்கள் ஒரு கொடிய பஞ்சம் வந்து பாதிக்க போகின்றது என்பதை அவன் அறிந்து விட்டான். பஞ்சம் வந்து மக்களை வாட்டாமல் இருக்க பஞ்சம் வருவதற்கு முன்னர் களஞ்சியங்களை நிரம்ப செய்தான். சேகரித்த தானியங்கள் கால நிலைகளினால் கெட்டு போய் விடாமல் இருக்க ஏற்ற பக்குவங்கள் செய்தான். அவன் சேமித்து வைத்த அனைத்து தானியங்களையும் பூச்சிகள் மற்றும் பிராணிகள் வந்து பண்டக சாலைகளுக்கு சென்று சேமித்து வைத்ததை நாசம் செய்து விடாமல் இருக்கும்படிக்கு கண் காணிக்கவும் செய்தான். ஒரே ஒரு மனிதனின் கண் விழிப்பு, கடின உழைப்பு ஒரு தேசத்தை உயிர் பிழைக்க செய்து விட்டது என்பதை ஆதியாகமம் 41-வது அதிகாரம் முதல் அதன் முடிவு அதிகாரங்கள் வரை நாம் காணலாம். மீட்கப்பட்ட ஜனங்கள் சோம்பேறிகளாக மாறிவிட கர்த்தர் எதிர்பார்க்கவில்லை. மீட்பு என்பது சுறுசுறுப்பு, கடின உழைப்பு, வாய்ப்புகளை உயர்ந்த முறையில் பயன் படுத்த வரும் துடிப்பு கொண்டவர்களுக்கும் மட்டுமே உரித்தானதாக லேவியராகமம் 25-வது அதிகாரத்தில் கூறப்படுகின்றது. மீட்கப்பட்ட ஜனங்கள் மிக கடினமாக உழைத்து வாழ்க்கையிலும் பணியிலும் உயர வேண்டும் என்பதை தேவன் எதிர்பார்க்கின்றார். கர்த்தர் ஆதாம் ஏவாளை உழைப்பாளிகளாக சிருஷ்டித்தார். ஏதேனில் சோம்பி திரிகின்றவர்களாக அல்ல, விரும்பி வாஞ்சையுடன் வலிய வந்து உழைக்கின்றவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். மனுஷன் சாயங்காலம் மட்டும் தன் வேலைக்கும் பண்ணைக்கும் புறப்படுகின்றான் என்று 104-வது சங்கீதம் 23-வது வசனம் கூறுகின்றது.

யாத்திராகம புத்தகத்தில் ஏழு நாட்களில் ஒரு நாள் ஓய்வு என்று நாம் பார்த்தோம். லேவியராகம புத்தகத்தில் ஏழு வருடங்களில் ஒரு வருடம் ஓய்வு வருடம் என்று நாம் பார்க்கின்றோம். ஓய்வு வருடம் என்பது சோம்பி திரிவதற்கு அல்ல, இதுவரை செய்த கடின உழைப்பில் மகிழ்ந்து களிகூறுவதற்கு ஆகும். உட்கார்ந்து விளையாடுவதற்கு அல்ல,

குடும்பமாக அமர்ந்திருந்து நடத்தி வந்தவர் கர்த்தர் என்று அறிந்துகொள்ளுவதற்கு ஆகும். தம்மை விசுவாசிக்கின்றவர்களும் தமக்கு ஊழியம் செய்கின்றவர்களும் கடினமாக உழைக்க வேண்டும் என்பதை இயேசு கூறினார்.

கடின உழைப்பிற்கு முன் வராத ஒரு மனிதனை சோம்பேறி என்று பரிசுத்த மத்.25:26-வது வசனம் அழைக்கின்றது. ஓய்வு நாள் என்ற ஏழாவது நாள் எதிர்பார்க்கப்படும் ஒரு நாளாக இருக்க வேண்டும் என்று யாத்திராகம புத்தகத்தில் நாம் பார்த்தோம். ஆறு நாட்கள் மட்டும் மன்னா என்பது அருளப்பட்டது. ஆறு நாட்களில் ஏழு நாட்களுக்கு ஏற்ற உணவு தேடி கொள்ளப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. வாரத்தில் ஏழாவது நாள் மட்டும் அல்ல, வருஷங்களில் ஏழாவது வருடமும் எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒரு வருடமாக இருக்கட்டும் என்று லேவியராகமம் 25-வது அதிகாரம் கூறுகின்றது. அந்த எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப ஆறு வருடங்கள் அயராது உழைத்து விடுங்கள் என்று அந்த அதிகாரம் தூண்டி எழுப்புகின்றது. ஏழாவது நாள் என்பது ஓய்வு நாளாக இருப்பதற்கு ஆறு நாட்களும் உழைக்கும் நாட்களாக இருக்க வேண்டும். ஏழாவது வருடம் என்பது ஓய்வு வருடமாக இருப்பதற்கு ஆறு வருடங்களும் அயராமல் உழைக்கும் வருடங்களாக இருக்கவேண்டும்.

மறுமை என்பது மங்களமாக இருப்பதற்கு இம்மை என்பது பிரயாசத்துடன் உழைக்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள் ஆகும். ஆறு நாட்களின் உழைப்பு ஏழாவது வரும் ஓய்வுக்கு நேராக வழிநடத்துகின்றது. ஆறு வருடங்களின் உழைப்பு ஏழாவது வருடம் வரும் ஓய்வுக்கு நேராக வழிநடத்துகின்றது. இம்மையில் எடுக்கப்படும் பிரயாசங்கள் மறுமையில் கர்த்தர் தரும் இளைப்பாறுதலுக்கு நேராக வழி நடத்துகின்றது.

ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்க வேண்டும்; அதில் உன் வயலை விதைக்காமலும், உன் திராட்ச தோட்டத்தை கிளை கழிக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைகழிக்காதே விட்ட திராட்ச செடியின் பழங்களை சேர்க்காமலும் இருப்பாயாக; தேசத்துக்கு அது ஓய்வு வருஷமாய் இருக்கடவது. (லேவி. 25:4,5)

ஓய்வு வருடத்தின் நான்கு முக்கியத்துவங்களை லேவி. 25:4-7 வசனங்களில் நாம் காணலாம். கர்த்தருக்கு என்ற ஓய்வாக ஓய்வு வருடம் இருக்க வேண்டும் என்பது முதலாவது குறிப்பு ஆகும். நிலம் என்பது கர்த்தர் உடையது. நிலம் என்பதற்கும் ஓய்வு வருடத்தில் ஓய்வு கொடுக்க வேண்டும் என்பதே 2-வது குறிப்பாக காணப்படுகின்றது. மூன்றாவது குறிப்பு அனைத்து அடிமைகளுக்கும் ஓய்வு கொடுக்க வேண்டும் என்பதே ஆகும். நான்காவது குறிப்பு அனைத்து மிருகங்களுக்கும் ஓய்வு வருடத்தில் ஓய்வு கொடுக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

4-வது வசனத்தில் ஓய்வு என்பது கர்த்தருக்கு என்று எடுக்கப்படும் ஓய்வாக அமைய வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. ஓய்வு என்பது இஷ்டம்போல் வாழ்வதற்கு கொடுக்கப்படவில்லை என்பதை இதில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். இன்னும் ஆண்டவரை அதிகமாக அறிந்து கொள்ளுவதற்காக ஓய்வு வருடம் கிடைக்க பெற்றது. வேலைகளை புறக்கணிக்கும் ஓர் ஓய்வாக அல்ல. இன்னும் அதிகமான வேலைகளை, பணிகளை கர்த்தருக்கு என்று நிறைவேற்ற தங்களை அர்ப்பணிக்கும் ஓர் ஓய்வாக ஓய்வு வருடம் இடம் பெறுகின்றது.

பரிசுத்தமான ஜீவியத்தில் வளருவது எப்படி என்பதை லேவியராகம புத்தகம் ஆரம்ப அதிகாரத்தில் இருந்து கூறி கொண்டே வருவதை நாம் அறிந்து வருகின்றோம். அதில் மிகவும் சிறப்பாக 17-26 அதிகாரங்களில் பரிசுத்தமான ஜீவியத்தில் மிக முக்கியமான குறிப்புகளும் கோட்பாடுகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன. பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தம் அடைவதற்கு அந்த குறிப்புகள் பாதை அமைக்கின்றன. கர்த்தரிடத்தில் களி கூறவும் ஆத்துமாவை தாழ்மைப்படுத்தி கர்த்தரிடத்தில் புதிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் ஓய்வு என்பது உதவி செய்கின்றது. முதலாவது தேவனையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது உங்கள் மனதின் நல்விருப்பங்கள் அனைத்தும் வீடு தேடி வரும் என்பதே ஓய்வு வருடம் மீட்கப்பட்டவர்களுக்கு கொடுத்த செய்தி ஆகும். என்னை கனம் பண்ணுகின்றவர்களை நான் கனம் பண்ணுவேன் என்பதே ஓய்வு வருடம் கொடுக்கும் செய்தி ஆகும். ஓய்வு வருடம் என்பது கர்த்தருடைய பாதத்தில் தங்கி இருந்து கர்த்தரை இன்னும் இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள உதவி செய்யும் ஒரு வருடமாக இருக்கும்.

ஓய்வு வருடத்தை பற்றிய இரண்டாவது குறிப்பு 5-வது வசனத்தில் காணப்படுகின்றது. ''தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளை கழிக்காதே விட்ட திராட்சை செடியின் பழங்களை சேர்க்காமலும் இருப்பாயாக. தேசத்திற்கு அது ஓய்வு வருஷமாக இருக்கக்கடவது'' என்று அந்த வசனம் கூறுகின்றது. நிலம் வளம் பெறுவதற்கு நிலம் ஓய்வு எடுக்க வேண்டும் என்று அந்த குறிப்பு கூறுகின்றது. ஆதி. 3:17-வது வசனத்தில் பூமி சபிக்கப்பட்டு போனதை நாம் பார்த்தோம். ஆதாம் ஏவாள் என்ற ஆதி பெற்றோர் பாவம் செய்ததின் விளைவாக பூமி என்பது சபிக்கப்பட்டது. ஆதி. 3:17-வது வசனத்தில் இதனை காணலாம். ''பின்பு கர்த்தர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்கு செவி கொடுத்து புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கிய விருட்சத்தின் கனியை புசித்த படியினாலே பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டு இருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனை புசிப்பாய்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. வருத்தத்துடன் புசிப்பாய் என்பதற்கு இரண்டு பொருட்கள் காணப்படுகின்றன. முதலாவது சம்பாத்தியம் என்பது சங்கடப்பட்டு வரும் சம்பாத்தியமாக இருக்கும். இரண்டாவது சங்கடப்பட்டு வரும் சம்பாத்தியம் கையில் தங்காமல் போய்விடும் என்பதே வருத்தத்துடன் நீ பூமியின் பலனை புசிப்பாய் என்பதின் இரண்டு பொருள்கள் ஆகும். அதாவது பூமி சபிக்கப்பட்டது. உழைப்பு கடுமையானது. வரவோ கையில் தங்குவது இல்லை. இதுவே ஆதி. 3:17-வது வசனம் கூறியது ஆகும். ஆனால் ஆண்டவரை மதித்து வாழும் பொழுது சபிக்கப்பட்ட நிலம் ஓர் புதிய ஆசீர்வாதம் கொடுக்கும் நிலமாக மாறி விடுகின்றது என்பதை லேவியராகமம் 25-வது அதிகாரத்தில் இருந்து அறிந்துகொள்ளுகின்றோம். கடினமாக நாம் உழைக்கும் உழைப்பிற்கு பலன் உண்டு என்பதை அந்த அதிகாரம் கூறுகின்றது.

ஆறு வருடங்கள் சம்பாதிக்கும் சம்பாத்தியம் 7-வது வருடமும் தங்கி இருக்கும் என்று 25-வது அதிகாரம் கூறுகின்றது. கையில் வந்த வரவு தங்கும் வரமாக இருக்கும் என்பதே லேவியராகமம் 25-வது அதிகாரம் கொடுக்கும் ஆசீர்வாதம் ஆகும். கர்த்தரை மதித்து வாழும் மக்கள் கர்த்தரால் கொடுக்கப்பட்ட நிலங்களையும் மதித்து வாழ்வார்கள் என்பதை 5-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். நிலத்திற்கு ஓய்வு கொடுப்பது என்பது ஒரு முக்கியமான எதிர்பார்ப்பாக ஓய்வு வருடத்தில் காணப்படுவதை 5-வது வசனம் எடுத்து கூறுகின்றது. ஒரு வருடம் முழுவதும் நிலத்தை ஆறப்போட்டு விட்டால் மறு வருடம் சாப்பிடுவதற்கு என்ன செய்வது என்ற அச்சம் உள்ளத்தில் வர வேண்டாம். ஏழு வருடத்திற்கு ஒரு முறை வரும் ஓய்வு வருடம் என்பது மீட்பர் மீது மீட்கப்பட்டவர்களுக்கு இருக்கும்

விசுவாசம், நம்பிக்கை எவ்வளவு ஆழமானது என்பதை அளக்கும் ஓர் அளவு கோலாக வருகின்றது. ஏழாவது வருடம் எதுவுமே செய்யாமல் ஓய்ந்து இருக்கும் வருடமாக மாறிவிட்டால் அந்த வருடத்திலே நாம் என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம் என்னத்தை உடுத்துவோம் என்று மீட்கப்பட்ட ஜனங்கள் வருந்த போகின்றார்களாக அல்லது கர்த்தர் என்ன சொல்லுகின்றாரோ அதன்படி செய்வதற்கு நாங்கள் ஆயத்தம் என்பதை உறுதி படுத்த போகின்றார்களா என்பதை 7 வருடத்திற்கு ஒருமுறை வரும் ஓய்வு வருடம் எடுத்து காட்டப்போகின்றது. கர்த்தர் கூறும் கட்டளைகள் கீழ்படிதல்களை எதிர்பார்க்கின்றது.

ஒவ்வொரு கீழ்படிதலுக்கும் ஒரு உறுதியான விசுவாசம் தேவைப்படுகின்றது. கட்டளைகள் கீழ்படிதல்களை எதிர்பார்த்து நிற்கும் பொழுது விசுவாசம் உதவி செய்ய முன் வருகின்றது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்ற அவர்களுடைய முற்பிதாக்கள் விசுவாசம் என்ற ஊன்றுகோலை ஊன்றி அவர்களுடைய வாழ்க்கைகளை கடந்து சென்று இருக்கின்றார்கள். ஈசாக்கு என்பவர் கர்த்தர் மீது பூரண விசுவாசம் கொண்டு வாழ்ந்தார். அவருக்கு கர்த்தர் கொடுத்த நிலங்களில் அவர் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை கண்டு அனுபவித்தார். கர்த்தர் கைவிடவே இல்லை என்பதை ஆதி. 26:12-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ''ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான்'' என்று அந்த வசனம் கூறுவதை நாம் பார்க்கின்றோம். ஏழு வருடங்களுக்கு ஒருமுறை வரும் ஓய்வு வருடத்தில் நிலத்திற்கும் ஓய்வு கொடுத்து விடுங்கள் என்று கர்த்தர் கூறுவதை மீட்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளும் பொழுது, கர்த்தர் கூறுவதற்கு அவர்கள் கீழ்ப்படிகின்றார்கள் என்பதை பார்த்து விடுகின்றோம். அவர்கள் கீழ்படிவதற்கு விசுவாசம் என்பது ஊன்று கோலாக அவர்களுக்கு மாறிவிட்டது என்பதையும் நாம் பார்த்து விடுகின்றோம்.

விசுவாசம் என்பது மீட்கப்பட்டவர்களுக்கு இருக்கும்வரை அவர்களுடைய பாதை நெய்யாய் பொழிந்தது. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரை நம்புகிறவனுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது.

> ***தேசத்தின் ஓய்விலே பயிராகிறது உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; உன் வேலைக்காரனுக்கும், உன் வேலைக்காரிக்கும், உன் கூலிக்காரனுக்கும், உன்னிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும், உன் நாட்டு மிருகத்துக்கும், உன் தேசத்தில் இருக்கிற காட்டு மிருகத்துக்கும் அதில் விளைந்திருப்பது எல்லாம் ஆகாரமாயிருப்பதாக. (லேவி. 25:6,7)***

ஓய்வு வருடத்தில் நிலத்திற்கும் ஓய்வு கொடுக்கவேண்டும் என்பது கர்த்தர் ஜனங்களிடம் எதிர்பார்த்த 2 எதிர்பார்ப்புகளை சுட்டி காட்டுகின்றது. கர்த்தர் எதிர்பார்த்த முதலாவது எதிர்பார்ப்பு மீட்கப்பட்ட ஜனங்கள் என்னுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவார்களாக என்பது ஆகும். கீழ்ப்படிவதற்கு அவர்களுக்கு ஏற்ற விசுவாசம் இருக்கின்றதா என்பதும் ஆகும். விசுவாச வாழ்க்கை என்பது அற்புதங்கள் அதிசயங்கள் நிறைந்த வாழ்வாக இருக்கும் என்பதை ஆண்டவர் அறிவார். அவரை விசுவாசிக்கும் தம்முடைய ஜனங்கள் உலக வாழ்க்கையிலே கர்த்தருடைய அற்புதங்களையும் அதிசயங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பதை கர்த்தர் விரும்புகின்றார். ஏழாவது வருடம் நிலத்திற்கு ஓய்வு கொடுக்க வேண்டும். எட்டாவது வருடம் பயிர் செய்ய வேண்டும். 9-வது வருடம் மட்டும் அவர்கள் காத்து இருந்து அறுவடை செய்ய வேண்டும். சுமார் 3 வருடங்கள் சாப்பிடுவதற்கு என்ன செய்வோம் என்ற திகைப்பு அவர்களுக்கு வரவேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் அவர்களுடைய

மீட்பர் அற்புதங்களை செய்யும் மீட்பர். அதிசயங்களை செய்யும் ஆண்டவர். மூன்று வருடங்கள் மட்டும் அல்ல அவர்கள் வாழ்க்கை முழுவதுமே அவர்களை போஷிக்கும் வல்லமை உள்ள கர்த்தர் அவர் என்பதை அவர் நிரூபித்து காட்ட விரும்புகின்றார்.

உங்களை போஷிக்கும் கர்த்தர் நானே என்று கர்த்தர் கூறுவதை லேவி. 25:21,22 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கின்றோம். நான் ஆறாம் வருஷத்தில் உங்களுக்கு ஆசீர்வாதத்தை அனுக்கிரகம் பண்ணுவேன். அது உங்களுக்கு மூன்று வருஷத்தின் பலனைத்தரும். நீங்கள் எட்டாம் வருஷத்திலே விதைத்து, ஒன்பதாம் வருஷம் மட்டும் பழைய பலனிலே சாப்பிடுவீர்கள். புதிய ஆசீர்வாதங்கள் வரும் வரைக்கும் பழைய ஆசீர்வாதங்கள் நீங்குவது இல்லை என்பதை நாம் பார்க்கின்றோம். மீட்கப்பட்ட ஜனங்களின் நிலங்களில் புதிய மகசூல் கிடைக்கும்வரை பழைய மகசூல் குறைவது இல்லை என்று அந்த வசனங்கள் கூறுகின்றன.

ஓய்வு வருடத்தின் மூன்றாவது குறிப்பு லேவி. 25:6-வது வசனத்தில் காணப்படுகின்றது. கைக்கு அடியில் வேலைக்கு அமர்த்திய அனைத்து ஜனங்களுக்கும் ஓய்வு கொடுக்கும் வருடமாக ஓய்வு வருடம் அமைய வேண்டும் என்பதே அந்த குறிப்பு ஆகும். ஓய்வு வருடம் என்பதில் முதலாவதாக நாம் பார்த்த குறிப்பு கர்த்தருக்கு என்ற ஓய்வு என்று பார்த்தோம். இரண்டாவதாக பார்த்த குறிப்பு நிலத்திற்கும் ஓய்வு என்று பார்த்தோம்.

இப்பொழுது மூன்றாவதாக பார்க்கும் குறிப்பு கைக்கு அடியில் வேலை செய்யும் அடிமைகள் அல்லது வேலைக்காரர்கள் அனைவருக்கும் கிடைக்க பெற்ற ஓய்வு என்று நாம் பார்க்கின்றோம். ஏழாவது வருடம் அல்லது ஓய்வு வருடம் என்பது அடிமைகள் என்ற ஒரு சமூகம் இருக்கவே வேண்டாம் என்பதை மீட்கப்பட்ட ஜனங்களுக்கு உணர்த்தும் வருடமாக அமைந்து உள்ளது. அதற்கு ஒரு காரணம் உண்டு. மீட்கப்பட்ட ஜனங்கள் என்று இன்று அழைக்கப்படுகின்ற அவர்கள் 430 வருஷம் அடிமைகளாக எகிப்து தேசத்தில் இருந்ததே ஆகும். வறுமை என்பது மனிதனை மனிதனுக்கு அடிமையாக மாற்றி விடுகின்றது. பசி என்பது மனிதனை இரு கைகளை ஏந்த செய்கின்றது. பற்றாக்குறை என்பது மற்றவர்களை உற்று நோக்க செய்கின்றது. அவ்விதமான ஒரு வாழ்வு எவருக்கும் வேண்டாம் என்பதே அடிமைகள் அனைவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட வேண்டும் என்பதின் பொருள் ஆகும்.

நீங்கள் அடிமைகளாக இருக்கும் பொழுது உங்களுடைய எஜமான்கள் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று உங்கள் இருதயத்தில் நினைத்து கொண்டு இருந்தீர்களோ அப்படியே நீங்கள் இனிமேல் மற்றவர்களை நடத்த வேண்டும் என்பதே இந்த குறிப்பு தரும் தகவல் ஆகும். உன்னை போல் பிறனை நேசி என்பதே லேவியராகம புத்தகத்தின் இரண்டாவது முக்கிய கருத்து என்பதை நாம் அறிவோம். அடிமை என்ற ஒரு பிரிவே சமூகத்தில் இருக்கவேண்டாம் என்று வேதபுத்தகம் தெளிவாக கூறுகின்றது. கர்த்தாதி கர்த்தரின் கண்களுக்கு முன்பாக மனிதர்கள் என்பவர்கள் பற்பல நிலைகளில் நிறுத்தப்படவே இல்லை. அனைத்து மனிதர்களும் ஆண்டவரின் பிள்ளைகள் என்ற நிலையில் ஆண்டவரால் பார்க்கப்படுகின்றார்கள். யாத். 21:2-வது வசனம், ''எபிரெயரில் ஒரு அடிமையை கொண்டாயானால் அவன் ஆறு வருஷம் சேவித்து ஏழாம் வருஷத்தில் ஒன்றும் கொடாமல் விடுதலை பெற்று போகக்கடவன்'' என்று கூறுகின்றது. அதனை தொடர்ந்து உபா. 15:15-வது வசனம், ''நீ எகிப்து தேசத்தில் அடிமையாய் இருந்ததையும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மீட்டுக்கொண்டதையும் நினைவு கூறக்கடவாய். ஆகையால் நான் இன்று இந்த காரியத்தை உனக்கு கட்டளையிடுகின்றேன்'' என்று கூறுகின்றது.

பண கஷ்டம் என்பது மன கஷ்டம் கொண்டு வரும். மனம் பாரமாக இருக்கும் பொழுது ஓய்வு என்பது ஒரு ஓய்வாக தெரிவது இல்லை. ஓய்வு வருடம் என்பது முழு ஓய்வாக அனைவருக்கும் இருக்க வேண்டும் என்பதற்காக அடிமைகள் என்ற ஒரு இனம் இருக்கவே வேண்டாம் என்றும், கனத்த சிந்தையுடன் வாழ்கின்றவர்களுக்கு உடல் ஓய்வு எடுத்தாலும் உள்ளம் என்பது முணுமுணுத்து கொண்டேதான் இருக்கும். வெறும் உடல் ஓய்வு மட்டும் அல்ல, உள்ளமும் ஒருங்கே நிறைவும் மகிழ்ச்சியும் பெற்ற வருடமாக ஓய்வு வருடம் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. எனவே அடிமைகள் என்றும் இருக்க வேண்டாம். பண கஷ்டத்தில் இருக்கிறோம் என்று கூறுகின்றவர்களும், ஓய்வு வருடத்தில் இருக்க வேண்டாம். பற்றாக்குறையினாலே கடன் வாங்கி கண்ணீரின் மிகுதியினால் வாழ்கின்ற அனைவருக்கும் ஓய்வு வருடம் உதயமாகும் பொழுது அவர்களின் கடன்கள் அனைத்தும் மன்னிக்கப்பட வேண்டும் என்பது ஓய்வு வருடத்தின் ஒரு முக்கியமான குறிப்பாக மாறுகின்றது. உபா. 15:1,2,4-வது வசனம். ''ஏழாம் வருடத்தின் முடிவிலே விடுதலை பண்ணுவாயாக. விடுதலையின் விபரமாவது; பிறனுக்கு கடன் கொடுத்தவன் எவனும் கர்த்தர் நியமித்த விடுதலை கூறப்பட்டபடியால் அந்த கடனை பிறன் கையிலாகிலும், தன் சகோதரன் கையிலாகிலும் தண்டியாமல் விட்டு விடக்கடவன். எளியவன் உனக்குள் இல்லாது இருக்கும்படியாக இப்படி செய்ய வேண்டும்.'' கடன் என்ற கனத்த சுமை மனிதனின் முதுகை வளைய செய்கின்றது. கடன் என்ற சுமையுடன் வட்டி என்ற புதிய சுமைகள் வந்து கொண்டே இருக்கின்றன. அதனால் வளைந்த முதுகு ஒடிந்தே விடும் என்ற நிலைக்குள் மனிதன் வருகின்றான். அப்பொழுது ஏழாவது வருடம் என்ற ஓய்வு வருடம் உதயமாகுகின்றது. கடன்கள் அனைத்தும் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் மன்னிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. கடன் சுமை நீங்குகின்றது. வட்டி கொடுப்பது நிற்கின்றது. குனிந்த முதுகுகள் நிமிர்ந்து நிற்கின்றன. கண்ணீரில் வாழ்ந்த குடும்பங்கள் களிப்பு கண்டன. காரணம் ஓய்வு வருடம் பிறந்தது. ஏழாவது வருடம் நெருங்கி வந்து கொண்டு இருக்கின்றது. கடன் கொடுப்பதை நாம் நிறுத்தி கொள்ளுவோம் என்று கடன் கொடுக்கின்றவர்கள் கூறக்கூடாது என்றும் வேத புத்தகம் கூறுகின்றது. பெற்ற கடனை திருப்பி பெறுவதற்கு வழியில்லாமல் போய்விடும், ஏழாவது வருடம் என்ற ஓய்வு வருடம் வந்து கொண்டு இருக்கின்றது என்று சொல்ல வேண்டாம் என்று வேத புத்தகம் கூறுகின்றது. உபா. 15:9-11 வசனங்களை பாருங்கள். விடுதலை வருஷமாகிய ஏழாம் வருஷம் கிட்டி இருக்கிறது என்று சொல்லி உன் இருதயத்திலே பொல்லாத நினைவு கொண்டு உன் ஏழை சகோதரனுக்கு கொடாமல் மறுத்து அவன் மேல் வன்கண் வைக்காத படிக்கும் அவன் உன்னை குறித்து கர்த்தரை நோக்கி அபயம் இடாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. அப்படி செய்வாயானால் அது உனக்கு பாவமாக இருக்கும். அவனுக்கு தாராளமாய் கொடுப்பாயாக. அவனுக்கு கொடுக்கும் பொழுது உன் இருதயம் விசனப்படாது இருப்பதாக. அதின் நிமித்தமாக உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லா கிரியைகளிலும் நீ கையிட்டு செய்யும் எல்லா காரியங்களிலேயும் உன்னை ஆசீர்வதிப்பார். தேசத்திலே எளியவர்கள் இல்லாமல் இருப்பது இல்லை. ஆகையால் உன் தேசத்திலே சிறுமைபட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையை தாராளமாய் திறக்க வேண்டும் என்று நான் உனக்கு கட்டளையிடுகிறேன் என்று அந்த வசனங்கள் கூறுகின்றன.

ஓய்வு வருடத்தின் நான்காவது குறிப்பு மிருகங்கள் அனைத்திற்கும் ஓய்வு கொடுக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். லேவி. 25:7-வது வசனத்தில் அந்த குறிப்பை பார்க்கலாம். வாய் இல்லாத பிராணிகளை வதைக்க வேண்டாம் என்றும் எதிர்பார்த்த வேலைகளை

அவைகள் செய்யவில்லை என்று உதைக்க வேண்டாம் என்றும் அந்த வசனம் கூறுகின்றது. அவைகளை மதித்து வாழுகிறோம் என்பதற்கு ஒரு அடையாளமாக ஏழாவது வரும் ஓய்வு வருடத்தில் மிருகங்களுக்கும் பூரண ஓய்வு கொடுங்கள் என்று நான்காவது குறிப்பு கூறுகின்றது. ஓய்வு வருடத்தின் ஆசரிப்பு நான்கு முக்கிய குறிப்புகள் கொண்டதாக இருப்பதை லேவி. 25:4-7 வசனங்களில் நாம் பார்க்கின்றோம். ஓய்வு வருடம் கர்த்தருக்கு என்ற ஓய்வு வருடம் ஆகும் என்பதற்கு முதலாவது குறிப்பு பூமி எவருக்கும் சொந்தமானது அல்ல. கர்த்தருக்கே சொந்தமானது என்பது ஓய்வு வருடத்தின் இரண்டாவது குறிப்பு. அடிமைகள் கடன் பட்டவர்கள் கண்ணீர் சிந்துகின்றவர்கள் என்பவர்களுக்கு ஒரு முடிவு கட்டும் வருடமாக இருப்பது ஓய்வு வருடம் என்பது மூன்றாவது குறிப்பு. வாய் இல்லாத உயிரினங்கள் அனைத்திற்கும் அன்பும் ஆதரவும் கொடுக்கப்பட வேண்டும் என்பது ஓய்வு வருடத்தின் நான்காவது குறிப்பு. ஓய்வு வருடம் என்பதற்கு மறுபெயர் அன்பின் வருடம் என்பதே ஆகும்.

14.2 ஐம்பதாவது வருடம் யூபிலி வருடம் ஆகட்டும்

அன்றியும், ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் நாற்பத்து ஒன்பது வருஷமாகும். அப்பொழுதும் ஏழாம் மாதம் பத்தாம் தேதியில் எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்; பாவ நிவாரண நாளில் உங்கள் தேசமெங்கும் எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும். ஐம்பதாம் வருஷத்தை பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்; அது உங்களுக்கு யூபிலி வருஷம்; அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்துக்கும் திரும்பி போகக்கடவன். (லேவி. 25:8-10)

யூபிலி என்ற ஒரு விசேஷித்த வருடத்தை குறித்து லேவி. 25:8-22 வசனங்களில் 9 குறிப்புகள் கொடுக்கப்பட்டு உள்ளது. முதலாவதாக வரும் குறிப்பு யூபிலி என்ற அந்த வருடம் எவ்வாறு கணக்கிடப்பட வேண்டும் என்பது 8-வது வசனத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது. அன்றியும் ஏழு ஓய்வு வருஷங்கள் உள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக. அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் 49 வருஷம் ஆகும். இந்த 49 வருடங்களும் முடியவும் 50-வது வருடம் பிறக்கின்றது என்பதை 10-வது வசனம் கூறுகின்றது. அந்த ஐம்பதாவது வருடமே யூபிலி வருடம் என்பது ஆகும்.

வருடங்களை எண்ணி எண்ணி பெற்று கொள்ளும் ஒன்றாக யூபிலி வருடம் என்பது அமைகின்றது. ஏழு வருடம் ஏழு வருடமாக ஏழு முறை எண்ணி பெற்றுக்கொள்ள வேண்டும். மனதிற்கு மிகவும் பிடித்தமான தினங்கள் ஆவலோடு எதிர்பார்க்கப்படும் தினங்களாக மாறுகின்றன. யூபிலி வருடம் என்பதும் அசாதாரணமான ஆசீர்வாதங்களை கொண்ட ஒரு வருடமாக இருக்கின்றபடியினால் மீட்கப்பட்ட ஜனங்கள் அனைவரும் மிகவும் ஆசையுடன் எதிர்பார்க்கும் ஒரு வருடமாக யூபிலி வருடம் அந்த மக்களுக்கு இருந்தது. யூபிலி வருடம் என்பதை பற்றிய 2-வது குறிப்பு யூபிலி ஆண்டினில் ஊதப்படும் எக்காள சத்தத்தை பற்றிய குறிப்பு ஆகும்.

யூபிலி ஆண்டு என்பதில் எக்காள சத்தம் எங்கும் முழங்கும். எக்காள சத்தம் முழங்க திறக்கும் ஒரு ஆண்டாக யூபிலி ஆண்டு அமைகின்றது. யூபிலி ஆண்டில் எக்காள தொனி

தொனிக்கப்பட்ட உடனே மக்கள் அனைவரும் யூபிலி ஆண்டு பிறந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளுவார்கள். யூபிலி ஆண்டில் ஊதப்படும் எக்காளம் மிகவும் தனி சிறப்பு பெற்ற ஒரு எக்காளம் ஆகும். சாதாரண எக்காளங்களை விட முற்றிலும் வித்தியாசமான எக்காளம் ஆகும். எந்த அலுவல்களில் மூழ்கி இருந்தாலும் கருத்தை உடனே கவர்ந்து விடும் எக்காளம் ஆகும். கண் அயர்ந்து தூங்குகிறவர்களை கூட துடிதுடித்து எழும்ப செய்யும் எக்காளம் ஆகும்.

யூபிலி ஆண்டில் ஊதப்படும் எக்காளம் ஊதப்பட்ட நேரமே அடிமைகள் அனைவரும் குதித்து எழும்பி ஓடி விடுவார்கள். ஏன் ஓடுகின்றான் என்று கேட்க எஜமானுக்கு உரிமை இருப்பது இல்லை. கடன் பட்டு மடிந்து கிடந்தவர்களின் கடன்கள் அனைத்தும் யூபிலி ஆண்டின் எக்காள தொனி சத்தம் கேட்ட உடனே மன்னிக்கப்பட்டு போய் விடும். வீடுகளையும் சொத்துக்களையும் அடகு வைத்தவர்கள் திரும்ப பெற்று கொள்ளும் வருடமாக யூபிலி வருடத்தின் எக்காள சத்தம் அமைந்து விடுகின்றது. மேடு பள்ளங்கள் இல்லாத சமூகமாக மீட்கப்பட்டவர்களின் சமூகம் யூபிலி ஆண்டின் எக்காள சத்தம் கேட்ட உடனே மாறிவிடுகின்றது. சமமான புல் தரை போன்று அவர்களுடைய சமூகம் யூபிலி ஆண்டின் துவக்கத்தில் மாறுகின்றது.

யூபிலி ஆண்டின் மூன்றாவது குறிப்பு ஊதப்படும் எக்காளம் தேசம் எங்கும் தொனிக்கும் எக்காளமாக இருக்கின்றது என்பது ஆகும். லேவி. 25:9-வது வசனத்தில் நாம் எக்காள சத்தம் கேட்காத இடம் எதுவும் இல்லை என்று அறிந்து கொள்ளுகின்றோம். தாண் என்ற இடம் முதல் பெயர்செபா என்ற இடம் வரை எக்காள சத்தம் கேட்டு விடுகின்றது. ஒரு பகுதி முதல் மறு பகுதி வரை எக்காள சத்தம் தொனிக்கின்றது. யூபிலி ஆண்டு பிறந்து விட்டது என்பதை தெரியாதவர்கள் எவருமே இல்லை. எத்திசையிலும் வாழும் அனைவருடைய கருத்துக்களும், கவனங்களும், கண்களும் யூபிலி ஆண்டிற்கு நேராக உடனடியாக வசீகரிக்கப் படுகின்றது.

யூபிலி ஆண்டினை பற்றிய நான்காவது குறிப்பு யூபிலி வருடம் என்பது பரிசுத்தமான வருடம் என்று லேவி. 25:10-வது வசனம் கூறும் குறிப்பு ஆகும். யூபிலி வருடம் பரிசுத்தமான வருடம், யூபிலி வருடம் பரிசுத்தரின் வருடம். யூபிலி வருடம் பரிசுத்தவான்களின் வருடம்.

ஐந்தாவதாக யூபிலி வருடம் விடுதலையின் வருடம் என்று அழைக்கப்படுகின்றது. ஐம்பதாம் வருஷத்தை பரிசுத்தமாக்கி தேசம் எங்கும் அதின் குடிகளுக்கு எல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள் என்று 10-வது வசனம் கூறுகின்றது. எஜமான், அடிமை என்ற முறை கடுமையாக இருந்த ஒரு காலத்தில் கர்த்தர் ஒரு கட்டளை கொடுக்கின்றார். சங்.146:7-வது வசனம், ''அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயம் செய்கிறார். பசியாக இருக்கிறவர்களுக்கு ஆகாரம் கொடுக்கிறார். கட்டுண்டவர்களை கர்த்தர் விடுதலை ஆக்குகிறார்.'' ''நான் உன் உடன்படிக்கையின் இரத்தத்தினாலே விடுதலை பண்ணுவேன். நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்கு திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையை தருவேன், இன்றைக்கே தருவேன்.'' என்று சகரியா 9:11,12-ல் பார்க்கிறோம்.

ஆறாவதாக யூபிலி வருடம் பூமி களிகூறும் வருடம் என்று லேவி. 25:11,12-ல் பார்க்கிறோம்.

அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாய் இருப்பதாக; அதிலே விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளை கழிக்காமல் விடப்பட்ட திராட்ச செடியின் பழங்களை சேர்க்காமலும் இருப்பீர்களாக. அது யூபிலி வருஷம்; அது உங்களுக்கு பரிசுத்தமாய் இருக்க வேண்டும்; அந்த வருஷத்தில் வயல் வெளியில் விளைந்தவைகளை நீங்கள் புசிக்க வேண்டும். அந்த யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன் தன் காணியாட்சிக்கு திரும்பி போகக்கடவன். (லேவி. 25:11-13)

ஏழாவதாக அவனவன் தன் தன் காணியாட்சிக்கு திரும்பி செல்லும் வருடமாக யூபிலி வருடம் காணப்படுகின்றது. அந்த யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன் தன் காணியாட்சிக்கு திரும்பி போகக்கடவன் என்று லேவி. 25:13-வது வசனம் கூறுகின்றது. ஏசாயா 27:13-வது வசனம், ''அக்காலத்திலே பெரிய எக்காளம் ஊதப்படும். அப்பொழுது அசீரியா தேசத்திலே சிதறடிக்க பட்டவர்களும், எகிப்து தேசத்திலே துரத்தி விடப்பட்டவர்களும் வந்து எருசலேமில் உள்ள பரிசுத்த பர்வதத்திலே கர்த்தரை பணிந்து கொள்ளுவார்கள்'' என்று கூறுகின்றது.

ஆகையால், பிறனுக்கு எதையாவது விற்றாலும், அவனிடத்தில் எதையாவது கொண்டாலும் ஒருவருக்கு ஒருவர் அநியாயம் செய்யக்கூடாது. யூபிலி வருஷத்துக்கு பின் வரும் வருஷங்களின் தொகைக்கு ஏற்ப பிறனிடத்தில் கொள்ளுவாயாக; பலனுள்ள வருஷங்களின் தொகைக்கு ஏற்ப அவன் உனக்கு விற்பானாக. பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தை பார்த்து அவன் உனக்கு விற்கிறபடியால், வருஷங்களின் தொகை ஏறினால் விலை ஏறவும், வருஷங்களின் தொகை குறைந்தால், விலை குறையவும் வேண்டும். உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்ய கூடாது; உன் தேவனுக்கு பயப்பட வேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளின்படி செய்து, என் நியாயங்களை கைக்கொண்டு அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்; அப்பொழுது தேசத்திலே சுகமாய் குடியிருப்பீர்கள். பூமி தன் தன் கனியை தரும்; நீங்கள் திருப்தியாக சாப்பிட்டு, அதில் சுகமாய் குடியிருப்பீர்கள். (லேவி. 25:14-19)

யூபிலி வருடத்தை பற்றிய எட்டாவது குறிப்பு 14-19 வசனங்களில் காணப்படுகின்றது. அனைத்து அநியாயங்களும் அடங்கி போகும் வருடமாக யூபிலி வருடம் காணப்படுவதை நாம் பார்க்கின்றோம். அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான். அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான். அப்படி செய்வது அல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை எரே. 22:26-வது வசனத்தில் பார்க்கின்றோம். நீதியை சரிக்கட்டும் நாள் என் மனதில் இருந்தது. என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது என்று ஏசாயா 63:4-வது வசனம் கூறுகின்றது. யூபிலி ஆண்டு என்பது அனைத்து மக்களுக்கும், அனைத்து சந்தோஷங்களையும் அருளும் ஆண்டாக மலருகின்றது. நியாயம் என்பது அனைத்து இடங்களிலும் தெரியப்படும் வருடமாக காணப்படுகின்றது.

ஏழாம் வருஷத்தில் எதை புசிப்போம்? நாங்கள் விதைக்காமலும், விளைந்ததை சேர்க்காமலும் இருக்க வேண்டுமே! என்று சொல்வீர்களானால், நான் ஆறாம் வருஷத்தில் உங்களுக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம் பண்ணுவேன்; அது உங்களுக்கு மூன்று வருஷத்தின் பலனை தரும். நீங்கள் எட்டாம் வருஷத்திலே விதைத்து, ஒன்பதாம் வருஷம் மட்டும் பழைய பலனிலே சாப்பிடுவீர்கள்; அதின் பலன் விளையும் வரைக்கும் பழைய பலனை சாப்பிடுவீர்கள். (லேவி. 25:20-22)

யூபிலி ஆண்டினை பற்றி இறுதியாக அல்லது ஒன்பதாவதாக வரும் குறிப்பு என்பது என்னவென்றால் யூபிலி ஆண்டு என்பது அற்புதங்களும் அடையாளங்களும் நிரம்ப பெற்ற ஒரு ஆண்டாக மலரும் என்பதே ஆகும். யூபிலி வருடம் என்பது அற்புதமும் அடையாளமும் நிறைந்த ஆசீர்வாதங்களை மீட்கப்பட்ட ஜனங்களுக்கு அருளும் வருடமாக காணப்படுகின்றது.

லேவி. 25:20-22 வசனங்களில் ஒன்பதாவது குறிப்பு காணப்படுகின்றது. நேற்றைய ஆசீர்வாதம் குறையாமல் இருக்கும் பொழுது புதிய ஆசீர்வாதங்கள் வந்து அருளப்படுகின்றன. குறைவு என்பது எங்குமே கேட்கப்படவில்லை. தேவை என்பது எவரது கண்ணிற்கும் தெரியவரவில்லை. எங்கும் நிறைவு, எதிலும் நிறைவு என்பதே யூபிலி ஆண்டு அள்ளி வழங்கிய ஆசீர்வாதமாக அமைந்தது.

யூபிலி வருஷத்தின் ஒன்பது அம்சங்களை நாம் பார்த்தோம். அந்த ஒன்பது வருஷங்களும் கர்த்தராகிய இயேசுவின் இரண்டாவது வருகைக்கு முன் அடையாளமாக அமைந்து இருக்கின்றது. பழைய ஏற்பாட்டின் நூல்கள் அனைத்தும் புதிய ஏற்பாட்டிற்கு ஒரு பாதை அமைக்கின்றது. அவைகள் வரும் காரியங்களுக்கு நிழலாய் இருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவை பற்றினது என்று கொலோ. 2:17-வது வசனத்தில் பவுல் அப்போஸ்தலன் கூறுகின்றார். பழைய ஏற்பாட்டின் சம்பவங்கள் புதிய ஏற்பாட்டின் ஆரம்பங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன.

யூபிலி வருடத்தை எண்ணி எண்ணி எதிர்பார்க்க வேண்டும் என்று லேவி. 25:8-வது வசனம் கூறுகின்றது. இயேசுவின் இரண்டாவது வருகையை நிதானித்து நிதானித்து அறிந்து கொள்ள வேண்டும் என்று புதிய ஏற்பாடு காட்டுகின்றது. விழித்து இருந்து எதிர்பார்க்க வேண்டிய ஒன்றாக இயேசுவின் இரண்டாவது வருகை அமைகின்றது என்பதை மத். 16:3-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். ''உதயமாகிறபோது செவ்வானமும், மந்தாரமுமாய் இருக்கிறது. அதினால் இன்றைக்கு காற்றும், மழையும் உண்டாகும் என்று சொல்லுகிறீர்கள். வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்கு தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா'' என்று இயேசு யூத சமயத்தவர்களிடம் கூறியதை நாம் பார்க்கின்றோம். உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவார் என்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்து இருங்கள் என்றும், நீங்கள் நினையாத நாளிலே மனுஷ குமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாய் இருங்கள்என்றும் மத்தேயு 24:42,44 ஆகிய வசனங்கள் எடுத்து உரைக்கின்றன.

யூபிலி ஆண்டு எக்காள தொனியுடன் பிறந்தது என்றும் எக்காள சத்தம் கேட்கப்படாத இடங்கள் தேசத்தில் எதுவும் இல்லை என்றும் லேவி. 25:9-வது வசனத்தில் நாம் பார்த்தோம். அந்த எக்காள சத்தம் இயேசுவின் இரண்டாவது வருகையில் ஊதப்படும் எக்காள

சத்தத்திற்கு ஒரு முன் அடையாளமாக நிற்கின்றது என்பதையும் நாம் அறிகின்றோம். மத். 24:27-30 வசனங்கள். ''மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும். அந்நாட்களின் உபத்திரவம் முடிந்த உடனே சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒழியை கொடாதிருக்கும். நட்சத்திரங்கள் வானத்தில் இருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷ குமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதை பூமியில் உள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.''

1 தெச. 4:16,17 ஆகிய வசனங்கள், ''ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்தில் இருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்து இருப்பார்கள். பின்பு உயிரோடு இருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்து கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே இருப்போம்'' என்று கூறுகின்றன.

யூபிலி வருடம் என்பது பரிசுத்தமான வருடம் என்று லேவி. 25:10-வது வசனம் கூறுகின்றது. இயேசுவின் இரண்டாவது வருகையின் தினம் பரிசுத்தமான தினம். பரிசுத்தரின் தினம். பரிசுத்தவான்களின் தினம் என்பதை நாம் யூதா நிரூபம் 15-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். ''ஆயிரம் ஆயிரமான தமது பரிசுத்தவான்களோடும் கூட கர்த்தர் வருகிறார்'' என்று அந்த வசனம் கூறுகின்றது.

யூபிலி வருடம் விடுதலை அருளும் வருடம் என்றும் பூமி களி கூறும் வருடம் என்றும் லேவி. 25:10,11,12 ஆகிய வசனங்கள் உரைக்கின்றன. புதிய வானமும் புதிய பூமியும் பெற்று கொள்ள காத்து கொண்டு இருக்கும் சிருஷ்டியும் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் அவ்விதமான விடுதலையை இயேசுவின் இரண்டாவது வருகையில் அனுபவிக்க போகின்றார்கள் என்பதை ரோம. 8:19-23-வது வசனங்களில் கூறுகின்றார். மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்து கொண்டே இருக்கின்றது. அதென்னவென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையாக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தை பெற்று கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே அந்த சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலே மாயைக்கு கீழ்ப்பட்டு இருக்கிறது. ஆகையால் நமக்கு தெரிந்து இருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனை படுகிறது. அதுவும் அல்லாமல் ஆவியின் முதல் பலன்களை பெற்ற நாமும்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருவதற்கு காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம் என்று அந்த வசனங்களில் பரிசுத்த பவுல் கூறுகின்றார்.

லேவியராகம புத்தகம் 25-வது அதிகாரம் அருளும் யூபிலி ஆண்டும் விசுவாசிகள் காத்து கொண்டு இருக்கும் கிறிஸ்துவின் இரண்டாவது வருகையும் மிகவும் இணைந்து காணப்படுவதை நாம் இந்த வசனங்களில் காண்கின்றோம். இயேசுவின் கிருபைகளை ஒன்று ஒன்றாக லேவியராகம புத்தகத்தின் அதிகாரங்கள் முன்னதாக நமக்கு அறிவிக்கின்றன. இயேசு அருளும் பாவ மன்னிப்பு, இயேசு அருளும் பரிசுத்தமான ஜீவியம் செய்கின்றவர்களுக்கு

இயேசு அருளும் நித்திய இளைப்பாறுதல் அனைத்தும் ஆங்கு கூறப்பட்டு இருப்பதை நாம் பார்க்கின்றோம். யூபிலி ஆண்டு என்பதை இயேசுவின் கிருபைகளை தங்கள் வாழ்க்கையில் பெற்று கொண்டவர்கள் அவர்களது வாழ்க்கையில் இறுதியில் அடைந்து சந்தோஷப்படும் நிகழ்ச்சியை முன்னதாக அவர்களுக்கு அறிவிக்கின்றது.

விசுவாசிகளை ஊக்கப்படுத்துகின்றது. யூபிலி ஆண்டில் அவனவன் தன் தன் காணியாட்சிக்கு திரும்பி செல்ல வேண்டும் என்பதை நாம் லேவி. 25:13-வது வசனத்தில் இருந்து அறிந்து கொண்டோம். இயேசுவின் இரண்டாவது வருகையில் நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை விசுவாசிகள் பெற்று கொள்ளுவார்கள் என்பதை எபி. 4:9-11 வசனங்களில் நாம் பார்க்கின்றோம். ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுதல் காலம் இனி வருகிறதாயிருக்கின்றது. ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்து இருப்பான். ஆகையால் அந்த திருஷ்டாந்தத்தின்படி ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம் என்று அந்த வசனங்கள் நமக்கு அறிவு புகட்டுகின்றன.

தானி. 12:13-வது வசனம் இவ்வாறு கூறுகின்றது. ''நீயோவென்றால் முடிவு வருமட்டும் போயிரு; நீ இளைப்பாறி கொண்டிருந்து நாட்களின் முடிவிலே உன் சுதந்திர வீதத்திற்கு எழுந்து இருப்பாய்''. யூபிலி ஆண்டு என்பது இளைப்பாறுதல் கொடுக்கும் ஆண்டு என்று லேவியராகம புத்தகம் 25-வது அதிகாரம் கூறுகின்றது. இயேசுவின் இரண்டாவது வருகை அனைத்து விசுவாசிகளுக்கும் இளைப்பாறுதல் கொடுக்கும் வருகையாக இருக்கும் என்று இந்த வசனங்கள் நமக்கு உற்சாகத்தை ஊட்டுகின்றது. யூபிலி வருடத்தில் அனைத்து குறைவுகளும் நிறைவாகும் என்று நாம் பார்த்தோம். அந்த வருடத்தில் நிலங்களும் ஓய்வு எடுத்தாலும் மக்களுக்கு ஒரு குறைவும் உணவு என்பதில் வரவே இல்லை என்றும் நாம் பார்த்தோம். அற்புதங்களும் அதிசயங்களுமான அறுவடைகள் அவர்களுக்கு காணப்பட்டது. கண்ணீர் கவலைகள் இவைகள் எதுவும் அவர்கள் முகத்தில் யூபிலி வருடத்தில் தெரியவே இல்லை. பயமும், பதட்டமும் காணப்படவும் இல்லை. இவைகளையெல்லாம் லேவி. 25:20-22 வசனங்களில் நாம் பார்த்தோம். இயேசுவின் இரண்டாவது வருகையிலும் அற்புதங்களும், அடையாளங்களும் அதிசயங்களும் இடம் பெறும். அனைத்து மக்களும் ஸ்தம்பித்து நிற்கும் அளவிற்கு இயேசுவின் வருகையில் அற்புதங்களும் அடையாளங்களும் அதிசயங்களும் தோன்றும் என்பதை புதிய ஏற்பாட்டின் பல புத்தகங்களில் நாம் பார்க்கின்றோம். அவ்விதமான ஓர் மகத்துவமான நாளுக்காக சிருஷ்டி காத்து கொண்டு இருக்கின்றது. விசுவாசிகள் காத்து கொண்டு இருக்கின்றார்கள்.

மத்தேயு 19:29-வது வசனம், ''என் நாமத்தின் நிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்து கொள்ளுவான்'' என்று கூறுகின்றது. தொடர்ந்து வெளி. 7:16,17 ஆகிய வசனங்கள், ''இவர்கள் இனி பசி அடைவது இல்லை. தாகம் அடைவது இல்லை. வெயிலாவது, உஷ்ணமாவது, இவர்கள் மேல் படுவது இல்லை. சிங்காசனத்தின் மத்தியில் இருக்கிற ஆட்டு குட்டியானவரே இவர்களை மேய்த்து இவர்களை ஜீவ தண்ணீருள்ள ஊற்றுகள் அண்டைக்கு நடத்துவார்.

தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்'' என்று கூறுகின்றன. இதற்கு முன்னதாக இவ்வுலகத்தை விட்டு கடந்து சென்ற விசுவாசிகளின் கூட்டமும் உலகத்தில் விசுவாசிகள் கூட்டம் என்று அழைக்கப்படும் திருச்சபையும் யூபிலி என்ற அந்த ஆண்டின் வருகைக்காக காத்து கொண்டு இருக்கின்றன. யூபிலி ஆண்டின் எக்காள சத்தம் என்று கேட்கும் என்று காத்து கொண்டு இருக்கின்றன. எங்களுடைய ஆண்டவராகிய இயேசுவே நீர் சீக்கிரமாக வரமாட்டீரா என்று கர்த்தருடைய வருகைக்காக விசுவாசிகளுடைய நெஞ்சம் துடித்து கொண்டு இருக்கின்றது. இதனை 1 கொரி. 15:51,52 ஆகிய வசனங்களில் குறிப்பிடுகின்றார். ''இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாம் எல்லாரும் நித்திரை அடைவது இல்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் பொழுது ஒரு நிமிஷத்திலே ஒரு இமை பொழுதிலே நாம் எல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவு இல்லாதவர்களாய் எழுந்து இருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'' என்று அந்த வசனங்கள் கூறுகின்றன.

லேவியராகம புத்தகத்தில் 50 ஆண்டுகளுக்கு ஒரு முறை அன்றைய ஜனங்களுக்கு யூபிலி ஆண்டு என்பது வரவேண்டும் என்று கூறப்பட்டது. புதிய ஏற்பாட்டில் விசுவாசிகள் என்ற சங்கத்திற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை என்று வருகின்றதோ அன்று யூபிலி என்ற ஆண்டு தொடங்க இருக்கின்றது.

14.3 தேசம் கர்த்தருடையது

தேசம் என்னுடையதாய் இருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்க வேண்டாம்; நீங்கள் பரதேசிகளும் என்னிடத்தில் புற குடிகளுமாய் இருக்கிறீர்கள். உங்கள் காணியாட்சியான தேசமெங்கும் நிலங்களை மீட்டு கொள்ள இடம் கொடுக்க கடவீர்கள். உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன். அதை மீட்க ஒருவனும் இல்லாமல், தானே அதை மீட்க தக்கவனானால், அதை விற்ற பின் சென்ற வருஷங்களின் தொகையை தள்ளி, மீந்த தொகையை ஏற்றி, கொண்டவனுக்கு கொடுத்து, அவன் தன் காணியாட்சிக்கு திரும்பி போகக்கடவன். அப்படி கொடுப்பதற்கான நிர்வாகம் அவனுக்கு இல்லாவிட்டால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷம் மட்டும் இருந்து, யூபிலி வருஷத்திலே அது விடுதலை ஆகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்கு திரும்ப போவான். (லேவி. 25:23-28)

யூபிலி வருடத்தை பற்றி லேவியராகமம் 25-வது அதிகாரம் போதிக்கின்றது. யூபிலி வருடத்தில் பற்பல நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. கொத்தடிமைகளாக இருந்தவர்கள் அன்று யூபிலி வருடத்தில் எக்காளம் ஊதியவுடன் குதித்து ஓடுகின்றார்கள். விடுதலை பெற்று மகிழ்கின்றார்கள். பற்றாகுறையினால் கடன்வாங்கி, வாங்கிய கடனை திருப்பி கொடுக்க முடியாமல் தவித்த மக்களுக்கு கடன்கள் அனைத்தும் யூபிலியின் எக்காளம் ஊதியவுடன், தானாக மன்னிக்கப்பட்டு போய் விடுகின்றது. பொருளாதார சிக்கலினால் வீடுகளையும், சொத்துக்களையும் அடமானம் வைத்து பின்னர் திருப்ப முடியாமல் திணறியவர்கள் யூபிலி வருடத்தின் எக்காள சத்தம் கேட்டவுடன் அடகு வைத்த அனைத்தையும், இழந்தவைகள் அனைத்தையும் திரும்ப பெற்று கொள்ளுகின்றார்கள். எனவே யூபிலி ஆண்டு என்பது

கட்டுண்டவர்களை விடுதலை செய்யும் ஆண்டாக திகழ்ந்தது. ஆவலுடன் அனைவராலும் எதிர்பார்க்கும் ஆண்டாக இருந்தது. லேவி. 25:23-55 வசனங்கள் வரை யூபிலி ஆண்டின் முழு விபரங்களும் கொடுக்கப்பட்டு உள்ளன.

லேவி. 25:23-வது வசனத்தில் அனைத்தும் என்னுடையது என்றும் மனிதர் அனைவரும் மிக தற்காலிகமானவர்கள் என்றும் கர்த்தர் கூறுவதை நாம் பார்க்கின்றோம். ''பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது'' என்று சங். 24:1-ல் பார்க்கிறோம். கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்டதும், காப்பாற்றப்பட்டு வருகிறதுமான உலகத்தில் அநீதிகள் இடம் பெறும் பொழுது கர்த்தர் குறுக்கிடுகின்றார். மேலும் மேலும் எளியவர்கள் எளியவர்களாக மாறி கொண்டே இருக்க கர்த்தர் விரும்பவில்லை என்பதை யூபிலி ஆண்டு காட்டுகின்றது. கர்த்தர் ஏழைகளுக்கு இறங்குகிறார் என்பதை 25-வது அதிகாரத்தில் இருந்து நாம் அறிந்துகொள்ளுகின்றோம். தரித்திரம் என்பதினால் பறி கொடுத்து விட்ட அனைவரது நிலங்களும், வீடுகளும் கர்த்தர் ஒருவரால் திரும்ப கொடுக்கப்படுகின்றது என்பதை நாம் பார்க்கின்றோம். வறுமையினால் பிறருக்கு முன்பாக வாடிய நிலையில் மனிதர்கள் நிற்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை லேவியராகமம் 25-வது அதிகாரத்தில் இருந்து கர்த்தர் தெரிவிக்கின்றார்.

யூபிலி வருடம் என்பது அனைவரின் கண்ணீர்களையும் தேவன்தாமே துடைக்கும் வருடமாக திகழ்கின்றது. கவலைகள் அனைத்தும் சந்தோஷமாக மாறும் வருடம் யூபிலி வருடம். செல்வந்தர், வறியவர் என்ற கோடு மறையும் வருடம் யூபிலி வருடம். எஜமான் அடிமை என்ற பிளவுகள் மூடப்படும் வருடம் யூபிலி வருடம். அனைவரும் அனைத்தும் பெற்று அகம் மகிழும் வருடம் யூபிலி வருடம். ஒருவர் மீது ஒருவருக்கு பயமும், பகையும் மறைந்து போகும் வருடம். அன்பும் நல் உறவும் வந்து விடும் வருடம். அப்படிப்பட்ட ஓர் வருடத்தில் மனிதன் மனத்தாழ்மையுடன் வாழ துவங்க வேண்டும் என்பதை சுட்டி காட்டுவதற்கு கர்த்தர் விரும்புகின்றார். வறுமை ஓடி விட்டது என்று பெருமை கொண்டு விடாமல், அடிமை நீங்கியது என்று மமதை கொண்டு விடாமல் வாழ்வதற்கு லேவி. 25:23-வது வசனம் உணர்த்துகின்றது. நீங்கள் பரதேசிகள் என்று இந்த வசனம் கூறுவதை நாம் பார்க்கலாம். ''என் பிதாக்கள் எல்லாரையும் போல நானும் உமக்கு முன்பாக அந்நியனும் பரதேசியுமாக இருக்கிறேன்'' என்று சங். 39:12-ல் பார்க்கிறோம்.

''பூமியிலே நான் பரதேசி'' என்று சங். 119:19-வது வசனமும் கூறுகின்றது. ஐசுவரியம் விருத்தி ஆகும் பொழுது அதன் மேல் நெஞ்சம் பதிய வேண்டாம் என்றும் அதிகாரம் கையில் குவியும் பொழுது அகங்காரம் கொள்ள வேண்டாம் என்றும் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்றவுடன் விருப்பமானபடி வாழ்ந்து விடலாம் என்று முடிவு செய்துவிட வேண்டாம் என்றும் உணர்த்த வாழ்க்கை ஓர் நீர் குமிழி என்று உணர்த்தப்படுகின்றது. நீங்கள் தற்காலிகமானவர்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். பரதேசிகள் என்று 23-வது வசனம் பறைசாற்றுகின்றது. பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள் என்று எபி.13:11-வது வசனம் கூறுகின்றது. உமக்கு முன்பாக நாங்கள் எங்கள் பிதாக்களுடைய பிதாக்கள் எல்லாரையும் போலும் அரதேசிகளும், பரதேசிகளுமாய் இருக்கிறோம். பூமியின் மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலை போல் இருக்கிறது நிலைத்து நிற்போம் என்ற நம்பிக்கை இல்லை என்று ஒரு ஜெபம் 1 நாளா. 29:15-வது வசனத்தில் காணப்படுகின்றது. சங். 39:4-6 வசனங்கள், ''கர்த்தாவே நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என்

நாட்களின் அளவு இன்னது என்பதையும் எனக்கு தெரிவியும்; இதோ என் நாட்களை நாலு விரற்கடையளவாய் ஆக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாதது போல் இருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம். வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகின்றான்; ஆஸ்தியை சேர்க்கிறான் யார் அதை வாரி கொள்ளுவான் என்று அறியான்.'' மிகுந்த மன தாழ்மையுடன் கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டும் என்பதை ஆண்டவர் எதிர் பார்க்கின்றார். ஆசீர்வாதங்களை அனுபவிக்கவே கர்த்தர் கொடுக்கின்றார். ஆனால் ஆசீர்வாதங்கள் கர்த்தர் எதிர்பார்க்கும் முறையில் அனுபவிக்கப்பட வேண்டும் என்றும் ஆசீர்வாதங்கள் வரும் பொழுது மனிதன் தான் தற்காலிகமான மனிதன் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் கர்த்தர் கூறுகின்றார்.

பூமி என்னுடையதாக இருக்கின்றது என்பது கர்த்தர் தெளிவாக 23-வது வசனத்தில் உணர்த்துகின்றார். கானான் என்பது அவர்கள் தானாக பெற்றது அல்ல. கர்த்தர் கிருபையாக கொடுத்ததே ஆகும். கானானின் உரிமையாளர் கர்த்தரே ஆகும். ஆதி. 17:8-வது வசனம் ''நீ பரதேசியாய் தங்கி வருகிற கானான் தேசம் முழுவதையும் உனக்கும், உனக்கு பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாக கொடுத்து, நான் அவர்களுக்கு தேவனாக இருப்பேன்'' என்று கர்த்தர் ஆபிரகாமுடன் அன்று கூறியதை அந்த வசனத்தில் நாம் பார்க்கின்றோம். பழைய ஏற்பாட்டில் அன்று கானான் கர்த்தரால் கிருபையாக அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் பரம கானான் கிறிஸ்துவால் அனைவருக்கும் கிருபையாக கொடுக்க படுகிறது. கானானின் பாக்கியத்தை காத்து கொள்ள அவசியமானது மனத்தாழ்மை என்பதே ஆகும் என்பதை லேவியராகமம் 25-வது அதிகாரம் சுட்டி காட்டுகின்றது. அந்த உள் உணர்வு உண்மையில் அவர்களுக்குள் உதயமாகிவிட்டதா என்பதை அறிவதற்கு ஏற்ற பரீட்சைகள் 24-55 வசனங்களில் கொடுக்கப்படுகின்றன.

உங்களை ஒருவரில் ஒருவர் இனிமேல் எப்படி நடத்தப்பட போகின்றீர்கள் என்பதே வரக்கூடிய பரீட்சை ஆகும். செல்வம் சமமாகி விட்டது. அதிகாரங்கள் எவரது கையிலும் ஒன்று போல் குவியவில்லை. அனைவரும் விடுதலை என்ற உணர்வுக்குள் வந்து விட்டீர்கள். இனிமேல் நீங்கள் ஒவ்வொருவரையும் எப்படி நடத்த போகின்றீர்கள் என்பதை கர்த்தராகிய நான் பார்க்க போகின்றேன் என்பது போல 24-55 வசனங்கள் தெரிகின்றன. லேவி. 25:25-வது வசனத்தில் தரித்திரத்தில் சிக்கிய ஒரு சகோதரன் அறிமுகப்படுத்த படுகினறான். அவன் தனது சொந்த நிலங்களை வறுமையின் காரணத்தினால் விற்று விட்டான். விற்றவனிடம் இருந்து திரும்பவும் அவன் வாங்க வேண்டும். அதற்கு மூன்று வழி முறைகள் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றது. முதலாவது முறை 25-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு தன் காணியாட்சியிலே சிலதை விற்றால் அவன் இனத்தான் ஒருவன் வந்து தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன் என்று அந்த வசனம் கூறுகின்றது.

தரித்திரன் என்ற நிலைக்குள் வந்தவனுக்கு உதவி செய்ய, மீட்டு கொடுக்க முன் வரவேண்டியவன் அவனுடைய இனத்தானாக இருக்க வேண்டும் என்று வசனம் கூறுகின்றது. அவனுக்கு இனத்தான் என்று ஒருவனுமே இல்லை என்றால் அந்த மனிதன் தானே கடுமையாக முயற்சி செய்து சேமித்து அவனே அவனது காணியாட்சியை திருப்பி கொள்ள வேண்டும் என்று லேவி. 25:26,27 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. கடினமாக உழைத்தாலும் அவனால் திருப்பவே முடியாது என்ற நிலைக்குள் அந்த மனிதன் இருப்பான்

என்றால் அவனுக்கு திருப்ப கூடிய திராணிகள் எதுவுமே இல்லை என்ற முடிவுக்குள் அவன் வருவான் என்றால் அந்த மனிதன் யூபிலி ஆண்டு என்ற அந்த விடுதலையின் ஆண்டு வரும் வரை பொறுமையுடன் இருந்து கொள்ள வேண்டும் என்று 28-வது வசனம் கூறுகின்றது.

சொந்த இனத்தான் செய்ய முடியாததை ஒரு இனத்தான் போல வந்து யூபிலி வருடம் செய்து விடும் என்று அந்த வசனம் அவனுக்கு உற்சாகத்தை கொடுக்கின்றது. எனவே அவன் யூபிலி வருடம் எப்பொழுது வரும் என்று காத்து கொண்டே இருப்பான். லேவி. 25:25-வது வசனத்தில் இனத்தான் என்று வரும் ஒரு வார்த்தையை நாம் பார்க்கின்றோம். அந்த வார்த்தைக்கு உபயோகிக்கப்பட்டு உள்ள எபிரெய சொல் 'கோயல்' என்பது ஆகும். கோயல் என்ற எபிரெய வார்த்தையின் சரியான பொருள் 'மீட்பர்' என்பது ஆகும். தரித்திரனுடைய இனத்தான் ஓர் இனத்தான் என்ற முறையில் அல்ல, ஓர் மீட்பன் என்ற முறையில் முன் வந்து அவனுக்கு உதவி செய்ய வேண்டும். ஏழையினால் முடியாததை மீட்பன் செய்து கொடுக்க வேண்டும். கையை விட்டு நழுவி போன ஆசீர்வாதங்களை இனத்தான் அதாவது மீட்பன் மீட்டு கொடுக்க வேண்டும்.

லேவி. 25:25-வது வசனத்தில் இனத்தான் என்பதற்கு பயன்படுத்தப்பட்டு உள்ள கோயல் என்ற அதே எபிரெய வார்த்தை யோபு19:25-வது வசனத்தில் மீட்பர் என்பதற்கு பயன் படுத்தப்பட்டு உள்ளது. ''என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்து இருக்கிறேன்'' என்று யோபு கூறுவதை நாம் பார்க்கின்றோம். கடைசி நாளில் அனைத்து விசுவாசிகளுடைய இனத்தான் அதாவது மீட்பர் தோன்றுவார் என்பதை யோபு முன் கூட்டி கூறி விட்டார். மீட்பர் தோன்றுவார் என்று யோபு கூறுகின்றார். அவரது சொத்து, அவரது சுகம், செல்வம், பிள்ளைகள் அனைத்தையும் யோபு இழந்து போய் நிற்கும் நிலையில் அவ்வாறு கூறுகின்றான்.

இனத்தான் என்று ஒருவர் வந்து யோபுவிற்கு உதவி செய்வதற்கு அன்று எவருமே இல்லை. யோபுவிற்கு உதவி செய்ய உலக பிரகாரமாக இனத்தான் என்று ஒருவரும் முன் வரவும் இல்லை. இனத்தான் என்று கூறுவதற்கு எனக்கு ஒருவருமே இல்லை என்ற நிலைமையில் நான் இருக்கும் பொழுது என்னுடைய இனத்தான் என்னுடைய மீட்பரே என்று யோபு சத்தமிட்டான். என் இனத்தானை, என் மீட்பரை நான் பார்ப்பேன் என்றான். வைராக்கியமாக விசுவாசித்தான். தோல் அழுகி போன பின்னர், கடைசி நாளிலே நான் என் இனத்தானை என்னுடைய மீட்பரை பார்ப்பேன் என்றான். யோபுவின் இனத்தான், யோபுவின் மீட்பர், யோபுவின் தோல் அழுகும் வரை காத்து கொண்டு இருக்கவில்லை. யோபு உயிரோடு இருக்கும் பொழுதே அவன் இழந்த அனைத்தையும் இரண்டத்தனையாக இனத்தான் முன்வந்து, மீட்பர் முன் வந்து கொடுத்து விட்டார். இன்னும் அதிகமாக உயிர்த்தெழும் நாளிலும் யோபு பெற்று கொள்ளுவதற்கு காத்து கொண்டு இருக்கின்றான்.

கர்த்தரை தங்கள் இனத்தானாக மீட்பராக கண்டவர்கள் இம்மையிலே இழந்த அனைத்தையும் மீட்டு கொள்ளுவார்கள். மறுமையிலும் இன்னும் அதிகமாக பெற்று கொள்ளுவார்கள். அன்று ஐம்பதாவது ஆண்டு வரும் யூபிலி ஆண்டிற்காக மீட்கப்பட்ட மக்கள் பழைய ஏற்பாட்டில் காத்து கொண்டு இருந்தார்கள். இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையாகிய யூபிலி ஆண்டிற்காக விசுவாசிகள் சங்கம் உலகம் முழுவதும் காத்து கொண்டு இருக்கின்றது.

14.4 பட்டணத்திலும் கிராமத்திலும் உள்ள வீடுகளின் மீட்பு

மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்ற ஒரு வருஷத்துக்குள் அதை மீட்டு கொள்ளலாம்; ஒரு வருஷத்துக்கு உள்ளாகவே அதை மீட்டு கொள்ள வேண்டும். ஒரு வருஷத்துக்கு உள்ளே அதை மீட்டு கொள்ளாதிருந்தால், மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள அந்த வீடு தலைமுறை தோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது. (லேவி. 25:29,30)

யூபிலி ஆண்டின் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆரவாரித்து கொண்டு இருக்கும் மக்களுக்கு ஆண்டவர் ஐந்து அருமையான ஆலோசனை கூறுவதை லேவி. 25:29-55-வசனங்களில் நாம் பார்க்கின்றோம்.

முதலாவதாக மற்ற மக்களை எப்படி நடத்த வேண்டும் என்பது பற்றி கர்த்தர் இந்த வசனங்களிலே நான்கு நல்ல ஆலோசனைகளை அவர்களுக்கு கொடுக்கின்றார். ஐந்தாவதாக வரும் ஆலோசனை அனைத்து ஆசீர்வாதமும் பெற்ற ஆண்டவராகிய தேவனிடம் அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது ஆகும். லேவி. 25:29-55 வசனங்களில் ஏற்ற ஆலோசனைகள் மீட்கப்பட்ட ஜனங்களுக்கு கொடுக்கப்படுகின்றன. 29,30 ஆகிய வசனங்களில் பட்டணங்களில் வாழும் ஏழை மக்களைப்பற்றிய விபரத்தையும் அவர்களுக்கு எந்த வகையில் மீட்கப்பட்ட மக்கள் உதவியாக அமைய வேண்டும் என்பதை பற்றியும் கூறப்பட்டு உள்ளன. ஒருவன் மதில் சூழ்ந்த பட்டணத்தில் உள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால் என்று 29-வது வசனம் துவங்குகின்றது. மதில் சூழ்ந்த பட்டணத்தில் வாழும் குடும்பம் மனம் உடைந்த குடும்பமாக காணப்படுகின்றது. காரணம் வறுமையினால் பட்டணத்தில் கட்டப்பட்ட வீடு விற்க்கப்பட வேண்டிய நிலைமைக்குள் அவர்கள் வந்து விட்டார்கள். அந்த நாட்களில் வியாபாரங்கள் பட்டணங்களை நடுவாக வைத்து வளர்ந்தன. பட்டணத்தில் கட்டப்பட்ட வீடுகள் வழிப்போக்கர்கள் தங்கவும் வர்த்தகம் வளரவும் செழிக்கவும் உதவி செய்தன. அவ்விதமான ஒரு இடத்தில் ஒரு வீட்டை அமைத்து கொண்டவன் தனது வீட்டை விற்று விடும் நிலைமைக்குள் வருவதை நாம் அந்த வசனங்களில் படிக்கின்றோம். அவன் அந்த வீட்டை திரும்பவும் பெறுவதற்கு யூபிலி ஆண்டு வரும் வரை பொறுத்து கொண்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை 29-வது வசனம் எடுத்து கூறுகின்றது.

ஐம்பது ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே யூபிலி ஆண்டு என்பது இடம் பெறுகின்றது. ஐம்பது ஆண்டுகள் அவன் காத்து கொண்டு இருந்தால் அவனது வியாபாரம் பாதிக்கப்பட்டுவிடும். எனவே அவன் விற்ற வீட்டை அதே வருடம் திரும்பி பெற்று கொள்ளுவதற்கு பட்டணங்களிலே வீடு கட்டியவர்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கின்றது என்பதை 29-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். விற்கப்பட்ட அவனுடைய வீடு அதே வருஷத்தில் திருப்பி பெற்று கொள்ளப்படுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுகின்றது. அப்படி இடம் பெறவில்லை என்றால், யூபிலி ஆண்டு வந்தாலும்கூட பட்டணங்களில் விற்கப்பட்ட வீடுகள் கைமாறுவது இல்லை என்பதும் குறிப்பிடப்பட்டு உள்ளது. பட்டங்களின் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இடம் பெறும் இன்னல்கள் உடனுக்குடன் சரி செய்து விடப்பட வேண்டும் இல்லையென்றால் அது அவர்களுடைய உத்தியோகத்தையும் வர்த்தக வளர்ச்சியையும் பாதிக்கும் என்று 29,30 ஆகிய வசனங்கள் விளக்குகின்றன.

யூபிலி ஆண்டு விதிமுறைகளில் பட்டணங்களில் கட்டப்பட்ட வீடுகளுக்கு ஓர் விதிவிலக்கு கொடுக்கப்படுவதை இந்த வசனங்களில் நாம் பார்க்கின்றோம். தாங்கள் விற்ற வீடுகளை பட்டணங்களில் உடனடியாக திருப்பி கொள்ளுவதற்கு கடுமையாக அவர்கள் உழைக்க வேண்டும் என்றும், விற்ற வீடுகளை அந்த வருடமே அவர்கள் திருப்பி கொள்ளுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்றும் நாம் அறிந்து கொள்ளுகின்றோம். தங்களுக்கு ஏற்பட்ட வறுமையினாலே வீட்டை விற்றவர் திரும்பவும் அதனை வாங்குவதற்கு முன் வரும் பொழுது விலையை கூட்டி விடக்கூடாது என்று 25-வது அதிகாரம் கூறுகின்றது. சொத்துக்கள் மீட்கப்படும் பொழுது விலை நிர்ணயம் பண்ணுவதில் உண்மையாக இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. வறுமையினால் உடைமைகளை விற்றவர் இழந்து போனதை திரும்பவும் பெற்று கொள்ள முயற்சி செய்யும் பொழுது மீட்கப்பட்ட ஜனங்கள் உதவியாக இருக்க வேண்டும் என்பது யூபிலி வருடத்தின் செய்தியாக மாறுகின்றது. அவர்கள் விற்ற உடைமைகளை பெற்று கொள்ளும் பொழுது விலை நிர்ணயம் செய்யப்படுவது எப்படி என்று லேவி. 25:16,50-53 வசனங்கள் கூறுகின்றன.

ஒருவரின் தரித்திரம் பிறிதொருவரின் வாய்ப்பாக மாறிவிட வேண்டாம் என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்து கொள்ளாதே என்று நீதி. 23:10-வது வசனம் கூறுகின்றது. தொடர்ந்து எரே. 22:3-வது வசனம். ''நீங்கள் நியாயமும் நீதியும் செய்து, பறி கொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்கு தப்புவியுங்கள், நீங்கள் பரதேசியையும், திக்கற்றவனையும், விதவையையும் ஒடுக்காமலும் கொடுமை செய்யாமலும் குற்றம் இல்லாத இரத்தத்தை சிந்தாமலும் இருங்கள்'' என்று எரேமியா தீர்க்கதரிசி கூறுகின்றார்.

மதில் சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள் போலவே எண்ணப்படும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும். (லேவி. 25:31)

அடுத்ததாக கிராமங்களில் தங்கள் உடமைகளை இழந்தவர்களை பற்றிய விபரம் லேவி. 25:31-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. மதில் சூழப்படாத கிராமங்களில் உள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள் போலவே எண்ணப்படும். யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலை ஆகும் என்று அந்த வசனம் கூறுகின்றது. வறுமையின் கொடுமையினால் தங்கள் உடமைகளை விற்றவர்கள் மீண்டும் கடுமையாக உழைத்து, சேமித்து விற்று போனதை திரும்பவும் பெற்று கொள்ள வேண்டும் என்று கூறப்படுகின்றது. அது அவர்களால் முடியவில்லை என்றால் அவர்களது இனத்தான் ஒருவன் முன் வந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறப்படுகின்றது. வறுமையினால் தங்களது உடமைகளை விற்கின்றவர்களை திரும்பவும் ஒருமுறை வாழ வைக்க கர்த்தர் விரும்புகின்றார் என்பதை இந்த வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளுகின்றோம்.

14.5 லேவியரின் வீடுகள், காணியாட்சிகளின் மீட்பு

லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகளையோ லேவியர் எக்காலத்திலும் மீட்டு கொள்ளலாம். இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே லேவியருடைய பட்டணங்களிலுள்ள வீடுகள் அவர்களுக்குரிய காணியாட்சியானபடியால், லேவியரிடத்தில் அவனுடைய காணியாட்சி பட்டணத்திலுள்ள வீட்டை ஒருவன் வாங்கினால், விற்கப்பட்ட

அந்த வீடு யூபிலி வருஷத்தில் விடுதலையாகும். அவர்கள் பட்டணங்களை சூழ்ந்த வெளிநிலம் விற்கப்படலாகாது; அது அவர்களுக்கு நித்திய காணியாட்சியாயிருக்கும். (லேவி. 25:32-34)

மூன்றாவதாக லேவியர் என்ற முழு நேர ஊழியர்கள் உடைமைகளை விற்றால் விதிமுறைகள் என்ன என்பதை 32,33,34 ஆகிய வசனங்களில் நாம் காண்கின்றோம்.

லேவியர்கள் என்பார் ஆசரிப்பு கூடாரத்தின் பணிகளை செய்வதற்கு கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். வீடுகளும் வீட்டை சுற்றி இருக்கும் நிலங்களும் அவர்களது உடைமைகளாக இருந்தன. மேலும் லேவியர்களுடைய வீடுகள் பட்டணங்களில் மட்டுமே அமைத்து கொடுக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டு காலத்தில் 48 பட்டணங்கள் லேவியர்களுக்கு என்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டு இருந்தது. ''லேவியர்களுக்கு கொடுக்க வேண்டிய பட்டணங்கள் எல்லாம் 48 பட்டணங்களும் அவைகளை சூழ்ந்த வெளிநிலங்களுமே'' என்று எண்.35:7-வது வசனம் கூறுகின்றது. இந்த 48 பட்டணங்களில் 6 பட்டணங்கள் அடைக்கல பட்டணங்கள் என்று அழைக்கப்பட்டன. இந்த விபரத்தை எண். 35:6-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

யோசுவா 21-வது அதிகாரமும் 1 நாளாகமம் 6-வது அதிகாரமும் லேவியர்கள் குடியிருக்கும் பட்டணங்கள் பற்றிய மிக விரிவான விளக்கங்களை எடுத்து கூறுகின்றன. ஆயினும் லேவியர்களில் வறுமையினால் பாதிக்கப்பட்டு தங்கள் வீடுகளையும், உடமைகளையும் விற்கும் நிலைமைக்குள் வந்தவர்களுக்கு கர்த்தர் ஒரு வாய்ப்பை கொடுக்கின்றார் என்பதை வசனங்கள் கூறுகின்றன. விற்ற மறுநாள் கூட அவர்கள் அதனை திரும்ப பெற்று கொள்ள முடியும் என்பதே அந்த வாய்ப்பு ஆகும். அதனை 32-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். லேவியர்களின் காணியாட்சியாகிய பட்டணங்களில் உள்ள வீடுகளையோ லேவியர்கள் எக்காலத்திலும மீட்டு கொள்ளலாம் என்று 32-வது வசனம் கூறுகின்றது. கர்த்தாதி கர்த்தருடைய ஊழியத்தை கருத்தூன்றி செய்வதற்கு வறுமை ஒரு தடையாக லேவியருக்கு இருக்க வேண்டாம் என்றே அவர்களுக்கு மட்டும் யூபிலி ஆண்டின் விதிகளில் ஓர் விதிவிலக்கு கொடுக்கப்படுகின்றது.

14.6 சகோதரனுக்கு மீட்பு

உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்து போனவனானால், அவனை ஆதரிக்க வேண்டும்; பரதேசியை போலும் தங்க வந்தவனை போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக. நீ அவன் கையில் வட்டியாவது பொலிசையாவது வாங்காமல், உன் தேவனுக்கு பயந்து, உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக. அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும், உன் தானியத்தை பொலிசைக்கும் கொடாயாக. (லேவி. 25:35-37)

லேவியராகமம் 25-வது அதிகாரத்தில் வரும் நான்காவது குறிப்பு ஏழைகளாக இருக்கும் மக்களை எப்படி நடத்த வேண்டும் என்பது ஆகும். வறுமையின் மிகுதியினால் வாழ்க்கையே வெறுத்து போன மனிதர்களை கை இளைத்து போனவர்கள் என்று 35-வது வசனம் கூறுகின்றது. கை இளைத்து போனவர் என்பது வறுமையின் மிகுதியினாலே இனிமேல் வாழவே பிரியம் இல்லை என்ற நிலைக்கு வந்த மனிதனின் முடிவு ஆகும். அப்படி

பட்டவர்களுக்கு கூட ஆதரவு அருள வேண்டும் என்று 35-வது வசனம் கூறுகின்றது. உலகத்தில் பிறந்த எந்த மனிதனும் வாழவே முடியாது என்று கூற வேண்டாம் என்பதே அந்த வசனத்தின் பொருள் ஆகும். கை இளைத்து போனவர்களுக்கு ஆதரவாக இருப்பது எப்படி என்று உடனடியாக கூறப்படுகின்றது. கொடுத்த கடனுக்கும், அடமானம் வைத்த பொருளுக்கும் கை இளைத்து போனவனிடம் இருந்து வட்டி எதுவும் வாங்கவே வேண்டாம் என்று லேவி. 25:36,37 ஆகிய வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்ப கொடுப்பார் என்று நீதி. 19:17-வது வசனம் உரைக்கின்றது. உங்களுக்குள் சிறுமைப்பட்டு இருக்கிற என் ஜனங்களில் ஒருவனுக்கு நீங்கள் பணம் கடனாக கொடுத்து இருந்தால் அவர்களிடம் வட்டி வாங்க வேண்டாம் என்று யாத். 22:25-வது வசனம் கூறுகின்றது.

> ***உங்களுக்கு கானான் தேசத்தை கொடுத்து, உங்களுக்கு தேவனாய் இருக்கும்படி, உங்களை எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே. உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டு போனால், அவனை அடிமையை போல ஊழியம் செய்ய நெருக்க வேண்டாம். அவன் கூலிக்காரனை போலவும் தங்க வந்தவனை போலவும் உன்னோடே இருந்து, யூபிலி வருஷம் மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன். பின்பு, தன் பிள்ளைகளோடும் கூட உன்னை விட்டு நீங்கலாகி, தன் குடும்பத்தாரிடத்துக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பி போகக்கடவன். அவர்கள் நான் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணின என்னுடைய ஊழியக்காரர் ஆகையால், அவர்கள் அடிமைகளாக விற்கப்படலாகாது. நீ அவனை கொடூரமாய் ஆளாமல், உன் தேவனுக்கு பயந்திரு. (லேவி. 25:38-43)***

மேலும் அதிக செல்வம் அதிக அதிகாரம் இருப்பதினால் மற்றவர்களை கொடுமையாக நடத்த வேண்டாம் என்று 42,46,53 ஆகிய வசனங்கள் எடுத்து கூறுகின்றன.

முன் ஒருநாள் பார்வோன் உங்களை அவ்விதமாக நடத்தினான். ஆனால் நீங்கள் எவரையும் அவ்விதம் நடத்தவே வேண்டாம் என்று கேட்டு கொள்ளப்படுகின்றது. உங்களுடைய கடந்தகால வாழ்க்கையில் கர்த்தர் பாராட்டின இரக்கங்களை நினைத்து நீங்களும் மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டுங்கள் என்று 38-வது வசனம் கூறுகின்றது. ஏழையின் கூக்குரலுக்கு தன் செவியை அடைத்து கொள்ளுகிறவன் தானும் சத்தமிட்டு கூப்பிடும் பொழுது கேட்கப்படமாட்டான் என்று நீதி. 21:13-வது வசனம் எடுத்து கூறுகின்றது.

> ***உனக்கு இருக்கும் ஆண் அடிமையும் பெண் அடிமையும் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகளாய் இருக்கவேண்டும் அவர்களில் நீ ஆண் அடிமையையும் பெண் அடிமையையும் விலைக்கு வாங்கலாம். உங்களிடத்திலே பரதேசிகளாய் தங்குகிற அந்நிய புத்திரரிலும், உங்கள் தேசத்தில் உங்களிடத்திலே பிறந்திருக்கிற அவர்களுடைய குடும்பத்தாரிலும் நீங்கள் உங்களுக்கு அடிமைகளை கொண்டு, அவர்களை உங்களுக்கு சுதந்தரமாக்கலாம். அவர்களை உங்களுக்கு பின்வரும் உங்கள் சந்ததியாரும் சுதந்தரிக்கும்படி நீங்கள் அவர்களை சுதந்தரமாக்கி***

கொள்ளலாம், என்றைக்கும் அவர்கள் உங்களுக்கு அடிமைகளாய் இருக்கலாம்; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரோ ஒருவரை ஒருவர் கொடூரமாக ஆளக்கூடது. (லேவி. 25:44-46)

இஸ்ரவேல் மக்கள் தங்களில் ஒருவரை ஒருவர் கனம் பண்ண வேண்டும் என்றே கர்த்தர் எதிர் பார்க்கிறார். அந்நிய மக்களில் இருந்து அடிமைகளை விலைக்கு வாங்கலாம் என்று கூறுகிறார். மோசேயின் காலங்களில் அடிமைகளை வாங்குவது வழக்கத்தில் இருந்தது. அடிமைகளை வாங்கினாலும் அவர்களை கொடுமையாய் நடத்த கர்த்தர் அனுமதிக்கவில்லை. யோசேப்பு அடிமையாக விற்க பட்டதை நாம் ஆதியாகமத்தில் கண்டோம்.

உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் அந்நியனும் செல்வனாய் இருக்க, அவனிடத்தில் இருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு, அந்த பதேசிக்காவது, அந்நியனுக்காவது, பரதேசியின் குடும்பத்தாரில் எவனுக்காவது அவன் விலை பட்டு போனால், அவன் விலை பட்டு போனபின் திரும்ப மீட்கப்படலாம்; அவன் சகோதரரில் ஒருவன் அவனை மீட்கலாம். அவனுடைய பிதாவின் சகோதரனாவது, அந்தச் சகோதரனுடைய புத்திரனாவது, அவன் குடும்பத்திலுள்ள அவனை சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம்; தன்னால் கூடுமானால், தன்னைத்தானே மீட்டு கொள்ளலாம். அவன் தான் விலைப்பட்ட வருஷம் தொடங்கி, யூபிலி வருஷம் வரைக்கும் உண்டான காலத்தை தன்னை விலைக்கு கொண்டவனுடன் கணக்கு பார்க்கக்கடவன்; அவனுடைய விலைக்கிரயம் கூலிக்காரனுடைய காலக்கணக்குப்போல, வருஷத்தொகைக்கு ஒத்து பார்க்க வேண்டும். இன்னும் அநேக வருஷங்கள் இருந்தால், அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்கு தக்கதை தன்னை மீட்கும் பொருளாக திரும்ப கொடுக்கக்கடவன். யூபிலி வருஷம்மட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால் அவனோடே கணக்குப்பார்த்து, தன் வருஷங்களுக்கு தக்கதை, தன்னை மீட்கும் பொருளாக திரும்ப கொடுக்க வேண்டும். (லேவி. 25:47-52)

முன்பு அடிமைகளாக வாழ்ந்து, பின்பு மீட்கப்பட்ட மக்களாகிய நீங்கள் இனி மேல் எதிலும் எவருக்கும் அடிமைகளாக மாறி விடாதேயுங்கள் என்று 42,46 ஆகிய வசனங்கள் எச்சரித்து கூறுகின்றன. மீட்கப்பட்ட அனுபவத்திற்குள் வந்த பின்னர் மறுபடியும் அடிமையாய் போய்விடுதல் பின் வாங்கி போன வாழ்க்கைக்கு சமமாக மாறிவிடும் என்று ஞாபகப்படுத்துகின்றது. ''ஆகையால் நீங்கள் மறுபடியும் அடிமைத்தன நுகத்திற்கு உட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலை கொண்டு இருங்கள்.'' என்று கலாத்தியர் நிரூபம் 5-வது அதிகாரம் முதலாவது வசனம் விசுவாசிகளை எச்சரிக்கின்றது.

இவன் வருஷத்திற்கு வருஷம் கூலி பொருத்தி கொண்டே கூலிக்காரனைப்போல, அவனிடத்தில் இருக்க வேண்டும்; அவன் இவனை உனக்கு முன்பாக கொடூரமாய் ஆளக்கூடாது. இப்படி இவன் மீட்டு கொள்ளப்படாதிருந்தால், இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்க்ள. இஸ்ரவேல் புத்திரர் என்

ஊழியக்காரர்; அவர்கள் நான் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணின என் ஊழியக்காரரே; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 25:53-55)

இஸ்ரவேல் புத்திரர் தனது ஊழியக்காரர் என்று மிகவும் தெளிவாக கர்த்தர் கூறுகின்றார். ஆகையால் அவர்களை நடத்தும் விதமும் அதற்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.

லேவியராகம புத்தகத்தில் 25-வது அதிகாரத்தில் இறுதியாக வரும் குறிப்பு கர்த்தராகிய தேவனிடம் மீட்கப்பட்ட ஜனங்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பது ஆகும். இதனை 55-வது வசனத்தில் நாம் படிக்கின்றோம். ஆண்டவர் எஜமான், அவர்கள் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய அழைக்கப்பட்ட ஊழியக்காரர்கள் என்றும் ஆண்டவர் அவர்களை பார்வோனின் இரும்பு பிடியிலிருந்து மீட்டுக்கொண்டு வந்தார் என்றும் அந்த வசனம் கடந்தகால சம்பவத்தை எடுத்து கூறுகின்றது. கூறிவிட்டு அதற்கு அவர்கள் வாழ்நாள் முழுவதும் கர்த்தராகிய ஆண்டவருக்கு நன்றி உள்ளவர்களாக வாழ வேண்டும் என்று கூறப்படுகின்றது.

கர்த்தரின் கிருபை கிட்டுவதற்கு முன்னதாக அவர்கள் கண்டது கண்ணீர் என்பது ஆகும். ஆனால் இப்பொழுது அவர்கள் கண்டது மீட்பு, பரிசுத்தம், அன்பான சமூகம் என்பதே ஆகும். இதற்கு உதவியாக இருந்த கர்த்தாதி கர்த்தரை மறந்து விடாதேயுங்கள் அவரை போற்றி போற்றி வாழ்ந்து விடுங்கள் என்று 25-வது அதிகாரம் நிறைவு பெறுகின்றது. கர்த்தர் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக என்னத்தை செலுத்துவோம். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

14.7 உயிரற்ற பொருட்களை கர்த்தர் என்று நமஸ்கரியாதே

லேவி. 26:1-13 வசனங்கள் பரிசுத்தம் என்ற பாதையில் நடந்து செல்லுங்கள் என்று நல்ல ஆலோசனைகளையும் கடுமையான எச்சரிப்புகளையும் கொடுத்து கொண்டே வருவதை அதன் ஒவ்வொரு அதிகாரங்களிலும் நாம் பார்த்து கொண்டே வருகின்றோம். சிறப்பாக 26-வது அதிகாரத்தில் தூய பாதை சென்றால் கிடைக்க பெறும் பலன்கள் என்ன என்றும் தீய பாதை சென்றால் வரக்கூடிய பலன்கள் என்ன என்றும் தீர்க்கமாக கூறப்பட்டு உள்ளது. 26-வது அதிகாரத்தில் முதல் இரண்டு வசனங்களும் முன் உரையாக அமைகின்றன. சீரான பாதை சென்றால் நேராக வரும் நன்மைகள் 3-13 வசனங்களிலும் தவறான பாதை சென்றால் தவறாது வரும் தண்டனைகள் 14-44 வசனங்களிலும் கூறப்பட்டு உள்ளன.

நீங்கள் உங்களுக்கு விக்கிரங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்கு சிலையை நிறுத்தாமலும் சித்திரம் தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும் பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்கமாலும் இருப்பீர்களாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் ஓய்வு நாட்களை ஆசரித்து பயபக்தியாய் இருப்பீர்களாக; நான் கர்த்தர். (லேவி. 26:1-2)

லேவியர்களுக்கும் மீட்கப்பட்ட ஜனங்களுக்கும் கொடுக்கப்பட்ட சட்ட புத்தமாக லேவியராகம புத்தகம் காணப்படுகின்றது. அதன் கடைசி பகுதியில் ஒழுங்கு முறைகளை கைக்கொண்டால் விளைவு என்ன என்பதும் கைக்கொள்ள மறுத்தால் விளைவுகள் என்ன என்பதும் தீர்க்கமாக கூறப்படுகின்றது. 4-13 வசனங்களில் கர்த்தரை நடுவாக கொண்டு

வாழ்கின்றவர்களின் வாழ்க்கை சிறப்பு மிக்க வாழ்க்கையாக இருக்கும் என்று கூறப்பட்டு உள்ளது. தேவனையும் அவருடைய நீதியையும் முதலாவது வைத்து வாழ்கின்றவர்களுக்கு வாரி வாரி வழங்கப்படும் நன்மைகள் கூட்டி கொடுக்கப்படும் ஆசீர்வாதங்கள் 4-13 வசனங்களில் எடுத்து கூறப்பட்டு உள்ளது. ஆனால் அதற்கு முன்னதாக கர்த்தரை நடுவாக வைத்து வாழ்தல் என்பது என்ன என்பது தெளிவு படுத்தப்படுகின்றது.

1,2,3 ஆகிய வசனங்களில் அதற்கு ஏற்ற விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றது. 10 கற்பனைகளை, தேவ கட்டளைகளை சிரம் ஏற்று நடப்பதே ஆசீர்வாதமான வாழ்விற்கு நிபந்தனை என்று கூறப்படுகின்றது. எப்படி கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும் என்று முதல் வசனம் துவங்குகின்றது. யாத்திராகம புத்தகம் 32-வது அதிகாரத்தில் செய்த கன்றுக்குட்டி வழிபாட்டினை திரும்பவும் துவங்கிவிட வேண்டாம் என்பதே முதல் வசனம் தரும் முதல் எச்சரிப்பு ஆகும். யாத். 20:4-வது வசனத்திலும், 23:24-வது வசனத்திலும், 34:17-வது வசனத்திலும், லேவி. 19:4-வது வசனத்திலும், உபா. 4:16-19 வசனங்களிலும், சங். 115:4-8 வசனங்களிலும் கர்த்தரை தொழுது கொள்ளும் முறை எப்படி அமைய வேண்டும் என்பது விரிவாகவும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கூறப்பட்டு உள்ளது. யோவான் 4:24-வது வசனத்தில் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. அதற்கு காரணம் கர்த்தர் ஆவியாகவே இருக்கிறார் என்பதே ஆகும். 1 நாளா. 16:29-வது வசனத்திலும், சங். 29:2-வது வசனத்திலும், சங். 96:9-வது வசனத்திலும் பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. அதற்கு காரணம் கர்த்தர் பரிசுத்தராய் இருக்கிறார் என்பதே ஆகும்.

14.8 கட்டளைகளை கை கொள்வதால் பெறும் ஆசீர்வாதங்கள்

நாம் முடிவு செய்வதின்படி அல்ல, கர்த்தர் எதிர்பார்க்கிறபடி கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும் என்பதே 26-வது அதிகாரத்தின் துவக்க அறிவிப்பு ஆகும். போற்றுதல், அறிக்கையிடுதல், அர்ப்பணித்தல், ஆராதித்தல், மன்றாடுதல், தெரிவித்தல், துதித்தல் ஆகிய ஏழு படிகளும் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்து கர்த்தரை தொழுது கொள்ளுகிறவர்கள் கடந்து செல்லும் ஏழு படிகளாக ஆராதனை என்ற அமைப்பில் இடம்பெறுகின்றது என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். எவ்வாறு கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும் என்பதுடன், என்று கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும் என்றும் லேவி. 26:2-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. ஒவ்வொரு ஓய்வு நாள் தோறும் கர்த்தரை தொழுது கொள்ளுவதற்கு பரிபூரணமாக மீட்கப்பட்ட மக்கள் தங்களை தத்தம் செய்ய வேண்டும் என்பதே அந்த வசனம் குறிப்பிடுவது ஆகும்.

> ***நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து என் கற்பனைகளை கைக்கொண்டு அவைகளின்படி செய்தால் நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன். பூமி தன் பலனையும் வெளியில் உள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். (லேவி. 26:3,4)***

என் பரிசுத்த ஸ்தலத்தை குறித்து பயபக்தியாக இருப்பீர்களாக. நான் கர்த்தர் என்று 26:2-வது வசனம் கூறுகின்றது. கர்த்தருடைய ஆலயத்தில் பயபக்தியாக இருக்கிறோம் என்பதற்கு அடையாளம் ஆவியோடும் உண்மையோடும் கர்த்தரை தொழுது கொள்ளுவது ஆகும். ஓய்வுநாள் தோறும் தேவாலயம் செல்லுவதும் ஆகும். இவை இரண்டும் தவறாமல்

இடம் பெற்றால் தவறுகள் தவிர்க்கப்பட்டு வாழ்வதற்கு வழி பிறப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. செய்ய வேண்டியதை மட்டும் செய்யவும் செய்ய வேண்டாம் என்ற அனைத்தையும் தவிர்த்து வாழவும் கர்த்தரின் கிருபை தேவை. அந்த கிருபையை கர்த்தரை முறைப்படி ஆராதிப்பதில் இருந்தும் ஓய்வு நாளை கடைப்பிடிப்பதில் இருந்தும் பெற்று கொள்ள முடியும் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம்.

10 கற்பனைகளில் 2,4 ஆகிய கற்பனைகள் மட்டும் இந்த அதிகாரத்தில் துவக்கத்தில் கொடுக்கப்பட்டு உள்ளன. 10 கற்பனைகளில் 2,4 ஆகிய கற்பனைகளை தவறாமல் கைக்கொண்டு விட்டால் மற்ற 8 கற்பனைகளையும் கைக்கொள்ளுவதில் தவற மாட்டார்கள் என்பதை அதில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். என் வாசல்படியில் நித்தம் விழித்து இருந்து என் கதவு நிலை அருகே காத்து இருந்து எனக்கு செவி கொடுக்கிற மனுஷன் பாக்கியவான் என்று நீதி. 8:34-வது வசனம் கூறுகின்றது. அந்த பாக்கியமான நிலைகள் 3-13 வசனங்கள் வரை கூறப்பட்டு உள்ளன. லேவி. 26:3-13 வரை ஏழு மட்டற்ற ஆசீர்வாதங்கள் கூறப்படுகின்றன.

முதலாவதாக கூறப்படும் ஆசீர்வாதம் பருவ காலம் என்பது தப்புவதே இல்லை. வயலின் விளைச்சல் குறைவதே இல்லை. இதை லேவி. 26:3,4 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கின்றோம். அந்தந்த பருவத்தில் எங்களுக்கு மழையையும் முன்மாரியையும், பின்மாரியையும் கொடுத்து அறுப்புக்கு நியமித்த வாரங்களை தற்காக்கிற தேவனாகிய கர்த்தர் என்று எரே. 5:24-வது வசனத்தின் முன்பாகம் கூறுகின்றது. ஈசாக்கு விதை விதைத்தான் கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான். அவன் ஐசுவரியவான் ஆகி, வர வர விருத்தி அடைந்து மகா பெரியவன் ஆனான் என்று ஆதி. 26:12-வது வசனம் கூறுகின்றது.

பூமி தன் பலனை தரும். தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார் என்று சங். 67:6-வது வசனம் கூறுகின்றது. பருவ காலம் தப்புவது இல்லை. விளைச்சல் குறைவது இல்லை என்பதே வரும் முதலாவது ஆசீர்வாதம் என்பதை 4-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

> ***திராட்சை பழம் பறிக்கும் காலம் வரைக்கும் போரடிப்பு காலம் இருக்கும்; விதைப்பு காலம் வரைக்கும் திராட்சை பழம் பறிக்கும் காலம் இருக்கும்; நீங்கள் உங்கள் அப்பத்தை திருப்தியாக சாப்பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய் குடியிருப்பீர்கள். தேசத்தில் சமாதானம் கட்டளை இடுவேன்; தத்தளிக்க பண்ணுவார் இல்லாமல் படுத்து கொள்வீர்கள்; துஷ்ட மிருகங்களை தேசத்தில் இராதபடிக்கு ஒழிய பண்ணுவேன்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவது இல்லை. (லேவி. 26:5,6)***

உங்கள் அப்பத்தை திருப்தியாக சாப்பிட்டு உங்கள் தேசத்தில் சுகமாய் குடியிருப்பீர்கள் என்று 5-வது வசனம் கூறுவதை பார்க்கின்றோம். யோவேல் 2:26-வது வசனம், ''நீங்கள் சம்பூரணமாய் சாப்பிட்டு திருப்தி அடைந்து உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை துதிப்பீர்கள். என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவது இல்லை'' என்று கூறுகின்றது. கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது என்று சங். 34:10-வது வசனம் கூறுகின்றது.

உங்கள் தேசத்தில் சுகமாய் குடியிருப்பீர்கள் என்று லேவி. 26:5-வது வசனம் ஆசீர்வதிக்கின்றது. கர்த்தரின் கிருபைகள் அருளப்படும் பொழுது வசிக்கும் வீடும் வாழும் இடமும் கர்த்தரால் பாதுகாக்கப்படுகின்றது. நீதி. 1:33-வது வசனம் கூறுவதை பாருங்கள்.''எனக்கு செவி கொடுக்கிறவன் எவனோ அவன் விக்கினம் இன்றி வாசம் பண்ணி ஆபத்துக்கு பயப்படாமல் அமைதியாய் இருப்பான்'' என்று கூறுகின்றது. மேலும் கர்த்தருடைய நாமம் பலத்த துருகம். நீதிமான் அதற்குள் ஓடி சுகமாய் இருப்பான் என்று நீதி. 18:10-வது வசனம் கூறுகின்றது. எசே. 34:26,27 ஆகிய வசனங்கள். ''நான் அவர்களையும் என் மேட்டின் சுற்று புறங்களையும் ஆசீர்வாதமாக்கி ஏற்ற காலத்தில் மழையை பெய்ய பண்ணுவேன். ஆசீர்வாதமான மழை பெய்யும். வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியை தரும். பூமி தன் பலனை கொடுக்கும். அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாய் இருப்பார்கள். நான் அவர்கள் நுகத்தின் கயிறுகளை அறுத்து அவர்களை அடிமை கொண்டவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கும் போது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்ளுவார்கள் என்று அந்த வசனங்கள் கூறுகின்றன.

கர்த்தரை உத்தமத்துடன் பின்பற்றும் பொழுது பெறும் முதல் ஆசீர்வாதம் மழை பொழியும் என்பதும், விளைச்சல் பொங்கும் என்பதும், பற்றா குறை என்பது இருப்பதே இல்லை என்பதும், பயம் என்பது தெரிவதே இல்லை என்பதும் ஆகும். இரண்டாவது ஆசீர்வாதம் சமாதானம் என்பது ஆகும். லேவி. 26:6-வது வசனத்தில் இதனை பற்றி குறிப்பிடப்பட்டு உள்ளது. கர்த்தர் வீட்டின் சமாதானமாக மாறி விடுகின்றார். அதின் சமாதானம் கர்த்தர் அருளும் சமாதானமாக அமைகின்றது. வீட்டிலும் சமாதானம், செல்லும் இடங்களிலும் சமாதானம், எல்லை முழுவதும் சமாதானம் என்று ஆறாவது வசனம் கூறுகின்றது. கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் என்று சங். 29:11-வது வசனமும் கூறுகின்றது.

உங்கள் சத்துருக்களை துரத்துவீர்கள்; அவர்கள் உங்கள் முன்பாக பட்டயத்தால் விழுவார்கள். உங்களில் ஐந்து பேர் நூறு பேரை துரத்துவார்கள். உங்களில் நூறு பேர் பதினாயிரம் பேரை துரத்துவார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு முன்பாக பட்டயத்தில் விழுவார்கள். (லேவி. 26:7,8)

பரிசுத்தம் என்ற பாதையில் பாதம் பதிக்கும் பொழுது மூன்றாவதாக பெற இருக்கும் ஆசீர்வாதம் லேவி. 26:7,8 வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. அது வாழ்வில் காணும் எந்த போராட்டங்களிலும் தோல்வி காண்பது இல்லை என்பது ஆகும். எதிர்ப்புகள் முழுவதுமாக முறியடிக்க படுவதும் ஆகும்.

நான் உங்கள் மேல் கண்ணோக்கமாய் இருந்து, உங்களை பலுகவும் பெருகவும் பண்ணி, உங்களோடே என் உடன்படிக்கையை திடப்படுத்துவேன். (லேவி. 26:9)

நான்காவதாக வர இருக்கும் ஆசீர்வாதம் 9-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது கர்த்தரை உத்தமத்துடன் பின்பற்றும் பொழுது அவர்கள் விருத்தி அடைவார்கள் என்பதே ஆகும். அவர்களை ஆசீர்வதிக்கிறார். மிகுதியும் பெருகுகிறார்கள். அவர்களுடைய மிருக ஜீவன்களும் குறையாது இருக்க பண்ணுகிறார் என்று சங். 107:38-வது வசனம் கூறுகின்றது.

போன வருஷத்து பழைய தானியத்தை சாப்பிட்டு, புதிய தானியத்துக்கு இடம் உண்டாகும்படி, பழையதை விலக்குவீர்கள். (லேவி. 26:10)

கர்த்தரின் சொற்படி மட்டும் வாழ்க்கை அமைக்கும் பொழுது பெற இருக்கும் ஐந்தாவது ஆசீர்வாதம் 10-வது வசனத்தில் காணப்படுகின்றது. செலவு குறையும், வரவு பெருகும் என்பதே ஐந்தாவது ஆசீர்வாதம் ஆகும். அழிவுகள் இருப்பதும் இல்லை. விளைச்சல்கள் குறைவதும் இல்லை. வேண்டி கொள்ளுவதற்கும் நினைக்கிறதற்கும் அதிகமாக வழங்க படுகின்றன. பாத்திரம் நிரம்பி வழிகின்றது. எண்ணெய் பிடித்து வைக்க பாத்திரங்கள் போதுமானதாக இருக்கவில்லை. பயிர்களை சேகரித்து வைக்க களஞ்சியங்கள் போதவில்லை. தாங்க முடியாத ஆசீர்வாதங்களை 10-வது வசனம் குவிக்கின்றது.

தொடர்ந்து உத்தம இருதயத்துடன் கர்த்தரை பின் பற்றுகின்றவர்கள் பெரும் 6-வது ஆசீர்வாதம் கர்த்தரின் இடைவிடாத பிரசன்னம் என்பதே ஆகும்.

உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன். என் ஆத்துமா உங்களை அரோசிப்பதே இல்லை. நான் உங்கள் நடுவில் உலாவி உங்கள் தேவனாக இருப்பேன். நீங்கள் என் ஜனமாக இருப்பீர்கள். (லேவி. 26:11,12)

பாவம் என்பது பிரவேசிப்பதற்கு முன்பு ஏதேன் தோட்டத்தில் உலாவியது போல பரிசுத்தம் காணும் வீடுகளில், பாளயங்களில், உள்ளங்களில் இன்றும் உலாவுவேன் என்று கர்த்தர் முன் வருகின்றார். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன் என்று புதிய ஏற்பாட்டு நாட்களிலும் அதே வாக்குத்தத்தத்தை இயேசு கூறினார். இயேசுவின் இரண்டாவது வருகை தரும் பரிசுத்த விசுவாசிகள் நடுவில் தேவன் நிரந்தரமாக தங்கி விடுவதே ஆகும்.

வெளி. 21:3-வது வசனம் ''மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெரும் சத்தத்தை கேட்டேன். அது இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கின்றது. அவர்களிடத்திலே அவர் வாசமாய் இருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாய் இருப்பார்கள். தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாய் இருப்பார்''. தம்மைபற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமி எங்கும் உலாவி கொண்டு இருக்கிறது என்று 2நாளா. 16:9-வது வசனம் கூறுகின்றது. உத்தம இதயம் கொண்டவர்கள் நடுவில் குடி கொண்டவர்களுக்கு கர்த்தர் ஆதரவாய் இருக்கின்றார் என்பதை லேவி. 26:11,12 ஆகிய வசனங்கள் சுட்டி காட்டுகின்றன.

உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை அமைப்பேன் என்கின்றார். உங்கள் நடுவில் உலாவுவேன் என்கின்றார். உங்கள் தேவனாக இருப்பேன் என்றும் கூறுகின்றார். இவ்விதமாக கர்த்தர் மீட்கப்பட்டவர்களுக்கு மாறும் பொழுது குறை என்பது இருப்பது இல்லை. தேவை என்பது தென்படுவதும் இல்லை. நிறைவும் பரிபூரணமும் அவர்களுடைய அன்றாட பங்காக மாறி விடுகின்றது. ஆதி. 17:7-வது வசனத்தில் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் இங்கு கூறப்படுகின்றது. யாத். 6:7-வது வசனத்தில் மோசேயிடம் கூறப்பட்ட வாக்குத்தத்தம் லேவி. 26:11,12 ஆகிய வசனங்களில் மறுபடியும் ஒரு முறை ஞாபகப்படுத்தப்படுகின்றது. ''நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே நான் உன் தேவன். நான்

உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னை தாங்குவேன்,'' என்று ஏசாயா 41:10-வது வசனத்தில் கூறுவது அனைத்து மக்களுக்கும் பங்காக மாறுகின்றது.

நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாய் இராதபடிக்கு, நான் அவர்கள் தேசத்தில் இருந்து உங்களை புறப்பட பண்ணி, உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து நடக்க பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 26:13)

இறுதியாக 7-வது வரும் ஆசீர்வாதம் உங்களை நிமிர்ந்து நடக்க பண்ணுவேன் என்பதே ஆகும். தலை குனிந்த வாழ்வு வருவது இல்லை. பார்வோனுக்கு முன்பு பயந்து பயந்து வாழ்ந்தீர்கள், மெலிந்து நலிந்து வாழ்ந்தீர்கள், வாய் இருந்தும் ஊமைகளாக, கை இருந்தும் கைதிகளாக, கால் இருந்தும் கட்டப்பட்டவர்களாக வாழ்ந்தீர்கள். மீறவே முடியாது என்று வாழ்ந்த உங்களுக்கு மீட்பராக மாறி வந்தேன். நீங்கள் மூழ்கி இருக்க வேண்டிய செங்கடலை சிவப்பு கம்பளமாக விரித்து கொடுத்தேன். பகலில் மேகமும் இரவில் அக்கினியும் அமைத்து கொடுத்தேன். உங்கள் நடுவில் இருந்து உங்களை நடத்த ஆசரிப்பு கூடாரம் ஒன்றும் அமைத்து கொண்டேன். சீனாய் மலை உடன்படிக்கை மீறப்படாமல் இருக்கும் வரை என்னுடைய ஆசீர்வாதங்கள் உங்களுக்கு மிகுதியாக பெருகி கொண்டே இருக்கும் என்று கர்த்தர் கூறுகின்றார். நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து என் கற்பனைகளை கைக்கொண்டு அவைகளின்படி செய்தால் என்றே லேவி. 26:3-வது வசனம் துவங்குகின்றது. மேய்ப்பனின் குரல் கேட்டு நடந்து செல்லும் ஆடுகள் ஓநாய்களுக்கு இரையாக போவது இல்லை. தகப்பன் சொல் கேட்டு நடக்கும் பிள்ளைகளுக்கு வருத்தங்கள் வர போவதும் இல்லை. கர்த்தரின் கற்பனைகளின்படி செய்கின்றவர்களுக்கு நன்மைகள் எதுவும் தடை படுவதும் இல்லை. ஏசா. 48:18-வது வசனம், ''ஆ, என் கற்பனைகளை கவனித்தாயானால் நலமாயிருக்கும். அப்பொழுது உன் சமாதானம் நதியை போலவும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளை போலவும் இருக்கும்.'' வெளி. 22:14-வது வசனம். ''ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரம் உள்ளவர்கள் ஆவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.''

14.9 கட்டளைகளை மீறினால் வரும் விளைவுகள்

லேவி. 26:1-13 வசனங்களில் தூய்மையின் பாதை பெரிதான ஆசீர்வாதங்களை பெருக்கி கொடுப்பதை நாம் பார்த்தோம். 14-46 வசனங்களில் தவறான பாதையில் சென்றால் பெரிதான தண்டனைகள் காத்து கொண்டு இருக்கின்றன என்பதை பார்க்க இருக்கின்றோம். வாழ்க்கையில் காணும் சிகரங்களுக்கும் சிறுமைகளுக்கும் காரணம் நடத்தை என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்பதே லேவியராகம புத்தகத்தின் கருத்து ஆகும். பரிசுத்தம் அலட்சியம் செய்யப்படும் பொழுது ஆசீர்வாதம் அருகில் வருவது இல்லை என்பதை 14-46 வசனங்களில் அறிந்து கொள்ளுகின்றோம். ஆதி. 4:7-வது வசனமும், லேவி. 26:14-46 வசனங்களும் பொறுத்தமாக காணப்படுகின்றன. ஆதி. 4:7-வது வசனத்தை இந்த பகுதிக்கு ஒரு தலையங்கமாக எடுத்து கொள்ளுகின்றோம். நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையா, நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்து இருக்கும் என்று அன்று கர்த்தர் காயினிடத்தில் கூறியதை விளக்கமாக லேவி. 26:14-46 வசனங்கள் எடுத்து கூறுகின்றன.

கலா. 6:7,8 ஆகிய வசனங்கள். ''மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மை பரியாசம் பண்ண ஒட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான். தன் மாமிசத்திற்கு என்று விதைக்கிறவன். மாமிசத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கு என்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். நன்மையும் கிருபையும் தூய்மை என்ற பாதையில் பின் தொடருவதை பார்க்கின்றோம். பாவமும் சாபமும் தீமை என்ற பாதையில் தென்படுவதை பார்க்க இருக்கின்றோம். லேவியராகம புத்தகம் ஆசாரியர்களுக்கும் மீட்கப்பட்ட ஜனங்களுக்கும் கர்த்தரால் வழங்கப்பட்ட ஓர் சட்ட நூல் ஆகும். சட்டங்களை கைக்கொண்டு வாழ்ந்தால் உயர்வு. மீறி நடந்தால் தாழ்வு என்பதை லேவியராகமம் 26-வது அதிகாரம் விளக்குகின்றது. பரிசுத்தமாக வாழ்வதற்கு உரிய குறிப்புகள் அனைத்தும் லேவியராகமம் 17-26 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. பரிசுத்தம் அன்பு என்பவை கொண்டு வாழ்ந்தால் வாழ்வு. வாழ மறுத்தால் அழிவு என்பதை பரிசுத்த கோட்பாட்டின் இறுதி முடிவாக லேவியராகமம் 26-வது அதிகாரம் பறை சாற்றுகின்றது. மனுஷன் எதை விதைக்கின்றானோ அதையே அறுப்பான். ஆபிரகாம் என்பவர் கர்த்தருக்கு சித்தமானதை தனது பாதையாக கொண்டார். லோத்து என்றவரோ கண் கண்ட பாதை சென்றார். ஆபிரகாம் நன்மைக்கு மேல் நன்மை பெற்றார். லோத்து என்பவரோ வருத்தத்திற்கு மேல் வருத்தமே கண்டார். ஆண்டவர் ஆபிரகாமை எவ்விதத்திலும் வற்புறுத்தவில்லை. லோத்துவை ஆண்டவர் எவ்விதத்திலும் அச்சுறுத்தவும் இல்லை. மன உடைவு அல்லது மன கடினம் என்பவை வாழ்க்கையின் நன்மைகளையும், தீமைகளையும் வரையருக்கின்றவைகளாக மாறி விடுகின்றன.

நீங்கள் எனக்கு செவி கொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறி போடுவீர்களாகில்; நான் உங்களுக்கு செய்வது என்னவென்றால், கண்களை பூத்து போக பண்ணுகிறதற்கும், இருதயத்தை துயர படுத்துகிறதற்கும், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வர பண்ணுவேன்; நீங்கள் விதைக்கும் விதை விருதாவாய் இருக்கும்; உங்கள் சத்துருக்கள் அதின் பலனை தின்பார்கள். நான் உங்களுக்கு விரோதமாக என் முகத்தை திருப்புவேன்; உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்க படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்; துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள். (லேவி. 26:14-17)

ஆண்டவரை நேசிக்கும் வசீகரிக்கும் ஒரு இனிப்பாக ஆசீர்வாதம் என்பது கொடுக்கப்படவில்லை. அல்லது ஆண்டவரை நேசிக்க அச்சுறுத்தும் அடிகளாக சாபங்களும் கூறப்படவில்லை. மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்று லேவியராகமம் 26-வது அதிகாரம் கூறுகின்றது. வாழ்வில் தாழ்வு வரும் நேரம் எது என்பதை லேவி. 26:14,15 ஆகிய இரண்டு வசனங்களும் விளக்கி காட்டுகின்றன. நீங்கள் எனக்கு செவி கொடாமலும் இந்த கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும் என் கட்டளைகளை வெறுத்து உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு என் உடன்படிக்கையை நீங்கள் மீறி போடுவீர்களாகில் என்று அந்த முகவுரை வசனங்கள் துவங்குகின்றன. கிருபையாக மீட்கப்பட்ட ஜனம் வணங்காத கழுத்து உள்ள ஜனமாக மாறி விடுவதற்கு வாய்ப்பு உண்டு

என்றும் அறிந்து கொள்ளுகின்றோம். உடைந்த மனம் பெற்றவர்கள் கடின மனம் கொள்ளுவதற்கு வாழ்க்கையில் வாய்ப்பு இருக்கின்றது என்பதை முகவுரை மூலமாக அறிந்து கொள்ளுகின்றோம்.

கற்பனைகளின்படி செய்யாமல் போனால், கட்டளைகளை வெறுத்து விட்டால், நியாயங்களை அரோசித்தால், உடன்படிக்கையை மீறினால் என்று 4 பின்வாங்குதல்கள் கூறப்பட்டு உள்ளன. கனிந்த மனம் உடையவர்கள் கடின மனம் பெற்றனர் என்பதை அந்த 4 குறிப்புகளும் குறித்து காட்டுகின்றன. கர்த்தரை பின் பற்றியவர்கள் பின்வாங்கி போய்விட்டார்கள். மல். 2:2-வது வசனம் கூறுகின்றது. ''நீங்கள் கேளாமலும் என் நாமத்திற்கு மகிமையை செலுத்தும்படி இதை சிந்தியாமலும் இருந்தால் நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்.'' இதய கடினம் என்பது ஒரே நாளில் இடம் பெறும் நிகழ்ச்சி அல்ல. மெல்ல மெல்ல சம்பவிக்கும் ஒன்று என்று 14-34 வசனங்களில் பார்க்கின்றோம். 14-17 வசனங்களில் இதய கடினத்தின் துவக்கத்தை பார்க்கின்றோம். அதனால் வரும் இன்னல்களையும் அறிந்து கொள்ளுகின்றோம். மீட்கப்பட்ட ஜனங்களுக்கு கர்த்தருடைய கற்பனைகள் வெறுப்பாக மாறியது. நடைமுறைக்கு ஏற்றதாக கர்த்தரின் கற்பனைகள் அவர்களுக்கு தெரியவில்லை. அவசியம் அற்றதாகவும் வாழ்க்கைக்கு அர்த்தம் அற்றதாகவும் கர்த்தருடைய கட்டளைகள் அவர்களுக்கு தெரிந்தது. ஆண்டவர் கூறும் வழியைவிட அவர்களது அறிவு தரும் வழி அழகாக தெரிந்தது. கர்த்தரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைவிட கண்களுக்கு இனிமையானவைகள் அனைத்திற்கும் அடிமையாகி வாழ்ந்து விடுவது அவர்களது முடிவாக மாறியது. இதய கடினத்தின் துவக்கம் அவர்களது கண்கள் பாதிக்கப்படுவதில் முடிகின்றது என்பதை 16-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். கண்கள் பூத்து போக பண்ணுவேன் என்று 16-வது வசனம் கூறுகின்றது. ஆவலோடு எதிர்பார்க்கும் எதுவுமே இடம்பெற போவதும் இல்லை. வரும் வரும் என்று காத்துக்கொண்டு இருக்கும் எதுவும் வரப்போவதும் இல்லை. கண்கள் தான் பூத்து போகும் என்பதே அந்த வசனத்தின் விளக்கம் ஆகும். இதயம் துயரத்தால் நிரம்பும் என்றும் நினையாதவைகள் இடம் பெறும் என்றும் விரும்பிய எதுவும் பலிப்பது இல்லை என்றும் அந்த வசனம் பொருள் படுகின்றது. எனவே இதயம் துயரமும், திகிலும் பெற்று காணப்படும் என்று 16-வது வசனம் கூறுகின்றது. சரீரம் அதனால் பாதிக்கப்படுகின்றது. உழைப்பில் அதினால் பலன் வருவது இல்லை என்று 16-வது வசனத்தில் பார்க்கின்றோம். நான் உனக்கு விரோதமாக என் முகத்தை திருப்புவேன் என்று 17-வது வசனத்தில் எழுதப்பட்டு உள்ளது. என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன். என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனவீனப்படுவார்கள் என்று 1 சாமு. 2:30-வது வசனம் கூறுகின்றது. கர்த்தருடைய கட்டளைகளை மீறுகிறவர்களுக்கு விரோதமாக கர்த்தருடைய முகம் திருப்ப படுகின்றது என்பதை லேவி. 17:10, 20:5 ஆகிய வசனங்கள் எடுத்து கூறுகின்றன. கர்த்தரின் முகம் விரோதமாக வரும் பட்சத்தில் தோல்வி, ஏமாற்றம், பயம் என்பவைகள் அவர்களுடைய வாழ்க்கையில் அன்றாட பங்காக மாறி விடுகின்றது என்பதை லேவி. 26:17-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். இவ்விதமான இன்னல்களை சந்தித்தும் இதய கடினம் என்பது இன்னமும் நீங்கவில்லை என்பதை 18-வது வசனம் கூறுகின்றது.

இவ்விதமாய் நான் உங்களுக்கு செய்தும், இன்னும் நீங்கள் எனக்கு செவி கொடாது இருந்தால், உங்கள் பாவங்களின் நிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களை தண்டித்து, உங்கள் வல்லமையின் பெருமையை

முறித்து, உங்கள் வானத்தை இரும்பை போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தை போலவும் ஆக்குவேன். உங்கள் பெலன் விருதாவிலே செலவழியும்; உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்க மாட்டாது. நீங்கள் எனக்கு செவி கொடுக்க மனதில்லாமல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக்கு தக்கதாக இன்னும் ஏழத்தனை வாதையை உங்கள் மேல் வரப்பண்ணி, உங்களுக்குள்ளே வெளியின் துஷ்ட மிருகங்களை வரவிடுவேன்; அவைகள் உங்களை பிள்ளையற்றவர்கள் ஆக்கி, உங்கள் மிருக ஜீவன்களை அழித்து, உங்களை குறைந்து போக பண்ணும்; உங்கள் வழிகள் பாழாய் கிடக்கும். நான் செய்யும் தண்டனையினால் நீங்கள் குணப்படாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங்களின் நிமித்தம் ஏழத்தனையாக வாதித்து, என் உடன்படிக்கையை மீறினதற்கு பழிவாங்கும் பட்டயத்தை உங்கள் மேல் வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்தபின், கொள்ளை நோயை உங்கள் நடுவில் அனுப்புவேன்; சத்துருவின் கையில் ஒப்பு கொடுக்க படுவீர்கள். (லேவி. 26:18-25)

கஷ்டங்கள் கண்டும் கர்த்தரை தேட வேண்டும் என்ற உணர்வு பிறக்கவில்லை. எனவே துன்பங்கள் அனைத்தும் ஏழு மடங்காக அதிகரிக்கின்றது என்பதை 18-வது வசனம் கூறுகின்றது. இன்னும் நீங்கள் எனக்கு செவி கொடாமல் போனால் என்று துவங்கி மேலும் வரக்கூடிய துன்பங்கள் அனைத்தும் 26-வது வசனம் வரை கூறப்பட்டு உள்ளது. குணப்படாமல் எனக்கு எதிர்த்து நின்றால் நான் உங்களுக்கு எதிர்த்து நிற்பேன் என்று கர்த்தர் கூறுவதை 23,24 ஆகிய வசனங்களில் பார்க்கலாம். பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கின்றார் என்று 1பேதுரு 5:5-வது வசனம் கூறுகின்றது. மன கடினத்திற்கு காரணம் மன மேட்டிமையே ஆகும். அவர் இருதயத்தில் ஞானம் உள்ளவர். பெலத்தில் பராக்கிரமம் உள்ளவர். அவருக்கு விரோதமாக தன்னை கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார் என்று யோபு 9:4-வது வசனம் கூறுகின்றது. புனிதனுக்கு நீர் புனிதனாகவும் மாறுபாடு உள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவறாகவும் தோன்றுவீர் என்று சங். 18:26-வது வசனம் எச்சரிக்கின்றது.

இன்னும் இவைகள் எல்லாவற்றாலும் நீங்கள் எனக்கு செவி கொடாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நானே உங்கள் பாவங்களின் நிமித்தம் உங்களை ஏழத்தனையாய் தண்டிப்பேன். உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள். நான் உங்கள் மேடைகளை அழித்து, உங்கள் விக்கிரக சிலைகளை நீர்த்துளியாக்கி, உங்கள் உடல்களை உங்கள் நகரலான தேவர்களுடைய உடல்கள் மேல் எறிவேன்; என் ஆத்துமா உங்களை அரோசிக்கும். நான் உங்கள் பட்டணங்களை வெறுமையும், உங்கள் பரிசுத்த ஸ்தலங்களை பாழுமாக்கி, உங்கள் சுகந்த வாசனையை முகராதிருப்பேன். (லேவி. 26:27-31)

இரண்டு முறை மனக்கடினம் இடம் பெற்றது. இரண்டு முறை இன்னல்களும் இடம் பெற்றன. ஆயினும் இதயம் உடையவில்லை. வாழ்க்கையில் ஓர் திருப்பம் தெரியவில்லை.

மூன்றாவது முறையும் மனம் கடினமாகுவதை லேவி. 26:27-வது வசனத்தில் பார்க்கலாம். இன்னும் இவைகள் எல்லாவற்றாலும் நீங்கள் எனக்கு செவி கொடாமல் எனக்கு எதிர்த்து நடந்தால் என்று அந்த வசனம் தொடர்ந்து ஆரம்பிக்கின்றது. அந்த வசனத்தை தொடர்ந்து பல துன்ப நிகழ்ச்சிகளும் தெரிய வருகின்றது. முன் நிலைமையை விட பின் நிலைமை படு மோசமாக மாறுவதை தொடர்ந்து நாம் பார்க்கின்றோம். 3-வது முறையும் இதயம் கடினமாகும் பொழுது இரண்டு முக்கிய செயல்கள் இடம் பெறுகின்றன. முதலாவது பரிசுத்த ஸ்தலம் இல்லாமல் போய் விடுகின்றது.

நான் தேசத்தை பாழாக்குவேன்; அதிலே குடி இருக்கிற உங்கள் சத்துருக்கள் பிரவேசிப்பார்கள். ஜாதிகளுக்குள்ளே உங்களை சிதறடித்து, உங்கள் பின்னாக பட்டயத்தை உருவுவேன்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமும் ஆகும். (லேவி. 26:32,33)

பரிசுத்த ஸ்தலம் இல்லாமல் ஆராதனை இடம்பெற போவது இல்லை. ஆராதனைகள் இடம்பெறாமல் ஆண்டவரின் அன்பும், ஆண்டவரின் ஆசீர்வாதமும் அருளப்பட போவதும் இல்லை. எனவேதான் ஆராதனையை விட்டு விட வேண்டாம் என்று லேவி. 26:1-ல் ஏற்கெனவே கூறப்பட்டது. மூன்றாவது முறையும் மனம் கடினம் ஆகும் பொழுது இடம் பெறும் இரண்டாவது முக்கிய செயல் என்னவென்றால் அவர்கள் பெற்ற விடுதலை பறிபோய் விடுதல் ஆகும். பிரத்தியான் ஒருவன் வந்து அவர்களை முற்றிகை இட்டு ஜெயித்து விடுவான் என்றே கூறப்படுகின்றது. 32,33 ஆகிய வசனங்கள் இவைகளை எடுத்து கூறுகின்றன. எகிப்தில் எப்படி முன்பு அடிமைகளாக வாழ்ந்தார்களோ அதனையும்விட ஒரு கொடூரமான ஒரு முறையில் அடிமைகளாக வாழ போகின்றார்கள் என்பதே அவர்களது இறுதி முடிவாகி விட்டது. எனவே ஓய்வு நாட்கள் ஆசரிப்பு இல்லை. யூபிலி ஆண்டின் எக்காள சத்தம் அவர்கள் கேட்க போவதும் இல்லை. பட்டணங்கள் வெறிச்சோடி கிடக்கின்றது. கிராமங்களில் குடியிருப்பு இல்லை. அவர்களுடைய நிலங்கள் அனைத்தும் கைவிடப்பட்டு போயின. அவ்விதமான ஒரு சூழ்நிலையில் அவர்களின் மனம் கலங்குகின்றது. அவர்களுடைய உள்ளம் உடைகின்றது. தவறு செய்தோம் என்று உதடு முணு முணுக்கின்றது. முத்து முத்தாக கண் கண்ணீர் வடிக்கின்றது. வியாகுலங்கள் விண்ணப்பத்தில் முடிகின்றன. மன உடைவுகள் பாவ அறிக்கையாக மாறுகின்றன. அதைத்தான் அவர்களுடைய ஆண்டவர் எதிர் பார்த்து நிற்கின்றார்.

நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்தில் இருக்கும் போது, தேசமானது பாழாய் கிடக்கிற நாளெல்லாம் தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்; அப்பொழுது தேசம் ஓய்வடைந்து, தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும். நீங்கள் அதிலே குடியிருக்கும் போது, அது உங்கள் ஓய்வு வருஷங்களில் ஓய்வு அடையாத படியினால், அது பாழாய் கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும். உங்களில் உயிரோடு மீதியாய் இருப்பவர்களின் இருதயங்கள் தங்கள் சத்துருக்களின் தேசங்களில் மனத்தளர்ச்சி அடையும்படி செய்வேன்; அசைகிற இலையின் சத்தமும் அவர்களை ஓட்டும்; அவர்கள் பட்டயத்திற்கு தப்பி ஓடுகிறது போல ஓடி, துரத்துவார் இல்லாமல், பட்டயத்துக்கு முன் விழுவது போல, ஒருவர் மேல் ஒருவர் இடறி விழுவார்கள்; உங்கள் சத்துருக்களுக்கு முன் நிற்க உங்களுக்கு பெலன் இராது. புறஜாதிகளுக்கு உள்ளே அழிந்து

போவீர்கள்; உங்கள் சத்துருக்களின் தேசம் உங்களை பட்சிக்கும். உங்களில் தப்பினவர்கள் தங்கள் அக்கிரமங்களின் நிமித்தமும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களின் நிமித்தமும், உங்கள் சத்துருக்களின் தேசங்களில் வாடி போவார்கள். அவர்கள் எனக்கு விரோதமாக துரோகம் பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும் தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கை இடுவதுமன்றி, அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்தபடியினால், நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து, அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களை கொண்டு போய் விட்டதையும் அறிக்கையிட்டு, விருத்த சேதனமில்லாத தங்கள் இருதயத்தை தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்கு கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்து கொண்டால். (லேவி. 26:34-41)

உபா. 4:30,31 வசனங்கள். ''நீ வியாகுலப்பட இவைகளெல்லாம் உன்னை தொடர்ந்து பிடிக்கும் போது கடைசி நாளில் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பி அவர் சத்தத்திற்கு கீழ்படிவாயானால் உன் தேவனாகிய கர்த்தர் இரக்கம் உள்ளவராய் இருக்கிறபடியால் அவர் உன்னை கைவிட மாட்டார். உன்னை அழிக்கவும் மாட்டார். உன் பிதாக்களுக்கு தான் ஆணையிட்டு கொடுத்த உடன்படிக்கையை மறக்கவும் மாட்டார்'' என்று கூறுகின்றன. கர்த்தரின் கட்டளைகளுக்கு கீழ்படிய முன் வரும் பொழுது கர்த்தர் தம் கரம் கொடுக்க முன் வருகின்றார் என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். இகழ்ச்சி நீங்கி புகழ்ச்சி அடைகின்றார்கள். நீங்கள் கட்டளைகளை கைக்கொண்டு வருகிறதின் நிமித்தம் உங்களை புகழுகிறேன் என்று 1 கொரி. 11:2-வது வசனத்தில் கூறுகின்றார். கட்டளைகளை மீறும் பொழுது கஷ்டங்கள் வருகின்றன. சட்டங்களை மீறும் பொழுது சங்கடங்களை சந்திக்கின்றோம். மனம் உடைந்து வருந்தும் பொழுது, மனம் திருந்தும் பொழுது, கர்த்தரின் கட்டளைகளுக்கு அடங்கி நடப்போம் என்று இன்னும் ஒரு முறை கீழ்படியும் பொழுது, புதிய கிருபைகள் கொடுக்கப்படுகின்றன. அவர்களது வாழ்க்கை திருப்பம் உண்மையானது என்பதை மூன்று முறைகளில் ஆண்டவர் அறிந்து கொள்ளலாம் என்பதை 41-வது வசனத்தில் பார்க்கின்றோம்.

முதலாவதாக பாவ அறிக்கை இடம் பெறுகின்றதா. இரண்டாவதாக இதய தாழ்மை இடம் பெறுகின்றதா, மூன்றாவதாக செய்த தவறுகள் தண்டனைகள் அனைத்தும் நியாயமான தண்டனைகள் தான் என்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா என்பதே அந்த மூன்று சமிக்கைகளாகும். இந்த மூன்றும் இடம் பெறும் பொழுது கர்த்தர் மூன்று நன்மைகளை அவர்களுக்கு செய்ய துரிதமாக முன் வருகின்றார். இதனை 42-45 வசனங்களில் நாம் பார்க்கலாம்.

நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன். தேசம் அவர்களாலே விடப்பட்டு, பாழாய் கிடக்கிறதினாலே தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்; அவர்கள் என் நியாயங்களை அவமதித்து, அவர்களுடைய ஆத்துமா என் கட்டளைகளை வெறுத்தபடியினால் அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நியாயம் என்று ஒத்து கொள்ளுவார்கள். அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்தில்

இருந்தாலும், நான் அவர்களை நிர்மூலமாக்க தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாக்க தக்கதாகவும், நான் அவர்களை கைவிடவும் வெறுக்கவும் மாட்டேன்; நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர். அவர்களுடைய தேவனாய் இருக்கும்படிக்கு, நான் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக எகிப்து தேசத்திலிருந்து அவர்களை புறப்பட செய்து, அவர்களுடைய முன்னோர்களோடே நான் பண்ணின உடன்படிக்கையை அவர்கள் நிமித்தம் நினைவு கூறுவேன்; நான் கர்த்தர் என்று சொல் என்றார். கர்த்தர் நமக்கும் இஸ்ரவேல் சந்ததியாருக்கும் நடுவே இருக்கும்படி மோசேயை கொண்டு, சீனாய் மலையின்மேல் கொடுத்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே. (லேவி. 26:42-46)

முதலாவது நன்மை, கர்த்தர் முற்பிதாக்களுடன் செய்த உடன்படிக்கைகளை நினைவு கூறுவார் என்று 41-வது வசனம் தேற்றுகின்றது. இரண்டாவது நன்மை, கர்த்தர் அவர்களை கைவிடவும் வெறுக்கவும் மாட்டார் என்று 44-வது வசனம் உற்சாகப்படுத்துகின்றது. மூன்றாவது நன்மை, அடிமைத்தன வாழ்வில் இருந்து மோசேயின் தலைமையில் வெளி வந்த போது கொடுத்த அத்தனை ஆசீர்வாதங்களையும் இன்னும் ஒரு முறை திரும்பவும் கொடுப்பதற்கு கர்த்தர் நினைவு கூறுவார் என்று உற்சாகம் ஊட்டப்படுகின்றது. இதனை 45-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

லேவி. 17 முதல் 27-வது அதிகாரம் வரை பரிசுத்த ஜீவியத்திற்கு ஓர் அழைப்பு விடுக்கப்படுகின்றது. பரிசுத்த ஜீவியத்தின் உச்ச நிலைக்கு வந்த பின்னரும் கூட ஒருவன் வாழ்வில் பின்வாங்கி போவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதை லேவியராகமம் 26-வது அதிகாரம் சுட்டி காட்டுகின்றது. பின்வாங்குதல் உடனடியாக வெளியே தெரியா விட்டாலும் அமைதலாக இதயத்தில் இடம் பெற்று விட்டது என்பதை அந்த அதிகாரம் காட்டுகின்றது. இதயம் கடினமாகி தேவ தண்டனைகள் தலைமீது குவிய ஆரம்பிக்கும் பொழுது மனிதனால் தாங்க முடியாது என்ற நிலை வரும் என்பதையும் லேவியராகமம் 26-வது அதிகாரம் எடுத்து கூறுகின்றது. ஆயினும் கர்த்தர் இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவர் என்றும் கோபம் கொண்டாலும் இரக்கத்தை சிநேகிக்கிறவர் என்றும் லேவியராகமம் 26-வது அதிகாரத்தின் பின் பகுதி எடுத்து கூறுகின்றது. மனம் உடைந்து வருந்தும் எவரையும் கர்த்தர் சிநேகிக்கிறார் என்பது தெரிய வருகின்றது. நீதி. 5:11-14 வசனங்கள், ''முடிவிலே உன் மாம்சமும், உன் சரீரமும் உரு அழியும் போது நீ துக்கித்து, ஐயோ போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே, என் போதகரின் சொல்லை நான் கேளாமலும் எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியை சாயாமலும் போனேனே. சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும், கொஞ்சம் குறைய எல்லா தீமைக்கும் உள்ளானேனே என்று முறையிடுவாய் என்று அந்த வசனங்கள் கூறுகின்றன. தாங்க முடியாத பின்வாங்கும் ஜீவியத்திற்குள் சென்று விட்டாலும், மனம் உடைந்து திரும்பி வரும் பொழுது கர்த்தர் மனம் உவந்து வரவேற்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். உத்தம மனஸ்தாபத்துடனும், உண்மையான விசுவாசத்துடனும் வரும் அனைவருக்கும் கர்த்தரின் புதிய கிருபைகள் காத்து கொண்டு இருக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

அத்தியாயம் - 15

கர்த்தருக்கு செய்யும் பொருத்தனைகளை நிறைவேற்ற பிரமாணங்கள்

15.1 கர்த்தருக்கு செய்யும் பொருத்தனைகள்

லேவியராகமத்தின் கடைசி அதிகாரமாக 27-வது அதிகாரம் விளங்குகின்றது. லேவியராகமம் 1 முதல் 26 அதிகாரங்களில் செய்ய வேண்டியவைகள் எவைகள் என்றும், செய்ய வேண்டாதவைகள் எவைகள் என்றும் தெளிவாக கூறப்பட்டன. லேவியராகமம் 27-வது அதிகாரத்தில் செய் என்றோ அல்லது செய்யாதே என்றோ கர்த்தர் எதுவும் சொல்லவில்லை. ஆனால் ஜனங்கள் வலிய பல செயல்கள் கர்த்தருக்காக செய்வதை 27-வது அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம்.

செய் என்று சொல்லாமல் பல செயல்கள் 27-வது அதிகாரத்தில் இடம் பெறுகின்றன. கொடு என்று கேட்காமல் ஏராளம் 27-வது அதிகாரத்தில் கொடுக்கப்படுகின்றன. அதற்கு பெயர் 'பொருத்தனை' என்பது ஆகும். லேவியராகமம் 27-வது அதிகாரத்தில் கர்த்தருக்கு பொருத்தனைகள் ஏறெடுக்கப்படுகின்றன. பொருத்தனை என்பது வலிய செய்யப்படும் ஒரு செயல் ஆகும். கர்த்தருக்கு நேராக செய்யப்படும் செயல் ஆகும். கர்த்தருக்கு பிரியமானவைகளை செய்வேன் என்றும், கர்த்தருக்கு பிரியம் இல்லாதவைகளை விட்டு விடுவேன் என்பதும் வலிய மனிதர்கள் செய்யும் செயல்கள் ஆகும். பொருத்தனை என்பது ஒரு ஜெபமாக ஏறெடுக்கப்பட்டு வெற்றிகரமாக முடியும் பொழுது ஸ்தோத்திரத்தில் நிறைவு காண்கின்றது.

கர்த்தரிடத்தில் ஒரு நன்மை எதிர்பார்த்து பொருத்தனைகள் ஏறெடுக்க படுவதை பரிசுத்த வேத புத்தகத்தில் பார்க்கின்றோம். தனக்கு மிக அவசியமான ஒன்று கிடைத்து விட்டால் கர்த்தருக்கு பதில் உபகாரம் செய்வேன் என்று பொருத்தனை செய்ய படுகின்றது. யாக்கோபு என்பவர் ஒரு பொருத்தனை கலந்த ஜெபம் ஒன்றை ஏறெடுப்பதை ஆதி. 28:20-22 வசனங்கள் கூறுகின்றன. ''அப்பொழுது யாக்கோபு, தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னை காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்கு தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்கு சமாதானத்தோடே திரும்பி வர பண்ணுவாரானால், கர்த்தர் எனக்கு தேவனாக இருப்பார். நான் தூணாக நிறுத்தின இந்த கல் தேவனுக்கு வீடாகும். தேவரீர் எனக்கு தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசம பாகம் செலுத்துவேன்'' என்று சொல்லி பொருத்தனை பண்ணி கொண்டான்''. யாக்கோபு கர்த்தரிடம் எதிர்பார்த்த நன்மைகள் ஐந்து நன்மைகள் ஆகும். உண்ண உணவு, உடுக்க வஸ்திரம், தங்குவதற்கு பாதுகாப்பான ஒரு இடம், எடுக்கும் பிரயாணம் இனிதாக முடிவது, பின்னர் வீடு திரும்பி அப்பாவின் முகத்தை காண்பது என்பது ஆகும். இவை அனைத்தும் அவனது கைக்கு அப்பால் பட்டதாகவும், கர்த்தரின் கைக்கு உட்பட்டதாகவும் யாக்கோபு உணர்ந்தான். கர்த்தரின் கைக்கு உட்பட்டதை தான் பெற்று கொள்ளுவதற்கு கர்த்தருக்கு ஒரு பொருத்தனை செய்தான். கர்த்தர் அவனது எளிய விசுவாசத்தை, சிறு பிள்ளையை போன்று அவன் செய்த பொருத்தனையின் ஜெபத்தை பெரிதாக மதித்தார். அவ்வண்ணமே அவருக்கு செய்தார் என்பதை யாக்கோபு பின் ஒரு நாள் ஸ்தோத்திரத்துடன் கூறுவதை

ஆதி. 32:10-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். ''அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவிற்கும் எல்லா சத்தியத்திற்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானை கடந்து போனேன். இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்.'' என்று அந்த வசனம் கூறுகின்றது. பெலிஸ்தர்கள் என்பவர்கள் தாவீதை நெருக்கிய நாட்களில் தாவீது பொருத்தனை செய்து ஜெபித்தான். கர்த்தர் மீட்பு அருளிய பின்னர், கர்த்தரை ஸ்தோத்தரிப்பேன் என்று கூறினான். சங். 56:11,12 ஆகிய வசனங்களில் ''தேவனை நம்பி இருக்கிறேன். நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான்? தேவனே உமக்கு நான் பண்ணின பொருத்தனைகள் என்மேல் இருக்கிறது. உமக்கு ஸ்தோத்திரங்களை செலுத்துவேன்'' என்று தாவீது கூறினான்.

மகப்பேறு இல்லாமல் மனம் வருந்திய அன்னாள் என்ற குடும்ப ஸ்திரீ கர்த்தரிடம் ஒரு பொருத்தனை செய்து ஜெபித்தாள். ஆண் மகவு ஒன்று ஈவாக கர்த்தர் அருளினால் அதனை கர்த்தரின் சேவைக்கு திரும்பவும் ஈவாக அர்ப்பணிப்பேன் என்று அவள் உள்ளம் உடைந்து செய்த பொருத்தனையின் ஜெபம் தேவனால் கேட்க பட்டது. 1 சாமு. 1:10,11 ஆகிய வசனங்கள், ''அவள் போய் மனம் கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி சேனைகளின் கர்த்தாவே: தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையை கண்ணோக்கி பார்த்து உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்து அருளி உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையை கொடுத்தால் அவன் உயிரோடு இருக்கும் சகல நாளும் நான் அவனை கர்த்தருக்கு ஒப்பு கொடுப்பேன். அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை'' என்று ஒரு பொருத்தனை பண்ணினாள் என்று கூறுகின்றன. கர்த்தர் அவளது ஜெபத்தை ஏற்று கொண்டார். அவள் பெற்ற நன்மையை கர்த்தருக்கே அவளும் திரும்ப வழங்க வந்தாள். 1 சாமு. 1:26,27,28 ஆகிய வசனங்கள். ''அப்பொழுது அவள் என் ஆண்டவனே! இங்கே உம்மண்டையிலே நின்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணின ஸ்திரீ நான்தான் என்று என் ஆண்டவனாகிய உம்முடைய ஜீவனை கொண்டு சொல்லுகிறேன். இந்த பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன். நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்கு கட்டளை இட்டார். ஆகையால் அவன் கர்த்தருக்கு என்று கேட்கப்பட்டபடியினால் அவன் உயிரோடு இருக்கும் சகல நாளும் அவனை கர்த்தருக்கே ஒப்பு கொடுக்கிறேன் என்றாள். அவன் அங்கே கர்த்தரை பணிந்து கொண்டான்.''

தேவைகள் துன்பங்கள் போராட்டங்கள் ஆகிய அனைத்தின் நடுவிலும் வாழும் பொழுது அதில் இருந்து தப்பி பிழைக்க கர்த்தரின் தயவு இல்லாமல் வேறு வழி இல்லையே என்று உணரும் போது கர்த்தரின் தயவு பெறுவதற்கு பொருத்தனைகள் ஏறெடுக்கப்பட்டன. மேலும் கர்த்தரின் அன்பு உள்ளத்தில் அதிகம் அதிகமாக ஊற்றப்படும் பொழுது கர்த்தருக்கு பொருத்தனைகள் எவ்வித நிபந்தனையும் இடப்படாமல் எவ்வித கைமாறும் கருதப்படாமல் ஏறெடுக்கப்பட்டன என்றும் நாம் வேத புத்தகத்தில் பார்க்கிறோம். ''தேவனே சீயோனில் உமக்காக துதியானது அமைந்து காத்து இருக்கின்றது. பொருத்தனை உமக்கு செலுத்தப்படும்'' என்று சங். 65:1-வது வசனம் கூறுகின்றது. தானியேல் என்பவர் ''இராஜாவின் போஜனத்தினாலும், அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னை தீட்டு படுத்துதல் ஆகாது என்று தன் இருதயத்திலே தீர்மானம் செய்தான்'' என்று தானி. 1:8-வது வசனத்தில் பார்க்கின்றோம். அந்த அர்ப்பணிப்பு அந்த பொருத்தனை ஒரு அன்பின் பொருத்தனை ஆகும். அன்பு கொடுக்கின்றவருக்கு பதில் அன்பு கொடுப்பதற்கு பொருத்தனைகள் ஏறெடுக்கப்பட்டன. அகப்போராட்டத்தின் காரணத்தினாலோ அன்பின்

பெருக்கத்தின் காரணத்தினாலோ பொருத்தனைகள் செய்யப்பட்டன என்று அறிகின்றோம். ஆயினும் அவைகள் எவரும் சொல்லி செய்யப்படவில்லை. வலிய தானாக செய்யப்பட்டவைகள் ஆகும். பொருத்தனைகள் செய்த பின்னர் பின்வாங்குதல் முடியாத ஒன்று ஆகும். பரிசுத்தமானதை விழுங்குகிறதும் பொருத்தனை செய்த பின்பு யோசிக்கிறதும் மனுஷனுக்கு கண்ணியாக இருக்கும் என்று நீதி. 20:25-வது வசனம் கூறுகின்றது.

உபா. 23:21-23 ஆகிய வசனங்கள் ''நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பொருத்தனை பண்ணியிருந்தால் அதை செலுத்த தாமதம் செய்யாதே. உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார். அது உனக்கு பாவம் ஆகும். நீ பொருத்தனை பண்ணாது இருந்தால் உன்மேல் பாவம் இல்லை. உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும். உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணி சொன்ன உற்சாக பலியை செலுத்தி தீர்ப்பாயாக'' என்று கூறுகின்றது. பிர. 5:4,5 ஆகிய வசனங்கள். ''நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணி கொண்டால் அதை செலுத்த தாமதியாதே அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை, நீ நேர்ந்து கொண்டதை செய், நீ நேர்ந்து கொண்டதை செய்யாமல் போவதை பார்க்கிலும் நேர்ந்து கொள்ளாமல் இருப்பதே நலம்''; என்று அந்த வசனங்கள் கூறுகின்றது. ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும் அல்லது யாதொரு காரியத்தை செய்யும்படி ஆணையிட்டு தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொண்டாலும் அவன் சொல் தவறாமல் தன் வாயில் இருந்து புறப்பட்டபடியெல்லாம் செய்யக்கடன் என்று எண்ணாகம புத்தகம் 30-வது அதிகாரம் 2-வது வசனம் கூறுகின்றது. மேலும் உணர்ச்சி வசப்பட்ட பொருத்தனைகள் கர்த்தரால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதை பார்க்கிறோம். மனிதன் குறுக்கு வழியில் கர்த்தரின் தயவை பெறுவதற்கு பொருத்தனைகள் நேர்ச்சைகள் விரதங்கள் ஏறெடுக்கப்படும் பொழுதெல்லாம் அதன் முடிவு சோகம் என்பதையே பரிசுத்த வேதம் கூறுகின்றது.

நியாயாதிபதிகளின் புத்தகம் 11-வது அதிகாரத்தில் ஒரு சம்பவத்தை நாம் பார்க்கிறோம். யெப்தா என்ற இராணுவ தளபதி ஒருவன் போரில் வெற்றி கண்டு விட்டால் வீடு திரும்பும் பொழுது முதலாவது கண்ணில் படுகின்றது எதுவோ அதை கர்த்தருக்கு பலியாக நான் செலுத்துவேன் என்று ஒரு பொருத்தனை செய்து போருக்கு புறப்பட்டான். போரில் வெற்றியும் பெற்றான். வீடு திரும்பினான். அவன் கண்ணில் முதலாவது விழுந்தது அவனுடைய வருகைக்காக ஆவலுடன் காத்து கொண்டு இருந்த அவனுடைய ஒரே மகள் ஆகும். நியா. 11:30-32 வசனங்கள். ''அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையை பண்ணி தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்பு கொடுக்கவே ஒப்பு கொடுத்தால் நான் அம்மோன் புத்திரரிடமிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும்போது என் வீட்டின் வாசல்படியில் இருந்து எனக்கு எதிர் கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும். அதை சர்வாங்க தகனபலியாக செலுத்துவேன் என்றான்.'' தொடர்ந்து 34,35 ஆகிய வசனங்கள். ''யெப்தா மிஸ்பாவில் இருக்கிற தன் வீட்டிற்கு வருகிறபோது, இதோ, அவன் குமாரத்தி தம்புறு வாசித்து நடனம் செய்து, அவனுக்கு எதிர் கொண்டு வந்தாள்; அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள்; அவளையல்லாமல் அவனுக்கு குமாரனும் இல்லை, குமாரத்தியும் இல்லை. அவன் அவளை கண்டவுடனே, தன் வஸ்திரங்களை கிழித்து கொண்டு ஐயோ என் மகளே, என்னை மிகவும் மனமடியவும், கலங்கவும் பண்ணுகிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயை திறந்து சொல்லி விட்டேன்; அதை நான் மாற்ற கூடாது என்றான்.''

யெப்தாவின் பொருத்தனை உணர்ச்சி வசப்பட்ட பொருத்தனை. அவன் தீர்மானித்த நரபலி என்பதை கர்த்தர் விரும்பியதே இல்லை. வேதபுத்தகம் நரபலிகளை அனுமதிப்பதும் இல்லை. உணர்ச்சி வசப்பட்ட பொருத்தனைகளின் முடிவு ஸ்தோத்திரம் அல்ல. துக்கமே ஆகும். மேலும் முதிர்ச்சி அற்ற பொருத்தனைகளையும் கர்த்தர் விரும்பவில்லை. வயதில் சிறியவர்கள் அவசரப்பட்டு கூறும் பொருத்தனைகளை வயதில் மூத்தவர்கள் அங்கீகரிக்க வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்ப்பதை எண். 30:3-5 வசனங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். ''தன் தகப்பன் வீட்டில் இருக்கிற ஒரு பெண் பிள்ளை தன் சிறு வயதிலே கர்த்தருக்கு பொருத்தனை பண்ணி யாதொரு காரியத்தை செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொண்டால், அவள் செய்த பொருத்தனையையும், அவள் பண்ணிக் கொண்ட நிபந்தனைகளையும் அவளுடைய தகப்பன் கேட்டும், அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருப்பானானால் அவள் செய்த எல்லா பொருத்தனைகளையும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தின நிபந்தனையையும் நிறைவேற்ற வேண்டும். அவள் செய்த பொருத்தனைகளையும் அவள் செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தின நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்டகிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்தால், அது நிறைவேற வேண்டியது இல்லை. அவளுடைய தகப்பன் வேண்டாம் என்று தடுத்தப்படியால், கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார்'' என்று அந்த வசனம் கூறுகின்றது.

மேலும் கணவனுடன் கலந்து கொள்ளாமல் மனைவி சுயமாக எடுக்கும் பொருத்தனைகள் கணவனின் சம்மதம் பெற வேண்டும் என்பதையும் எண். 30:6-8 வசனங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். ''அவள் பொருத்தனை பண்ணும் போதும் தன் உதடுகளை திறந்து தனது ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொள்ளும் போதும், அவளுக்கு புருஷன் இருந்தால், அப்பொழுது அவளுடைய புருஷன் அதை கேட்டு இருந்தும், அதை கேள்வி படுகிற நாளில் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தால் அவளுடைய பொருத்தனைகளும், அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தின நிபந்தனையும் நிறைவேற வேண்டும். அவளுடைய புருஷன் அதை கேட்கிற நாளில், அவன் வேண்டாம் என்று தடுத்து அவள் செய்த பொருத்தனையும், அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொண்ட நிபந்தனையும் செல்லாதபடி செய்தானே ஆகில் அப்பொழுது கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார்'' என்று அந்த வசனங்கள் கூறுகின்றன.

பொருத்தனைகள் என்பது கர்த்தரை வற்புறுத்தி, லாபம் தேடும் ஒன்று அல்ல என்பதையும், குறுக்கு வழியில் தேவ நன்மைகளை பெற ஒரு வாய்ப்பு அல்ல என்பதையும் பரிசுத்த வேத புத்தகம் தெளிவாக கூறுகின்றது. தனது வருமானத்தை பெருக செய்வதற்காக விபசாரத்தை ஒரு தொழிலாக கொண்ட ஒரு பெண் சமாதான பலிகளை பற்றி பேசுவதை நீதிமொழிகளின் புத்தகத்தில் நாம் பார்க்கிறோம். காலை தியானம் செய்வதை பற்றியும் கர்த்தருக்கு பொருத்தனை செய்ததை பற்றியும் அவள் பகிர்ந்து கொள்ளுகின்றாள். சமாதான பலிகள் என்மேல் சுமந்து இருந்தது. இன்றைக்குதான் என் பொருத்தனைகளை நிறைவேற்றினேன் என்றாள் என்பதை நீதி. 7:14-வது வசனத்தில் பார்க்கலாம். முற்றிலும் பாவத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் அவளது பொருத்தனைகளுக்கும் பரிசுத்தராகிய தேவனுக்கும், எவ்வித சம்பந்தமும் இல்லை. பாவத்தை மறைக்க ஒரு பக்தி போர்வையாக, பொருத்தனை, நேர்ச்சை, விரதம் என்பது மாற முடியாது என்பதை வேத புத்தகம் திட்டவட்டமாக கூறுகின்றது.

மாற்றானின் மனைவியுடன் விபசாரம் செய்து விட்டு அவளது கணவனை கொலையும் செய்து விட்டு, பலிகள் செலுத்த முற்பட்ட தாவீது என்பவனிடம் கர்த்தர் அவைகள் எதுவும் தேவை இல்லை என்று காட்டுவதை சங். 51:16-வது வசனத்தில் பார்க்கலாம். ''பலியை நீர் விரும்புகிறது இல்லை. விரும்பினால் செலுத்துவேன். தகனபலியும் உமக்கு பிரியமானது அல்ல'' என்று கூறுகின்றான். தாவீதின் மனம் பரிசுத்தம் ஆகாமல் தாவீதின் கரம் கொடுக்கும் காணிக்கைகள் கர்த்தருக்கு உகந்தது அல்ல என்று அறிந்து கொள்ளுகின்றோம். உள்ளம் உடைந்து உண்மை நிறைந்து எழும்பும் பொருத்தனைகள் பதில் கண்டு உள்ளது. பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதும் இல்லை. பரிசுத்தம் ஸ்தோத்திரத்திற்கு நேராக வழி நடத்துகின்றது. ஸ்தோத்திரம் பொருத்தனைகளுக்கு நேராக வழி நடத்துகின்றது. பொருத்தனைகள் அங்கிகரிக்கப்படும் பொழுது, ஆபத்து தவிர்க்கப்படுகின்றது. செய்யும் விண்ணப்பங்கள் விடை பெறுகின்றன. கர்த்தருடைய நாமம் மகிமை அடைகின்றது. சங். 50:14,15 ஆகிய வசனங்கள். ''நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு பொருத்தனைகளை செலுத்தி, ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமை படுத்துவாய்.''

பொருத்தனைகளின் அதிகாரமான லேவியராகம புத்தகத்தில் 27-வது அதிகாரத்தின் முன் விளக்கத்தினை நாம் பார்த்தோம். லேவியராகமமம் 27-வது அதிகாரத்தில் மொத்தம் 34 வசனங்கள் உண்டு. அதனை கீழ்க்கண்டவாறு பிரித்து பார்க்கலாம். முதலாவது வசனம் அதிகாரத்தின் முகவுரையாக அமைந்து இருக்கின்றது. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி என்று அந்த வசனம் துவங்குகின்றது. கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்ற கனிந்த இதயம் உள்ளவர்களிடம் கர்த்தர் மீண்டும் மீண்டும் பேசுகிறார் என்பதை முதலாவது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

2-24 வசனங்களில் ஜனங்கள் பொருத்தனை செய்யும் பொழுது பொருத்தனை செய்யக்கூடியது எவைகள் என்பது விளக்கப்பட்டு உள்ளன. 25-வது வசனத்தில் கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றிற்கு உபயோகப்படுத்தப்பட வேண்டிய பணத்தின் விபரத்தை பற்றி கூறப்பட்டு உள்ளது. எவ்வித பொருத்தனைக்கும் உட்படாதவைகள் எவைகள் என்பதை பற்றி 26-33 வசனங்களில் கூறப்பட்டு உள்ளது.34-வது வசனம் ஓர் முடிவுரையாக அமைகின்றது.

15.2 கர்த்தருக்கு தங்களையே பொருத்தனை செய்தல்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்; யாதாமொருவர் ஒரு விசேஷித்த பொருத்தனை பண்ணியிருந்தால், பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் உன் மதிப்பின்படி கர்த்தருக்கு உரியவர்கள். இருபது வயது முதல் அறுபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை நீ பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலாகிய ஐம்பது வெள்ளி சேக்கலாகவும், பெண்பிள்ளையை முப்பது சேக்கலாகவும் மதிப்பாயாக. ஐந்து வயது முதல் இருபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை இருபது சேக்கலாகவும், பெண்பிள்ளையை பத்து சேக்கலாகவும், ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை ஐந்து வெள்ளி சேக்கலாகவும், பெண்பிள்ளையை மூன்று வெள்ளி சேக்கலாகவும், அறுபது வயது தொடங்கி, அதற்கு மேற்பட்ட

வயதுள்ள ஆண் பிள்ளையை பதினைந்து சேக்கலாகவும், பெண் பிள்ளையை பத்து சேக்கலாகவும் மதிக்கக்கடவாய். உன் மதிப்பின்படி செலுத்த கூடாத தரித்திரனாய் இருந்தால், அவன் ஆசாரியனுக்கு முன்பாக வந்து நிற்க கடவன்; ஆசாரியன் அவனை மதிப்பானாக; பொருத்தனை பண்ணினவனுடைய திராணிக்கு ஏற்றபடி ஆசாரியன் அவனை மதிக்க கடவன். (லேவி. 27:1-8)

2-8 வசனங்களில் ஜனங்கள் தங்களை கர்த்தருக்கு என்று பொருத்தனை செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டு உள்ளது. அந்நாட்களில் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கு லேவியர்கள் மட்டுமே தங்களை அர்ப்பணித்து கொள்ளலாம். ஆயினும் மற்ற கோத்திரங்களில் இருந்தும் தங்கள் பிள்ளைகளை கர்த்தருடைய ஊழியத்திற்கு என்று பொருத்தனை செய்யும் பொழுது அவ்விதம் பொருத்தனை செய்து விட்டு அவர்கள் தங்களை திரும்ப பெற்று கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. அவ்விதம் திரும்ப பெற்று கொள்ளுவதற்கு அதாவது தங்களை மீட்டு கொள்ளுவதற்கு அவர்கள் ஓர் விலைக்கிரயம் செலுத்த வேண்டும் என்று இந்த அதிகாரத்தில் குறிக்கப்பட்டு உள்ளது. குறிக்கப்பட்டு உள்ள தொகை என்ன என்பதும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அந்த மதிப்பின்படி அவர்கள் கர்த்தருக்கு உரியவர்கள் என்று 2-வது வசனம் கூறுகின்றது. மனிதரின் வயதை பொருத்தும், ஆண் பெண் என்பதை பொருத்தும் மதிப்பீடு கணிக்க படுகின்றது.

20 முதல் 60 வயது உள்ள ஆண்கள் கர்த்தருக்கு என்று பொருத்தனை செய்து விட்டு திரும்ப தங்களை பெற்று கொள்ள முற்படும் பொழுது அதிக விலை கொடுக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. உடல் பெலன், வேலை திறன் ஆகியவற்றை நடுவாக வைத்து மதிப்பீடு குறிக்கப்பட்டது. கர்த்தருக்கு உரியவர்கள் என்று 2-வது வசனம் கூறுகின்றது. அதன் பொருள் கர்த்தருக்கு அடிமைகளாக தங்களை அர்ப்பணிக்கின்றவர்கள், ஆலய வாசலை விட்டு பிரிவதற்கு மனமே இல்லாதவர்கள், கர்த்தருக்கு சேவை செய்வதில் தங்கள் வாழ்நாள் முழுவதையும் கொடுக்க முன் வருகின்றவர்கள் என்பது ஆகும். கர்த்தருக்கு அவ்விதமாக தங்களை அர்ப்பணிக்க பெரியவர்கள், வாலிபர்கள், பெண்கள், சிறிய பிள்ளைகள் அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டு உள்ளதை 3-7 வசனங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். செல்வந்தர்கள் ஏழை என்று பார்க்கப்படாமல் அனைவரும் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு முன்வரலாம் என்பதை 8-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

15.3 மிருகங்கள் பொருத்தனை செய்யப்படல்

ஒருவன் பொருத்தனை பண்ணினது கர்த்தருக்கு பலியிடப்படதக்க மிருக ஜீவனானால் அவன் கர்த்தருக்கு கொடுக்கிற அப்படிப்பட்டது எல்லாம் பரிசுத்தமாய் இருப்பதாக. அதை மாற்றாமலும் வேறு படுத்தாமலும் இருப்பானாக; இளப்பமானதற்கு பதிலாக நலமானதையும், நலமானதற்கு பதிலாக இளப்பமானதையும் செலுத்தாமல் இருப்பானாக; அவன் மிருகத்திற்கு பதிலாக மிருகத்தை மாற்றி கொடுப்பானாகில், அப்பொழுது அதுவும் அதற்கு பதிலாக கொடுத்ததும் பரிசுத்தமாய் இருப்பதாக. அது கர்த்தருக்கு பலியிட படத்தகாத சுத்தம் அல்லாத யாதொரு மிருகமானால், அதை ஆசாரியனுக்கு முன்பாக நிறுத்தக் கடவன். ஆசாரியன் அது

நல்லதானாலும் இளப்பமானதானாலும் அதை மதிப்பானாக; உன் மதிப்பின் படியே இருக்கக்கடவது. அதை மீட்டு கொள்ள மனதாயிருந்தானாகில், உன் மதிப்போடே ஐந்தில் ஒரு பங்கை கூட்டி கொடுக்கக்கடவன். (லேவி.27:9-13)

9-13 வசனங்களில் மிருக ஜீவன்கள் கர்த்தருக்கு என்று பொருத்தனை செய்யப்படுவதை பார்க்கிறோம். கர்த்தருக்கு என்று பலி செலுத்துவதற்கு ஏராளமான மிருக ஜீவன்கள் தேவைப்பட்டது. எனவே கர்த்தரிடம் நன்மை பெறுவதற்கு மிருக ஜீவன்களை பொருத்தனை செய்வது உண்டு. கர்த்தர் அவர்களின் இருதயத்தின் வாஞ்சைகளை நிறைவேற்றி கொடுத்து விட்டால் இருப்பதில் மிக நல்ல மிருக ஜீவனை கர்த்தருக்கு கொடுப்போம் என்று நேர்ந்து கொள்ளுவது உண்டு. ஆனால் அவர்கள் வேண்டி கொண்டபடி நடந்த பின்னர், அந்த நல்ல மிருகத்தை இழக்க விரும்பாமல் சற்று தரம் குறைவானதை கர்த்தருக்கு கொடுக்க கொண்டு வருவார்கள். அப்படி செய்கின்றவர்களை கர்த்தர் அறிந்து கொள்ளுவார். அப்பொழுது அவர்கள் ஏற்கெனவே நேர்ந்து கொண்ட நல்ல மிருகமும் பின்னர் மனதை மாற்றி கொண்டு வரப்பட்ட தரம் குறைவான மிருகமும் 2-ம் சேர்ந்து கர்த்தருடையதாக ஆசாரியனால் எடுத்து கொள்ளப்படும் என்பதை 10-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் அவர்கள் பெற்ற நன்மையும் நீடிப்பது இல்லை. மனிதன் ஜீவனுள்ள தேவனை ஏய்க்க முடியாது என்பதை இதில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். பொருத்தனை செய்த பின்னர் யோசிக்கின்றவர்கள், உணர்ச்சி வசப்பட்டவர்கள். பொருத்தனைகளை அவசரத்தில் சற்றும் யோசிக்காமல் செய்கின்றவர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்கள் என்று அறிந்து கொள்ளுகின்றோம். அப்படிப்பட்டவர்கள் எதிர்பார்த்த நன்மை நடந்த பின்னர், செய்த பொருத்தனைகளை மறந்து விடுகின்றார்கள். அல்லது அவர்களுக்கு உபயோகம் இல்லாத ஒன்றை கொடுத்து தங்களை ஆறுதல் படுத்தி கொள்ளவும், கர்த்தரை சமாதானப்படுத்தி கொள்ளவும் முயச்சி செய்கின்றார்கள் என்பதையும், கர்த்தர் அதை அனுமதித்து கொண்டு இருக்கிறார் என்பதையும் 10- வது வசனத்தில் இருந்து பார்க்கிறோம்.

தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டு போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன் என்று மல். 1:14-வது வசனம் கூறுகின்றது. இவ்விதம் செய்யலாகாது என்று லேவி. 22:18-21 வசனங்கள் கூறுகின்றது. ''நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால் இஸ்ரவேல் குடும்பத்தாரிலும், இஸ்ரவேலில் தங்குகிற அந்நியர்களிலும் தங்களுடைய பொருத்தனைகளின் படியாகிலும் உற்சாகத்தின் படியாகிலும் சர்வாங்க தகனபலிகளாக கர்த்தருக்கு தங்கள் காணிக்கையை எவர்கள் செலுத்த போகிறார்களோ, அவர்கள் தங்கள் மனதின்படியே மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆணை பிடித்து வந்து செலுத்துவார்களாக. பழுதுள்ள ஒன்றையும் செலுத்த வேண்டாம். அது உங்கள் நிமித்தம் அங்கீகரிக்கப்படுவது இல்லை. ஒருவன் விசேஷித்த பொருத்தனையையாவது, உற்சாகமாவது கர்த்தருக்கு மாடுகளிலாகிலும், ஆடுகளிலாகிலும் சமாதான பலிகளை செலுத்த போனால் அது அங்கீகரிக்கப்படும்படி ஒரு பழுதும் இல்லாமல் உத்தமமாய் இருக்க வேண்டும். கர்த்தருக்கு என்று பொருத்தனை செய்யபட்ட மிருகத்தினை திரும்பவும் தனக்கு பெற்று கொள்ள விருப்பம் வருமென்றால் ஆசாரியர்களை அவர்கள் அணுக வேண்டும். ஆசாரியன் கூறும்

விலைக்கிரயத்தை செலுத்தி அவர்கள் தாங்கள் கர்த்தருக்கு என்று படைத்ததை திரும்பவும் பெற்று கொள்ள வாய்ப்பு உண்டு'' என்பதை 11-13 வசனங்களில் நாம் பார்க்கிறோம்.

15.4 வீடு பொருத்தனை செய்யப்படல்

ஒருவன் தன் வீட்டை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால், ஆசாரியன் அதின் நலத்துக்கும் இளப்பத்துக்கும் தக்கதாக அதை மதிக்க கடவன்; ஆசாரியன் மதிக்கிறபடி அது இருக்க கடவது. தன் வீட்டை பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டு கொள்ள மனதாயிருந்தால், நீ மதிக்கும் திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கை கூட்டி கொடுக்கக்கடவன்; அப்பொழுது அது அவனுடையதாகும். (லேவி. 27:14,15)

14,15 ஆகிய வசனங்களில் தனது வீட்டை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளுகின்றவர்களை நாம் பார்க்கின்றோம். வீட்டில் கர்த்தருக்கு பிரியம் இல்லாத அனைத்தையும் அகற்றி விட்டு வீடு கர்த்தருக்கு பரிசுத்தம் என்று பிரதிஷ்டை செய்யப்படுகின்றது.

''கபடு செய்கிறவன் என் வீட்டிற்குள் இருப்பது இல்லை. பொய் சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பது இல்லை'' என்று சங். 101:7-வது வசனம் கூறுகின்றது. நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று தனக்கும் கர்த்தருக்கும் உள்ள பொருத்தனையை யோசுவா கூறுவதை யோசுவா 24:15-வது வசனத்தில் காணலாம். கர்த்தருக்கு பரிசுத்தம் என்று பொருத்தனை செய்யப்பட்ட வீடு எப்படி இருக்கும் என்பதை உபா. 6:6-9 வசனங்களில் பார்க்கலாம். ''இன்று நான் உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்து இருக்கிற போதும் வழியில் நடக்கிற போதும், படுத்து கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளை குறித்து பேசி அவைகளை உன் கையின் மேல் அடையாளமாக கட்டி கொள்ளுவாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபக குறியாக இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டின் நிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக'' என்று அந்த வசனங்கள் கூறுகின்றன. ''நீ சாபத்துக்குள் ஆகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போகாதே'' என்று உபாகம புத்தகம் 7-வது அதிகாரம் 26-வது வசனம் கூறுகின்றது.

கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவர் வீடு ஒரு ஜெப வீடு போன்று இருக்கும் என்று அறிந்து கொள்ளுகின்றோம். வீட்டை மட்டும் அல்ல, தனது வயலையும் கர்த்தருக்கு பரிசுத்தம் என்று பொருத்தனை செய்து கொள்ளுவதை லேவி. 27-வது அதிகாரம் 15-25 வசனங்கள் வரை நாம் பார்க்கின்றோம். வீடு பரிசுத்தம் ஆகும் பொழுது வீட்டை சார்ந்த அனைத்தும் பரிசுத்தம் என்று அர்ப்பணம் செய்யப்படுகின்றது. வீட்டின் ஒரே ஒரு நபர் செய்யும் பொருத்தனையாக அல்ல. வீட்டில் உள்ள அனைவரும் ஏகமாக செய்யும் பொருத்தனையாக பொருத்தனை மாறுகின்றது.

1 இரா. 15:15-வது வசனம். ''தன் தகப்பனும் தானும் பரிசுத்தப்படுத்தும்படி நேர்ந்து கொண்ட வெள்ளியையும், பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டு வந்தான்'' என்று நாம் பார்க்கின்றோம். பொருத்தனை என்பது வலிய

செய்வது ஆகும். கர்த்தருக்கு பரிசுத்தம் என்று தங்கள் வாழ்வுகளை, வாழும் வீடுகளை, பெற்ற உடைமைகளை நேர்ந்து கொண்டவர்களின் வீடுகளை கர்த்தர் கட்டுகிறார். அவர்களுடைய குடும்பங்களை கர்த்தரே எடுத்து நடத்துகின்றார். அவர்கள் எடுக்கும் பிரயாசங்களை கர்த்தர் வர்த்திக்க செய்கின்றார். நாகூம் 1:15-வது வசனம். ''இதோ சமாதானத்தை கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின் மேல் வருகிறது. யூதாவே உன் பண்டிகைகளை ஆசரி. உன் பொருத்தனைகளை செலுத்து.''

15.5 வயல்கள் பொருத்தனை செய்யப்படல்

ஒருவன் தன் காணியாட்சியான வயலில் யாதொரு பங்கை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால், உன் மதிப்பு அதின் விதைப்புக்கு தக்கதாய் இருக்க வேண்டும்; ஒரு கலம் வாற்கோதுமை விதைக்கிற வயல் ஐம்பது வெள்ளி சேக்கலாக மதிக்கப்பட வேண்டும். யூபிலி வருஷம் முதல் அவன் தன் வயலை பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால், அது உன் மதிப்பின்படி இருக்க வேண்டும். யூபிலி வருஷத்துக்கு பின் தன் வயலை பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டானானால், யூபிலி வருஷம் மட்டுமுள்ள மற்ற வருஷங்களின்படியே ஆசாரியன் திரவியத்தை கணக்கு பார்த்து, அதற்கு தக்கது உன் மதிப்பிலே தள்ளப்பட வேண்டும். (லேவி. 27:16-18)

காணியாட்சி என்பது தலைமுறை தலைமுறையாக அவனுக்கு வந்த சொத்துக்களை குறிக்கிறது. அதில் ஒரு பகுதியை மட்டுமே கர்த்தருக்காக பொருத்தனை செய்ய அவன் அனுமதிக்க பட்டான். எல்லாவற்றையும் பொருத்தனை செய்தால் அவன் குடும்பம் வாழ முடியாது என்பதை கர்த்தர் அறிவார். அந்த நிலத்தின் மதிப்பு ஒரு கலம் வாற்கோதுமை விதைக்க கூடிய பரப்பளவு ஐம்பது சேக்கல் என்று கூறப்பட்டுள்ளது. இது ஒரு யூபிலி ஆண்டில் இருந்து அடுத்த யூபிலி ஆண்டு வரை உள்ள மதிப்பாகும். அதாவது ஒரு வருடத்திற்கு ஒரு சேக்கல் மட்டுமே ஆகும். இவ்வளவு குறைவாக மதிப்பிட படுவது ஏழை மக்களும் பொருத்தனை செய்யப்பட்ட நிலத்தை சுலபமாக மீட்டு கொள்ள உதவியது.

ஆகவே நிலத்தின் மதிப்பு அந்த சமயம் யூபிலி வருடத்தில் இருந்து எவ்வளவு தள்ளி இருக்கிறது என்பதை பொருத்தே ஆகும். யூபிலி வருஷம் முதல் என்று அவன் பொருத்தனை செய்தால் ஆசாரியனின் முழு மதிப்பும் அதற்கு பொருந்தும். யூபிலி வருஷத்திற்கு பின் அவன் பொருத்தனை செய்தால், யூபிலி வருஷம் முதல் அவன் பொருத்தனை செய்த வருஷம் வரை உள்ள மதிப்பு ஆசாரியனின் மதிப்பில் இருந்து தள்ளப்பட வேண்டும்.

வயலை பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டு கொள்ள மனதாயிருந்தால், உன் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கை கூட்டி கொடுக்கக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு உறுதியாகும். அவன் வயலை மீட்டு கொள்ளாமல், வயலை வேறொருவனுக்கு விற்று போட்டால், அது திரும்ப மீட்கப்படாமல், யூபிலி வருஷத்தில் மீட்கப்படும்போது, சாபத்தீடான வயலாக கர்த்தருக்கென்று நியமிக்க பட்டதாய் இருக்க கடவது; அது ஆசாரியனுக்கு காணியாட்சியாகும். (லேவி. 27:19-21)

ஒருவேளை காணியாட்சியின் உரிமையாளன், அது ஆலயத்தில் பணிக்கென்று பொருத்தனை செய்ய பட்டதில் இருந்து அதனை மீட்டு கொள்ள வாஞ்சித்தால், அதன் மதிப்புடன் ஐந்தில் ஒரு பகுதி கூட்டி கொடுத்து மீட்டு கொள்ளலாம்.

அவன் வயலை மீட்பதற்கு பதிலாக அதை விற்று விடுகிறான் என்றால், அவன் அதனை மீட்க கூடாது. யூபிலி ஆண்டில் கூட அது அவனுக்கு திரும்ப வராது. அது கர்த்தரின் வாசஸ்தல பணிக்கென்று என்றென்றும் ஒதுக்கப்பட்டதாக ஆகிவிடும். ஏன் இவ்வளவு கடினமான தீர்ப்பு என்று நினைக்கலாம். ஆனால் கர்த்தர் இஸ்ரவேலின் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் காணியாட்சியை காத்து கொள்ள வேண்டும் என்றே விரும்புகிறார்.

ஒருவன் தனக்கு காணியாட்சி வயலாயிராமல் தான் விலைக்கு வாங்கின ஒரு வயலை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால், அது யூபிலி வருஷம் மட்டும், உன் மதிப்பின்படி பெறும் விலை இன்னதென்று ஆசாரியன் அவனோடே கணக்கு பார்த்து, அந்த உன் மதிப்பை, கர்த்தருக்கு பரிசுத்தமாய் இருக்கும்படி, அவன் அந்நாளிலே கொடுக்க கடவன். யார் கையிலே அந்த வயலை கொண்டானோ, அந்த காணியாட்சிக்காரன் வசமாய் அது யூபிலி வருஷத்தில் திரும்ப சேரும். உன் மதிப்பெல்லாம் பரிசுத்த ஸ்தலத்து சேக்கல் கணக்காய் இருக்கடவது; ஒரு சேக்கலானது இருபது கேரா. (லேவி. 27:22-25)

இந்த இடத்தில் இன்னும் ஒரு முறையான பொருத்தனை கூறபட்டுள்ளது. ஒருவன் தன் காணியாட்சியான நிலத்தை பொருத்தனை செய்யாமல், விலைக்கு வாங்கினதை பொருத்தனை செய்கிறான். ஆனால் யூபிலி ஆண்டில் நிலைம் அவன் வசம் வராது, அவனுக்கு விற்றவனுக்கே போய் விடும்.

15.6 தலையீற்றானவைகள் கர்த்தருடையது

தலையீற்றானவைகள் கர்த்தருடையது, ஆகையால் ஒருவரும் தலையீற்றாகிய மிருக ஜீவனை பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளலாகாது; அது மாடானாலும் ஆடானாலும் கர்த்தருடையது. (லேவி. 27:26)

கர்த்தருக்கு செய்யும் பொருத்தனைகளில் இடம்பெற முடியாத மூன்று முக்கியமானவைகள் எவைகள் என்பதை பற்றி லேவி. 27:26-34 வரை உள்ள வசனங்கள் எடுத்து கூறுகின்றன. முதலாவது முதற்கனி அல்லது முதல் ஈற்றுக்கள் என்பது கர்த்தருக்கு செய்யும் பொருத்தனைகளில் இடம் பெற முடியாது என்று அறிந்து கொள்ளுகின்றோம். பொருத்தனை செய்யும் மனிதன் கர்த்தருக்கு தன் மூத்த மகவையோ அல்லது மிருகங்கள் ஈன்றவைகளில் முதலாவதாக ஈன்றவைகளையோ பொருத்தனை செய்ய முடியாது என்று காண்கின்றோம். அதற்கு காரணம் அவைகள் அனைத்தும் ஏற்கெனவே கர்த்தருக்கு உரியவைகள் ஆகும்.

முதற்கனி கர்த்தருடையது என்று யாத். 13:2-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. ''இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும், மிருக ஜீவன்களிலும் கர்ப்பம் திறந்து பிறக்கிற முதல் பேறனைத்தையும் எனக்கு பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது என்றார்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. முதல் முதல் பழுக்கும் உன் பழத்தையும், வடியும் உன் இரசத்தையும்

காணிக்கையாக செலுத்த தாமதிக்க வேண்டாம். உன் குமாரரில் முதல் பேறானவனை எனக்கு கொடுப்பாயாக. உன் மாடுகளிலும், உன் ஆடுகளிலும் அப்படியே செய்வாயாக. குட்டியானது ஏழு நாள் தன் தாயோடே இருக்கட்டும். எட்டாம் நாளிலே அதை எனக்கு செலுத்துவாயாக. நீங்கள் எனக்கு பரிசுத்த ஜனமாய் இருக்கக்கடவீர்கள் என்று யாத். 22:29-31 வசனங்கள் கூறுகின்றன.

எகிப்தில் இருந்து வெளியேறிய இரவிலே எகிப்தின் வீடுகளில் முதலாவது பிறந்த உயிர்கள் அனைத்தும் மறைந்தன என்பதை நாம் பார்த்தோம். ஆனால் அடிமைகளாக இருந்த அவர்களது முதல் பலன்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை. அவைகளை பாதுகாத்தவர் கர்த்தர் ஆவார். எனவே முதல் பலன்கள் கர்த்தருக்கு உரியது என்ற பிரகடனம் யாத். 13:2-வது வசனத்தில் கூறப்பட்டது.

> ***சுத்தமல்லாத மிருகத்தினுடைய தலையீற்றானால், அதை அவன் உன் மதிப்பின்படி மீட்டு கொண்டு, அதனுடனே ஐந்தில் ஒரு பங்கை கூட்டி கொடுக்கக்கடவன்; மீட்கப்படாமலிருந்தால், உன் மதிப்பின்படி அது விற்கப்படக்கடவது. (லேவி. 27:27)***

கழுதை, நாய், பூனை முதலிய மிருகங்கள் மோசேயின் காலத்தில் மனிதரால் வளர்க்க பட்டன. ஆனால் அந்த மிருகங்களை அவன் மீட்டு கொள்ள முடியாமல் போனால், அது கர்த்தருக்காக எடுத்து கொள்ளபட மாட்டாது. அதனை அமைதியாக விற்று விட வேண்டும் என்று கூறுகிறார்.

> ***ஒருவன் தன் வசத்திலுள்ள நர ஜீவனிலாவது, மிருக ஜீவனிலாவது, காணியாட்சி நிலத்திலாவது, எதையாகிலும் கர்த்தருக்கென்று சாபத்தீடாக நேர்ந்துகொண்டால், அது விற்கப்படவும் மீட்கப்படவும் கூடாது; நேர்ந்து கொள்ளப்பட்டவைகள் எல்லாம் கர்த்தருக்காக பரிசுத்தமாயிருக்கும். நர ஜீவனில் சாபத்தீடாக நியமிக்கப்பட்டவைகள் எல்லாம் மீட்கப்படாமல் கொலை செய்யப்பட கடவது. (லேவி. 27:28-29)***

சாபத்தீடாக ஒதுக்கப்பட்டவைகள் எதுவும் கர்த்தருக்கு நேர்ந்து கொள்ளப்பட முடியாது என்று நாம் அடுத்தாற் போல் பார்க்கிறோம். நேர்ந்து கொள்ளப்பட்டவைகள் எல்லாம் கர்த்தருக்காக பரிசுத்தமாக இருக்கும் என்று 28-வது வசனம் முற்று பெறுகின்றது. கர்த்தருக்காக பரிசுத்தம் என்பதின் எபிரேய சொல் 'செரம்' என்பது ஆகும். 'செரம்' என்பதின் பொருள் ஈவு இரக்கம் இல்லாமல் எதையும் அழித்து விடுதல் என்பது ஆகும். பரிசுத்தம் இல்லாத அனைத்தையும் ஈவு இரக்கம் இல்லாமல் அழித்து விடுதல் என்பதே 'செரம்' ஆகும். பின் ஒரு நாள் எரிகோ பட்டணம் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டு இருந்தார். எரிகோவில் இருந்து எதுவும் கர்த்தருக்கு எடுக்கப்பட, கர்த்தருக்கு நேர்ந்து கொள்ளப்பட முடியாது என்று திட்டவட்டமாக கூறியிருந்தார். ஆயினும் ஆகான் என்று சொல்லப்படும் ஒரு மனிதன், முற்றிலுமாக அழிக்கப்படுவதில் இருந்து திருட்டு அளவாக மறைத்து வைத்து கொண்டான். அசுத்தமான எதையும் ஈவு இரக்கம் இல்லாமல், சற்றும் கால தாமதம் இல்லாமல், எவ்வித இரண்டாவது சிந்தனைகளும் இல்லாமல் அழித்து விடுதல் என்பதே 'செரம்' என்ற எபிரேய சொல்லின் பொருள் ஆகும். ஆகான் என்ற அந்த மனிதன் சாபத்தீடானதில் இருந்து எடுத்து வைத்து கொண்டதால், அவன் எவ்வித ஈவு இரக்கமும் இல்லாமல் அழிக்க பட்டான் என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

கர்த்தருக்கு என்று பரிசுத்தம் என்பது லேவி. 27:1-25 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. அதில் இருந்து அவர்கள் பொருத்தனை செய்யலாம். செய்த பொருத்தனைகளை விலை கொடுத்து திரும்பவும் பெற்று கொள்ளலாம். ஆனால் 26-33 வசனங்களில் கூறப்பட்டுள்ள மூன்றும் கர்த்தருக்கு என்று பரிசுத்தம் என்பது அல்ல. கர்த்தருக்காக பரிசுத்தம் என்பது ஆகும். கர்த்தருக்கு என்று பரிசுத்தம் என்பது வேறே, கர்த்தருக்காக பரிசுத்தம் என்பது வேறே. கர்த்தருக்காக பரிசுத்தம் என்பதில் மனிதனுக்கு எவ்வித உரிமையும் இல்லை. கர்த்தருக்கு என்று பரிசுத்தம் என்பதில் மனிதனுக்கு உரிமை உண்டு. அதிலிருந்து அவன் கர்த்தருக்கு நேர்ந்து கொள்ளலாம். ஆனால் 26:33 வசனங்களில் கர்த்தருக்காக பரிசுத்தம் என்று மூன்று முறை கூறப்பட்டு உள்ளது. அதில் தவறு செய்யும் பொழுது, 'செரம்' என்பது ஈவு இரக்கம் இன்றி தவறியவர்களை அழித்து விடுகின்றது என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். கர்த்தாதி கர்த்தர் மீது விசுவாசம் வைக்கும் மீட்கப்பட்ட அனைத்து ஜனங்களும் கர்த்தருக்கு என்னும் பரிசுத்தம் என்பது அல்ல. கர்த்தருக்காக பரிசுத்தம் என்றே அறிந்து கொள்ளுகின்றோம்.

மனித சரீரங்கள் கர்த்தருக்கு என்று உரியவைகள் அல்ல. கர்த்தருக்காக உரியவைகள் ஆகும். எனவே உபா. 7:6-வது வசனம் இவ்வாறாக கூறுகின்றது. ''நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை தமக்கு சொந்தமாய் இருக்கும்படி தெரிந்து கொண்டார்.'' கர்த்தருக்காக பரிசுத்தம் என்ற அந்த ஜனங்கள் கானான் என்ற பூமியை சுதந்தரிக்கும் பொழுது, சாபத்தீடான அனைத்தையும் சுட்டு எரித்து விட வேண்டும் என்று கட்டளை பெற்றார்கள்.

தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருட்சங்களின் கனியிலும், தசம பாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்கு பரிசுத்தமானது. ஒருவன் தன் தசம பாகத்திலே எவ்வளவாவது மீட்டு கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கை கூட்டி கொடுக்கக்கடவன். (லேவி. 27:30-31)

கர்த்தருக்காக பொருத்தனை செய்ய முடியாததாக காணப்படும் அடுத்த ஒன்று தசம பாகம் என்பது ஆகும். கர்த்தருக்கு பொருத்தனை செய்கிறவன் தசமபாகத்தில் இருந்து பொருத்தனை செய்ய முடியாது. காரணம் தசமபாகம் என்பது ஏற்கெனவே கர்த்தருக்காக பரிசுத்தம் என்று பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டாயிற்று. அவ்விதம் செய்யலாகாது என்று மல். 3:8-வது வசனம் கூறுகின்றது. ''மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும், காணிக்கைகளிலும் தானே'' என்று அந்த வசனம் கூறுகின்றது. ''தேவரீர் எனக்கு தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசமபாகம் செலுத்துவேன்'' என்று யாக்கோபு கூறுவதை ஆதி. 28:22-வது வசனத்தில் பார்க்கிறோம்.

அந்த நாட்களில் மூன்றுவிதமான தசமபாகங்களை மீட்கப்பட்ட ஜனங்கள் கர்த்தருக்கு செலுத்தினார்கள். ஆராதனையை நடத்தும் லேவியர்களுக்கு கொடுக்கும் தசமபாகம் முதலாவது கொடுக்கும் தசமபாகம் என்பது ஆகும். எண். 18:21-வது வசனம். ''இதோ லேவியின் புத்திரர் ஆசரிப்பு கூடாரத்தின் பணிவிடையை செய்கிற அவர்களுடைய வேலைக்காக இஸ்ரவேலுக்கு உள்ள எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்கு சுதந்திரமாக கொடுத்தேன்'' என்று அந்த வசனம் கூறுகின்றது.

இரண்டாவதாக கொடுக்கப்பட்ட தசமபாகம். வருடத்திற்கு ஒருமுறை கொடுக்க வேண்டிய தசம பாகம் ஆகும். உபா. 14:22-27 வசனங்களில் அதன் விபரம் கொடுக்கப்பட்டு உள்ளது.

மூன்றாவதாக கொடுக்கப்பட்ட தசமபாகம் மூன்று வருடத்திற்கு ஒருமுறை ஏழை எளியவர்களை பரிபாலிக்க கொடுக்கப்படும் தசமபாகம் ஆகும். அதன் விபரத்தை பற்றி உபா. 14:28,29 ஆகிய வசனங்களில் நாம் காணலாம். ''உன் பொருளாலும், உன் விளைவின் எல்லா முதல் பலனாலும் கர்த்தரை கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டு ஓடும்'' என்று நீதி. 3:9,10 ஆகிய வசனங்கள் கூறுகின்றது.

கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது. அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்க வேண்டாம்; அதை மாற்றவும் வேண்டாம்; மாற்றனால், அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டதுமாகிய இரண்டும் பரிசுத்தமாகும்; அது மீட்கப்படக்கூடாதென்று அவர்களோடே சொல் என்றார். (லேவி. 27:32-33)

கர்த்தருக்காக பரிசுத்தம் செய்ய முடியாத மற்றொன்று இஸ்ரவேலரின் மிருக ஜீவன்களில் பத்தில் ஒன்று ஆகும். அவை ஏற்கெனவே கர்த்தருடையதாகையால் அவற்றை கர்த்தருக்கு என்று பொருத்தனை செய்ய கூடாது.

லேவியராகம புத்தகம் 27-வது அதிகாரம் கர்த்தருக்கு என்று பரிசுத்தம் கர்த்தருக்காக பரிசுத்தம் என்று இரண்டையும் முன் வைக்கின்றது. கர்த்தருக்கு என்று பரிசுத்தம் என்பவைகளில் பொருத்தனைகள் இடம் பெறுகின்றன. கர்த்தருக்காக பரிசுத்தம் என்பவை அனைத்தும் ஏற்கெனவே கர்த்தருக்கு சொந்தமாக தெரிகின்றன. அதில் இருந்து பொருத்தனைகள் செய்யவே முடியாது என்பதை இந்த வசனங்கள் விளக்கி காட்டுகின்றன.

இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்படி கர்த்தர் சீனாய் மலையில் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே. (லேவி. 27:34)

லேவியராகமம் 27-வது அதிகாரத்தின் கடைசி வசனம் இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்லும்படி கர்த்தர் மோசேயிடம் கூறியவை அனைத்தும் முற்று பெறுவதை நாம் காண்கிறோம். யாத்திராகமம் 20-வது அதிகாரத்தில் துவங்கிய உரை லேவியராகம புத்தகம் 27-வது அதிகாரத்தில் முற்று பெறுகின்றது. கர்த்தரின் சத்தத்தை கேட்கும் செவிகளும், அதனை காத்து கொள்ளும் இதயங்களும் பாக்கியம் உள்ளவைகள்.

லேவியராகமம்

கேட்டிடும் சத்தம் யாரது சத்தம்
ஆத்தும நேசரின் காலடிகள்!

பகலினில் வெயிலில் இரவினில் நிலவில்
நாளெல்லாம் கேட்டது காலடிகள்!

காலடிகள்!

நேசரின் கால்தடம் பின் செல்லலானேன்
சேர்ந்த இடம் அதோ கல்வாரியே!
பாவிக்கு மன்னிப்பு, ஜீவனும் தந்தது
கல்வாரியே!

காலடிகள்!

- எமில் ஜெபசிங்

Contact Address:

Kairos Multimedia Private Limited,
49C, Bryant Nagar,1st Street,
Tuticorin - 628 008,
Tamil Nadu, India.
Phone No. 9244942821,
Email: kairosmultimedia.india@gmail.com

ISBN: 978-93-85813-04-7

Price Rs.350/-